# புது மலர்கள் பூத்திடும் வேளை...!



## வேளை - 01

********************************************************************************************

**கண்கள் என்னும் சோலையில்**
**காதல் வாங்கி வந்தேன்**

**வாங்கி வந்த பின்பு தான்**
**சாபம் என்று கண்டேன்**

**என் சாபம் தீரவே**
**நீயும் இல்லையே**

**என் சோகம் பாடவே**
**ராகம் இல்லையே**

**பூவும் வீழ்ந்து போனது**
**காம்பு என்ன வாழ்வது**

**காலம் என்னைக் கேள்வி கேட்குது**
**கேள்வி இன்று கேலியாகிப் போனது**

********************************************************************************************

# புது மலர்கள் பூத்திடும் வேளை…!

ஆதவன் இன்னும் தன் துயிலை கலையாதிருக்க, பறவைகளும் தன் பரிவாரங்களுடன் சயனத்தில் ஆழ்ந்திருக்க, அந்தப் பண்ணை வீடு மட்டும் தன் அமைதி இழந்து காணப்பட்டது.

"தேனும்மா இதோட மூனு தடவ வலி வந்திருச்சு, இப்போதான் ஆறு மாசமே நடக்குது அதுக்குள்ள இப்படி வலி எடுக்கக் கூடாதும்மா, நான் தம்பிக்கு போனு போடுறேன் ஆஸ்பத்திரிக்கு போயிடலாம் கண்ணு " என்று மல்லிகா தன் பயத்தைக் கூறினாள்.

"வேண்டாம் மல்லிம்மா சரியாப் போயிடும் , விடுங்க இன்னும் கொஞ்ச நேரம் பார்த்துட்டு அப்புறம் அவருக்கு தகவல் சொல்லலாம். அவரும் நைட் லேட்டாதான் வந்துருப்பார், எதுக்கு இந்த நேரத்துல அலைய விடனும் கொஞ்சம் கழிச்சு மறுபடியும் வலி எடுத்தா சொல்லிக்கலாம், நீங்க படுங்கம்மா. " என்ற தேனை முறைத்தவர் "எப்போதான் நான் சொல்றதக் கேட்க போற, இரு உனக்கு சூடா ஹார்லிக்ஸ் எடுத்துட்டு வரேன், கொஞ்ச நேரத்துல பாரு எவ்ளோ களைச்சுப் போயிட்டனு, பசி எடுத்துருக்கும். என்றவரைப் பார்த்து புன்னகைத்தவள் சரி என்பது போல் தலையாட்டினாள்.

மல்லிகா புலம்பியபடியே அறையை விட்டு வெளியேற, படுத்திருந்த இடத்தில் இருந்து மெதுவாக எழுந்தவள் தலையனையை முதுகுக்கு அணைவாகக் கொடுத்து அதில் சாய்ந்தவள் தன் தலையை சாய்த்து கண்களை இறுக மூடிக்கொண்டாள், வலி எடுத்தாலும் சொல்லக்கூடாது என்ற முடிவுடன். மூடிய கண்களில் இருந்து சூடான கண்ணீர் வெளியெற தன் கடந்த காலம் தன் எதிர்காலத்தை கிரகணம் போல் விழுங்கியதை நினைத்து வேதனையுடன் தன் மணிவயிற்றை தடவிக்கொண்டாள் அந்தப் பதுமை.

"ஆம் பதுமையேதான் அந்த வீட்டில் நான்கு வேலைக்காரர்களோடு அவள் மட்டுமே வசிக்கிறாள், மல்லிகா அவளைப் பார்த்துக் கொள்ள வந்த ஆயா மட்டுமே. நாளடைவில் இருவரின் எண்ணங்களும் ஒத்துப்போக ரத்த பந்தமே இல்லாமல் தாயும் மகளும் போல ஆகிவிட்டனர். கணவன் இருந்தும் இல்லை, சொந்தங்கள் இருந்தும் இல்லை. அதற்கு மேல் யோசிக்கத் திராணியில்லாமல் பட்டென்று கண்களை திறந்து விட்டாள். இன்னும் எத்தனை நாட்கள் இந்த நிலை குழந்தை பிறந்ததும் தனக்கும் விடுதலை கிடைத்து விடும் என்பதில் அவள் கண்ணில் சிறு ஒளி பிறந்தது… என்ன இந்தக் குழந்தைகளோடு தன் வாழ்நாட்களை கழிக்க முடியாது என்பதை நினைத்து மனதில் இருள் சூழ்ந்தது.

புது மலர்கள் பூத்திடும் வேளை

# புது மலர்கள் பூத்திடும் வேளை…!

"என் குழந்தைக்கு எந்தக் குறையும் வரவிடமட்டேண்டி" என்று தன் கணவன் சூளுரைத்ததை நினைத்துக்கொண்டாள். குழந்தைகளுக்கு ஒன்னும் வராது, அதன் அம்மாவிற்கு என்று யோசித்தவள் தனக்குள்ளேயே சிரித்துக்கொண்டாள். வாசலில் நிழலாட நிமிர்ந்தவள் மல்லிகா ஹார்லிக்ஸூடன் ப்ரெட் டோஸ்ட்டும் எடுத்து வந்திருந்தார்.

அதைக் கண்டவள் " எதுக்கு மல்லிம்மா இதெல்லாம் ஹார்லிக்ஸ் மட்டும் போதுமே, இன்னும் பல் கூட விலக்கல " "புள்ளத்தாச்சி புள்ள அதெல்லாம் பார்க்ககூடாது, பசியெடுத்தா எது கெடச்சாலும் சாப்புட்டுறனும் கண்ணு, நீ ரொம்ப சோர்ந்து போயிட்ட அதான் ப்ரெட் போட்டு எடுத்துட்டு வந்தேன். மறுபடியும் வலி எடுத்துச்சா, நீயாவா எழுந்து உட்கார்ந்த, நான் போகும்போதே சொல்லிருந்தா செஞ்சுட்டுப் போயிருப்பேனே கண்ணு, உனக்கு யாரையும் எந்த வேலையும் செய்ய விடமாட்டெங்குற, அப்புறம் எதுக்கு சம்பளம் கொடுத்து எங்கள வேலைக்கு வச்சிருக்கார் தம்பி. எதுனாலும் எங்கிட்ட சொல்லு தேனு, உனக்கு நான் செய்ய மாட்டேனா..? அப்படி என்ன பிடிவாதமோ தெரியலப் போ, சரி சாப்புட்டு செத்த நேரம் படு. சாஞ்சு உட்கார்ந்து இருந்தது இடுப்பு பிடிச்சுக்கும். "

" இல்ல மல்லிம்மா சாப்பிட்டதும் படுக்க வேண்டாம் , கொஞ்ச நேரம் நடக்குறேன், நீங்க படுங்க அதான் வெளிச்சம் பரவிடுச்சே நான் மெதுவா நடந்துட்டு வரேன்."

" இரு கண்ணு வேலன் கிட்ட சொல்றேன், அவன் உன்னப் பார்த்துக்குவான் "

" சரி மல்லிம்மா " என்றவள் கீழே இறங்கி தோட்டத்தில் நடக்க ஆரம்பித்தாள், நினைவுகள் அவள் கணவனையே சுற்றிக் கொண்டிருந்தது.. எவ்வளவு மகிழ்ச்சியாக ஆரம்பித்த மணவாழ்க்கை ஆரம்பித்த நாளிலேயே முடிவுக்கும் வந்தது. தன் குடும்பத்திற்கே ஏதேனும் சாபம் போலும், அரை ஆயுளில் உயிரை விடுவது . அப்பா மட்டும் உயிரோடு இருந்திருந்தால் அம்மா வேலைக்கு போயிருக்கமட்டார், அக்காவையும் என்னையும் கவனிக்காமல் விட்டிருக்கமாட்டார், அக்கா வழிமாறி புதைகுழியில் விழுந்துருக்கவும் மாட்டாள், அவளுக்கு நியாயம் கேட்டு நான் போயிருக்கவும் வேண்டி இருந்திருக்காது, இன்று தனக்கு இந்த நிலையும் வந்திருக்காது., என்று எப்போதும் தோன்றும் எண்ணம் அப்போதும் வர யோசனையுடனே நடந்தவள் அங்கிருந்த கல்மேடையில் அமர்ந்து தான் இழந்ததை எண்ணிப் பார்த்தாள்……

புது மலர்கள் பூத்திடும் வேளை - மதுவதனி

# புது மலர்கள் பூத்திடும் வேளை…!

மணி இரவு 11.30…..

களைத்து ஓய்ந்து போனத் தோற்றத்துடன் தன் காரை விட்டிறங்கி வீட்டிற்குள் சென்றான் சரண் @ அபிசரண். அழகான அந்த மாளிகை அமைதியாக வரவேற்றது. உள்ளே நுழைந்ததும் ஹாலில் இருந்த சோபாவில் உறங்கிக் கொண்டிருந்த தன் தம்பியைப் பார்த்ததும் அதுவரை இருந்த களைப்பெல்லாம் பறந்துவிட, வேலைக்காரர்களை கண்களால் அலசினான் எங்கே என்று. காரின் சத்தம் கேட்டதுமே எழுந்திருந்த ராமன் சரணை பார்த்தபடி வந்து நின்றான்.

"சிபி எப்போ வந்தான் ராமு, வரேன்னு போன் கூட பண்ணலே, சாப்பிட்டானா இல்லையா..? " என்று தன் தம்பியின் தலையை வருடிக் கொண்டே கேட்டான்.

"தம்பியும் ஒன்பது மணிவாக்குல தன் வந்துதுங்க, அகிலாம்மவும் அய்யாவும் இன்னைக்கு ஏர்காடு போனாங்கள தம்பி அதுக்கு வரச்சொல்லிருக்காங்க, அதான் சிபி வந்துருக்கு, அவங்கள அனுப்பிட்டு வந்துதுங்க, இன்னும் சாப்பிடல நீங்க வந்ததும் சேர்ந்து சாப்பிட்டுக்கறேனு சொல்லிடுச்சு, நான் எவ்ளோ சொல்லியும் கேட்கலீங்க."

தன் அண்ணனின் வருடலிலும், பேச்சு சத்ததிலும் தன் தூக்கம் கலைந்த சிபி எழுந்து அபியை பார்த்தவாறு அமர்ந்தான் கோபமாக… தம்பியின் கோபத்தை உணர்ந்தவன் " எப்போ வந்த சிபு , ஏன் எனக்கு சொல்லல, அக்கா கூட சொல்லலயே, எனக்கு தெரிஞ்சிருந்தா சீக்கிரம் வந்துருப்பேனே, சரி எழுந்து வா முதல்ல சாப்பிடலாம்."

"ம்ம்ம் எப்போ வந்தா என்ன..? அண்ணா நீங்க ஏன் இப்படி இருக்கீங்க, மணி என்னாச்சு இவ்ளொ நேரம் வரை அப்படி என்ன வேலை, உடம்பக் கெடுத்துக்காதீங்கனு சொன்னா கேட்கறதே இல்ல, தினமும் இப்படி தான் வரீங்களாம், அக்கா அவ்ளோ வருத்தப்பட்டு பொலம்பிக்கிட்டே போறாங்க, என்ன பிரச்சினைனு நான் கேட்க மாட்டேன், கேட்டாலும் சொல்ல மாட்டீங்க, எதை மறக்க நீங்க இப்படி உங்கள கஷ்டப்படுத்திக்கிறீங்கனு புரியல, அண்ணிய மறக்கனா அது கண்டிப்பா உங்களால முடியாது, அதுக்கு ட்ரை பண்ணாதீங்க, அண்ணிய நீங்க எவ்ளோ விரும்புரீங்கனு மற்ற எல்லாரையும் விட எனக்கு நல்லாத் தெரியும், அப்படி இருக்கும் போது இது வீண் முயற்சி தான்." என்று ஆதங்கமாகத் தொடங்கியவன் கோபமாக முடித்துவிட்டு டைனிங் ஹாலிற்கு சென்றான்.

# புது மலர்கள் பூத்திடும் வேளை…!

தம்பியின் கோபம் தன் நலனை எண்ணியே என்று நினைக்கும் போது எரிமலைப்போல் கொதித்துக் கொண்டிருந்த மனம் சற்று இதம் கண்டது. தன்னைச் சுற்றி பாசமானவர்கள் இத்தனைப் பேர் இருக்க ஒரு துரோகிக்காக தான் ஏன் இவ்வளவு கஷ்டப்பட வேண்டும் , இருந்தாலும் எப்படிப் பட்ட துரோகம் நினைக்க நினைக்க அவன் மனம் மேலும் மேலும் இறுக்கத்தை அணிந்தது. எதுவும் பேசாமல் தன் அறைக்குச் சென்றவன் ப்ரெஷாகி தானும் உணவு மேடையில் வந்தமர்ந்தான்.

உணவு வேளை அமைதியாகக் கழிய , உண்டு முடித்ததும் வழமைப் போல் தோட்டதிற்குள் நடந்தனர். இப்போது மட்டுமல்ல தன் பெற்றோர்கள் இருக்கும் போதிலிருந்தே இந்தப் பழக்கம் எல்லோருக்கும் உண்டு. அம்மாவின் அருகிலே தானும் தன் மடியில் தன் குட்டித் தம்பியும், அப்பாவின் மடியில் தலை சாய்ந்து படுத்துக்கொண்டே கதை கேட்கும் தன் அக்காவும் என்று தன் குடும்பத்தின் இனிய நினைவுகளை மனதில் ஓட்டிப்பார்த்துக் கொண்டிருந்தான் அபி..

அதற்கு நேர் மாறாக தன் அண்ணியின் நினைவுகளில் மூழ்கியிருந்தான் சிபி @ சிபிநந்தன்.. வாய் ஓயாமல் பேசிக்கொண்டிருக்கும் தன் அண்ணனின் இந்த மௌனம் அவனுக்கு வருத்தத்தையே கொடுத்தது. அண்ணனின் வாழ்க்கையில் இப்போது வீசிக்கொண்டிருக்கும் இந்தப் புயல் எப்போது அமைதியடையும், வீட்டில் உள்ளவர்களின் மூலம் ஓரளவுக்கு விசயம் புரிந்தாலும் அபியாக சொல்லாத பட்சத்தில் இதில் தான் எப்படி தலையிட முடியும், அவனாக வந்து எதையும் சொல்லப் போவதில்லை, தானாகக் கேட்டாலும் விடை கிடைக்காது, இதை நான் பார்த்துக் கொள்கிறேன், நீ உன் ட்ரெயினிங் முடிக்கும் வேலையைப் பார் என்பான்.

ஆனாலும் தங்கள் குடும்ப வாரிசை சுமந்து கொண்டு தனக்கென யாருமே இல்லாமல் வாழ்ந்து கொண்டிருக்கும் தன் அண்ணியை நினைத்து பரிதாபம் எழுந்தது. எவ்வளவு பிரச்சினையாக இருந்தாலும் இப்படி இந்த நேரத்தில் அவர்களை தனியாக் விட்டது தவறென்றே பட்டது, இருந்தாலும் தன் அண்ணன் காரணம் இல்லாமல் எந்த காரியமும் செய்ய மாட்டான் என்ற எண்ணம் எழுவதையும் தவிர்க்க முடியவில்லை. இதை இப்படியே விடவும் முடியவில்லை அவனால், ஏதாவது செய்ய வேண்டும் அதற்கு முதற்படியாக தன் அண்ணியைப் போய் பார்க்க வேண்டும் என்ற முடிவு எடுத்தவுடன் தான் அவனால் சற்று அமைதியாக இருக்க முடிந்தது.

புது மலர்கள் பூத்திடும் வேளை - மதுவதனி

# புது மலர்கள் பூத்திடும் வேளை…!

ஏதோ யோசனையில் இருந்த தம்பியைப் பார்த்துக் கொண்டிருந்த சரண் அவன் இப்போதைக்கு பேசப்போவது இல்லை என்பதை அறிந்ததும் அவனாக பேச்சை ஆரம்பித்தான் “ என்ன சிபு ஏன் இவ்ளோ சோகம் ஷானவி கூட சண்டை போட்டியா என்ன..? என்று இலகுவாகவே கேட்டான்.

எதைக் கேட்டால் தன் மனம் மாறும் என்பதை அறிந்து வைத்திருக்கும் சரணை நினைத்து லேசாக சிரித்துக் கொண்டே “அவள் என்னைக்கு என்கூட சண்ட போடாம இருந்திருக்கா” என்றான்

“ஹா..ஹா.”. என்று தம்பியின் பதிலில் சிரித்தவன் “ எப்போதான் உங்க டாம் அண்ட் ஜெர்ரி சண்ட தீரப்போகுதோ தெரியல, சரி இன்னைக்கு என்ன சண்டைன்னு சொல்லு “

“என்னத்த சொல்ல போங்கண்ணா, அவ ஒரு அரவேக்காடுண்ணா, எப்போ பார்த்தாலும் கடி ஜோக் சொல்லி டார்ச்சர் பண்றா, அதான் ஒரு சேஞ்சுக்கு நான் சொன்னேன் கோவிச்சுக்கிட்டு போயிட்டா, இப்போ தெரியும்ல மனுசனோட கஷ்டம்.”

“அவ கோவிச்சுக்கிட்டு போற அளவுக்கு என்ன ஜோக் சொன்ன “

“ ம்ம்ம் அதுவா….

**"டாக்டர் அந்த ஆளு ஆபரேஷன் செய்யச் சொல்லி நாயா அலையறாரு, நீங்க என்னடான்னா எதுவும் பேசாமலயே இருக்கீங்களே?**
**- ஆபரேஷன் செஞ்சா பேயா அலைவாரு பரவால்லையா??**

இததாண்ணா சொன்னேன், இதுக்கு போய் அவ பேய் மாதிரி கத்திட்டு நீயெல்லாம் ஒரு டாக்டருனு வெளிய சொல்லாதன்னு போயிட்டா” என்று சோக கீதம் வாசித்தவனைக் கண்டு வயிறு குலுங்க சிரித்தான் சரண்…

தன் அண்ணனின் சிரிப்பைக் கண்டு மனம் நெகிழ்ந்த சிபி மேலும் தங்கள் இருவருக்கும் இடையே நடந்த சில சுவாரஸ்யமான சண்டைகளை தொகுத்து வழங்க ஆரம்பித்தான். ஒரு கட்டத்திற்கு மேல் தாங்க முடியாத சரண் “ போதும்டா சாமி என்னை விட்டுடு முடியல என்னால நீங்க ரெண்டு பெரும் நிஜமாவே டாக்டருக்கு தான் படிக்கிரீங்களானு எனக்கு டவுட்டே வந்திடுச்சு “ என்றான்.

புது மலர்கள் பூத்திடும் வேளை - மதுவதனி

# புது மலர்கள் பூத்திடும் வேளை…!

“அது அப்படித்தான், ஒரு நாள் சண்டை போடலைனாலும் எப்படியோ இருக்கும், சரி அத விடுங்க இப்போ நீங்க நார்மல் ஆகிட்டீங்களா “ என்றவன் தன் அண்ணனின் கையைப் பற்றி அங்கிருந்த பெஞ்சில் அமர வைத்தான்.

சில நொடி மௌனத்திற்குப் பிறகு “ நாளைக்குப் போயி அண்ணியப் பார்த்துட்டு வரலாமா..? மூனு மாசம் ஆச்சு பார்த்து, அப்படியே அவங்க மெடிக்கல் ஃபைலும் பார்க்கனும் ஹெல்த்து பத்தியும் கேட்கனும் போகலாமா”

அவன் இத்தனை நாட்கள் கழித்து வந்தாலும், வந்ததும் அவளைப் பற்றித்தான் விசாரிப்பான் என்று அறிந்திருந்த சரண் எது சொன்னாலும் அவனிடம் இருந்து தப்பிக்க முடியாது, இருந்தாலும் அவளைப் போய் பார்க்க வேண்டுமா, என்ற எண்ணம் எழுவதை தடுக்க முடியவில்லை அவனால், ஆனாலும் கேட்பது அவன் செல்ல தம்பியாயிற்றே அவனுக்காக சரி என்று தலையாட்டினான் சரண்….

பிறகு எழுந்துக் கொண்டவன், “ ரொம்ப நேரமாயிடிச்சு கண்ணா வா உள்ள போகலாம், மீதிய நாளைக்கு பேசிக்கலாம் “ என்று அவனுக்கும் கை கொடுத்து எழுப்பி விட்டவன், அவனை அழைத்துக்கொண்டு வீட்டிற்குள் சென்றான்.

மனம் முழுக்க அவள் மேல் வெறுப்பும் அதையும் தாண்டி காதலும் இருக்க அவன் எண்ணப் போக்கு அவனுக்கேப் பிடிக்காமல் போக தம்பியின் கையை உருவிக் கொண்டு அவனுக்கு ஒரு குட்னைட்டும் சொல்லிவிட்டு எதிலிருந்தோ தப்பிப்பது போல் தன் அறையை நோக்கி போனான்.

படுக்கையில் விழுந்தவனுக்கு அவனின் கண் முன்னால் வந்தது, கண்ணீரோடு தன் காலில் விழுந்து கதறிய மனையாளின் முகமும்… “பாவா ப்ளீஸ் பாவா என்ன நம்புங்க பாவா நான் எந்த தப்புமே செய்யல, அது எப்படி நடந்ததுனு நான் சொல்றேன் அதுக்கு அப்புறம் நீங்க என்ன முடிவு எடுத்தாலும் பரவாயில்ல பாவா “ என்ற வார்த்தைகளும் தான் அவனுக்கு புரிந்தது அவள் மேல் எந்த தப்பும் இருக்காது என்று.. ஆனாலும் யாரோ ஒரு அயோக்கியன் சொல்லித் தானே அந்த விசயம் தெரிந்தது.. இல்லையென்றால் அவள் சொல்லியிருக்கவே மாட்டாளே…

தான் அவளிடம் எதையும் மறைக்காமல் கூற, அவளானால் இப்படி ஒரு உண்மையை மறைத்து அவனுக்கு தலை இறக்கத்தை ஏற்படுத்தி விட்டாளே என்று மனம் நொந்து போனான் அபிசரண். எதை எதையோ நினைத்துக் கொண்டே இருந்தவன் விடியலின் அருகாமையில் தான் நித்திரையின் பிடிக்குள் சென்றான்…

புது மலர்கள் பூத்திடும் வேளை - மதுவதனி

# புது மலர்கள் பூத்திடும் வேளை…!

விடிந்து இவ்வளவு நேரமாகியும் எழாத தன் அண்ணனைப் பார்த்து சீக்கிரம் இவர்கள் வாழ்க்கையை சீர் செய்ய வேண்டும் தனக்கு அன்பில் அன்னையாக, வருத்ததில் தோள் கொடுக்கும் நண்பனாக, வாழ்க்கைக்கு வழிகாட்டுவதில் தந்தையாக இருந்தவன், தன் துன்பத்தை போக்கிகொள்ள வழி தெரியாமல் கஷ்டபடுகிறான், அதைக் கண்டிப்பாக மாற்றியே ஆக வேண்டும் என்ற எண்ணம் வலுவடைந்தது. அதுக்கு முதலில் அண்ணியைப் பார்த்து அவர்களின் மன நிலையும் தெரிந்து கொள்ள வேண்டும், அதுவும் இந்த இரண்டு நாட்களில், பின்னர் தன் அக்காவும் மாமாவும் வந்து விட்டால் அங்கேப் போகவிடாமல் செய்தாலும் ஆச்சரியமில்லை என்று நினைத்தவன் சரணை எழுப்பினான்.

"அண்ணா எழுந்திருங்க, மணி ஏழாகிடுச்சு, டிபன் சாப்பிட அங்க வரேன்னு சொல்லிட்டேன். மல்லி எல்லாமே எனக்கு பிடிச்சதா செஞ்சு அசத்தப்போறேன்னு பீலா விட்டுருக்கு, சீக்கிரம் கிளம்புங்க " என்று அவசரப்படுத்த, " இருடா போலாம், ஆபீஸ் போயிட்டு கொஞ்சம் வேலை இருக்கு எல்லாம் முடிச்சுட்டு போலாம்" என்ற சரண் விட்டத் தூக்கத்தை மீண்டும் தொடர்ந்தான்…

"அண்ணா இது டூ ம்ச் நீங்க என்னை கொண்டு வந்து விட்டுட்டு அப்புறமா ஆபீஸ் போங்க, அப்புறம் அக்கா போன் பண்ணாங்க, அட்சுவும், அக்ஷியும் பேசினாங்க, உங்களையும் அண்ணியையும் கேட்டாங்க. வெளிய கெளம்பிட்டாங்களாம், வந்துட்டு பேசுறேன்னு சொன்னாங்க."

"ஓ குட்டீசும் பேசுனாங்களா, என்னை எழுப்பியிருக்க வேண்டியதுதான கண்ணா, சரி ஒரு டென் மினிட்ஸ் வெயிட் பண்ணு, ரெடியாகி வரேன்" என்று குளியலறைக்குள் புகுந்தான். சொன்னபடியே பத்து நிமிடங்களில் கிளம்பி வந்தவனிடம் கார் சாவியை கொடுத்தான் சிபி..

" கண்ணா நீயே ட்ரைவ் பண்ணு, " என்றபடியே காரில் ஏறி அமர்ந்தான் அபிசரண்...

சரணின் மன நிலை புரிய தானே காரை செலுத்த ஆரம்பித்தான் சிபி.

**வேளை தொடரும்….**

புதுமலர்கள் பூத்திடும் வேளை மதுவதனி



SARAN – NILA…

## வேளை - 02

தென்றல் வந்து தீண்டும் போது
என்ன வண்ணமோ மனசிலை
திங்கள் வந்து காயும் போது
என்ன வண்ணமோ நினைப்பிலை

விவரம் இல்லாமலே
பூக்களும் வாசம் வீசுது
உறவும் இல்லாமலே
இருமனம் ஏதோ பேசுது
எவரும் சொல்லாமலே
குயிலெல்லாம் தேனா பாடுது
எதுவும் இல்லாமலே
மனசெல்லாம் இனிப்பாய் இனிக்குது

ஓடை நீரோடை
இந்த உலகம் அது போல
ஓடும் அது ஓடும்

# புது மலர்கள் பூத்திடும் வேளை…!

**இந்தக் காலம் அது போல**
**நிலையா நில்லாது**
**நினைவில் வரும் நிறங்களே**

*****************************************************************************************

தேனி மாவட்டத்தின் அழகு கொஞ்சும் கிராமம், முல்லை ஆற்றின் கரையோரத்தில் அமைந்திருக்கும் அழகான கிராமம் அரண்மனைப்புதுர்… இயற்கை எழிலும் பார்க்கும் இடம் எங்கும் பசுமையும் நிறைந்த ஊர், விவசாயம் மட்டுமே இங்கு முதன்மை தொழிலாக நடந்து வருகிறது.

*(அங்குதான் நம்ம தேன்நிலா ஓட குடும்பம் இருந்தது.. வாங்க அவங்கள பத்தி சின்னதா ஒரு நினைவலைகளைப் பகிர்ந்துக்களாம்…)*

“ வீரம்மா… வீரம்மா என்ற குரல் கேட்டு வெளியில் வந்தார் வீரம்மா, “ என்னாச்சு எதுக்கிந்த சத்தம், தம்பி தூங்குதுள்ள, ரவைக்கு களத்துமேட்டுலப் போயி காவ காத்துட்டு விடிகாலையில தான  வந்துச்சு, கொஞ்சம் நேரந்தான் பொண்டாட்டி புள்ள கூட இருந்துட்டு வரட்டுமே,” என்ற மனைவியின் பேச்சில் எரிச்சல் வராமல் புன்னகை வந்தது குருசாமிக்கு..

“ எதுக்கு காலங்காத்தால இந்த இளிப்பு உங்களுக்கு, “ என்று முகவாயை தோள்பட்டையில் இடித்தவரைப் பார்த்து மேலும் சிரித்தவர், “அடக்கூறு கெட்டவளே அத சொல்லத்தான் கூப்பிட்டேன், ராத்திரி ஊருல இருந்து வந்ததும் வராததுமா களத்து மேட்டுக்கு வந்துட்டான், அதான் கோழியத் தெறந்து விடாம கட்டிப்போட்டு வச்சுருக்கென், நீ வரதுக்குள்ள அடிச்சுக் கொடுத்துட்டு வந்துடு மருமக கொழும்பு வச்சு கொடுக்கட்டும், பாவம் புள்ள என்னத்த சாப்பிடுதோ, போனதடவைக்கு இப்போ எளச்சும் போயிட்டான்.,, நல்லாத் தூங்கி எழும்பி பொழுதுசாய வர சொல்லு.. பெரியவ எழுந்துட்டா நீ கைல பிடிச்சிட்டு வந்துடு, மருமகளுக்கு வேலை செய்ய கஷ்டமா இருக்கும்.. நான் மாடுகள ஓட்டிகிட்டு போறேன், வெருசா வந்து சேரு புள்ள என்று மாடுகளை அவிழ்த்து கொண்டிருந்த கணவனிடம் ஒரு டம்ப்ளரை கொடுத்தார் வீரம்மா.

# புது மலர்கள் பூத்திடும் வேளை…!

“இந்தாங்க வாய் ஓயாம பேசிட்டீக, இந்தக் காப்பித் தண்ணிய குடிச்சிட்டு கௌம்புங்க .விஜயாக்கிட்ட சொல்லிட்டு பாப்பாவ கூட்டியாறேன். என்று தன் கணவனின் பெருமையை நினைத்துக் கொண்டே கொல்லையில் இருந்த கோழியை அடிக்க போனார் வீரம்மா..

பின்ன இருக்காதா அவரவர் பிள்ளைகளை களத்துமேட்டுக்கும், காட்டுவேலைக்கும் அனுப்ப குருசாமி மட்டும் தன் மகனைப் பள்ளிக்கு அனுப்பினார். ‘இந்த குருசாமிக்கு கொஞ்சம் கூட புத்தியே இல்ல, எம்புட்டு செலவு செஞ்சு படிக்க வைக்கிறான், எல்லாத்துக்கும் சேர்த்து அந்தப் பய தண்ணீ காட்டிட்டு போகப்போறான், அப்ப தெரியும் இவனுக்கு’ என்று ஊரில் உள்ளவர்கள் தெரிந்தும் தெரியாமலும் எவ்வளவோ பேசினாலும் அதையெல்லாம் தேவையில்லாத வெட்டிப்பெச்சு என்று புறம் தள்ளி, தன் மகனை பள்ளிக்கு அனுப்பினார்.கல்வி மட்டுமே அழியாத சொத்து, அது தன் மகனுக்கு அழியாத அளவில் கிடைக்க செய்தார்..
குருசாமி-வீரம்மாவிற்கு முதலில் ஒரு ஆணும் அடுத்தடுத்து இரு பெண் குழந்தைகளும் பிறந்ததுமே இறந்து விட.. வீரபாண்டி கௌமாரி அம்மனுக்கு தீச்சட்டி எடுப்பதாக நேர்த்திக்கடன் வைக்க, அதிலும் குருசாமி ஒருபடி மேலேப்போய் தன் உடம்பில் சகதிப் பூசி மூன்று ஊர் சுற்றித் தீச்சட்டி எடுப்பதாக வேண்ட.. அடுத்த வருடத்தில் பிறந்தவர் தான் பாண்டியன்.

பாண்டியன் பள்ளிப் படிப்புடன் சேர்த்து தன் பெற்றோருக்கும் தோட்ட வேலைகளிலும் உதவியவர். தேனியிலே ஒரு கல்லூரியில் பி.எ. ஆங்கிலம் படித்தார்., படிக்கும் போதே அரசு வேலைகளுக்கும் பரீட்சை எழுத ஆரம்பித்தார்.

மீதி நேரங்களில் தன் தோட்ட வேலைகளையும் பார்க்க, அவரின் பொருப்புணர்ந்து திருமணம் செய்து வைக்கலாம் என்று முடிவெடுத்து பாண்டியனிடம் அபிப்ராயம் கேட்க ஓரளவுக்கு படித்த பெண்ணாக மட்டுமே பார்க்க சொன்னார். அப்படி அமைந்தவர்தான் விஜயா @ விஜயலட்சுமி

விஜயா பத்தாம் வகுப்பு வரை படித்தவர், அந்தக் காலத்தில் அதுவும் கூட பெண்களை படிக்க வைக்க மாட்டார்கள். உள்ளூரிலே பள்ளி இருக்கப் போயி விஜயாவிற்கு அது சாத்தியமானது.

புது மலர்கள் பூத்திடும் வேளை - மதுவதனி

# புது மலர்கள் பூத்திடும் வேளை...!

இவர்களின் திருமணம் முடிந்த ஒரு வருடத்தில் பிறந்தவள் தான் பெரியவள் வேணிலா... அதன் பிறகு நாட்களின் ஓட்டத்தில் விஜயாவிற்கு பள்ளி மேற்படிப்பும் தொலைதூரக்கல்வியில் பி.எ. தமிழும் படிக்க வைத்தார் பாண்டியன்... இதற்கிடையில் அவருக்கு அரசு வேலை திருச்சியில் கிடைத்தது. மருமகளையும் அழைத்துப் போக சொன்னப் பெற்றவர்களிடம் மறுத்து விட்டு மாதம் இருமுறை ஊருக்கு வந்து போகிறார். இப்போது நெல்லருப்புக்காலம் என்பதால் வருட விடுமுறை எடுத்து தன் தந்தைக்கு உதவியாக வந்திருந்தார் பாண்டியன்.

இவர்களின் பேச்சைக் கேட்டுக் கொண்டிருந்த விஜயாவும், பாண்டியனும் சிரித்துக் கொண்டனர்... பிறகு பண்டியன் " ஏன் விஜி நாளைக்கு டாக்டர் கிட்ட போகனும் இல்ல, இந்த தடவ நானும் வரேன் போயிட்டு வந்துடலாம். வேணிக்குட்டி எழுந்துட்டா பாரு, நான் போய் முகத்த கழுவிட்டு வரேன்" என்றவாறு கொல்லைப்பக்கம் சென்றார்.

" தேனு தேனு " என்ற மல்லிகாவின் சத்தத்தில் கடந்த கால நிகழ்வில் இருந்து வெளியே வந்தவள், குரல் வந்த திசையில் பார்வையை செலுத்தினாள். அதற்குள் அவள் அருகே வந்துவிட்ட மல்லிகா, " தேனும்மா சிபித்தம்பி போன் பண்ணிச்சு, பெங்களூர்ல இருந்து வந்துருக்காம், இப்போ இங்க வருதாம் கால சாப்பாட்டுக்கே இங்க வந்துடுவாங்களாம், நீ போயி குளிம்மா எவ்ளோ நேரம் இந்த பனியில இருப்ப, நான் உனக்கு சத்துக் கஞ்சி செஞ்சுட்டேன். குடிச்சிட்டு ரெஸ்ட் எடு. நான் அவுங்க வந்ததும் எழுப்புறேன் " என்றவர் அவர் கைப்பிடித்து எழுப்பியும் விட்டார்.

" ம்ம்ம்ம் சிபி வந்துருக்கானா. இங்க வரானா..? அப்போ அவரும் வருவாரா..? வந்தா நல்லா இருக்கும், எவ்வளவு நாளாச்சுப் பார்த்து, இந்த வீட்டுல கொண்டு வந்து விட்டுட்டு போனதோட சரி, மூனு மாசம் ஆச்சு, எங்கிட்ட பேசலனாலும் சும்மாவாச்சும் சிபியோட வரலாம் இல்ல, என்று மனதில் யோசித்தவள், ஏதோ தோன்ற ' அய்யோ நைட் வலி வந்தத சொல்லக்கூடாதுன்னு சொல்லனும் மல்லிம்மாக்கிட்ட இல்லாட்டி எல்லாத்தையும் சொல்லிடுவாங்க" என்று அவரைத் தேட மல்லிகா அங்கில்லை.

# புது மலர்கள் பூத்திடும் வேளை...!

உள்ளே தான் இருப்பார் போய் சொல்லிக்கொள்ளலாம் என நினைத்துக் கொண்டே வீட்டிற்குள் செல்ல அவர் வீட்டில் இல்லை, எங்கே என விசாரிக்க கடைக்குப் போயிருப்பதாக் கூற சரி அப்புறம் சொல்லிக்கொள்ளலாம் என்றபடியே தன் அறைக்குச் சென்று குளித்துவிட்டு சாப்பிட்டாள்.. சிறிது நேரம் மல்லிகாவிற்காக கத்திருந்தவள், கண்கள் ஓய்வுக்கு கெஞ்ச படுத்துவிட்டாள். இரவு சரியான உறக்கம் இல்லாமை, வலியின் தாக்கம் எல்லாம் அவளை சோர்வடைய செய்திருந்தது.

காரில் வந்து கொண்டிருந்த சரணும் தன் நினைவுகளை அசைப்போட்டுக் கொண்டுதான் இருந்தான். அவர்களின் சொந்த ஊர் திருச்சி, அவனின் அப்பா சுந்தரம் இராணுவத்தில் மருத்துவராக பணிபுரிந்தவர், அம்மா-தேவகி குடும்பத் தலைவி, இவர்களுக்கு ஒரு பெண் அகிலா, இரண்டு ஆண்கள் அபிசரண் மற்றும் சிபிநந்தன்.

சரணுக்கு அடுத்து நீண்ட இடைவேளைக்குப் பிறகு பிறந்தவன் தான் சிபி. கடைக்குட்டியான சிபியை எல்லோருக்கும் பிடிக்கும், சுந்தரம் ராணுவத்தில் இருந்ததால் அவர்களின் பள்ளிப்படிப்பும் ராணுவ பள்ளியே என்றானது, வருட விடுமுறைக்கு மட்டும் ஊர்ப்பக்கம் வந்து செல்வார்கள், பள்ளிப் படிப்பு முடிந்து அகிலாவின் மேற்படிப்பிற்காக தேவகி, அகிலா மற்றும் சிபி மூவரும் திருச்சி வர சரண் தன் தந்தையுடனே தங்க வேண்டிய கட்டாயம் ஏற்பட்டது.

நாட்கள் அதன் பாட்டிற்கு நகர சரணும் கல்லூரிக்காக பூனா வந்தான். நாட்டையே உலுக்கிய கார்கில் போரில் மருத்துவ முகாமிற்காக சென்ற சுந்தரம் உடல்மட்டும் அரசு மரியாதையுடன் திருச்சி வந்தது தந்தையின் இழப்பு அனைவருக்கும் பெரும் தாக்கத்தைக் கொடுத்தாலும் நாட்டிற்காக உயிரை துறந்தது அவர்களுக்கு ஒரு வகையில் பெருமை ஏற்பட்டது. சுந்தரம் இறந்த சில மாதத்திலே சொந்தத்தில் அகிலாவிற்கு ஒரு மாப்பிள்ளை வரன் வர உடனே திருமணமும் முடிந்து அகிலா சென்னை சென்றாள். யாருக்காகவும் காலமும் நிற்பதில்லை காலனும் நிற்பதில்லை.

மதுவதனி புத்திடும் வேளை - மதுவதனி

# புது மலர்கள் பூத்திடும் வேளை…!

சிபியின் பள்ளி மேற்படிப்பு தொடரும் தருவாயில் தேவகி தன் உயிரை துறந்தார்.. இதனால் பெரிதும் பாதிக்கப்பட்டது சிபிதான், தேவகியின் கைக்குள்ளே வளர்ந்ததால் அவனால் அதிலுருந்து மீழ முடியவில்லை, சரணும் முடிந்தவரை அவனுக்கு துணை இருந்தாலும் அவனுக்குமே ஆறுதல் தேவைப்பட்டது. தம்பிகளின் துன்பம் காணமுடியாமல் கணவரின் வேலை மாற்றத்தோடு தானும் திருச்சிக்கு மாறினாள் அகிலா. அவர்களுக்கு இரண்டு குழந்தைகள் பெரியவன் அட்சயன், சிறியவள் அக்ஷரா.அதன் பிறகு சில நாட்களிலேயே சிபி மருத்துவப் படிப்பிற்கு தேர்வாக, அவனை திருச்சியில் உள்ள மருத்துவக்கல்லூரியில் சேர்த்துவிட்டு சரணும் மும்பைக்கு சென்றான் வேலைக்காக.

அவனின் நினைவுகள் நீளத் தொடங்க, அது வேண்டாம் என்பது போல் காரில் ஒலித்த பாடலின் வரிகள் அவனைக் கலைத்தது.

காரை ஓட்டி வந்த சிபி சிறிது நேரம் அமைதியாக வர, அதற்கு மேல் அவனுக்கு அந்த அமைதியை காக்கும் பொருமை தொலைந்து போனது, கண்களை மூடிக்கொண்டு வந்த அண்ணனைப் பார்த்தவன் இது வேலைக்கு ஆகாது என்று காரில் இருந்த ரேடியோவை ஒலிக்க விட்டான்.

*******************************************************************************************

**“கல்யாண மாலை கொண்டாடும் பெண்ணே என் பாட்டைக் கேளு உண்மைகள் சொல்வேன்**
**சுருதியோடு லயம் போலவே இணையாகும் துணையாகும் சம்சார சங்கீதமே**
**(கல்யாண மாலை)**

**வாலிபங்கள் ஓடும் வயதாகக்கூடும் ஆனாலும் அன்பு மாறாதம்மா மாலையிடும்**
**சொந்தம் முடிபோட்ட பந்தம் பிரிவென்னும் சொல்லே அறியாதம்மா**

**அழகான மனைவி அன்பான துணைவி அடைந்தாலே பேரின்பமே**
**மடிமீது துயில சரசங்கள் பயில மோகங்கள் ஆரம்பமே…**
**நல்ல மனையாளின் நேசம் ஒரு கோடி நெஞ்சமெனும் வீணை பாடுமே தோடி சந்தோஷ சாம்ராஜ்யமே… (கல்யாண மாலை)**



புது மலர்கள் பூத்திடும் வேளை - மதுவதனி

# புது மலர்கள் பூத்திடும் வேளை…!

**கூவுகின்ற குயிலைக் கூட்டுக்குள் வைத்து பாடென்று சொன்னால் பாடாதம்மா சோலைமயில் தன்னை சிறைவைத்துப் பூட்டி ஆடென்று சொன்னால் ஆடாதம்மா**
**நாள்தோறும் ரசிகன் பாராட்டும் கலைஞன் காவல்கள் எனக்கில்லையே**
**சோகங்கள் என்றாலும் நெஞ்சோடு இருக்கும் சிரிக்காத நாளில்லையே**

**துக்கம் சிலநேரம் பொங்கிவரும்போதும் மக்கள் மனம்போலே பாடுவேன் கண்ணே…என் சோகம் என்னோடுதான்… (கல்யாண மாலை) "**

**************************************************************************************************

எத்தனை சோகம் இருந்தாலும் அதற்கு மருந்திடுவது போல் அமைவது முக்கியமாக இசைதான். அதிலும் இசைஞானியின் பாடல்கள் நம் அன்றாட வாழ்வோடு ஒத்துப்போவது போல் இருக்கும். இங்கும் அப்படியே சரணின் மனதை படம்பிடித்து காட்டுவது போல் அமைந்தது அந்தப் பாடல், பாடலைக் கேட்டவன் சிறிது தடுமாறித்தான் போனான், மனைவியோடு நடந்த உரையாடலை நினைத்து., இருவருக்கும் நிச்சயம் செய்து இரண்டு மாத இடைவெளியில் திருமணநாள் குறிக்கப்பட்டது, நேரில் சந்திக்க முடியாமல் போன் வழியாக இருவரும் தங்கள் அன்பையும் காதலையும் வளர்க்க ஆரம்பித்தனர். அப்படியொரு நாளில் தான் தனக்கு இளையராஜா பாடல்கள் என்றாள் உயிர் என்றும் அவளுக்கும் பிடிக்குமா என்று கேட்க…

அதற்கு அவள் கூறிய பதில் "என்ன பாவா இப்படி கேட்குறீங்க எங்க ஊர்க்காரர் தெரியுமா அவரு, அப்புறம் எப்படி பிடிக்காம போகும்" என்றதை இன்று நினைத்தாலும் சிரிப்பு வந்துவிடும்…

**வேளை தொடரும்….**

புதுமலர்கள் பூத்திடும் வேளை மதுவதனி

# புது மலர்கள் பூத்திடும் வேளை…!




வேளை - 03

*SIBI – SHANAVI…*

பூஞ்சோலையில் வாடைக்காற்றும் வாட சந்தம் பாட….
கூடாதென்று கூறும் பூவும் ஏது மண்ணின் மீது…

ஒரே ஒரு பார்வை தந்தால் என்ன தேனே….
ஒரே ஒரு வார்த்தை சொன்னால் என்ன மானே…

ஆகாயம் ஆகாத மேகம் ஏது கண்ணே…
நிலாவே வா.. செல்லாதே வா…

என்னாளும் உன் பொன் வானம் நான்…
எனை நீ தான் பிரிந்தாலும் நினைவாலே அணைத்தேன்…

நிலாவே வா.. செல்லாதே வா…
என்னாளும் உன் பொன் வானம் நான்…

***********************************************************************************************

சரணின் இதழில் லேசான புன்னகையைப் பார்த்தவன் " என்னண்ணா தானா சிரிகிரிங்க, சொன்னா நானும் சிரிப்பேன் இல்ல, இப்படி உம்முனு வரது எவ்ளோ கஷ்டமா இருக்கு தெரியுமா? " ஒன்னும் இல்லடா,

சும்மாதான் நீ ஏன் அமைதியா வர, எப்பவும் போல ஏதாச்சும் மொக்கய போட வேண்டியது தான."

" என்னது மொக்க போடுறேனா நான் பேசுறது அப்படியா இருக்கு, அப்போ அந்த ஷாவி பேசுறதையெல்லாம் கேட்டா என்ன சொல்லுவீங்க மொக்கையோ மொக்கைனா, ஹாஹா இத அவகிட்ட சொல்லனும், அப்போ அது முகம் போற போக்க பார்க்கனும்" என்றுவிட்டு மறுபடியும் சிரிக்க ஆரம்பித்தான்.

" சும்மா இரு டா, எப்போ பாரு அவகிட்ட வம்பு பண்ணிக்கிட்டே , அவள சீண்டாம உன்னால இருக்க முடியாதா..? ஒரு நாள் வசமா மாட்டப் போற அப்போ உன்ன நல்லா மொத்தப் போறா பாரு." என்றவனும் சிரிக்கத்தான் செய்தான். அதற்கு காரணமும் உண்டு. சரணின் குடும்பமும் ஷானவியின் குடும்பமும் அருகருகே தான் குடியிருந்தனர்.

சிபியின் சிறு வயது தனிமையைப் போக்க வந்தவள் தான் ஷானவி, இருவருக்கும் மூன்று வயது தான் வித்தியாசம். சிறிது நேரம் கூட அவளால் அமைதியாக இருக்க முடியாது, அவள் இருக்குமிடம் எப்போதும் கலகலப்பாக இருக்கும்,ஏதேனும் குறும்பு செய்து சிபியிடம் அடி வாங்குவதே அவள் வேலை, எல்லா நேரத்திலும் தம்பிக்கு கை கொடுக்கும் அபி கூட இந்த விசயத்தில் ஷானவிக்கு தான் தன் வாக்கைப் பதிவு செய்வான்.அவளும் சிபியைப் பற்றின புகார்களை அவனிடமே வாசிப்பாள்.

சிபியின் கல்லூரிப்படிப்பு திருச்சியே என்றாகி விட, ஷானவியின் படிப்பு பெங்களூரில் தொடங்கியது, சிபியைத் தொடர்ந்து அவளும் மருத்துவப் படிப்பை தேர்ந்தெடுத்தது எல்லோருக்கும் ஆச்சரியமே, எலியும் பூனையுமாக இருக்கும் இருவரும் இதில் எப்படி ஒத்துப்போயினர் என்றுதான், சிபி மருத்துவ மேற்படிப்பிற்கு பெங்களூர் தேர்வு செய்யும் போதும் இதே ஆச்சர்யம் தான், ஏனென்றால் அப்போதும் அவர்கள் அதே எலியும் பூனையும் தான். ஷானவி மருத்துவப் படிப்பும், சிபி மருத்துவ மேற்படிப்பும் பெங்களூரில் தான் படிகிறார்கள்.

புது மலர்கள் பூத்திடும் வேளை - மதுவதனி

# புது மலர்கள் பூத்திடும் வேளை…!

சிபி சிரித்துக் கொண்டே ஒரு வளைவில் காரைத் திருப்ப ஒரு பெண் ஸ்கூட்டியில் காரை மறித்தது போல் நின்று கொண்டிருந்தாள், “ யாருடா இது இப்படி நடுரோட்டுல நிக்கிறது “ என்று கோபமாக கதவைத் திறக்கப் பார்க்க,.

அந்தப் பெண் அவர்களை நோக்கி வந்தாள், அந்தப் பெண்ணைப் பார்த்ததும் இருவரும் சிரிக்க தொடங்க, அந்தப் பெண்ணிற்கு கோபம்.., டிரைவர் சீட்டின் கண்ணாடியைத் தட்டி அவனைக் கீழே இறங்குமாறு சைகை செய்தாள்.

“அண்ணா என்னை முழுசா பார்த்துகோங்க அந்த சுனாமி என்னைத் தூக்கிடப் போகுது“ “டேய் முதல்ல இறங்கு, எதுக்கு கூப்பிடுறானு பாரு, அப்புறம் உன்னோட டையலாக்கெல்லாம் விடு”

“ம்ம்ம் என்ன நடக்கப் போகுதோ என்று புலம்பியபடியே வெளியில் வந்தவனைப் பார்த்து முறைத்தவள் அவனிடம் இருந்த கார் சாவியை அவன் எதிர்பாரா வண்ணம் பறித்தாள், “ ஏய் என்னடி பண்ற, சாவியைக் கொடு என்னக் கொழுப்பா “

“ யாருக்கு கொழுப்பு, எனக்கா..? அது உனக்குத்தான் நெறைய இருக்கு,, அப்படி இருக்கப் போய்தான் எங்கிட்ட சொல்லாம வந்துருக்க என்றவள் சாட்ஷாத் ஷானவியேதான்.

“ உன்கிட்ட ஏன் சொல்லனும், அவ்ளோ பெரிய அப்பாடக்கரா நீ… பெரிய இவ வந்துட்டா, ஆமா நீ ஏன் வந்த. இப்போ லீவும் கிடையாதே”

“ நான் ஏன் உன்கிட்ட சொல்லனும், நீ மட்டும் என்ன தாத்தா டக்கரா..? போடா… அப்படி உனக்குத் தெரிஞ்சே ஆகனும்னா சொல்லு, ஒரு கடி ஜோக் சொல்லிட்டு அப்புறம் ஏன் வந்தேனு காரணத்தையும் சொல்றென்,”

புது மலர்கள் பூத்திடும் வேளை - மதுவதனி

## புது மலர்கள் பூத்திடும் வேளை…!

தன் இரு கைகளையும் தலைக்கு மேலே தூக்கியவன், "ஆத்தா பரதேவதை ஒரு மூனு நாள் உன்ன விட்டு நிம்மதியா இருக்கலாம்னு நினைச்சேன், அது கடவுளுக்கு கூடப் பொறுக்கல, நீ ஆணியே கழட்ட வேணாம் கிளம்பு முதல்ல."

"என்னது கிளம்ப, எங்க கிளம்பனும், ஏன் கிளம்பனும் என்றவள் அவனை தள்ளிவிட்டு டிரைவர் இருக்கையில் அமர்ந்தவள் தன்னுடைய வண்டி சாவியைத் தூக்கிப் போட்டு " கேட்ச்" என்று கத்தினாள்.

கேட்ச் என்றதும் என்னவென்று யோசிக்காமல் பட்டென்று அதைப் பிடித்தவனைப் பார்த்து இருவரும் சிரித்தனர். " நந்தி தம்பி நீ என்ன விட்டுட்டு எங்கிட்ட சொல்லாம வந்ததுக்கு தண்டனையா இந்த வண்டிய ஓட்டிக்கிட்டு எங்க பின்னாடியே வந்து சேரு சரியா.."

" அடியேய் எங்க போறோம்னு தெரியாம நீ எங்க வர, நாங்க அண்ணியப் பார்க்கப் போறோம், நீ இடத்தக் காலிப் பண்ணு " என்றான் கடுப்பாக.

" ஐ தேனக்காவையா பார்க்க போறீங்க, அப்போ கண்டிப்பா நானும் வருவேன், டேய் அரிசி மூட்டை மல்லிக்கிட்ட மெனு சொல்லிட்டியா, நீ சொல்லியிருப்ப உன்னப் பத்தி எனக்குத் தெரியும், ஓகே நீ வரதுக்குள்ள நான் போய் அதக் காலி பண்றேன்." என்று கேட்டது,

" ம் அய்யோ என அவன் முகம் இருள அவசரமாக " சாவிக்குட்டி பின்னாடி உட்காரு மூனு பேரும் சேர்ந்தே போகலாம்" என்று அவளின் வண்டி மீதிருந்த பயத்தில் கூற,

" அதெல்லாம் செல்லாது செல்லாது தண்டனை தண்டனை தான் என்றவள் காரைக் கிளப்ப, " அண்ணா இவக்கிட்ட சொல்லுங்க, என்னப் பண்றா பாருங்க" இருவரின் சண்டையயும் சிறு சிரிப்புடன் பார்த்திருந்த அபி " நீ செஞ்சது தப்புத்தான

# புது மலர்கள் பூத்திடும் வேளை...!

நீ அந்த வண்டியவே ஓட்டிக்கிட்டு வா “ என்று முடித்துவிட , வேரு வழியில்லாமல் புலம்பிக் கொண்டே அவர்களைத் தொடர்ந்தான் சிபி.

காரை ஓட்டிக் கொண்டே " அண்ணா இன்னைக்கு ஆபிஸ் போகலயா, இந்த கொரில்லாவோட சுத்திட்டு இருக்கீங்க ".

" ஏய் அறுந்த வாலு உன் வாய் சும்மாவே இருக்காதா, எப்பப் பாரு அவன்கூட வம்பு, அங்க வீட்டுல விட்டுட்டு நான் ஆபிஸ் போறேன். " நீ ஆன்டிக்கிட்ட சொல்லிட்டு வந்தியா இல்ல வழக்கம் போல தேடவிட்டுட்டு வந்தியா".

"அண்ணா கூல் எதுக்கு இவ்ளோ டென்சன் கழுத கெட்டா குட்டிச்சுவருனு அவங்களுக்கேத் தெரிஞ்சிருக்கும், அதனால தேட மாட்டாங்க."

" அண்ணா தேனக்கா எப்படி இருக்காங்க, இந்த மாதிரி நேரத்துல எப்பவும் வீட்டுக்காரர் பக்கத்துலயே இருக்கனும்னு தோணுமாம் அகிலா அண்ணி சொல்லிருக்காங்க. நீங்கதான் ஜாதகம் அது இதுனு பிரிஞ்சிருகிங்க, இந்தக் காலத்துல போய் எப்படி இதெல்லாம் நம்புறீங்கனே தெரியல, இந்த சமயத்துல ரொம்ப ஏங்குவாங்க குழந்தையோட அசைவுகளை உங்ககிட்ட ஷேர் பண்ண ஆசைப்படுவாங்க , சரி அதை விடுங்க குட்டி அபியா? இல்ல குட்டி நிலாவா? உங்களுக்கு யாரு வேணும் " என்று அவள் பாட்டிற்கு வளவளக்க

சரணின் மனமோ எதையொ நினைத்து பார்வை எங்கோ நிலைக்குத்தி நின்றது. அவன் மனம் ஆழ்ந்த வருத்தத்தில் இருந்தது, எப்படி எப்படியோ, எத்தனையோ கனவுகளோடு எதிர்பார்த்த இந்த தருணம் இன்று யாருக்குமே நிம்மதியும் மகிழ்ச்சியும் இல்லாமல் போனதை எண்ணி நொந்து போனான். இதை சரி செய்ய முடியுமா..? தான் அவளை ஏற்றுக்கொள்ள வேண்டுமா..? தன்னால் அது முடியுமா..? அவள் தன்னிடம் மறைத்து விட்டாளே என்ற கோபமும் குறையுமா.?

# புது மலர்கள் பூத்திடும் வேளை…!

அவளிடம் இருந்து குழந்தையை பிரிக்க வேண்டுமா..? தன் குடும்பமும் எந்த உறுத்தலுமின்றி அவளை ஏற்குமா..? எத்தனைக் கேள்விகள் , எதற்கும் விடை தான் தெரியவில்லை, இல்லை விடை காணத் தோன்றவில்லை அவனால். முதலில் எந்த பிரச்சினையும் இல்லாமல் குழந்தை நல்லபடியாகப் பிறக்க வேண்டும், " அன்று கீழே விழுந்ததில் ஏதெனும் பிரச்சினை இருக்கோ, அப்படி இருந்திருந்தால் டாக்டர் என்னிடம் சொல்லியிருப்பாரே " என்று தானே கேள்வி கேட்டு அதில் பயந்து அதற்கு பதிலும் அவனேக் கூறி தனக்குத் தானே சமாதானமும் ஆகிக்கொண்டான். யாரோ தன்னை அழைப்பது போல் தோன்ற நிதானத்திற்கு வந்தான், ஷானவி தன்னை நோக்குவதைப் பார்த்தவன் என்ன என்பது போல் பார்க்க…

" இல்ல நான் எவ்வளவு நேரம் பேசிட்டே வரேன், நீங்க அமைதியா வரீங்க அதான் பார்த்தேன், வீடு வந்திடுச்சு" என்றாள்.

" அரைமணி நேரத்துல வரவேண்டிய இடத்துக்கு உங்க ரெண்டு பேரால ஒரு மணி நேரம் ஆச்சுப்பாரு ' என்றவன் வண்டியை விட்டு இறங்கிக் கொண்டெ " சிபி இன்னும் வரல என்னாச்சு " வாய் விட்டு புலம்ப, " அவன் பஞ்சர் ஒட்டிட்டு வரவேண்டாம், என ஷானுக் கூற இருவரும் சிரித்து விட்டனர்.

"அவன் உன்னோட வண்டியப் பார்த்து ஏன் இப்படி அலறுனான்னு இப்போ புரியுது "" பின்ன விட்டுட்டு வந்ததுக்கு இதுதான் பனிஷ்மென்ட் " என்று மீண்டும் சிரிக்கவும் சிபி வந்து சேரவும் சரியாக இருந்தது.

" ஏண்டீ கொல்லிவாய்ப்பிசாசு, எதுக்குடி இப்படி பன்ன, எவ்ளோ தூரம் தள்ளிட்டு வரது, வேணும்னுதாண்டி பண்ணிருக்க, குட்டிச்சாத்தான் எப்படியெல்லாம் யோசிக்கிற, சிபி பொரிய,

என்னமோ சொல்லிக்கொள் என்பது போல் வீட்டுக்குள் நடந்தாள் ஷானு. " போறதப் பாரு எருமை " என்று அதற்கும் திட்டியவன் மீண்டும் தன் அண்ணனிடம் புலம்ப ஆரம்பிக்க " போதும் விடுடா, சும்மா ஏதாச்சும் சொல்லிக்கிட்டு வா உள்ள " என்று அவன் புலம்பலுக்கு முற்றுப் புள்ளி வைக்க உர்ரென்ற முகத்துடன் வர இருவரும் உள்ளே நுழைந்தனர்….

புது மலர்கள் பூத்திடும் வேளை - மதுவதனி

# புது மலர்கள் பூத்திடும் வேளை…!

உள்ளே நுழைந்த இருவரையும் வரவேற்றது பாசந்தியை முழுங்கி கொண்டிருந்த ஷானு தான். " அய்யோ அண்ணா என்னோட பாசந்தியெல்லாம் காலி பன்றாளே, மல்லி எங்க போன, யாரக் கேட்டு இவளுக்கு என்னோடது எல்லாம் கொடுத்த, ஏன்டீ தீனிப்பண்டாரம் எனக்கு ஏதாச்சும் வச்சுருக்கியா, இல்ல எல்லாத்தையும் மொக்கிட்டியா " என்று சிபி கத்த எதுவுமே நடக்காதது போல் தன் கிண்ணத்தையே கவனமாக காலி செய்ய , இவளை.....ளை என்று பல்லை மட்டுமே கடிக்க முடிந்தது சிபியால்.

வீட்டிற்குள் நுழைந்ததும் சரணின் மனதில் கலவையான் உணர்வுகள். அவளைப் பார்க்கலாமா.? இல்லை இப்படியே திரும்பி போய்விடலாமா.? தன்னைப் பார்த்ததும் அவள் கண்கள் கலங்கி கண்ணீரோடு பார்க்கும் அந்தப் பார்வை , தன்னை மன்னித்துவிடு என்று இறைஞ்சும் அந்தப் பார்வை அதை தன்னால் காண முடியுமா.? கார் வந்து இவ்வளவு நேரமாகியும் ஏன் இன்னும் வரவில்லை, தனக்கு தோன்றுவது போல், அவளுக்கு தன்னைப் பார்க்கும் ஆவல் இல்லையா.? எங்கே போனாள் என்று சரணின் கண்களும் மனமும் அலை பாய்ந்தது.

ஷானவியிடம் வழக்கடித்தப்படியே அண்ணனைப் பார்த்த சிபிக்கு அவனின் கலங்கிய முகம் அவனை வெகுவாக அசைத்தது. அண்ணனின் வாழ்க்கையில் அண்ணியைத் தவிர வேறு யாராலும் நிம்மதியையும் சந்தோஷத்தையும் தரமுடியாது என்று அந்த நிமிடம் உணர்ந்தான் சிபி. எந்தப் பிரச்சினை வந்தாலும் எவ்வளவுக் கஷ்டப்பட்டாலும் இவர்கள் இருவரையும் கண்டிப்பாகச் சேர்த்து வைப்பதே தன் லட்சியம் என்று மனதில் உறுதியெடுத்தான் அந்தப் பாசமான இளவல்.

அண்ணனும் தம்பியும் அவரவர் சிந்தனையில் மூழ்கி இருக்க " அக்கா தூங்குறாங்களாம், மல்லி டார்லிங்க் எழுந்துட்டாங்களானுப் பார்க்க போயிருக்கு" என்று ஷானவி அங்கிருந்த அமைதியைக் கலைக்க... அப்போதுதான் மாடியில் இருந்து இறங்கிய மல்லி அவசரமாக வந்து, " வாங்க தம்பி, சிபிக் கண்ணா எப்படி இருக்க, எவ்ளோ நாளாச்சு பார்த்து, ரொம்ப இளைச்சுப் போயிட்ட, எத்தன நாள் இருப்ப இங்க, வா உனக்கு பிடிச்சதெல்லாம் சமைச்சுருக்கேன் வாங்க சாப்பிடலாம், மத்ததெல்லாம் அப்புறம் பேசலாம் என்று வாஞ்சையுடன் விசாரித்தவர் டைனிங்க் ஹாலை நோக்கி நகர்ந்தார்.

# புது மலர்கள் பூத்திடும் வேளை...!

சிபி " என்னாச்சு மல்லி அண்ணிக்கு , இவ்ளோ நேரம் தூங்க மாட்டாங்களே, உடம்புக்கு ஏதும் முடியலையா..?

" ஆமா தம்பி ராத்திரியெல்லாம் தூங்கவே இல்லத் தேனு, தூக்கம் வரலைன்னு ஒரு படம் வரைஞ்சுக்கிட்டு இருந்துச்சு, ரெண்டு மணிக்கு மேலதான் முடிஞ்சது. அதுக்கு அப்புறம் தான் ரெண்டு பேரும் படுத்தோம், திடிர்னு நைட்டு அனத்துற சத்தம் கேட்டுப்...பார்த்தா தேனுதான் வயித்து வலியில துடிச்சிக்கிட்டு இருக்கு, அப்புறம் கஷாயமெல்லாம் வச்சுக் கொடுத்து விளக்கெண்ணெயெல்லாம் தேச்சு விட்டேன்.. விடிஞ்சிடுச்சு, பக்கத்துல படுத்துருக்குற என்னை கூட எழுப்பல. அதான் புள்ள தூங்குது, கொஞ்ச நேரம் தூங்கட்டும், நீங்க சாப்பிடுங்க, அதுக்குள்ள எழுந்திருச்சிரும் வாங்க." மல்லித் தன் நீண்ட உரையை முடிக்க அங்கு அதைக் கேட்க எலியும் பூனையும் மட்டுமே இருந்தனர். சரண் அந்த மாடிப்படிகளில் ஏறி இருந்தான்.

பதட்டத்துடன் அறைக்குள் நுழைந்தவன் அசதியில் உறங்கிக் கொண்டிருந்த மனைவியே தென்பட்டாள். தன் மனம் கவர்ந்தவளையே கண்ணிமைக்காமல் பார்த்துக் கொண்டிருந்தான்.

குளித்துவிட்டு கூந்தலைத் துவட்டாமல் அப்படியே காய விட்டிருப்பாள் போலும், அது விரிந்து தரையைத் துடைத்துக் கொண்டிருந்தது, ஒரு பக்கம் சரிந்து கால்களை மடக்கி தூங்கியவளின் அழகில் ஒரு கணம் சொக்கித்தான் போனான். கனவும் நினைவும் அவளே ஆனாலும் நேரில் பார்த்து மூன்று மாதமாகி விட்டது.

மனைவியின் அருகில் சென்றவன் அவளது உறக்கம் கலையாமல் மெதுவாக அவளை எடுத்து தன் மடியில் கிடத்திக் கொண்டான், அவள் முகத்தில் தெரிந்த சோர்வும் களைப்பும் அவள் எவ்வளவு வேதனைப்பட்டிருப்பாள் என்று தெரிந்தது சரணுக்கு, மனம் தாளவில்லை அந்தக் காதல் கணவனுக்கு, நானே என் நிலாவை வருத்தப்படுத்திவிட்டேனோ என்ற எண்ணம் எழுவதை தடுக்க முடியவில்லை. அவளது கூந்தலை வருடியவன் மெதுவாக தன் கைகளை கீழே இறக்கி எப்போதும் ஏதோ யோசனையிலேயே இருப்பது போலிருக்கும் புருவ முடிச்சை நீவி விட்டவன், மல்லி கூறிய வார்த்தைகள் நினைவு வர தன் வாரிசு வளரும் தன் மனைவியின் மணிவயிற்றை மிருதுவாக வருடினான்.

புது மலர்கள் பூத்திடும் வேளை - மதுவதனி

# புது மலர்கள் பூத்திடும் வேளை…!

அந்த வருடலில் மயங்கியோ அல்லது இத்தனை நாட்களாக இந்த வருடல் கிடைக்கவில்லை என்ற கோபமோ காலால் உதைத்து அங்கு தான் இருப்பதை உறுதி செய்தது அந்த சிசு.

அந்த அசைவிலே மெய் சிலிர்த்து போனவன் மனைவியைப் பார்க்க அவளோ இது எப்போதும் நடப்பது தான் என்பது போல சிறு அசைவுடன் "பாருங்க பாவா எப்படி உதைகிறாங்கன்னு, நீங்க சொல்லுங்க அம்மா பாவம் குட்டீஸ், சமர்த்தா அமைதியா இருங்கன்னு" என்று விட்டு மீண்டும் தன் துயிலைத் தொடங்கினாள்.

இதையெல்லாம் பார்த்துக் கேட்ட சரணின் நிலையையோ விவரிக்க முடியவில்லை, அவனை விட அவள்தான் அவன்மேல் உயிராய் இருக்கிறாள் என்று தெரியும். தான் இல்லாவிட்டாலும் தன்னுடன் வாழ்வது போலவே ஒவ்வொரு நொடியும் கழிக்கிறாளா.? என்று யோசித்த மனம் சிறகில்லாமல் வானில் பறந்தது.

கண்களில் லேசான நீர்ப்படலம் அவசரம் அவசரமாக இவளுக்காக இந்த வீட்டை வாங்கியதும், வீட்டை விற்றவர்களின் வேலைக்காரர்களையும் அப்படியே வேலைக்கு எடுத்து மல்லிகாம்மாவை உடனே வரவழைத்து இந்த வீட்டில் இவளைக் கொண்டு வந்து விட்டது, ஏன், எதற்கு என்று கேட்டவர்களுக்கெல்லாம் நேரம் சரியில்லை குழந்தைப் பிறக்கும் வரைத் தனித்தனியாக இருக்க வேண்டும் என்று தன் அக்கா ஒரு காரணம் கூறியது எல்லாம் கனவாகவே இருந்திருக்கலாம் என்றேத் தோன்றியது. சரணும் இப்போதுதான் இந்த அறைக்குள் வருகிறான்.

அந்த அறையை நோட்டம் விட்டவனின் பார்வையில் பட்டவையெல்லாம் அவனுடைய உருவங்கள் தான். எல்லாமே அவனின் நிலா வரைந்தது என்று சொல்லாமல் சொன்னது அவளின் **"அபிநிலா"** என்ற கையெழுத்தில், அதில் அவன் முகம் புன்னகையை பூசியது. அவளை முதன் முதலாக பார்த்ததும் ஒரு ஓவியக் கண்காட்சியில் தான் என்பதும் அவன் நினைவலையில் வந்தது…

**வேளை தொடரும்….**

புது மலர்கள் பூத்திடும் வேளை - மதுவதனி

# புது மலர்கள் பூத்திடும் வேளை…!



**வேளை - 04**

நான் தேடும் செவ்வந்தி பூவிது…
ஒரு நாள் பார்த்து அந்தியில் பூத்தது…
பூவோயிது வாசம், போவோம் இனி காதல் தேசம்…
பூவோயிது வாசம், போவோம் இனி காதல் தேசம்…
நான் தேடும் செவ்வந்தி பூவிது…
ஒரு நாள் பார்த்து அந்தியில் பூத்தது…

பறந்து செல்ல வழி இல்லையோ… பருவக் குயில் தவிக்கிறதே…
சிறகிரண்டும் விரித்துவிட்டேன்… இளமை அது தடுக்கிறதே…
பொன்மானே என் யோகம்தான்…பெண்தானோ சந்தேகம்தான்….
என் தேவி… ஆஆஆ ஆஆஆ….

உன் விழி ஓடையில் நான் கலந்தேன்…
உன் கனி விழும் என தவம் கிடந்தேன்….
பூங்காத்து சூடாச்சு ராஜாவே யார் மூச்சு?

நான் தேடும் செவ்வந்தி பூவிது…
ஒரு நாள் பார்த்து அந்தியில் பூத்தது…

# புது மலர்கள் பூத்திடும் வேளை…!

**மங்கைக்குள் என்ன நிலவரமோ மஞ்சத்தில் விழும் நிலை வருமோ?...**
**அன்னத்தை எந்தன் விரல் தொடுமோ என்றைக்கும் அந்த சுகம் வருமோ?...**
**தள்ளாடும் பெண்மேகம்தான்…என்னாளும் உன் வானம் நான்…**
**என் தேவா ஆஆஆ ஆஆஆ…**
**கண்மலர் மூடிட ஏன் தவித்தேன்?...**
**என் விரல் நகங்களை தினம் இழந்தேன்…**
**தாலாட்டு பாடாமல் தூங்காது என் கிள்ளை…**

**நான் தேடும் செவ்வந்தி பூவிது…**
**ஒரு நாள் பார்த்து அந்தியில் பூத்தது…**

**பூவோயிது வாசம், போவோம் இனி காதல் தேசம்…**
**பூவோயிது வாசம், போவோம் இனி காதல் தேசம்…**
**நான் தேடும் செவ்வந்தி பூவிது…**
**ஒரு நாள் பார்த்து அந்தியில் பூத்தது…**
**********************************************************************************************

அப்போது தேனு தன் கல்லூரி படிப்பில் முதலாமாண்டில் இருந்தாள். பள்ளியில் படிக்கும்போதே நிறைய ஓவியப் போட்டிகளில் கலந்துகொண்டு பரிசுகளை குவித்திருக்கிறாள். தன் தந்தையின் மறைவிற்குப் பிறகு அவளை ஊக்குவிக்க வீட்டில் யாரும் இல்லை அதனால் அவளின் திறமையை வெளிகாட்டியதில்லை.

ஆனால் அவள் எந்த ஒரு ஓவிய கண்காட்சியையும் விட்டு வைத்ததில்லை, தன்னுடைய தோழிகளை இழுத்துக்கொண்டு சென்றுவிடுவாள். அப்படி ஒரு கண்காட்சிக்கு சென்றிருந்த போதுதான் ஒரு ஓவியத்தைப் பார்த்து மெய் மறந்து நின்றிருந்தாள். மேலும் அதில் சில மாற்றங்கள் செய்தால் எப்படி இருக்கும் என்ற கற்பனையும் தோன்ற அதை தன் மனதில் கற்பனை வடிவம் கொடுக்க ஆரம்பித்தாள்.

தோழிகள் அவளை அழைத்தும் சிறிது நேரத்தில் கிளம்பலாம் என்றபடியே அந்த ஓவியத்தில் லயித்திருந்தாள். பின் ஒரு முடிவோடு அந்த ஓவியரை சந்தித்து எப்படியாவது தன் கற்பனையை கூறவேண்டும் என்று ரிசப்ஷனை அணுகினாள்.

புது மலர்கள் பூத்திடும் வேளை - மதுவதனி

# புது மலர்கள் பூத்திடும் வேளை…!

"எக்ஸ்கியுஸ் மீ மேடம் "

"எஸ் சொல்லுங்க "'

"'நான் மிஸ்டர் ரவீந்தரைப பார்க்க முடியுமா பிளீஸ்"

"ஓ நீங்க யார் ",

"நான் இந்த எக்ஸ்பிசன் பார்க்க வந்தேன், அப்பாய்மெண்ட் ஏதும் கிடையாது, பட் அவரை மீட் பண்ணனும் முடியுமா?"

"ஓகே நீங்க வெயிட் பண்ணுங்க, அவர் இன்னும் வரல, பட் வர்ற நேரம்தான், நான் அவர்கிட்ட கேட்டு சொல்றேன்."

"எஸ் நான் வெயிட் பண்றேன், தேங்க்ஸ் மேம்" என்று அங்கிருந்த இருக்கையில் அமர்ந்து காத்திருக்க ஆரம்பித்தாள்.

ரிசப்ஷன் பெண் கூறியது போல் சிறிது நேரத்திலேயே அந்த ஓவியரும் அவருடன் மற்றொரு ஆணும் அந்த கண்காட்சி அறையை நோக்கி வந்து கொண்டிருந்தனர், அவர்கள் இவர்களை தாண்டி செல்ல முயல அந்த வரவேற்பு பெண் அவர்களை அழைத்து தேன்நிலாவை அறிமுகப்படுத்தி வைத்தாள்..

"வணக்கம் சொல்லுங்க. என்ன பார்க்கணும்னு சொன்னீங்களாம், என்ன விஷயம், இந்த பெயின்டிங்க்ஸ் எல்லாம் சேல்ஸ் ஆகிடுச்சு, இது ஒரு வெளிநாட்டுக்காரர் வாங்கிட்டார். அதனால அந்த விஷயமா இருந்தா உங்களுக்கு என்னால் உதவி செய்ய முடியாது, வேற எதுவா இருந்தாலும் சொல்லுங்க என்னால ஹெல்ப் பண்ண முடியுதான்னு பார்க்கிறேன், முடிஞ்சா கண்டிப்பா செய்றேன்" என்றான் ரவீந்தர்.

புது மலர்கள் பூத்திடும் வேளை - மதுவதனி

# புது மலர்கள் பூத்திடும் வேளை…!

அவளோ " ஐயோ அதெல்லாம் இல்ல சார், நீங்கள் வரைந்ததில் அந்த **'இயற்கை தாயின் மடியில்'** என்ற பெயிண்டிங் அருமையா இருந்தது அது எனக்கு ரொம்ப பிடிச்சது, ஆனால் அதுல இன்னும் கொஞ்சம் மாற்றம் செய்தால் எப்படி இருக்கும்னு தோணிச்சு, அதை அப்படியே உங்ககிட்ட சொல்லிட்டு போகலாம்னு வந்தேன்".

"ஓ அப்படியா நீங்களும் வரைவீங்களா? வெரிகுட் எப்படின்னு சொல்லுங்க, நான் மாத்த முயற்சி செய்றேன்." என்று அவன் உடனே ஒத்துக்கொள்ளவும் அவளால் நம்ப முடியவில்லை. அவள் அவனை நம்பாது பார்க்க, மீண்டும் அவனே "என்ன சிஸ்டர் சொல்றீங்களா?" என்றதும் தான், எப்போதும் கையிலேயே வைத்திருக்கும் நோட் பேட்-டிலியெ அந்த மாற்றங்களை உடனே வரைந்தும் காட்டினாள்.

அந்த ஹாலில் நுழைந்ததில் இருந்து அவளை மட்டுமே பார்த்துக் கொண்டிருந்த அந்த மற்றொரு ஆண் இப்போது அவளின் கைவண்ணத்தைக் கண்டு முதன் முதலாக வாய் திறந்தான். " வாவ் சூப்பர் ரவி, ரொம்ப அருமையா பென்சில் பண்ணிருக்காங்க. அந்த பெயிண்டிங்கில் இதையும் சேர்த்தா கண்டிப்பா இன்னும் அழகாயிடும். நான் மேத்யுகிட்ட பேசுறேன். நீ இவங்களையே அந்த பெயிண்டிங்க ரீட்ரா (redraw) பண்ண சொல்லு. சிம்ப்ளி சூப்பர்ப்-பா இருக்கும்." அந்த புதியவன் முடிக்க…

"யாருடா இது இவ்ளோ பேசுறான்" என்று நிமிர்ந்து பார்த்த தேனைப் பார்த்து புன்னைகைத்தவன், நீங்களும் பெயிண்ட் பண்ணுவீங்களா என்றான்.

அவனை விட்டு ரவீந்தரை அவள் பார்க்க, அவனும் மாற்றங்களை பாராட்டி விட்டு அவளையே செய்து தருமாறு கூறினான். ஆனால் அவள் "இல்ல சார் நீங்களே பண்ணுங்க அதுதான் நல்லா இருக்கும்" என கூறினாள்.

"உங்க பேர் என்ன சிஸ்டர்" என்றான் தேவையில்லாமல் ரவீந்தர்…

புது மலர்கள் பூத்திடும் வேளை - மதுவதனி

# புது மலர்கள் பூத்திடும் வேளை…!

“தேன்நிலா ஏன் சார் கேட்குறீங்க”

“உங்களை எங்கேயோ பார்த்திருக்கேன், நீங்க திருச்சி தானா “

“இல்ல சார், இங்க வந்து டூ இயர்ஸ் தான் ஆகுது, இதுக்கு முன்னாடி தேனில இருந்தோம்”.

“அப்போ தேனில தான் உங்களை நான் பார்த்திருக்கணும், நீங்க xxxxx ஸ்கூல் தான் படிச்சிருக்கணும் இல்லையா?, என்னை உங்களுக்கு அடையாளம் தெரியலையா?”

“ம்ம் தெரியும் சார், நான் 10th படிக்கும்போது அந்த வருடம் ஸ்போர்ட்ஸ் டேக்கு வந்துருக்கீங்க, அங்க நடந்த ஓவியப் போட்டியில நான் பர்ஸ்ட் ப்ரைஸ் வாங்கினேன், நீங்கதான் எனக்கு பரிசு கொடுத்தீங்க, என்னோட அம்மாக்கிட்ட கூட நீங்க பேசுனீங்க.” என்றாள் புன்னகையுடன்.

மற்ற இருவருக்குமே வியப்பு. முதலில் சுதாரித்த ரவி “அப்புறம் ஏன் என்னைத் தெரிஞ்ச மாதிரி காட்டிக்கல?”

“அது வந்து சார் நீங்க ரொம்ப பெரிய ஓவியர், என்னையெல்லாம் ஞாபகம் வச்சிக்கிற அளவுக்கு நான் பெரிய மனுஷி கிடையாது, என்னை மாதிரி எத்தனையோ பேர் மீட் நீங்க பண்ணிருக்கலாம், எல்லாரையும் உங்களால ஞாபகம் வச்சுக்க முடியாது, அதனாலதான் நான் முன்னாடியே சொல்லி உங்களுக்கு மறந்திருந்தால் அது உங்களுக்கும் கஷ்டம் எனக்கும் கஷ்டம், அதன் நான் அப்படி நடந்துக்கிட்டேன், சாரி சார்” என்றாள்.

அவளின் அந்த குணம் இருவரையும் வசீகரித்தது, உண்மையிலேயே நீ பெரிய மனுசிதான் இந்த குணம் இருந்தா போதும், உன்னால யாரையும் வருத்தப்பட வைக்க முடியாது, நான் வாய் வார்த்தைக்கு சொல்லல,

புது மலர்கள் பூத்திடும் வேளை - மதுவதனி

# புது மலர்கள் பூத்திடும் வேளை…!

நிஜமாகவே நீ என்னோட சிஸ்டர் மாதிரிதான், உனக்கு என்ன ஹெல்ப் வேணும்னாலும் என்கிட்ட கேட்கலாம் சரியா, அப்புறம் இது என்னோட ஒரே ஃப்ரண்டு பெஸ்ட் ஃப்ரண்டு அபிசரண்” என்று தன் நண்பனை அறிமுகப்படுத்த, அவனைப் பார்த்து ஒரு அறிமுக புன்னகையை வீசி விட்டு மீண்டும் ரவியின் பேச்சில் கவனமானாள் .

“நான் இங்கு அதிகம் இருக்கமாட்டேன், நான் வெளிநாடுகளில்தான் அதிகம் இருப்பேன். என்னோட மொத்த விவரங்கள் எல்லாம் இவன்கிட்ட இருக்கும், என்ன காண்டாக்ட் செய்யறதை விட சரணை காண்டாக்ட் செய்தால் போதும், உனக்கு உதவி உடனடியாக கிடைக்கும் சரியா”. என்று ரவி பேச்சை முடிக்க,

“எஸ் சார் அப்படியொரு நிலைமை வந்தால் கண்டிப்பா கேட்கிறேன்” என தேனு பதில் அளிக்க…

“ஏன் சிஸ்டர் என்ன பிரச்சனை, ஏன் அப்படி சொல்றீங்க”

“இல்ல சார் நான் இப்போ வரைவதை நிறுத்தி விட்டேன், அதனால அதுக்கு அவசியம் இருக்காதுன்னு அப்படி சொன்னேன், வேற ஒன்னும் இல்ல” என்று பேசிக்கொண்டிருக்க, அவளின் தோழிகள் அந்த இடம் வந்து சேர்ந்தனர்.

ஏய் இன்னுமா முடியல, வாடி நேரமாச்சு, நீ இப்போ வரல அடுத்து எங்க எக்ஸ்பிசன் நடந்தாலும் உன்கூட யாரும் வரமாட்டோம். வா சீக்கிரம் உன்ன முதல்ல கீழ்பாக்கம் பார்சல் பண்றேன்” என்று புலம்பியவர்கள் அங்கிருந்த இரண்டு ஆண்களையும் பார்த்து திருதிருவென முழித்தனர்.

ரவியும் சரணும் அவர்கள் பேச்சைக் கேட்டு சிரித்துவிட, தேனு சிரித்தேவிட்டாள். தோழிகள் அவளைப் பார்த்து முறைக்க, அவர்களை இரு ஆண்களுக்கும் அறிமுகப்படுத்தினாள்.

புது மலர்கள் பூத்திடும் வேளை - மதுவதனி

# புது மலர்கள் பூத்திடும் வேளை...!

அறிமுகப்படலம் முடிந்ததும் ரவியிடம் வார்த்தைகளால் கிளம்புவதாக கூறி, சரணிடம் தலையை மட்டும் அசைத்து விடைபெற்று சென்றாள் தேன்நிலா.

ரவி தன் நண்பனிடம் கர்ச்சீப்பை எடுத்து நீட்ட, ஏன் எதற்கு என்று புரியாமல் அவனையே நோக்க "உன்னோட ஜொள்ளு ஒழுகி இந்த ஹாலே நிரஞ்சுபோயிடுச்சி, அதான் தொடைச்சுக்க கொடுத்துருக்கேன், நீயே துடைச்சுக்கிரியா இல்ல நான் துடைச்சு விடட்டுமா" என கிண்டலில் இறங்க...

"டேய் சும்மா இருக்க மாட்டே, ஏதோ பொண்ணு பார்க்க லட்சணமா இருக்காளேன்னு பார்த்தேன், அதுக்கு போய் இப்படி கிண்டல் பண்ற"

ஆஹா மச்சான் நம்பிட்டேன்டா , அதான் உள்ள வரும்போதே அந்தப் பொண்ணு உனக்கு சிஸ்டர் மாதிரி, அவகிட்ட உன்னோட வேலையெல்லாம் காட்டாதேனு சொல்லி கூட்டிட்டு வந்தீங்களா சார்,

உனக்கு அந்தப் பொண்ண முன்னாடியே தெரியும் போலயே, முதல் தடவ பார்க்குற பொண்ணை இப்படிதான் சைட் அடிப்பாங்களா பாஸ், எனக்கு ஒன்னும் அப்படி தெரியல, அந்தப் பொண்ணு உன்ன நிமிர்ந்து கூட பார்க்கல, நீ தேவதாஸ் ஆகுறது உறுதி " என ரவீந்தர் தன் கிண்டலை மீண்டும் தொடர...

'தேன்நிலா' அழகான பேருல்லே மச்சான், இதுவரைக்கும் எல்லாம் தேன்மதி, தேன்மொழி இப்படித்தான் கேள்விப்பட்டுருக்கோம், இது புதுசா இருக்கே, மாமனார் நல்லாதான் செலக்ட் பண்ணிருக்கார்"

"ஆஹா இது முத்திடுச்சு, டேய் அவளப் பத்தி முதல் பார்வையிலேயே உனக்கு லவ் வந்துடுச்சா, ஏன்டா உன்னோட நம்பர், என்னோட நம்பர், ஏன் உன்னோட ஆபிஸ் நம்பர் முதற்கொண்டு அவளுக்கு கொடுத்தியே, அவளோட நம்பர் கேட்டியா, இனி அவளை எப்படி கண்டுபிடிப்ப?"

புது மலர்கள் பூத்திடும் வேளை - மதுவதனி

# புது மலர்கள் பூத்திடும் வேளை…!

“டேய் மச்சான் இந்த திருச்சியில எந்த மூலையில இருந்தாலும், தேடி கண்டுபிடிச்சுருவேன், அவள் இனி எனக்குத்தான்” என்றான் சரண்.

“சரி அவளப் பத்தி சொல்லு, உனக்கு எப்படி தெரியும்” என்றான் சரண்

“அதுதாண்டா தேனில xxxxx அந்த ஸ்கூல்ல என்னோட சித்தப்பா ஹெட்மாஸ்டரா இருந்தார், அப்போ என்னை ஒரு ஃபங்க்சன்க்கு இன்வைட் பண்ணார், சரி ஸ்கூல் ஃபங்க்சன் வரமுடியாதுன்னு சொல்ல முடியாதே, அதான் போயிட்டேன். ஆனா இந்தப் பொண்ணு ரியல்லி வெரி டேலண்டட் பெர்சன், ரொம்ப அருமையா வரைஞ்சிருந்தா, நானெல்லாம் என்ன வரையிறேனு என்னையவே யோசிக்க வச்சுட்டா, ப்ராப்பரா கைட் பண்ணா பெரிய ஆளா வருவா, அவளோட அம்மாக்கிட்டயும் இதை சொல்லிட்டுத்தான் வந்தேன். நீங்க கேர்லஸா விடாம கொஞ்சம் கவனிச்சு அவளுக்கு பயிற்சி கொடுங்கன்னு சொல்லிட்டு வந்தேன், பட் என்ன ரீசனோ இப்போ இப்படி சொல்லிட்டு போறா, வேலிட் ரீசன் இல்லைன்னா மறுபடியும் வரைய வைக்கணும்டா மச்சான், நல்ல கலை நுணுக்கம் இருக்கு, நிறைய டிஃபரன்டா யோசிக்கிறா பார்த்தியா, இவ்ளோ நேரம் ஜொள்ளு விட்டியே, அவள் எங்க படிக்கிறானு தெரியுமா? இல்ல சைட் அடிச்சிட்டு இத டீல்ல விட்டுட்டியா “ என ரவி நக்கலடிக்க…

அதெல்லாம் கண்டுபிடிச்சிட்டேன் அவ கூட வந்த ஒரு பொண்ணோட ஐடி கார்டுல அவளோட காலேஜ் நேம் பார்த்தேன் அது போதும், பேரும் தெரியும்… இனி தொடங்கிடமாட்டேன் என்னோட வேலையை என சரண் பதில் கொடுத்தான்…

“ என்னமோ பண்ணித்தொல, ஆனா அந்தப்பொண்ணு கொஞ்சம் அமைதிப்போல, பார்த்து அடக்கிவாசி, இல்ல உனக்கு முதுகுல டின் கட்டிடுவா, எதுவா இருந்தாலும் டெல்லி ட்ரிப் முடிஞ்சதும் ஆரம்பி, இப்போ உன்னோட வாட்டர் பால்சை க்ளோஸ் பண்ணிட்டு என்னோட வேலையை ஆரம்பிக்கலாம், இன்னும் கொஞ்சம் நேரத்துல மேத்யூ வந்துருவான்.”

“ அதெல்லாம் நாங்க பக்காவா ப்ளான் பண்ணுவோம்லே”

# புது மலர்கள் பூத்திடும் வேளை…!

“ஓவர் கான்பிடன்ஸ் உடம்புக்கு ஆகாது மச்சி, வா வந்த வேலையை முடிச்சிட்டு கௌம்புவோம், நாளைக்கு டெல்லியில இருக்கணும், இனி ஒன் வீக் அங்கதான் ரெண்டு பேருக்கும்” என ரவீந்தர் கூறி தன் ஓவியங்களைப் பார்வையிடத் தொடங்கினான்.’

சரண் மனதில் அரைமணி நேரத்திற்கு முன் நடந்ததை நினைத்துப் பார்த்தான். அந்தக் கண்காட்சி அறையில் வேலைகள் எல்லாம் ஒழுங்கா நடந்து இருக்கிறதா என்று பார்வையிட முதலிலேயே வந்திருந்தான். அப்படி அவன் அந்த ஹாலை சுற்றி வரும்போது தான் ஒரு ஓவியத்தின் முன்னே ஓவியமாய் மெய்மறந்து நின்றிருந்த நிலாவைப் பார்த்தான்.

தோழிகள் அவளை அழைப்பதும் அவர்களுக்கு அவள் பதில் சொல்வதும், மீண்டும் ஒருமுறை அதேபோல் நடப்பதும் என்று அவளின் நடவடிக்கையை பார்த்துக் கொண்டிருந்தவன் தன்னையும் அறியாமல் அவளை ரசிக்க ஆரம்பித்தான். அப்போதுதான் அவள் வரவேற்பு பெண்ணிடம் பேசிவிட்டு அங்கிருந்த இருக்கையில் அமர்வது தெரிந்தது. அதற்குள் ரவி அவனுக்கு போன் செய்து தான் வெளியில் நிற்பதாக கூற அங்கு சென்றான். இருவரும் உள்ளே நுழையும்போது ரவி நிலாவைப் பார்த்து “என்ன பிகருடா மச்சி” என, “ அவள் உனக்கு சிஸ்டர் மாதிரி மச்சி” என்று அவனுக்கு ஒரு ஷாக் கொடுக்க அதற்கு ரவியின் முகம் போன போக்கை இப்போது நினைத்து பார்த்தால் சிரிப்பு வந்தது சரணுக்கு.

அந்த ஒருவாரத்தில் தேன்நிலா என்ற பெண் திருச்சியிலேயே இல்லாமல் போய்விடுவாள் என்றும் அவளை தேடித்தேடி தான் களைத்துப போவோம் என்றும் அப்போது அவன் அறிந்திருக்கவில்லை.

அந்த ஒரு வாரத்தில்தான் இந்த சம்பவங்கள் எல்லாம் நடந்து இருக்க வேண்டும். பாவம் அந்த நேரம் எவ்வளவு கஷ்டப்பட்டாளோ, எத்தனைபேர் எத்தனை விதமான பேச்சுகள், எவ்வளவு கீழ்த்தரமான விமர்சனங்கள் இதையெல்லாம் கேட்டு என்னோட நிலா எப்படியெல்லாம் வருத்தப்பட்டிருப்பா, அவளோட அம்மா ஒரு பக்கம் அவளைப் போட்டு படுத்தி எடுத்துருக்காங்க’ இப்படியெல்லாம் யோசித்துக் கொண்டிருந்தவன் மனைவியின் அசைவில் நிகழ்க்காலத்திற்கு மீண்டு வந்தான்.

மதுமலர்கள் பூத்திடும் வேளை - மதுவதனி

# புது மலர்கள் பூத்திடும் வேளை…!

அவள் அசைந்து மீண்டும் தூங்கவும் அவளை எழுப்ப மனமில்லாமல் எப்படித் தூக்கினானோ அதே போல் மீண்டும் படுக்கையில் கிடத்தி வைத்து விட்டு தாயுக்கும் பிள்ளைக்கும் முத்தங்களை பரிசளித்துவிட்டு அறையை விட்டு வெளியேறினான் சரண்.

அவன் போவதையே கண்களில் கண்ணீருடனும் உதட்டில் நிறைந்த புன்னகையுமாக பார்த்திருந்தால் அவனின் நிலா.

ஆழ்ந்த உறக்கத்தில் இருந்த நிலாவிற்கு எல்லாமே கனவுபோல் தோன்றியது தன் வாழ்வில் இவையனைத்தும் கனவில் மட்டுமே சாத்தியம் என்று நினைத்துக் கொண்டு வாழ்க்கையை அதன் போக்கில் எதிர்கொண்டு சென்றவளுக்கு, இன்று தன் கணவனின் முத்தமும் வருடலும் அவளை உயிர்க்க செய்திருந்தன. என்றுமே தன்னை விட்டுவிட மாட்டான், தனது குழந்தைகளை கண்ணுக்குள் வைத்து பார்த்துக் கொள்வான் என்று அவளின் மனம் நிம்மதியடைந்தது.

சரண் அவளை வருடிக் கொண்டிருக்கும்போதே விழித்துக் கொண்டவள் அவனின் அருகாமையை விட மனமின்றியும், அவள் விழித்ததைப் பார்த்தால் தன்னை விட்டு போய்விடுவான் என்ற பயத்திலும் அவள் கண்களை மூடி தூங்குவதைப் போல் படுத்திருந்தாள். ஒரே பக்கமாக படுத்திருந்தது வழியைக் கொடுத்தாலும் சிரமப் பட்டு இருந்தவள் அதிக வலி எடுக்கவுமே அசைந்து கொடுத்தாள். அந்த அசைவில் தான் சரண் எழுந்து சென்றது.

கணவனின் காதல் மட்டுமே தன் மனதை உயிர்ப்பிக்கும் என்று அவளுக்கு புரிந்தது, ஆனால் அவள் அவனுக்கு துரோகத்தை பரிசளித்து விட்டாளே, எதையுமே மறைக்காமல் தன்னிடம் பகிர்ந்த கணவனுக்கு அவள் கொடுத்தது அவநம்பிக்கையை, இதற்கெல்லாம் அவளுக்கு தண்டனை வேண்டாமா? வேண்டும்…. கட்டாயம் வேண்டும் என்றது நிலாவின் மனது. எந்த ஒரு எதிர்பார்ப்புமின்றி தன் உயிரையே அவள் மேல் வைத்தவனுக்கு அவள் செய்தது நம்பிக்கைத் துரோகம், கண்டிப்பாக நன்றிக்கடன் பட்டே ஆகவேண்டும், அதற்கு அவனின் வாழ்வில் இருந்தோ அல்லது இந்த உலக வாழ்வில் இருந்தோ அவள் முழுதாக விடைபெற வேண்டும். ஆமாம் அதுதான் தான் செய்யும் உதவி.

ஆனால் இத்தனை அன்பும் காதலும் உள்ளவன் அவளை விட்டு விடுவானா, இல்லை மறந்து வேறு வாழ்க்கையில் பயனிப்பானா…? நிச்சயமாக மாட்டான் என்றது மீண்டும் அவளின் மனம்.

இப்படித் தனக்குள்ளேயே குழம்பிப் போனாள் நிலா. எப்படி யோசித்தாலும் விடை மட்டும் கிட்டவே இல்லை அவளுக்கு…….

**வேளை தொடரும்….**

புதுமலர்கள் பூத்திடும் வேளை - மதுவதனி

# புது மலர்கள் பூத்திடும் வேளை...!




**வேளை - 05**

***************************************************************************************************

என்னாளும் நம்மைவிட்டு போகாது வசந்தம்..
தோளோடு ரோஜா ரெண்டு உறங்கும்...
தள்ளாடும் பூக்கள் எல்லாம் விளையாட அழைக்கும்...
ஏதேதோ ஏழை மனம் நினைக்கும்...

தென்னை இளம் சோலை பாளைவிடும் நாளை..
தென்னை இளம் சோலை பாளைவிடும் நாளை...
கையிரண்டில் காதோரம் அன்னை மனம் பாடும்...
கண்கள் மூடும்...

பிள்ளை நிலா இரண்டும் வெள்ளை நிலா...லா லா லா..
பிள்ளை நிலா இரண்டும் வெள்ளை நிலா...
அலைபோலவே விளையாடுமே சுகம் நூறாகுமே...
மண்மேலே துள்ளும் மான்போலே...

***************************************************************************************************

# புது மலர்கள் பூத்திடும் வேளை…!

இயற்கை எழிலில் வேறு எந்த இடமும் போட்டி போட முடியாத இடமாக இருக்கும் **'உதகமண்டலம் @ ஊட்டி"..** மலைவாசச்தலங்களின் அரசி என்று புகழப்படுகிறது. இங்கு தான் மேற்குத் தொடர்ச்சி மலையும் கிழக்கு தொடர்ச்சி மலையும் சந்திக்கின்றன. இந்தியாவின் ஒரே ராணுவ அலுவலர் கல்லூரி இங்குள்ள **'வெலிங்டன்'** என்னும் ஊரில் அமைந்துள்ளது. சென்னை 'ரேசிமண்டல்' மையத்தின் தலைமையகம் இதுதான்.

அதிகாலையில் எழுந்து எப்பொழுதும் போல் உடற்பயிற்சிக்கு சென்று வீடு திரும்பிய அஸ்வத்தின் முகத்தில் புன்னகை தவழ்ந்தது. காரணம் அவன் வீட்டு இளவரசிகளின் சத்தம் அவ்வளவு தூரம் கேட்டது.

ஒரு இராணுவ அதிகாரியின் வீடு போல் என்றுமே அவனுடைய வீடு இருந்தது இல்லை. அதுவும் அவனுடைய இரண்டு பிள்ளைச் செல்வங்கள் வந்த பிறகு இன்னும் அதிகமான கொண்டாட்டங்கள் தான். மற்ற வீட்டினர் எல்லோரும் எப்போதும் குழந்தைகளிடம் கண்டிப்புடன் இருக்க வேண்டும் என்று அவர்களிடம் தங்களுக்கே தெரியாமல் ஒரு இடைவெளியை ஏற்படுத்தி கொள்வார்கள்.

அது பின்னாளில் பிள்ளைகள் இவர்களிடம் இருந்து ஒதுங்கி தேவையான நேரத்தில் தேவையான செய்திகளை பெற்றோரிடம் கூறாமல் மறைக்கச் செய்து தவறுகளுக்கு அடித்தளமிட்டுவிடுகிறது.

இந்தக் கொள்கை அஸ்வதிற்கு என்னாளிலும் பிடித்தமில்லை. குழந்தைகளை குழந்தைகளாகவே வளர விடுவது தான் நாம் அவர்களுக்கு நல்வழி காட்டும் என்பதில் மிகுந்த கோட்பாடு உடையவன். பயிற்சியின் போது எந்தளவிற்கு கடுமையாகவும் இறுக்கமாகவும் இருக்கிறானோ, அதற்கு எதிர்மறையாக வீட்டில் நடந்து கொள்வான். அம்மாவும், மனைவியும் சேர்ந்து கொண்டு அவர்களை திட்டோ திட்டென்று திட்டினாலும் இந்தக் காதில் வாங்கி அந்தக் காதில் விட்டுவிடும் பழக்கமுடையவர்கள் இந்த நால்வர் கூட்டணி.

# புது மலர்கள் பூத்திடும் வேளை…!

தமிழகத்தின் நெற்களஞ்சியமான தஞ்சையை பூர்வீகமாய்க் கொண்டவர்கள் தான் சரவணன் மற்றும் பூங்குழலி தம்பதியினர். இவர்களுக்கு அஸ்வத்ராம் மற்றும் ஆதிரா என்று இரண்டு பிள்ளைகள். சரவணன் தேசிய நெடுஞ்சாலைத்துறையில் பணியாற்றியவர். கோபம் என்றால் என்ன என்று கேட்பவர், அவரது மனைவி பூங்குழலி இல்லத்தரசி. இருவருக்கும் காதல் திருமணம். இவர்களின் திருமணம் முடிந்த கையோடு உறவுகளின் உறவும் முறிந்தது. இரண்டு வீட்டிலுமே இருவரையும் ஏற்றுக்கொள்ள்வில்லை. ஒரு குழந்தைப் பெற்றால் எல்லாம் சரியாகிவிடும் என்று எல்லோரையும் போல் நினைத்து தன் வேலையை வடக்கே மாற்றிக்கொண்டு குஜராத் பயணமானார் சரவணன். ஆனால் அவர் நினைத்தது போல் நடக்கவே இல்லை.

அவரின் இரண்டு பிள்ளைகள் பிறந்தும் அவர்களின் படிப்பு முடிந்தும் ஏன் அவர்களுக்கு திருமணமே நடந்து முடிந்தும் கூட அவர்களை ஏற்று கொள்ளவில்லை. சரவணனுக்குப் பெற்றோர் இல்லை ஆதலால் அவரின் தாய்மாமா வீட்டில் இருந்து படித்தார். அவருக்கு தன் மகளையே திருமணம் செய்து கொடுத்து தன் கைக்குள்ளேயே வைத்துக் கொள்ள வேண்டும் என்று தாய்மாமன் நினைத்திருந்த நேரத்தில் இவர்களின் திருமண செய்தி சரவணனின் மாமாவிற்கு ஆத்திரத்தை வரவைத்தது. அதோடு அவரின் மனைவி முதலிலையே சரவணைப் படிக்க வைக்க வேண்டாம் என்று தடுத்தும் கேட்காமல் படிக்க வைத்தற்கு தன் முகத்தில் கரியைப் பூசிவிட்டான் என்ற கோபமும் சேர்ந்துகொள்ள மனைவிடம் வாங்கிய அர்ச்சனையும் நிரந்தரமாக சரவணை தன் குடும்பத்தில் இருந்து பிரித்து வைத்தது.

பூங்குழலியின் வீட்டில் மூன்று அண்ணன்கள் இவர் ஒரே பெண் என்பதால் அவர் மேல் எல்லோருக்கும் பாசம் அதிகம். அதனால் அவர் விரும்பியவாறே அவரை திருச்சி சென்று படிக்க வைத்தனர். முதலில் பூங்குழலியின் பெற்றோர் மறுக்க, அவர்களின் சம்மதம் இல்லையென தெரிந்து தன் படிப்பை துறக்க நினைத்த தன் தங்கையின் மனம் அறிந்த மூன்று சகோதரர்களும் பெற்றோரிடம் பேசி சம்மதம் வாங்கி படிக்க அனுப்பினர். அங்கேதான் அவர்கள் தவறு செய்துவிட்டதாக இன்றுவரை வருந்துகிறார்கள்.

புது மலர்கள் பூத்திடும் வேளை - மதுவதனி

ஏனென்றால் கல்லூரிக்கு சென்றவள் கல்விப் பாடம் பயிலாமல் காதல் பாடம் கற்றதோடு அல்லாமல் தங்கள் தகுதிக்கு ஏற்றவனை தேர்வு செய்வதில் கூட கோட்டை விட்டுவிட்டாள் என்றும் தங்களின் குடும்ப மானத்தையும் குழித்தோண்டி புதைத்தும் விட்டாள் என்றும் பூங்குழலியை முற்றிலும் தங்கள் வாழ்வில் இருந்து துறந்து விட்டனர்.

இரு வீட்டாரின் எதிர்ப்பு சரவணன்-பூங்குழலி மனதை வெகுவாக பாதிக்க... 'கண்ணில் படாதது கருத்திலும் படாது என்றெண்ணி' இங்கு இருந்தால் மென்மேலும் வெறுப்பு கூடுமே தவிர குறையாது என்றெண்ணி' குஜராத் சென்றவர்களுக்கு அங்குள்ள சூழல் முற்றிலும் புதிதாக இருந்தாலும் வேறுவழி இல்லாமல் அதற்கு தங்களை பழக்கப்படுத்திக் கொண்டனர். காலம் மாறினாலும் தங்கள் மனம் ஒருபோதும் மாறபோவது இல்லை என இதுவரைக்கும் அவர்கள் இரு வீட்டினரின் பிடிவாதம் கூட சிறிதளவும் தளரவே இல்லை....

பூங்குழலி அக்கம்பக்கத்தில் உள்ளவர்களோடு இணக்கமாய் பேசி பழக ஆரம்பித்தார். முதலில் தமிழ்குடும்பம் என்று ஒதுங்க ஆரம்பித்தவர்கள், அவரின் பேச்சு செயல் எல்லாமே அவரோடு பழக வைத்தது. சரவணனும் தன் வேலையிடத்தில் பொறுமையாகவும் நேர்மையாகவும் இருக்க, அங்கு அவரும் தன் நற்பெயரை நிலைநாட்டினார். காலத்தின் போக்கில் அவர்களுக்கு முதலில் அஸ்வத்தும் நான்கு ஆண்டு இடைவெளியில் ஆதிராவும் பிறந்தனர்.

இவர்களின் பின்புலம் தெரியாமல் குழந்தைகள் வளரக்கூடாது என்று தங்களின் கடந்த காலத்தை அவர்களிடம் எடுத்துக் கூறினர். பிள்ளைகள் பொறுமையாகக் கேட்டாலும் இருவருமே இருவேறு சிந்தனையில் ஆழ்ந்தனர். அஸ்வத்தோ தன் பெற்றோரை எப்படியாவது அவர்களுடன் சேர்த்து வைக்க வேண்டும் என்ற முடிவுடன் தன் படிப்பை சென்னைக்கு மாற்றி அதில் முதல் அடியை எடுத்து வைத்தான்.

புது மலர்கள் பூத்திடும் வேளை - மதுவதனி

ஆனால் ஆதிராவோ அதற்கு எதிர்மறையாக வேண்டாம் என்று சொன்னவர்கள் தனக்கும் வேண்டாம் என்ற முடிவுடன் தன் படிப்பை டெல்லிக்கு மாற்றினாள். என்னதான் வடநாட்டில் பிறந்து வளர்ந்தாலும் தமிழர்களின் கலாச்சாரம் அவளுக்கு எப்போதுமே பிடித்தம். அதுவும் பூங்குழலியை அவளுக்கு மிகவும் பிடிக்கும் என்பதால் தன் தாயைப் போலவே அவளின் செய்முறைகள் அதிகம் இருக்கும் அவளிடம். மேலும் தன் பெற்றோரைப் போலவே மனமொத்த தம்பதிகலாகவே தன் வாழ்க்கையும் அமைய வேண்டும். அதுவும் காதல் திருமணத்தால் மட்டுமே சாத்தியம் என்பதால் அவளும் காதல் திருமணம்தான் செய்து கொள்வேன் என்று வீட்டில் உள்ளவர்களிடம் தெரிவித்து விட்டாள்;.

சரவணனும்-பூங்குழலியும் அவளுக்கு ஆதரவு தெரிவித்து படிப்பு முடிய வேண்டும் அப்புறம்தான் என்ற கோரிக்கையும் வைத்தனர். அஸ்வத்திற்கு இதில் விருப்பம் இல்லையென்றாலும் தன் செல்ல தங்கைக்காக ஒத்துக் கொண்டான். அஸ்வத்திற்கு சிறுவயது முதலே ராணுவத்தில் சேர்ந்து நாட்டுக்காக தான் சேவை செய்ய வேண்டும் என்பதில் உறுதியாக இருந்தான். அவனின் எண்ணம் பெற்றோருக்கு பெருமையாகவே இருந்தது. அதனால் அவர்கள் அவனை தடுக்கவில்லை. தீர்மானம் என்று வரும்போது தன் தாயை போல தமிழ் பெண்ணையேதான் மணக்க வேண்டும் என்பதிலும் திடமாக இருந்தான்.

நாட்களின் நகர்வில் அஸ்வத் ராணுவப் பயிற்சிக்கு சேர்ந்து தன் திறமைகளை வெளிப்படுத்தி ராணுவப் பயிற்சியாளராக பொறுப்பேற்று ஊட்டிக்கு பயணமானான், ஆதிராவிற்கு அவள் மனம்போல் காதல் திருமணம் முடிந்து மலேசியா சென்றாள். பிள்ளைகள் இருவரும் பிரிந்துவிட தனியே இருக்க மனமில்லாமல் அஸ்வத்தின் யோசனையோடு சரவணனின் விருப்ப ஓய்வைப் பெற்றுக் கொண்டு ஊட்டிக்கே சென்றனர்.

ஊட்டிக்கு வந்தவர்களை அங்கிருந்த பசுமையுடன் கூடிய இயற்கை இதமாய் வரவேற்றது. சரவணனும் பூங்குழலியும் அழகாய் அங்கே பொருந்தி போயினர். அஸ்வத்தின் விடாமுயற்சியுடன் கூடிய கடின உழைப்பு அவனுக்கு அடுத்தடுத்த பதவி உயர்வைக் கொடுக்க, அவனது இந்த உழைப்பு பெற்றோருக்கு சிறு பயத்தைக் கொடுக்க, அவர்கள் அவனது திருமணத்தை உறுதி செய்ய தஞ்சை பயணமாயினர்.

புது மலர்கள் பூத்திடும் வேளை - மதுவதனி

# புது மலர்கள் பூத்திடும் வேளை…!

என்னதான் நாட்கள் நகர்ந்து போயிருந்தாலும் சரவணன் தம்பதியரை பெற்றோரும் உறவினர்களும் ஏற்க மறுத்தனர். மனமுடைந்த தம்பதியர் இருவரும் ஒருவருக்கொருவர் ஆறுதல் கூறிக்கொண்டு ஊட்டி வந்தனர்.

அடுத்த முகூர்த்தத்துலேயே அஸ்வத்தின் ஆசைப்படி தமிழ் பெண்ணான இளமதியுடன் திருமணம் இனிதே முடிந்தது. அவர்களின் அழகிய குடும்ப வாழ்வில் இரண்டு பெண் குழந்தைகள் பிறந்தனர். பெரியவள் தருன்யா, சிறியவள் தபசியா.

“தருணி எழுந்திரு எவ்ளோ நேரமா எழுப்புறேன், ஸ்கூலுக்கு டைமாச்சு, உங்கப்பா வந்துடுவாரு, என்ற மனைவியின் குரலைக் கேட்டவாறே உள்ளே நுழைந்தான் அஸ்வத். “என்ன இளா ஏன் இவ்ளோ சத்தம், கிரௌண்டு வரைக்கும் கேட்குது நீ புள்ளைங்களத் திட்டுறது, எத்தன தடவ சொல்லிருக்கேன் இப்படி எழுப்பாதேனு” என்றவாறே மனைவியின் முறைப்பை பெற்றுக் கொண்டு தரன்யாவின் பக்கத்தில் அமர்ந்தான்.

“ஏன் சொல்லமாட்டீங்க எப்போ இருந்து எழுப்புறேன், கொஞ்சமாச்சும் அசைஞ்சாத்தானே, சரியான சோம்பேறி பிள்ளைங்களைப் பெத்துட்டேன், நீங்க உங்க புள்ளைய எழுப்புங்க இல்ல இன்னும் நல்லா தூங்க வைங்க, என்ன விடுங்க நான் போய் வேற வேலையைப் பார்க்குறேன் என்று படுக்கை அறைக்குள் நுழைந்தவள் “தபசிக்குட்டி எழுந்திரிடாம்மா “ என்ற இளமதியின் குரலைக் கேட்டதும் அதுவரை இவர்களின் பேச்சை கேட்டு கொண்டிருந்த சரவணன் சிரிக்க, தன் தாத்தாவைப் பார்த்து பேத்தியும் சிரிக்க, “என்ன சிரிப்பு ரெண்டு பேருக்கும், என் பொண்டாட்டியப் பார்த்தா சிரிப்பா வருது, இருங்க அவகிட்ட சொல்லி வைக்கிறேன்”என்ற அஸ்வத்தின் முகத்திலும் சிரிப்புதான்.

“நீ பெரிய ஒழுங்கு சப்போர்ட் பண்ண வந்துட்டான் பொண்டாட்டிக்கு, உண்மையாவே உதவி பண்றதா இருந்தா வெட்டியா உங்கப்பா கூட உக்கார்ந்து கதை பேசாமா , போய் முதல்ல உன் புள்ளைங்களை படுக்கையிலிருந்து எழுப்பு, எப்போ இருந்து எழுப்புறா, இதுக ரெண்டும் படுத்தி எடுக்குதுங்க அவளப் போட்டு” என்ற வசைபாடலுடன் கிச்சனை விட்டு வெளியே வந்தார் பூங்குழலி.

புது மலர்கள் பூத்திடும் வேளை - மதுவதனி

# புது மலர்கள் பூத்திடும் வேளை…!

இனியும் அமைதியாக இருந்தால் மாமியாரும் மருமகளும் சேர்ந்து மொத்தி எடுத்து விடுவார்கள் என்று நினைத்த அஸ்வத் தருன்யாவைத் தூக்கிக்கொண்டு படுக்கையறைக்குள் நுழைந்தான். இன்னும் சிறியவள் எழாமல் மனைவிக்குப் போக்கு காட்டிக்கொண்டு இருப்பதைப் பார்த்தவன். "இளா நீ போய் அவங்க ரெண்டு பேருக்கும் குடிக்க எடுத்துட்டு வா, நான் ப்ரெஷ் ஆக்கிவிடறேன்" என மனைவியை அனுப்பியவன், குழந்தைகளிடம் திரும்பி "என்னாச்சு என் அழகு குட்டிங்களுக்கு இவ்ளோ நேரம் தூக்கம், வாங்க ப்ரஷ் பண்ணிட்டு பூஸ்ட் குடிக்கலாம்" என பெரியவளோடு சேர்ந்து கட்டிலில் அமர்ந்தவன் சிறியவளையும் தூக்கி தன் மடியில் அமர்த்திக் கொண்டான்.

"நோ டாடி இன்னைக்கு ஸாட்டர்டே-தான, டுடே ஹாப்டே தான, சோ டுடே நான் லீவுன்னு மம்மிக்கிட்ட சொன்னேன். அதுக்கு மம்மி திட்டிட்டாங்க " என முதல் குற்றப்பத்திரிகை தருன்யா வாசிக்க,

"ஹப்பா டுடே மட்டும் போனா, டுமாரோ லீவு நாம ப்ளாக் தண்டர் போலாம்னும்மா சொன்னாங்கப்பா, அப்போ டுடே ஸ்கூலுக்கு போலாம் தானேப்பா" என சிறியவள் கூற இருவரின் பேச்சிலும் மகிழ்ச்சிப் புன்னகை உதித்தது அஸ்வத்திற்கு. இருவருக்கும் இடையே இரண்டு ஆண்டுகள் தான் இடைவெளி. இருவரும் படிப்பது மிலிட்டரி ஸ்கூல் என்பதால் அங்கு ஆங்கிலமும் ஹிந்தியும் பிரதான மொழியாக இருக்கும். தமிழ் வீட்டிலும் வெளியிலும் மட்டுமே பேசமுடியும். தருன்யாவிடம் அம்மா அப்பா என்று கூப்பிடுங்கள் இளமதி எவ்வளவு கூறினாலும் அவளுக்கு அது வராது, மேலும் வரவில்லை என்று முயற்சிக்க கூட மாட்டாள். ஆனால் தபசியா அப்படி இல்லை, எதையும் முயன்றுப் பார்க்கும் ரகம். முயற்சித்து வெற்றியும் பெறுவாள்.

**வேளை தொடரும்….**

புதுமலர்கள் பூத்திடும் வேளை - மதுவதனி



வேளை - 06

**Ashwath - Ilamathi**

*********************************************************************************************

என்னைப் பார்த்து ஒரு மேகம்
ஜன்னல் சாத்திவிட்டுப் போகும்
என்னைப் பார்த்து ஒரு மேகம்
ஜன்னல் சாத்திவிட்டுப் போகும்
உன் வாசலில் எனைக் கோலம் இடு
இல்லை என்றால் ஒரு சாபம் இடு
பொன்னாரமே……
தண்ணீரில் மூழ்காது காற்றுள்ள பந்து
என்னோடு நீ பாடிவா சிந்து

ஈரமான ரோஜாவே என்னைப்பார்த்து மூடாதே
கண்ணில் என்ன சோகம் போதும் ஏங்காதே
என் அன்பே ஏங்காதே

# புது மலர்கள் பூத்திடும் வேளை…!

**நேரம் கூடிவந்த வேலை**
**நீ நெஞ்சை மூடிவைத்த கோழை**
**நேரம் கூடிவந்த வேலை**
**நீ நெஞ்சை மூடிவைத்த கோழை**
**என் நெஞ்சிலே இனி ரத்தம் இல்லை**
**கண்ணீருக்கே நான் தத்துப் பிள்ளை**
**என் காதலி……**
**உன் போல என்னாசை தூங்காது ராணி**
**தண்ணீரில் தள்ளாடுதே தோனி**

**************************************************************************************************

இளமதி, பூஸ்டுடன் வரவும் குழந்தைகள் இருவரும் ப்ரேஷாகி வெளியே வரவும் சரியாய் இருக்க, அதை அவர்களிடம் கொடுத்தவள் கணவனிடம் காபியையும் கொடுத்துவிட்டு குழந்தைகளின் அன்றைய சீருடையை எடுத்து வெளியே வைத்தாள். அவள் அமைதியாகவே வேலைகளைத் தொடர்வது என்னவோ போல் இருக்க" என்ன மதி குழந்தைங்க எப்பவும் இப்படித்தான இருக்காங்க எதுக்கு இதுக்கெல்லாம் முகத்தை தூக்கி வைச்சுருக்க, இன்னும் அரைமணி நேரத்துல ஸ்கூல் கிளம்பிடுவாங்க.

அதுக்கு நான் கியாரண்டி, நீ இப்படி உம்முன்னு இருக்குறது நல்லாவே இல்லை கொஞ்சம் சிரிம்மா. நானும் உன் சிரிப்பை பார்த்து எனக்கும் கொஞ்சம் எனர்ஜி ஏத்திக்கிறேன் எனத் தன் கிண்டலை ஆரம்பிக்க… அவனைப் பார்த்து முறைத்தவள் “ஆமாம் என்னைப் பார்க்க நல்லாவே இல்லதான் அந்த உஷா தான் பார்க்க நல்லா இருக்கா, போய் அவகூடவே பேசுங்களேன், யாரு வேண்டானு சொன்னது, வந்துட்டாரு என்ன கிண்டல் பண்ண” இளமதிப் பொரிய…

“ஆகா இது எனக்கு நானே வச்சுக்கிட்ட ஆப்பா”, அவகூட பேசுனது எப்படி இவளுக்குத் தெரிஞ்சது கூட இந்த பொடுசுங்க தான வந்தது, ஒருவேளை இதுங்கதான் எட்டப்பன் வேலைப் பார்த்துருக்குமோ என்று மனதில் நினைத்தவன் குழந்தைகளைப் பார்க்க, அவர்கள் பூஸ்ட் குடிப்பதையே முக்கிய கடமையாக நினைத்து தன் கடமையை செவ்வனே செய்து கொண்டிருந்தனர். அப்போ கண்டிப்பா இவங்களேதான் என முடிவு கட்டியவன் மனைவியிடம் திரும்ப அவள் அங்கே இல்லை….

புது மலர்கள் பூத்திடும் வேளை - மதுவதனி

# புது மலர்கள் பூத்திடும் வேளை...!

அவசரமா குழந்தைகளை ரெடி செய்து வெளியில் வந்தவன் நேராக டைனிங் ஹாலுக்குச் சென்றான். ஏற்கனவே மதிய உணவு லஞ்ச் பேக்கில் ரெடியாயிருக்க காலை உணவே அவசரகதியில் ஊட்ட ஆரம்பித்தனர் மாமியாரும் மருமகளும்". இந்த அவசரத்துக்குத் தான் அத்தை சொல்றேன் நேரமா எழுந்து கொஞ்சம் நிதானமா சாப்பிட்டு அவசரம் இல்லாம போகலாம்னு, யாரு கேட்கிறா நான் சொல்றத" என்ற புலம்பலுடன் கணவனுக்கும் உணவே வைத்தாள்.

"இப்போ வேண்டாம் நான் பிள்ளைங்களை ஸ்கூல்ல விட்டுவிட்டு வந்து சாப்பிடுறேன், என்றவனை பதில் ஏதும் சொல்லாமல் முறைக்க மட்டும் செய்தவள். தன் அத்தையைப் பார்க்க, அவள் அவளிடம் கண்ணைச் சிமிட்டிவிட்டு," ஏன் அசு அந்த உஷாக்கிட்ட உனக்கென்னப் பேச்சு, அதுவும் சின்னக் குழந்தைகள வச்சுக்கிட்டு, ஒருநாள் தான் உன்கிட்ட விட்டுட்டு போனோம், அது கூட சரியாப் பார்த்துக்க முடியாத உன்னால, என தன் போக்கில் மகனைத்திட்ட ஆரம்பித்த பூங்குழலியை முறைத்தவன்.

"யாரும்மா இதெல்லாம் சொன்னா, இரண்டு பேரும் சேர்ந்து இப்படி வாங்குறீங்க, அவ சும்மா டவுட் தான்மா கேட்டா அதத்தான் சொல்லிட்டு இருந்தேன்.

"யாரு சொல்லணும், அதான் உன்னோட சிஷ்யைப் புள்ளைங்களே சொல்லிடுச்சுங்க. தருணிம்மா மார்னிங் நீ சொன்னத சொல்லுடா குட்டி" எனப் பூங்குழலி ஊக்குவிக்க.

தந்தையைப் பார்த்து சிரித்தவள்" "அது வந்து டாடி, மம்மிக்கிட்ட டாடி உன்னை டைவர்ஸ் பண்ணிட்டு உஷா ஆண்டிய மேரேஜ் பண்ணிக்குறேனு. சொன்னாரு, அப்போ உஷா ஆண்டிய நான் எப்படிக் கூப்பிடனும்னு கேட்டேன்...டாடி, நான் கேட்டது தப்பா டாடி" எனத் தன் முட்டைக்கண்ணை விரித்துச் சொல்ல,

அஸ்வத் மாட்டிக் கொண்ட பாவனையில் முழிக்க, மற்ற மூவரும் சிரிப்பை அடக்கிக்கொண்டு அவனை முறைத்துக் கொண்டிருந்தனர்.

புது மலர்கள் பூத்திடும் வேளை - மதுவதனி

# புது மலர்கள் பூத்திடும் வேளை...!

அவன் பரிதபமாய் தன் தந்தையைப் பார்த்தான் ஏதேனும் உதவி கிடைக்குமா என்ற ரீதியில் ஆனால் அவரோ நீயும் உன் தங்கச்சியும் சேர்த்து என்னை என்னபாடு படுத்துனீங்க, இப்போ அதே கஷ்டம் உனக்கு வந்திருக்கு, அனுபவி ராஜா அனுபவி என்று மனதில் நினைத்துக்கொண்டு அவன் பக்கம் திரும்பாமல் மீண்டும் பேப்பரில் தன் முகத்தைப் புதைத்துக் கொண்டார்.

“இவள் இவ்ளோ நல்லவரு னு இத்தனை நாளோ நமக்கு தெரியாமல் போயிடுச்சே, இப்படி பழிவாங்கிட்டாரே தன் கையே தனக்குதவி அஸ்வத்...இறங்குடா களத்துல பேசாம மகளிர் சங்கத்துக்கிட்ட விழுந்துட வேண்டியது தான்” என மனதில் நினைத்தவன் மற்ற இருவரிடமும் திரும்பி “அவ ஒரு லூசும்மா. எப்போ பார்த்தாலும் என்னை சைட் அடிச்சுக்கிட்டு இருக்கா. சின்னப் பொண்ணுதானே எல்லாம் போகப் போக சரியாயிடும்மா, அவளோட அப்பாக்கிட்டையும் சொல்லிருக்கேன் அவர் பார்த்துக்குறேன்னு சொல்லிருக்கார் நான் கோபமா ஏதாவது சொல்லிப்போய், அது விபரீதம் ஆயிட கூடாதுல்ல, அதான் கொஞ்சம் ஷாக் ட்ரிட்மென்ட் கொடுத்துருக்கேன் என்னைப் போய் சந்தேகப்பட்டுட்டீங்களேம்மா..... சந்தேகப்பட்டுட்டீங்களே என ஆதங்கமாய் ஆரம்பித்தவன் கிண்டலில் முடித்தான்.

குழந்தைகளும் சாப்பிட்டு எழ அவர்களுக்கு வாயைத் துடைத்தவள், “இப்படித்தான் டிரஸ் மேலெல்லாம் தண்ணியை கொட்டுவாங்களா” என அவசரத்தில் திட்ட ஆரம்பிக்க.

“டாடி நீங்க இந்த மம்மிய டைவர்ஸ் பண்ணிடுங்க, இந்த மம்மி உங்களுக்கு மேட்ச் ஆகல, எப்பப் பாரு உங்களையும் எங்களையும் திட்டுறாங்க, என்றுத் தருண்யா சிரித்துக் கொண்டே கூற சட்டென்று அந்த இடம் மிகவும் அமைதியானது. குழந்தைகளைத் தவிர மற்ற மூவரும் இளமதியை நோக்க அவள் முகம் அவமானத்தில் கன்றிப் சிவந்து கண்களில் வைரமணியாய் கண்ணீர்ச் சரம் கோர்த்தது. நிமிடத்தில் தன் முகத்தைச் சீர் செய்தவள் மற்றவர்களைப் பார்த்து புன்னகைத்தவள், குழந்தையிடம் திரும்பி “இதத்தாண்ட நானும் உங்க அப்பாக்கிட்ட சொன்னேன் முன்னாடியே, நான் உங்களுக்கு மேட்ச் இல்லைனு, அவர் கேட்கவே இல்லை” என்று கூறினாள்.

புது மலர்கள் பூத்திடும் வேளை - மதுவதனி

# புது மலர்கள் பூத்திடும் வேளை…!

அவள் பேச்சைக் கேட்டதும் சரவணனும் பூங்குழலியும் திகைக்க, அஸ்வத் கோபமாக அவளைப் பார்த்து, “இளா” என்று கத்தினான். ஒரு சில நிமிடங்களில் சந்தோசமாக போய்கே கொண்டிருந்த பேச்சு இறுக்கமான சூழலாக மாறியது.

“இப்படித்தான் ஒன்னும் தெரியாத குழந்தைங்ககிட்ட பேசுறதா, கொஞ்சம் கூட அறிவே இருக்காதாடி உனக்கு, எத்தனை முறை சொல்றது இப்படி பேசதேன்னு, ச்சே… மனுசனோட நிம்மதியேப் போச்சு” என்றுக் கத்திக் கொண்டே தன் அறைக்குச் சென்று பட்டென்று கதவை அடைத்தான். தங்களுடைய தந்தையின் கோபமுகத்தை முதல் முறையாக பார்த்த குழந்தைகள் அதிர்ச்சியில் உறைந்து நிற்க, சரவணனும் பூங்குழலியும் அவர்களை சமாதானப்படுத்தி அழைத்துக்கொண்டு பள்ளிக்குச் சென்றனர்.

அறைக்குள் நுழைந்தவனின் கோபம் மட்டும் குறையவே இல்லை. என்னதான் நினைத்துக் கொண்டிருக்கிறாள், நான் என்ன மகாத்மாவா, சாதாரண மனுஷன், நான் என்ன பெருசா செஞ்சுட்டேன், அவளைப் பிடிச்சுப்போய் கல்யாணம் பண்ணேன். ஆனால் அவ என்னடான்னா அவளுக்கு நான் வாழ்க்கை கொடுத்ததா நினைச்சு என்னைத் தியாகி ஆக்குறா, நானும் சாதாரண மனுஷன் உனக்கு புருஷன் அப்படி சொன்னாலும் முதல்ல மண்டைய மண்டைய ஆட்ட வேண்டியது, பிறகு வேதாளம் முருங்கை மரம் ஏறவேண்டியது, வரட்டும் இன்னைக்கு அவகிட்ட பேசுறதுக்குள்ள…இனி எப்பவும் இதைப்பத்தி பேசக்கூடாது என்ற முடிவுடன் அங்கிருந்த சோபாவில் அமர்ந்தான்.

சிறிதுநேரம் டைனிங் சேரிலேயே அமர்ந்திருந்த இளமதி சுயஉணர்வுப் பெற்று சாப்பிட்டப் பாத்திரங்களை எடுத்துக்கொண்டு கிச்சனில் நுழைந்தாள். எல்லாவற்றையும் ஒதுக்கி நேரத்தைப் பார்க்க அது ஒன்பது எனக் காட்டியது. அறைக்குள் சென்றவன் இன்னும் வரவில்லை, வேலைக்குப் போகவில்லையோ என்ற யோசனையுடன் உள்ளே சென்ற இளமைதிக்கு உதட்டோரம் புன்னகைப் பூ பூத்தது.

தன் அருகில் ஏதோ நிழலாட நிமிர்ந்தவன் தன்னைப் பார்த்து சிரிக்கும் மனைவியைப் பார்த்து முறைத்தான். “எதுக்கு உனக்கு சிரிப்பு வேண்டிக் கிடக்கு, எப்போ பாரு மனுசன கலங்கடிக்கிறது. ஏண்டீ நீ என்னைப் புரிஞ்சுக்கவே மாட்டியா, என்னைக்காச்சும் உன்கிட்ட நான் அப்படி நடந்துக்கிட்டேனா, எப்போ உன் கழுத்துல தாலி கட்டினேனோ அப்பவே அந்த நிமிசத்துல இருந்து நீ வேற நான் வேற இல்ல மதி,

# புது மலர்கள் பூத்திடும் வேளை…!

என்னோட மனசு எந்தளவுக்கு வலிக்குதுன்னு உனக்கு புரியுதா, இத்தனை நாளாத் தனியா இருக்கும் போதுதான் இப்படி உளறின. ஆனால் இப்போ ரொம்ப முத்திடுச்சு போல அதன் குழந்தைங்க முன்னாடியும் உளற ஆரம்பிச்சுட்ட. இனிமேல் இப்படி நடந்துகிட்ட நான் என்ன பண்ணுவேன்னு எனக்கே தெரியாது, புரியுதா.? இதுதான் உனக்கு நான் கொடுக்கிற கடைசி எச்சரிக்கை" என்று மனதில் இருந்ததையெல்லாம் வார்த்தைகளாக்கி பொரிந்து தள்ளினான் அஸ்வத்.

இளமதியின் அமைதி தொடரவே, எழுந்து சென்று அவளை அணைத்தவன் "இதை எப்பவுமே என் வாயால சொல்லக்கூடாதுன்னு நினைச்சேன், ஏன் யாருமே இந்த விசயத்தப் பத்தி பேசவே கூடாதுன்னு நினைச்சேன், ஆனால் அதைச் சொன்னாத்தான் நீ மறுபடியும் இப்படியெல்லாம் பேசமாட்ட, அதனால்தான் இதைச் சொல்றேன்." என்றவன் ஆழப்பெருமூச்சு எடுத்து சில நிமிடம் அமைதி காத்தான்.

அந்த அமைதியே இளமைதிக்கு அவனின் மனவலியைக் காட்ட, அவனின் மார்பில் அழுத்தமாகப் புதைந்துக் கொண்டு "எனக்குப் புரியுது பாவா, எல்லாமே எல்லாமே புரியுது. ஆனால் ஒரு சில நேரங்கள்லே அறிவு சொல்றத மனசு கேட்கறது இல்ல, அந்த மாதிரிதான் இதுவும். எவ்வளவோ மனசைத் தேத்தி ஆறுதல் படுத்திகிட்டாலும், நீங்களும் மாமாவும் என்கிட்டே நடந்துக்கிறதப் பார்க்கும்போது நான் உங்களுக்குத் தகுதியானவ இல்லையோ என்ற எண்ணம் மேல்நோக்கி வந்து என்னைப் பாடப்படுத்துது. அதுவும் நான் எந்த மாதிரியான சூழல்ல உங்ககிட்ட வந்தேன்னு நினைக்கும்போது அந்த எண்ணம் இன்னும் இன்னும் அதிகமாகி என்னை யோசிக்கவிடாம செய்து இந்த மாதிரி என்னை அறியாம செய்துடறேன். நான் இப்படி பேசுறதுல நீங்களும் அத்தையும் மாமாவும் எவ்வளவு வருத்தப்படுவீங்கனும் புரியுது. ஆனால் நம்ம கல்யாணம் முடிஞ்ச இந்த ஐந்து வருசத்துல என்னோட உண்மையான நிலைத் தெரிஞ்சு நான் கேட்டுகிட்டதுக்காக என்னைப் பற்றி விசாரிக்காமலே என்னை ஏத்துக்கிட்டது எல்லாம் நினைச்சு நினைச்சு மனசுக்குள்ளயே புழுங்கிடுறேன். என்னோட குடும்பத்துக்கு தீராத களங்கத்தை பரிசா கொடுத்துட்டு வந்தேன். அதையே வேறவழியில உங்களுக்கு கொடுக்கிறேனோனு தோணுது. இதெல்லாம் தான் என்னை அறியாமலே என்னை அப்படிபேச வைக்குது. நான் இனி இப்படி பண்ணமாட்டேன். நம்ம குழந்தைங்க மேல ஆணையா' என கண்ணீரோடு அவன் மார்பை நனைக்க, இப்போது அமைதியாவது அஸ்வத்தின் முறையானது.

# புது மலர்கள் பூத்திடும் வேளை...!

அவன் எதுவுமே பேசாமல் அமைதியாய் இருக்கவும் நிமிர்ந்து அவனைப் பார்த்தாள் இளமதி. அவன் முகத்தில் அவளைப் பற்றிய நம்பிக்கையின்மையைப் பார்க்கவும் லேசான புன்னகை எட்டிப்பார்த்தது இளமதிக்கு.

அவன் அவளையேப் பார்த்துக் கொண்டிருக்க அவன் கழுத்தில் தனது கைகளை மாலை ஆக்கியவள் மேலும் அவனை நெருங்கி அவன் காதுகளில் "சத்தியமாதான் பாவா இனிமே உங்க மதிக்குட்டி இப்படியெல்லாம் பேசமாட்டா, நம்புங்க பாவா நம்புங்க, நம்பிக்கைதான வாழ்க்கை . பிரபு கூட இதைத் தான் சொல்லியிருக்கார் தெரிஞ்சுகோங்க" என்றாள் கிசுகிசுப்பாய்.

அவளின் செய்கைகளை ரசித்துக் கொண்டிருந்தவன் கடைசி வாக்கியத்தில் சிரித்து விட்டான். அவன் சிரித்ததைப் பார்த்ததும் இப்போதான் பாவா நீங்க அழகா இருக்கீங்க, கோபப்பட்டா சிரிப்பு போலீஸ் மாதிரியே இருக்கீங்க" என அவனை கிண்டல் செய்தாள் அவன் மனைவி. அவள் கூந்தலில் விளையாடியபடியே "வர வர மிசஸ். சரவணன் உனக்கு ஓவரா ட்ரெயினிங் கொடுக்குராங்கப் போல,

அமைதியா ஆனந்தம் படத்துல வர சினேகா மாதிரி இருந்தவ, கோவா படத்துல வர சினேகா மாதிரி பேசுற, இப்படியெல்லாம் பேசுற இந்த வாய்க்கு ஏதாச்சும் தண்டனைக் கொடுக்கணுமே கொடுத்துடலாமா? எனக் கண்ணைச் சிமிட்டினான் அந்த காதல் கணவன்.

"இந்த வேலைதான் ஆகாது, நீங்க இன்னும் சாப்பிடல, அத்தையும் மாமாவும் வந்துடுவாங்க, நானும் அத்தையும் வேற பிள்ளைங்களுக்கு ட்ரெஸ் எடுக்கக் கடைக்கு போகணும், அதனால இப்போ நீங்க வந்து சாப்பிட்டு கௌம்புங்க எனக்கு வேலையிருக்கு என அவளிடம் இருந்து விலகாமலேக் கூற,

"ம்ம் அப்படியா, அப்போ சரி எனக்கும் பசிக்குது சாப்பிட வேண்டியதுதான் என தன பேச்சுக்கும் செய்கைக்கும் சம்மந்தமே இல்லாமல் மனைவியின் முக வடிவை அளந்தவன் அதில் மேலும் மயங்கியவளின் கண்கள் தாமாக மூடிக் கொள்ள நிதானமாக வெகு நிதானமாக தன் விரல்கள் இருந்த இடத்தில இதழ்களைப் பொருத்தி இதழ் தேனைப் பருகத் துவங்கினான். அந்தக் கண்ணான கள்வன்.

புது மலர்கள் பூத்திடும் வேளை - மதுவதனி

# புது மலர்கள் பூத்திடும் வேளை…!

முத்தங்களின் சத்தம் மட்டுமே அந்த அறையில் நிறைந்திருக்க, கடிகாரத்தில் மணி பத்து என்று காலம் கடந்ததை ஒலித்து அறிவித்தது. அதில் இருவரின் மோனமும் களைய, வெட்கத்துடன் அவளிடம் இருந்து விலகியவளை விலக விடாமல் தடுத்தவன், "நீ உள்ளே வந்ததும் எதுக்கு உனக்கு அப்படி ஒரு சிரிப்பு வந்தது என்று கேட்டான், காரணம் தெரிந்துருந்தும் அவளின் செம்மையான கன்னங்களை வருடிய படியே, அந்த வருடலில் மயங்கியபடியே "ஏனு உங்களுக்கு தெரியாதா" என்றாள் இளமதி குரலில் குழைவத் தேக்கியபடி.

அதில் சிரித்தவன் "என்னோட பாலிசி உனக்கு சிரிப்பு வருதா, இதுல சிரிப்பு வர என்ன இருக்கு, எனக்கு அது சரின்னு பட்டுச்சு அதான் செய்றேன்" என்றான். "ஆமாமாம் பெரிய பாலிசி, யூனிபோர்ம் போட்டுக்கிட்டு எந்த ஆபிசரும் ரொமான்ஸ் பண்ணாமலா இருக்காங்க, நான் உள்ள வரும்போது நீங்க சர்ட் போடாம இருக்கவும், சார் கோபம்தான இருக்காரு, ஏன் சர்ட் போடலன்னு யோசிச்சேன். அதான் சிரிப்பு வந்துடுச்சு." என்று கூறிச் சிரித்தாள்.

கூடச் சேர்ந்து சிரித்தவன் "அதுவா எப்படியும் என்னோட அழுமூஞ்சி பொண்டாட்டி என்னை சமாதானம் பண்ண வருவா, அப்புறம் அப்படி இப்படினு போயி கடைசில ரொமான்ஸ் நடந்துடும்னு தான் யூனிபோர்ம் போடாம இருந்தேன், நான் நினைச்சது சரியா நடந்துச்சா, இப்போ சொல்லு நான் சரியாதான செஞ்சேன்." என்று இல்லாத சட்டையின் காலரைத் தூக்கிவிட்டுக் கொண்டான் அஸ்வத். அதில் மேலும் சிரித்தவளை பார்த்தவன், "இளா இன்னைக்கு நாம எல்லாமே பேசித் தெளிவு பண்ணிடலாம்னு நினைக்கிறேன். இனிமேல் இந்த விஷயத்தைப் பத்தின சிறு உறுத்தல் கூட இல்லாம நீ என்கூட வாழனும், அதுதான் எனக்கும் வேணும் புரியுதா?"

அஸ்வத் பேச ஆரம்பித்ததுமே கலங்கிய முகம் உடனே சீரானது இளமதிக்கு. தன்மேல் அளவில்லாத நம்பிக்கையும் காதலும் கொண்டுள்ள கணவனுக்கு தானும் உண்மையான காதலைப் பரிசளிக்க வேண்டும் என்ற உறுதி பிறந்தது அவளுக்குள். அது தன் கடந்த காலத்தை பற்றின கசப்புகள் சிறுதுளி கூட அவளின் நினைவில் வராமல் பார்த்துக் கொள்ளவேண்டும். அப்படியும் தோன்றினால் அதில் இருக்கும் இனிமையான நிகழ்வுகளைப் பற்றியே யோசிக்க வேண்டும் என்ற முடிவும் பிறந்தது இளமைதிக்கு.

புது மலர்கள் பூத்திடும் வேளை - மதுவதனி

# புது மலர்கள் பூத்திடும் வேளை…!

மனைவியின் முகமாறுதல்களைப் பார்த்தவன் அவளின் முகம் தெளிவடைந்ததை பார்த்து தொடர்ந்து பேச ஆரம்பித்தான் அஸ்வத். " தருணி பத்தின ரகசியம் எந்தக் காலத்துலையும் எப்பவுமே அவளுக்கு தெரியக்கூடாது, அதுல நான் உறுதியா இருக்கேன். அப்படி ஒரு சூழல் உருவாகவே கூடாதுன்னு தான் என்னோட ஒவ்வொரு நாள் பிராத்தனையும். எனக்கு எப்பவும் இரண்டு மகள்கள்தான், அதுல எந்த மாற்றமும் இல்லை, இதை நீ நல்லா புரிஞ்சுக்கோ, அவங்கக்கிட்ட நாம சின்ன வித்தியாசம் கூட காட்டக்கூடாது. அதுலயும் நான் உறுதியா இருக்கேன்.

நீ முதன்முதலா வீட்டுக்குள்ள வரும்போது ரொம்ப சோர்ந்துபோய் ஒரு நோயாளி மாதிரி வந்த, ஆனால் அப்போ அந்த நொடி நீ எனக்கே எனக்கான தேவதை, கடவுள் எனக்காகவே உன்னை அனுப்பி வச்சுருகாருன்னு தோனுச்சு. பார்த்த நொடியில் இருந்து உன்மேல் உண்டான காதல் உன்னைப் பத்தி தெரிஞ்சதும் அளவுக்கதிகமாதான் ஆச்சே தவிர குறையவே இல்லை. அது எனக்கே ஆச்சரியம்தான். உன்னோட வேதனையெல்லாம் என்னோடதா மாறின அந்த நிமிஷம் நீதான் என்னோட உலகம் உனக்கு எல்லாம நான் இருக்கணும், நீ என்னைவிட்டு எங்கேயும் போகக் கூடாது இப்படியெல்லாம் யோசிக்க ஆரம்பிச்சேன். என்னோட மனசுத் தெரிஞ்சு அப்பா என்கிட்டே பேசும்போது நீ அவளை மனைவியா ஏத்துக்குறது பெரிய விஷயம் இல்ல, ஆனால் அவளோட குழந்தையும் உன்னோடதா மனசளவுல ஏத்துகுறதா இருந்தா மட்டும் இதை பத்தி அந்தப் பொண்ணுக்கிட்ட பேசுறோம். அப்படி இல்லைன்னா ஏதாவது ஒரு ஆசிரமத்துல சேர்த்து விட்டுடலாம்னு சொன்னார். ஒருவேளை ஏத்துக்கிட்டாலும் நீ பெரிய தியாகியா உன்னை அந்தப் பொண்ணு நினைக்கக்கூடாது. நீ அந்த மாதிரி நடந்துக்கணும்னு சொன்னார்.

அவர் சொல்றதுக்கு முன்னாடியே என்னோட மனசும் அதுதான் சொல்லுச்சு. அப்பாக்கிட்டையும் அதைத்தான் சொன்னேன். எங்களுக்கு நீ இளமதியைக் கல்யாணம் செய்றதுல எந்த வருத்தமும் இல்லை. இன்னும் சொல்லப் போனா ரொம்ப சந்தோஷம்தான். இதே நிலை நம்ம ஆதிராவுக்கு வந்திருந்தா எப்படி வருத்தம் வருமோ அதே வருத்தம்தான் இளமதி விஷயத்துலயும் வந்துருக்கு எனக்கும் உன் அம்மாவுக்கும். அப்புறம் நீயேப் பேசித்தான் அவகிட்ட சம்மதமும் வாங்கணும் அப்படினும் சொன்னார்.

அதுதான் நம் வாழ்க்கையிலும் நடந்தது. எப்பவுமே உன்னை நான் தப்பான கண்ணோட்டத்தில் பார்க்கவே இல்லை. இதை உன்னோட மனசுல ஆழமா பதிய வச்சுக்கோ மதிம்மா. உனக்குப் பின்னாடி நாங்க எல்லாரும் இருக்கோம் என்னோட படைத்தளபதிகள் இருக்காங்க நீ எதுக்கும் கவலைப்படாதே" எனத் தன் நீண்ட விளக்கத்தை முடித்தவனைப் விழியகலாமல் பார்த்தாள் அவனின் மதிம்மா.

**வேளை தொடரும்….**

புதுமலர்கள் பூத்திடும் வேளை - மதுவதனி



## வேளை - 07

*************************************************************************************************

நடந்தால் காஞ்ச நிலம் செழிக்கும்
சிரிச்சா கோயில் மணி அடிக்கும்
கண்ட கண்ணு படும்
பேசும் போது பார்வை பார்த்தேன்
தோளின் மீது துண்டாய் ஆனேன்

நெஞ்சத்திலே ஏஏ..ஏஏ..ஏஏ
நெஞ்சத்திலே ஊஞ்சல் கட்டி
ஆராரிரோ பாடவோ

தாழம்பூவே வாசம் வீசு
தாயின் தாயே கொஞ்சிப்பேசு
இரவும் இல்லே பகலும் இல்லே
அன்புக்கு பஞ்சமில்லே
தாலேலோ தாலேலோ

**தாழம்பூவே வாசம் வீசு**
**தாயின் தாயே கொஞ்சிப்பேசு**

**இனி நான் கோடி மலர் கொடுப்பேன்**
**உன்னை நான் பார்க்க விழி திறப்பேன்**
**இது சத்தியமே**
**நேரம் போனால் மேகம் ஏது**
**நீயும் போனால் நானும் ஏது**

**என்னுயிரே ஏஏ..ஏஏ**

**என்னுயிரே நீ இருக்க**
**உண்மை இது போதுமா**
**தாழம்பூவே வாசம் வீசு**
**தாயின் தாயே கொஞ்சிப்பேசு**

**இரவும் இல்லே பகலும் இல்லே**
**அன்புக்கு பஞ்சமில்லே**

****************************************************************************************************

தன்னையே விழியெடுக்காமல் பார்க்கும் மனைவியின் தலையில் லேசாக முட்டியவன் “என்ன நான் சொன்னது எல்லாம் இந்த அழகான மரமண்டைக்குள்ள ஏறிச்சா இல்லை வழக்கம் போல ரிக்கார்டு ஆகாமா வெளியேரிடுச்சா”, என்றவன், “இனி இதுபோல் எப்போதும் உன் வாயிலிருந்து வார்த்தைகள் வரக்கூடாது இளா, இது நம்ம குடும்பம், இதுல யாரும் யாரையும் பிரிச்சுப் பார்க்ககூடாது, புரியுதா? நேத்து அப்பா குழந்தைகளுக்கு ஒரு கதை சொன்னார், அது யதார்த்தமா நானும் கேட்க வேண்டியதாப் போச்சு, அப்போ இது கண்டிப்பா குழந்தைகளுக்குத் தேவையான கருத்துதான் அப்படினு தோனுச்சு, ஆனா இப்போதான் தெரியுது. அதைவிட சின்னக் குழந்தைகளுக்கும் அதைச் சொல்லலாம்னு என அவள் முகத்தைப் பார்க்க,

அவனின் கிண்டலை உணர்ந்தவள் “இப்போ உங்களுக்கு அந்த ஸ்டோரியை என்கிட்ட சொல்லனும் அப்படித்தான, சொல்லுங்க, நான் கேட்கிறேன்” என இவளும் அவனை வம்பிழுக்க “நீ என்னதான் என்னைக் கிண்டல் செய்தாலும் இதை உன்கிட்ட சொல்லித்தான் ஆகனும்,

புது மலர்கள் பூத்திடும் வேளை - மதுவதனி

அப்போது உனக்கு உன்னோட மனநிலைப் புரியும் இளா, அதுக்கப்புறம் நீ மனசைப் போட்டுக் குழப்பிக்கொள்ள மாட்ட அதான்“ என்றவன் அந்தக் கதையைக் கூற ஆரம்பித்தான்.

ஒரு தாத்தா பேரனுக்கு சொன்னாராம் உன் மனதில் இரு ஓநாய்களுக்கிடையே ஓயாது சண்டை நடந்து கொண்டே இருக்கிறது. ஒரு ஓநாய் தீயது - கோபம், பொறாமை, பேராசை, பொய், தாழ்வு மனப்பான்மை ஆகியவற்றைக் கொண்டது. மற்றொன்று நல்லது - அன்பு, அமைதி, நம்பிக்கை, பணிவு, இன்பம், உண்மை நிறைந்தது. ஆர்வத்தை அடக்க முடியாத பேரன் கேட்டானாம் “தாத்தா சண்டையில் எது வெல்லும் என்று?

அதற்கு அமைதியாகத் தாத்தா “நீ எதற்கு தீனி போடுகிறாயோ அது” என்றாராம். அதேபோல் தான் உன் மனதில் எதிர்காலம் பற்றி இப்படி இதெல்லாம் உன் மனதை யோசிக்கச் செய்து அதில் அதிகக் கவனம் செலுத்து உன் முயற்சி கண்டிப்பாக வெற்றியடையும் கடந்த காலம் அதை நாம் கடந்து வந்துவிட்டோம்.

அதில் நடந்த எந்த விசயங்களையும் நம்மால் மாற்ற முடியாது. ஆனால் எதிர்காலம் அப்படி இல்லை. அது நம் கையில் தான் இருக்கிறது. அதை நம் விருப்பப்படியே அமைத்துக்கொள்ள முடியும் அதில் மகிழ்ச்சியான நினைவுகளை வரவேற்ப்போம். கடந்த காலத்தை ரீவைண்ட் செய்து பார்க்கலாம், ஆனால் ரிவர்ஸ் பண்ண முடியாது. அதனால் பழையதை பற்றி யோசிக்காதே, எது நடந்ததோ, அது நல்லதற்கே என்று எடுத்துக்கொள். இனி வரும் வாழ்க்கை நம் நால்வருக்குமானது அதில் சிறு பிளவு கூட வேண்டாம் மதிம்மா. முடிந்தது எல்லாம் முடிந்ததாகவே இருக்கட்டும், விட்டுவிடு உன் மனதை லேசாக்கி உன் விருப்பத்தின் பின்னே அதை செயல்படுத்து அனைத்தும் நன்றாகவே அமையும்” என மீண்டும் ஒரு நீண்ட விளக்கத்தை முடித்தவனைப் பார்த்தவள்.

“ஏன் முடிச்சிட்டீங்க பாவா உங்க செமினாரை, நல்லாத் தூக்கம் வந்தது. அதுக்குள்ள முடிச்சிட்டீங்க, இன்னும் கொஞ்சம் நேரம் க்ளாஸ் எடுங்க ப்ளீஸ் என்று மீண்டும் அவன் மார்பில் வாகாக சாய, “அடிப்பாவி தொண்டைத்தண்ணி வத்த, டிபன் கூட சாப்பிடாம உன்கிட்டபேசிட்டு இருக்கேன் அது உனக்கு க்ளாஸ்



புது மலர்கள் பூத்திடும் வேளை - மதுவதனி

எடுக்குற மாதிரியா இருந்துச்சு, உன்னை என்ன செய்றேன் பாரு" என அவளின் இடையில் கைகளால் கோலமிட அதில் துள்ளி எழுந்த இளமதி அவனை முறைக்க ஆரம்பித்தாள்.

“போங்க நான் உங்ககூட சண்டை, நான் கோபமா போறேன்" எனத் தன் குட்டிமகள் தபசிப் போல அவளும் பேச, அதில் சிரித்தவனைப் பார்த்து “இன்னைக்கு ட்ரைனிங் இல்லையா பாவா டைமாச்சு, இன்னும் சாப்பிடவும் இல்ல, இங்கேயே எடுத்துட்டு வரவா, என்றாள் இளமதி.

“பசிக்கல மதி கொஞ்சம் போகட்டும், இன்னைக்கு ஈவனிங் போனாபோதும். மார்னிங்கே மனசு சரியில்லாமப் போயிடுச்சு, அதான் தமிழுக்கு கால் பண்ணி ஈவ்னிங் வரேனு சொல்லிட்டேன்.

“ம்ம் சரி, மாமாவுக்கு போன் பண்ணுங்க, வரட்டும், நமக்காக வெளியவே இருப்பாங்க பாவம், நான்தான் எதையோ தேவையில்லாமல் பேசி அவங்களையும் வருத்தப்படவைச்சுட்டேன்" என்ற மனைவின் பேச்சில் தெளிவு வந்து விட்டதைப் புரிந்தவன் அலைபேசியில் சரவணனை அழைத்தான்.

தந்தையின் எண்ணிற்கு அழைத்தவன் இரண்டு முழு அழைப்புக்கள் சென்றும் எடுக்கவில்லை என்றதும் குழம்பினான், அதேக் குழப்பத்துடன் மனைவியிடமும் அதைத் தெரிவித்தவன்.

நான் எதுக்கும் போய் பார்த்துட்டு வந்துடுறேன் இளா, நீ அவங்க வீட்டுக்கு வந்தா எனக்கு கால் பண்ணிக் சொல்லு, எனக் கிளம்பும் நேரம் சரவணனின் அழைப்பு வர, அதை எடுத்தவன் “அப்பா எங்க சண்டையெல்லாம் முடிச்சு சமாதானம் ஆயிட்டோம், நீங்க எங்கே போனீங்க, சீக்கிரம் வாங்க, உங்க ஆசை மருமக என்னை தொலைச்சு எடுக்குறா" என அவர் பேச இடம் கொடுக்காமல் அவனேப் பேச,

புது மலர்கள் பூத்திடும் வேளை - மதுவதனி

# புது மலர்கள் பூத்திடும் வேளை...!

"டேய், டேய் அது எங்களுக்கும் தெரியும் இன்னேரம் நீங்க சமாதானம் ஆகிருப்பீங்கனு, உனக்கு ட்ரைனிங் கொடுத்தது யாரு நானாச்சே அது எப்படி வீணாப் போகும் என்று சிரித்தவர் மேலும் தொடர்ந்து "தம்பி இங்க நம்ம தன்வீர் அங்கிளோட வைப்க்கு கொஞ்சம் உடம்பு முடியல, அவரும் காலேஜ்க்குப் போயிட்டார் போல, வீட்டுல யாரும் இல்லை, நானும் அம்மாவும் ஹோஸ்பிட்டலுக்கு கூப்பிட்டு வந்துருக்கோம், இங்க இப்போதுதான் டெஸ்ட் எடுத்துருக்காங்க, வர லேட்டாகும், முடிஞ்சா லஞ்ச் செய்து நீயும் இளாவும் இங்க வந்துட்டுப் போங்க, அப்படியே பொறுமையா தன்வீர் வீட்டுக்கு எடுத்துச் சொல்லி கூப்பிட்டு வாங்க, போகும்போது பிள்ளைங்களையும் ஸ்கூல்ல இருந்து அழைச்சுட்டுப் போயிடலாம் சரியா" என முடிக்க அஸ்வத்தும் சரி என்று போனை வைத்தவன் மனைவியிடமும் விபரம் சொன்னான்.

இருவருக்கும் பதினோரு மணியளவில் காலை உணவு முடிந்தது அவசரமாக மதிய உணவை செய்து எடுத்துக் கொண்டு, இருவரும் ஹோஸ்பிட்டலுக்கு கிளம்பினர். போகிற வழியில் ட்ரைனிங் காலேஜில் தன்வீரையும் அழைத்துக்கொண்டு சென்றனர்.

அங்கிருந்த ரிசப்சனை அணுக, அவர்கள் ICU வார்டை கைகாட்டினார். அங்கே முகத்தில் கவலையுடன் அமர்ந்திருந்த பூங்குழலியைப் பார்த்த தன்வீர் "என்னாச்சு சுமிதாவுக்கு, மார்னிங் நான் போகும்போது நல்லாதானே இருந்தா திடிரென்று என்னாச்சு, ICUவில் வைத்திருக்கிறார்கள் என்றால் ஏதேனும் பயப்படும்படியாகவா, சொல்லுங்கள் மேடம், "என பதற அதற்குள் வெளியில் இருந்து உள்ளே வந்த சரவணன், "ஒன்னுமில்லை தன்வீர் பயப்பட ஏதுமில்லை, நீங்கள் முதலில் பதட்டப்படாமல் அமைதியாக இருங்கள் பிறகு உங்களுக்கும் உடல்நிலை சரியில்லாமல் போய்விடப் போகிறது. கொஞ்சம் நிதானித்து பொறுமையாக இருங்கள். டாக்டர் உள்ளே செக்கப் செய்து கொண்டிருக்கிறார் வெளியே வந்ததும் அவரிடம் கேட்டுக்கொள்ளலாம். இப்போது வரைக்கும் பயப்படும்படி ஒன்றும் இல்லை, சிறிது அமைதியாக உட்காருங்கள்" என்று அமைதிபடுத்தினார்.

புது மலர்கள் பூத்திடும் வேளை - மதுவதனி

# புது மலர்கள் பூத்திடும் வேளை…!

என்ன சொல்லி மனதை அமைதிப்படுத்தி கொண்டாலும் தன்வீரின் மனம் அலைபாய்ந்தது. அவர்களுக்கென இரண்டு பிள்ளைகள் இருந்தாலும் அவரவர் வாழ்க்கையின் முக்கியத்துவத்தை உணர்த்தி, அவர்களின் எதிர்காலத்தை முன்னிறுத்தி அவர்களை அதைநோக்கி, பயணிக்கச் செய்தது தாங்கள் தான். இன்று பிள்ளைகள் வெவ்வேறு நாட்டில் வசிப்பதற்கு காரணமும் அவர்களேதான் இதில் பிள்ளைகளைக் குறைகூற முடியாது. அவர்களின் இந்த நிலைக்கு பெற்றோரான தாங்கள்தான் காரணமும். இதில் எல்லாவற்றையும் கூறி அவர்களையும் கலவரப்படுத்த முடியாது, பயந்து விடுவார்கள். இப்படி எதையெல்லாமோ எண்ணி மனதுக்குள் பயந்தவர் தன் துணையின் இன்றைய நிலையில் மேலும் மேலும் வாடிபோனார்.

தன்னை மணந்த நாளில் இருந்து தானும் தன் குழந்தைகள் மட்டுமே உலகம் என்றிருந்தவளுக்கு தான் எதுவுமே செய்யவில்லை என்ற எண்ணம் எழுந்து அவரைக் குற்ற உணர்வில் தள்ளியது. அவரின் எண்ணங்கள் அதற்கு மேல் போக முடியாதபடி ICU அறையின் கதவு திறந்து மருத்துவர் வெளியே வந்தார்.

அவரை நோக்கி வந்த தன்வீரின் கரத்தை பிடித்த டாக்டர் "பயப்பட ஒன்றும் இல்லை தன்வீர், சாதாரண நெஞ்சுவலித்தான். வாயுவினால் ஏற்பட்டதுதான். கொஞ்சம் வீக்கா இருக்காங்க. அதனால் ட்ரிப்ஸ் போட்டுருக்கேன். எப்படியும் முடிய ஈவினிங் ஆயிரும். அப்புறமா அழைச்சுட்டுப் போங்க, இப்போ உள்ளே போய் பாருங்க" என்றவர் நகர்த்தி விட தன்வீர் தன் மனைவி சுமிதாவைக் காண உள்ளே விரைந்தார்.

அதுவரை வெளியே இவர்களின் உரையாடலைக் கேட்டுக் கொண்டிருந்த நால்வரும் வெவ்வேறு வகையில் அமைதியாயினர். முதலில் அமைதியைக் கிழித்த பூங்குழலி, "சீக்கிரம் ஆதியையும் இந்தியாவுக்கே வரச் சொல்லிடவும் ஆச்சு, அவா ஒருபக்கம் நாம ஒருபக்கம், நினைச்சா நேரம் பார்த்துக்க கூடமுடியல. என்ன வாழ்க்கையோ" என்றார். அதை ஆமோதிப்பது போல் அஸ்வத்தும் சரவணனும் வார்த்தைகளின்றி தலை அசைத்தனர். இளமதியின் எண்ணங்கள் மட்டும் அப்போது அங்கில்லாமல் அவளை உருவாக்கிய உயிரைத் தேடிச் சென்றது.

புது மலர்கள் பூத்திடும் வேளை - மதுவதனி

# புது மலர்கள் பூத்திடும் வேளை…!

அன்பான தாத்தா, பாட்டி பாசமும் நேசமும் வளர்த்த அப்பா, அம்மா எப்போதும் துருதுருவென்று இருக்கும் தன் அழகான குட்டித்தங்கை என்று அழகான குடும்பம் இளமதியுடையது. இளமதிக்கும் அவளின் தங்கைக்கும் மூன்று ஆண்டு இடைவெளிகள் இளமதி தாம், பெற்றோரிடம் வளர்ந்ததை விட தம் தாத்தா பாட்டியிடம் வளர்ந்துதான் அதிகம் தம் தந்தை வெளியூரில் வேலை பார்த்ததால் மாதமொருமுறை மட்டுமே விடுப்பில் வந்து செல்வார். தாயோ அவரின் மேற்படிப்பில் கவனத்தை செலுத்த இளமதியின் பொறுப்பு அந்த வீட்டின் பெரியவர்களுக்கென்றானது. இளமதியின் தங்கை பிறந்த பிறகே தாயின் முழுக்கவனிப்பும் குழந்தைகளிடம் திரும்பியது. அவரது படிப்பும் முடிந்தது. ஆனாலும் இளமைதிக்கு அவளின் தாத்தாவும் பாட்டியும் எப்போதும் வேண்டும். தோட்டத்திற்கோ அல்லது வெளியூருக்கோ எங்கு சென்றாலும் அவளை அழைத்துச் செல்ல வேண்டும். அவர்கள் இல்லாமல் ஒரு இரவு கூட அவளால் இருக்க முடியாது. அப்படி அன்பால் நிறைப்பியவர்கள் அவளின் பதினைந்து வயதில் அடுத்தடுத்து மரணவாயிலை அடைந்துவிட மிகவும் உடைந்து போனாள்.

என்னதான் தாயும் தந்தையும் அவளை நன்றாகப் பார்த்துக் கொண்டாலும் அவளின் தாத்தா பாட்டியின் இடத்தை அவர்களால் நிரப்ப முடியவில்லை என்பது உண்மையே. பனிரெண்டு வயதான இளமதியின் தங்கைத் கூட அவளிடம் விட்டுக்கொடுத்து அவளின் மனம் கோணாமல் நடந்து கொண்டாள். காலம் எல்லாவற்றையும் மாற்றும் என்பதற்கிணங்க, இளமதியும் படிப்பில் கவனத்தை திசை திருப்ப முயன்றாள்.

பதின்மவயதில் குழந்தைகளின் மனம் கடிகாரத்தின் பெண்டுலத்தைப் போல் ஊசலாடிக் கொண்டே இருக்கும். அதை கவனித்து பெற்றோர்கள் அவர்களை நல்வழிபடுத்தாவிட்டால் பிள்ளைகளின் எதிர்காலம் சூனியமாகிவிடும். அதேபோல் தான் இளமதியின் வாழ்விலும் நடந்தது. தன் தாத்தா பட்டியின் இறப்பிற்குப் பின் மனது தெளிவில்லாமல் போய்விட, அதில் குழப்பமான மனநிலையிலையே இருந்தவளை தன் பள்ளியில் பன்னிரெண்டாம் வகுப்பில் படித்துக் கொண்டிருந்த சுரேஷ் என்பவன் காதல் சொன்னபோது யோசிக்காமலே சரி என்று சொல்ல வைத்தது. ஆனால் அவனின் பொழுது போக்கான காதல்.

மதுவதனி - புது மலர்கள் பூத்திடும் வேளை

# புது மலர்கள் பூத்திடும் வேளை…!

காதல் ஒருமுறைதான் வரும் அதும் ஒருவரிடமே வரும் என்ற அவளின் உண்மையான காதல், இப்படி இவர்களின் இருவருக்கும் இடையே காலம் தன் சதுரங்கத்தை ஆட ஆரம்பித்தது. பள்ளிப் படிப்பை முடித்து சுரேஷ் கல்லூரிப் படிப்பிற்காக சென்னை சென்றுவிட கல்லூரியின் கூடா நட்பு அவன் தேனியை மட்டுமல்ல இளமதியையும் சேர்த்தே மறக்க வைத்தது.

இளமதி அவனை நினைத்து படிப்பில் கோட்டைவிட்டாள். இது பெற்றோருக்கு பெரும் அதிர்ச்சியை அளிக்க. அதன்பிறகே அவளை ஊன்றிக் கவனிக்க ஆரம்பித்தனர். இளமதியின் தங்கை மூலம் விசயம் அறிந்த பெற்றோர் அவளிடம் பேச, அவள் தான் இப்படி நடந்து கொண்டதன் காரணங்களைக் கூறியதும் அவர்களுக்கு அதிர்ச்சி எப்போதும் போல் அவளைவிட்டது தவறு. தாங்கள் கவனித்துப் பார்த்திருக்க வேண்டும். அவளுக்கு ஆதரவாக இருந்திருக்க வேண்டும் இல்லாமல் போய்விட்டோம் என்ற குற்ற உணர்ச்சி ஏற்பட்டு அவளிடம் மன்னிப்பும் கேட்க வைத்தது.

அதன் பிறகு இளமதி ஓரளவு படிப்பில் கவனத்தை செலுத்தினாள். எல்லாம் சரியாகவே போய் கொண்டிருந்தது. இளமதி கல்லூரிப் படிப்பின் இறுதியிலும் தன் தங்கை பள்ளி மேற்படிப்பின் இறுதியிலும் இருக்கும் சமயம் வேலைக்காக வெளியூர் சென்றிருந்த தந்தை ஒரு விபத்தில் இறந்து விட்டதாகத் தகவல் வர வீடு மீண்டும் சூன்யமானது. தந்தையின் வேலைத் தாய்க்கு கிடைக்க வீடு மாற்றம் செய்து மூவரும் திருச்சி குடியேறினர். அங்கே தான் இளமதியின் வாழ்வும் கேள்விக் குறியானது.

நிமிடத்தில் கடல் கடந்து செல்லும் தன்மையுடையவை நம் எண்ணங்கள் அப்படித்தான் இளமதியின் எண்ணங்களும் போனது. மற்ற மூவரும் பேசியது எதுவும் காதில் விழாது எதையோ யோசித்து கொண்டிருந்த மனைவியின் முகத்தைப் பார்த்த அஸ்வத் அவளின் கையைப் பிடித்து அழுத்தினான். அதில் சுய உணர்வும் பெற்றுத் திரும்பியவளை அழைத்துக்கொண்டு பள்ளிக்குச் சென்றான்.

புது மலர்கள் பூத்திடும் வேளை - மதுவதனி

# புது மலர்கள் பூத்திடும் வேளை...!

குழந்தைகளை அழைக்க இன்னும் நேரம் இருப்பதால் அங்கிருந்த பள்ளி வளாகத்திலையே தம் காரை நிறுத்தி அவள் புறம் திரும்பி “என்ன மதி ஏன் ஏதோ யோசனையிலையே இருக்க, வீட்டு ஞாபகம் வந்துடுச்சா” என வாஞ்சையாக கேட்க, தன் மனதில் எழும் ஒவ்வொரு எண்ணமும் தம் கணவனுக்கு அத்துப்படி என்ற கணவனின் செயல் எந்த பெண்ணுக்குத்தான் பிடிக்காமல் போகும். அவனையே இமைக்காமல் பார்த்தவள் 'ஆமாம்' என்பதுபோல் தலையசைத்தாள் கண்களில் நீரோடு.

"அம்மாவும் குட்டிமாவும் நல்லா இருப்பாங்களா பாவா, என்னைப் பத்தி நினைப்பாங்களா, நான் உயிரோடு இருப்பது அவங்களுக்குத் தெரியுமா? நான் அவர்களைப் பத்தி யோசிக்காம தற்கொலை அது இதுன்னு சுயநலமா யோசிச்சிட்டேன் இல்ல, என்னால அவங்க ரொம்ப அவமானப்பட்டுருப்பாங்க தான. நான் ஒரு சுயநலவாதி, பிரச்சனையை எதிர்த்து போராடாம, அதுக்குப் பயந்து இப்படியெல்லாம் பண்ணிட்டேன். இப்போ அவங்க எப்படி இருப்பாங்க. குட்டிம்மாவுக்கு கல்யாணம் ஆகிருக்குமா? மனக்குமுறலை கூறினாள் அவனிடம்.

குட்டிம்மாவுக்கு கல்யாணம் ஆகிருந்தா அம்மா மட்டும் தனியாதான இருப்பாங்க, அம்மாவுக்கும் இப்படித்தான உடம்பு சரியில்லாமப் போன பார்த்துக்க யாருமே இருக்கமாட்டாங்க, நான் பெரிய பாவியாகிட்டேனோ, இதுக்கெல்லாம் எப்படி நான் பரிகாரம் பண்ணபோறேன்னு தெரியலையே, எவ்வளவு நம்பினாங்க இப்படி ஏமாத்திட்டு வந்துட்டேனே” என மற்றவர்களை தன் குடும்பத்தை பத்தி பேசாதீர்கள் என்று சத்தியம் வாங்கியவள் தான்தான் என்பதையும் மறந்து புலம்ப ஆரம்பித்தாள் இளமதி.

மனைவியின் மனக்குமுறலை காண சகிக்காமல் “இளாம்மா நீ நினைக்கிற மாதிரி எதுவுமே இல்லை, அவங்க உன்மேல் பாசமாத்தான் இருப்பாங்க. நீ மட்டும் சரின்னு சொல்லு, இப்ப உடனே நாம போய் அவங்களை தேடி கண்டுபிடிச்சிடலாம். தப்பான எந்த முடிவும் எடுத்துருக்கமாட்டாங்க உன்னோட அம்மா. உன் தங்கைக்காகவாச்சும் அவங்க நல்லமுறையில் ஏதோ ஒரு இடத்துல இருப்பாங்க. இப்பவும் ஒன்னும் கெட்டுபோயிடல, குழந்தைங்களை அம்மாவும் அப்பாவும் பார்த்துப்பாங்க, நாம போயி அவங்களப் பத்தி விசாரிச்சிட்டு வரலாம்.

புது மலர்கள் பூத்திடும் வேளை - மதுவதனி

இந்த ஐந்து வருடம் அவர்கள் மனதையும் மாத்தியிருக்கும், உன்னையும் ஏத்துப்பாங்கடா “ என அவளின் மனம் அறிந்தவனாக கூறினான் அஸ்வத்.

“இல்லீங்க வேண்டாம் அவங்க எங்கையோ கண்டிப்பா நல்லாத்தான் இருப்பாங்க, இருக்கனும் அதான் என்னோட ஆசையும். அவர்களோட வாழ்க்கையில் நான் முடிந்துபோன அத்தியாயமாகவே இருக்கட்டும். இறந்தவள் இறந்தவளாகவே இருக்கட்டும் விட்டுவிடுங்கள் இனி இதுபற்றி பேச வேண்டாம். ஸ்கூல் விட்டுட்டாங்க போய் பிள்ளைங்களை கூட்டிட்டு வாங்க” என பட்டென்று அந்தப் பேச்சுக்கு முற்றுப்புள்ளி வைத்து கண்களை இருக்க மூடி சீட்டில் சாய்ந்தாள் இளமதி.

இந்த ஒரு விஷயத்தில்தான் இவளை மாற்ற முடியவில்லை என்று சலித்துக் கொண்டவன் இவளின் நிம்மதிக்காக அவளின் குடும்பத்தை தேடவேண்டும் என்ற முடிவுடன் குழந்தைகளை அழைக்க சென்றான். அவன் என்ன தேடினாலும் அவர்கள் அவன் கண்ணில் படமாட்டார்கள் என்பது அவனுக்கு அப்போது தெரிந்துருக்க வாய்ப்பில்லை. அது காலம் கடந்த யோசனை அவனுக்கு…….!

**வேளை தொடரும்….**

புதுமலர்கள் பூத்திடும் வேளை - மதுவதனி




## வேளை - 08

*************************************************************************************************

**தேடி தேடி பார்க்கிறேன் என் கால்கள் ஓய்ந்ததே**
**காணாமலே இவ்வேளையில் என் ஆவல் தீருமோ**
**காற்றில் ஆடும் தீபமோ உன் காதல் உள்ளமே...**

**நீ காணலாம் இந்நாளிலே என் மேனி வண்ணமே**
**பிரிந்தோம்... இணைவோம்...**
**இனி நீயும் நானும் வாழ வேண்டும்**
**வாசல் தேடி வா...**

**தேடும் கண் பார்வை தவிக்க துடிக்க**
**சொன்ன வார்த்தை காற்றில் போனதோ**
**வெறும் மாயமானதோ**

*************************************************************************************************

# புது மலர்கள் பூத்திடும் வேளை…!

அந்தப் பண்ணை வீட்டின் தோட்டத்தில் ஆழ்ந்த யோசனையில் அமர்ந்திருந்தனர் சிபியும் ஷானவியும். இருவரும் அவரவர் யோசனையின் ஆழ்ந்தனர். அதற்குக் காரணம் காலையில் மல்லிகா கூறிய விசயமும் அதற்கு தன் அண்ணனிடம் ஏற்பட்ட கோபமும் தான் சிந்தனையைக் கலைத்து முதலில் சிபியே பேச்சை ஆரம்பித்தான்.

“ஏதோ ரெண்டு பேருக்குள்ள சின்ன சண்டை, சீக்கிரம் சரி பண்ணிடலாம்னு நாம ஒரு ப்ளான் போட்டு இங்கே வந்தா, இங்கே நமக்கேத் தெரியாம என்ன என்னவோ நடக்குதே ஷிவி. இதை எப்படி செட்டில் பண்றதுன்னே தெரியலையே. நாம நினைச்ச மாதிரி சின்ன விசயம் இல்லையோ, இதுல மீனா எங்கே வந்தாள். தலையே சுத்துது. என்ன பண்ணலாம் ஷிவி, உனக்கு என்ன தோணுது. என்றான்.

சிபியின் பேச்சைக் கேட்டு சிந்தனை கலைந்தவள் “நந்து நீ சொல்றது சரிதான். இது ரொம்ப நாளாகும் போல தீர… நாம ஏதோ ஈஸியா எடுத்துட்டோம். பட் எடுத்த காரியத்தை விடக் கூடாது. அவங்க ரெண்டு பேரையும் நாம சேர்த்து வைக்கிறோம் சரியா, இதுல எந்த மீனா வந்தாலும் நாம ஈஸியா தூக்கிப்போடுடலாம் என்ன கான்பிடன்ட் வேணும் நந்து” என்றவளுக்கும், அந்த வீட்டிற்குள் நுழைந்ததில் இருந்து பார்த்த மாற்றங்கள் மனதை அசைத்துப் பார்த்தன.

நிலாவைப் பார்த்துவிட்டுக் கீழே வந்த சரண் யாரிடமும் பேசாமல் வெளியே செல்ல எத்தனிக்க, அவனின் எண்ணம் புரிந்தார் போல மல்லிகாம்மா அவனைத் தடுத்தார். “தம்பி அதுக்குள்ள கிளம்பிட்டீங்க, வாங்க சாப்பிட்டு போகலாம்” என இல்லை மல்லிம்மா டைமாச்சு, ஆபீஸ்ல இருந்து போன் வந்துட்டே இருக்கு”. என்றான் அவரின் முகத்தைப் பார்க்காமலே.

“ஓ அப்படியா தம்பி, சரி ஒரு பத்து நிமிஷம் உங்ககிட்ட பேசனும் பேசினதும் கிளம்புங்களேன்” என்றவர் அவன் பேச இடம் கொடுக்காமலே மேலே பேசினார்.

“நேத்து அக்கா இங்கே வந்துருந்தாங்க, ஏற்காடு போறதே சொல்லுறதுக்காக”. என்று இடைவெளிவிட்டவர் “கூடவே அவங்க நாத்தனார் பொண்ணு அந்த மீனாவும் வந்துருச்சு. அது வந்து கொஞ்சம் தேனுவோட மனசு கஷ்டபடுரமாதிரி பேசிடுச்சு, அகிலாவும் எதுவுமே சொல்லல. பேசவிட்டு வேடிக்கைப் பார்க்குது.

புது மலர்கள் பூத்திடும் வேளை - மதுவதனி

இது உங்க குடும்ப விசயம்னு சொல்லலாம். ஆனா நீங்க மூணு பேரும் நான் தூக்கி வளர்த்தப் பிள்ளைங்க. நீங்க கஷ்டப்படுறதைப் பார்க்க என்னால் முடியாது. அதனாலதான் சொல்றேன். அந்தப் பொண்ணு பேச்சு அந்தளவுக்கு சரியில்லை. கீழ்த்தரமான வார்த்தைகள் எல்லாம் பயன்படுத்திட்டா, அதுலயே தேனுவோட மனசு எவ்வளவு வருத்தப்பட்டிருக்கும், இதில் இந்த அகிலா வேற ஒன்னுமே சொல்லாம வேடிக்கைப் பார்த்துட்டு இருக்கு, இதெல்லாம் சரியில்லைத் தம்பி".

"ஒரு புள்ளத்தாச்சி புள்ளைக்கிட்ட பேசுறோம்னு கூட யோசிக்கவா தோணாது. அக்கா மட்டும் இல்லைன்னா அவளை நாலு அறைவிட்டு அனுப்பி இருப்பேன். அகிலாவுக்காகத்தான் பொறுத்துக்கிட்டேன். இனிமேல் அவளை இங்கே கூட்டிட்டு வரவேண்டாம் என்று சொல்லிடுங்க, அதெல்லாம் என்ன ஜென்மமோ தெரியல.... ச்சே" என்று சரணிடம் முறையிட்டவர். அவனை நிமிர்ந்து பார்க்க அவன் முகம் கோபத்தில் இறுகிக்கிடந்தது. அங்கேயே இதைக் கேட்டுக் கொண்டிருந்த சிபியும் ஷானவியும் கோபத்தின் உச்சநிலையை அடைந்திருந்தனர்.

பின்னர் சரண் "இவ்வளவு நடந்துருக்கு, இதை நேத்தே ஏன் என்னிடம் சொல்லவில்லை, நேற்று மட்டும்தானா இல்லை இதற்கு முன்பும் இதுபோல் நடந்திருக்கிறதா" என்றான்.

"அதுவந்து தம்பி, அகிலா வரும்போதெல்லாம் அந்த மீனாப்பொண்ணும் கூட வரும். நான் கூட ஜாடை மாடையா அகிலாக்கிட்ட அவளை அழைச்சுட்டு வராதேன்னு சொல்லிபார்த்தேன் ஆனா அகிலா கேட்க மாட்டேங்குது. தேனுதான் இதெல்லாம் உங்ககிட்ட சொல்ல வேண்டாம் என்று சொன்னது. வீணா உங்க இரண்டு பேருக்கும் இடையே தேவையில்லாத மனக்கசப்புகள் வரும் என்று என்னைச் சொல்லவேண்டாம் என்று சொன்னது. நேத்து அவள் பேசியது கொஞ்சம் அதிகப்படி, குழந்தையையும் சேர்த்துப் பேசிட்டா, நைட் உடம்புக்கும் முடியாமல் போகவும் எனக்கு மனசுக் கேட்கல. அதான் உங்ககிட்ட சொல்லிட்டேன்" என்றவரின் கண்களில் லேசான நீர்ப்படலம்.

கேட்டுக் கொண்டிருந்த சரணின் மனம் கோபத்தில் வெடித்தது. மல்லிகாவைப் பார்த்து "இங்க பாருங்க மல்லிம்மா, இனிமேல் அக்கா வந்தால் கூட நீங்க உள்ளே விடவேண்டாம். அந்த மீனாவிடமும் நான் பேசிக் கொள்கிறேன். இனிமேல் எது நடந்தாலும் என்னிடம் மறக்காமல் சொல்லிவிடுங்கள். அவள் சொல்றான்னு என்று என்கிட்டே எதையும் மறைத்து விடாதீர்கள்.

அவள் பெரிய தியாகச் செம்மலாகவே இருக்கட்டும். நானோ நீங்களோ அப்படி இருக்கத் தேவையில்லை. உங்களை நம்பித்தான் அவளை இங்கே விட்டு நான் அங்கு இருக்கிறேன். நீங்களும் இப்படிச் செய்யலாமா? நான்தான் தினமும் உங்களிடம் பேசுகிறேனே? அப்போதும் கூட ஏன் என்னிடம் சொல்லவில்லை. முன்னமே சொல்லியிருந்தால் இந்தளவுக்குப் பிரச்சனை வராமலேத் தீர்த்திருக்க முடியும். சரி இனி அதைப்பற்றி பேசி என்னாகப் போகிறது. இனிமேலாவது எதையும் மறைக்காமல் கூறுங்கள் நான் இதுபற்றி வீட்டில் பேசுகிறேன்." என்றவன் இரண்டடி நடந்துவிட்டு மீண்டும் வந்தான்.

வந்தவன் மல்லிகாம்மாவின் கைகளைப் பற்றிக் கொண்டு "அவளுக்கு அந்த வீட்டில் ஆபத்துக்கள் அதிகம் என்பதால்தான். நான் இங்கு கொண்டு வந்து வைத்தேன். இது அவளுக்கும் தெரியும். ஆனால் அவளுக்கு அது பெரிய விசயமில்லை. என் வாழ்வில் இருந்து விலகுவதில் குறியாக இருக்கிறாள். எனக்கும் கோபம், அளவுகடந்த கோபம் இருக்கிறது அவள்மேல், ஆனால் அதையும் தாண்டின அவள் மேலான என் காதல் அந்தக் கோபத்தை விரட்டி விடுகிறது. எனக்கு என் மனைவியும் குழந்தையும் நல்ல முறையில் வேண்டும் மல்லிம்மா, அது உங்களால் மட்டுமே முடியும். அதனால் தான் உங்களை கூப்பிட்டு வந்தேன். எனக்கு உதவுவிர்கள் தானே"என்றான் சரண்.

"தம்பி இதென்ன பெரிய பேச்செல்லாம் பேசுறிங்க, தேனுவை நல்ல முறையில் பார்த்துக் கொள்வது என் கடமை. என் பேரனே பேத்தியோ அவர்கள் நலமுடன் உன் கையில் கிடைப்பார்கள், கவலைப்படாமல் இரு, உங்கள் இருவருக்குள்ளும் என்ன பிரச்சினை என்று எனக்குத் தெரியாது. ஆனால் பிரச்சனைக்குப் பயந்து ஓடி ஒழியக் கூடாது.

இனிமேல் இப்படி இங்கே வராமல் இருக்காதே. அடிக்கடி வந்து அவளின் நலம் விசாரி, அவளோடுப் பேசு அதுவே தேனுவின் மனநிலை மாற ஒரு வாய்ப்பாக அமையும். இது உன் வாழ்க்கை இதை நீயே வாழவேண்டும். அதுவே எங்கள் மூவரின் ஆசையும் கூட என்று சிபியையும் ஷானவியையும் தன்னுடன் இணைத்தார்.

சரணின் பேச்சைக் கேட்ட மற்ற இருவருமே ஒரு விதமான மகிழ்ச்சியிலும் வருத்தத்திலும் இருந்தனர். மகிழ்ச்சி தன் அண்ணியை வெறுத்தாலும் அவர் இல்லாமல் இருக்கமுடியாது அளவிற்கு காதலிக்கிறான் சரண் என்று ஆனால் வருத்தமோ தன் வீட்டில் தேனுவிற்கு ஆபத்து என்பதுதான்.

புது மலர்கள் பூத்திடும் வேளை - மதுவதனி

தங்கள் உடன் பிறந்தவளா இப்படியெல்லாம் நடந்து கொள்கிறாள் என்று கோபம் வந்தது சிபிக்கு சீக்கிரம் இதற்கெல்லாம் ஒரு முடிவுகட்ட வேண்டும் என்று உறுதிகொண்டனர் டாம் அன்ட் ஜெர்ரி.

மல்லிகாவிடம் பேசியதும் லேசான மனதுடனும், நிலாவை பார்த்துக் கொள்ளுமாறு நூறு தடவைக் கூறிக் கொண்டும் விடை பெற்றான் சரண். சரண் வெளியேறியதும் சிபியும் ஷானவியும் மல்லிகாவைப் பார்த்து வெற்றி என்பது போல் புன்னகைத்தனர். ஏனென்றால் மல்லிகாதான் இருவருக்கும் அழைப்பு விடுத்து இங்கே வரச் செய்திருந்தார். இது மற்றவர்களுக்கு தெரியாது. எப்படியாவது அவர்களின் பிரச்சனைகள் நீங்கி அவர்கள் இருவரும் ஒன்று சேர வேண்டும், அதற்கு உண்டான முயற்சியில் இறங்க வேண்டும் என்ற முடிவுக்கு வந்திருந்தனர் சிபியும் ஷானவியும்.

அதற்கு ஒரு தெளிவு வந்துவிட "ஏன் ஷவி நீ அண்ணிகிட்ட அவங்க பாமிலி பத்தி பேசிப்பாரேன், அண்ணியோட ஊர் தேனி தான, அந்த ஊரைபத்தி பேசினா, அப்படியே கொஞ்சம் கொஞ்சமா நம்மகிட்ட உண்மையைச் சொல்லவும் வாய்ப்பிருக்கு" என்றான் சிபி.

"ஆமாம் நந்து, நானும் அதைத்தான் யோசிச்சேன். அக்கா நல்ல வரைவாங்கதான. அதை வைத்தும் பேசிப்பார்க்கலாம். அப்புறம் அந்த ரவி அதான் அந்த பெயிண்ட் அடிப்பாரே அந்த அண்ணாகிட்டையும் பேசிப் பார்க்கணும், நமக்குத் தெரியாத சில பல விஷயங்கள் அவருக்குத் தெரியலாம். அது நமக்கு இந்த விஷயத்தில் உதவலாம்" எனவும்.

"அட ஆமாண்டி செல்லகுட்டி, எப்பப் பார்த்தாலும் வாய் அரைச்சுக்கிட்டே இருக்கே, இது எங்க யோசிக்கப் போகுதுனு நினைச்சேன் ஆனால் நீ பரவாயில்லை; இதே மாதிரி வாய்க்கு மட்டும் எப்போதும் வேலை கொடுக்காம மூளைக்கும் சேர்த்து வேலை கொடு, அப்போதான் உனக்கு மூளையும் இருக்கு என்று எனக்குத் தெரியும்" என வழக்கம் போல ஒரு போருக்குத் தன் முதலடியை எடுத்து வைத்தான் சிபி.

"டேய் என்ன கொழுப்பா, எனக்கு இருக்குற அளவுகூட உனக்கு இல்லை. அதான் நான் யோசிக்கிற அளவுக்கு கூட நீ யோசிக்கல, இதுல வந்துட்டாரு சாரு என்னை கிண்டல் பண்ண, போ....போய் நான் சொன்ன வேலையைப் பாரு,

புது மலர்கள் பூத்திடும் வேளை - மதுவதனி

போகும் போது அப்படியே மல்லிகிட்ட தேனக்காவுக்கு செஞ்ச சுண்டல் இருக்கும், அதை எடுத்துட்டு வரச்சொல்லு" என்று அசால்ட்டாக பதில் கொடுக்க இதெல்லாம் எங்கேத்திருந்தப் போகுது என்று பல்லைக்கடித்தபடி வீட்டின் உள்ளேச் சென்றான் சிபி.

இவர்களிடம் இருந்து விடைபெற்றுச் சென்ற சரணின் மனம் காரோடு தன் கடந்த காலத்தையும் சேர்த்தே பயணித்தது, சரணின் நண்பர்கள் மொத்தம் பதினான்கு பேர். அவர்கள் அடிக்கடி சந்தித்துக்கொள்ள முடிவதில்லை என்பதால் வருடத்திற்கு ஒருமுறை நான்கு நாட்கள் அவர்களுக்கே அவர்களுக்கு என்று ஒதுக்கப்படும். அதில் யாரும் எந்த காரணமும் கூறாமல் கலந்து கொள்ள வேண்டும். அது அவர்களின் ரூல். சரண் பூனே பல்கலைக்கழகத்தில் படித்தான். இந்தியாவின் டாப் டென் யுனிவெர்சிட்டி என்பதாலும் அனைத்து மாநிலத்தில் உள்ள மாணவர்களும் அங்கெ சேர்ந்து படித்ததாலும் சரணுக்கு ஓரளவிற்கு பல மாநிலங்களில் உள்ள மாணவர்கள் நண்பர்களாயினர்.

இவர்கள் அடிக்கடி சந்திக்க முடியாமல் போய்விடும் என்பதால் தான் இப்படி ஒரு ரூல் இவர்களுக்குள் அமலானது. நிலாவை முதன்முதலில் பார்த்த அடுத்த நாளேத் தன் நண்பன் ரவியுடன் டெல்லி சென்றான் சரண். எப்பொழுதும் போல் நான்கு நாட்களில் முடியாமல், நண்பர்களின் குழாமில் இருவர் வெளிநாட்டிற்குச் செல்வதாலும் அடுத்த இரண்டு ஆண்டுகள் அவர்கள் உடன் இருக்க மாட்டார்கள் என்பதாலும் அதிகப்படியாக மூன்று நாட்கள் டெல்லியில் முகாமிட வேண்டியிருந்தது சரணுக்கு.

ஒருவாரம் கழித்து திருச்சி திரும்பியவன் முதல் வேலையாக நிலாவின் கல்லூரிக்குச் சென்று விசாரித்தான். அந்தோ பரிதாபம் அவள் போன வார இறுதியில் தான் சான்றிதழைத் திரும்பப் பெற்றுக் கொண்டு கல்லூரியில் இருந்து நின்று விட்டதாக அறிவித்தனர். எத்தனையோ கெஞ்சலுக்கு பிறகும் கூட அவளைப் பற்றிய தகவல்களை தர மறுத்தது கல்லூரி நிர்வாகம். அதில் மனம் ஒடிந்தவன் மீண்டும் அந்த ஆர்ட் கேலரியில் உள்ளே வருபவர்களுக்கான தகவல் நோட்டில் அவளின் வீட்டு முகவரி கிடைத்து தேடிபோனவனுக்கு அங்கும் ஏமாற்றமே கிடைத்தது. அவர்கள் வீட்டையும் காலிசெய்து, அவளின் அம்மா வேலையையும் விட்டு தன் சொந்த ஊருக்கு போய்விட்டதாக அங்கிருந்தவர்கள் கூறி மேலும் அவனை சோர்வடையச் செய்தனர்.

புது மலர்கள் பூத்திடும் வேளை - மதுவதனி

# புது மலர்கள் பூத்திடும் வேளை…!

இப்படியே இரண்டு ஆண்டுகளாக நிலாவைத் தேடித்தேடி களைத்துப் போனான் சரண். முதலில் இதைப்பற்றி பேசிய ரவி நண்பனின் காதலில் உள்ள ஆழத்தைப் பார்த்து வாய்மூடிக் கொண்டான். எப்போதும் மகிழ்ச்சியுடன் வலம் வரும் அண்ணனின் இந்த சோகம் இளையவர்கள் இருவரையும் அவனைப்பற்றி ரவியிடம் விசாரிக்கச் செய்தது. ரவியின் மூலம் செய்தியரிந்தவர்கள் தனது அண்ணனுக்கு உதவ வேண்டும் என்று முன்வந்தனர். அதன் பொருட்டு வார இறுதியில் வீட்டில் ஏதேனும் காரணம் சொல்லி மூவரும் நிலாவைத் தேட ஆரம்பித்தனர்.

**இவர்களின் தேடல் முழுமை பெறுமா….? பொறுத்திருந்து பார்ப்போம்…………**

**வேளை தொடரும்….**

புதுமலர்கள் பூத்திடும் வேளை - மதுவதனி

# புது மலர்கள் பூத்திடும் வேளை…!



**வேளை - 09**

**************************************************************************************************
**பேசாம இருந்தாலும்,**
**மனசோட மனசாக,**
**பேசிய ஒரு காலம்,**
**தூரத்தில் இருந்தாலும்,**

**தொடர்ந்து உன் அருகிலே,**
**குலவிய ஒரு காலம்,**
**இன்று நானும் ஓரத்தில்,**
**இன்று நானும் ஓரத்தில்,**

**ஏன் மனது தூரத்தில்,**
**வீதியில் இசைத்தாலும்,**
**வீணைக்கு இசை உண்டு,**
**வீணாகி போகாது,**

**கேட்கின்ற நெஞ்சுண்டு**
**மெய்ய குரல் பாடுது,**
**வீணையோடு…**
**************************************************************************************************

புது மலர்கள் பூத்திடும் வேளை

# புது மலர்கள் பூத்திடும் வேளை…!

சரணின் தேடுதலும் ஒரு முடிவுக்கு வந்தது. தன் ஆபீஸ் விசயமாக குற்றாலம் வந்தவன், வந்த வேலை முடியாமல் இழுத்தடித்தது. அறையிலையே அடைந்துக் கிடப்பது அவனுக்கு போரடிக்க, அங்கிருந்த அருவிக்கும், கோயிலுக்கும் சென்று வரலாம் என்று கிளம்பியவன். அருவியில் நனைந்தவன் கோவிலை நோக்கி நகர, அருவியை ஒட்டியே மூலிகை மருத்துவம் பார்க்கும் இடங்களும் அங்கு இருக்க அதில் பார்வையை ஒட்டியபடியே நடந்தவனின் கால்கள் ஓரிடத்தில் நிலை பெற்றன.

கண்கள் வியப்பிலும் மகிழ்ச்சியிலும் விரிந்தது. உலகத்தில் உள்ள ஒட்டுமொத்த மகிழ்ச்சியும் அவனுக்கே என்றானது போல் ஒரு சந்தோச ஆர்ப்பரிப்பு அவனுள் கிட்டத்தட்ட இரண்டரை ஆண்டுகள் கழித்து அவனின் தேவதையை தரிசிக்கிறான். எங்கே இமைக்க மறந்தாலும் தன் கண்ணைவிட்டு மறைந்து விடுவாளோ என்ற பயம் அவனை இமைக்காமல் பார்க்க வைத்தது. இந்த முறை அவளைப் பற்றிய அனைத்து விவரங்களும் தெரியாமல் போகக்கூடாது என்ற முடிவுடன் அவளையே தொடர்ந்தான். ஒரு பெண்மணியை அழைத்துக்கொண்டு சென்றவளேயேப் பார்த்தவன் அவர்கள் வெளியேறிய பின் அந்தக் குடியின் உள்ளே சென்றான் சரண்.

உள்ளே நுழைந்தவனை கேள்வியாய் நோக்கினார் அங்கிருந்த பெரியவர். அவரைப் பார்த்து வணங்கியவன் “ஐயா வணக்கம் என் பெயர் அபிசரண். நான் சென்னையில் இருந்து வரேன். இங்க ஒரு அம்மாவும் பொண்ணும் சிகிச்சை முடிச்சு போனாங்க இல்லையா, அவங்களைப் பத்தி விவரம் தெரியனும். நான் இவர்களை இரண்டு வருடமாக தேடிக்கொண்டிருக்கிறேன். நீங்கள் எனக்கு தயவு செய்து உதவி செய்யனும்” என்றவன் அவளைத் தான் பார்த்தது முதல் கடைசியாக அவனின் தேடுதல் வரைக் கூறினான்.

சிறிது நேரம் அதைக் கேட்டு அமைதியான அந்தப் பெரியவர். “நீங்க சொல்றது எல்லாம் நான் நம்புகிறேன். ஏனென்றால் உங்க செய்கையில் ஒரு உண்மை தெரிந்தது. இங்கு வேலை பார்ப்பவர்களிடம் சில நூறுகளைக் கொடுத்திருந்தால் அவர்களே உங்களிடம் எல்லாவற்றையும் சொல்லியிருப்பார்கள். ஆனால் அதைச் செய்யாமல் நேராக என்னிடம் வந்து கேட்ட உன்னுடைய நேர்மை எனக்கு மிகவும் பிடித்தது. அதனால் உன்னிடம் அவர்களைப் பற்றிக் கூறலாம் என்ற நம்பிக்கையும் பிறந்து விட்டது என்றவரைப் பார்த்து புன்னகை புரிந்தான் சரண்.

புது மலர்கள் பூத்திடும் வேளை - மதுவதனி

அவனின் மனம் லேசான புன்னகையைப் பார்த்தவர் மீண்டும் தொடர்ந்தார். "தம்பீ அந்தம்மா பேரு விஜயா, அவங்களுக்கு பக்கவாதம் வந்துருக்கு சரியாய் சொல்ல போனால் ஒரு இரண்டு வருசம் ஆச்சு, இப்போதான் கொஞ்சம் நடக்க ஆரம்பிச்சுருக்காங்க. இன்னும் இரண்டு மாத சிகிச்சை பாக்கி இருக்கு. அது முடிந்ததும் அனுப்பிடுவோம். அப்புறம் அவங்க தேனியில் இருக்க ஒரு அறக்கட்டளையின் மூலமாதான் வந்தாங்க. அந்த அறக்கட்டளையின் செயலாளர்க்கு இவங்க தெரிஞ்சவங்களாம். அவர் தான் இங்க அனுப்பி வைச்சார். நீங்க அவரையும் பார்த்துப் பேசுங்க எல்லாமே நல்லதாவே நடக்கும்" என்றார்.

அவருக்கு நன்றி கூறியவன், அவரின் விலாசமும் வாங்கியவன் மீண்டும் தயங்கிய படியே "நான் அவர்களிடம் பேசட்டுமா" எனக் கேட்க, "இப்போதைக்கு அதெல்லாம் வேண்டாம் தம்பி, நீங்க அவரைப் போய் பார்த்து பேசுங்க, அப்போதான் உங்களுக்கு நான் ஏன் அப்படி சொன்னேன்னு புரியும்" என்றார் புன்னகையாகவே.

சரணும் அதை ஏற்றுக் கொண்டு தன் வேலையை முடித்துக்கொண்டு தேனி நோக்கிப் பயணித்தான் இடையில் அவனின் தம்பிக்கும் மற்றும் ரவிக்கும் அழைத்து விபரம் சொன்னான். ரவியும் தேனியில் தான் இருப்பதாகவும் தானும் அவனுடன் வருவதாகவும் கூற, அதுவும் நல்லதுதான் என்று கூறி மீதி பயணத்தை தொடர்ந்தான். மாலை நான்கு மணியளவில் தேனியை வந்தடைந்த சரண் ஒரு ஹோட்டலில் அறையை எடுத்து தங்கி ரவிக்காகக் காத்திருந்தான்.

பிறகு அந்த ஆசிரம தலைவருக்கு போன் செய்து நாளைக் காலையில் வருவதாகக் கூறிவிட்டு சிபிக்கும் ஷானவிக்கும் அழைத்து நடந்த விஷயங்களைத் தெரிவித்தான். அவர்களும் தேனைப் பற்றிய முழுவிவரங்களையும் சேகரித்துவிட்டு வருமாறு கூறினர். சரி என்று போனை வைத்தவன் நிலாவின் தோற்றத்தை கண்முன் கொண்டு வந்தான் இரண்டரை ஆண்டுகளுக்கு முன்பு பார்த்த போதும் அவளின் முகம் சிறு சோகத்தோடு கூடிய அமைதியான அழகாக காட்சியளித்தது

ஆனால் இன்று அந்த முகத்தில் எதையுமே பார்க்க முடியவில்லை. முற்றிலும் வெறுமையாக உணர்வுகளைத் தொலைத்து காணப்பட்டது. அந்த நிலா முகத்துக்கு என்ன பிரச்சனை வந்திருக்கும் எதனால் இப்படி கஷ்டப்படுகிறாள். எப்படி இருந்தாலும் அவளை விட முடியாது. அவள் தனக்கே உரிமையானவள் என்ற எண்ணம் சரணின் மனதை ஆக்கிரமித்தது.

# புது மலர்கள் பூத்திடும் வேளை…!

அலைபேசியின் ஓசையில் நிகழ்வுக்கு வந்தவன் போனை எடுத்துக்காதுக்கு கொடுத்தான். ரவிதான் வெளியே நிற்பதாகவும் அறையைத் திறக்குமாறும் கூற, கதவைத் திறந்தான் சரண்.

உள்ளே வந்த ரவி" என்ன மச்சான் எவ்வளவு நேரம் காலிங் பெல் அடிக்கிறேன் என்ன பண்ண, அதுக்கப்புறம் தான் கால் பண்ணேன்,

இன்னும் போய் பேசவே இல்ல. அதுக்குள்ள உனக்கு ட்ரீமஸா, முதல்ல உன்னை அந்தப் பொண்ணுக்குத் தெரியுதானு பார்க்கலாம் என்று சரணின் மனநிலைத் தெரியாமல் கிண்டல் செய்தான். தன் கிண்டலில் கலந்து கொள்ளாமல் அமைதியாக இருந்த நண்பனை பார்த்த ரவி "சரண் எதுக்கு இப்படி அமைதியா இருக்கடா.., எதுவா இருந்தாலும் பார்த்துக்கலாம், நீ தேவையில்லாம கண்டதையும் யோசிக்காத, எல்லாமே நல்லதா நடக்கும். நீ மனசப் போட்டுக் குழப்பிக்காத"

"இல்லை ரவி எனக்கு இதுல துளி கூட நம்பிக்கை இல்லை. அந்தப் பெரியவர் சொல்றதைப் பார்க்கும் போது அவளுக்கு என்னை நினைக்கக் கூட நேரம் இருந்திருக்க வாய்ப்பே இல்லை. அதோட அவளுக்குத் திருமணம் பந்தத்திலும் ஆசையில்லை. அவளோட அம்மாவுக்கு அவளைத் தவிர வேறு யாருமே இல்லை. அதனால் அவளின் சம்மதம் கிடைக்க வாய்ப்பே இல்லை. இதை வேறுவழியில் தான் செயல்படுத்த வேண்டும்" என்று அதுவரைத் தான் யோசித்ததைத் தன் நண்பனுக்குத் தெரிவித்தான் சரண்.

"ம்ம் நீ சொல்றதும் சரிதான். அதைசமயம் நாமளும் நெகட்டிவ்வா திங்க் பண்ண வேண்டாம், விடு நல்லதே யோசிப்போம், நல்லதே நடக்கும் என்றான் ரவி.

**இவர்களின் யோசனைக்கு செவி சாய்ப்பாளா நிலா…?**

**வேளை தொடரும்….**

புதுமலர்கள் பூத்திடும் வேளை மதுவதனி



## வேளை - 10

*****************************************************************************************

ஆறாத ஆசைகள் தோன்றும் என்னை தூண்டும்
ஆனாலும் வாய் பேச அஞ்சும் இந்த நெஞ்சம்
அவள் பேரை நாளும் அசை போடும் உள்ளம்
அவள் போகும் பாதை நிழல் போல செல்லும்

மௌனம் பாதி மோகம் பாதி
என்னை கொல்லும் எந்நாளும்
பொட்டு வைத்த ஒரு வட்ட நிலா - குளிர்
புன்னகையில் என்னை தொட்ட நிலா
என் மனதில் அம்பு விட்ட நிலா - இது
எட்ட நின்று என்னை சுட்ட நிலா

வாழ் நாள் தோறும் தினம் தான் காதோரம்
பாடல் கூறும்

*****************************************************************************************

# புது மலர்கள் பூத்திடும் வேளை…!

நண்பனின் பேச்சில் சிறு சமாதானம் ஆனவன், இரவு உணவுக்கு கூறிவிட்டு ரவியின் குடும்பத்தைப் பற்றி விசாரிக்க ஆரம்பித்தான். "அப்புறம் சொல்லு மச்சி, எப்படி போகுது கல்யாண வாழ்க்கை ஆரா எப்படி இருக்கா, இன்னும் எத்தனை நாள் இங்கே இருப்பீங்க".

நண்பனின் பேச்சில் சிரித்தவன், "காதலிப்பதும் காதலிக்கப்படுவதும் ஒரு சுகம்தான் மச்சன், நல்லா போகுது லைப், ஆரா நல்லா இருக்கா, என்ன அத்தையும் மாமாவும் விட்டுவிட்டு அவ்வளவு தூரம் போறோம்னு தான் வருத்தப்படுறா, ஆனா அது சொல்ல முடியல. இன்னும் இரண்டு மாதத்தில் கிளம்புவோம் என்றான் ரவி.

இருவரும் அமைதியாக அடுத்த நாளைப் பற்றி கவலையுடன் இரவு உணவை முடித்தனர். எதுவும் பேசத் தோன்றாமல் அமைதியாகிவிட்டான் சரண். அவன் மனதில் மிகப் பெரிய பிரளயமே நடந்து கொண்டிருந்தது. தான் செய்வது ஒரு தடவை கிட்டதட்ட இரண்டு மணி நேரங்கள் மட்டுமேப் பார்த்த ஒரு பெண்ணின் மேல் இந்தளவிற்குத் தான் பைத்தியமாகி விட்டோமா? தன் சுயத்தை தொலைத்து ஒரு பெண்ணைத் தேடி அலைந்து கொண்டிருக்கிறோம் என்பதை அவனுக்கு ஒரு குற்ற உணர்ச்சியைக் கொடுத்தது. ஆனாலும் அவன் மனதில் முதன்முதலாக ஒரு சலனத்தை ஏற்படுத்தி அது காதலாக மாற்றம் செய்தது நிலாவின் முகம் தான். கண்ணை இமைக்கக் கூட மறந்து பார்க்க வைக்கும் அழகு. அவளின் அந்த நீண்ட கூந்தலில் அவன் பலமுறை விளையாடி இருக்கிறான் கனவில் அவள் அவனை பார்த்து முதன் முறையாக சிநேக பார்வைப் பார்த்தது இன்றும் அழியாத கல்வெட்டாய் அவன் மனதில் பதிந்துள்ளது. இப்படி எல்லையில்லா எதிர்பார்ப்புகளை அவனுள் விதைத்தது அவள் மட்டுமே, அவளின் சூழ்நிலை என்னவாக இருந்தாலும் அதை அவனுக்கு ஏதுவாக மாற்றி அவளை கைப்பிடித்திட வேண்டும் என்பதில் உறுதியாக இருந்தான் சரண். நண்பனின் முகத்தில் தெரிந்த குழப்ப ரேகைகளைக் கண்டு அவனாகவே தெளியட்டும் அதுதான் அவனுக்கும் நல்லது. நாமும் சேர்த்து குழப்ப வேண்டாம் என்றமுடிவுடன் ரவி உறங்க ஆரம்பித்தான்.

நிலவு மகள் தன் வேலையை முடித்து ஆதவனுக்கு வழிவிட்டுச் செல்ல அழகான காலைப்பொழுது உதயமானது. இரவு சரியான உறக்கம் இல்லாத சரண் ஆழ்ந்த உறக்கத்தில் இருக்க, ரவி எழுந்து காலைக் கடனை முடித்து தன் சித்தப்பாவிற்கு கால் செய்தான். ஏதோ அவரும் வந்தால் நன்றாக இருக்கும் என்பது அவன் எண்ணம்,

புது மலர்கள் பூத்திடும் வேளை - மதுவதனி

அழைப்பு எடுக்கப்பட, “ஹலோ சித்தப்பா நான் ரவி பேசுறேன். இங்க தேனியில தான் இருக்கேன். நீங்க எங்க இருக்கீங்க” மறுமுனையில் அவர் பேசி ஏதோதிட்ட இவனும் சிரித்துக்கொண்டே அந்த ஆசிரம முகவரியைத் கொடுத்து வரச் சொன்னான், அவரும் திட்டிக்கொண்டே வருவதாகக் கூறினார். இவர்களின் பேச்சு சத்தத்தில் விழித்துக் கொண்ட சரண் மணியைப் பார்க்க அது ஏழு என்று காட்டியது. அதன்பிறகு அவசரமாக கிளம்பி காலை உணவை முடித்து 8.30க்கு அந்த ஆசிரமத்திற்கு சென்றனர்.

இவர்களுக்கு முன்னாடியே ரவியின் சித்தப்பா சிவநாதன் வந்து விட, மூவரும் சேர்ந்து உள்ளே சென்று அந்த ஆசிரம தலைவரைச் சந்தித்தனர். சரண் தன்னை அறிமுகப்படுத்திவிட்டு அவன் வந்த காரணத்தைக் கூறவும், பொறுமையாகக் கேட்டவர் “ஒரு அரை மணி நேரம் பொறுத்துக்கொள்ளுங்கள், நானே உங்களிடம் நிறைய பேச வேண்டும்” என்று உள் அறைக்குச் சென்றார். மூவரும்

ஒருவருக்கொருவர் முகத்தைப் பார்த்துக்கொண்டு அமர்ந்திருந்தனர். அப்போது ஒரு பெண் அவர்களைக் கடந்து உள்ளே செல்வதைப் பார்த்து யாரிது? என யோசிக்க சரண் மட்டும் அது அவனின் நிலாதான் என்றான் உறுதியாக எப்படி என்றவர்களுக்கு அவளின் நீண்ட கூந்தலைப் பற்றிக் கூறி அது கண்டிப்பாக நிலாதான் என்றான். ஆனால் குற்றாலத்தில் இருந்தவள் இங்கே எப்படி என்ற யோசனையில் இருந்தான்.

யோசனையில் இருந்தவனை உள்ளே அழைத்தார் அந்த ஆசிரமதலைவர்.

உள்ளே நுழைந்த மூவரையும் வரவேற்றவர், சிவநாதனைப் பற்றி தெரிந்து அவரிடம் ஆசிரம வளர்ச்சிப் பற்றியும், கல்வியை மேம்படுத்துவதற்கான வழிகளையும் கேட்டுக் கொண்டிருந்தார். அந்த ஆசிரம தலைவர் காசிராமன். ரவி அங்கிருந்த படங்களையும், அறையையும் நோட்டம்விட்டுக் கொண்டிருக்க, சரணின் நிலைதான் பரிதாபம். அவன் உள்ளே நுழைந்ததில் இருந்து நிலாவைத் தான் தேடிக்கொண்டிருந்தான். இப்போது தானே வந்தாள். அதற்குள் எங்கே சென்றாள் என்று அவனின் மனம் அவனிடமே வம்பு செய்து கொண்டிருந்தது.

அப்போது காசிராமன் அறையின் உள்ளே சற்று எட்டிப் பார்த்து “தேனும்மா மூணு காபி போட்டு கொண்டு வாடா” என்றார். அதைக் கேட்டதும் சரணின் முகம் 1000 வாட்ட்ஸ் பல்ப் போட்டது போல் பிரகாசமடைய,

புது மலர்கள் பூத்திடும் வேளை - மதுவதனி

அவனைப் பார்த்து ரவி கிண்டலாய் சிரித்துக் கொண்டிருந்தான். “மாமா மூணுமே சுகர் போட்டுத்தான்னா இல்ல வித்தவுட் சுகர் ஏதாச்சும் இருக்கா” என்றாள். அவர் சிரித்துக்கொண்டே சிவநாதனைப் பார்க்க, அவரோ “நான் வித்தவுட் சுகர்தான்” என்றார் பதிலுக்கு புன்னகைத்தப்படி.

ரவி “ஏன் இப்படி கேட்கிறாங்க” என “அது ஒன்னும் இல்லத் தம்பி, அதிகம் இங்கே வயசானவங்கதான் வர்றாங்க, அப்படி ஒருத்தர் வந்துருக்கும்போது, தெரியாம சுகர் போட்ட காபி கொடுத்து கொஞ்சம் சிரமம் ஆகிடுச்சு. அதுல இருந்து நாங்க கவனமா இருந்துக்கிறது, முக்கியமா தேனு நான் மறந்தாலும் அவள் மறக்கமாட்டா. அதோட இங்கே சுகருக்கு பதிலா சுகர் ப்ரி மாத்திரைதான் போட்டுக் கொடுக்கிறோம் எல்லாத்துக்கும் என்றார் காசிராமன்.

“ம்ம் ரொம்ப நல்ல விசயம், இதையே கண்டின்யூ பண்ணுங்க மிஸ்டர் ராமன். என் வீட்டிலையும் ஸ்வீட்டுக்கு கூட இந்த சுகர்ப்ரி தான் யூஸ் பண்றாங்க டயபடிக்ஸ் பேசன்ட்டுக்கு நல்லது” என அவர்களின் உரையாடல் சர்க்கரை நோயாளிகளை நோக்கி பயணிக்க, ரவிக்கு அலைபேசியில் தகவல் வந்து அதை எடுத்துக்கொண்டு அவன் வெளியே நகர, பாவம் சரண் தான் உள்ளறையையே எட்டி எட்டிப் பார்த்துக்கொண்டிருந்தான் அவனின் காதல் தேவதையின் தரிசனத்திற்காக.

நீண்ட நெடிய பொழுதுகளாக பத்து நிமிடங்கள் கரைந்தன சரணுக்கு. அவனின் தேடலும் முடிவுக்கு வந்ததைப்போல் காத்திருப்பும் முடிவுக்கு வந்தது. காபி கோப்பைகளுடன் வந்தவளை இங்குமங்கும் பார்வையை அகற்றாமலே அவளையே பார்த்துக் கொண்டிருந்தான் சரண். அவளோ நேராக காசிராமனிடமும் சிவநாதனிடமும் சென்று காபியைக் கொடுத்தாள். அதன் பிறகே சிவனாதனைத் தெரிந்து அவள் தன் பள்ளித்தலைமையாசிரியர் என்ற முறையில் மரியாதை நிமித்தமாக பேச ஆரம்பித்தாள்.

“வணக்கம் சார், எப்படி இருக்கீங்க, இங்க உங்களைப் பார்ப்பேனு நினைக்கவே இல்லை, நல்லா இருக்கீங்களா”? - தேனு

புதுமலர்கள் பூத்திடும் வேளை - மதுவதனி

“வாம்மா தேன் நிலா, நான் நல்லா இருக்கேன் நீ எப்படி இருக்கே, நானும்தான் எதிர்பார்க்கல உன்னை, நீ இங்கே என்ன பண்ற, படிப்பெல்லாம் முடிஞ்சிறுக்குமே, இப்போ என்ன பண்றே”. என்றார்

அவளும் ஆர்வமுடன் “ம்ம் B.Sc fine arts முடிச்சிட்டேன் சார், இங்கதான் வேலை பார்க்குறேன்”. என்றதோடு தன் உரையை முடிக்க, அவரும் அவளுக்கு மேலே சொல்ல விருப்பமில்லை என்பதை தெரிந்து கொண்டு காசிராமனிடம் திரும்பினார். காசிராமன் நிலாவே நோக்கி “அவர்களுக்கும் கொடுமா” என்றார்.

நிலாவும் தலையை அசைத்துவிட்டு மற்றவர்களை நோக்கி நடந்தாள். அப்போது அங்கிருந்த சோபாவில் சரண் மட்டுமே அமர்ந்திருக்க சிறிது தயங்கி முன்னேறினாள். அப்போது சரண் அவளை ரசனையான பார்வை கொண்டு வருடிக் கொண்டிருந்தான் அவனின் பார்வையில் மலர்ந்த விழிகளை ஒரு நொடியில் இயல்பாக்கி அவனை நோக்கி சென்றாள்.

அப்போது ரவியும் வந்துவிட இருவருக்கும் காபியைக் கொடுத்தவளிடம், ரவி “ஹாய் சிஸ்டர் எப்படி இருக்கீங்க, எங்களைத் தெரியுதா? என்றான்.

“ஹாய் சார்”, என்றவள் திணறிக் கொண்டே தெரிகிறது என்பது போல் தலையசைத்தாள் மறந்தும் சரணை நோக்கவில்லை.

ரவி மீண்டும் சிரித்து கொண்டே “இங்கே என்ன பண்றிங்க. எப்போ வந்திங்க, ஸ்டடீஸ்லாம் எப்படி போகுது என,

அவளோ “ம்ம் நல்லா போகுது சார், இங்கேதான் நான் ஓர்கு பண்றேன். காசி மாமாவும் அப்பாவும் நண்பர்கள், என்றாள் கூடுதல் தகவலாக. “நீங்க இங்கே என்ன பண்றிங்க சார்” உங்களோட வொர்க் எப்படி போகுது, உங்க wife எப்படி இருக்காங்க”

“வாவ் சிஸ்டர் என்னோட மேரேஜ் பத்திலாம் தெரியும்மா? வெரிகுட். எப்படி தெரியும்”

புது மலர்கள் பூத்திடும் வேளை - மதுவதனி

# புது மலர்கள் பூத்திடும் வேளை…!

“என்ன சார், இப்படி சொல்றிங்க, நீங்க ஒரு செலப்ரிட்டி, உங்களுக்கோ, உங்களச்சுற்றியோ எது நடந்தாலும் நியூஸ்பேப்பர்ல முதல் பக்கத்துல போட்டுவங்களே அப்புறம் எப்படி எனக்குத் தெரியாமா போகும்” என்றவளைப் பார்த்தவன் அசடு வழிய சிரித்தான்.

நண்பனின் அசடில் வாய் விட்டுச் சிரித்த சரண் “உனக்கு இந்த பல்பு தேவையா? என்பது போல் பார்த்து வைத்தான். நண்பனின் பார்வையை புரிந்து தூசி தட்டுவது போல் விட்டவன் நிலாவிடம் மீண்டும் பேச்சை ஆரம்பித்தான். “ஏன் சிஸ்டர் உங்க ட்ராயிங்லாம் எந்தளவுல இருக்கு,நான் சொன்னதுக்கப்புறம் மறுபடியும் யோசிச்சிங்களா.”

“இல்ல சார் அது வந்து” என்றவளிடம் “என்ன சிஸ்டர், நான் எவ்வளவு அழகா சிஸ்டர்னு கூப்பிடுறேன், நீங்க என்னமோ சாரு மோருனு கிண்டல் பண்றீங்க”

“ஐயோ கிண்டல் எல்லாம் இல்ல சார், நீங்க பெரிய ஆளு அதான் சார்னு மரியாதையா கூப்பிடுறேன் தப்பா எடுத்துகாதீங்க”

“ஓகே ஓகே நான் உன்ன மன்னிச்சுட்டேன் தேனு. நீ நினைக்கிற மாதிரி அவளோ பெரிய ஆளும் கிடையாது அதனால் நீ என்ன அண்ணானே கூப்பிடு சரியா” என்று பன்மையில் இருந்து ஒருமையில் மாற்றினான்.

மேலும் “ம்ம் நல்ல இருக்காங்க தேனு. பேர் தெரியும்தான ஆதிரா, இப்போதான் ப்ரெக்ணன்டா இருக்கா, போர் மந்திஸ் ஆச்சு, மலேசியாக்குப் போய்ட்டோம். அவளுக்கு அங்கதான் ஒரு புராஜக்ட் சைன் ஆகிருக்கு. அது அவளோட கனவு வேற அதான் அங்க போய்ட்டோம், என்னோட பேரன்ட்ஸ் எங்க கூடதான் இருக்காங்க. அதனால நோ டென்ஷன், நோ ஸ்ட்ரெஸ் வெரி ஹாப்பி என்றவன்.

அவளின் முகத்தில் இன்னும் ஏதோ கேட்கத் தோன்றுவதுபோல் இருக்க, "என்ன தேனு இன்னும் என்ன தெரியனும்?” என்ற அவனின் பேச்சில் சிறிது அதிர்ந்தாலும் “ அது ஒன்னும் இல்லை அண்ணா. அப்போ உங்களோட ஒர்க், உங்க பவுண்டேசன் இதெல்லாம் யார் பார்த்துப்பா.” என்றாள்.

அப்போது தன் அருகில் இருக்கும் சரணின் தோளில் கையைப் போட்டு அணைத்தவன். “அதெல்லாம் சரண் தான் பார்த்துக்கிறான். நான் சும்மா டம்மி பீஸ்,இவன்தான் இப்போ புல் அன் புல் மெய்ண்டைன் பண்றான். நான் வெட்டி ஆகிட்டேன்” என்றான் ரவி.

அதுவரை இருவரின் பேச்சிலும் தலையிடாமல் தன் மனதழகியின் சிரிப்பையும்,இவ்வளவு அருகில் நின்றிருந்தவளின் புற அழகையும் ரசித்துக் கொண்டிருந்தவன் நண்பனின் பேச்சில் நனவுக்கு வந்து அவனின் வயிற்றில் லேசாக குத்தி “ஏன்டா பாவமாச்சே கொஞ்ச நாள் காதல் மனைவியோட சந்தோசமா இருக்கட்டுமேனு நினைச்சு உன்ன விட்டதுக்கு இப்படித்தான் சொல்லுவியா. ஆனாலும் உண்மையை சொல்ற பாத்தியா டம்மி பீஸ்சுனு, நீ உண்மை விளம்பிதான் மச்சி, நண்பேண்டா” என்றான் நிலாவைப் பார்த்தபடி.

“அவனின் பேச்சுத் தொடக்கத்திலேயே அவள் மனம் படபடக்கத் தொடங்க, முடியும் பொழுது இவன் இப்படியெல்லாம் பேசுவானா என்று யோசிக்க ஆரம்பித்தாள் மறந்தும் அவனை நிமிர்ந்து பார்க்கவில்லை. ஆனால் பச்சரிசி பல் தெரிய அழகாகச் சிரித்தாள். அவர்களின் மூவரின் சிரிப்பையும், வார்த்தையாடலையும் கேட்ட பெரியவர்கள் அங்குவர, நிலா விடைபெறுவதாக தலையசைத்தாள்.

அப்போது காசிராமன் நிலாவைப் பார்த்து “தேனும்மா டுடே லஞ்சுக்கு இவங்க மூணு பேரும் இருக்காங்க. அதனால் சமையல் காரம்மாக்கிட்ட சொல்லிடு, நாங்க அப்படியே குருபவனம் வரைப்போயிட்டு வரோம். லஞ்சு ரெடியானதும் கால் பண்ணு என்றார்.

இதையெல்லாம் கேட்ட நிலா ஒரு நிமிடம் அதிர்ந்து நிமிர்ந்தாள் பிறகென்ன நினைத்தாளோ “சரி மாமா” என்றுவிட்டு உள்ளே சென்றாள். அவளின் முகபாவங்களை வைத்தே அவளின் நிலை புரிந்து ஏதோ பெரிய பிரச்சினைதான் போல என்று நினைத்தான் சரண். பிறகு அவர்களோடு சேர்ந்து வெளியேறினான்.

ஆசிரமத்தை ஒட்டியே மிகவும் அழகான மாடித்தோட்டத்துடன் கூடிய வீடு நான்கு படுக்கையறைகளைக் கொண்டு முற்றிலும் மூங்கில் மரங்களினால் வேலைப்பாடுகள் செய்து, சுற்றிலும் காய்கரித் தோட்டமும், மரங்களும் என பார்க்கவே ரம்மியமாக இருந்தது.

வீட்டின் முற்றத்திலே ஒரு பக்கம் சீர் பச்சிலை, கரிசலாங்கன்னி, துளசி, கற்பூரவள்ளி என மூலிகைச் செடிகளும் மற்றொரு பக்கம் அழகான மல்லிகைப் பந்தலும் கொடி போல் படரும் கொடி ரோஜா பந்தலும் என அத்தனை அழகுடன் இருந்தது அந்த வீடு பார்க்கும்போதே கண்ணை கவரும் வண்ணம் இருந்த அந்த வீட்டை கேள்வியாக நோக்கியபடியே முன்னேறினர் ரவியும் சரணும்.

காசிராமன் அந்த வீட்டைத் திறந்து அவர்களை உள்ளே அழைத்தார். அந்த வீட்டின் கதவைத் திறந்ததும் அழகான ஒரு போட்டோ கண்ணில்பட்டது. ஒரு வயதான பாட்டியும் தாத்தாவும் சோபாவில் அமர்ந்திருக்க அவர்களின் காலடியில் நடுத்தர வயதில் ஒரு ஆணும் பெண்ணும் உட்கார்ந்திருந்தனர். ஒருபக்கம் சோபாவின் கைப்பிடிச் சுவரில் ஒரு பதினைந்து வயது மதிக்கத்தக்க பெண்ணும், பனிரெண்டு வயதில் ஒரு பெண் சோபாவிற்கு பின்னே இருந்து அந்த வயதானவர்களை அணைத்தவாறும் இருந்தது அந்த படம். அவர்களின் வாழ்வில் துன்பம் என்பதை கண்டதே இல்லை என்பதுபோல் அத்தனை மகிழ்ச்சி அவர்கள் முகத்தில். பார்ப்பவர்களுக்கு ஒரு பொறாமை உணர்வைக் கூட தூண்டக் கூடியது அப்படம்.

நால்வரும் அந்த போட்டோவையை பார்த்துக்கொண்டிருக்க நிலைமையை உணர்ந்து அமைதியைக் கலைத்தவர் காசிராமன் தான். “மிஸ்டர். சரண் இதுதான் தேன்நிலாவோட அழகான குடும்பம். அவங்க தாத்தா, பாட்டி, அம்மா, அப்பா, அக்கா”என்றவர் “தம்பி உங்களுக்கு தேனைப் பற்றி எந்தளவுக்கு தெரியும்” எனக் கேட்டார்.

“சொந்த ஊர் தேனீ, இப்போது அம்மா மட்டும் தான் இருக்கிறார்கள் அவர்களுக்கு உடல்நிலை சரியில்லை, திருச்சியில் இருந்து ஏதோ பிரச்சினையினால் தான் அங்கிருந்து வந்துவிட்டனர் என்பது வரை மட்டுமே தெரியும்”

“நீங்க நேத்து குற்றாலத்தில் பார்த்ததுதான் விஜயா தேனும்மாவோட அம்மா அவளுக்கென்று இந்த உலகத்தில் உயிரோடு இருக்கும் ஒரே ஜீவன். அனைவரும் அதிர்ந்து அவரைப் பார்க்க ஆம் என்பது போல் தலையசைத்தார்

“உங்களுக்கு எல்லா உண்மையையும் சொல்லிடனும்னு விஜயா சொல்லிட்டாங்க. நேத்து அந்த வைத்தியர் அவங்ககிட்ட பேசி ஓரளவுக்கு சம்மதம் வாங்கிருக்கார்.

புது மலர்கள் பூத்திடும் வேளை மதுவதனி

அதனால அவளைப் பற்றி எல்லாவற்றையும் சொல்லி உங்களோட சம்மதத்தை கேட்கச் சொன்னாங்க. அப்புறம் உங்க வீட்டுப் பெரியவங்களை வந்து பேசச் சொன்னாங்க", என்றவர் சரணின் முகத்தை பார்த்து" தேனும்மாவோட பூர்வீகம் இந்த தேனிதான். குருசாமி-வீரம்மா தான் அவங்க பாட்டியும் தாத்தாயும், அந்தக் குடும்பம் மாதிரி அழகான குடும்பம் நான் பார்த்ததே இல்லை. கடவுளுக்கேப் பொறுக்கல போல. காசு பணம் இல்லை என்றாலும் ரொம்ப நிம்மதியா இருந்தாங்க. பாண்டியன் திருச்சியில்தான் தாசில்தாரா இருந்தார். மாசம் ஒரு முறைதான் இங்கே வருவார். நானும் பாண்டியனும் காலேஜ் மேட், ரெண்டு பேரும் டிகிரி முடிச்சதுல இருந்து அரசுத்தேர்வு பயிற்சி வரை எல்லாமே ஒன்னாதான் படிச்சோம். போஷ்டிங் அவனுக்கு திருச்சியும் எனக்கு கோயம்புத்தூரும் கிடைச்சது. அழகா அமைதியா மகிழ்ச்சியா போயிட்டு இருந்தது வாழ்க்கை. அடுத்தடுத்து ஏற்பட்ட இழப்புகளால் இப்போ இப்படி ஆயிடுச்சு இந்தக் குடும்பம்" என்றவர் பெரியவர்களின் அடுத்தடுத்த இறப்பையும் அதனால் அவர்களின் பெரிய பெண்ணான வேனிலா வழிமாறிப் போனது அவளின் நிலையறிந்து அவளைத் திருத்தி நல்வழிப் படுத்தியது என்று எல்லாவற்றையும் கூறியவர், சிறிது நேரம் அமைதியாக இருந்துவிட்டு மீண்டும் பேச்சை ஆரம்பித்தார்.

"எல்லாவற்றையும் கடந்து ஓரளவுக்கு நிலைமை சீராகி வரும் நேரம் பாண்டியன் திருச்சியில் ஒரு ஆக்சிடண்டில் இறந்துவிட்டதாக செய்தி வந்ததும் பெண்கள் மூவரும் மொத்தமாக உடைந்தே போயிட்டாங்க. எவ்வளவோ ஆறுதல் கூறியும், அவர்களை சாதாரண வாழ்க்கைக்குத் திரும்ப முடியல. அப்போதான் நான் பாண்டியனோட இந்த ஆசிரம் பற்றியும் அது நாம் இருவரும் நடத்த வேண்டும் என்பதைப் போல எங்களுக்குள் நடந்த பல பேச்சு வார்த்தைகளை கூறினேன்.

விஜயாவுக்கு ஓரளவு உண்மை நிலவரம் புரிய கொஞ்சம் கொஞ்சமாக மீண்டு வந்தார். அதன் பிறகு பாண்டியனின் வேலையை அவருக்கு கிடைக்க வழிவகை செய்து கொடுத்தேன். விஜயாவுக்கு திருச்சியில் தான் வேலையும் கிடைத்தது. பிள்ளைகள் இருவரையும் அங்கேயே பள்ளி கல்லூரியில் சேர்த்து விட்டாங்க. இங்கே இருந்த நிலம், வீடு என எல்லாவற்றையும் விற்று இரு பெண்களுக்கு போதுமான அளவு சேவிங்கில் போட்டு விட்டு மீதியை என்னிடம் இந்த ஆசிரமம் ஆரம்பிக்க கொடுத்தார். நானும் அதன் பிறகு வேலைகளைத் துரிதப்படுத்தி பாண்டியனின் கனவு இல்லைதையும் ஆசிரமத்தையும் உருவாக்கினேன். திருச்சி வாழ்கை அவர்களுக்கு ஓரளவிற்கு பழக்கப்பட்டது போல, வேனி, கல்லூரிக்கும் தேனு பள்ளிக்கும் விஜயா அலுவலகத்திற்கும் என்று அவர்களின் காலச்சக்கரம் உருண்டு கொண்டிருந்த வேளையில் விதி மீண்டும் தன் வேலையைக் காட்டியது என்றவரின் முகம் சோகத்தில் குளித்து அந்த நாள் நினைவில் மூழ்கியது.

# புது மலர்கள் பூத்திடும் வேளை…!

“என்ன வேனிம்மா கொஞ்ச நாளா ஒரு மாதிரி இருக்க, ஏதாச்சும் பிரச்சனையா, உடம்புக்கு முடியலையா? டாக்டர் கிட்ட போலாமா”- விஜயா.

“அதெல்லாம் ஒன்னுமில்லம்மா”, நான் நல்லாதான் இருக்கேன், நீங்க தேவை இல்லாம கவலைபடாதீங்க” வேனி

“அப்படியா, ஆனா உன் முகத்தைப் பார்த்தா ஏதோ இருக்குறமாதிரியே இருக்கு,சரிவிடு, அம்மாவுக்குத்தான் உங்களை கவனிக்க நேரமே இல்லை, அதனால ஏன் மேல ஏதேனும் கோபமா”

“இல்லம்மா அந்த மாதிரி எல்லாம் இல்ல,” திணறினாள் வேனி. அப்போது தேனு “இங்க வந்ததுல இருந்து எதையோ பறிகொடுத்த மாதிரிதான் இருக்கா, நானும் எவ்வளவோ கேட்டேன் சொல்லல”

"ஏய் சும்மா அவளை வம்பிழுக்காத, என்று இளைய மகளை அடக்கியவர் மூத்தவளிடம் திரும்ப அவளோ“ தன் தாயின் தோளைக் கட்டிக்கொண்டு நாம பழைய மாதிரி சந்தோசமா இருக்க முடியாதாம்மா” என்று தன் மனதில் இருந்த கேள்வியை மறைமுகமாக கேட்டாள்.

அங்கே கனமான சூழல் உருவாக மூவருமே கண்ணீர் வடித்தனர் ஒருவருக்கொருவர் அணைத்தபடி ஆனால் தேனுவிற்கு இந்த சூழல் முற்றிலும் பயத்தைக் கொடுத்தது. தன் அக்கா ஏதோ பெரிய இக்கட்டில் மாட்டிக் கொண்டாளோ என்ற உண்மையை அவளாக யூகித்தாள்.

இரவில் அவர்கள் இருவரும் இருக்கும் அறையின் தனிமையில் அவளிடம் விசாரிக்கவும் செய்தாள்.

**வேளை தொடரும்……..**

புது மலர்கள் பூத்திடும் வேளை - மதுவதனி

# புது மலர்கள் பூத்திடும் வேளை…!



வேளை - 11

****************************************************************************************************

நில்லென்று சொன்னால் மனம் நின்றா போகும்
நீங்காத நெஞ்சில் அலை ஒய்ந்தால் போதும்
மௌனத்தின் ராகம் கேளாதோ
மௌனத்தில் தாளம் போடாதோ

வாழும் காலம்
யாவும் இங்கே நெஞ்சம் தேடும்
காற்றில் எந்தன் கீதம்
காணாத ஒன்றைத் தேடுதே

அலை போல நினைவாக
சில்லென்று வீசும் மாலை நேர
காற்றில் எந்தன் கீதம்
காணாத ஒன்றைத் தேடுதே

****************************************************************************************************

# புது மலர்கள் பூத்திடும் வேளை…!

அந்த அறையில் தென்பட்ட நிசப்தத்தைப் பார்த்து முதலில் அமைதியைக் களைத்துப் பேச்சை ஆரம்பித்தாள் இளையவள் "வேணிக்கா நீங்க சொல்றது உண்மையா? நிஜமா அவள் தானா என்னால நம்ப முடியல" என்றாள் அதிர்ச்சியும் திகைப்பும் சேர்ந்தபடி, ஏனென்றால் வேணி கூறிய செய்தி அவ்வளவு பயங்கரமாக இருந்தது.

அதுவரை இருளை வெறித்தப்படி உட்கார்ந்திருந்த மூத்தவள் ஆமாம் என்பது போல் தலையை அசைத்துவிட்டு முழங்காலில் முகத்தை மூடி உடல் குழுங்க கதறி அழ ஆரம்பித்தாள். இத்தனை நாட்கள் தனக்குள்ளே புழுங்கித் தவித்தவளை பார்த்தவள் "அழட்டும் நன்றாக அழட்டும், அழுதால் மட்டுமே அவள் மனம் தெளிவடையும் என்பதாக நினைத்து அழுகையில் குலுங்கிய முதுகை ஆதரவாக தடவிக் கொடுத்தாள் தேன் நிலா. அவள் மனதில் சற்று முன் நடந்த உரையாடல்கள் எதிரொலித்தன.

"அக்கா உங்களுக்கு என்ன பிரச்சினை, நீங்க டூருக்கு போயிட்டு வந்ததுல இருந்து, ஏதோ யோசனையாவே இருக்கீங்க. எங்களோட பேசினாலும் அதுல சந்தோசமே இல்ல. கடமைக்குப் பேசி சிரிக்கிற மாதிரி இருக்கு உங்களுக்கு என்னப் பிரச்சினையா இருந்தாலும் என்கிட்ட சொல்லுங்க எதாவது செய்ய முடியுமா என்று பார்ப்போம். நம்மால் முடியவில்லை என்றாள் அம்மாவிடம் சொல்லலாம், சொல்லுக்கா என்னாச்சு" - தேனு

தங்கையின் பேச்சில் அதிர்ந்தவள் "ஒன்னுமில்ல குட்டிம்மா, எனக்கு நம்ம தாத்தா பாட்டி நியாபகம் வந்திருச்சுடா, இப்போ எல்லாம் அது அதிகமாகி மனசைப் போட்டு குழப்புது, வேற ஒன்னுமில்ல என்றாள் பார்வையை எங்கோ பதித்தபடி வேணியின் குணம் நன்கு அறிந்த தேனுவோ அதை நம்ப மறுத்தாள், மேலும் அவளின் பார்வையில் ஏதோ விபரீதமான பிரச்சினைதான் வந்துவிட்டது. தான் சின்னப் பெண் என்பதால் தன்னிடம் சொல்ல மறுக்கிறாளோ என்ற எண்ணமும் வந்தது. எந்தவித அசம்பாவிதமும் இருக்கக் கூடாது என்று மனதை முயன்று சமாதானப்படுத்தி தமக்கையிடம் திரும்பினாள்.

"வேணிக்கா உங்களுக்கு ஒரு பிரச்சினையும் இல்ல நீங்க சந்தோசமாதான் இருக்கீங்க அவ்ளோதான, அதை ஏன் தலையில் அடித்து சத்தியம் பண்ணுங்க நான் நம்புறேன், அப்படி இல்லைன்னா என்கிட்ட உண்மையை சொல்லுங்க, சின்னப் பொண்ணு இவனு யோசிக்காதீங்க, உங்களால யோசிக்க முடியாத ஏதோ ஒரு சின்ன விசயம் என்னால யோசிக்க முடியும் அதனால் பிரச்சினைக்கு வழி கிடைச்சாலும் கிடைக்கும்.

சோ நீங்க உங்க மனசுல என்ன இருக்குனு சொல்லுங்க” என்று அவளின் முகத்தை கைகளில் ஏந்திக் கேட்டாள் சிறியவள்.

தன் முகத்தை கைகளில் ஏந்தியவளை நிமிர்ந்து பார்த்தவள். தன் தங்கை வயதில் சிறியவள் தான், ஆனால் அறிவிலும், குணத்திலும் தன்னைவிடப் பெரியவள் அப்பாவைப்போல என்ற பெருமிதம் வந்தமர்ந்தது அவள் முகத்தில்… தேன் நிலவையே பார்த்தாலும் எண்ணம் மட்டும் எங்கோ இருக்கிறது என்று நினைத்து அவள் தோளில் கைவைத்து லேசாக உலுக்க, அதில் சுய உணர்வுப் பெற்றவள்.

“நான் உன்னிடம் சொல்றேன் ஆனா அவசரப்பட்டு அம்மாக்கிட்ட சொல்லிடாத நம்மால் எதுவும் முடியலனா, அவங்ககிட்ட சொல்லலாம்”. என்ற முகவுரையுடன். தனக்கு நேர்ந்த பயங்கரத்தை சொல்ல ஆரம்பித்தாள் வேணிலா…

கல்லூரியின் கடைசி வருட படிப்பில் இருந்தாள் வேணி. அது கடைசி வருடப்படிப்பு என்பதால் அந்த வருட மாணவ மாணவிகளை சுற்றுலா அழைத்துப் செல்வதாகவும் அனைவரும் கண்டிப்பாக கலந்து கொள்ள வேண்டும் என்றும் அறிக்கை விடுத்தது கல்லூரி நிர்வாகம். இதனால் வேறு வழி இல்லாமல் வேணியும் சுற்றுலாவிற்குத் தன் தாயின் அனுமதியுடன் கிளம்பினாள்.

பொதுவாகவே அமைதியானவள் வேணி. ஆனால் இங்கு வந்தும் அந்த அமைதியைக் கடைப்பிடிக்க முடியாது என்று பேருந்தில் ஏறிய ஒரு மணி நேரத்தில் புரிந்து கொண்டாள். தோழிகளின் வற்புறுத்தலின் பேரில் தன் தயக்கங்களையும், அமைதியையும் மெதுவாக உடைத்தவள் அவர்களோடு சகஜமாகினாள். சந்தோசமும் உற்சாகமுமாய் கொடைக்கானல் வந்தடைந்தனர். அங்கேயே ஹோட்டல் அல்லாமல் காட்டேஜ் போன்ற வீடுகளையே அருகருகே புக் செய்திருந்தனர். அனைவரும் ப்ரேஷாகி ஒன்றாக அமர்ந்து சாப்பிட்டு, எந்த ஒரு பொழுதுப்போக்கும் இல்லாமல் உறங்கக் சென்றனர்.

பயணக் களைப்புத்தீர்ந்ததும் காலையில் வழக்கம்போல் நேரமே எழுந்த வேணி தன் அருகே உறங்கும் தோழிகளைக் கண்டதும், இப்போதைக்கு எழமாட்டார்கள் என்று எண்ணி வெளியில் வந்து தோட்டத்தில் உலாவினாள்.

# புது மலர்கள் பூத்திடும் வேளை...!

தமிழ்நாட்டின் டார்ஜிளிங் என்றும் மலைவாசஷ்தலங்களின் இளவரசி என்றும் அழைக்கப்படுவது "கொடைக்கானல்" பார்க்கும் இடமெங்கும் பசுமையும் குழுமையும் போட்டிப் போட்டுக் கொண்டு நம்மை மகிழ்ச்சிக் கடலில் ஆழ்த்தும் மலைமுகடுகளில் ஒளிந்துகொண்டு வரவா வேண்டாமா என கண்ணாமூச்சியாடும் ஆதவனை மேகங்கள் முற்றிலும் மறைத்துக்கொண்டு காலைப் பனியை பொழிந்து கொண்டிருந்தன. வேணிக்கு காலைநேரக் காற்றை சுவாசிக்க மிகவும் பிடிக்கும். அதுவும் அவள் கிராமத்தில் இருந்த பொழுது குருசாமியுடன் சேர்ந்து விடியகாலையிலேயே வயக்காட்டுக்கு சென்று விடுவாள்.

அந்தப் பழக்கம் திருச்சி வந்ததும் தொடர்ந்தது. அம்மாவும் தங்கையும் எழுவதற்கு முன்னரே இவள் எழுந்து அந்த வீட்டைச்சுற்றி இரண்டு முறையாவது நடந்து அந்தக் காலைக் காற்றை அனுபவிப்பாள் அப்படி இருந்தவளுக்கு இந்தக் குளிரும் பணிகாற்றும் தன்னை முழுவதும் மூடிக்கொண்ட மேகப்போர்வையும் என ஒவ்வொன்றையும் பார்த்தவளுக்கு குஷி அதை ரசித்து அனுபவிக்கலானாள். அந்த காட்டேஜ் சுற்றிலும் விதவிதமான பூச்செடிகள் இருக்க அதைத் தொட்டுப்பார்த்தும், அந்த பூவின் இதழ்களில் அமர்ந்திருந்த பனித்துளியை வருடிக்கொண்டும் ஒரு மாதிரியான மோனநிலையில் நின்றிருந்தாள் வேணிலா.

அறையில் இருந்து வெளியே வந்ததில் இருந்து ஒரு உருவம் அவளையே கண்ணிமைக்காமல் பார்த்துக் கொண்டிருந்தது. அவளின் செயல்கள் ஏதுவும் அவன் கண்ணில்படவில்லை. மாறாக அவளின் அங்கங்களின் எழிலசைவும், முகத்தில் தோன்றிய அழகும் குளிருக்கு கைகளைத் தேய்த்து கண்ணத்தில் அவள் வைத்து எடுக்கும் போது உண்டாகும் அந்தக் கண்ணங்களின் சிவப்பும் என்றும் அவன் அவளை பார்வையால் மேய்ந்துக் கொண்டிருந்தான். அப்போது தன் மோனத்தை கலைத்து உள்ளே செல்ல இருந்தவளை தடுக்கும் விதமாக அவள் முன்னே போய் நின்றான் அவன்.

அவனைப் பார்த்தும் பேயைக் கண்டவள் போல் அதிர்ச்சியில் உறைந்தவளை "வேணு வேணு" என்ற குரல் இழுக்க, அவனைப் பார்த்து முறைக்க வேண்டும் என்பதையும் மறந்து அவனையே பார்த்துக் கொண்டிருந்தாள். மீண்டும் அவனே "வேணு என்னை மறந்துட்டியா, ஆனா உன்னோட ரியாக்ஷன் பார்த்தா அப்படித் தெரியலையே" என்றான் சுரேஷ்.

# புது மலர்கள் பூத்திடும் வேளை…!

அவள் அப்படியே நிற்க அவள் தோளைப் பற்றி உலுக்கியவன் "வேணு நீ என்மேல் கோபமாக இருப்பாய் என்று தெரியும். நான் உன்னை ஏமாற்றி விட்டதாகக் கூட நீ நினைத்திருப்பாய், நீ நினைத்ததிலும் தவறு இல்லை. ஏன் என்றால் சென்னை சென்றவன் அதன் பிறகு உன்னிடம் பேசாமல் இருந்துவிட்டேன். மேலும் என்னைப் பற்றி எந்த தகவலும் உனக்குத் தராமலும் இருந்து விட்டேன். ஆனால் நான் உன்னைப் பற்றி நினைக்காமல் இருந்ததே இல்லை. என்னுடைய சூழ்நிலைகளும் சந்தர்பங்களும் தான் என்னை அப்படி நடக்க வைத்தது.

வீட்டில் எல்லாரும் என்னை நம்பினார்கள். நான் படித்து நல்ல வேளையில் அமர்வேன் என்று அதை காப்பாற்ற வேண்டும் என்ற கடமை எனக்கிருந்தது. அதனால் படிப்பைத் தவிர வேறெதிலும் என்னால் கவனம் செலுத்த முடியவில்லை. படித்த கையோடு இங்கு வேலையும் கிடைத்தது. வேலை கிடைத்த தகவலோடு உன்னைத் தேடி வந்தேன். ஆனால் அங்கோ உன் அப்பா…" என்று சிறிது நேரம் அமைதியானான்.

அவளும் தன் தந்தையின் நினைவில் கண்களில் கண்ணீர் சொரிய அத்தனை நேரம் அவள் வருடிக் கொண்டிருந்த அந்த அழகான ரோஜாவை வெறித்தாள். அந்த அமைதியைக் கிழித்து மீண்டும் தொண்டையைச் செருமியவன் "உன் அப்பா இறந்து விட்டதாகவும் நீங்கள் ஊரைவிட்டுப் போய்விட்டதாகவும் கூறினார்கள். ஆனால் எங்கே என்று சொல்லவில்லை நானும் பலரிடம் விசாரித்துவிட்டு விடைக்கிடைக்காமல் போகவே, முதலில் வேலையில் சேருவோம், பிறகு உன்னைத் தேடலாம் என்று வந்தேன்.

ஒவ்வொரு விடுமுறைக்கும் ஊருக்கு வரும்போதெல்லாம் உன்னைத் தேடுவேன் வேணு, நீ இல்லாமல் என்னால் வாழமுடியாது என்பது சத்தியமான உண்மை. அதை இத்தனை நாட்களில் உணர்ந்து விட்டேன். உன்னை இங்கு பார்த்ததும் நான் எவ்வளவு சந்தோசமாக உணர்கிறேன் என்று உனக்குத் தெரியாது. என்னை அறியாமல் உனக்குத் துரோகம் செய்துவிட்டதாகவே நினைத்து நினைத்து உள்ளுக்குள்ளே செத்து போனேன் வேணு, நான் உனக்குச் செய்த தவறுகளை எல்லாம் மறந்து மன்னித்து விடு. இதற்கு மேல் என்ன சொல்வதென்றே தெரியவில்லை நானும் பொய்யல்ல என் காதலும் பொய்யல்ல உன்னைப் போலவே" என்று முடித்து பதிலுக்காக அவள் முகத்தைப் பார்த்தவள்.



புது மலர்கள் பூத்திடும் வேளை - மதுவதனி

வேணியோ அவன் பேசிய அனைத்தையும் கேட்டாலும் மடிந்து போன காதல் மீண்டும் துளிர்க்குமா என்ற கேள்வியிலேயே நின்றாள், அவன் காட்டிய ஒதுக்கம், துரோகம் எல்லாவற்றையும் நினைத்தவள் ஒன்றும் பேசாமல் அவனைக் கடந்து செல்ல முற்பட்டாள். ஆனால் அவள் செல்லப் போகிறாள் என்பதை உணர்ந்து அவளின் கையைப் பிடித்து "இன்று இரவு 9.00 மணிக்கு உனக்காக நான் இங்கு காத்திருப்பேன், உன்னுடைய பதில் எதுவாக இருப்பினும் அதை ஏற்றுக் கொள்ளத் தயாராயிருப்பேன்" என்று அவள் கைகளை விட்டு" சாதகமான பதிலாக இருந்தால் மகிழ்ச்சியாகவும் இருப்பேன்" என்றான் புன்னகையுடன்.

அவனை வெற்றுப் பார்வை பார்த்தவள் எதுவும் பேசாமல் சென்றாள். அவள் செல்வதையே கண்களில் குரூரமாக பார்த்துக் கொண்டிருந்தவனின் முதுகில் ஒரு கை விழவும் திரும்பினான். சுரேஷின் நண்பன் குமார் நின்றிருந்தான். கல்லூரியில் கூட இரட்டைப் பிறவிகள் என்றேதான் இவர்களை அழைப்பார்கள். வேலையும் இருவருக்கும் ஒன்றுபோல் இங்கேதான் கிடைத்திருந்தது.

சுரேஷின் முகத்தில் தெரிந்த சிரிப்பைப் பார்த்து "என்ன மச்சி நீயா இது? ஒரே லவ் டையலாக்கா இருக்கு. இந்தப் பொண்ணுதான் நீ மிஸ் பண்ண பொண்ணா பார்த்தா ரொம்ப அப்பாவியா இருக்கு. உண்மையிலேயே நீ அந்தப் பொண்ணை லவ் பண்றியா, ஓவர் பீலிங்கா பேசிட்டு இருந்த, என்னைத் தவிர வேற யார் கேட்டு இருந்தாலும் நீ சொன்னது எல்லாம் உண்மைனு இல்ல நம்பி இருப்பாங்க.நீயா இதுனு என்னாலயே நம்ப முடியல அதனால சொன்னேன்.

எப்படி மச்சான் சரியா அந்தப் பொண்ணு மார்னிங் நடக்க வருவானு தெரியும். ஓ ஆமா நீதான் அந்தப் பொண்ணு கூட ஏற்கனவே பழகிருக்கியே, அப்போ தெருஞ்சிருக்கும். இப்போ எனக்கு உண்மையைச் சொல்லு நீ நிஜலுமாவே அந்தப் பொண்ணை லவ் பண்றியா, இல்ல வழக்கம் போல மேட்டர் முடிஞ்சதும் கழட்டி விடுற கேஸா? ஆனா அந்தப் பொண்ணு கண்ல தெரியிற வலியைப் பார்த்த உன்னை உண்மையாவே லவ் பண்ணியிருக்கும் போலயே" என்று படபடவென பேசிக் கொண்டேத் தாடையைச் சொரிந்து கொண்டான் குமார்.

**வேளை தொடரும்……..**




## வேளை - 12

****************************************************************************************************
என்ன என்ன கனவு கண்டாயோ சாமி
வாழ்க்கை ஒரு கனவு தானையா சாமி
ஒன்றை உந்தன் மனம் கெட்டது
அந்த ஒன்றும் வேரு இடம் போனது
கையில் வரும் எனப்பார்த்தது
இன்று கை நழுவி ஏன் போனது
என்ன என்ன கனவு கண்டாயோ சாமி
வாழ்க்கை ஒரு கனவு தானையா சாமி

ஓடைக்குளிர் ஓடை என மான்கள் நம்பி ஓடும்
வேளை அது கோடை எழும் கானல் என்று மாறும்
நெஞ்சோடு தோன்றுக்கின்ற நேசம் யாவும்
நில்லாமல் ஓடுகின்ற நீர்மேகம்
கண்ணோடு காணுகின்ற கோலம் யாவும்
தண்ணீரில் போட்டு வைத்த கொடாகும்
வழிக்கி வந்தது துணையா
இல்லை வழுக்கி விட்டிடும் வினையா
இதை என்னென்று சொல்வது சித்திர பதுமையே
என்ன என்ன கனவு கண்டாயோ மானே
வாழ்க்கை ஒரு கனவு தானடி
****************************************************************************************************

# புது மலர்கள் பூத்திடும் வேளை…!

சுரேஷ் கூறியது போலவே குமாரும் தன் பணியைச் செல்வனே செய்து கொண்டிருந்தான். ஆனால் வேணிலா மட்டும் அவன் கையில் தனியாக சிக்கவில்லை. இப்படி ஏதேனும் நடந்துவிடுமோ என்று முன்னரே யோசித்தாளோ என்னவோ அவளும் தோழிகளின் கூட்டத்தில் இருந்து பிரியாமல் அவர்களுடனே சுற்றிக் கொண்டிருந்தாள். ஒரு வாரச் சுற்றுலாவில் மீதமிருந்தது இரண்டு நாட்களே. அந்த இரண்டு நாட்களில் அவளைப் பிடிக்கவில்லையெனில் அதன்பிறகு அவளைப் பற்றி யோசிக்கக் கூட முடியாது என்று நண்பர்கள் இருவரும் தங்களுக்குள்ளே புலம்பிக் கொண்டிருந்தனர்.

சுரேஷிற்கோ வேணியின் மீது இருந்த வன்மம் கூடிக்கொண்டே போனது அவனிருந்த திசையைக் கூட அவள் திரும்பிப் பார்ப்பதில்லை அது அவனின் ஆண்மையின் இழுக்கு, அவள் தன்னைச் சீண்டி விட்டுவிட்டாள் என்ற கோபமும் அவள்மேல் மேலும் மேலும் வளர்ந்தது. சாதரணமாக அவளை நினைத்தது தவறோ என்ற எண்ணம் காலதாமதமாக உதித்தது அவனுக்கு ஒருமுறை சூடுகண்ட பூனை மறுமுறை அதைத் தேடி வராது என்று அவனுக்கு தாமதமாகத்தான் புரிந்தது. இனி இவளை இப்படியே விடக்கூடாது. தாமாகவே ஏதேனும் ஒரு சூழ்நிலையை உருவாக்கி அவளை தனிமைப்படுத்த வேண்டும் என்று நினைத்தான்.

அதன் போலவே இன்று அனைவரும் தற்கொலைப் பாறை சுற்றிப் பார்க்கப் போகிறார்கள். அது மிகவும் நீண்ட தூரம் எடுக்கும் இதுதான் சரியான தருணம் என்பதை முடிவு செய்தனர். அதைத் தொடர்ந்து குமார் அவர்களின் ரூம் செர்வீஸ் பாயிடம். அந்த அறையில் ஒரு கேமராவைப் பொருத்தச் செய்தான். மேலும் டிபன் முடிந்ததும் குளிருக்கு இதமாக அனைவரும் காபி ஆர்டர் செய்ய அதில் வேணியின் காபியில் மிளகளவு இருந்த போதை மாத்திரையைக் கலந்து யாரும் அறியா வண்ணம் அவளைப் பருக வைத்தான். சுரேஷா அவன் கண் முன்னே வரவே இல்லை. எங்கேத் தன்னைப் பார்த்தால் அவள் சுதாரித்து விடுவாளோ என்று அவன் தள்ளியே இருந்து அவளைக் கவனிக்க ஆரம்பித்தான்.

காபியைப் பருகியதும் எல்லோரும் கிளம்ப ஆரம்பிக்க, வேணி மட்டும் தலையைப் பிடித்துக்கொண்டு அமர்ந்திருந்தாள். தோழிகள் அவளைச் சுற்றி நின்று என்னவென்று விசாரிக்க ஆரம்பித்தனர் “என்னாச்சு வேணி, ஏன் உடம்புக்கு ஏதும் பண்ணுதா, இவ்ளோ நேரம் நல்லா இருந்தியே” என அவள் தோழி ரம்யா வினவ, “தெரியல ரம்யா தலைசுத்துது. ரொம்ப கனமா இருக்கு, என்ன பண்றதுன்னு தெரியல” என்று அங்கிருந்த சோபாவில் சுருண்டு படுத்துக்கொண்டாள்.

புது மலர்கள் பூத்திடும் வேளை - மதுவதனி

# புது மலர்கள் பூத்திடும் வேளை…!

தோழிகள் அனைவரும் செய்வதறியாது நின்றிருந்தனர். அவர்களை அழைக்க வந்த பேராசிரியர் அவளின் நிலையுணர்ந்து, அன்றைய பயணத்தை நிறுத்த முயல, வேணியோ தன்னால் இப்படி ஆகிவிட்டதே என்று நினைத்து, அவரிடம்" எனக்கு ஒன்னும் இல்லை சார், தூங்கி எழுந்தா சரியாப் போயிடும் நீங்க எல்லாரும் போயிட்டு வாங்க, என்னைப் பத்தி கவலைப்படாதீங்க, நான் கவனமாக இருப்பேன்" என்று சமாதானப்படுத்தி அனுப்பி வைத்தாள்.

பிறகு கதவைப் பூட்டிவிட்டு ஒரு முறைக்கு இருமுறை கதவு லாக்கை செக் செய்துவிட்டு படுத்தவள் தான், அதன்பிறகு, அவள் தோழிகள் அவளின் போனில் அழைத்து கதவைத் திறக்கச் சொல்லும் போதுதான் கண் விழித்தாள், தனக்கு ஏதோ மாற்றங்கள் நிகழ்ந்துள்ளதே என்று உணர்ந்து கொண்டாலும் அவளால் அதை என்னவென்று பிரித்தறிய முடியவில்லை படுத்திருந்த படுக்கைகூட கசங்கவில்லை, தானும் எப்படி தூங்கினோமோ அதேபோல் தானே எழவும் செய்திருக்கிறோம். பிறகென்ன நடந்தது. ஏன் ஏதோ ஒரு தவறு நடந்து விட்டதாக போன்ற எண்ணம் தோன்றுகிறது என்று தலையைப் பிடித்துக் கொண்டாள்.

மீண்டும் போன் அழைப்பதை பார்த்து தன் எண்ணங்களை மாற்றி வைத்துவிட்டு எழுந்து சென்று கதவைத் திறந்தாள்.

தோழிகள் வந்ததும் தன்னோட மாற்றங்களையும் எண்ணங்களையும் மறந்தவள் அவர்களின் நல விசாரிப்புக்கு பதில் அளித்துவிட்டு, அவர்களின் உரையாடலில் ஐக்கியமானாள். அதன்பிறகு ஆட்டம் பாட்டம் கொண்டாட்டம் என்று அந்த நாள் கழிய, அடுத்த நாள் ஷாப்பிங் பேக்கிங் முடித்து எல்லோரும் கோடையைவிட்டு கிளம்பினர். திருச்சி வந்ததும் வழக்கம் போல் நாட்கள் நகர்ந்தன. எந்தப் பிரச்சினையும் இன்றி வேணியின் குடும்பம் வாழ்க்கையை எதிர்கொண்டது.

வேணிக்கு எப்பொழுதும் வீட்டுவேலைகள் தான் அதிகம் பிடித்தம் சும்மாவே இருக்காமல் சமையலறையை ஒதுக்க வைப்பது, புதுப்புது உணவுகளைத் தயாரித்து தாயையும் தங்கையையும் அசத்துவாள், வீட்டைச் சுற்றிலும் செடிகள் வளர்ப்பது, அதை பராமரிப்பது தான் அவளுடைய பொழுதுபோக்கு அப்படி ஒரு நாளில் தன் செடிகளுக்கு தண்ணீர் விட்டுக்கொண்டிருந்தவளின் முன்னே வந்து நின்றான் சுரேஷ். அவனைப் பார்த்ததும் அதிர்ந்தவள் பின் முறைத்துவிட்டு வீட்டுக்குள்ளே செல்ல ஆரம்பித்தாள்.

புது மலர்கள் பூத்திடும் வேளை - மதுவதனி

# புது மலர்கள் பூத்திடும் வேளை…!

அவளின் எண்ணம் உணர்ந்தவன் போல் அவளுக்கு முன்னே வீட்டிற்குள் சென்று சோபாவில் அமர்ந்திருந்தான். அப்போது அடுத்த வீட்டில் வசிக்கும், தன் அன்னையின் ஆபிசில் வேலை செய்யும் சரோஜா அவளைப் பார்த்து "என்ன வேணிம்மா, யாரு அது, அம்மாவுக்குத் தெரிஞ்சவங்களா, இந்த நேரத்துல வந்துருக்கார், உன்னை எப்படி தெரியும், யாரா இருந்தாலும் சீக்கிரம் பேசி அனுப்பி விடு. மத்தவங்கப் பார்த்தா தப்பா பேசுவாங்க".

சரி அத்தை எங்க ஊர்க்காரர்தான், எதுக்கு வந்துருக்கார் என்று தெரியல, விசாரிச்சிட்டு அம்மாவை ஆபிஸ்ல போய் பார்க்கச் சொல்றேன்" - வேணி.

"ஒன்னும் பிரச்சனை இல்லையே நான் வேணும்னா வரட்டுமா", என்றார் யோசனையுடன்.

"அதெல்லாம் வேண்டாம் அத்தை பேசிட்டு அனுப்பிடறேன், ஏதவதுனா நீங்க பக்கத்துலேதான இருக்கீங்க அப்புறம் எனக்கு என்ன பயம்" - வேணி.

"சரி பார்த்துப் பேசிட்டு சீக்கிரமா அனுப்பி வைச்சுடு, இனிமேல் இங்கே எல்லாம் வரகூடாது என்றும் சொல்லிடு, நான் இங்கேயே இருக்கேன் நீ போ" சரோஜா.

"ம்ம் என்று தலையை அசைத்துவிட்டு உள்ளுக்குள் படர்ந்த பீதியை வெளிக்காட்டிக் கொள்ளாமல் வீட்டினுள் சென்றாள்.

அவர்களின் உரையாடல்களை முழுவதுமாகக் கேட்டிருந்தான் சுரேஷ். அவள்மேல் அதிகமான பழி உணர்ச்சியை மேலும் அவள்பால் வளர்த்துக் கொண்டான். அவள் அவனையேப் பார்க்க "என்னடி, என்னை இங்கே எதிர்பார்க்கள இல்லை, நீ என்னைக் கண்டுக்காம இருந்தா நான் உன்னை விட்டுடுவேன்னு நினைச்சியா, என்ன முழிக்கிற, அதான் என்னைப் பத்தி உனக்கு எல்லாமே தெரிஞ்சுருக்குமே அப்புறமும் எதுக்கு உன்கிட்ட நான் நடிக்கனும், உண்மையிலேயே நான் அக்மார்க் பொம்பள பொறுக்கித்தான். அதையும் தாண்டி ரொம்ப மோசமானவன். அந்த மோசமானவன் உன்னை அவ்ளோ சீக்கிரம் விட்டுடுவானு எப்படி நீ நினைச்சு என்னை ஒதுக்க ஒதுக்கத்தான் உன்னை அடைஞ்சே தீரனும் என்றவெறி எழுந்தது.

# புது மலர்கள் பூத்திடும் வேளை…!

நான் இந்த மாதிரி நடந்ததுக்கு ஒருவகையிலே நீயும் காரணம், அன்றைக்கு நான் சொன்னதுமே நீ வந்திருந்தா இவ்ளோ கெட்டவனா நடந்து இருக்கமாட்டேன். ஆனா கண்டிப்பா உன்னை அடையாம விட்டிருக்கவும் மாட்டேன். இதோ இந்த கவர்ல கொஞ்சம் போட்டோசும் ஒரு மெமோரிகார்டும் இருக்கு அதையெல்லாம் பார்த்துவிட்டு நான் சொல்லற இடத்துக்கு இன்னைக்கு நீ வர, அப்புறம் இந்த எவிடென்சு எல்லாத்தையும் அழிச்சுட்டா தப்பிச்சுடலம்னு நினைக்காத, இது வெறும் டூபிளிகேட், இது மாதிரி நூறு கொண்டு வர என்னால முடியும். அதனால தப்பா எதையும் யோசிக்காம இங்கே பக்கத்துல இருக்குற பார்க்குக்கு மாலை 5 மணிக்கு வந்துவிடு". என்றவன் தணல்போல் வார்த்தைகளை வாரி இறைத்துவிட்டு, அவளை மறு வார்த்தை பேசவிடாமல் மின்னல் போல் சென்று மறைந்தான். என்ன நடந்தது, ஏன் வந்தான் என்பதை யூகிக்கும் முன்னரே வந்த சுவடில்லாமல் வெளியேறி இருந்தான், சுரேஷ்…

அதிர்ச்சியில் முகம்மெல்லாம் வியர்த்து உடல் நடுங்க பீப்பாயின் மேல் அவன் வைத்துவிட்டுச் சென்ற அந்தக் கவரையே பார்த்திருந்தாள். எங்கோ கடிகாரத்தின் மணியின் ஓசையில் திடுக்கிட்டவள் அவசரம் அவசரமாக அந்த கவரை எடுத்துக்கொண்டு தன் அறைக்கு சென்று கதவை அடைத்தவள் மீண்டும் மனசுக்குள் ஒரு பயம். அன்று தனக்கு ஏதோ ஒன்று நடந்திருகிறது என்று உள்ளுணர்வு சொன்னது சரியா?

அப்படி நடந்திருந்தாலும் எப்படி எனக்கு எந்த உணர்வும் இல்லாமல் போனது, எங்க நான் தவறு செய்தேன். எப்படி இது சத்தியம் என்று தனக்குள்ளேயே உழன்றவள் இன்னும் அந்தக் கவரை பிரிக்காமல் தான் யோசித்துக் கொண்டிருக்கிறோம் என்பதை உணர்த்து அதைப் பிரித்தவள் அதில் இருந்த நிழற்படங்களைப் பார்த்து அதிர்ச்சியின் உச்சத்திற்கு சென்று மயங்கி கீழே விழுந்தாள், வேணிலா……

அந்தப் பூங்காவில் வந்தமர்ந்து கிட்டதட்ட 1.30 மணி நேரம் ஆகியிருந்தது. இன்னும் சுரேஷ் வந்தபாடில்லை, என்ன செய்வது என்று தெரியாத எதுமே புரியாத மனநிலையில் இருந்தாள். யார் வருகிறார்கள், யார் போகிறார்கள் என்ற எண்ணமே இல்லாமல் அவன் வரும் வழிதடம் பார்த்திருந்தாள்.

அவளின் கண்கள் சுரேஷின் வருகையை பார்த்திருக்க மனமோ ஊமையாய் அழுது கொண்டும் எரிமலையாய் குமுரிகொண்டும் இருந்தது. ஒருவரிடம் சத்தமாக பேசுவது கூட அவளது இயல்பு கிடையாது.

அப்படி இருக்க என்னுடைய தவறு எங்கோ நடந்தது என்ற குழப்பமே மிஞ்சியது வேணிக்கு, சுரேஷ் வந்து போனதும் அதற்கடுத்த நிகழ்வுகளை மனதில் ஓட்டினாள். நினைக்கவே அருவெறுப்பாக இருந்தது. தன் நிலையை எண்ணி வெறுக்கவே செய்தாள், யாருக்கும் இப்படி ஒரு நிலை வரவே கூடாது என்று கடவுளையும் பிராத்தித்தாள். அதே நேரம் தன்னை காக்காமல் கைவிட்டதுக்கு அழுது கடவுளை நிந்திக்கவும் செய்தாள்.

எத்தனை நேரம் மயங்கியிருந்தாலோ, தன் அலைபேசியின் சத்தத்தில் நினைவுலகுக்கு வந்தவள் வேகமாக அந்தப் போடோக்களைப் பார்வையிட்டாள். அது தானாக இருக்கக் கூடாதே என்ற பேராசையுடன், அதில் இருப்பது தானே இருக்கும் மந்திரம் போட்டதும் மாறிப் போய் விடுமா என்று அந்த நிழற்படங்கள் அவளைப் பார்த்துச் சிரித்தது.

கண்களை இறுக்கமூடி தன்னை நிலைபடுத்திக் கொண்டவள் மீண்டும் அந்தப் புகைப்படங்களைப் பார்த்தாள். அதில் கொடைக்கானலில் அவள் தங்கி இருந்த அறை என்பது தெரிந்தது. அவளின் தோழிகள் சென்றதும் எப்படி உறங்கினாளோ அதுபோல் ஒன்று, பின்னர் சுரேஷ் தன்னருகேப் படுத்திருப்பது போல் ஒன்றும், அதற்கு அடுத்து இருந்த புகைபடத்தில் ஒரு கணவனும் மனைவியும் அந்தரங்கத்தில் இருப்பது போன்றும், என்று பார்துக்கொண்டே வந்தவள் அடுத்த புகைப்படத்தைக் கண்டதும் ஜீவனெல்லாம் வடிந்து இந்த நிமிடம் தன் உயிர் இந்த உலகை விட்டு போய்விடாதா என்று வாய்விட்டுக் கதறி அழ ஆரம்பித்தாள். ஏனென்றால் அந்தப் புகைப்படத்தில் இருந்தது சுரேஷின் நண்பன் குமாரும் வேணிலாவும்.

ஆற்றுவார் தேற்றுவாருன்றி கதறி அழுதாள், இன்னும் ஒன்று பாக்கி இருக்கிறதே… அந்த மெமரி கார்டில் அப்படி என்ன வெடிகுண்டு வைத்து இருக்கிறான் என்ற பயத்துடன் அதை எடுத்து தன் அலைபேசியில் மாட்டி வீடியோவை ஓட செய்கிறாள். நிழற்படங்கலாய் அவளின் கையில் இருந்தவை எல்லாம் செயல்முறையாக வீடியோவில் ஓடிக் கொண்டிருந்தது.

வேணிலா உறங்கிய சிறிது நேரத்தில் அந்த அறையின் ஜன்னல் வழியாக உள்ளே வந்திருந்தார்கள் சுரேஷும் குமாரும்.

“டேய் மாப்பிள்ள இந்தப் பிகருக்கு இவளோ ரிஸ்க் தேவை இல்லன்னு நினைக்குறேன், மாட்டினோம் காலம் பூரா களி தான் திங்கணும், ஏற்கனவே நம்மளை பெங்களூர் போலீஸ் தேடுது, கவனமா கால் எடுத்து வைக்கணும் என்றாள் குமார்.

புதுமலர்கள் பூத்திடும் வேளை - மதுவதனி

# புது மலர்கள் பூத்திடும் வேளை…!

அவன் கண்ணில் தெரிந்த பீதியைப் பார்த்துக் கிண்டலாகச் சிரித்த சுரேஷ், " உனக்கு வேண்டாம் என்றால் கிளம்பு, எது வந்தாலும் நான் பார்த்துக்கிறேன், ஆனால் எனக்கு இப்போ இவ வேணும், இவளைப் பார்த்ததுல இருந்து உள்ளேத் துங்கிட்டு இருந்த மிருகம் எழுந்து எனக்கு எப்போத் தீனி போடபோறனு கேட்டுகிட்டே இருக்கு, அதனால இப்போ இவளை நான் மிஸ் பண்ண மாட்டேன்" என்றான்.

நண்பனின் பேச்சில் சிறிது தைரியம் வரப்பெற்றவன் " நீ இருக்கும் போது எனக்கு ஒரு கவலையும் இல்ல, இப்போ என்னோட மூடும் மாறி போதை ஏறிடிச்சு, அடுத்து என்ன செய்யணும்னு சொல்லு மாப்பிளை" என கேட்டான் குமார்.
"இதுதான் என் நண்பனுக்கு அழகு" என்று பாராட்டிவிட்டு, "இந்த ரூமை நல்லா நாலு போட்டோஸ் எடுத்துரு. இவ எப்படி படுத்துருக்க. எந்த பொசிசன்ல திங்க்ஸ்லாம் வைச்சுருக்க, என்று எல்லாத்தையும் எடுத்து வைச்சுக்கோ, அதுதான் ரொம்ப முக்கியம் என்றவன் தான் கொண்டு வந்திருந்த போதை மருந்தை லேசாக உறுஞ்சினான். குமார் போட்டோ எடுத்து விட்டதாக கூற, அதன் பிறகு குமாரை அங்கிருந்த ஹால் மாதிரியான இடத்துக்கு அனுப்பிவிட்டு, வேணிலாவை நெருங்கி அவளின் ஆடைகளை துகிலுரிய ஆரம்பித்தான். அந்தக் கலியுக துரியோதனன்.

அவளின் அழகை அங்குலம் அங்குலமாக கண்களில் படம்மெடுத்து போதைக்கு மேலும் போதையேற்றிக் கொண்டான். பின்னர் வெறி கொண்ட வேங்கையின் செயலைப் போல் அவளை வேட்டையாட ஆரம்பித்தான். அவனது வெறியும் வேட்கையும் முடியும் வரை அவளைப் போட்டு புரட்டி எடுத்தவன் ஒரு கட்டத்தில் திருப்தி அடைத்தவனாக அவளை விட்டு அகன்றவன். பிறகு ஹாலிற்குச் சென்று அங்கிருந்த குமாரரை அனுப்பி வைத்தான். குமாரும் அவளை அனுபவித்து முடித்தவுடன். அந்த அறையை விட்டு வெளியேறி சுரேஷிடம் இந்த வாய்ப்புக்கு நன்றி கூறி நாராசமாக சிரித்தான்.

அவனின் பேச்சை ஒதுக்கியவன், "மச்சான் சீக்கிரம் கிளம்பனும், கொஞ்சம் கொஞ்சமா போதை தெளிய ஆரம்பிச்சிடும், அதுக்குள்ள அடுத்த வேலைகளை கவனி" என்று கட்டளையிட்டவன் அவனின் அலைபேசியில் எடுத்த போட்டோக்களை பார்வையிட்டு அதன்பின் அந்த அறையை மீண்டும் ஒதுக்க ஆரம்பித்தான் சுரேஷ்.

**வேளை தொடரும்……..**

புது மலர்கள் பூத்திடும் வேளை மதுவதனி

# புது மலர்கள் பூத்திடும் வேளை…!



**வேளை - 13**

*******************************************************************************************

நல்லதோர் வீணை செய்தே
அதை நலங்கெட புழுதியில்… எறிவதுண்டோ

நல்லதோர் வீணை செய்தே
அதை நலங்கெட புழுதியில்… எறிவதுண்டோ
சொல்லடி சிவசக்தி சுடர்மிகும் அறிவுடன்
என்னைப் படைத்தாய்…
சொல்லடி சிவசக்தி சுடர்மிகும் அறிவுடன்
என்னைப் படைத்தாய் நீ…

நல்லதோர் வீணை செய்தே
அதை நலங்கெட புழுதியில்… எறிவதுண்டோ

பூ மாலை ஓர் தோளில் தான்… போட நினைத்தாள் பெண்
போட்டாலும் பூமாலைக்கோர்… பொருளும் இல்லையே
நாள் ஒரு தோளினில்… மாலையை மாற்றிடும்
ஆண் கூட பெண் வாழ்வதா… அதை நானும் பண்பென்பதா
இது ஞாயமா…

புது மலர்கள் பூத்திடும் வேளை

# புது மலர்கள் பூத்திடும் வேளை…!

**நல்லதோர் வீணை செய்தே**
**அதை நலங்கெட புழுதியில்… எறிவதுண்டோ**

**ஆனந்த நீரோடையில்… ஆட நினைத்தேன் நான்**
**நான் பார்த்த கோதாவரி… கானல் வரியா**
**தாள் மனை அகன்றதும்… தலைவனை அடைந்ததும்**
**நான் செய்த தீர்மானம் தான்… அதற்கிந்த சன்மானம் தான்**
**அவமானம் தான்…**

**நல்லதோர் வீணை செய்தே…**
**அதை நலங்கெட புழுதியில்… எறிவதுண்டோ**
**சொல்லடி சிவசக்தி சுடர்மிகும் அறிவுடன்…**
**என்னைப் படைத்தாய் நீ… நல்லதோர் வீணை செய்தே**
**அதை நலங்கெட புழுதியில்… எறிவதுண்டோ**
********************************************************************************************************

சுரேஷ் ஒருபுறம் அறையை ஒதுக்க, குமார் அவளின் மேல் ஒரு விதமான திரவத்தை தெளித்து உடலை துடைத்து அவளின் உடைகளை மாட்ட ஆரம்பித்தான். "மச்சான் நீ எல்லாத்துலயும் எனக்கு சரி பாதி கொடுக்குறதை நினைச்சா ரொம்ப சந்தோசமா இருக்குடா, ட்ரெஸை கழட்டுறது நீ, மாட்டுறது நான் என்று அவனிடம் பேசியபடியே தன் வேலையை முடித்தான்.

நண்பனின் பேச்சைக் காதில் வாங்கினாலும், பதிலேதும் பேசாமல் மீண்டும் ஒருமுறை அந்த அறையை சரிபார்த்துவிட்டு போதை மயக்கத்தில் இருந்தவளிடம் வந்தவன் அவளைப் பார்த்து ஏளனமாகச் சிரித்தான். "ஏண்டீ நீயெல்லாம் எனக்கு ஒரு மேட்டரே இல்ல, ஆனாலும் உனக்குப் போய் என்னை இவ்ளோ ரிக்ஸ் எடுக்க வச்சு, போதாதுக்கு என் தன்மானத்தை தூண்டிவிட்டு, உன்கிட்ட என்னை கெஞ்ச வைச்சதுக்கு, எல்லாத்துக்கும் சேர்த்து நீ இன்னும் கஷ்டப்படுவ டீ, உனக்கு இந்த சுரேஷ் யாருனு தெரியும். இனி உன்னோட ஒவ்வொரு அசைவும் என்னை மீறி வெளியே போகாது. இது நீ என்னை உதாசீனப் படுத்தினதுக்கு உனக்கு கிடைத்த தண்டனை" என்று மீண்டும் நாராசமாக சிரித்தவன் அங்கு பொருத்தியிருந்த கேமாராவை எடுத்துக் கொண்டு வந்த வழியே வெளியேறினான். அவனைத் தொடர்ந்து குமாரும்.

அந்த வீடியோவைப் பார்த்த வேணியின் நிலையோ சொல்லில் அடங்காது, அவள் எந்த மாதிரி உணர்ந்தாள் என்பதேப் புரியவில்லை. ஆனால் ஒன்று மட்டும் உதித்தது

புது மலர்கள் பூத்திடும் வேளை - மதுவதனி

அவளது புத்தியில் “ஆக்கத்திற்கு உருவாக்கும் அறிவியல் இப்படியொரு அழிவிற்கும் பயன்படுகிறதே” என்று ஒருவனைப் பற்றி தெரியாமல் அவனைத் தன் வாழ்க்கையில் நுழைத்து தவறு செய்துவிட்டு, அவனைப் பற்றித் தெரிந்ததும் அவனிடம் இருந்து விலகி வந்தது தவறா? தன் வாழ்க்கையையும் எதிர்காலத்தையும் காத்துக் கொள்ள தப்பான ஒருவனை ஒதுக்கியது தன் தவறா? அப்படி இருந்தும் அவனே தான் அவளைவிட்டு ஒதுங்கினான் இல்லை…இல்லை அவளை ஒதுக்கினான். இப்போது அவனை ஒரு காலத்தில் நம்பிய பாவத்திற்கு எப்படியொரு துரோகத்தை பரிசளித்து விட்டான்.

தீயவர்களைக் கண்டால் எதிர்த்துப் போராடு, இல்லை ஒதுங்கிவிடு என்றுத் தன் தாத்தாவின் சொல்படி அவள் அவனை எதிர்த்துப் போராடாமல் ஒதுங்கித் தானே போனாள். ஆனால் அவன் எப்படி இப்படி ஒரு செயலை செய்தான். அழகான ஒரு கூட்டில் அமைதியாக வாழ்ந்து பறவையாய் இருந்தவளை இப்படி அசிங்கமாக்கி ஊரே கேவலமாய் பார்க்கும் நிலைக்கு கொண்டு வந்து விட்டானே, இவனை கொன்றால் கூட என் ஆத்திரம் அடங்காது, இவனை என் கையாலயே என் வெறி அடங்கும் வரை கொல்ல வேண்டும் என்றுத் தனக்குள்ளேயே வெறிப்பிடித்தவள் போல் அழுது புலம்பியவள் பின் அவனின் எச்சரிக்கை ஞாபகம் வர உள்ளே குளிர் பிறந்தது.

இன்னும் என்னவெல்லாம் செய்யப் போகிறானோ என்ற பயமும் சேர்ந்து கொண்டது. இதற்கு முடிவு அவன் கூறியதைப் போல் மாலை அவன் சொன்ன இடத்தில், சொன்ன நேரத்தில் அவனைச் சந்திப்பது தான் என்ற முடிவுடன் தன் கையில் இருந்த அந்த அசிங்கங்களை வீட்டின் பின்புறம் சென்று தீயை வைத்துக் கொளுத்தினாள்.

அந்தப் பூங்காவில் வருவோர் போவரை எல்லாம் கவனிக்காமல் சுற்றுப்புறம் மறந்து ஏதோ யோசனையிலும் கண்ணில் தெரிந்த கனவிலும் அமர்ந்திருந்தவளின் அருகே மிக நெருக்கமாக வந்து உட்கார்ந்தான் சுரேஷ் “ஹாய் டார்லிங்” என்ற வார்த்தையுடன்.

தன் அருகே அமர்ந்து இருந்தவனைக் கண்டதும் அருவருப்புடன் எழுந்து சுற்றித் தள்ளி அமர்ந்தவள்” அதுவே அவனின் கோபத்தை உண்டாக்க போதுமானதாக இருந்தது.” இதுக்குத்தான் இதோ நீ என்னை இப்படி அசிங்கப்படுத்துறதால தான் நான் உன்கிட்ட அப்படி நடந்துக்கிட்டேன். பட்டும் உனக்கெல்லாம் புத்தியே வராது இல்லையா? நீ என்ன பெரிய ரதி தேவினு நினைப்பா, என்று அவளைப் பார்த்து அசிங்கமாக பேசியவன் அவளின் பயந்த முகத்தைப் பார்த்து வாய் விட்டுச் சிரித்தான்.



புது மலர்கள் பூத்திடும் வேளை - மதுவதனி

அதே ஏளனத்துடன். “எப்பவும் இந்த பயத்தோடாதான் நீ என்கிட்ட வரணும், அப்புறம் உன்னை எதுக்கு வரச் சொன்னேன் என்று உனக்குத் தெரியனும் இல்லையா? இப்போ உங்க குடும்பத்தோட மொத்த சொத்தும் என் பேருக்கு மாறனும். அதுக்கு என்னவெல்லாம் முடிச்சுட்டு இன்னும் ஒரு வாரத்துல எனக்கு பதில் சொல்லற, அப்படி இல்லன்னா. இன்னைக்கு நீ பார்த்த அந்த வீடியோஸ், போட்டோஸ் எல்லாம் உலகமே பார்க்கும் உனக்கு எது வசதினு சொல்லு அதையே செஞ்சிடலாம் என்றான் யாரிடமோ பாடினது போல்.

வேணிக்கோ ஒன்றுமே புரியவில்லை. அவன் வேறுமாதிரி மிரட்டுவான் என எதிர்பார்க்க, இப்படி மொத்த சொத்தையும் கேட்பான் என்று நினைக்கவில்லை, அவளின் எண்ணம் முகத்தில் தெரிந்ததோ அவளைப் நக்கலாகப் பார்த்தவன்” எனக்கு ஒரு தடவை தொட்ட பெண்ணை அடுத்த தடவை தொடப் பிடிக்காது, இது என்னோட பாலிசி” என்றான்.

அவனின் பேச்சில் அவமானத்தில் கருத்த முகத்தை வேறுபக்கம் திருப்பி மறைத்தவள், சிறிது ஆசுவாசப்படுத்தி அவனிடம் தன் நிலையை எண்ணிக் கெஞ்ச ஆரம்பித்தாள், “ இதோ பாரு, நீ நினைக்கிற மாதிரி எந்தச் சொத்தும் எங்ககிட்ட இல்லை. எங்கப்பா அதையெல்லாம் ஆசிரமம் கட்டுறதுக்காக கொடுத்துட்டாரு, இப்போ என்ன இருக்குனு கூட எனக்குத் தெரியாது, நீ செஞ்சதே பெரிய பாவம் வேற எதுவும் செய்யாதே, என்னை விட்டுரு, நான் யாருக்கிட்டயும் சொல்ல மாட்டேன்” என்று அழ ஆரம்பித்தாள்.

“ஹாஹா” என்று பெருங்குரலெடுத்து சிரித்தவன் நீ சொல்றது எல்லாம் நம்ப முடியலையே, என்ன உங்கப்பனுக்கு பைத்தியம் பிடிச்சுடுச்ச, அவனவன் பணத்துக்காக என்ன எல்லாம் பண்றாங்க. உங்கப்பன் இருந்த பணத்தையெல்லாம் இப்படி செலவு செஞ்சுட்டு போயிருக்கான். சரி நீ சொல்றதை நான் நம்புறேன். அதே சமயம் மூன்று பொம்பளைகளை விட்டுவிட்டு செத்துட்டான்னா எதை நம்பி போனான்” என்றான் அசிங்கமாக

அவனின் பேச்சில் வெகுண்டவள் “நீ ரொம்ப பேசுற, இதுக்குமேல பேசின இந்த இடத்துலேயே உன்னைக் கொன்னுருவேன். நீயெல்லாம் மனுஷ ஜென்மமே இல்ல, பொருக்கி என்று அவனை வாய்க்கு வந்தபடி திட்டியவள். இப்போ உனக்குப் பணம்தான வேணும், எங்ககிட்ட எவ்வளவு இருக்கோ, அத்தனையும் கொண்டு வந்து கொடுத்துடுறேன். ஆனா அதோட என் வாழ்கையில் இருந்து போய்டணும்.

அப்புறம் அந்த போட்டோஸ், வீடியோஸ் எல்லாம் என்கிட்டே கொடுத்துடணும் அதையும் மீறி என்ன மிரட்டுனா. மானம் மரியாதையை எல்லாம் பார்க்காம, நான் தற்கொலை பண்ணிட்டு அதுக்கு நீயும் , நீ இந்த மாதிரி நடந்துகிட்டதுக்கு காரணும்னு போலீஸ்க்கு லெட்டர் எழுதி வச்சுடுவேன். அப்புறம் காலம் முழுசும் நீ களித்தான் திங்கணும் மாமியார் வீட்டுல" என்று அவனைப் பார்த்து உக்கிரமாக முறைத்தாள்.

அவனோ வெகு சாதரணமாக "இந்த வசனமெல்லாம் உனக்கு செட்டாகாது. இப்போ நீ சொன்ன மாதிரி பணத்தை ரெடி செய்து வை நான் ரெண்டு நாளில் உன்னைக் கூப்பிடுறேன் அந்தப் போட்டோஸ் வீடியோஸ் எல்லாம் உன்னிடம் கொடுத்து விடுகிறேன். என்னை நம்பலாம் இந்த மாதிரி விசயத்தில் நான் போய் சொல்வதில்லை மேலும் நீ வேறுமாதிரியாக ஏதேனும் திட்டம் வைத்துருந்தால் அதை மறந்து விடு. இப்போதுதான் எவ்வளவோ முன்னேற்றங்கள் வந்துவிட்டதே, உன் இடத்தின் உன் தங்கையையோ அல்லது உன் அம்மாவையோ என்றவனின் வார்த்தை முடியுமுன் தன் சக்தியெல்லாம் திரட்டி அவன் கன்னத்தில் அறைந்திருந்தாள் வேணி.

அறைந்தவளின் கையை பின்புறம் பிடித்து முறுக்கியவன் "உன்னோட தண்டனைக் கூடிக்கிட்டே போகுதே டார்லிங் என்ன செய்யலாம்" இறுகிய முகத்துடன் பேசிக் கொண்டிருக்கும் போதே அவளை ஒரு மரத்தின் பின்னே கொண்டு வந்திருந்தான். முறுக்கிய கைகளின் வலியையும் பொருத்தும் கொண்டு அவனிடம் இருந்து விடுபட போரடியவளை அடக்கியவன் "இனி இதுபோல் நடந்து கொள்ளாதே. இதுவே உனக்கு கடைசி இனி உன்னிடம் நாவடக்கமும் கையடக்கமும் அதிகம் எதிர்பார்க்கிறேன். இப்போது நீ போகலாம், இன்னும் இரண்டு நாட்களில் மொத்தப் பணத்துடன் வரவேண்டும்." என்றதுடன் அவள் கையை உதறிவிட்டு சென்று விட்டான்.

அவன் தன்னை விட்டுச் சென்றதே தெரியாமல் பைத்தியம் பிடித்தவள் போல் அமர்ந்திருந்தாள். வீட்டின் அருகே இருந்ததால் அவள் வீட்டின் அக்கம் பக்கத்தில் உள்ளவர்களின் நடமாட்டம் அதிகம் இருக்கும். அப்படி சில பேர் அவளை மட்டும் பார்த்தனர், சிலர் அவன் அவளை உதறிவிட்டுச் சென்றதையும் பார்த்தனர். அவனுக்கும் அதுதான் தேவையாகவும் இருந்தது. அவள் குடும்பத்தை அவமானப்படுத்த. அதன் பிறகு அவளின் நிலையை எண்ணி வருத்தப்படவோ, அடுத்து என்ன என்று யோசிக்கக் கூட அவளுக்கு நேரம் இருக்கவில்லை.

புது மலர்கள் பூத்திடும் வேளை மதுவதனி

# புது மலர்கள் பூத்திடும் வேளை…!

பாண்டியன் இறந்ததும், இரண்டு பெண்களுக்குத் தேவையான நகைகளையும் பணத்தையும் விடுத்து மீதி எல்லாத்தையும் அந்த ஆசிரமத்திற்கும், அந்த வீடு கட்டுவதற்கும் கொடுத்திருந்தார் விஜயா.

இரு பெண்களின் நகைகளும் பணமும் அவரவர் பெயரிலையே லாக்கரில் இருந்தது அதுவே வேணிக்கு வசதியாகி விட தனக்குண்டான நகைகள் இருபது சவரனையும் ஐந்து லட்சம் ரூபாய் பணத்தையும் மறுநாள் தாயிக்கும் தங்கைக்கும் தெரியாமல் பேங்குக்கு சென்று எடுத்து வந்தாள்.

அடுத்து நாள் அதையெல்லாம் அவன் வர சொன்ன இடத்தில் கொண்டுபோய் கொடுத்தாள். அவனும் அவன் சொன்னதைப் போல் ஒரிஜினல் போட்டோக்களை கொடுத்து விட்டுச் சென்றவன் தான், அதன் பிறகு அவளை அவன் எந்தப் பிரச்சினையும் கொடுக்காமல் இருந்தான், வேணிக்கு அவன் எங்கே இருக்கிறான் என்று கூட தெரியாது.

அதன் பிறகுதான் அவள் செய்த காரியத்தின் வீரியம் புரிய தனக்குள்ளேயே ஒடுங்கிப் போனாள் வீட்டில் மற்றவர்கள் பேசுவதைக் கேட்பாளே ஒழிய இவள் பேசுவதை நிறுத்தியிருந்தாள் குற்ற உணர்ச்சியில் தன் தங்கையிடம் சொல்லிக்கொண்டே வந்தவள் சிறிதுநேரம் அமைதியானாள்.

அந்த அமைதியைக் களைத்த தேனு “அக்கா எவ்வளவு பெரிய பிரச்சினை, நீங்க எப்படி இதை சாதாரணமா விட்டீங்க, அவனை உள்ளேத் தள்ளி உண்டு இல்லைனு பண்றதை விட்டுட்டு இப்படி வந்துருக்கீங்களே, ச்சே…! இவனெல்லாம் ஒரு மனுசனா, கடவுளுக்கு கண்ணே இல்லையா, இந்த ஜென்மத்தையெல்லாம் உயிரோட எப்படி விட்டு வச்சுருக்கார்.” என்று தன்போக்கில் ஆத்திரமாகப் பேசியவள். தமக்கையின் முக மாறுதல்களை கவனித்து முதலில் அவளைத் தேற்றுவோம் என்று முடிவு செய்து அவளின் கைகளைப் பிடித்துக் கொண்டு “அக்கா இங்க பாருங்க, நீங்க எந்தத் தவறுமே செய்யல” உங்களை இப்படி பண்ணவனுக்கு கடவுள் வேற யார் மூலமாவது தண்டனைக் கொடுப்பார். அது தன் மூலமாகவே நடக்க போகிறது என்பதை அறியாமலே….! நீங்க பயந்து போகதிங்க . உங்களுக்கு நாங்க இருக்கோம். எங்க ரெண்டு பேருக்கும் தெரியாம செய்தது தவறுதான்.

ஆனால் இதுவே அம்மாவுக்குத் தெரிந்திருந்தால் அதிர்ச்சியில் எதுவேனாலும் நடந்து இருக்கலாம். அதையும் மனதில் வைத்துதான் செய்திருக்கீங்க. ஒரு வேலை அம்மாவுக்கு தெரிந்தால் மொத்தப் பணத்தையும் கொடுத்திருப்பாங்கலே தவிர உங்களைத் தப்பா பார்த்திருக்கமாட்டங்க. எங்க ரெண்டு பேருக்கும் உங்கமேல முழு நம்பிக்கை இருக்கு, இப்பவும் எப்பவும் பயபடதிங்க" என்றவள் இன்னும் தமக்கையின் முகத்தில் தெளிவு வராததை கண்டு "இன்னும் என்னக்கா.., அதுதான் அவன் போய் மூன்று மாசமாச்சே, அவனும் உங்களைத் தொல்லை செய்யலையே. அப்புறம் என்ன..?" என தேனு கேட்டாள்.

தங்கையின் பேச்சினால் வேணிக்கு எந்தத் தெளிவும் எற்படவில்லை. ஆனால் தன் தங்கை தன்னைவிட மிகவும் புத்திக் கூர்மையுள்ளவள், தைரியசாலி, எந்தக் கஷ்டத்திலும் அம்மாவை விட்டு விடமாட்டாள் என்று நினைத்துக்கொண்டாள். வேணியின் கவனம் தனது பேச்சில் இல்லை என்பதை கண்டவள் "என்னக்கா" என்று அவள் கையை பிடித்தாள்.

அதில் நினைவுக்கு வந்தவள் "இல்லைக் குட்டிம்மா, பெண்ணா பிறந்தா, தப்பே செய்யலை என்றாலும் சூழ்நிலையும் சந்தர்பங்களும் அமைந்து விட்டால் எவ்வளவு கேவலப்பட்டு போகிறார்கள். நாம் யாருக்கும் எந்தத் தீங்குமே செய்ததே இல்லையே. பின் எப்படி நமக்கு இப்படி ஒரு நிலை வந்தது. தப்பு செய்தவன் எங்கோ ஒரு மூலையில் நிம்மதியாய் சந்தோசமாய் அடுத்த தப்பை செய்து கொண்டுருக்கிறான். ஆனால் எந்தத் தப்புமே செய்யாமல் நான் மட்டும் எவ்வளவு கஷ்டம், அவமானப் படுகிறேன். ஒரு பொண்ணை போதைக்கு அடிமையாக்கி தன் ஆசையைத் தீர்த்துக்கொண்டு, அதைக் காரணமும் காட்டி பணமும் பறித்துக் கொண்டு இன்னும் உயிரோடு இருக்கிறான் என்று நினைக்கும் போது என்னால் தாங்கிக் கொள்ளவே முடியல குட்டிம்மா.

அம்மாவுக்குத் தெரிஞ்சா, உயிரையே விட்டுடுவாங்கனுதான் நான் சொல்லல. பணத்தை எடுக்கும் போது எவ்வளவு குற்றவுணர்ச்சி தெரியும்மா? நம்ம பெயரிலையே போட்டு நாமளே ஹண்டல் பண்ற மாதிரி செய்துக் கொடுத்தாங்க. நான் எடுத்து மூணுமாசமும் ஆச்சு.

இன்னும் செக் பண்ணக் கூட இல்லை. அந்த நம்பிக்கை கொன்னுட்டேனே குட்டிம்மா. இதுக்கு அவன்கிட்ட சொன்னமாதிரி, அந்த எவிடன்ஸ் எல்லாத்தையும் வைச்சு ஒரு லெட்டர் எழுதி வைச்சுட்டு செத்துப் போயிருந்தா கூட பரவா இல்லன்னு தோணுது.

அதை செய்யாம என்னோட பாவம் என்னைத் துரத்துது குட்டிம்மா. என் வயித்துல பாவசுமையா" என்றாள் கதறலுடன் வேணிலா... இதைக் கேட்டதும் அதிர்ச்சியில் உறைந்தது போனாள் தேன்நிலா.

**வேளை தொடரும்........**

புதுமலர்கள் பூத்திடும் வேளை - மதுவதனி

# புது மலர்கள் பூத்திடும் வேளை…!



**வேளை - 14**

*****************************************************************************************
காலங்கள் மாறும்…
காலங்கள் மாறும் கோலங்கள் மாறும்
வாலிபம் என்பது பொய் வேஷம்
தூக்கத்தில் பாதி…

தூக்கத்தில் பாதி ஏக்கத்தில் பாதி
போனது போக எது மீதம்
பேதை மனிதனே…

பேதை மனிதனே கடமையை இன்றே
செய்வதில் தானே ஆனந்தம்
கனவு காணும் வாழ்க்கை யாவும்

கலைந்து போகும் கோலங்கள்
துடுப்புக்கூட பாரம் என்று
கரையைத் தேடும் ஓடங்கள்

கனவு காணும் வாழ்க்கை யாவும்
கலைந்து போகும் கோலங்கள்
*****************************************************************************************

# புது மலர்கள் பூத்திடும் வேளை…!

வேணிலாவின் அழுகை ஒருபக்கம், அவள் கூறிய அதிர்ச்சிகள் ஒருபக்கம், இதையெல்லாம் தாண்டி வேணியை எப்படி மீட்டெடுப்பது என்ற கவலை ஒருபக்கம் என தேனு குழம்ப ஆரம்பித்தாள். பின் தமக்கையின், தலையை நிமிர்த்தி அவளது கண்களை துடைத்து விட்டு “அக்கா என்ன சொல்றீங்க, நீங்க… எப்படி…… ஏன் என்று என்னக்கேட்பது என்றேத் தெரியாமல் ஆனால் அவளின் கேள்விக்கு வேணியிடம் பதில் இருந்தது. “நீ என்னக் கேட்கப் போறேன்னு தெரியுது குட்டிம்மா. மூனுமாசம் ஆச்சுனா முன்னாடியே தெரியாதா..? அப்படின்னு கேட்குற” எனவும் தலை ஆமென ஆடியது தேனுவிற்கு.

இதுலயும் எனக்கு துரதிஷ்டம் தானே குட்டிம்மா, எப்போ எனக்கு ரெகுலர் பீரியட்ஸ் எப்படியும் இரண்டு மூனு மாசம் கழிச்சுதான பீரியட்ஸ் வரும். அதனால என்னால இந்த விசயத்தை சரியா யூகிக்க முடியலடா நான் பாவம் செய்தவள் போலடா. அதான் எதுவுமே எனக்கு சரியா அமையவில்லை. எனக்கு வாழவேப் பிடிக்கலடா. நான் சாகனும் குட்டிம்மா, செத்தாதாண்டா எனக்கு விமோசனம் கிடைக்கும் “என்றுத் தலையில் அடித்துக் கதறுபவளை என்ன சொல்லித் தேற்றுவது என்றேத் தெரியவில்லை தேனுவிற்கு அதற்கான வயசும் பக்குவமும் இல்லையே அவளிடத்தில், ஆனாலும் அவள் வயதிற்கு மீறிய பக்குவத்துடன் பேசினாள்.

“தப்பே செய்யாத நீங்க பாவின்னா ஒட்டுமொத்தத் தப்பையும் செய்த அந்த சுரேஷ் யாருக்கா, நீங்களே உங்களைத் தாழ்த்தி பேசாதீங்க. உங்களுக்கு நடந்தது ஒரு விபத்து, விபத்துல அடிபட்டு குணமானவங்க எத்தனையோ பேர் இருக்காங்க. அவங்களை மாதிரி மீண்டு வாழ்க்கையில் ஜெயிக்கனும்னு நினைங்க. அந்த சாவே நம்மைத் தேடி வராம நாமாளா அதைத் தேடி போகக் கூடாது. இந்த உயிரைக் கொடுத்தவனுக்குத் தெரியும் அதை எப்போ எடுத்துக்கிறது என்று எப்பவும் சாவைப் பத்தி பேசக்கூடாது. நமக்கு என்று யார் இருக்கா. நம்மளேயே நம்பி இருக்கிற அம்மாவைப் பாருங்க. உங்களுக்கு அந்த எண்ணமே வராது, “இனி நீங்க அழக்கூடாது, ஏன் அழனும் நீங்க ஒரு தப்பும் பண்ணல, நீங்க தூய்மையானவங்க இனி எல்லாத்தையும் யோசிச்சு முடிவு எடுக்கலாம். எடுத்தோம் கவிழ்த்தோம் என்று முடிவு பண்ண வேண்டாம். இப்போதைக்கு உங்க மனசைப் போட்டுக் குழப்பிக்காம அமைதியா தூங்குங்க”. என்றவள் அவளை எழுப்பி படுக்க வைத்துவிட்டு அவளருகில் அமர்ந்தாள்.

# புது மலர்கள் பூத்திடும் வேளை…!

ஏதோ ஒன்றை சொல்லி அக்காவே சமாளித்தாயிற்று, ஆனால் பிரச்சினை முடிவது அல்லவே, அந்தக் குழந்தையை என்ன செய்வது அதை எப்படி இந்த உலகுக்கு அடையாளம் காட்டுவது அப்படியே ஆனாலும் இந்தக் குழந்தையை சமுதாயத்தில் இருப்போர் நிம்மதியாக வாழவிடுவார்களா..? வேணியும் இப்படியே இருந்து விட முடியாதே அவளின் கசப்பான நிகழ்வுகளை அழித்து, அவளுக்கு ஒரு வாழ்க்கையை அமைக்க வேண்டும். அவள் தேறி வருவாளா..? அம்மாவிற்கு தெரிந்தால் அதை எப்படி எடுத்துக் கொள்வார்கள். அவர்கள் தாங்குவார்களா? என்று கண்டபடி யோசித்தவளுக்கு கடைசியில் இந்த திருச்சிக்கு வராமலே இருந்துருக்கலாம் என தோன்றிவிட்டது. இப்படி எங்கெங்கோ சுற்றிய எண்ணங்களுக்கு முடிவுதான் கிடைக்கவில்லை தேனுவிற்கு. இந்த அதிர்ச்சியிலேயே இருப்பதால் தான் ஒரு யோசனையும் வரவில்லை. பொறுமையாய் நாளைக்கு யோசிக்கலாம் என்றபடி வேணியின் அருகில் படுத்து உறங்கினாள்.

வழக்கம் போல் காலையில் எழுந்து தாய்க்கு உதவியவள், தங்கைக்குத் தலைவாரி இரட்டைப் பின்னலைப் போட்டு பள்ளிக்கு அனுப்பி வைத்தாள். எப்போதும் போல் சாதாரணமாக இருந்த வேணியைப் பார்த்த தேனு 'அக்கா கொஞ்சம் தெளிவாயிட்டாங்க, இனி கொஞ்சம் நல்லமுறையில் யோசிப்பாங்க' என்று எண்ணத்துடன் அவளும் கிளம்பினாள். தாயும் தங்கையும் கிளம்பியதும் தன் அறைக்கு வந்தவளுக்கு இப்போது ஸ்டடி ஷாலிடேஸ் விடப்பட்டிருந்தது. தன் படிப்பையே மறந்துவிட்டவள் போல் அங்கிருந்த போனையே வெறித்துக் கொண்டிருந்தாள்.

பிறகு ஒரு முடிவுடன் அதை எடுத்து சுரேஷிற்கு போன் செய்தாள். அந்தப்பக்கம் அவன் "ஹலோ யார் பேசுறது.? என, இதை அவள் ஓரளவு எதிர்பார்த்தவள் போல் "நான் வேணி பேசுறேன்".

"வேணியா, எந்த வேணி, நீலவேணியா இல்ல கமல வேணியா". என்றான் எரிச்சலுடன்.

"நான் திருச்சியில் இருந்து வேணிலா பேசுறேன்" என்றாள் குரல் கம்ம.

அவளை அடையாளம் கண்டுகொண்டவன் "ஓ நீயா, என்ன விசயம், எனக்கெதுக்கு போன் பண்ண, உன்னோட கணக்கெல்லாம் தீர்த்தாச்சு தானே. இன்னும் என்ன.? நான் சொன்னது மாதிரிதான் நடந்துக்கிட்டேன்.

புதுமலர்கள் பூத்திடும் வேளை - மதுவதனி

உன்னைப் பத்தி ஒரு நியுஸ் கூட வெளியே வரல. அப்புறமும் எதுக்கு எனக்கு கூப்பிட்ட நான் ஒதுங்கிட்டா நீயும் ஒதுக்கிப் போயிடனும் அதுதான் உனக்கு நல்லது புரியுதா? இனிமேல் எனக்கு இந்தமாதிரி இடைஞ்சல் பண்ணக் கூடாது. சரி இப்போ சொல்லு எதுக்கு போன் பண்ண? அவள் யாரென்று தெரிந்ததும் அவளைப் பேசவிடாமல் இவனே பேசி முடித்தான்.

வேணியோ 'ஏன் இன்னும் இந்த உயிர் அவளிடம் இருக்கிறது என்றுத் தன்னையே வெறுத்தவள் அவனிடம் அவள் கருவுற்றிருந்த செய்தியைக் கூற அவனிடம் சிறு அமைதி பிறகு "நான் கொஞ்சம் வேலையா விழுப்புரம் வந்துருக்கேன் நாளைக்கு வந்துடுவேன். வந்துட்டு உனக்கு போன் பன்றேன். அதுவரைக்கும் இதை யாருக்கும் சொல்லாதே நான் வந்ததும் பேசிக்கலாம்" என்றவன். இப்போதும் அவள் பேசுவதற்கு இடம் கொடாமல் போனை வைத்துவிட்டு வெற்றிச் சிரிப்பு சிரித்தான் சுரேஷ்.

போனை வெறித்தவள் சில கணங்கள் கண்ணை மூடி தன் வயிற்றைத் தடவிப் பார்த்தாள். தனக்குள் ஒரு உயிர், எந்த தவறுமே செய்யாமல் பாவியானவளின் பாவச்சுமை. என்ன தவறு செய்தேன். எனக்குள் உருவாகி இருக்கும் இந்த சிசு என்ன தவறு செய்தது. எல்லா தவறுகளையும் செய்தவன் நிம்மதியாய் இந்த சமுதாயத்தில் நல்லவன் போல் சுற்றுவதா.? கூடாது அவனை உயிரோடு விடவே கூடாது. இனி என் வாழ்க்கையில் விளையாட என்ன மீதம் வைத்திருக்கிறான். என்னைச் சேர்த்தவர்களுக்கு என்னைத் துரோகம் செய்ய வைத்து விட்டானே, இவனை கண்டிப்பாக என் கையாலேயே கொல்ல வேண்டும்" அப்போது தான் எனக்கு நிம்மதி" என்று நினைத்தவள் அதன் பிறகு உடல் சோர்வைக் காட்ட படுத்துறங்கி விட்டாள்.

மாலை தன் தங்கையிடம் அவள் கேட்காமலே தான் சுரேஷிடம் பேசியதை கூறினாள். தேனுவோ ஏன் எதற்கு என்று ஆயிரம் கேள்விகளைக் கேட்டுத் தானும் உடன் வருவதாகக் கூறினாள். வேணிக்கு சிறிது தயங்கி பின் சரி என்று ஒப்புதல் அளிக்க, இருவருமே சேர்ந்து அவன் வருகைக்காக காத்திருந்தனர்.

அடுத்த நாள் சிறு பயத்துடனே இருந்தாள் தேன்நிலா. "அக்கா என்ன பேச போகிறாள்". என்ற பயம் அவளைப் போட்டு படுத்தியது. இருந்தும் தைரியமாகச் இருக்க முயற்சித்தால். சுரேஷின் போன் வந்ததும், அவன் வழக்கம் போல் அதே பூங்காவிற்கு வரச் சொல்லிவிட்டு போனைப் வைத்தான்.

புது மலர்கள் பூத்திடும் வேளை - மதுவதனி

வேறு வழியில்லாமல் தேனுவையும் அழைத்துக் கொண்டு அந்த பூங்காவிற்குச் சென்றவள் கவனமாக தங்கையை அவனிடம் காட்டாமல் மறைந்து இருக்கும்படி சொல்லிவிட்டு அவன் இருக்கும் இடம் நோக்கி போனாள். பின்னே தன்னைப் போல் அவளையும் ஏதென்னும் செய்து விடுவான்னோ என்ற பயம். ஆதாலால் தான் தேனு வருவதற்குக் கூறியதும் சிறிது தயங்கி சம்மதித்தது,

இவளைப் பார்த்ததும் ஈயென்று இளித்தவன் "என்ன டார்லிங், நீ சொல்லுறது உண்மையா, என்னால நம்பவே முடியல" என்று நக்கலாய் கேட்க, அவளோ அவனை பார்த்து கையெடுத்துக் கும்பிட்டு "ஏன் இப்படி பண்ண, என் வாழ்க்கையை நாசம் பண்ண, முதல்ல உன்னை எவ்வளவு நம்பினேன். அந்த நம்பிக்கையை நீயேதான் கெடுத்த, அப்புறம் நான்தான் ஒதுகிட்டேன்னே. மறுபடியும் என்னோட வாழ்கையில் வந்து என்னை சீரழிச்சுட்டியே, நான் உனக்கு அப்படி பண்ணேன்? என்னை எதுக்கு இப்படி நாசம் பண்ண?. இப்போ எதுவுமே செய்யாம நான் ஒரு குழந்தையை சுமக்குறேன். எவ்வளவு அசிங்கம் எல்லாரும் என்னை கேவலமா பார்ப்பாங்க. நீ இதைத்தான் எதிர்பார்த்தியா, ஏன்… ஏன்… என்ற கேள்விகளோடு அவன் சட்டையை பிடித்திருந்தாள்.

அவனோ வெகு சாதரணமாக அவள் கையை விலக்கியவன், "உனக்கெல்லாம் நான் எதுக்கு விளக்கம் சொல்லணும். நீ சொல்லுறது உண்மையா, பொய்யானே எனக்கு இன்னும் முழுசா தெரியல, அதுக்குள்ள எதுக்கு இவ்வளோ வயலேன்ட் உனக்கு. ஏற்கனவே உன்கிட்ட சொல்லிருக்கேன் பொது இடத்துல என்னிடம் இப்படி நடந்துகாதேன்னு கேட்கவே மாட்டியா" என்று அங்கிருந்த இருக்கையில் அமர்ந்து அவளையும் அமர வைத்தான்.

அவன் கைகள் பட்ட இடம் ஏதோ பூச்சி அரித்ததுபோல் தோன்ற பட்டென்று அவனை விட்டு விலகி அமர்ந்தாள். அதையெல்லாம் இப்போது அவன் கண்டுகொள்ள வில்லை, மாறாக அவனுக்கு இப்போது பணம் காய்க்கும் மரமாகத்தான் அவள் தெரிந்தாள். அதனால் அவனிடம் அவன் கோபம் காட்டவில்லை. பொறுமையாகப் பேசினான். "நான்தான் இப்படி பண்ணேன், இல்லன்னு சொல்லல, அப்போ ஒரு கோபத்துல தான் பண்ணுனேன், என்னை மன்னிச்சுடுனு சொல்ல மாட்டேன். அதுக்குத் தகுதியில்லை. ஆனா எனக்கு ஒரு வாய்ப்பு கொடு கண்டிப்பா உன்னை ஏமாத்தமாட்டேன், நம்பு வேணு. நீ நம்பனும்னா நான் என்ன செய்யணும் சொல்லு செய்றேன். உன்னோட வாழ்க்கையை அழிச்ச நானே உனக்கு வாழ்கைத் தரேன்". இந்த மாதிரி பெண்கள் இதைத்தானே கேட்பார்கள் என்று இறுமாப்புடன் கூறினான்…

புது மலர்கள் பூத்திடும் வேளை - மதுவதனி

அவனை ஒரு வெற்றுப்பார்வை பார்த்தவள் எந்த வித மறுப்பும் சொல்லாமல் சரி என்றுத் தலையசைத்தாள்.

சுரேஷ் எங்கே தன் சந்தோசத்தை வெளியேக் காட்டினால் சந்தேகப்பட்டு விடுவாளோ என்ற எண்ணத்தில் அமைதியாகவே பார்த்தான். வேணிக்கோ "எப்போது என் வீட்டுக்கு வந்து பேசுவீங்க" என,

ஆகா இது வேறயா கெட்டது குடி என்று மனதில் நினைத்தவன் "இப்போவே போகலாம் தான் வேணு, ஆனா நீ இப்போ கர்ப்பமா இருக்கிறது தெரிஞ்சா ரொம்ப அசிங்கமாயிடும். அதனால் முதல்ல நம்ம கல்யாணம் முடியட்டும் அப்பறம் இதைப் பற்றி யோசிக்கலாம், என்ன?"

"ஓ ஆமாயில்ல, இப்போ என்ன பண்றது" - வேணி.

"வாவ் மறுபடியும் கிளி நம்ம கையில வசமா மாட்டுது போலையே" என்று எண்ணிக்கொண்டவன்" இன்னைக்கு புதன், வெள்ளிகிழமை கிளம்பலாம். என்னோட பிரண்ட்ஸ் மும்பைல இருக்கான். நேர நம்ம அங்கப் போறோம், கல்யாணம் பண்றோம் புதுசா ஒரு வாழ்க்கையை ஆரம்பிக்குறோம்" - சுரேஷ்.

"சரி நான் கிளம்புறேன். இப்போ அம்மா வந்துடுவாங்க"

ம்ம் சரி போயிட்டு வா" அப்புறம் என்று இழுத்தவன், "பணம், நகை இருந்த கொண்டு வந்துடு, என்னிடம் இப்போ எதுவும் இல்லை." என்றான்.

அதற்கும் அவள் சரி என்று சொல்லிக் கிளம்பவும் அவனுக்கு சந்தேகம் தோன்றியது. ஆனாலும் இவளென்ன செய்துவிடப் போகிறாள் என்ற எண்ணம் வந்து அதை மறைத்தது.

புது மலர்கள் பூத்திடும் வேளை - மதுவதனி

# புது மலர்கள் பூத்திடும் வேளை…!

அவனிடம் விடைபெற்றுச் சென்றவள் தங்கையை அழைத்துக் கொண்டு வீட்டிற்கு சென்றாள். எதையுமே சொல்லாமல் தேனு அவளை நச்சரிக்க, இப்போதைக்கு ஏதும் கேட்காதே. பிறகு உனக்கேப் புரியும் என்று விட்டாள். வேணியின் பேச்சில் ஏதோ விபரீதமான முடிவு எடுத்து விட்டாளோ தமக்கை என்று வழக்கம் போல சரியாகவே கணித்தாள். ஆனாலும் அவளே சொல்லாமல் எப்படி கண்டுபிடிப்பது என்றும் தவித்தாள்.

பெண்கள் இருவரும் தன்னிடம் நல்லமுறையில் பேசுவதும், தனக்கு உதவுவதும் மற்றும் அவர்களைக் கவனிக்கவில்லை, அதற்கு அம்மாவிற்கு நேரம் இல்லை என்பதைப் புரிந்து கொண்டும் இருக்கிறார்கள் என்ற பெருமிதம் விஜயாவிற்கு எப்போதும் உண்டு.

கணவர் இறந்தபிறகு தன் பயக்கூட்டில் மெல்ல வெளியே வந்தவர் பின் மூன்று பெண்கள் தனியாக வாழ வேண்டும் யாருடைய உதவியுமின்றி அதனால் தன்னுடைய தன்னம்பிக்கையை வளர்த்து அதன்படி கணவனின் வேளையில் சேர்ந்தார். அதன்பிறகு அவருக்கு நிற்க நேரமில்லை. பிள்ளைகளைப் பார்க்கவும் நேரமில்லை. அந்தக் கவலையில் அரித்தவரை அவரது பெண்கள் அது தேவையே இல்லை என்பது போல் நடந்து கொண்டார்கள். அதனால் விஜயாவும் பெண்கள் இருவரிடமும் தெரிந்த வித்தியாசத்தை உணராமலே இருந்தார். அதுவே தன்னுடைய பெரிய தவறு என்பதை அறியாமலே….

இரண்டு நாட்களையும், தேனுவின் நச்சரிப்புலையே கழித்தவள் வெள்ளியன்று தாயும், தங்கையும் தூங்கிய பிறகு "நான் போகிறேன் எனக்குப் பிடித்தவரோடு என்னை யாரும் தேட வேண்டாம். என்னுடைய இந்த செயலுக்கு மன்னியுங்கள்" என்ற நாலுவரியை ஒரு பேப்பரில் எழுதி வைத்துவிட்டு அந்த வீட்டை விட்டு வெளியேறினாள், வேணிலா….

**வேளை தொடரும்……..**

புதுமலர்கள் பூத்திடும் வேளை - மதுவதனி




## வேளை - 15

************************************************************************************************

நிலவினில் இருக்கின்ற களங்கத்தை
இவளது பெருவிரல் துடைத்து விடும்
புதுயுக மகள் இவள் அணிகின்ற வளையல்கள்
சிறைகளை உடைத்துவிடும்

பாரிஜாத பூம்பாவை பாதியாகி போனாளே
தேகம் எங்கும் புண்ணாகி தேதி போல தேய்ந்தாளே
செடியை பிரிந்த பிறகும் செடிக்கு உயிர் தருதே…

ஓ …. ஒரு தென்றல் புயலாகி வருமே ..
ஓ …. ஒரு தெய்வம் படி தாண்டி வருமே …

கால தேவனின் தர்ம எல்லைகள் மாறுகின்றதே

************************************************************************************************

# புது மலர்கள் பூத்திடும் வேளை…!

அந்த அறையில் நிலவிய அமைதியை யாருமே கலைக்க விரும்பவில்லை. நால்வரும் தத்தம் தன் சிந்தனைகளில் ஆழ்ந்திருந்தனர். இந்தச் சிறு பெண்ணுக்கு எத்தனை பெரிய கொடுமை நடந்திருக்கிறது. இதை எப்படி அவளால் தாங்கிக் கொள்ள முடிந்தது, என்ற எண்ணமே மற்ற மூவருக்கும் சிவநாதன் தான் மீண்டும் பேச்சை ஆரம்பித்தார் "என்ன சொல்றீங்க மிஸ்டர். ராமன் அப்போ அந்தப் பொண்ணு அவனோட போயிட்டாளா, எப்படி? எப்படி அவனை நம்பி போனாள்? அந்தப் பொறுக்கியை நம்பி..?"

அவரின் பேச்சில் தன் சிந்தனையில் இருந்து மீண்டவர் "இல்லை அவள் வீட்டை விட்டுப் போனது மட்டும் தான் உண்மை. ஆனா அவனோட போகலை. வேணி வீட்டை விட்டுப் போனது விஜயாவுக்கு பெரிய அதிர்ச்சி அவரால தாங்கிக்கவே முடியல தேனுவும் உண்மையை சொல்லவும் முடியாம, வேணி இப்படி பண்ணிட்டாலே என்ற நிஜத்தை ஏத்துக்கவும் முடியாம தடுமாறிப் போயிட்டா. அக்கம் பக்கம் உள்ளவங்க பேசுறதையும் கேட்டு, ஒரு சிலர் ஒரு பையனோட பார்க்ல பார்த்தோம் அங்கெ பார்த்தோம், இங்கே பார்தோம்னு இல்லாததையும் இருக்குற மாதிரி சொல்லி அவளைத் தப்பானவளாவே சித்தரிக்க ஆரம்பிச்சுட்டாங்க. அதுலயும் விஜயா கூட வேலை செய்த அந்த சரோஜா ஒரு நாள் ஒரு பையன் வீட்டுக்கே வந்துட்டு போனான்.

அப்புறம் தேனுவும் வேணியும் ஒரு நாள் பார்க்ல போய் பார்த்துட்டு வந்தாங்க என்று சொல்ல, விஜயாவுக்கு தன் பிள்ளைகள் மேல சுத்தமா நம்பிக்கை இல்லாம போச்சு வேணி மேலே இருக்குற கோபத்தை முழுசும் தேனு மேலே காட்ட ஆரம்பிச்சுட்டாங்க. அந்தப் பொண்ணும் வேணிப்பட்ட கஷ்டத்துக்கு முன்னாடி இது ஒன்னும் பெருசு இல்லை என்று பொறுமையாய் போக ஆரம்பிச்சது. வெளியே கோபமா பேசினாலும் உள்ளுக்குள்ள ரொம்ப நொந்துட்டாங்க விஜயா, வேணியைப் பத்தி எந்த ஒரு தகவலும் தெரியல. ஆனா தேனுக்கிட்ட மட்டும் எப்பவுமே ஒரு பதட்டம் இருந்துகிட்டே இருக்கும் என்னனு கேட்டாலும் ஒன்னுமில்லைனு சொல்லிடுவா. விஜயாவும் தேனுவை ரொம்ப நோகடிக்க ஆரம்பிச்சிட்டாங்க வேணி, இந்த மாதிரி பண்ணது அவளுக்கும் தெரிஞ்சிருக்கு அவளும் வேணியோட சேர்ந்து மறைச்சிட்டா என்ற கோபமும் சேர்ந்து அவளை படுத்தி எடுத்துட்டாங்க. ஆனால் இவ்ளோ கஷ்டங்களையும் தேனுவோட படிப்பை நிறுத்தல.

நாட்கள் கடந்த வேகத்துல தேனுவும் ஸ்கூல் முடிச்சு காலேஜ் போயிட்டா, திருச்சியிலையே தான் சேர்த்தும் விட்டாங்க. அவளுக்கு ஓவியம் வரையரதுனா அவ்ளோ விருப்பம் அதனால் அது சம்மந்தவே படிக்கவும் செய்தாள்" என்று ஒரு நிமிடம் அமைதியாகிப் பின் மூச்சை இழுத்து விட்டவர் மீண்டும் பேச ஆரம்பித்தார்.

# புது மலர்கள் பூத்திடும் வேளை…!

ஒரு நாள் காலேஜ் விட்டு வரும்போது அந்த சுரேஷ் ஒரு பொண்ணு கூட நின்று பேசிட்டு இருந்திருக்கிறான். அவனை இருமுறைப் பார்த்து பரிச்சயம் இருந்ததால், பார்த்ததும் கோபம் தலைக்கேற நேராக அவனிடம் சென்று அவனின் சட்டையைப் பிடித்து டேய் பொறுக்கி நாயே எங்கேடா என் அக்கா, என்ன செய்த அவளை, என்று கேட்க, அவனுக்கு இவள் யாரென்றே தெரியவில்லை. ஒரு வழியாக அவளைப் பற்றித் தெரிந்ததும். “என்னடி திமிரா, யாருக்கிட்ட வந்து யாரைக் கேட்குற எனக்கு யாரையும் அப்படித் தெரியாது. என்ன பண பறிக்கிற கும்பலா, உன்னை முதல்ல போலீஸ்ல பிடிச்சு கொடுக்கனும்” என்று அவன் சம்மந்தமே இல்லாதது போல் பேச தேனுவின் கோபம் எல்லை மீறியது. அப்போது அங்கே கீழே கிடந்த கல்லை எடுத்து அவனின் மண்டையை உடைக்கவும், கல்லூரி விடும் நேரத்தில் ரோந்து வரும் மகளிர் போலீஸ் வண்டி வந்து நிற்கவும் சரியாக இருந்தது.

அங்கு இருந்த நிலைமையில் அவனிடம் பேசிக்கொண்டிருந்த பெண் விட்டால் போதும் என்று ஓடிவிட, பெண் காவலர்கள் அவளைப் பிடித்துக் கொண்டு அவளிடம் விசாரனை செய்ய தேன்நிலா முற்றிலும் உடைந்து கதறி அழ ஆரம்பித்துவிட்டாள்.

அவளின் நிலையைப் பார்த்த அந்தக் காவலதிகாரி அவனை வண்டியில் ஏற்றி மற்றவர்களையும் அனுப்பிவிட்டு அவளைத் தனியாக விசாரிக்க ஆரம்பித்தார். அதற்குள் ஓரளவிற்கு சுய உணர்வுக்கு வந்திருந்தவள். அந்த அதிகாரியிடம் வேணியைப் பற்றின உண்மைகள் முழுவதையும் கூறித் தன்னிடம் இருந்த ஒரு கடிதத்தையும் எடுத்துக் காட்டினாள். அது வேணி வீட்டைவிட்டுச் சென்ற இரண்டு நாட்களில் தேனுவின் பள்ளி முகவரிக்கு வந்திருந்தது. அதை அவள் தன் தாயிடம் கூறவில்லை. வீட்டை விட்டுச் சென்றவள் எங்கோ ஓர் மூலையில் உயிருடன் இருப்பாள் என்ற நம்பிக்கையிலாவது அவர் இருக்கட்டும், இன்று அவள் உயிருடன் இல்லை என்ற உண்மையும் அது எதனால் என்பதும் தெரிந்தால் அவரும் தன்னை அநாதையாக்கிவிட்டு அவள் போன இடத்திற்கே போயிருப்பார்” என்று நினைத்து அந்தக் கடிதத்தை மறைத்து இருந்தாள் தேனு.

அவள் கூறிய உண்மைகளை கேட்ட அந்தக் பெண் காவலர் அவளையும் தன்னுடைய வண்டியில் ஏற்றிக் கொண்டு சென்றார். ஓட்டுனரிடம் ஒரு இடத்தைக் குறிப்பிட்டு கூறிவிட்டு அவளிடம் திரும்பி “ஏன் மா எவ்ளோ கேவலமான பொறுக்கி, இவனை எப்படி உன்னோட அக்கா நம்பினா, நீ சொல்றதையெல்லாம் நான் நம்புறேன்.

எதற்கென்றால் இவனைப் பற்றி ஏற்கனவே இரண்டு கம்ளைன்ட் வந்திருக்கு, அதை விசாரிக்க போதுமான சாட்சிகள் இல்லை. அதான் இவனை பாலோவ் பண்ணிட்டு இருந்தோம். நீ இவன்கிட்ட வந்து சண்டை போடவும், எங்க இன்பார்மர் தகவல் கொடுக்கவும் நாங்களும் உடனே வந்துட்டோம். அதுவும் ரெண்டுமே பொண்ணுங்க சம்மந்தப்பட்ட கேஸ்தான். என்ன ஒரு எவிடென்ஸ் கூட இல்லை பாதிக்கப்பட்ட பொண்ணுங்க வந்து நேரடியா கம்ப்ளைன்ட் பண்ணல. இவனை இப்படியே விட்டால் இன்னும் எத்தனை பொண்ணுங்க வாழ்க்கையை நாசம் செய்வோனோ தெரியல.

நம் பெண்கள் நாகரீகம் என்பது போய் நவநாகரீகம் என்று மாறிவிட்டனர். இப்படி ட்ரெஸ் பண்ணாதனு சொல்ற அம்மாக்கள் கூட இப்போ அவங்களுக்கு எதிரியாதான் தெரிவாங்க. இந்த சூழ்நிலையில் காதலையும் காதலனையும் தேர்ந்தெடுக்கணும் கவனம் தவறிடுறாங்க.

பொதுவாக நம்மோடு நெருங்கி பழகிய உறவுகளே சில சமயம் நமக்கு துரோகம் செய்து விடுகிறார்கள், யாரையும் நல்லாவர்கள் என்று நம்ப முடியாத உலகத்தில் நாம் வாழ்ந்து கொண்டிருக்கிறோம். முன் பின் தெரிந்த முகங்களே துரோகம் செய்கின்ற காலக்கட்டத்தில் எவ்ளோ ஒருவன் எங்கிருந்தோ வந்து காதலிக்கிறேன் என்று சொன்னால் காதல் என்ற பெயரிலே அவர்களின் மீது முழுமையான நம்பிக்கையை வைத்துவிடுகின்றோம். அவர்களின் மீது அளவு கடந்த நம்பிக்கையை வைத்திருக்கின்றோம் என்பதைக் கூட வெளிப்படையாகவே காட்டுகின்ற காரணத்தால் நம் நம்பிக்கையின் சதவீதத்தை கணிக்கின்றவன் அதை தனக்கு சாதகமாகவும், தவறாகவும் பயன்படுத்த வாய்ப்பு இருக்கிறது. இதுவே பின்னால் நாம் ஏமாறுவதற்கு முதல் காரணம்.

அப்படியென்றால் காதலிப்பவர்கள் மீது நம்பிக்கை வைக்கக் கூடாதா? என்றால்..... நம்பிக்கை வைக்கலாம் தவறில்லை. ஆனால் காதலர்களை தேர்வு செய்கின்றபோதே சரியான நபரை தேர்வு செய்ய வேண்டும். நம்பிக்கைக் குரியவர்களை தேர்வு செய்தால் ஏமாற்றமடைய வாய்ப்பில்லை." என்று நீளமாக பேசிய அந்த அதிகாரி "உன் அக்காவின் வாழ்க்கையே உனக்கு ஒரு பாடமா இருக்கும். உன்கிட்ட இவ்ளோ பேச வேண்டியது இல்லை, சரி இப்போ இவனை என்ன செய்யலாம் என்று நீயே சொல்லு, என்றார்.

புது மலர்கள் பூத்திடும் வேளை - மதுவதனி

அவரின் பேச்சைக் கேட்டு தலையை அசைத்தவள் கடைசியில் கூறியதைக் கேட்டு கண்கள் சிவக்க "அவனை உயிரோடவே விடக்கூடாது" என்றாள். பிறகு "இல்லை இல்லை உயிரோடுதான் இருக்கனும். ஆனா ஏன்டா இருக்கேனு தினம் தினம் உயிரை விடனும்" என்று கோபம் மின்னக் கூறினாள். அவளின் கையைப் பிடித்து தட்டிக் கொடுத்தவர், "உன்னோட இந்தக் கோபம் குறையாமலே இருக்கட்டும் இன்னும் கொஞ்ச நேரத்துக்கு" எனக் கூறிவிட்டு சாலையைப் பார்த்தார்.

சென்னை - திருச்சி நெடுஞ்சாலையின் ஒரு ஓரத்தில் அந்த போலிஸ் ஜீப் வந்து நிற்க, அதிலிருந்து சுரேஷைத் தவிர இரண்டு கான்ஸ்டபிள்களும், ஓட்டுனரும் இறங்க, அதன் பின்னோடு அந்த அதிகாரியும் தேனுவும் அவர்களைத் தொடர்ந்து இறங்கினர்.

தேனுவோ ஏன் எதற்கு என்ற கேள்விகள் மனதில் பிறந்தாலும் வெளியில் காட்டிக் கொள்ளவில்லை. ஒரு விதப் பயத்திலும் கோபத்திலுமே இருந்தாள். கைகள் இரண்டையும் இறுகப் பிணைத்துக் கொண்டு அவர்களையேப் பார்த்தாள்.

அந்த சாலையில் இருந்த டீக்கடையில், டீ வாங்கி வர ஒரு காவலரை அனுப்பி விட்டு சாலையின் போக்குவத்தில் தன் கவனத்தைப் பதித்தார். அந்த அதிகாரி தலையில் வழிந்த இரத்தமும், வலியும் சுரேஷை நிதானத்தை இழக்க வைத்தது. பக்கத்தில் ஏதேனும் ஒரு ஹாஸ்பிட்டலுக்கு அழைத்துப் போவார்கள் என்றிருக்க, இப்படி ஊருக்கு ஒதுக்குப்புறமான ஒரு இடத்துக்கு அழைத்து வருவார்கள் என்று நினைக்கவில்லை அவன்.

அவன் பொறுமைப் பறக்க அந்த அதிகாரியிடம் "எதுக்கு என்னை இங்கே கூப்பிட்டு வந்தீங்க, சீக்கிரம் கிளம்புங்க ஹாஸ்பிட்டல் போகலாம், இல்லை என்னை மட்டுமாச்சும் அனுப்புங்க, எனக்கு மயக்கம் வர மாதிரி இருக்கு, என்றான்.

"அடக் கொஞ்சம் பொறுப்பா, ஒரு டீ குடிச்சிட்டு போகலாம், டீ குடிக்கிற நேரத்துல எதுவும் ஆகாது" என்று அவன் பொறுமையை இன்னும் சோதித்தார். அதற்குமேல் ஒரு காவலதிகாரியிடம் பேச பயந்துகொண்டு மீண்டும் ஜீப்பில் பின்பக்கம் ஏறி அமர்ந்து கொண்டான் சுரேஷ். தேனுவிற்கு எதுவும் புரியவில்லை. ஆனாலும் பொறுமையுடன் இருந்தாள்.

புது மலர்கள் பூத்திடும் வேளை - மதுவதனி

# புது மலர்கள் பூத்திடும் வேளை…!

ஒரு கான்ஸ்டபிளின் பின்னோடு வந்த டீக்கடைக்காரர் எல்லோருக்கும் டீயைக் கொடுக்க, தேனு பயந்து கொண்டே மற்றவர்களைப் பார்த்தாள். அவளின் பயம் உணர்ந்து "எடுத்துக் கோம்மா, ரொம்பா சோர்ந்து போயிட்ட, கண்டிப்பா உனக்கு இந்த நேரத்துல தேவை. உன் வீட்டை நினைச்சு பயந்தா, அது தேவையே இல்லை, நானே உன்னை வந்து வீட்டுல விட்டுட்டு உன்னோட அம்மாக்கிட்ட சொல்லிட்டு வரேன், சரியா இப்போக் குடி".

"ம்ம் சரி" என்று தலையசைத்தவளின் குழப்பம் மட்டும் குறையவே இல்லை, சுரேஷிடம் கொடுத்த டீயை வாங்காமல் அவன் சண்டித்தனம் செய்ய "அவனிடமும் இங்க பாருங்க, மிஸ்டர் நீங்க சீக்கிரம் குடிச்சுட்டா கிளம்பலாம். இல்லை நீங்க இங்கேயே இருக்க வேண்டியதுதான். ஒரு போலீஸ்காரன் டீ வாங்கி கொடுத்தா குடிக்க மாட்டீங்களோ, அவ்ளோ பெரிய ஆளா நீங்க, போலீஸ்காரங்கள பகைச்சுக்காதீங்க அப்புறம் உங்களுக்குத் தான் பெரிய நஷ்டம்" என்றார் மற்றொரு கான்ஸ்டபிள்.

தான் செய்து வந்த தவறுகள் எதுவுமே சாட்சியங்கள் இல்லை என்ற எண்ணமே அவனிடம் திமிரை வர வைத்தது. ஆனாலும் அந்த நிலையில் அவர்களை எதிர்க்க துணிவில்லை அவனுக்கு. வேறு எதுவும் பேசாமல் டீயை வாங்கி பருகத் தொடங்கினான். அதுவே அவனுக்கு அவனுடைய இறுதி பயணத்தை உறுதி செய்கிறது என்று தெரியாமல் டீக்குடித்த சிறிது நேரத்தில் அவனுக்குள் சில மாற்றங்கள் நடந்தன. அதில் அவனுக்கு வாந்தியும் தலைசுத்தலும் அதிகமாய் இருந்தது. அவனுக்கு சிறிது பயமும் எழ ஆரம்பித்தது. ஆனாலும் வெளியேக் காட்டிக் கொள்ளாமல் மீண்டும் அந்த அதிகாரியிடம் வந்து முறையிட்டான்.

அவரோ மிகவும் சாவகாசமாக அவனிடம் வந்து "உன்னுடைய கடைசி ஆசை என்ன சுரேஷ் என்றார்.

அதில் அதிர்ந்தவன் "என்ன சொல்றீங்க, கடைசி ஆசையா, என்ன விளையாடுறீங்களா, எனக்கும் கொஞ்சம் சட்டம் தெரியும், கம்ப்ளைன்ட் இல்லாம அரெஸ்ட் பண்ணதே தப்பு அதுல நீங்க ஸ்டேசன் கூப்பிட்டு போகாம இங்கே கூப்பிட்டு வந்தது அதைவிட தப்பு. அதெல்லாம் போக இப்போ வந்து இப்படி பேசுறது ரொம்ப பெரிய தப்பு. முதல்ல என்னை ஒரு ஹாஸ்பிட்டல் கூப்பிட்டு போங்க" என கத்தினான்.

மதுவதனி புது மலர்கள் பூத்திடும் வேளை

அவனின் அந்த பேச்சில் மர்மமாக சிரித்தவர் ஏப்பா உனக்கு இன்னும் ஒன்னுமே புரியலையா, இப்போ நீ கொஞ்சம் கொஞ்சமா செத்துட்டு இருக்க, இன்னும் ஒரு மணி நேரத்துல நீ மேல போகப் போற, அது கூடத் தெரியாம சத்தமா கத்திட்டு இருக்க, என்ன முழிக்கிற, இப்போ நீ குடிச்சியே அதுல விஷம் கலந்து கொடுத்து இருக்காங்க. அந்த விஷம் முறிய என்கிட்ட மருந்து இருக்கு” என்று ஒரு மெடிசின் வயலை எடுத்துக்காட்டி மீண்டும் தன் பாக்கெட்டில் வைத்தவர். “அந்த மருந்து உனக்கு வேணும்னா, எனக்கு சில உண்மைகளை நீ சொல்லணும், உனக்கு ஐந்து நிமிஷம் டைம் தரேன். அதுக்குள்ள சொல்லிடு, வேறு எதுவும் செய்து தப்பிச்சிடலாம் னு நினைச்சா மொத்தமா பரலோகம் போக வேண்டியது தான்”.

அங்கிருந்த மற்ற காவலர்களுக்கு இது எல்லாம் பழகியதுதான் என்பது போல அவரவர் தங்கள் வேலையைப் பார்க்க, தேனுவும் சுரேஷ்-ம் அதிர்ச்சியில் இருந்தனர். ஆனால் தேனுவிற்கோ அது இன்ப அதிர்ச்சி கண்களில் கண்ணீர் வடிய ஓடிச்சென்று அந்தக் காவலதிகாரியின் கைகளைப் பிடித்துக் கொண்டு தன் கண்ணீராலே அவருக்கு நன்றியைக் கூறினாள். அவளின் நிலையை அறிந்த அவரும் அவள் கைகளைத் தட்டிக் கொடுத்துவிட்டு சுரேஷை “என்ன சொல்றீங்க, நான் என்ன பண்ணேன், எதுக்கு இப்போ இப்படி சொல்றீங்க, நீங்க சொல்றது எதுவும் புரியல, பர்ஸ்ட் அந்த மெடிசினைக் கொடுங்க”.

“ஹா ஹா தம்பி நீ இன்னும் வளரனும்டா, மூனு வருசமா உன்னைத் தேடுறாங்க பெங்களூர் போலிஸ், என்கிட்ட வந்து மூனு நாள் தான் ஆகுது. உன்னை ஸ்கெட்ச் போட்டுத் தூக்கிருக்கேன். நீ ஒன்னும் தெரியாத மாதிரி பேசுறதுக்கு நான் என்ன புண்ணாக்கு வியாபாரமா பண்ணிட்டு இருக்கேன். ஐ. பி. எஸ் பாஸ் பண்ணிட்டு ஸ்பெசல் ஆபிசரா உன்னோட கேஸ்ல அப்பாயிண்ட் ஆயிருக்கேன். உன்னைப் பத்தி தெரியாமலா இந்தக் கேசை நான் எடுத்துருப்பேன். இல்லை என்னோட ஹையர் ஆபிசர் எனக்கு கொடுத்துப்பாரா? என்னடா எத்தனை விதமான டெக்னிக்ஸ் யூஸ் பண்ணி பொண்ணுங்களை ஏமாத்துன உன்னை சுத்தி என்ன நடக்குதுனு தெரியாம இருப்பியா? என்னால நம்ப முடியலையே” என்றார் அந்தப் பெண் காவலதிகாரி லத்திகா…….

சுரேஷ் தான் வசமாக மாட்டிக்கொண்டதை உணர்ந்து இங்கிருந்து தப்பிக்கலாமா ஏன் யோசிக்க ஆரம்பித்தான். ஆனால் அவனின் தலைசுத்தல் அதிகமாகிக் கொண்டே இருந்தது. ஒரு விதமான மயக்கநிலைக்குச் சென்று கொண்டிருப்பதாக உணர்ந்தான்.

புது மலர்கள் பூத்திடும் வேளை - மதுவதனி

# புது மலர்கள் பூத்திடும் வேளை...!

இப்போதைக்கு அந்த மெடிசினை வாங்க வேண்டும் என்பதை முக்கியம் என்று புரிந்து கொண்டவன். உயிர் பிழைத்தால் போதும், மற்றபடி தன்னை எப்படியும் தன்னுடைய கூட்டாளிகள் காப்பாற்றி விடுவார்கள் என்று நம்பி உண்மைகளைக் கூறுவதாக ஒப்புக்கொண்டான்.

தேனுவிற்கு இதில் தான் தலையிடவில்லை என்றாலும் போலீஸ் அவனைக் கண்டிப்பாக பிடித்து இருப்பார்கள், கடவுள் அப்படி ஒன்றும் அமைதியாக இருந்து விடவில்லை என்பதை உணர்ந்து கொண்டவள் அடுத்து அவன் என்ன சொல்லப்போகிறான் என்பதில் கவனத்தைப் பதித்தாள்.

“சரி, இப்போ சொல்லு, எத்தனை பொண்ணுங்களை இப்படி பண்ணியிருக்க, அதுல இப்போ வேணியோட சேர்ந்து நாலு பொண்ணுங்க மிஸ்ஸாகிருக்காங்க, அவங்களை என்ன பண்ண, உன்னோட கூட்டம் யாரு, உனக்கு பின்னாடி யாரு இருக்கா” என்று குரலில் கடினத்தைத் தேக்கி அவனைப் பார்த்துக் கேட்டாள் லத்திகா.

இது என்ன மாதிரியான விசாரனை நடுரோட்டில், இருளும் நேரமும் ஆகிவிட்டது. வாகனங்கள் இப்போது இன்னும் அதிகமாகிக் கொண்டே பயணித்து. சுரேஷின் பயமும் அதிகமாகியது. அதை வெளிக்காட்டாமல் உண்மையை கூற ஆரம்பித்தான்.

“என்னுடைய நண்பர்கள் மொத்தம் மூன்று பேர், நான் மற்றும் குமார், இந்திரன்.. நானும் குமாரும் அடிக்கடி சந்தித்துக் கொள்வோம். இந்தர் இப்போது மும்பையில் இருக்கிறான். எல்லாத் தவறுகளும் நாங்கள் மூவரும் சேர்ந்துதான் செல்வோம். வேணி விசயத்தில் நானும் குமாரும் மட்டும்தான். மற்றபெண்கள் எல்லாம் காதல் என்ற பெயரில் ஏமாற்றி அவர்களுக்குத் தெரியாமல் போதை மருந்துக் கொடுத்து, பிறகு அவர்களுடன் உல்லாசமாக இருந்துவிட்டு, அதை வீடியோ எடுத்து அவர்களிடம் பணம் பறிப்பது இப்படித்தான் எங்கள் மூவரின் வேலை, எல்லாரும் குடுப்பப் பின்னணியில் நடுத்தர வர்க்கத்தையே சேர்ந்தவர்கள் அவர்கள் தான் மானம் மரியாதை என்று போலீஸ்க்கு போக மாட்டார்கள், அதனால் தான் இப்படிப் பட்ட பெண்களைத் தேர்ந்தெடுப்பது. மற்றபடி அந்த வீடியோவில் இருக்கும் முகங்களை மார்ப்பிங் செய்து அதை நெட்டில் விடுவது இந்திரனின் வேலை”.

புது மலர்கள் பூத்திடும் வேளை - மதுவதனி

"ஆனால் யாருடைய உண்மையான வீடியோக்களையும் நாங்கள் அப்லோட் செய்யவில்லை. வேணி மட்டுமில்லாமல் மற்ற மூன்று பெண்களுக்கும் எங்களைப் பற்றித் தெரிந்துவிட்டது. அதனால் அவர்களுகேத் தெரியாமல் அவர்களைக் கடத்தி மும்பையில் ரெட்லைட் ஏரியாவில் விற்று விட்டோம்" என்றான் மயங்கி விழ. அவனின் முகத்தில் ஓங்கி ஒரு அறைவிட்டவர் கண்களில் கனல் பறக்க "வேணியைப் பற்றிச் சொல்லு" என்றார் அதே கடினக் குரலில்.

அதுவந்து அவள் இப்போ உயிரோடு இல்லை.......

"என்ன சொல்ற, என்னாச்சு அக்காவுக்கு, நிஜமாவே அக்கா சொன்ன மாதிரியே செஞ்சுட்டாளா.....? ஐயோ... இல்லை இல்லை அவங்க ரொம்ப பயப்படுவாங்க தற்கொலை பண்ணிக்கிரளவுக்கு தைரியம் இல்லை. நீ தான் ஏதோ பண்ணிட்ட, உண்மையை சொல்லுடா, என்ன பண்ண.... என்று அவனின் தலையைப் பிடித்து உலுக்கியபடி கதறினாள் தேன் நிலா.....

லத்திகாவிற்கு இது தெரியும் போல, ஓரளவிற்கு ஊகித்திருந்தார். அதனால் தேனுவை சமாதானப்படுத்தி விட்டு சுரேஷிடம் திரும்பி தன் பார்வையைச் செலுத்தினார். ஒரு பெண்ணின் பார்வை இவ்வளவு பயத்தைக் கொடுக்குமா என்று முதன் முறையாக யோசித்தான். அவனைப் பார்த்து பயந்த பெண்களையே பார்த்திருந்தவனுக்கு லத்திகாவின் பார்வையில் கனல் கூடி தனக்கு பயம் அதிகரிப்பதை உணர்ந்தான்.

"அன்றைக்கு வரும்போது பணம் எதுவும் எடுத்து வரல, வேணி கொஞ்சம் நகைகள் மட்டும் தான் கொண்டு வந்தாள். அதுவும் எல்லாமே கவரிங் நகைகள், அப்போ தெரியல, அதையெல்லாம் விற்க போகும் போதுதான் தெரியும், வேணியை அழைக்கப் போனது என்னோட இன்னொரு நண்பன் இந்திரன் தான். அது வேணிக்குத் தெரியாது. அவள் வந்து ரயில்வே ஸ்டேசன்ல வெயிட் பண்ணிட்டு எனக்கு போன் பண்ணா, அப்போ நான் என்னால வரமுடியல என்னோட நண்பன் வருவான் அவனோட கிளம்பி இப்போ போ, நான் ஒரு த்ரி ஹவர்ஸ்-ல உங்களோட ஜாயின் பண்ணிக்குவேன் என்று சொன்னேன் வேணிக்கு பயம் வந்திருக்கும் போல, நீங்க வாங்க, அவங்க கூட எல்லாம் போகமாட்டேன் என்று சொல்லி ஒரே அழுகை எனக்கு கோபம் வந்து திட்டி அவனோட போகச் சொல்லி வச்சுட்டேன்.

மதுவதனி - புது மலர்கள் பூத்திடும் வேளை

ஆனால் அவகிட்ட இருந்து நகையை மட்டும் வாங்கிட்டு அவளை அங்கேயே இருக்கச் சொல்லி இந்தர் எனக்கு போன் பண்ணான். நான் அவனை அப்படியே அழைச்சுட்டு மும்பை போய் வழக்கம் போல சேல்ஸ்ல விட்டுரு, அப்புறம் போன் பண்ணு அப்படினு சொன்னேன். ஆனால் அடுத்த மூணு மணி நேரத்துல எனக்கு போன் வந்தது இந்தர் இறந்துட்டதா, என்னனு விசாரிக்கப் போனேன். இரண்டு பேரு தண்டவாளத்தில் விழுந்து தற்கொலை பண்ணிக்கிட்டாங்க. உங்களுக்குத் தெரியுமான்னு என்று கேட்டாங்க, நான் இது என்னோட நண்பன் அது அவனோட லவ்வர், வேணியைப் பத்தி சொல்ல பயமா இருந்தது, அதனால அவ ஒரு அநாதை அப்படினு சொல்லி கொஞ்சம் பணம் செய்து அந்தக் கேசை முடிச்சுட்டோம், வேணியோட முகம் முழுசும் சிதைஞ்சு போயிடுச்சு, அதனால் யாருக்கும் அடையாளம் தெரியல அவங்க ரெண்டு பேருக்கும் ஏதோ வாக்குவாதம் நடந்துருக்கு, அப்புறம் வேணி அவனை தள்ளி விட்டுருக்கா, ஆனா அவன் அவளையும் சேர்த்து இழுத்து கீழே விழுந்துருக்கான் அப்படியே ட்ரெயின் வந்து அடிச்சிட்டு போயிடுச்சு". என்றவன் அமைதியாகி விட.

தேனுவின் நிலையைப் பார்த்த லத்திகா. தேனு இதோப்பார் மனசைத் தேத்திக்கோ, இனிதான் நீ தைரியமா இருக்கனும் உன்னோட அம்மாவை நினைச்சுப் பாரு, அவங்களுக்கு உன்னை விட்டா யார் இருக்கா? இவனைப் பத்தி யோசிக்காதே, இப்போ பாரு இவனுக்கு என்ன நடக்கப் போருதுனு. உன்னோட அக்கா இதைப் பார்த்து சந்தோசப்படுவா...... என்றவர் மேலும் பேசி அவளை சமநிலைக்கு கொண்டுவர முயற்சித்தார். ஆனால் எங்கே அவள்தான் தன நிலையிலையே உழன்று கொண்டிருந்தாளே...

அடுத்து சுரேஷிடம் திரும்பியவர், தன்னிடம் இருந்து மெடிசினை அவனுக்கு போட்டு விட்டு, எதிர் புறத்தில் இருந்த காரைக் காட்டி அதில் ஹாஸ்பிடலுக்கு சொல்லுமாறு கூறினர். சுரேவும் எதைப் பற்றியும் யோசிக்காமல் விட்டால் போதுமென்று இறங்கி ஓடியவன் முன்னே பின்னே வரும் வாகனகளைக் கவனிக்காமல் செல்ல சாலையைக் கடக்கும் முன்னே ஒரு காரின் முன் விழுந்து, பின்னே வந்த லாரியின் மேல் மோதி சில நொடிகளில் இரத்த வெள்ளத்தில் மிதந்தான்.

அவனைப் பார்த்து ஒரு ஏளனச் சிரிப்பை உதிர்த்த லத்திகா தேனுவை திரும்பி பார்த்தார். அவளும் அவரைத்தான் பார்த்துக் கொண்டிருந்தாள்.. "என்ன தேனு அப்படி பார்க்குற இதுவும் ஒருவகையில் என்கவுண்டர்தான்" என்றவர் அவளை ஏற்றி மற்றவர்களையும் கிளப்பிக் கொண்டு சென்றார்.

புது மலர்கள் பூத்திடும் வேளை - மதுவதனி

# புது மலர்கள் பூத்திடும் வேளை…!

சின்னஞ்சிறு கூட்டிலே சந்தோச பறவையாய் சிறகடித்தவள்…
சிறு துரும்பும் அண்டாமல் அன்னையின் அடைக்கலத்தில் திளைத்தவள்…
குட்டி தங்கையின் குறும்பினில் கிளு கிளுத்து சிரித்தவள்…

கல்லூரி வாழ்கையில் சிரத்தையாய் படிப்புண்டு என்று இருந்தவள்…
காதல் வலை வீசும் காளையின் கண் பார்வையில்…
கண்ட துரியோதனின் சாயலில்…விதிர் விதிர்த்து
பிடரியில் கால் பட ஓடி வந்தவளின் பின்னாலே…
விதியும் மண்போல ஒட்டிக்கொண்டு வந்தேன்ன..? கொடுமையோ…. !

ஏன் இந்த அவலம்…பெண்ணுக்கே அதிகம்…
மானத்தையும் உயிரையும் பறிக்கும்…
பரிதாபம் தினமும் அரங்கேறும் காட்சி இங்கு தவறாமை…

பெண் என்றும் தலைகுனிய வேண்டாம்…
என்றும் தடுமாறவும் வேண்டாம்…
பெண்ணுக்கு மதிப்பு…அவள் ஒழுக்கத்தில் இருக்கு…
சிறு வயதில் இருந்து அன்னையின் உபதேசம் கண் முன்னே நிழலாட…

தவிர்த்து… ஒதுங்கி ….ஒடுங்கி… தான் உண்டு தன் குடும்பம்…
படிப்பு உண்டு என்று இருந்தவளை…
குளிர் பிரதேசம் குளிர்ச்சியாய் காட்டிய அழகில் லயித்து இருந்தவளை…
காட்டிய புண்ணியம் அந்த அதிகாலை வேளையில்…
அதே கட்டிளங்காளையின் கண்ணில் படதானா…?
துகில் உரிக்க வேண்டும் என்ற உத்வேகம் மறுபடியும் வீர் கொண்டு எழுதந்தது
ஏனோ?? அவள் செய்த பாவம் தான் என்னவோ…?
அழகிய வதனம் கொண்டது அவளது தவறில்லையே……

விளையாட்டாய் தவறு செய்தாலும் குற்றம்… மீண்டும் நீ செய்தால்…
பெண் உடம்பில் உயிர் இல்லை நித்தம்…
இதை உணருமா அந்த காம மிருகம்…
நல்லவன் போல வேடமிட்டு நடித்தாலும்…
உள்ளுணர்வு எச்சரிக்க ஒதுங்கி போனவளை…
சீரழித்தே தீருவேன் என்ற கங்கணம் அவன் கண்களில் மின்ன…

புது மலர்கள் பூத்திடும் வேளை - மதுவதனி

# புது மலர்கள் பூத்திடும் வேளை…!

போதையின் தாக்கத்திற்கு உற்படுத்தி… துகிலுரித்து வேட்டையாட…
பாவம் பேதையின் நினைவும் மனமும் அறியவில்லையே…
தான் மட்டும் இல்லாமல் தனக்குதவி என்று வந்த இன்னொரு கையையும்..
இதில் இழுத்து விட…. பேரானந்தம் அந்த முகத்தில்…
அருவருப்பை தரும் காம வேட்டையாடல் அங்கே அரங்கேறியது…

நிலை அறிந்து கதறும் அந்த பெண்ணின் மனதிற்கு யாரும் சமாதானம் சொல்வது…???
கண்ணிரே அதன் தடயங்கள் ஆனதே….
ஆண்கள் பலம் உள்ளவர்கள்..பெண்களின் பாதுகார்புக்கு அல்லவா..
சூறையாட பலத்தை உபயோகிக்கும் ஆண்களுக்கு அவமானம் அல்லவோ…

சில்லு சில்லாய் உடையும் இதயம் தன் வலியை தமைக்கையின்
மடியில் சமர்பிக்க… அன்னையின் முகம் வேதனையில் வாட வேண்டாம் என்ற
மன்றடலோடு….

தனது உயிர் இருப்பதே தவறு என என்னும் நேரம்…
உனக்குள்ளும் ஒரு உயிர் உள்ளதே என்று காட்டும் தருணம் கொடுமையிலும்
கொடுமை…

அவள் எங்கனம் தவறு செய்தாள்… பிறர் செய்ய இங்க மரண அடியின் வடுக்களாய்…
அவள் உள்ளத்திலும்…உடம்பிலும் நிரந்தர வாசம் எப்படி தகுமோ…?

உனது நிழலை வெளியேற்றி குடும்பத்தை கேவலபடுத்துவேன் என்று…
மிரட்டி பணம் பறித்து போகும் அந்த ஈன பிறவியிடம் தோற்று போக எண்ணம்
இல்லாது…

தனது உயிர் துறந்தால் மட்டுமே விமோசனம் என்று முடிவெடுக்கும் பேதை… பாவம்…
கடவுளுக்கு கருணை என்பதே என்மேல் இல்லையா எனும் என்னும் அளவிற்கு
விரக்தி ஆட்டுவிக்க படுகிறது….

இதுபோல உள்ள ஈன பிறவினை இன்னும் விட்டு வைத்தல் ஆகாது…
என் போல பல பெண்களின் வாழ்கையின் அந்தரத்தில் தொங்குமே என…
அந்த நேரத்திலும் நன்மையை என்னும் அழகிய உள்ளம் அழுகி போன மாயம்
என்ன???

புது மலர்கள் பூத்திடும் வேளை - மதுவதனி

# புது மலர்கள் பூத்திடும் வேளை...!

நச்சு விஷத்தை அழித்து தானும் ஒழிந்து போக திட்டமிட்டு...
தான் வளர்ந்த அழகிய கூட்டை விட்டு வெளியேறும் கோலம் கண்ணில் கண்ணீரை பொழிகிறதே...

நனவு அறிந்து சிறு பாவமும் அறியாத பெண்மை...
பெண்மையின் அடையாளத்தை தொலைத்து... பெண்ணை பிறந்தது பாவமோ... யார் விட்ட சாபமோ....?????

விதியின் விளையாட்டை யார்தான் அறிந்து கொள்வது...
அறியாமல் இருப்பதே நன்று...
அறிந்து கொள்ளுதலும் நன்று என்று என்னும் கூட்டமும் உண்டே...

நன்றி மிது.......

*****************************************************************************************************

**வேளை தொடரும்.......**

புதுமலர்கள் பூத்திடும் வேளை - மதுவதனி



வேளை - 16

*******************************************************************************************************

மனதில் உறுதி வேண்டும்
வார்த்தையிலே தெளிவும் வேண்டும்
உணர்ச்சி என்பது வேண்டும்

ஒளிபடைத்த பார்வை வேண்டும்
ஞானதீபம் ஏற்ற வேண்டும்

இடைவரும் பலவிதத் தடைகளை
தகர்த்திங்கு வாழ்ந்து காட்ட வேண்டும்
இலக்கியம் பெண்மைக்கு

புது மலர்கள் பூத்திடும்

# புது மலர்கள் பூத்திடும் வேளை...!

**இலக்கணம் நீ என யாரும் போற்ற வேண்டும்.**
**மாதர்தம்மை கேலி பேசும்**
**மூடர் வாயை மூடுவோம்**

**மானம் காக்கும் மாந்தர் யார்க்கும்**
**மாலை வாங்கி போடுவோம்.**
**வீடு காக்கும் பெண்ணை வாழ்த்தி நாடும் ஏடும் பேச வேண்டும்.**

**சமைக்கின்ற கரங்களும் சரித்திரம் படைப்பதை பூமி பார்க்கவேண்டும்.**
**தூரத்து தேசத்தில் பாரதப் பெண்மையின் பாடல் கேட்க வேண்டும்.**

**பெண்கள் கூட்டம் பேய்கள் என்று பாடம் சொன்ன சித்தர்களும்ஈன்ற தாயும**
**பெண்மை என்று எண்ணிடாத பித்தர்களே.**

**ஏசினாலும் பேசினாலும் அஞ்சிடாமல் வாழ வேண்டும்.**

**********************************************************************************************

சுரேஷ் ரத்த வெள்ளத்தில் மிதந்ததைப் பார்த்தும் கூட தேன்நிலாவின் மனம் சமாதானம் அடையவில்லை இன்னும் பெரிய தண்டனைக் கொடுத்துருக்கலாமோ என்றுதான் தோன்றியது... அவன் சொன்ன உண்மைகளில் இருந்து அவன் எவ்வளவு மோசமானவன் என்பதை புரிந்து கொண்டதில் இருந்து அவளின் எண்ணம் அதையேதான் நினைத்துக் கொண்டிருந்தது..

என்னதான் வேணி கடிதம் எழுதி தற்கொலை அது இது என்று சொல்லியிருந்தாலும் அதையெல்லாம் செய்ய மாட்டாள், அவளுக்கு தைரியம் மிக குறைவு என்றே நினைத்திருந்தாள். ஆனால் அவள் நினைத்ததற்கு மாறாக நடந்ததை நினைத்து அவள் மனம் ஒருநிலையில் இல்லாமல் தவித்தது.. அந்த உண்மையை ஏற்கவும் முடியாமல் தவிர்க்கவும் முடியாமல் அவளை பாடாய்படுத்தியது அவள் மனம்... ஆனாலும் அவளின் உள்ளுணர்வு வேணிக்கு ஒன்றும் இல்லை அவள் எங்கோயோ நல்லமுறையில் நல்ல இடத்தில் இருக்கிறாள் என்றே தோன்ற வைத்தது.. அவள் அப்படி நினைக்க வேணியின் கடிதமும் ஒரு காரணம். அப்போது அந்த கடிதத்தை தான் மனக்கண் முன் கொண்டு வந்தாள்.

புது மலர்கள் பூத்திடும் வேளை - மதுவதனி

# புது மலர்கள் பூத்திடும் வேளை...!

*........ப்ரியமான குட்டிம்மாவுக்கு.......*

*இந்தக் கடிதத்தை நீ படிக்கும்போது நான் உங்களையெல்லாம் விட்டு, இந்த உலகத்தைவிட்டு ரொம்ப தூரம் போயிருப்பேன். நீ என்னை மன்னிச்சுடுடா, நான் இப்படி ஒரு முடிவு எடுத்ததுக்கு நீ எவ்ளோ கோபப்படுவ, உனக்கு இதெல்லாம் பிடிக்காது என்றெல்லாம் எனக்குத் தெரியும். ஆனாலும் எனக்கு வேற வழி தெரியலடா....*

*என்ன எழுதுறதுனே தெரியல குட்டிம்மா... நான் எடுத்த முடிவு சரியா, தப்பானே தெரியல, ஆனா நான் இருக்கக் கூடாது அப்படி மட்டும் தோணுது. என்மேல் உனக்கு ரொம்ப கோபம் வரும். அது நியாயமும் கூட, ஆனால் என் நிலையை யோசித்துப் பார்த்தால் நான் எடுத்த முடிவு சரிதான்.*

*நான் மறுபடியும் அவனை நம்பி போயிட்டதா நினைச்சிடாத, கண்டிப்பா அவங்க ரெண்டு பேர்ல யாராவது ஒரு ஆள் என்னை அழைச்சுட்டுப் போக வருவாங்க, அப்படி வரும்போது அந்த ஒரு ஆளை நான் என் கையாலையே கொன்னுடுவேன். அவனைக் கொன்னுட்டு நானும் உயிரோட இருக்கமாட்டேன். அப்படி இருந்தால் இந்த சமுதாயம் என்னை வார்த்தையாலையே கொன்னுடுவாங்க. ("அக்கா இந்த சமுதாயமா உங்களைப் பார்த்துக்கப் போகுது, பிரச்சனை என்று வந்தபோது இந்த சமுதாயமா உங்களை காப்பாத்தினது, நீங்க தேவையில்லாம இந்த சமுதாயத்தைப் பார்த்து பயப்படாதீங்க, சமுதாயம் என்பதே நாம் தானேக்கா, நாம உருவானதுதானே அது" என்று நீளமாய் நீ தலையைச் சிலுப்பிக்கொண்டு பதில் சொல்லும் அழகு என் கண்முன் தோன்றுகிறது)*

*அதனால் எனக்கு வாழ்க்கையே வெறுத்து விட்டது. தப்பே செய்யாமல் இப்படி ஒரு பழியைச் சுமக்கிறேன் என்று யாரும் வருத்தப்பட மாட்டார்கள். ஆனால் ஊசி இடம் கொடுக்காமல் நூல் அப்படி நுழைந்தது என்று கேலிபேசி வேதனைபடுத்துவார்கள். மேலும் நம் அம்மாவையும் அசிங்கமாகப் பேசுவார்கள், பெண் பிள்ளைகளை வளர்க்கத் தெரியாதவள் என்ற பட்டமும் கொடுப்பார்கள்......*

*இதெல்லாம் நடக்கக் கூடாது என்றுதான், நான் போகிறேன். நீ கேட்கலாம் இப்படி போனால் மட்டும் பேசமாட்டார்களா என்று பேசுவார்கள் தான்.*

புது மலர்கள் பூத்திடும் வேளை - மதுவதனி

*ஆனால் அவளுக்கு பிடித்தவனோடு போய்விட்டாள், எங்கோ ஒரு மூலையில் இருப்பாள் என்று நினைத்துக் கொண்டு அமைதியாகி விடுவார்கள். காலப்போக்கில் அம்மாவும் கோபம் குறைந்து அவள் எங்கேயோ நல்லமுறையில் வாழ்கிறாள் என்று நினைப்பார்கள். அதனால் நான் வீட்டைவிட்டு ஓடிபோனவளாகவே இருக்கட்டும். நீ என்னைப் பற்றி எதையும் அம்மாவிடம் சொல்லவேண்டாம்.*

*இப்படி ஒரு நிர்பந்தத்தை உன்னிடம் திணிப்பதற்காக நீ என்னை மன்னித்துவிடு குட்டிம்மா, நீ என் செல்லம்டா, உன்னையும் அம்மாவையும் பிரிந்து போவது என் உயிரே போவது போல்தான். இது அதையும் மனதில் வைத்துக் குழப்பிக்காதே, தெளிவான மனநிலையில் இரு. அம்மா உன்னிடம் கோபமாகப் பேசினாலும் அமைதியாக போ…. ஏதோ கோபத்திலும் ஆதங்கத்திலும் பேசுவார்கள், ஆனால் தனியாக நிறைய வருந்துவார்கள். அதையெல்லாம் யோசித்து வருத்தப்படாதே….*

*உனக்கு நான் அறிவுரை சொல்ல வேண்டிய அவசியம் இல்லை. வயதில் நீ சிறியவளாக இருந்தாலும், அறிவிலும், பக்குவத்திலும் நீ என்னைவிட மூத்தவள் தான். நானே உன்னைப் பார்த்து நிறைய விசயங்களை மாற்றியிருக்கிறேன். எனக்கு உன்னைப் பற்றிய கவலையே இல்லை. ஆனால் அம்மா…., அம்மாவை நீ நல்லமுறையில் பார்த்துக்கொள். நம்மை விட்டால் அவர்களுக்கு வேறு யார் இருக்கிறார்கள். நாம்தான் உலகம் அவர்களுக்கு..*

*நான் வீட்டை விட்டுப் போனதே பெரிய அதிர்ச்சியாக இருக்கும். அதில் இன்னும் மற்ற விசயங்களும் தெரிந்தால், இன்னும் இன்னும் நொடிந்துப் போவார்கள். அவர்கள் தான் நம் இருவரையும் சரியாக கவனிக்காமல் விட்டுவிட்டாதாகவே நினைத்து குற்ற உணர்ச்சியில் தவித்துப் போவார்கள். நான் மட்டும் பெண் அல்ல… நீயும் தான் என்பதை அவர்களுக்கு உணர்த்து, என்மேல் கோபம் வந்து என்னை முற்றிலுமாக ஒதுக்கி விட்டார்கள் என்றால் அதுவே அவர்களின் உடல்நிலைக்கு நல்லது.*

*என்னைப் பற்றி கவலைப்படாதே, எனக்குத் துணையாக நம் தாத்தா பாட்டி அப்பா என்று மூன்று பேர் இருக்கிறார்கள். ஆனால் உங்களுக்கு, நீங்கள் மட்டும்தான். ஒருவருக்கொருவர் ஆதரவாக இருக்க வேண்டும். அதனால் என்னை மறந்து நீங்கள் இருவரும் உங்கள் வாழ்க்கையை வாழுங்கள்.*

*அதுவே என்னுடைய ஆசை, இறப்பது என்றால் ஒரு காலத்தில் பயம் வந்தது. ஆனால் நானே இப்படி வருத்தி அழைப்பேன் என்று நினைக்கவே இல்லை. எனக்கு வாழவேண்டும் என்று நிறைய ஆசை இருக்கு குட்டிம்மா. நிராசையோடு இறந்தால் பேயாக சுற்றுவார்களோ என்ற பயம் வேறு … சாவிலாவது எனக்கு நிம்மதி வேண்டும். அதனால் என்னுடைய ஒரே ஆசை "நீ அவனை பழிவாங்குவதாக நினைத்துக் கிளம்பி விடாதே நீ சந்தோசமாக வாழ வேண்டும் அதுவே என்னுடைய ஒரே ஆசை, மற்றபடி அம்மாவை நீ நல்லமுறையில் பார்த்துக் கொள்வாய் என்ற நம்பிக்கை எனக்கு இருக்கிறது. அதனால் எனக்கு அவர்களைப் பற்றி எந்த வருத்தமும் இல்லை. உங்களைப் பிரிந்து போகும் வழியைத் தவிர எனக்கும் வேறு வருத்தம் இல்லை.*

*நீ நன்றாக சாப்பிடு, உடம்பைப் பார்த்துக்கொள், உன்னிடம் இதை சொல்லக் கூடாது. ஆனால் பாதிக்கப்பட்ட பெண்ணாகவும் உன் அக்கா என்ற முறையிலும் இதை சொல்கிறேன் தயவு செய்து தகுதியில்லாத ஒருவனைக் காதலித்துவிடாதே" அது எங்கே சென்று முடியும் என்று என்னைப் பார்த்த அனுபவம் உனக்கு இருக்கும். அதனால் அதிலும் நீ உறுதியான நல்ல முடிவையே எடுப்பாய் என்று எனக்குத் தெரியும்… நிறைய எழுதி உன்னை போரடிக்கிறேன் போல…. நான் போகிறேன் மீண்டும் மீண்டும் என்னை மன்னித்து விடு, உன்னை இப்படி ஒரு சிக்கலில் விட்டுச் செல்வதால்..*

*கோடிகோடி ஆசை முத்தங்களுடன்,*
*உன் அன்பு வேணிக்கா……..*

அவள் இப்படி எழுதினால் கண்டிப்பாக உயிரோடுதான் இருப்பாள் என்றே உறுதியாக எண்ணினாள் தேனு. அதன் பிறகு அவள் முகம் தெளிவடைய லத்திகாவை திரும்பி பார்த்தாள். அவரும் அவளைத் தான் பார்த்துக் கொண்டிருந்தார்.. அவளின் தெளிவைப் பார்த்து தான் பேச்சை ஆரம்பித்தார். "தேனு உனக்கு தெரிஞ்சோ தெரியாமலோ பெரிய உதவி பண்ணியிருக்க. அதுக்கு உனக்கு எப்படி நன்றி சொல்றதுனே தெரியல. நீ இல்லன்னா இவனை என்னால பிடிச்சிருக்க முடியாது, ஏனா இவன் செஞ்ச எந்த குற்றத்துக்கும் ஒரு எவிடென்ஸ் கூட இல்லை. ஆனா இவனும் அந்த குமாரும் வெறும் கையாளுங்க தான். இந்தர் அவனுங்களுக்கு தெரியாமலே அவனோட வேலைக்கு இந்தப் பொறுக்கிகளை யூஸ் பண்ணிட்டு இருந்துருக்கான்.

# புது மலர்கள் பூத்திடும் வேளை…!

இந்தருக்கு முழுக்க முழுக்க இந்த வேலைதான்.. நெட்டில் ஆபாச படங்களை அப்லோட் செய்து அதை மார்க்கெட்டில் விடுவது, இந்த சுரேஷ்க்கு தெரிந்து கொஞ்சம் தெரியாமல் அதிகம் என்று அவன் செய்த வேலைகள் ரொம்ப அதிகம்.

இது எதுவும் தெரியாம அவன் கொடுக்கிற பணத்தை மட்டும் வாங்கி எஞ்சாய் பண்ணிட்டு இருந்துருக்குங்க இந்த கேவலமான ஜென்மங்க. இப்போ இவன் இறந்ததும் அவனோட மும்பை கூட்டாளிகளுக்கு இந்த சுரேஷ் மேல டவுட் வந்துருக்கு, அவங்க சுரேஷ் மேல சட்டப்படி கேஸ் கொடுக்காம அவனை விசாரிக்க மேலிடத்துல சொல்லிருகாங்க. ஆனா விசாரிச்ச வரைக்கும் இந்தர் இறந்ததுக்கு இவன் காரணம் இல்லன்னு தெரிஞ்சிடுச்சு. ஆனாலும் அவன உயிரோட விட மனசில்ல. அதுதான் அவனுக்கு இப்படி ஒரு முடிவு.. அப்புறம் இன்னொரு காரணமும் இருக்கு அந்த இந்தர் இவனுங்களுக்கு தெரியாமலே ரியல் வீடியோஸ் அப்லோட் பண்ணிட்டான். அதுல ஒரு பொண்ணு சூசைட் பண்ணிக்கிட்டா. ரீசன் என்னனு தோண்டும் போது வந்து நின்னது இந்த சுரேஷும் அவனோட ப்ரண்ட்சும் தான்.

இவனுங்க வெறும் கையாளுங்க தான், ஆனா இவனுங்களுக்கு பின்னாடி இருக்கிறது பெரிய பெரிய ஆளுங்க. இவனுங்களையெல்லாம் அடிச்சே கொன்னாலும் உண்மையை சொல்ல மாட்டாங்க. அதனாலதான் இவன் தேவை இல்லைன்னு இப்படி பண்ணிட்டேன். நான் ஏன் உன்னை வச்சே பண்ணேன் தெரியுமா. உன்னோட அக்காவுக்கு ஒரு நியாயம் செய்யணும் இல்ல அதுவும் அவளோட கஷ்டத்தை பார்த்த உன் முன்னாடிதான் செய்யனும்னு தோணுச்சு. உன்னை ரெண்டு நாளா எங்க ஆளுங்க பாலோ பண்றாங்க. உன்னைப் பத்தி எல்லாமே தெரியும்.

இப்போ அது பிரச்சினை இல்லை. நான் இந்த கேஸ்-ல ஸ்பெசல் ஆபிசர், ஒன் வீக் தான் எனக்கு கொடுத்த டைம். அதுக்குள்ள முடிக்க சொல்லிருகாங்க, என்னோட ஹையர் ஆபிசர், எனக்கு கொடுத்த டைம் ரொம்ப கம்மி, இவனை உயிரோட வேணும்னு யாரும் கேட்கல.. அதே சமயம் அவன அர்ரெஸ்ட் பண்ணி விசாரிக்கவும் சொல்லல, அப்படியே ஆயிட்டாலும் அவன் உயிரோட இருக்க மாட்டான். ஜெயிலுக்குல்லையே ஆள் வச்சு போட்டுருவாங்க.. அவங்க பெரிய நெட்வொர்க் இப்போ கூட நம்மளை தெரிஞ்சி இருக்கலாம். நான் யாருக்கும் பயப்பட மாட்டேன்.. என்னோட தைரியம் தான் என்னோட நம்பிக்கை. சரி இப்போ என்னோட கெஸ்ட் ஹவுஸ் போறோம். உன்னோட அம்மாவை அங்க வரசொல்லிருக்கேன்.

உன் அக்காவைப் பத்தி எல்லா உண்மையும் அவங்க கிட்ட சொல்லி உன்னை அனுப்பி வைக்குறேன், அப்புறம் நான் பெங்களூர் போகணும், இந்த கேஸ் அங்கதான் ஸ்டார்ட் ஆகிருக்கு, முடிக்கிறதும் அங்கதான், அதனால் நான் நாளை காலை கௌம்பிடுவேன்", என்று பேசிக்கொண்டே வந்தவர் தேனு ஏதோ சொல்ல வருவது புரிந்து "என்ன தேனு என்கிட்டே எதாச்சும் சொல்லனுமா.."? என..

அவளும் "ஆமாம் மேடம் நீங்க எனக்கு ஒரு ஹெல்ப் பண்ணனும். நீங்க அம்மாக்கிட்ட இந்த விசயங்கள் எதையும் சொல்ல வேண்டாம்.. அக்காவைப் பத்தி தெரிஞ்சா அவங்களுக்கு என்ன நடக்குமோ என்று எனக்கு பயமா இருக்கு, இப்போதைக்கு எனக்கென்று சொல்லிக்கொள்ள அவர்கள் மட்டும் தான் இருக்கிறார்கள், அவர்களுக்கு ஏதேனும் ஆகி விட்டால் நான் அனாதையாகி விடுவேன், வேணி இப்போது உயிரோடு இல்லை என்று தெரிந்தால் இன்னும் நொடிந்து போவார்கள், அதனால் அவள் காதலித்தவனோடு போய்விட்டாள் என்றே நினைத்துக்கொண்டு இருக்கட்டும். அவள் எங்கோ ஒரு மூலையில் இருப்பாள் என்று நினைத்து மனதை தேற்றிக் கொள்வார்கள். அதனால் வேணிக்கு நடந்த எதையும் அம்மாவிடம் சொல்ல வேண்டாம். ப்ளீஸ் மேடம் எனக்காக இந்த உதவியை செய்யுங்கள் மேடம்" என்றாள் கண்ணில் நீருடன்.

என்னதான் கடமை தவறாத கண்ணியமான ஆபிசராக இருந்தாலும் அவரும் ஒரு பெண்தானே அவரும் தேனுவின் நிலை அறிந்து சரி என்று சம்மதித்தார். அதன் பிறகு அமைதியில் கழிந்த அந்த பயணம் ஒரு வீட்டின் முன் நின்றது, கேள்வியாய் பார்த்த தேனுவிடம் "இதுதான் நான் தங்கியிருக்கிற இடம் கவர்மென்ட் கெஸ்ட் ஹவுஸ், உன்னோட அம்மா உள்ளதான் வெயிட் பண்ணிட்டு இருகாங்க. நீ ஏதும் பேச வேண்டாம் நானே எப்படி பேசணுமோ பேசிடுறேன் சரியா.?" என்றவர் வீட்டிற்குள் சென்றார்.

அவரைத் தொடர்ந்து உள்ளே நுழைந்த தேனுவின் கண்ணில் பட்டது அலைபாயும் விழிகளோடு பரிதவித்துக் கொண்டிருந்த விஜயா தான் தென்பட்டார். தேனுவைப் பார்த்ததும் தான் வயதையும் மீறி ஓடிவந்து அணைத்துக் கொண்டு, "என்னாச்சு குட்டிம்மா, இங்க ஏன் வந்துருக்கோம், இவங்க யாரு, நீ எங்க போய்ட்ட, நான் உன்கிட்ட கோபமா நடந்துக்கிட்டேன்னு பயந்துட்டியா, அம்மா உன்மேல கோபபடக்கூடதா, நீயும் அம்மாவை விட்டுட்டு போயிடுவியா, என்று அழ ஆரம்பித்தார். அவரின் தோளில் தட்டிக் கொடுத்து முதுகை வருடியபடியே தான் அம்மாவை சமாதனப்படுத்திக் கொண்டிருந்தாள் தேன்நிலா....

புது மலர்கள் பூத்திடும் வேளை - மதுவதனி

இவர்களின் பாசத்தை பார்த்துக் கொண்டிருந்த லத்திகா **"க்கும்"** என்று தொண்டையைச் செருமிக்கொண்டு அவர்களிடம் காப்பிக் கோப்பைகளை கொடுத்தார். மற்றவர்களும் எதுவும் பேசவில்லை, விஜயாவிற்கு தேனுவை கண்ணில் பார்த்ததே போதும் என்பது போல் அமைதியாகி இருந்தார், காப்பியை குடித்து முடித்ததும் லத்திகாவை கேள்வியாய் பார்த்தார், அவருக்கு என்ன நடந்தது என்று தெரியாவிட்டாலும் தேனு எதிலோ மாட்டிக்கொண்டாள் என்பது புரிந்திருந்தது. அதனால் அவர் லத்திக்காவை பார்த்தார், அவரும் விஜயாவின் பார்வை உணர்ந்து "அம்மா நீங்க நினைக்கிற அளவுக்கு எந்த ஒரு பிரச்சினையும் இல்ல, அதனால் யார் என்ன சொன்னாலும் உங்க பொண்ணை தப்பா நினைக்காதீங்க, தேனு எங்களுக்கு ஒரு அக்யுஸ்ட்டை பிடிக்க ஹெல்ப் பண்ணிருக்கா, அவன் ஒரு மோசமான பொருக்கி, பொண்ணுங்களை ஏமாத்தி கடத்திக் கொண்டு போய் விக்கிறவன், கிட்டத்தட்ட மூணு வருசமா தேடுறாங்க, அந்த கும்பலை பிடிக்க, இப்போதான் அவன் இந்த ஊர்ல இருக்கிறதா தகவல் வந்து நாங்க அவனை தேடினோம், ஆனா அவன் ரொம்ப பிளான்ட் இருந்துருக்கான், சோ எங்ககிட்ட இருந்து தப்பிச்சிட்டான்.

நேத்துதான் அவன் உங்க பொண்ணு படிக்கிற காலேஜ்-ல ஒரு பொண்ணை தூக்கப் போறதா எங்களுக்கு தகவல் வந்தது, அதனால எங்களுக்கு அந்த காலேஜில் இருந்து ஒரு பொண்ணோட உதவி தேவைப்பட்டது, அதுக்குதான் நாங்க தேன்நிலாவை பயன்படுத்திக்கிட்டோம். ஒரு அம்மாவா உங்க பொண்ணு செஞ்சது தப்பா இருக்கலாம், பின்னாடி என்ன பிரச்னை வருமோனு பயப்படலாம், ஆனா உங்க பொண்ணு நிறைய பொண்ணுங்களோட வாழ்க்கையை காப்பாத்தி இருக்கா , நிறைய பொண்ணுங்களோட வாழ்க்கை அழிஞ்சி போனதுக்கு காரணமான அந்த பொருக்கிங்களை காட்டி கொடுத்துருக்கா… அவ செய்தது மிகப்பெரிய செயல். அதனால் அவளை பெற்றதற்கு நீங்க கர்வப்படனும், பெருமைப்படணும்.. இப்போ அந்தக் கூட்டத்துல ரெண்டு பேர் செத்துட்டாங்க. அதுல ஒருத்தன் மிஸ் ஆகிட்டான், இப்போ அவனால் உங்களுக்கு எந்த பிரச்சனையும் வரலாம், எப்போ வேணும்னாலும் வரலாம்.

அதனால் நீங்க கொஞ்ச நாள் வெளியூரில் போய் தாங்கமுடியுமா.? உங்களுக்கு எங்களால் பாதுகாப்பு கொடுக்க முடியும், ஆனா எத்தனை நாள் கொடுக்க முடியும், கொஞ்சம் கவனம் சிதறினாலும் தூக்கிடுவாங்க. எங்களுக்கு உதவி செய்ய போய் உங்களுக்கு ப்ராப்ளம் ஆயிடக்கூடாது, சோ இப்படி ஒரு ஐடியா சொல்றேன், நீங்க என்ன சொல்றீங்க.."

# புது மலர்கள் பூத்திடும் வேளை…!

“மேடம் எனக்கு காலேஜ் இருக்கு, அம்மாக்கு இங்கதான் ஆபிஸ், அதுவும் உடனே ட்ரான்ஸ்பர் கிடைக்கும்னு தெரியல், சடனா எப்படி கிளம்ப முடியும்” - தேனு “ நீ கொஞ்சம் சும்மா இரு, உன்னையும் தூக்கி கொடுத்துட்டு போக சொல்றியா., நீ எதுவும் பேசாத எல்லாம் நானே பார்த்துக்கிறேன் “ என்று மகளை அடக்கியவர் “இப்போ என்ன செய்யனும்மா, நாங்க இந்த ஊரை விட்டு போகனுமா.? கண்டிப்பா போயிடறோம். நானே ஆபிசில் ட்ரான்ஸ்பர் கேட்டுட்டுத்தான் இருக்கேன், எனக்கு மெடிக்கல் லீவ் இப்போ ரெண்டு மாசம் எடுக்கலாம், அதுக்குள்ள ட்ரான்ஸ்பர் கிடைச்சா ஓகே, அப்படி இல்லன்னா வி.ஆர்.எஸ் வாங்கிடுறேன். எனக்குன்னு இருக்குறது இவ ஒருத்தி தான், இவளையும் இழந்துட்டு நான் மட்டும் எதைக்கட்டிட்டு அழப்போறேன். இப்போ நான் என்ன செய்யனும்னு சொல்லுங்க செஞ்சுடுறேன்” என்றார் தேனுவின் தலையை வருடிக்கொண்டே….

இந்த கேஸ்-ல ஐ விட்னஸ் தேனு தான், ஆனா அவ எங்களுக்கு வேண்டியது இல்ல, அந்த கும்பல்ல கண்டிப்பா இவளைத் தேடுவாங்க, அப்போ இவ மாட்டின என்ன பண்ணுவாங்கனு யோசிக்க கூட முடியாது, எதுக்கும் பயப்படமாட்டாங்க, நாம ரொம்ப கவனமா இருக்கணும், அதுக்குத்தான் சொல்றேன் இந்த ஊர்ல இருக்க வேண்டாம்னு, தேனுவோட காலேஜ்-ல நான் பேசி சர்டிபிகேட்ஸ் வாங்கி தரேன்,
அதுக்கு ஒரு டூ டேஸ் ஆகும், அதை நான் பார்த்துக்கிறேன், என்று பேசிக்கொண்டிருந்த லத்திகாவின் போன் அலற அதை எடுத்துப் பேசியவரின் முகம் யோசனையில் சுருங்க மற்றவர்கள் அவரை கேள்வியாய் பார்க்க “ அந்த சுரேஷை ஹோஸ்பிடல்ல சேர்க்க சொல்லிருந்தேன், அவன் அபாயக்கட்டத்தை தாண்டிட்டானாம். அடுத்து என்ன பண்றதுன்னு கேட்குறாங்க.” என்றார்.

“என்ன மேடம் அவனை காப்பாத்திட்டீங்களா, ஏன் மேடம் இப்படி செஞ்சீங்க.. அவன் சாகனும், அவன் பிழைத்து இன்னும் எத்தனை பொண்ணுங்களோட வாழ்க்கையை அழிக்கப் போறனோ,”

இல்லம்மா அவன் உயிரோடு இருக்கணும், அவன் சொர்க்கமா அனுபவிச்சு வாழ்ந்த இந்த வாழ்க்கையை நரகமா மாத்த வேண்டாம், அதுக்குத்தான் நான் இப்படி பண்றேன், இதை நான் டீல் பண்ணிக்கிறேன், இப்போ நீங்க வீட்டுக்கு போங்க, மேடம் நீங்க ஆபிஸ்ல லீவுக்கு அப்ளை பண்ணிடுங்க, நாளைக்கு நைட் நீங்க கௌம்புற மாதிரி ப்ளான் பண்ணிகொங்க, அப்புறம் சர்டிபிகேட்ஸ் அவங்களையே அனுப்ப சொல்லிடுறேன்.

# புது மலர்கள் பூத்திடும் வேளை…!

உன்னோட பார்மலிடிஸ் எல்லாம் டுமாரோ போய் முடிச்சிடு, அப்புறம் அக்கம் பக்கம் வீட்டை காலி செய்து போறமாதிரி சொல்லாதீங்க, ஊருக்கு போறோம் திரும்பி வந்துடுவோம்னு மட்டும் சொல்லுங்க…" என்றவர் தேனுவிடம் திரும்பி "உனக்கு நான் ஹெல்ப் பண்ணலை நீதான் எனக்கு பண்ணிருக்க, பின்னாடி ஒருநாள் நாம சந்திக்கிற சந்தர்ப்பம் வந்தா கண்டிப்பா சொல்றேன், இப்போதைக்கு நீ சொன்ன மாதிரியே உன்னோட அக்காவைப்பத்தி அம்மாக்கிட்ட சொல்லல, ஆனா நீ நினைக்கிற மாதிரி அவங்க சும்மா இருக்க மாட்டாங்க, அதனால் தான் உனக்கு நான் இவ்ளோ சொல்றேன் புரியுதா, அம்மா சொல்ற மாதிரி ஊருக்கே போய்டுங்க, அதுதான் சேப் சரியா. ? அவளுக்கு மட்டும் கேட்கும் குரலில் பேசினார்.

அவளும் சரி என்று தலையசைத்துக் கொண்டாள் இவர்களின் பேச்சு கேட்காவிடிலும் லத்திகாவிற்கு நன்றி சொல்லும் பொருட்டு அவரின் கைகளைப் பற்றிக்கொண்டு "உங்களுக்கு எப்படி நன்றி சொல்றதுனே தெரியலமா.. ஆனா அதைத் தவிர வேற என்ன சொல்ல, ரொம்ப நன்றிமா, கடவுள் உங்களுக்கு எல்லா வளமும் கொடுக்கணும், என்றவாறே விடைபெற்றார். அதற்குள் ஒரு ஆட்டோ வந்திருக்க லத்திகாவிடம் விடைப்பெற்று கிளம்பினர் தாயும் மகளும்..

நாளை நாளை என்றால்…. நாளை என்ன வைத்திருக்கிறதோ….!!!!!

**வேளை தொடரும்……..**

புதுமலர்கள் பூத்திடும் வேளை - மதுவதனி

# புது மலர்கள் பூத்திடும் வேளை...!



## வேளை - 17

*******************************************************************************************************

கடலில் இல்லாத மீனும்
கணையில் விழாத மானும்
விழியில் கொண்டாடும் மாது
விடுமோ அன்றாடம் தூது

காமன் விழா காணும் நிலா
மடிமேல் விழும் என் மஞ்சள்புறா
மேலாடை சூடி ஆடும்
மெதுவாய் புதிதாய் கவிதை பாடும்.

மயில்தோகை அழைத்தால்
மழை மேகம் நெருங்கும்
மடல் வாழை அழைத்தால்
மழைச் சாரல் திரும்பும்

அழைக்காமல் வருவேன்

புது மலர்கள் பூத்திடும் வேளை

**அலுக்காமல் தருவேன்**
**மனக்கோயில் சிலையே**
**உனக்கேது விலையே**

**வளைக்காமல் வளைக்கரம் தேட**
**வருந்தாமல் துணைக்கரம் கூட**
**இடைசேர நமக்கு இடைவேளை**

**********************************************************************************************

எங்கோ யாரோ அழைப்பதுபோல் தோன்ற நிமிர்ந்து பார்த்த சரணின் கண்களில் செக்யூரிட்டி தன் காரின் கண்ணாடியைத் தட்டுவது தெரிந்தது அப்போது தான் உணர்ந்தான் தன்னுடைய அலுவலகத்தில் கார் நிற்பதை எப்படி வந்தான் என்பதை தெரியவில்லை கடந்த கால நினைவுகளை மனம் அசைபோட, கைகள் அதன்போக்கில் காரைச் செலுத்தியது தெரிந்தது. இன்னும் தன் யோசனையிலையே இருந்தவனை மீண்டும் கண்ணாடியைத் தட்டியவரைப் பார்த்தவன் சிறு புன்னகையுடன் காரைவிட்டு இறங்கினான்.

“என்ன முத்து, என்கிட்ட ஏதாவது சொல்லனுமா, உள்ளே வந்து பேச வேண்டியது தானே”

“இல்ல சார், நீங்க வந்து ரொம்ப நேரமாச்சு, அதான் என்னனு பார்க்க வந்தேன்”.

“ஓ…. ஒன்னும் இல்லை, சும்மா ஒரு யோசனை அவ்வளவு தான்” நீங்க போங்க.” என்றதோடு உள்ளே விரைந்தான். அதன் பிறகு அவனுடைய நேரங்களை வேலை இழுத்துக் கொள்ள, அவனுக்கும் அதுவே தேவை என்பதுபோல் அதிலையே மூழ்கிப் போனான்.

“மல்லி உன் கையால சாப்பிட்டு எவ்ளோ நாளாச்சு, நீ பேசாம அங்கேயே வந்திடு, இவன் செய்றத சமையல்னு சொல்லி எனக்கு கொடுத்து எவ்வளவு கொடுமைப்படுத்துறான் தெரியுமா? நல்லாவே சமைக்க மாட்டேங்குறான்.

புதுமலர்கள் பூத்திடும் வேளை - மதுவதனி

# புது மலர்கள் பூத்திடும் வேளை…!

ஏதாவது சொன்னா பிசா ஆர்டர் பண்ணி சாப்பிடு அப்படின்னு சொல்லிட்டு, எல்லாத்தையும் எடுத்துட்டு போய் ஒளிச்சு வச்சுக்கிறான்". என்று மல்லி சாப்பாட்டை ஊட்ட அதை தன் வாயில் வாங்கிக் கொண்டு, அங்கு இவர்களை முறைத்துக் கொண்டே நிலாவின் ரிப்போர்ட்சை பார்த்துக் கொண்டிருந்த சிபியை குற்றப்பத்திரிக்கை வாசித்தாள்.

"என்ன ஷானும்மா, உனக்குத் தானே நிறைய சொல்லிக் கொடுத்துட்டு வந்தேன். நீ சிபியை சமைக்க சொன்னியா, பிள்ளைக்கு இருக்குற வேலையில் உனக்கும் சமைத்துக் கொடுத்தானா.... இது சரியில்லை ஷானும்மா, இந்த தடவை விடறேன் இனிமேல் இப்படி பண்ணாத, ரெண்டு பெரும் வேலையை பகிர்ந்துக்குறேனு சொன்னதுனாலதானே வேலையாள் வைக்கல.... நீ சொல்றதைப் பார்த்தா அங்கேயும் அடிச்சிட்டுத்தான் இருந்தீங்களோ... இது சரிப்படாது, சரண் வரட்டும் பேசிடலாம்" என அவர் பாட்டுக்கு புலம்பித் தள்ள சிபியும் ஷானவியும் ஒருவருக்கொருவர் திருதிருவென முழிக்க ஆரம்பித்தனர்.

ஷானவியோ சிபியின் இமேஜை டேமேஜ் செய்யலாம் என்று நினைக்க அது அவளுக்கே ஆப்பானது, சிபிக்கோ அய்யோ வேலைக்கு ஆள் வைச்சா நம்ம சீக்ரெட்ஸ் எல்லாம் வெளியே போய்டுமே இவ தூங்கினா கும்ப ர்ணனோட கசின்தான். அதனால நாம நைட் ப்ரெண்ஷோட ஜாலியா சுத்திட்டு வர்றோம், இப்போ அதுக்கு மொத்தமா சங்கு போலையே" என்று முழிக்க ஆரம்பித்தான். அதுவரை இவர்களின் பேச்சைக் கேட்டுக் கொண்டிருந்த நிலா இருவரும் சட்டென்று அமைதியாகி திருதிருவென முழிக்கவும் கலகலவென சிரிக்க ஆரம்பித்தாள்.

நிலாவின் சிரிப்பில் மீண்டவர்கள் ஒருவரை ஒருவர் முறைத்துக்கொண்டே மீண்டும் ஒரு யுத்தத்திற்கு தயாராகினர். "ஏண்டீ ஷங்கி சொங்கி உனக்கு எதுக்கு இந்த வேண்டாத வேளை, உன்கிட்ட மல்லி ஏதாவது கேட்டுச்சா, தேவையில்லாம பேசி மல்லியை டென்சன் பண்ணாத, உனக்கு நல்ல சாப்பாடுதான வேணும், அதுக்கு பேசாம நீயே சமைச்சிடு.

"தோடா நீயெல்லாம் எனக்கு அட்வைஸ் பண்ற அளவுக்கு என்னோட இமேஜ் போயிடுச்சு, அப்புறம் இன்னொரு தடவை இந்த ஷங்கி மங்கினு சொன்ன உன்னைப் பத்தி எல்லாத்தையும் சரண் அண்ணாக்கிட்ட புட்டு புட்டுனு வச்சுட்டு கிளம்பிட்டே இருப்பேன்".

புது மலர்கள் பூத்திடும் வேளை - மதுவதனி

ஹ்ம்ம் அப்புறம், சொல்லும்மா சொல்லு, என்னைப் பத்தி அப்படி என்னம்மா தெரியும் உனக்கு சொல்லு…. சொல்லு….”

“ஹாஹா வேண்டாம் நந்தி விளையாடாத ஆள் டீட்டைல்ஸ் ஐ நோ”. ஏதோ போனா போகுதுனு விடுறேன். என்னைப் பத்தி இன்னும் ஏதாவது சொன்ன, அப்புறம் பின் விளைவுகள் பெருசா இருக்கும்”.

“ஹேய் என்னடி ரொம்ப பூச்சாண்டி காட்டுற, இப்படியெல்லாம் சொன்னா, நான் பயந்துடுவேனா, ஹாஹா புள்ளப்பூச்சி நீயெல்லாம் என்னை மிரட்டுற” என்று மேலும் கிண்டலடித்தவனைப் பார்த்து பல்லைக் கடித்தவள் தேனுவைப் பார்த்து…..

“தேனுக்கோ உங்க மொபைல் எங்கே”,

“ஏண்டா மேலே ரூம்ல இருக்கும், உனக்கு வேணுமா, இரு நான் போய் எடுத்துட்டு வர்ரேன்”.

“நோ நோ அக்கா, உங்களுக்கு ஒரு வீடியோ வாட்ஸ் ஆப்ல அனுப்பிருக்கேன், பார்த்துட்டு எப்படி இருக்குனு சொல்லுங்க, அப்புறம்தான் அதை என்னோட செல்ல சரண் அண்ணாவுக்கு அனுப்பனும், அப்படியே அகிலா அண்ணிக்கு, என்னோட அம்மாவுக்கு அப்பாவுக்கு எல்லாம் அனுப்பனும்”.

“ம்ம் இவ்ளோ நேரம் என்ன பேசுனா, இப்போ எதையோ பேசுறா, சரியான அரைவேக்காடு, என்று சிபி நினைத்துக் கொண்டிருக்கும் போதே மல்லியிடம் வந்த ஷானவி.

“மல்லி உனக்கு என்னோட போனிலையே காட்டுறேன் இங்கே வா” என்று சிபியிடம் நெருங்கி அமர்ந்து, அவனுக்கும் தெரியும் படியாய் வைத்துக்கொண்டே அந்த வீடியோவை ஓட விட்டாள் . அப்படி என்ன இருக்கப் போகிறது அந்த வீடியோவில் என்று அசட்டையாகப் பார்த்தவன், அதில் வந்தக் காட்சிகளைப் பார்த்ததும் வெடுக்கென்று மொபைலை பிடுங்கிக் கொண்டு வெளியில் ஓடினான்.

புதுமலர்கள் பூத்திடும் வேளை - மதுவதனி

# புது மலர்கள் பூத்திடும் வேளை…!

“ஹோய் என்று குதுகலித்தவள் இவன் இன்னும் வளரலக்கா, பயபுள்ளைக்கு ஒரு தப்புக் கூட தெரியாம செய்ய தெரியல, இதெல்லாம் என்கிட்ட வந்து புல்லட்ட ஸ்டார்ட் பண்ணுது, ஹஹா யாருக்கிட்ட” என்று வயிறுகுலுங்க சிரித்தவளைப் பார்த்த மற்ற இருவருக்குமே சிரிப்புத்தான்.

இவர்களின் கூத்தைப் பார்த்து கண்ணில் நீர் வர சிரித்த தேனுவை பார்த்த ஷானவிக்குமே மனம் கனமானது. எத்தனை நாட்கள் ஆனதோ இப்படி சந்தோசமாக சிரித்து இனி இவர்கள் வாழ்க்கை எப்போதுமே மகிழ்ச்சியாக கழிய வேண்டும் என்று நினைத்தவள், அங்கிருந்த லேண்ட் லைன் போனில் தன் வீட்டு என்னை அழைத்தாள், அவளின் நேரம் வசமாக அவளது அம்மாவே எடுக்க ஹலோ என்று சொல்லக் காத்திருந்தவள் போல” என்ன மம்மி, இதெல்லாம் நீங்க இப்படி பண்ணுவீங்கனு நினைக்கவே இல்லை, ஏன் இந்த மாதிரி செய்றீங்க, இதுதான் தேவகி ஆண்டிக்கு நீங்க செய்ற மரியாதையா, உங்ககிட்ட இதை நான் எதிர் பார்க்கல” என்று எதுவென்று யோசிக்கும் முன்னரே படபடவென பொரிந்தாள் ஷானு.

“ஏய் நிறுத்து, எதுக்கு இப்படி கத்துற, காலங்காத்தால சொல்லாம கொள்ளாம எங்கே போன, வீட்லயும் இல்லை, சிபி வீட்லயும் இல்லை. எப்போதுதான் வெளியே போகும் போது சொல்லிட்டு போற பழக்கம் வரப்போகுதோ தெரியல, இப்போ எங்கே போய் யாரை டார்ச்சர் பண்ணிட்டு இருக்க, எப்போ வீட்டுக்கு வர அதைச் சொல்லு முதல்ல என்று நான் உன் அம்மா என்பதை நிரூபித்தார் அவர்.

“ஹான் என்று வாயைப் பிளந்தவள் அடுத்த நொடியே, “ம்ம் நான் தேனக்காவைப் பார்க்க வந்தேன். சிபியும் சரண் அண்ணாவும் தான் என்னை அழைச்சுட்டு வந்தாங்க வெத்தலைப் பாக்கு மட்டும் தான் இல்லை, அவங்களைக் கேளு, அம்மா என்னைத் அப்படிக் கெஞ்சி அழைச்சிட்டு வந்தாங்க திட்டாதே”.

“அய்யோ நான் நம்பிட்டேன்மா, நீ சொன்னதை நான் நம்பிட்டேன் எப்படி எப்படி அவங்க உன்னை வெத்தலைப் பாக்கு வச்சு அழைச்சாங்களா, நேரம் தான், பாவம் அங்கேதான் அந்த புள்ளை உயிரை எடுக்குறனா, இங்கேயும் வந்தா அவனைப் போட்டு படுத்துவ”.

“ஆமாம் பெரிய இவன், அவன் உயிரை நான் எடுக்குறேன், இப்போ அது ரொம்ப முக்கியம், சரி நீ என்ன வேலைக்கா போற, வெட்டியாதான இருக்க, என்னையும் எங்கப்பாவையும் போட்டுத் தாளிச்சிகிட்டு, சும்மா அக்கம் பக்கத்துல போய் புரளி பேசாம இங்கே தேனக்காவை பார்க்க வரலாம்ல, பாவம் தனியாதான இருக்காங்க, எவ்ளோ பீல் பண்றாங்க, ஏதாவது சமைச்சு எடுத்துட்டு வாரத்துக்கு ஒரு தடவையாவது வந்து பார்த்துட்டு போகலாம்ல, முதல்ல உன்னோட அந்தக் கிழவிங்க கூட்டத்தை கலைக்குறேன், எப்போ பாரு வந்து கோயிலு கோயிலு இழுத்துட்டுப் போயிடுதுங்க” என இவள் கத்த.

“தேனுவோ ஏய் என்னம்மா இப்படியெல்லாம் சொல்லாத, சும்மா இரு….. அம்மா வருத்தப்பட போறங்கன்னு ஹனவியின் வாயை அடைக்க, அவளின் அம்மாவோ மகளின் பேச்சில் சிறிது நேரம் அமைதியாகி நானும் ஒவ்வொரு தடவையும் கிளம்பிட்டு அகிலாவைக் கூப்பிட்டா நேத்துதான் போனேன் அத்தை, அடுத்த தடவை போகலாம், அப்படி இப்படினு சாக்கு சொல்லி வரவிடாமலே சமாளிக்கிறா, சரணைப் பார்க்கவே முடியறது இல்ல. இதுதான் அந்த வீட்டு நம்பரா, சரி நான் எழுதி வச்சுக்கிறேன், அப்புறம் இன்னும் ஒரு வாரத்துல ஏழாவது மாசம் தொடங்கப் போறதா அகிலா பேசிட்டு இருந்தா, நீ சிபியை ஒரு நாலு மணிக்கு அனுப்பி வை நானும் அப்பாவும் அவன் கூடவே அங்க வந்துடுறோம் சரியா……

முதல்ல ஏன் எதுக்குன்னு யோசிச்சு பேசிப்பழகு, எப்போதான் காரணம் இல்லாம சண்டை போடறதை நிறுத்தப் போறியோ தெரியல, சரி நன் திட்டுனதுக்கும் சேர்த்து அவன் கூட மல்லுக்கு நிக்காத, தேனுவை வருத்தப்பட வேண்டாம்னு சொல்லு, நான் வந்து பேசுறேன், வைக்கட்டா” என்று அவர் போனை வைத்துவிட்டார்.

பிறகு தேனைப் பார்த்து “அக்கா உங்களுக்கு கீரை சூப்பு கொடுத்துச்சா மல்லி” என்றாள்.

“இதோ இருக்கு கொஞ்சம் ஆறட்டும்” என தேன்நிலாவும் கூற…

“ஒகே க்கா ஒரு பேய் கோவமா வெளியே போயிருக்கு, நான் போய் வேப்பிலை அடிச்சு ஓட்டிட்டு வரேன்” என்றபடி பதிலுக்கு கூட நிற்காமல் வெளியே ஓடினாள் ஷானவி.

புதுமலர்கள் பூத்திடும் வேளை - மதுவதனி

இவற்றையெல்லாம் பார்த்த தேனுவிற்கு மிகவும் மகிழ்ச்சி, காலையில் தன் கண்ணான கணவனை சந்தித்தது, அவன் தன்னை அணைத்து கூந்தல் வருடி, முத்தம் பதித்து, குழந்தைகளைக் கொஞ்சி என்று தனது வாழ்நாளை முழுமையடையச் செய்திருந்தான். தன் வாழ்நாள் முழுவதும் கிடைக்கும் மகிழ்ச்சி ஒரே நாளில் கிடைத்ததைப் போலவே மகிழ்ந்தாள். அதனால் நேற்று மீனாவும் அகிலாவும் பேசியது கூட மனதின் தூரத்தில் சென்றிருந்தது.

அவள் விரும்பியதும் இதுதானே…. இனி யார் என்ன சொன்னாலும் ஒன்றும் இல்லை. அவளவன் அவள் மேல் இன்னும் உயிராய் இருக்கிறான் 'இதுபோதும் எனக்கு இதுபோதுமே' என்றுதான் தோன்றியது நிலாவிற்கு……

அங்கு வந்த மல்லிகா அவளின் யோசனையைக் கலைத்து "ஏன் தேனு சூப்பிக் குடிக்காம வச்சுருக்க, ஆறிப் போயிடுச்சுனா கசக்கும், முருங்கைக் கீரை வேற, இரு லேசா சூடு பண்ணி எடுத்திட்டு வரேன்" என்று கையில் அந்த ஆறிப்போன சூப்புக் கிண்ணத்தை எடுக்க, "அதெல்லாம் வேண்டாம் மல்லிம்மா, இதமான சூடுலதானே இருக்கு இதுவே போதும்" என்று குடிக்க ஆரம்பித்தாள்.

மல்லிகாவிற்கு வியப்பு ஒவ்வொரு முறையும் சாப்பிடக் கொடுக்கும்பொது எத்தனை முறை கெஞ்ச வேண்டும் இந்த பெண்ணிடம். ஆனால் இன்றோ எதுவுமே தேவைப்படவில்லை. அவளாகவே எடுத்துக் கொள்கிறாள். எல்லாவற்றிற்கும் காரணம் சரணின் வருகைதான் என்பதை தெரியாதவர் அல்லவே.. அதனால் இந்த மாற்றங்களை கண்டும் காணாமலும் இருந்தார். எங்கே சொன்னால் மீண்டும் தன கூட்டுக்குள் சென்று விடுவாளோ என்ற பயம் வேறு.. அதனால் அதை விடுத்து வேறு பேச்சை ஆரம்பித்தார்…

"ஏன் தேனு இந்த புள்ள ஏதோ படம் காட்டுறேன்னு சொன்னாளே அப்புறம் ஆளையே காணோம், எங்கே போயிட்டா, உன்கிட்ட இருக்குமே நீ காட்டு, அப்படி என்னத்த தான் காட்டுறதுக்கு பறந்தானு பார்க்கலாம்"

"அது என்னோட போன் மேல ரூம்ல இருக்கு மல்லிம்மா, மேல போகும்போது எடுத்துட்டு வந்து காட்டறேன்"

“சரிதான் அப்புறமா காட்டு, ஆமாம் உனக்கு எத்தனை தடவை சொல்றது, காலை கீழே தொங்க விடாதேனு, இந்த டீப்பாய் மேல தூக்கி வை”

இப்போதன்மா கீழேயே போட்டேன், நீங்க எனக்கு ஏதாவது வேலை கொடுங்களேன், சும்மா இருக்க எப்படியோ இருக்கு, நான் வேணும்னா காய் நறுக்கி தரட்டுமா, கொண்டு வாங்க செஞ்சு தரேன்.”

“ம்ம் அதுவும் சரிதான், கொஞ்சம் இந்தமாதிரி வேலை செய்யணும் அப்போதான் வேறெதையும் யோசிக்கத் தோணாது உனக்கு. இரு வாழைப்பூ எடுத்துட்டு வரேன், அதை சுத்தம் செஞ்சு கொடு. இன்னைக்கு மதியம் வடை போடலாம்.”

வாழைப்பூ வடையா அது சரணுக்கு மிகவும் பிடிக்கும், என்ற எண்ணம் எழுந்ததும் “சரி கொண்டு வாங்க செய்றேன்” என்ற நிலாவைப் பார்த்த மல்லிம்மா ‘இப்படி இருந்தாதானே பார்க்க சந்தோசமா இருக்கும், எப்போ பாரு எதையாவது யோசிச்சிட்டு, மனசைப் போட்டு குழப்பிக்கிட்டு இருக்க வேண்டியது’ என்று நினைத்துக் கொண்டே வாழைப்பூவை எடுத்து வந்து தந்தார்.

பூவிலிருந்து நாரை நீக்கும் போது சரணின் நினைவு எழுவதை தடுக்க முடியவில்லை நிலாவால்…. அவன்தான் வாழை மரத்தின் சிறப்புகளை அடிமுதல் நுணிவரை விளக்கியிருந்தான், அவளுக்கு எதுவுமே தெரியாதது போல்… கிராமத்தில் இருந்தவளுக்கு இதெல்லாம் தெரியாத என்று கூட அவன் யோசிக்கவில்லை, அவனுக்கு அவளிடம் பேச வேண்டும் அவ்வளவுதான்.. வாழை மரத்தின் ஒவ்வொரு பகுதியும் வீணாவதில்லை, அதில் மருத்துவ குணமும் அதிகம் என்றெல்லாம் பேசி அவளை யோசிக்க வைத்திருந்தான்.

அவனுக்குப் பிடிக்கும் என்பதாலோ நிலாவுக்குமே வாழைப்பூ வடை மிகவும் பிடிக்கும். இப்படி ஒவ்வொன்றும் அவனுக்குப் பிடித்ததாகவே அவள் மாற ஆரம்பிக்க, ஆனால் அவனுக்கோ அவளையே பிடிக்காமல் போனதுதான் விதியின் செயலோ…. என்ன முயன்றும் மனம் அந்த நாள் நினைவுகளை மறக்க விடவில்லை, இன்று இருந்த சந்தோஷ மனநிலையை கெடுக்க மனமின்றி பழைய நினைவுகளை முயன்று அடியில் தள்ளி நிகழ்வுக்கு வந்தாள் சரணின் நிலா…

**வேளை தொடரும்……..**

புது மலர்கள் பூத்திடும் வேளை - மதுவதனி



## வேளை - 18

*******************************************************************************************

கண்ணொடும் நெஞ்சோடும் உயிரால் உன்னை மூடி கொண்டேனே
கனவோ டும் நினைவோடும் நீங்காமல் உன்னருகில் வாழ்ந்தேனே
மதி பாதிக்கும் மதி முகமே…
உன் ஒலி அலை தன்னில் நானிருப்பேன்
எங்கா நீ சென்றாலும் அங்கே நான் வருவேனே
மனசெல்லாம் நீதான் நீதானே ஒ…

நீ தூங்கும் நேரத்தில் என் கண்கள் தூங்காது
கண்மணியே ஒ கண்மணியே
கண்ணுக்குள் கண்ணாக என்றென்றும் நீ வேண்டும்
என் உயிரே ஒ என் உயிரே
பூவொன்று உன் மீது
விழுந்தாலும் தாங்காது

# புது மலர்கள் பூத்திடும் வேளை…!

**என் நெஞ்சம் புண்ணாய் போக்சுமே**

**கண்மணியே ஓ கண்மணியே**
**ஏன் உயிரே ஓ ஏன் உயிரே**

******************************************************************************************************

"டேய் நந்து கண்ணா எங்கே இருக்க" என்ற கூச்சலுடன் அந்த தோட்டத்திற்குள் புகுந்தாள் ஷானவி. அங்கே இருந்த கல்மேடையில் கோபத்தில் அமர்ந்திருந்தான் சிபி. "அவனை உரசியபடி வந்தமர்ந்தவளை தள்ளிவிட்டு முறைத்தான்.

"என்னடா எதுக்கு இப்படி ஒரு டெரர் லுக்கு" என்றாள் ஒன்றுமே நடவாதது போல் மீண்டும் முறைத்துவிட்டு வேறு பக்கம் பார்வையைத் திருப்ப முயன்றான் சிபி. அதை உணர்ந்த ஷானு அவனின் முகத்தைப் பிடித்து தன்பக்கம் திருப்பி "என்னனு கேட்டேன்" என ஷானவி கேட்கவும்…….

அவளின் கையைத் தட்டிவிட்டுக் கத்த ஆரம்பித்துவிட்டான். "என்னடி, என்ன….. என்னனு கேட்டுட்டு, என்ன விசயம்னு, பெரிய இவளாட்டம் வந்துட்டா, ஆமாம் உனக்கு இதெல்லாம் யார் கொடுத்தா, அப்படி உன்கிட்ட என்னைக் காட்டிக் கொடுத்த அந்த ரொம்ப நல்லவன் யாரு சொல்லுடி…….

அவனின் பேச்சில் சிரித்தவள் "தம்பி நான் சொல்லும் போதெல்லாம் என்னைத் திட்டுற, ஆனாலும் அதுதான் சரி, நீ இன்னும் வளரனும் Mr. சிபி நந்தன் உன்னோட ஒவ்வொரு அசைவும் நம்மகிட்ட ரிப்போர்ட் ஆகிட்டு இருக்கு கண்ணா…. இதெல்லாம் ஒரு மேட்டரே இல்லை எனக்கு" என்று சுடிதாரில் இல்லாத காலரைத் தூக்கிக் கொண்டாள்.

அவளின் பீத்தலில் கடுப்பானவன் அவள் கையை முறுக்கி பின்பக்கம் வைத்தவன், "இப்போ சொல்லு உனக்கு எப்படி இந்த வீடியோஸ் கிடைச்சது, சொல்லல, உன்னோட இந்த கையை அப்படியே பின்னாடியே இருக்குற மாதிரி செட் பண்ணி விட்டுடுவேன், ஒழுங்கா இப்போ சொல்ற, சொல்லு" என்றான்.

# புது மலர்கள் பூத்திடும் வேளை…!

“மேலும் கையைப் பிடித்துக் கொண்டே “ஏண்டீ நான் பார்க்கும் போதெல்லாம் தூங்கிட்டுத் தானே இருந்தே, எப்படி உனக்கு இதெல்லாம் தெரிஞ்சது”. அந்த மாலிக் தான் உனக்கு இந்த வேளைப் பார்த்துக் கொடுத்தானா… அவன் ஒரு மார்க்கமா உன் பின்னாடி சுத்தும் போதே நினைச்சேன், அவன் தான இதைப் பண்ணுது சொல்லுடி”.

“முதல்ல கையை விடுடா, நீ கையை விடு சொல்றேன்.. என்று அவளும் கத்தவும்விட்டு விட்டான். தன் கையை தேய்த்துக் கொண்டே அவனைப் பார்த்து முறைத்தவள் “உனக்கு அறிவில்ல, உன்னோட கெஸ் போயும் போயும் இவ்ளோ கேவலமா இருக்கு, எனக்கு ஹெல்ப் பண்ண எத்தனை பேர் இருக்காங்க, அந்த சுரக்காய் மூஞ்சுக் காரன் தான் கிடைச்சானா எனக்கு… போடா நீ இந்தளவுக்கு மோசமா நினைச்சதால் உண்மையை சொல்ல முடியாது இப்படியே மண்டை வீங்கி மென்டலா அலை” என்று கேசுவலாக கூறிவிட்டுத் திரும்பினாள்.

“அம்மா கங்கா தேவி உனக்கு தளப்பாக்கட்டியில மட்டன் பிரியாணி, சிச்கன் சுக்கா, லாலிபாப் சிச்கன் எல்லாம் வாங்கித் தரேன் டீ….. தயவு செய்து சொல்லுடீ ப்ளீஸ்”….

ஹாஹா, இதத்தான் உன்கிட்ட எதிர்பார்த்தேன் இதெல்லாம் நீ முன்னாடியே சொல்லிருந்தா இவ்ளோ கஷ்டம் தேவையில்லப் பார்த்தியா… சரிவிடு உனக்கு சொல்றேன்”.

“ஒருநாள் தூக்கத்துல தண்ணீர் தாகம் எடுத்ததுனு எழுந்து வெளியே வந்தேன். உன்னோட ரூம் லாக் ஆகமா திறந்து இருந்துச்சு, உள்ளே எட்டிப்பார்த்தா சாரைக் காணோம், சரி பாத்ரூம்ல இருப்பேனு வெயிட் பண்ணி பார்த்தேன். அங்கேயும் இல்லை, ஓகே பையன் ஏதோ தில்லுமுல்லு பண்றான்… எப்படியாவது கண்டுபிடிக்கணும்னு முடிவு பண்ணி களத்துல இறங்கிட்டேன்.

“அடுத்த நாளும் அதேதான் நடந்தது… சோ உன்னோட க்ளோஸ் ப்ரண்டு தீபக் என்கிட்ட மாட்டுனான், நான் ஒரு மேட்டர் சொல்லி மிரட்டினேன், ஹாஹா பயபுள்ள அப்படியே பம்மிடுச்சு…. அதுதான் இப்படி வீடியோவா அனுப்பித் தள்ளுது”.

புது மலர்கள் பூத்திடும் வேளை - மதுவதனி

அட நம்பிக்கைத் துரோகிங்களா, இவனுங்களை நம்பினதுக்கு, இவ கால்லையே விழுந்துருக்கலாம்… ச்சே…. என்று தன்னையே நொந்தவன்" ஆமாம் அந்த தீபக் எதுக்கு உனக்கு இப்படி சலாம் போடுறான். அவனோட மேட்டர் உன்கிட்ட என்ன இருக்கு", என்றான் சுவரஷ்யாமாக……..

"அதுவா அந்த வித்யா மேட்டர்தான், வித்யாவை உருகி உருகி லவ் பண்றான் பையன், அவளும் தான், ஆனா அவள் இன்னும் ஓகே சொல்லல, நான் சொன்னாதான் அவ ஓகே சொல்லுவா அப்படினு லைட்டா நூல் விட்டேன் அதுக்கே இப்படி ஓவர் டைம் ஒர்க் பண்ணுது என்ன செய்ய, நானும் இதுதான் நேரம்-னு விட்டுட்டேன்".

"அடிப்பாவி அவனோட லவ்வுல போய் உன்னோட விளையாட்டைக் காட்டுறியா, பாவம் அவன் சும்மாவே பயந்து சாவான், இப்போ நீ வேற மிரட்டி வச்சுருக்க உன்னையெல்லாம் என்ன செய்றதுனே தெரியல…. அந்தப் பொண்ணுக்குத் தெரியாம நீ பண்ற வேலை…

"ம்ம் தெரியாம என்ன…? எல்லாம் தெரியும் அதனால தான் பையன் உங்களோட வந்தாலும் கோக் மட்டும்தான் டவுட் வரலையா நந்திமான்".

"அட ஆமாம் சரக்குனா ஆளுக்கு முன்னாடி பல்லை இளிச்சுட்டு ஓடுவானே, இப்பக் கொஞ்ச நாளா நல்லொழுக்கத்தின் சிகரம் மாதிரி இருந்தானே நான் கூட அந்தப் பன்னாடை திருந்திருச்சோனு இல்லை நினைச்சேன்". இப்படி எட்டப்பனுக்கு சித்தப்பா பையன் மாதிரி காட்டிக் கொடுக்கத்தான் இந்த வேளை பண்ணிருக்கான… இது தெரியாம இவனுக்கு சங்கத்துல பொருளாலர் பதவியை போட்டுக் கொடுத்துருக்கோம்" என்று தன் போக்கில் புலம்பியவன், பின் நினைவு வந்தவனாக ஷாவிம்மா நீ அந்த வீடியோஸ் எல்லாம் அண்ணிக்கு அனுப்பல தானே, பார்த்தாங்க ரொம்ப வருத்தப்படுவாங்க, அண்ணாக்கிட்டையும் சொல்லாதேடி, அப்புறம் ப்ளாட்டை காலிபண்ணி ஹாஸ்டல்ல விட்டுடுவான்" இல்லை வேலைக்கு ஆள் போட்டுடுவான் என்றான்.

“ம்ம் ஆமாம் அதனால தான் நானும் யாருக்கும் இன்னும் ஷேர் பண்ணாம இருக்கேன். இனிமேல் என் பேச்சைக் கேட்காம ஏதாவது பண்ண அடுத்த நிமிஷம் குரூப் மெசேஜ்ல தட்டிவிட்டுவேன் புரியுதா” என்றதும் கோபமாக ஒரு முறைப்பைச் செலுத்தி பின் சாந்தமாக ஒரு புன்னகையை சிந்தினான் சிபி….

“ம்ம் அந்த பயம் இருக்கட்டும், இப்போ நான் உன்னைத் தேடி வந்த விசயமே வேற, நான் அம்மாக்கிட்ட பேசினேன்” என்று அந்த உரையாடலைக் கூறியவள் “ஈவ்னிங் வரேனு சொன்னாங்க, நீ போய் அழைச்சுட்டு வந்திடு, அக்காவிற்கு வளைகாப்பு வைக்கறதைப் பத்தி தான் பேசுவாங்க போல, அந்த நேரம் சரண் அண்ணா இருந்தா இன்னும் வசதியா இருக்கும், அகிலா அண்ணி வரதுக்குள்ள நாமளே முடிவு பண்ணிடுவோம், அவங்க இருந்தா பிரச்சனை பண்ணவும் வழி இருக்கு, நீ என்ன சொல்ற”.

நீ சொல்றதும் சரிதான், அண்ணிக்கு என்று யாருமே இல்லையே அந்த எண்ணமே வரக்கூடாது. சீக்கிரம் இதுக்கு ஒரு முடிவு கட்டுவோம். டெலிவரிக்குள்ள பிரச்சினையை முடிச்சிடனும், அப்போதான் நிம்மதியா லேபர் பெயினை எதிர்கொள்ள முடியும்.

இல்லைன்னா எல்லாம் சேர்ந்து மன உளைச்சல் ஆகி டெலிவரில பிராப்ளம் வந்துடும். நான் நாளைக்கு அண்ணியை செக்கப் பண்ற டாக்டர் ஷர்மிக்கிட்ட அப்பாயின்மெண்ட் கேட்டுருக்கேன் இன்னும் டூ வீக்ஸ்ல ஜெர்மனி போறாங்க, அண்ணியோட டெலிவரி கூட அவங்க ப்ரண்டைத் தான் ஹேண்டில் பண்ண சொல்லிருக்காங்க. சோ நாம போய் ஒன்ஸ் அவங்களை மீட் பண்ணிட்டு வந்துடலாம்.

அதுக்குள்ள இங்கேயும் இந்த சீமந்தம் பத்தி பேசி முடிச்சிடலாம். அண்ணனை சமாளிக்கத்தான் மல்லி இருக்கே அப்புறம் என்ன. விடு நாம ஜெயிக்கிறோம் என்று சீரியசாக ஆரம்பித்து டோரவைப் போல் முடிக்கவும்.

அவனின் முடியைப் பிடித்து ஆட்டி “ அடல்ட்ஸ் ஒன்லி படம் பார்க்குற வயசுல டோரா பாக்குறியே உன்னையெல்லாம் திருத்தவே முடியாது எக்கேடோ கெட்டுபோ” என்று வீட்டிற்குள் நுழைந்தவளை சிரிப்புடன் பார்த்திருந்தான் சிபி… அடுத்த நாள் இவர்களுக்கு காத்திருந்த அதிர்ச்சியை நினைக்காமல்….

புது மலர்கள் பூத்திடும் வேளை - மதுவதனி

# புது மலர்கள் பூத்திடும் வேளை…!

ஊட்டி………

“என்ன பாவா, ஏன் ஒரு மாதிரி இருக்கீங்க, நானும் பாக்குறேன் நீங்க சென்னை போயிட்டு வந்ததில் இருந்தே இப்படித்தான் இருக்கீங்க, ஏதும் பிரச்சனையா… எதுவா இருந்தாலும் சொல்லுங்க, நீங்க சொன்னாதானே எனக்கும் தெரியும், நீங்க இப்படி இருந்தா நான் என்னனு நினைக்கிறது” என்று அந்த நாளில் மூன்றாவது முறையாக அஸ்வத்தைப் பார்த்துக் கேட்டாள் இளமதி.

மனைவியின் முகத்தில் தெரிந்த பயத்தில் “ஒன்னும் இல்ல மதிம்மா, கொஞ்சம் வேலை டென்சன் அவ்ளோதான். இந்த வருஷம் எப்படியும் ட்ரான்ஸ்பர் கிடைச்சிடும் போல, அதுதான் என்ன செய்யனு யோசிச்சிட்டு இருக்கேன். அப்பா அம்மாவுக்குத் தெரிஞ்சா என்ன முடிவு எடுப்பாங்கன்னு தெரியல, சென்னையா இருந்தா ஓகே, பட் நார்த்ல போட்டுட்டா என்ன பண்றது! அதான் ஒரே குழப்பம் வேற ஒன்னும் இல்லை, பசங்க தூங்கிட்டாங்களா, ஏன் இங்கே எடுத்துட்டு வரல, என அவளைத் தன் மேல் சாய்த்துக் கொண்டு கேட்டான்.

“இல்ல பாவா, இன்னைக்கே ரெண்டு பெரும் ஒரே ஆட்டம், அதுதான் டயர்ட்ல சீக்கிரம் தூக்கிட்டாங்க, மாமாவும் அங்கேயே படுக்கட்டும், தூக்கினா எழுந்து ஆர்ப்பாட்டம் பண்ணுவாங்க, எழுந்து அழுதா கொண்டு வந்து தரேன் அப்படின்னு சொல்லிட்டாங்க நானும் வந்துட்டேன்”.

“ம்ம் அதுவும் சரிதான் மிஸ்டர். சரவணன் நமக்கு ப்ரைவேசி கொடுத்துருக்கார். பையன் கேம்ப்க்குப் போய் நாலு நாள் கழிச்சி வந்துருக்கான். பொண்டாட்டியோட சந்தோசமா இருக்கட்டும்னு நினைச்சிருப்பார். இந்த விஷயத்தில் சரவணனை மிஞ்ச யாருமே இல்லை. அப்பவே ரொமான்ஸ்ல பின்னி பெடலெடுபாரு. அவர் பையன் நான் மட்டும் எப்படி இருப்பேன், ஆமா நீ ஏன் வாடிபோய் இருக்க மாமா இல்லாம ஏங்கிக் போயிட்டியா”. என அவளின் காதோரத்தில் குறுகுறுப்பு மூட்டிக் கொண்டே கிண்டலடித்தான் அஸ்வத்.

அவனின் தீண்டலில் நெகிழ்ந்து கொண்டிருந்தவள் அவன் வாயில் பட்டென்று அடித்துவிட்டு” அது என்ன அப்பாவைப் போய் பேர் சொல்லிக் கிண்டல் பண்ணிட்டு, இப்படியே செய்ங்க,

ஒருநாள் குழந்தைகளும் இதே மாதிரி செய்யப்போறாங்க, அன்னைக்கு உங்களை என்ன பண்ணுவேனு எனக்கேத் தெரியாது, சொல்லிட்டேன். குழந்தைங்க ஒவ்வொரு விசயத்திலும் உங்களைத்தான் மாடல்லா வச்சு திங்க் பண்றாங்க. இதெல்லாம் பார்த்து பழகிடப் போறாங்க". என அவனின் மீசையைப் பிடித்து இழுத்தாள்.

“ஏய் ராட்சசி வலிக்குது விடுடீ… மனுஷன் ஐந்து நாள் கழிச்சு ஆசையா பொண்டாட்டிக்கிட்ட வந்தா, இவ இப்போதான் சொற்பொழிவு நடத்திக்கிட்டு இருக்கா… என்றபடி அவளை தன்மேல் சாய்த்துக்கொண்டு படுக்கையில் சரிந்தான்.

“ஆமா ஆமா நான் தான் இப்போ வாழ்வே மாயம் ரேஞ்சுல சோக கீதம் வாசிச்சிட்டு இருந்தேன். பொண்டாட்டி பக்கத்துல இருக்குறது கூட தெரியாம யோசனையில் இருந்துட்டு இப்போ வந்து என்னை சொல்றீங்க, ஆனாலும் பாவா பேச்சுல உங்கள ஜெயிக்கவே முடியாது, எப்படி உடனே பல்டி அடிக்கிறீங்க, இப்படி பேசற உங்க வாயை….

"ம்ம்ம் ம்ம்ம்" என்றதுடன் அவளின் சிணுங்கள் சத்தம் மட்டுமே கேட்டது. அவன்தான் அவளின் இதழை சிறை செய்திருந்தானே… ஐந்து நாள் பிரிவின் துன்பத்தை தம்பதியர் இருவரும் ஒருவருக்கொருவர் கழித்து சுகித்து களித்துக் கொண்டிருந்தனர். கூடலின் முடிவில் அவனின் நெஞ்சில் சாய்ந்துபடுத்திருந்த இளாவின் தலையைக் கோதியவனின் கைகள் நடுங்கிக் கொண்டிருந்தன.

இப்போது கொஞ்ச நாட்களாகத்தான் அவள் முகத்தில் தெளிவும் சந்தோசமும் நிரந்திரமாய் வந்தமர்ந்தது. அது அந்தக் கடவுளுக்கே பொறுக்கவில்லையோ. நீ காலம் முழுவதும் துன்பத்தை மட்டுமே அனுபவிக்க வேண்டும் என்று இவள் விதி நிர்ணயிக்கப் பட்டதோ… தனக்குத் தெரிந்த உண்மை அவளுக்குத் தெரிந்தால் அவள் என்ன செய்வாள். எப்படி துடிதுடித்துப் போவாள், உடல்நிலை சரியில்லாமல் போய்விடுமோ என்றே பயந்து போனவன். இன்று அவர்கள் உயிருடன் இல்லை என்பதை எப்படி தாங்கிக் கொள்வாள், கடவுளே, அதற்கும் தன்னுடைய தவறுதான் காரணம், நான்தான் அவர்களைக் கொன்றுவிட்டேன் என்றெல்லாம் வருந்துவாளே…

புது மலர்கள் பூத்திடும் வேளை மதுவதனி

# புது மலர்கள் பூத்திடும் வேளை…!

எப்படி அதிலிருந்து அவளை மீட்கப் போகிறேன். உண்மையை அவளிடம் சொல்லலாமா, வேண்டாமா, தனக்குத் தெரியாத வரைக்கும் பிரச்சினை இல்லை. ஆனால் தெரிந்த பிறகு எப்படி அமைதியாக இருக்க முடியும், இதில் அடுத்துதான் என்ன முடிவெடுப்பது என்று குழம்பினான். பிறகு தன் பெற்றோர்களிடம் தெரிவித்து அவர்களின் கருத்தையும் கேட்டு அதன்படி முடிவு செய்யலாம்" என்று ஒரு முடிவுக்கு வந்தவன் அவன் கேட்ட நிகழ்வுகளை மனதில் ஓட்டிப் பார்த்தான்.

தன்வீரின் மனைவி உடல்நிலையை பார்த்த பிறகு இளமதியின் மனது நிலையில்லாமல் தவித்ததை கணவனாக அஸ்வத் கண்டிருந்தான். இளா தன் துக்கங்களை வெளியே காட்டாதிருக்க எவ்வளவோ முயற்சித்தும், அது அஸ்வத்திடம் பலிக்கவில்லை. ஆனாலும் எதையும் அவனிடம் பகிர்ந்துக்கவும் இல்லை. மனைவியின் மனதை அறிந்த அவனோ அவளுக்கேத் தெரியாமல் அவள் குடும்பத்தைத் தேடும் முயற்சியில் இறங்கினான். அவனுக்குக் கிடைத்த தகவலின்படி அவர்கள் திருச்சியில் இருந்தார்கள்.

திடீரென்று ஒரு நாள் அவர்களைப் பற்றி எந்த தகவலும் கிடைக்கவில்லை என்று தெரிய வந்தது. இனி யாரிடம் உதவி கிடைக்காது தானே இதில் இறங்க வேண்டியது தான் என்ற முடிவுடன் இரண்டு நாள் கேம்பை நாலு நாட்கள் என்று குடும்பத்திரிடம் சொல்லிவிட்டு, சென்னை பயணமானான். அங்கு தன் வேலைகளை முடித்துவிட்டு நேரே திருச்சி சென்றான்.

திருச்சி சென்றவனுக்கு எங்கு சென்று எப்படி ஆரம்பிப்பது என்றே குழப்பமாக இருந்தது. அவர்களைப் பற்றி விசாரித்தால் ஏன் எதற்கு என்ற கேள்விகள் வரும், அதையெல்லாம் சமாளித்தாலும் உண்மையான விவரங்கள் கிடைக்குமா என்ற யோசனையில் ஆழ்ந்தான் இளமதி ஒரு முறை தன் அம்மா நேர்மையான தாசில்தார், அவர்களைப் பற்றி யாருமே தவறாகப் பேசியதில்லை, அப்படிப்பட்டவருக்கு என்னை மாதிரி ஒரு பெண் பிறந்தது பாவம்தான் என்று தங்களுக்கிடையே நடந்த உரையாடல்களில் சொல்லிருந்தாள். அப்படி என்றால் அந்த அலுவலகத்தில் முதலில் விசாரிப்போம் என்று முடிவு செய்து அடுத்த நாளுக்காய் காத்திருந்தான்.

"வாங்க சார், என்ன விசயம் என்னைப் பார்க்கனும்னு சொல்லிருந்திங்கலாம், என்னனு தெரிஞ்சிக்கலாமா" என்று ஒரு நடுத்தர வயதில் இருந்தவர் அஸ்வத்தைப் பார்த்துக் கேட்டார்.



புது மலர்கள் பூத்திடும் வேளை - மதுவதனி

# புது மலர்கள் பூத்திடும் வேளை...!

“எஸ் ஸார், ஐ ஆம் அஸ்வத் இன் மிலிட்டரி ஆபிசர் ப்ரம் ஊட்டி, எனக்கு சில குழப்பங்கள், அது தெளிஞ்சா தான் என்னோட பேமிலி லைப் நல்லா இருக்கும் அப்படினு தோணுது. அதனால உங்ககிட்ட ஹெல்ப் கேட்டு வந்துருக்கேன்” என்று சாதாரண உரையாடலாக மாற்றினான் தன் மனதின் பயத்தைப் போக்கும் பொருட்டு,

“யா ஸ்யூர் ஸார், உங்களுக்கு என்னாலான உதவியைக் கண்டிப்பா செய்றேன் உதவினு பெரிய வார்த்தை எல்லாம் சொல்லாம உங்களுக்கு என்ன தேவையோ அதை சொல்லுங்க. நான் க்ளியர் பண்றேன் என்றார் அந்த ஆபிசர்.

“தேங்க்ஸ் ஸார், தேங்க் யூ சோ மச், நான் எதுவும் சொல்லாமலே எனக்கு ஹெல்ப் பண்றேன்னு சொன்னீங்களே உங்களுக்கு பெரிய மனசு சார். அதோட கவர்மென்ட் செர்வன்ட் அவ்ளோ சீக்கிரம் எந்த தகவலும் வாங்க முடியாது அப்படி இப்படினு எல்லாம் சொல்லி கொஞ்சம் கன்பியூஸ் பண்ணி விட்டுட்டாங்க. சோ சாரி பார் மை இமேஜின்” என்றான் அஸ்வத்.

அவனின் முகத்தைப் பார்த்தவர் பியூனுக்கு அழைத்து இரண்டு காப்பிகளை வரவழைத்து முதலில் அவனைப் பருக வைத்தார் அவன் குடிக்கும் வரை பொறுத்தவர்.

“சரிதான் அஸ்வத் மற்றவர்கள் சொல்வதும் உண்மை தான் எங்களிடம் உடனடியாக எந்த தகவலையும் பெற முடியாது. ஆனால் உங்களுக்கு நான் உதவுகிறேன் என்று சொன்னது முதலில் உங்கள் வேலையின் மீது எனக்கிருந்த பெருமை, மற்றது உங்கள் முகத்தில் இருந்த உண்மையான கவலை இவையிரண்டும் தான் உங்களுக்கு என்னை உதவத் தூண்டியது.”

"சரி அதைவிடுங்கள் இப்போது உங்களுக்கு நான் எந்த வகையில் உதவ வேண்டும் என்று சொல்லுங்கள் முயற்சிக்கிறேன்" என்றார் அவர்.

அவரது வார்த்தைகளில் சிறிது நேரம் அமைதியானவன் பின் தான் தேடி வந்த செய்தியை கூற ஆரம்பித்தான். “சார் என்னோட அம்மா பெயர் பூங்குழலி, அப்பா சரவணன் ரெண்டு பெரும் லவ் மேரேஜ். இவங்க காதலுக்கு ஹெல்ப் பண்ணதா நினைச்சு அவங்க ப்ரண்ட் ஒருத்தங்களை ரெண்டு வீட்லயும் அசிங்கப் படுத்தி

புது மலர்கள் பூத்திடும் வேளை - மதுவதனி

இருக்காங்க. பட் இவங்க காதல் அந்த லேடிக்குத் தெரியவே தெரியாது. இது புரியாம ரெண்டு வீட்டளுங்களும் அந்த அம்மாவை ரொம்ப கஷ்டப்படுத்தி இருக்காங்க. அம்மாவுக்கு இதெல்லாம் எதுவுமே தெரியாது கல்யாணம் முடிஞ்சா கையோட நார்த்ல போய் செட்டில் ஆயிட்டாங்க. எனக்கு ஹட்டில டிரான்ஸ்பர் கிடைச்சதும் அப்பாவும் வி.ஆர்.எஸ் வாங்கிட்டு என்கூடவே வந்துடாங்க.

இங்கே வந்ததும் அம்மாவோட சொந்த ஊருக்கு அவங்க சொந்தக்காரங்களைப் பார்க்க போயிருக்காங்க, அங்கே போனதும்தான் அந்த ஆண்டிக்கு நடந்தது தெரிய வந்தது. அதுல இருந்து அம்மா மேண்டல்லி டிஸ்டர்ப், பிபி அதிகமாகி ஹெல்த்தும் பிராப்ளம் ஆயிடுச்சு. இப்போ அம்மாவும் ஆண்டியைப் பார்த்து ஒரு சாரியாவது கேட்கனும்னு ரொம்ப ஆசைப்படுறாங்க. நாங்களும் அந்த ஆண்டியைப் பத்தி விசாரிச்சோம் சரியான தகவலே கிடைக்கல ஒன்னே ஒன்னுமட்டும் சொன்னாங்க ஐந்து வருசத்துக்கு முன்னாடி இந்த ஆபிஸ்ல தான் வொர்க் பண்ணாங்கனு அதனாலதான் இங்கே வந்து உங்க உதவியைக் கேட்கிறேன்" என்று உண்மையை மறைத்து ஒரு பொய்யை உண்மைப் போலவே சொன்னான்.

அவனின் பேச்சை முழுதும் கிரகித்தவர் " ஓகே மிஸ்டர் அஸ்வத் கண்டிப்பா என்னால உங்களுக்கு உதவ முடியும் ஆனா முடியாது" என்று கண்களில் சிரிப்பைத் தேக்கி கூற முதலில் திகைத்தவன் பின் அவர் கண்களைக் கண்டதும் ஆசுவாசமாகி அவரைப் பார்த்து புன்னகைத்தான்.

அவன் தன்னை கண்டு கொண்டதை உணர்ந்தவர். அதுவரை அடக்கிய சிரிப்பை வாய்விட்டு சத்தமாக சிரித்தார். பின் "என்ன அஸ்வத் பயந்துட்டீங்களா, உங்களோட பயம் நியாயம் தான், அதனாலதான் இன்னும் நீங்க என்னோட பேரையே கேட்கல, அந்த ஆண்டியோட பேரையும் சொல்லல " என்றார்.

உடனே தன் தவறை உணர்ந்த அஸ்வத் "சாரி சார், வெரி சாரி அவங்க பேர் விஜயலட்சுமி பாண்டியன், ஹஸ்பெண்ட் இறந்துட்டார்...... ரெண்டு பொண்ணுங்க இருக்காங்க உங்க பேர்..." என்றவன் அங்கிருந்த மேசையில் அவரின் பெயர் பதித்த பலகையைப் பார்த்து "மிஸ்டர் சூர்ய பிரகாஷ் ஓகேவா" என்றான் அஸ்வத்.

“எஸ் அஸ்வத் ஐ ஆம் சூரிய ப்ரகாஷ், இங்கே வந்து ஒன் யேர் ஆகுது, இதுக்கு முன்னாடி நிறைய இடம் போயிட்டு வந்துட்டேன். நேர்மையா இருந்தா இதுதானே நடக்கும். அதனால் பேமிலியை சொந்த ஊரிலையே விட்டுட்டு நான் மட்டும் ஊர் ஊரா சுத்திட்டு இருக்கேன். . ஓகே… MR.அஷ்வத் இன்னைக்கு எனக்கு 11.30க்கு முக்கியமான மீட்டிங் கலெக்டர் ஆபிஸ்ல இருக்கு, ஈவ்னிங் ப்ரீ ஆகிடுவேன், நீங்க ஈவ்னிங் வாங்களேன், இது என்னோட கார்டு வச்சுக்கோங்க, அதுக்குள்ள பியூன் கிட்ட சொல்லி யாருக்கும் சந்தேகம் வராத அளவுக்கு டீட்டேயில்ஸ் கலெக்ட் பண்ண சொல்றேன். நீங்களும் ரிலாக்ஸ் ஆகிட்டு வாங்க” என சூர்ய ப்ரகாஷ் கூறினார்.

அவர் சொல்வதும் சரியெனப் பட அவனும் ஒத்துக்கொண்டு நன்றி கூறி வெளியேறினான். தெரியாத ஊரில் எப்படி நேரத்தை கழிப்பது என்ற யோசனையை உடைத்து திருச்சி மலைக்கோட்டையில் இருக்கும் உச்சிப் பிள்ளையாரை தரிசித்துவிட்டு வரலாம் என்ற முடிவுடன் கோவிலுக்குள் சென்றான்.

தெய்வ சன்னிதானத்தில் தன் மனப் புழுக்கங்கள் எல்லாம் மெல்ல மெல்ல கரைவதை உணர்ந்தவன், நிர்மலமான மனதுடன் கணேசனை வழிபட துவங்கினாள் கடவுளே நான் நினைச்சு வந்த காரியம் நல்ல படியா முடியனும், கஷ்டங்களை மட்டுமே அனுபவித்து வந்த என்னோட மதி இனி எப்போதும் மகிழ்ச்சியை மட்டுமே பார்க்க வேண்டும், அவள் வாழ்க்கையில் நிரந்தரமான நிம்மதியும் சந்தோசத்தையும் கொடுப்பா….. என்ற வேண்டுதலை முன் வைத்துவிட்டு நிம்மதியாக வெளியில் வந்தான். இன்னும் சில மணி நேரங்களில் அந்த நிம்மதி பறிபோய்விடும் என்று தெரியாமல்……

தனக்கு முன் அமர்ந்திருந்த அஸ்வத்தைப் பார்த்த சூர்யா எப்படி ஆரம்பிப்பது என்ற யோசனையிலையே அமைதியாக இருந்தார். அவரின் அமைதியை வைத்தே ஏதோ பெரிய பிரச்சினைதான் என்பதை ஊகித்துக்கொண்ட அஸ்வத், அவனின் மனதை திடப்படுத்திக் கொண்டு சூர்யாவைப் பார்த்து “சார் நீங்க என்ன சொன்னாலும் அதைத் தாங்கிக் கொள்கிற பக்குவம் எனக்கு இருக்கு, நீங்க ஏதோ விபரீதமான விசயம் தான் சொல்லப் போறீங்கனு உங்க முகத்தைப் பார்த்தே தெரியுது. அதனால பயப்படாம சொல்லுங்க. ஐ கேன் மேனேஜ்” என்றான் வராத சிரிப்பை உதட்டில் படரவிட்டு……

அவனின் முயற்சியைப் புரிந்து கொண்ட சூர்யாவும் “சரிதான் அஸ்வத் நீங்க நினைக்கிற மாதிரி தான், கொஞ்சம் சீரியஸ், அந்த மேடம் இப்போ உயிரோட இல்லை.

புது மலர்கள் பூத்திடும் வேளை - மதுவதனி

இறந்து இப்போ நாலு மாசம் ஆச்சு, அதோட அவங்க பக்கவாதம் வந்து இரண்டு வருஷம் குற்றாலத்துல நாட்டு வைத்தியத்துல சிகிச்சை எடுத்துக்கிட்டு இருந்துருக்காங்க.... திடீரென்று சீரியஸ் ஆகி இறந்துட்டாங்க" எனக் கூறி அவன் முகத்தைப் பார்த்தான்.

அவன் முகம் அதிர்ச்சியில் உறைந்து போய் இருப்பதைப் பார்த்தவர் "அஸ்வத் அஸ்வத்" என்று இருமுறை சூர்யா அழைத்ததும் நினைவுக்கு வந்தவன், "நான் இந்தளவுக்கு பெரிய நியூஸ் எதிர்பார்க்கல, அதான் ஷாக் வேறொன்னுமில்லை, அப்போ அந்தப் பொண்ணுங்க ரெண்டு பெரும் எங்கே இருக்காங்க, என்ன செய்றாங்க" எனத் தன் தூக்கத்தை மறைத்து குரலை இயல்பாக்கிக் கேட்டான்.

"ம்ம் பெரிய பொண்ணு ஒரு ஆக்ஸிடென்ட்ல முன்னமே இறந்துட்டதா கேள்விப்பட்டேன். ரெண்டாவது பொண்ணைப் பத்தி சரியா எந்த விவரமும் கிடைக்கல, எனக்கு ஒரு ஒன் வீக் டைம் கொடுங்க, கண்டிப்பா விசாரிச்சு சொல்றேன் அதோட உங்களுக்கும் இதெல்லாம் இனி தேவையே இல்லையே" என்றார்.

"இல்லை இல்லை கண்டிப்பா தெரிஞ்சுக்கணும், நீங்க எனக்கு இந்த உதவியை கட்டாயம் செய்யணும் அப்படி செஞ்சா என் வாழ்நாள் முழுமைக்கும் உங்களுக்கு நன்றியுள்ளவனா இருப்பேன்" என்றான் பதட்டமாக.

"ஓகே அஸ்வத் நீங்க பதட்டப்படாதீங்க, நீங்க உண்மையான காரணத்தை சொல்லவில்லை என்றாலும், உங்கள் கவலையும் பதட்டமும் உண்மை, அதனால் நான் உங்களுக்கு உதவி செய்றேன். பிராமிஸ்" எனவும் அஸ்வத் அவர் கைகளைப் பற்றிக் கொண்டு

"சாரி சூரியா, வெரி சாரி......... உண்மையான காரணம் சொன்னா என்னோட வைப் பத்தி சொல்லணும், அதுதான் சொல்லல, தப்பா எடுத்துக்காதீங்க ப்ளிஸ்" எனக் கூறினான்.

"நோ நோ அஸ்வத்.... டோன்ட் சே டு சாரி அன்ட் ப்ளிஸ். நீங்க சொல்லாதப்பவே புரிஞ்சது அது உங்களோட பெர்சனல் டாக்-னு. சோ டோன்ட் ஒர்ரி, உங்களுக்கு எப்போ சொல்லனுன்னு தோனுதோ அப்போ சொல்லுங்க,

புது மலர்கள் பூத்திடும் வேளை - மதுவதனி

# புது மலர்கள் பூத்திடும் வேளை…!

அதுவரைக்கும் நான் உங்களை போர்ஸ் பண்ணல, அடுத்த சாட்டர்டே உங்களுக்கு மத்த டீட்டேய்ல்ஸ் மெயில் பண்றேன், உங்க மெயில் ஐடி கொடுத்துட்டுப் போங்க, அப்புறம் அந்தம்மா உங்க ரிலேடிவ்வா, சொல்லனும்னா சொல்லுங்க….." என்றார் சூரியா…..

அஸ்வத்தும் ஒரு நிமிடம் தயங்கி “ஆமாம் என் மாமியார், என் மனைவியோட அம்மா நீங்க இப்போ இறந்துட்டதா சொன்னீங்களே அவங்கதான் என்னோட பெட்டர் ஹாப்” என்று விட்டு " ரொம்ப தேங்க்ஸ் சூர்யா, கண்டிப்பா மற்ற யாராலயும் இந்தளவுக்கு ஹெல்ப் பண்ண முடியாது, அதுவும் யாரோ ஒரு முன்ன பின்ன தெரியாத ஆளுக்கு.. இது என்னோட கார்டு, இதுலயே மெயில் ஐடி இருக்கு, எப்போ வேண்டும் என்றாலும் கால் பண்ணுங்க, இந்த உதவியை எப்பவும் மறக்கமாட்டேன். ஒன்ஸ் எகெய்ன் சாரி அன்ட் தேங்க்ஸ் சூர்யா, நான் வரேன்" என்றதுடன் வெளியேறினான். இரவுதான் ட்ரெயின் என்பதால் நேரே தான் அறை எடுத்த ஹோட்டலுக்கு சென்று கட்டிலில் விழுந்தான்.

அவனுக்குமே தனிமை தேவைப்பட்டது. இளா வீட்டைவிட்டு வந்ததும் என்ன நடந்து இருக்கும், என்று ஒரே குழப்பத்தில் இருந்தான் இதை எப்படி இளாவிடம் சொல்வது, அவள் சொன்னது போல் தேடாமலே இருந்திருக்கலாமோ என்ற எண்ணம் வேறு எழுந்தது, அதைத் தலையில் தட்டி உள்ளே அனுப்பியவன் இரவு உணவைக் கூட உண்ணாமல் ஊட்டியை நோக்கி விரைந்தான். அவனுக்கு உடனே அவனின் மதிம்மாவைப் பார்க்க வேண்டும், அதுவே அவனுக்கு முக்கியம் என்பது போல் கிளம்பினான்….

**வேளை தொடரும்……..**

புதுமலர்கள் பூத்திடும் வேளை - மதுவதனி



## வேளை - 19-1

********************************************************************************************************************

அடியே ஒரு தூக்கம் போட்டு
நெடு நாள் தான் ஆனது
கிளியே பசும்பாலும் தேனும் வெறுப்பாகிப் போனது
நிலவே பகல் நேரம் போலே நெருப்பாகக் காயுது

நான் தேடிடும்…
நான் தேடிடும் ராசாத்தியே
நீ போவதா ஏமாத்தியே ?
வா வா கண்ணே இதோ அழைக்கிறேன்

துள்ளி எழுந்தது பாட்டு
சின்னக் குயில் இசை கேட்டு
சந்த வரிகளை போட்டு
சொல்லி கொடுத்தது காற்று

உறவோடுதான் அதை பாடணும்
இரவோடு தான் அரங்கேறணும்
துள்ளி எழுந்தது பாட்டு
சின்னக் குயில் இசை கேட்டு

********************************************************************************************************************

# புது மலர்கள் பூத்திடும் வேளை…!

அடுத்த நாள் குழந்தைகளுக்கு விடுமுறை என்பதால் எல்லோரும் உறங்கிக் கொண்டிருக்க இளமதியும் பூங்குழலியும் மட்டும் எழுந்து வேலைகளைச் செய்து கொண்டிருந்தனர். காலை எழுந்ததில் இருந்தே இளமதியின் முகம் ஏதோ யோசனையிலையே இருப்பதைப் பார்த்த பூங்குழலி “என்ன இளா, ஏன் டல்லா இருக்க, உனக்கும் அஸ்வத்துக்கும் ஏதும் பிரச்சனையா” என்று காபியை அவளிடம் கொடுத்தவாரேக் கேட்டார்.

“அதெல்லாம் ஒன்னுமில்லை அத்தை, அவர்கிட்ட ஏதோ மாற்றம் தெரியுது அத்தை, சென்னைப் போயிட்டு வந்ததுல இருந்தே ஒரு யோசனையிலேயே இருக்கார்.

என்னனு கேட்டா ஏதேதோ சொல்லி சமாளிக்கிறார், அவர் சொல்ற காரணங்கள் உண்மையா இருந்தாலும், அவரோட யோசனைக்கு இது காரணமில்லைனு தோணுது அத்தை, எதையோ மறைக்கிறார் போல, நானும் கேட்கல, சொல்லனும்னா என்கிட்ட சொல்லிருப்பாரே, ஆனா அவர் வருத்தப்படுறதைப் பார்க்க முடியல அத்தை.” என்றாள் காபியை பருகிய படியே.....

“அப்படியா, எனக்கு ஒன்னும் தெரியலையே, அவன் களைப்புல தான் அப்படி இருக்கான் போலனு நினைச்சிட்டு இருந்தேன், நீ சொன்னதும் தான் எனக்கும் யோசனையா இருக்கு, அதனால தான் இன்னைக்கு க்ரௌண்ட்க்கு கூட போகலையா, இல்லாட்டி எவ்ளோ டயர்ட் இருந்தாலும் போகாம இருக்க மாட்டானே..... அப்படி என்ன காரணம் சொன்னான், உனக்கு ஏன் அதை நம்ப முடியலை”

“அதுவா அத்தை ட்ரான்ஸ்பார் போடப்போறதா சொல்றார். அவருக்கு இந்த வேலை எவ்வளவு இஷ்டம்னு நமக்கு எல்லாருக்கும் தெரியும், அதுக்குப் போய் ரொம்ப பீல் பண்றார், எப்படியும் நாமளும் அவர் கூடத்தானே போகப்போறோம். நம்மளை விட்டுத் தனியா இருக்கனும், அப்படி இப்படின்னு புலம்புறார், அதெல்லாம் சரியா காரணம் இல்லைனு நினைக்கிறேன், வேற எதையோதான் போட்டுக் குழப்பிட்டு இருக்கார்.”

மருமகள் சொல்வதில் இருந்த உண்மையில் சிறிதுநேரம் அமைதியாக இருந்த பூங்குழலி அப்படி என்றால் இளா கூறுவதுபோல் வேறு காரணம் தான் என்பதையும் உணர்ந்தவர், அதை இவளிடம் ஒத்துக் கொண்டால் மேலும் மனதைப் போட்டுக் குழப்பிக் கொள்வாள்,

புது மலர்கள் பூத்திடும் வேளை - மதுவதனி

என்பதால் அவள் மனதை மாற்றும் பொருட்டு, “இளா நாம தேவையில்லாம யோசிக்கிறோம்னு தோணுது. தம்பி சொல்றது கூட உண்மையா இருக்கலாம், கொஞ்சம் பொறுத்துப் பார்க்கலாம். அவனே தெளிஞ்சு நம்மகிட்ட சொல்லுவான், அப்புறம் நேத்து ஆதி போன் பண்ணதை சொன்னியா. நான் மறந்துட்டேன்” என்று பேச்சை மாத்தினார் குழலி.

“இல்லத்தை நான் போறதுக்குள்ளே தூங்கிட்டார். அதான் எழுப்ப வேணாம்னு ..............” என்று திணறிய மருமகளைப் பார்த்ததும் விஷயத்தை யூகித்தவர், சிறு புன்னகையோடு “சரி விடு, நானே சொல்றேன்” என்று எழுந்து உள்ளே சென்றார்.

“ச்சே வர வர இந்த மனுசன் பண்ற அநியாயம் தாங்கல, நேத்தே அத்தை சொல்ல சொன்னாங்க, இப்படியா மறப்பேன். இந்தப் பக்கி எதையாவதுப் பேசி, நாம என்ன சொல்ல வர்றோம் என்பதையே மறக்க வச்சுடும், அத்தை வேற சிரிச்சாங்களே என்ன நினைச்சாங்களோ” என்று தனக்குள்ளே சலித்துக் கொண்டு வேலையைப் பார்த்தாள்.

அடுத்த சில மணி நேரத்தில் எல்லாரும் எழுந்து விட, வீடே அரட்டையும், கும்மாளமும் கொண்டாட்டமுமாய் இருந்தது. பூங்குழலியும் இளமதியும் அஸ்வத்தையேப் பார்க்க, அவன் இப்போது பழைய மாதிரி இருந்தான், அதைப் பார்த்ததும் இருவருக்கும் நிம்மதி வர, குழலி மட்டும் பையன் தெளிவாயிட்டான் அப்போ கண்டிப்பா இன்னைக்கு நம்மிடம் ஏதோ சொல்லப் போறான் என்று நினைத்துக் கொண்டார்.

அவர் நினைத்ததைப் போலவே சரவணனிடம் தனியே பேச வேண்டும் என்று வெளியே அழைத்துச் சென்று எல்லாவற்றையும் கூறி விட்டான். மகன் கூறுவதைக் கேட்ட சரவணனுக்கும் என்ன சொல்வதென்றேத் தெரியவில்லை. இளமதியின் நிலையை நினைத்து மிகவும் பரிதாபப்பட்டார், மகன் தன் பதிலுக்கு காத்திருப்பதை பார்த்தவர், “தம்பி நான் அம்மாவிடம் பேசிட்டு சொல்றேன், அம்மான்னா இன்னும் கொஞ்சம் யோசிக்க வாய்ப்பிருக்கு, இன்னைக்குப் பேசுறேன். மார்னிங் நீ கிரவுண்ட்டுக்குப் போயிட்டு அங்கேயே இரு, நான் குட்டிங்களை ஸ்கூல் விட்டுட்டு அப்படியே அம்மாவையும் அழைச்சுட்டு வர்ரேன், அங்கேயே மூணு பேரும் பேசி முடிக்கலாம், விட்டுல முடியாது இளா கூடவே இருப்பா” எனவும்.

புது மலர்கள் பூத்திடும் வேளை - மதுவதனி

# புது மலர்கள் பூத்திடும் வேளை...!

"சரிப்பா அப்போ அம்மா விடம் பேசுங்க, நான் நீங்க சொல்றமாதிரி செய்றேன்" என்றதோடு எழுந்தான்.

அன்றிரவு சரவணனும் குழலியும் பேசி முடிவெடுத்து அடுத்த நாள் அஸ்வத்தும் தங்கள் முடிவைத் தெரிவித்தனர். அது இளமதியிடம் உண்மையைக் கூறுவதுதான் சரி என்று, அஸ்வத்தும் இதை ஓரளவுக்கு எதிர்பார்த்தான் தான். ஆனால் இளாவிடம் கூறும் தைரியம் இல்லை அவனுக்கு, அவளுக்கு ஏதாவது ஆகிவிடும் என்று பயந்தான், அதையே அவர்களிடமும் கூறினான்.

"கண்ணா நீ பயப்படறது சரிதான், ஆனால் இப்போ இந்த உண்மையை மறைச்சா, இதை மறைக்க ஒரு பொய் சொல்லனும், அந்தப் பொய்யை மறைக்க இன்னொன்னு, அப்படியே போயிகிட்டே இருக்கும், அப்புறம் நீ திரும்பிப் பார்க்கும் போது உன்னோட வாழ்க்கை, முழுதும் பொய்யாலையே நிரம்பி இருக்கும், உனக்கும் குழம்பி போயிடும், எதுக்கு எதை சொன்னோம்  அப்படினு, அதனால்தான் இதை சொல்றேன்.

உண்மையை சொல்லி அதை ஏத்துக்க வைக்க முயற்சி செய்தாலே போதும், மருந்து முதல்ல கசக்கத்தான் செய்யும் ஆனா அதைக் குடிச்சாத்தான் நோய் சரியாகும். நம்ம இளா பார்க்காத பிரச்சினையும் இல்லை, அனுபவிக்காத கஷ்டமும் இல்லை, அதே மாதிரி இதையும் ஏத்துக்குவா, ஏத்துக்கிட்டு வாழ பழகிக்குவா, எனக்கு என் பையன் மேல நம்பிக்கை இருக்கு, அவன் அவனோட பொண்டாட்டிக்கு முழு அளவுல சப்போர்ட்ட இருப்பான்" என்று முடிந்த குழலி கடைசியில் என்னங்க நான் சொல்றது சரிதானே" என்றார் கணவனையும் பேச்சில் இழுத்து...

"கண்டிப்பா என் மனைவி எப்போதும் உண்மையை மட்டும் தான் பேசுவா," என்று சிரித்தார், அவரை குழலி முறைக்கவும் "தம்பி அம்மா சொல்றது சரிதான், ஒரு பொய்யால உருவாகுற வாழ்க்கை நிலையா இருக்காது, நீ இளாவிடம் உண்மையை சொல்லு, பேசாம அந்த சூர்யா புல் டீட்டெயில்ஸ் உனக்கு மெயில் பன்றேனு சொன்னாரில்லை, அதைப் பார்த்துட்டு அப்புறம் இளாக்கிட்ட பேசலாம். எல்லோரும் இருக்கும் போது பேசலாம்... அப்போதான் அவளை சமாளிக்க முடியும்" என்றதோடு மூவரும் கிளம்பினர் வீட்டை நோக்கி..

புது மலர்கள் பூத்திடும் வேளை - மதுவதனி

# புது மலர்கள் பூத்திடும் வேளை…!

"கண்ணா ஆதி நேத்து போன் பண்ணான்டா, இன்னும் மூணுமாசத்துல இந்தியா வராளாம், இங்கேயே செட்டில் ஆகுறமதிரியே வாரங்க போல, ஆதியோட பிராஜக்ட் முடியுதாம், ரவியும் இந்தியாவே வந்துடலாம்னு சொல்லிரூப்பார் போல, அதனால ஒரு மூணு மாசத்துல எல்லாத்தையும் ஒழிச்சுக் கட்டிட்டு இங்கே வந்துடுறேனு சொன்னா. அப்படியே தஸ்வந்துக்கும் ஸ்கூல் சீட் பார்க்க சொன்னா, சென்னை ஆர்மி ஸ்கூலில், உன்னை பேசி ஏற்பாடு பண்ண சொல்லிருக்கா, இன்னைக்கு நைட் பேசும் போது சொல்லிரு" என்றார் குழலி.

"ம்ம் சரிம்மா, எனக்கும் ட்ரான்ஸ்பர் இருக்கும் போல சென்னை என்றால் பிரச்சினை இல்லை, வேற எங்கேயாவது என்றால் நான் மட்டும் தான் போகணும் உங்களையும் இழுத்துட்டு அழைய வேணாம்னு பார்க்குறேன்" என்றான்.

"தனியா எல்லாம் வேண்டாம் தம்பி, எங்கே போறது என்றாலும் பேமிலியா போகனும் அதுதான் நல்லது, குழந்தைங்க இனி உன்னைப் பிரிந்து இருக்க மாட்டாங்க, அதோட குழந்தைகளைக் கூட சமாளிக்கலாம், இளாவைக் கண்டிப்பா முடியாது, இப்பவே இன்னும் காணோம் காணோம்னு புலம்பிட்டு இருந்தாள். நாங்க வரும்போது….. அதனால சென்னையேக் கேட்டுப்பாரு எதுக்கும்" என்றதுடன் வீடு வந்துவிட பேச்சுக்கள் அப்படியே திசைமாறியது.

அஸ்வத்தும் சூர்யாவின் மெயில் வந்த பிறகே உண்மையைக் கூறலாம் என்ற முடிவை எடுத்தான். அதனால் அவன் மனம் லேசாக பழைய மாதிரி வீட்டில் உள்ளவர்களிடம் கிண்டலடித்து கொண்டும், மனைவியைச் சீண்டிக்கொண்டும் திரிந்தான். இளாவோ இவனா இரவெல்லாம் சோகமாய் இருந்தவன் எனபது போல் யோசிக்க ஆரம்பித்து விட்டாள்.

வழக்கம் போல நாட்கள் இவர்களுக்கு குதுகலமும் கொண்டாட்டமுமாய் பறந்தது. குட்டிகளுக்கு தஸ்வந்த் வருவது தெரிந்ததும் மிகவும் சந்தோசமாய் சுற்ற ஆரம்பித்தனர். அஸ்வத்துக்கு மட்டும் மனதின் ஓரத்தில் சிறுவலி இருந்து கொண்டே இருந்தது. உண்மையை எப்படி சொல்வது, அதை எப்படித் தன் மதி தாங்குவாள் என்று யோசித்துக் கொண்டே சனிக்கிழமை வரைக்காத்திருந்தவன், அன்று வந்த மெயிலைப் பார்த்ததும் உறைந்து போய் அமர்ந்து விட்டான்……

புது மலர்கள் பூத்திடும் வேளை - மதுவதனி

# புது மலர்கள் பூத்திடும் வேளை…!

**- நிலாவின் வீடு -**

எத்தனை நாட்களுக்குப் பிறகு இப்படி இருவரும் ஒரே அறையில் என்று யோசித்துக் கொண்டே நிலாவின் அருகில் அமர்ந்தான் சரண்… தன்னுடைய வீட்டில் இருக்கும் போதும் ஒரே அறையில் தான், ஆனால் தனித்தனியாக இருந்தனர். எத்தனை நாள் ஆசை, எத்தனை நாள் கனவு, அதற்கெல்லாம் முடிவு கட்டியது போல் இப்போது இருவரும் ஒரே அறையில் நினைக்கவே மனம் முழுதும் சந்தோசப் பூக்கள் மலர்ந்து மனம் பரப்பியது.

இன்று சரண் இப்படி தன் நிலாவிடம் இருப்பதற்கு காரணம் அவனது அருமை சிஷ்யர்கள் என்று சொன்னால் மிகையாகாது… மல்லிகாம்மாவின் திட்டப்படி மதிய உணவை எடுத்துக் கொண்டு இருவரும் சரணை சந்திக்க போனார்கள்…

தன் முன்னே நிழலாட நிமிர்ந்து பார்த்த சரண் அங்கு தன செக்ரட்டரி நிற்பதைப் பார்த்து “என்ன சக்தி“ என்றான்…

“சார் லஞ்ச் டைமாச்சு இன்னும் நீங்க சாப்பிட போகலையே “

“ஓ டைமாச்சா கவனிக்கல… ஓகே நான் பார்த்துக்குறேன், நீங்க போய் முடிச்சிட்டு வாங்க“ எனவும் அவன் வெளியேற…

சரணும் தன வேலைகளை எடுத்து வைத்துவிட்டு காண்டீன் நோக்கி செல்ல கதவை திறந்தான். அப்போது கதவைத் தள்ளி திறந்து கொண்டு இருவரும் வழக்கம் போல சண்டையிட்டு கொண்டு உள்ளே வந்தனர்..

அவர்களைப் பார்த்ததும் ஷாக் ஆனது போல் சரண் நடிக்கவும் “இப்போ எதுக்கு இப்படி ஓவர் ரியாக்ட் பண்றீங்க… எங்களைப் பார்த்தா உங்களுக்கு எப்படி தெரியுது, பாவம் நம்ம அண்ணனாச்சே காலையிலேயே கோவத்துல கொஞ்சமா சாப்பிட்டு வந்துட்டாரே, சரி இப்போவாச்சும் அவருக்கு பிடிச்ச மாதிரி தேனக்கா சமைச்சாங்களே அதைக் கொண்டுவந்து கொடுப்போம்னு நினைச்சு வந்தா, என்னமோ ஓவரா கிண்டல் பண்றாரு..

# புது மலர்கள் பூத்திடும் வேளை…!

நந்தி இன்னைக்கு இந்த சாப்பாடு இவருக்கு இல்லைன்னு கடவுள் எழுதிட்டாரு போல.. வா வழக்கம்போல போய் காண்டீன் ல கொட்டிகிடட்டும் நாம கெளம்புவோம்" என சரணைப் பார்த்து பொறிந்த ஷானவியை சமாதானப் படுத்தி அந்த உணவை சாப்பிடுவதற்குள் போதும் போதும் என்றாகிவிட்டது சரணுக்கு.....

உணவு முடிந்ததும் அவர்களைப் பார்த்து "இப்போ சொல்லுங்க என்ன விஷயம், எதுக்கு என்னை பார்க்க வந்தீங்க" என்றான் நேரடியாக…

"நீங்க சொல்லுங்க எதுக்கு எங்க ரெண்டு போரையும் பார்த்து ஷாக் ஆனமாதிரி கிண்டல் பண்ணீங்க" என்றாள்

"பின்ன உங்க பாவரைட் கமல் படம் பார்க்க கூட்டிட்டு போறேன் ஆபிசுக்கு வாங்கனு சொன்னா கூட எட்டிப்பார்க்காத ரெண்டு பேரும் இப்படி நான் கூப்பிடாமலே வந்து நின்னா ஷாக் ஆகாம என்ன ஆகும்" என்று சிரித்துக் கொண்டே "இப்போவாச்சும் சொல்லுங்க எதுக்கு என்னை பார்க்க வந்தீங்க… என்ன காரியம் நடக்கணும் உங்களுக்கு என்னை வச்சு" என்றான் மீண்டும் நேரடியாக..

"அது போனமாசம் இது இந்த மாசம்" என்று வடிவேல் பாணியில் கூறியவள் "ஆமாம் இன்னைக்கு அம்மாவும் அப்பாவும் அக்காவைப் பார்க்க வராங்கலாம், அப்படியே சீமந்தம் பத்தியும் பேசணும்னு சொன்னாங்க, அதை மல்லிகிட்ட சொன்னேன், அது உங்ககிட்ட பேச சொல்லிச்சு, என்னமோ நீங்கதான் முடிவு எடுக்கணுமாம், அதான் போய் உங்ககிட்ட சொல்லிட்டு ஈவ்னிங் அங்க வர சொல்லிச்சு" என்றாள் ஷானவியும் நேரடியாக…

"ஓ" என்றவன் சிறிது நேரம் அமைதி காத்துவிட்டு "பின் என்ன திடீருன்னு, நிலா எதாவது சொன்னாளா.?" என்றான்.

" அண்ணியா ..? அண்ணிக்கு இதைப் பத்தி எதுவும் தெரியாது, நாங்க யாரும் சொல்லல.. அவங்ககிட்ட சொல்லிட்டு அப்புறம் நீ வேணாம்னு சொல்லிட்டா என்ன செய்ய.., வீணா அவங்க மனசுல ஆசையை வளர்க்க வேண்டாம்னு சொல்லல " என்றான் அதுவரை மற்ற இருவர் பேச்சையும் மட்டும் கேட்டு கொண்டிருந்த சிபி..

“ஓ” என்றான் சரண் மீண்டும் ஒருமுறை. பிறகு கண்களை இறுக மூடித் திறந்தவன் “இப்போ இருக்குற பிரச்சனையில் இது தேவை இல்லைனுதான் தோணுது சிபி.. அக்காவிற்கு தெரிஞ்சா என்ன சொல்லுவாங்களோ தெரியல, அதைவிட நிலாவோட பாதுகாப்பு ரொம்ப முக்கியம் எனக்கு… சோ எதுக்கும் யோசிச்சிட்டு சொல்றேன்..” என்றவாறே அவர்கள் முகத்தைப் பார்க்க அதில் அதிர்ச்சி அப்பட்டமாக தெரிந்தது…

இவர்கள் இப்படி அதிர்ச்சியாகும் படி நாம் என்ன சொன்னோம் என்று யோசித்தவன் அப்போதுதான் தான் நிலாவின் பாதுகாப்பு பற்றி பேசியது உரைக்க பேச்சை மாற்றும் பொருட்டு “சரி ஈவ்னிங் வரேன், மல்லிக்கிட்டையும் ஆண்டிக்கிட்டையும் சொல்லிடுங்க” என்றான்.

“அண்ணா எங்களிடம் எதையும் மறைக்கிரீங்களா, நீங்களும் சரி அண்ணியும் சரி எதையோ மறைக்கிரீங்கனு மட்டும் தெரியுது. பட் அது என்னவென்று எங்க ரெண்டு பேரளையும் யூகிக்க முடியல, அப்படியே கேட்டாலும் உங்க வேலையை மட்டும் பாருங்க என்று சொல்லிடுவீங்க… அண்ணியை பார்க்கும் போது ரொம்ப கஷ்டமா இருக்குண்ணா, சீக்கிரம் இதுக்கு ஒரு முடிவு கட்டுங்க.. இதுக்கு மேல என்னால எதுவும் சொல்ல முடியாது.. ஈவ்னிங் சீக்கிரம் வாங்க” என்றதுடன் இருவரும் சென்றுவிட்டனர்.

சரணுக்கும் இந்த பிரச்சினையை இனியும் வளரவிட மனமில்லை. போதுமேன்றளவுக்கு இருவரும் பிரிந்து இருந்தாகி விட்டது. தன் வாரிசு வரும் இந்த நேரமாவது இருவரும் ஒன்று சேரவேண்டும் என்ற முடிவுக்கு காலையில் நிலாவை அப்படி பார்த்ததில் இருந்து யோசித்து வைத்திருந்தான். இந்த சீமந்தம் தான் அதற்கு சிறந்த வழி என்பதும் மனதில் தோன்றிவிட இன்று நிலாவிடம் இதைப் பற்றி பேசலாம் என்று நினைத்துக் கொண்டு அடுத்தக் கட்ட வேலைகளை முடிக்க ஆரம்பித்தான்.

அந்த முடிவுடனே அன்று மாலை மல்லியிடமும் ஷானவியின் பெற்றோரிடமும் சீமந்தத்தைப் பற்றி பேசி முடித்தான்.. ஷானவியின் பெற்றோர் வளைகாப்பு முடிந்ததும் பிறந்த வீடாக தங்களுடைய வீட்டுக்கு அழைத்துச் செல்வதாக கூற, சரண் முற்றிலும் மறுத்து விட்டான்.. இனி இங்கேயே இருந்து தானே பார்த்துக் கொள்வதாக கூறிய பின்னரே அவர்கள் ஒத்துக் கொண்டு விடைபெற்றனர்.

புது மலர்கள் பூத்திடும் வேளை - மதுவதனி

சரண் அவளை அனுப்பமாட்டேன் என்று கூறியதாலும் ஷானவி மற்றும் சிபியின் தேர்வை முன்னிட்டு ஒன்பதாம் மாதம் வளைக்காப்பு வைக்கலாமா என்று ஆலோசனை நடந்தது.. ஆனால் மல்லிகா ஏழாம் மாதமே வைத்துவிடலாம், ஏனென்றால் முதல் பிரசவம் எப்படி வேண்டுமானாலும் இருக்கும், ஒன்பதாம் மாதம் தொடக்கத்திலே கூட வலி எடுத்துவிட வாய்ப்பிருக்கிறது அதனால் இப்போதே வைத்து விடலாம் என்று கூறி விட்டார்…

அதன் பொருட்டு அடுத்த் இரண்டு வாரங்கள் கழித்து ஒரு ஞாயிறு அன்று விழாவை வைத்துக் கொள்ளாலாம் என்று ஒரு மனதாக நிலாவின் ஒப்புதல் இல்லாமலே முடிவெடுக்கப் பட்டது….

அதன் பிறகு நிலாவிடம் பலமுறை பல பத்திரங்களைக் கூறி ஷானவியின் பெற்றோர் அவளையும் அழைத்துக் கொண்டு விடை பெற்றனர்.. சிபியும் தன் அண்ணனிடம் விடை பெற….

“ஏன் சிபு நீயும் இங்கேயே இரேன்… அங்கதான் யாருமே இல்லையே … அக்காவும் நாளைக்கு நைட்தான் வருவாங்க.. “

“ஹ்ம்ம் ஆமாம்… ஆனா இன்னைக்கு நைட் நம்ம வீட்ல ஒரு மேட்டர் நடக்கப்போகுது, என்னோட கெஸ் சரியா இருந்தா… அது இந்நேரம் நம்ம வீட்டுல உங்க பெட்ரூம்ல கூட காத்துட்டு இருக்கும்னு நெனைக்கிறேன்… நான் போய் அதை மெயின்டெயின் பண்ண வேண்டிய வேலை இருக்கு… அதனால் நான் போயிட்டு போன் பண்றேன்… நீங்க போய் அண்ணியை பாருங்க, நீங்க இருந்தா அண்ணி கீழ வரதே இல்லை..” என்று ஒரு குற்றத்தையும் அவன் மேல் சுமத்திவிட்டு பதிலுக்கு கூட நிற்காமல் கெளம்பி விட்டான்.

இவன் என்ன பேசிட்டு போறான்… வரவர ரெண்டும் ஏதோ பிளானிங்லையே சுத்திட்டு இருக்குதுங்க… எங்கபோய் முடியப்போகுதோ என்று யோசித்தவன்.. மல்லிம்மவைத் தேடி போனான்…

புது மலர்கள் பூத்திடும் வேளை - மதுவதனி

# புது மலர்கள் பூத்திடும் வேளை…!

சமையலறையை ஒதுக்கி கொண்டிருந்தவர் அங்கு வந்த சரணைப் பார்த்து புன்னகைத்து விட்டு "ஏதாவது வேணுமா தம்பி… பால் கொண்டு வரவா, இல்லை ஷானுவோட அம்மா கொண்டு வந்த ஸ்வீட்ஸ் இருக்கு எடுத்துட்டு வரவா…" எனவும்

"அதெல்லாம் ஒன்னும் வேண்டாம் மல்லிம்மா, நான் ரூமுக்கு போறேன்… நைட் அவளுக்கு என்ன கொடுக்கனும்… மெடிசின் எல்லாம் சரியா எடுத்துக்குறா தானே… இப்போ வேற எதாவது கொடுக்கனுமா…
இடையில் எழுந்துப்பாளா, பேசாம நீங்களே அவகூட எப்பவும் போல படுத்துக்குறீங்களா… நான் கீழ இருக்கே ரூம்லயே தங்கிகிறேன்…" என்றான் ஒரு விதமான பதட்டத்துடன்…

"என்ன தம்பி.. எதுக்கு இப்படி பதட்டபடுற… தேனு உன்னை ஏதும் சொல்லிருமேனே பயப்படுறியா.. அந்தப் புள்ள உன்னைப் போய் ஏதும் சொல்லுமா… நீ இங்க இல்லைன்னாலும் அவ நீ இங்கேயே இருக்குறதாத்தான் நெனைக்கிறா…. நீயா எதையும் யோசிக்காம போய் படு… தேனு எந்த ஒரு கஷ்டம் வந்தாலும் யாரையும் தொல்லை பண்ண மாட்டா…. அப்படியே நைட்டு அவளுக்கு ஏதும் வேணும்னாலும் அவளே செஞ்சுப்பா… இதெல்லாம் அவ கூட பழகுனதுல எனக்கு தெரிஞ்சது… இதெல்லாம் உனக்கு சொல்ல வேண்டியது இல்லை… அதான் உனக்கே எல்லாம் தெரியுமே…" என்று விட்டு மீண்டும் தான் விட்ட வேலைகளை தொடர்ந்தார் மல்லிகா…

அவனின் நிலாவைப் பற்றி அவனுக்குத் தெரியாதா.. எல்லாம் தெரியும்….. தெரிந்தும் அவளை விட்டுப் பிரிந்து இருக்க காரணம் அவள் உயிர் அல்லவா… அவளோடு அவன் சேர்ந்து வாழ நொடி நேரம் போதாது… ஆனால் அதன் பிறகு அவளின் எதிரிகள் குறிவைப்பது அவளின் உயிரை அல்லவா… அவள் உயிரோடு இருக்க வேண்டும் என்ற காரணத்தினாலும்… எதிரிகள் அவனிடம் சரியான ஆதாரத்துடன் வசமாக மாட்டவேண்டும் என்பதாலும் தானே அவன் இப்படி பிரிந்து, அவளை வெறுத்து விட்டதாக நடித்து மற்றவர்களோடு சேர்ந்து நிலாவையும் நம்ப வைத்து இப்படி கஷ்டப்படுகிறான்…. நினைக்கவே மனம் சோர்ந்து போனது… இனி ஒருபோதும் நிலாவை தனியாக விடமுடியாது… அவள் அனுபவித்த கஷ்டங்கள் எல்லாம் போதும்… நானும் அவளை அதிகம் வார்த்தையாலும் செய்கையாலும் நோகடித்து விட்டேன்… அதுவே அவளது ஆறிகொண்டிருந்த மனக்காயங்களை கீரிவிட்டது போல் ஆகியிருக்கும்… இனியும் அவள் தன்னால் வருத்தபடுவதை தாங்கி கொள்ள முடியாது என்று தோன்றியது அவனுக்கு… அதனாலே அவளுடனே இருக்கும் முடிவை எடுத்தான் சரண்…

புது மலர்கள் பூத்திடும் வேளை - மதுவதனி

அதே யோசனையோடு உள்ளே வந்தவனை உறங்கிய மனையாளை வரவேற்க, என்றும் இல்லாத ஏக்கம் அவன் மனதில் உண்டானது… நிலாவின் அம்மா இறந்த சமயம் அவளை அவன் கோபமாக கடிந்து பேச, அதுவே அவனிடம் இருந்து நிலாவை ஒதுங்க வைக்க போதுமானதாக இருந்தது…

அதிலிருந்து அவளாக அவனைத் தேடி வருவதே இல்லை… ஏதேனும் தேவைப்பட்டாலும் அவனிடம் வாய் திறந்து கேட்பதும் இல்லை… காரியங்கள் எல்லாம் முடிந்து ஊருக்கு வரும்போது நேரே இந்த வீட்டிற்குத்தான் அழைத்து வந்தான்.. ஏன் எதற்கு என்ற கேள்விகளை கூட அவள் கேட்கவில்லை.. அந்தளவிற்கு அவள் இந்த வாழ்க்கையை வெறுத்துக் கொண்டிருக்கிறாள் என்று தெரியும்போது அவன் என்ன செய்வான்…? காலம் அதற்கான பதிலுடன் காத்துக் கொண்டிருக்கிறது என்பதை அறிவானா..?

இப்படியே நிலாவின் வதனத்தையே பார்த்து யோசித்துக் கொண்டிருந்தவனின் அலைபேசி சிணுங்க, அவசர அவசரமாக அதை ஆன் செய்து காதில் வைத்தான், மனைவியின் தூக்கம் கலைந்து விடுமோ என்று… போனில் அந்தப்பக்கம் சிபிதான்.. அந்த மீனா வந்து வீட்டையே ஒருவழி செய்துவிட்டுப் போனதாக கூறி, அவள் எதற்கு அக்கா இல்லாத நேரம் வருகிறாள் என்று கோபமாக கத்திவிட்டு, சரண் பேச இடம் கொடுக்காமல் அவனே பேசி முடித்து போனை வைத்தும் விட்டான். அவனது கோபத்தை நினைத்துச் சிரித்தவன் ஒன்றும் செய்யாமல் மீண்டும் நிலாவின் அருகில் வந்தமர்ந்தான்..

அவளது முகத்தில் பார்வையைப் பதித்தவன் சிபி தற்போது தன்னிடம் கூறிய செய்தியில் யோசனை ஓடியது… இதை அவன் ஓரளவிற்கு எதிர்பார்த்தான் என்பதால் கோபம் வரவில்லை.. மேலும் கோபப்பட வேண்டிய நேரமும் இல்லை.. வேகத்தை விட விவேகமே முக்கியம் என்பதால் எலி தன் பொறியில் சிக்கும் நாளிற்காய் காத்திருந்தான்..

**வேளை தொடரும்……..**

புதுமலர்கள் பூத்திடும் வேளை - மதுவதனி

## வேளை - 19-2

மீனா அன்று மிகவும் மகிழ்ச்சியாய் இருந்தாள். அண்ணனும் அண்ணியும் அவர்கள் வீட்டில் இல்லை... சரணும் சிபியும் மட்டுமே. சுமார் ஏழு மணி அளவில் சரணின் வீட்டிற்கு போன் செய்து கேட்டவள் இன்னும் இருவரும் வீட்டிற்கு வரவில்லை என்பதை தெரிந்து கொண்டு சரணை இன்று எப்படியாவது தன் வழிக்கு கொண்டு வந்துவிடவேண்டும் என்பதில் உறுதியாக இருந்தாள். ஆனால் சிபி இருப்பானோ என்ற கேள்வியில், அவன்தான் எப்போதும் அந்த ஷானவியின் பின்னே அலைகிறானே, அப்படி இருக்கையில் அவனால் தன் திட்டத்திற்கு எந்த ஒரு இடையூறும் இருக்கப்போவதில்லை என்பதில் உறுதியாய் இருந்தாள்.

அதனாலே அவள் அண்ணனிடம் மேலும் இரண்டு நாட்கள் சேர்ந்து ஏற்காட்டில் இருந்துவிட்டு வருமாறு கூறினாள். இதெல்லாம் அகிலாவிற்கு தெரிந்தாலும் அவள் ஒன்றுமே மறுத்துக் கூறவில்லை. அகிலா ஏதும் கூறாதது மீனாவிற்கு மகிழ்ச்சியை கொடுக்க, தன் வேலையை முடிப்பது சுலபம் என்று எண்ணினாள்.

அகிலா ஏதும் மறுத்துக் கூறாதது தன் தம்பிகளிடம் இருக்கும் நம்பிக்கைதான் என்பதை மீனாவும் அவளது அண்ணனும் மறந்து போனார்கள். அகிலா சரணை சரியாக எடைபோட்டிருந்தாள். அவன் ஒரு காரணத்திற்காக தான் நிலாவைப் பிரிந்து இருக்கிறான் என்பதையும், அவன் இத்தனை நாள் அமைதியாக இருப்பதற்கு காரணம் தன் அக்காவின் வாழ்க்கையும் இதில் அடங்கி இருக்கிறது என்பதாலும் தான் என்பதை அகிலா சரியாக கணித்திருந்தாள். ஏனென்றால் நிலாவை அவன் எந்தளவிற்கு விரும்புகிறான் என்பது அவளுக்கும் தெரியுமே... அதனால் அவனே தன் வாழ்க்கையையும் நிலாவையும் காப்பாற்றிக் கொள்வான் என்றும் அறிந்து கொண்டாள்.

அவளால் ஆனது நிலாவைப் பற்றி குறைகூறி சரணின் சுயமரியாதையை சீண்டிவிடுவதே... அதை அவள் சரியாக செய்தாள். அப்படி அவளின் ஒரு முயற்சிதான் நேற்று மீனாவுடன் சென்று நிலாவைப் பார்த்து ஏற்காடு போவதை அறிவித்தது.. ஆனால் அவள் முகத்தில் எந்த ஒரு எதிர்பார்ப்பும் இல்லை, கண்ணில் நிராசை மட்டுமே தெரிந்தது.. அதனால் சீக்கிரம் இதற்கு ஒரு முடிவு வேண்டும் அது மீனாவின் செய்கையாலே கிடைக்கும் என்பதால்தான் அகிலா எதையும் கண்டுகொள்ளாமல் அமைதியாக இருந்துவிட்டாள்.

புது மலர்கள் பூத்திடும் வேளை - மதுவதனி

# புது மலர்கள் பூத்திடும் வேளை…!

மீனா சரண் வீட்டை அடையும்போது அவர்கள் இருவரும் வந்திருக்கவில்லை.. உள்ளே வந்தவள் ராமுவிடம் சிபி எங்கே எனக் கேட்க அவன் தேனுவைப் பார்க்க சென்றுவிட்டதாக கூறவும்,

"அங்கே ஏன் போனான், அண்ணி இல்லைன்னா இந்த வேலையெல்லாம் பண்றனா, வரட்டும் அவனை என்ன செய்றேன் பாரு, அவளைத்தான் இந்த வீட்டுக்கே வேண்டாதவள் என்று ஒதுக்கி வச்சிட்டாங்களே அப்புறம் எதுக்கு அங்கே போனான்.. அந்த குட்டச்சி கூட்டிட்டு போனாளா..? அவளையெல்லாம் வீட்டுக்குள்ளயே விடக்கூடாது" என்று கோபமாக கத்தியவள் பின் திரும்பி "சரண் அத்தான் எப்போ வருவாங்க" என்றாள்.

"தம்பி வர பதினொரு மணியாகிடும். இப்போலாம் அந்த நேரம் தான் ஆகுது"

"அப்போ சரி நான் மேல இருக்கேன், வந்ததும் சொல்லுங்க.." என்றவள் நேராக சென்றது சரணின் அறைக்குத்தான். அதைப் பார்த்த ராமு உடனே சிபிக்கு அழைத்து தெரிவித்துவிட்டார். சிபியும் அண்ணனிடம் விசயத்தைக் கூறாமல் உடனே கௌம்பி வந்துவிட்டான்.

சரணின் அறைக்குள் நுழைந்தவள் ஒருநிமிடம் அசந்து நின்றுவிட்டாள். அந்த அறையெங்கும் அவனும் நிலாவும் மட்டும் இருக்கும் புகைப்படங்களும், ஓவியங்களும் மாட்டப்பட்டு அந்த அறையே அழகாக காட்சியளித்தது. அவளே இப்படி ஒரு அருமையான ஜோடியா என்று திகைத்துவிட்டாள். ஆனால் அதெல்லாம் ஒருநிமிடம் தான் அடுத்தநிமிடமே அந்த இடத்தில் தான் இருக்க வேண்டியது, வேறு யாரோ இருப்பதைப் பார்க்க அவள் கண்கள் பழி வெறியில் ஜொலித்தன. இவளை எதுவும் செய்யாமல் விட்டுவைத்த தன்னுடைய தவறை நினைத்து கோபத்தில் துடித்துக் கொண்டிருந்தாள். அப்போது அறையை யாரோ பட்டென்று திறப்பது தெரிய சரண் தான் வந்துவிட்டானோ என்ற மகிழ்ச்சியில் முகத்தை இயல்பாக்கி அவனிடம் திரும்பினாள் மீனா.

புது மலர்கள் பூத்திடும் வேளை - மதுவதனி

ஆனால் அங்கு நின்றது சரண் அல்ல சிபி என்பதில் சிறு ஏமாற்றமே தவிர இவனால் தன்னை என்ன செய்துவிட முடியும் என்ற எண்ணமே தோன்ற அவனைப் பார்த்து சாதரணமாக புன்னகைத்து பேச ஆரம்பித்தாள். "என்ன சிபி நீ வந்து டூ டேஸ் ஆச்சுனு அண்ணி சொன்னாங்க.. எங்க வீட்டுக்கு வரணும், எங்களையெல்லாம் பார்க்கனும்னு தோணவே இல்லையா.. ஆனால் வந்ததும் வராததுமா நம்ம குடும்பத்தையே அசிங்கப்படுத்தின ஒருத்திய பார்க்க போயிருக்க…. அப்படி என்னதான் சொக்குப்பொடி போட்டு வச்சிருக்காளோ… அண்ணனும் தம்பியும் அப்படி அவகிட்ட மயங்கிக் கெடக்குறீங்க.. அண்ணிக்கு மட்டும் தெரிஞ்சது உங்களை என்ன பண்ணுவாங்களோ தெரியல.". என்று சிபியின் முகத்தில் தோன்றிய கோபத்தைக் கவனிக்காமலே பேசிக் கொண்டிருந்தாள்.

"ஏய் போதும் நிறுத்து.. எங்க வந்து யாரைப்பத்தி என்னை பேசிட்டு இருக்க.. என் அண்ணனையும் அவனோட மனைவியையும் பத்தி பேச உனக்கு என்ன ரைட்ஸ் இருக்கு.. நீ யாரு முதல்ல இந்த வீட்ல… உனக்கு இங்க எந்த உரிமையும் கிடையாது.. எங்க அக்காவோட ஒரு ரிலேடிவ் நீ… ஜஸ்ட் அவ்ளோதான்… எங்க பாமிலி மேட்டர்ல எல்லாம் நீ தலையிடக்கூடாது.. புரியுதா… அப்புறம் அண்ணனை மயக்கி உன் கைக்குள்ள போட்டுக்கலாம் அப்படி என்று ஒரு எண்ணம் இருந்தா தூக்கி குப்பையில போட்டுரு. இதுக்குமேல அண்ணிக்கிட்ட பேசுறது, அவங்களை தரக்குறைவா நடத்துறது இந்தமாதிரி எதாவது நான் கேள்விப்பட்டேன். அன்னைக்குதான் நீ இந்த சிபியோட முழுகோபத்தையும் பார்ப்ப…."

"என்னடா விட்டா பேசிட்டே போற, அவளைப்பத்தி எனக்கு எல்லாம் தெரியும், ஒரு ஒழுக்கம் கெட்டவளுக்குப் போய் பரிஞ்சு பேசிட்டு இருக்க.. அவளுக்கு முன்னாடியே சரண் எனக்குத்தான் அப்படியென்று எல்லாரும் பேசி முடிவெடுத்தாங்க.. அவன் திடீரென்று அவளை காதலிக்கிறேன் கல்யாணம் பண்ணிக்கிறேனு சொன்னா நான் வழியவிட்டு ஒதுங்கிபோகனுமா.. என்னை என்ன நினச்சிட்டு இருக்க… இந்த மீனா ஒருநாளும் சரணை யாருக்கும் விட்டுகொடுக்க மாட்டா..

இப்போக்கூட உன்னோட அண்ணி உயிரோடு இருக்க காரணம் சரண் அவளைத் தன் வாழ்க்கையில் இருந்து ஒதுக்கி வச்சதுனாலதான். அவன் மட்டும் அவள்கூட சந்தோசமா வாழ்ந்து இருந்தான், அடுத்த நாள் அந்த நிலா உயிரை விட்டுருப்பா… புரியுதா..

இனிமேல் என்கிட்டே இப்படியெல்லாம் பேசாத. அதோட கண்டவளையெல்லாம் அண்ணி என்று சொல்லாத… எப்பவுமே நான் தான் சரணோட மனைவி, உனக்கு அண்ணி சரியா… இப்போ நான் கெளம்புறேன். என்னோட மூடு ஸ்பாயில் ஆயிடுச்சு… அப்புறம் இந்த வீட்டில் எனக்கு என்ன உரிமை இருக்கென்று உன்னோட அக்கா அதாவது என்னோட அண்ணியைக் கேளு” என்றதும் அதுவரை இழுத்துப் பிடித்திருந்த கோபம் தலைக்கேற…

மீனாவின் கழுத்தைப் பிடித்து அழுத்தியவன் “பொண்ணாச்சேனு பார்க்குறேன் இல்லை என்னோட டீலிங்கே வேறமாதிரி இருக்கும்… சீ..சீ… நீயும் ஒரு பொண்ணா… உன்னைப் போய் நான் நல்லவன்னு நம்பினேனே என்னை சொல்லணும், அப்போவே ஷானு சொன்னா இந்த மீனா மேல எனக்கு டவுட் இருக்குனு நான்தான் கேட்கல… இதோபாரு இது என்னனு தெரியுதா..” என்று தன் செல்போனை எடுத்துக்காட்டியவன் அவள் பேசிய அனைத்தையும் ரெகார்ட் செய்து அவளுக்கு ஒலிக்கவிட்டு காட்டினான். அதில் அரண்டவள் மீண்டும் அவனை சாதரணமாக பார்க்க..

“என்ன பயமா இல்லையா… நீ பயப்படமாட்டேனு தெரியும், அதெல்லாம் தாண்டி வந்துட்டனும் தெரியும்.. ஆனா நான் என்ன செய்யப்போறேன் என்று தெரியுமா.. போலீஸ் ஸ்டேஷன்-ல போய் ஒரு கம்ப்ளைன்ட் கொடுத்து வைக்கபோறேன்.. என்னோட அண்ணிக்கு பாதுகாப்பு வேணும்னு… எதற்கென்று கேப்பாங்க.. அப்போ இந்த எவிடென்சை காட்டுவேன்.. உடனே உன்னைத் தூக்கி உள்ள போடுவாங்க.. உனக்கு எப்படி வசதி” என்று தன் கையை எடுக்காமலே மிரட்டினான்..

மீனாவுக்கு பயமெல்லாம் ஒன்றுமில்லை.. ஆனால் இப்போது அவனிடம் எதிர்த்து பேசினால் அவன் இன்னும் ஏதேனும் விபரீதமாக செய்துவிடுவான் என்று நினைத்து அவனிடம் இருந்து விடுபட அவனிடம் தான் செய்தது தவறுதான், ஏதோ ஒரு கோபத்தில் இப்படி நடந்துவிட்டேன்.. மன்னித்துவிடு என்று மன்னிப்பு கேட்டுவிட்டு அந்த அறையையும் அவனையும் ஒரு பார்வைப் பார்த்துவிட்டு சென்றுவிட்டாள்.

மழையடித்து ஓய்ந்து போனது போல ஒரு எண்ணம் தோன்ற களைப்பில் அப்படியே அந்த அறையில் அமர்ந்துவிட்டான் சிபி.. இவள் கடைசியாக பார்த்த பார்வையில் இருந்தே அவள் அமைதியாக இருக்கமாட்டாள் என்று நினைத்தான்.

புது மலர்கள் பூத்திடும் வேளை - மதுவதனி

உடனே அதை சரணுக்கு அழைத்து தெரிவித்துவிட்டு அடுத்த நாள் டாக்டர் ஷர்மியிடம் பத்துமணிக்கு போகவேண்டும் ரெடியா இரு இன்று ஷானவிக்கு ஒரு குறுந்தகவலையும் அனுப்பிவிட்டு தன் அறைக்குச் சென்று படுத்துவிட்டான்…

**வேளை தொடரும்……..**

புதுமலர்கள் பூத்திடும் வேளை - மதுவதனி

# புது மலர்கள் பூத்திடும் வேளை…!



## வேளை - 20

*****************************************************************************************

கண்ணின் மணியே கண்ணின் மணியே போராட்டமா
உன் கண்களில் என்ன கண்களில் என்ன நீரோட்டமா
பெண் முன்னேற்றம் எல்லாம் வெறும் பேச்சோடுதானா
பழம் பாட்டோடுதானா அதன் ஏட்டோடுதானா

நாள் தோறும் பாடும் ஊமைகள் தானா
சாத்திரங்கள் பெண் இணத்தை மூடி மறைத்ததம்மா
அந்த ஆத்திரத்தில் பாரதிக்கும் மீசை துடித்ததம்மா
சாத்திரங்கள் பெண் இணத்தை மூடி மறைத்ததம்மா

அந்த ஆத்திரத்தில் பாரதிக்கும் மீசை துடித்ததம்மா
வீடாளும் பெண்மை இங்கே நாடாளும் காலம் வந்தால்
ஊமைகள் போலவே என்றும் ஓயாமல் கண்ணீர் சிந்தும்
ஏனென்று கேட்கத்தான் இப்போது ஆள் இல்லை

# புது மலர்கள் பூத்திடும் வேளை…!

**சம நீதி கேட்கின்ற சட்டங்கள் ஏன் இல்லை**
**உலகமெல்லாம் விடிந்த பின்னும்**
**உங்களின் இரவுகள் விடியவில்**
**பாய் விரிக்கும் பெண்மை என்ன காதல் பதுமைகளா**

**தினம் ஏவள் செய்ய ஆடவர்க்கு காவல் அடிமைகளா**
**பொன்னள்ளி வைத்தால்தானே பூமாலை தோளில் ஏறும்**
**இல்லாத ஏனையர்க்கெல்லாம் பொல்லாத தனிமை கோலம்**
**எரிகின்ற நேரத்தில் ஒவ்வொன்றும் பொய் இல்லை**

**கனவுகளில் மிதந்நதப்படி**
**கலங்குது மயங்குது பருவக்கொடி**

*****************************************************************************************************

நிலாவைப் பற்றிய யோசனையிலேயே இருந்தவன் எப்போது உறங்கினான் என்றே தெரியவில்லை.. ஆனால் இத்தனை நாள் இல்லாத நிம்மதியான உறக்கம் அவனை தன் வசப்படுத்த ஆழ்ந்து உறங்கிகொண்டிருந்தான்..

அன்று நேரமே சாப்பிட்டு உறங்கிவிட்டதால் நடுநிசியில் நிலாவிற்கு பசியெடுக்க ஆரம்பித்தது.. எப்போதும் போல மல்லிகாவை தொல்லை செய்யாமல் அவளே கீழே சென்று எதையாவது சாப்பிட்டு வரலாம் என்று நினைத்துக் கொண்டே எழப்போனவள், தன்னை யாரோ அணைத்துப் பிடித்திருப்பது தெரிந்தது.. யாரோ என்ன யாரோ எல்லாம் அவள் உள்ளம் கொள்ளை கண்டவன்தான் என்பதை அவனது அணைப்பிலேயே அறிந்து கொண்டாள். ஆனால் இது எப்படி சாத்தியம்.. அவளை வெறுக்கும் ஒருவன் எப்படி இந்த நிலையில் தன் அருகில் இருக்கிறான் என்ற ஆச்சரிய கேள்வியே எழுந்தது…

பசியும் மறந்து போக அவனையே விழி எடுக்காமல் பார்த்துக் கொண்டிருந்தாள்.. தன்னையும் அறியாமல் மனம் தன் கடந்தகால நினைவுகளை அசைபோட துவங்கியது…

அன்று லத்திகாவிடம் இருந்து விடைப்பெற்று வந்த நிலாவும் விஜயாவும் வீட்டிற்கு வந்து அன்றிரவே திருச்சியை விட்டு கௌம்ப முடிவெடுத்தனர். ஆனால் அப்போது திடீரென விஜயா மயங்கி விழுந்தார். அன்றைய நாளில் நடந்த நிகழ்ச்சிகள் அவருக்கு ஒருவிதமான சோர்வையும் பயத்தையும் கொடுக்க அப்படியே கீழே விழுந்தார்.

புது மலர்கள் பூத்திடும் வேளை - மதுவதனி

இதை முற்றிலும் எதிர்பார்க்காத நிலா அதிர்ந்து பின் உடனே அக்கம்பக்கம் உள்ளவர்களின் உதவியோடு மருத்துவமனையில் சேர்த்தாள்.. ஆனால் அவள் செய்ய தவறியது லத்திகாவிடம் தாங்கள் இன்னும் திருச்சியிலேயே தான் இருக்கிறோம், தன் அம்மாவிற்கு உடல்நிலை சரியில்லை என்றும் கூறாதது…. அதுவே அவளுடைய வாழ்க்கையில் செய்த மிகப்பெரிய தவறாகவே இன்றளவும் நினைத்து நினைத்து மருகுகிறாள். மருத்துவமனையில் இருந்து வீடுவர இரண்டு நாட்கள் ஆனது. அதோடு அவருக்கு மைல்ட் அட்டாக் என்றும் இப்போது எந்த பயணமும் வேண்டாம் என்றும் கூறி அனுப்பிவைத்தனர்.

இங்கு நிலாவும் அவளது அம்மாவும் சென்றுவிட்டார்களா என்று ஆள் அனுப்பி பார்த்த லத்திகாவிற்கு வீடு பூட்டியிருப்பதா செய்தி வர, அவர்கள் ஊருக்குத்தான் சென்றுவிட்டனர் என்று அவராகவே உறுதிசெய்து கொண்டார். அதனால் அவர்களைப்பற்றிய சிந்தனையை ஒதுக்கி தன் வேலையை முன் கொணர்ந்து கேசின் மற்ற பார்மாலிடிசை பார்க்க ஆரம்பித்தார். அதன் முடிவில் கேசை முடித்துவிட்டு அடுத்தநாளே அவர் பெங்களூர் பயணமானார்.

அப்படி சென்ற லத்திகா சுரேஷை அவரது உறவினர்களின் வசம் ஒப்படைத்துவிட்டு அந்த மருத்துவரிடம் ஒரு சில ஆலோசனைகளையும் கூறிவிட்டு சென்றார். அதன்படியே சுரேஷிற்கு கொடுத்த மருந்தில் ஆண்மைத் தன்மையை அதிகரிக்கும் ஹார்மோனை செலுத்திவிட்டது. இதனால் அவனுக்கு ஆண்மைத்தன்மை அதிகரிக்க, ஆனால் அவனோ ஒரு பெண்ணை நினைத்துக் கூட பார்க்கமுடியாத நிலையில் இருந்தான்.

அதாகப்பட்டது சுரேஷிற்கு ஏற்பட்ட விபத்தில் அவனது உடலில் இடுப்பிற்கு கீழ் எந்தப்பாகமும் வேலை செய்யவில்லை.. முழங்காலிற்கு கீழே இரண்டு கால்களும் நசுங்கி அதை எடுக்க வேண்டிய நிர்பந்தம் ஏற்பட்டது.. ஆனாலும் அவனை அப்படியே விட மனமில்லாத லத்திகா அவனது செயல்களையெல்லாம் நினைவுக்கு கொண்டுவந்து, எத்தனைப் பெண்களின் வாழ்க்கையைப் பறித்தவன், இப்படி நிம்மதியோடு இருக்கலாமா என்ற எண்ணம் தோன்ற மருத்துவரின் உதவியை நாடி, அவரின் துணையோடு அந்த ஹார்மோன் மருந்தை சுரேஷின் உடலில் செலுத்த செய்தார். மயக்க நிலையில் இருந்த சுரேஷிற்கு நடந்த எதையும் அறிந்திருக்க வாய்ப்பில்லை. மருத்துவருக்கும் லத்திகாவிற்கும் தெரிந்த உண்மை நிலாவிற்கு தெரிய வரும்போது காலம் கடந்துவிட்டிருந்தது…

புது மலர்கள் பூத்திடும் வேளை - மதுவதனி

இதில் லத்திகாவை குறைகூற முடியவில்லை. இது அவரது டிபார்ட்மென்ட் ரகசியம், நிலாவிடம் தெரிவிக்க வேண்டிய அவசியம் இல்லை என்றும் யோசித்து அதை அப்படியே விட்டுவிட்டார். ஆனால் இதனால் நிலாதான் பாதிக்கப்பட போகிறாள் என்று முன்னமே தெரிந்திருந்தால் அவளிடம் எச்சரிக்கை செய்துருப்பாரோ...?

கொஞ்சம் கொஞ்சமாக சுரேஷின் மயக்கம் தெளிய ஐந்து நாட்கள் ஆனது. அப்போதுதான் செய்தி தெரிந்து அவனது நண்பன் குமார் வந்து பார்த்தான். அவனிடம் சுரேஷால் எந்த உண்மையும் கூறமுடியவில்லை, அவனின் பெற்றோரின் மூலம் குமார் தெரிந்துகொண்டது இது ஒரு விபத்து என்பது மட்டும்தான்... பின்னர் சுரேஷின் உடல்நிலை அவன் வாய்திறந்து பேசும் அளவிற்கு முன்னேறிவிட...

அவனை டிஸ்சார்ஜ் செய்து வீட்டிற்கு அனுப்பினர். ஆனால் சுரேஷிற்கு நாளாக நாளாக அவனின் உடலில் சில மாற்றங்கள் நிகழ ஆரம்பித்தன. அதில் அவன் மேலும் மேலும் பைத்தியம் போல கத்துவதும் அவனது அறையில் யாரையும் உள்ளே விடாமல் இருப்பதும் என்று அவனது செய்கை நடந்துகொண்டிருந்தது.. வீட்டில் உள்ளவர்கள் அவனது செயலில் பயந்து குமாரை உதவிக்கு அழைத்தனர்.

அதன் பொருட்டு குமார் வந்து அவனை அமைதிப்படுத்த போராடி தோற்றான். பிறகு மீண்டும் அதே மருத்துவமனையில் அனுமதிக்கப்பட அங்குள்ள மருத்துவர்கள் அவனுக்கு உடலளவில் எந்தப் பிரச்சனையும் இல்லை.

எல்லாம் மனதளவில் தான் என்று கிட்டத்தட்ட அவனுக்கு பைத்தியம் என்றே முடிவெடுத்து விட்டனர். இதற்கிடையில் குமாருக்கு அவனது மும்பை வட்டார நண்பர்கள் மூலம் அங்கு நடந்து கொண்டிருந்த தொழிலை போலீசார் பிடித்து விட்டதாகவும் அதற்கு காரணம் சுரேஷ் கொடுத்த வாக்குமூலம் என்பதையும் தெரிவித்துவிட்டனர்...

இதனால் குமார் நினைத்தது போல் இதுவெறும் விபத்து மட்டும் அல்ல.. இதில் வேறு ஏதோ இருக்கிறது என்பதை அறிந்து சுரேஷிடம் பேசி எப்படியாவது உண்மையை கண்டுபிடித்துவிட வேண்டும் என்ற முடிவுக்கு வந்தான்.. அதனால் அவனது வேலைகளை எல்லாம் விட்டுவிட்டு சுரேஷை கவனிப்பதே முதல் வேலையாக வைத்துக் கொண்டு அவன் மயக்கம் தெளிய காத்திருந்தான்..

அன்று அவனது தந்தை குமாரிடம் "குமார் சுரேஷ் இப்போ எல்லாம் அவனோட அம்மாவையும் தங்கையையும் பார்க்கவே விட மாட்டேங்குறான்… ரெண்டு பேரும் ரொம்ப சங்கடப் படுறாங்க.. நான் அவங்களை கொஞ்சம் சமாதானப்படுத்தி வச்சுருக்கேன், நீங்க ரெண்டு பேரும்தான் நெருங்கிய நண்பர்களாச்சே, அவனிடம் என்ன பிரச்சினை என்று விசாரிப்பா.." என்று கூறிவிட்டு வெளியில் சென்றார்.

குமாருக்கும் இதுவே தேவை என்பதுபோல் சுரேஷிடம் பேச அவன் கூறிய செய்தியில் அதிர்ந்து போனான்… அந்த அதிர்ச்சியிலேயே அவன் மீண்டும் கேட்டான்.. "என்ன சொல்ற மச்சான் என்னால் நம்பவே முடியல, அம்மாவையும் தங்கச்சியையுமா.. என்றான்.

"ம்ம்.. ஆமாம் மாப்பிள்ளை, எனக்கு என்னாச்சுனே தெரியல… இந்த போலீஸ்காரங்க தான் ஏதோ பண்ணிருக்காங்க.. அம்மா என்கிட்டே பாசமா வரும்போது எனக்கு என்னால என்னை கண்ட்ரோல் பண்ணிக்க முடியலடா.. அதான் அவங்க ரெண்டு பேரையும் பார்த்தாலும் எரிந்து விழறேன்.. இதை எப்படி வெளிய சொல்லமுடியும்.. நான் இருக்குற நிலைமையில், இது எப்படி நடக்கும்.. கண்டிப்பா இது ஏதோ சதிவேலைதான் என்று என்னால சொல்லமுடியும்.. நர்ஸ், டாக்டர், அம்மா, தங்கச்சி, ஏன் சும்மா ரோட்டுல போற பொண்ணுங்களைப் பார்த்தாக்கூட எனக்கு அந்தமாதிரி எண்ணம் தான் தோணுது.. என்னோட உடம்புல ஒரு மாற்றம் நடக்குது.. அது எனக்கு கேவலமா இருக்குடா.. இதுக்கெல்லாம் காரணம் அந்த தேன்நிலா தாண்டா, அவ மட்டும் அன்னைக்கு வராம இருந்திருந்தால் இப்போ இவ்வளவு பிரச்சனை வந்துருக்காது…என்று அவன் பாட்டிற்கு புலம்ப ஆரம்பித்தான்..

"தேன்நிலாவா…? அது யாரு… புதுசா ஒரு ஆளு… அவளுக்கும் நமக்கும் என்ன சம்மந்தம்"

"ம்ம் தேன்நிலாதான்… அந்த வேணிலா கொடைக்கானல் ஹோட்டலில் பார்த்தோமே, நம்ம இந்தர்ரோட சேர்ந்து செத்தாளே அவளோட தங்கைதான் இந்த தேனு… அவ அன்னைக்கு வந்து வேணியைப்பத்தி கேட்கும் போதுதான் போலிஸ் என்னை ரவுண்டப் பண்ணுச்சு.." என்றவன் அன்று நடந்த அனைத்தையும் குமாரிடம் தெரிவித்தான்…

புதுமலர்கள் பூத்திடும் வேளை - மதுவதனி

# புது மலர்கள் பூத்திடும் வேளை…!

“ஓ” என்று நெற்றி சுருக்கியவன் முதல் வேலையாக அங்கிருந்த நர்சின் மூலம் சுரேஷிற்கு எந்தமாதிரியான சிகிச்சை நடைபெற்றது என்பதை அறிந்து கொண்டான்.. அதை தெரிந்து கொண்டவனுக்கு ஆத்திரத்தில் லத்திகாவை கொலை செய்யும் அளவுக்கு கோபம் வந்தது. ஆனால் இப்போது முக்கியம் சுரேஷ் என்று நினைத்து அவன் முதலில் செய்தது அந்த ஹார்மோனை செயலிழக்க வைக்க வேண்டிய மாற்று மருந்தை தேடியதுதான்.. அந்தோ பரிதாபம் அவன் தேடிய மருந்து கிடைக்கவில்லை, மேலும் சுரேஷிற்கு அவனிடம் ஏற்பட்ட மாற்றங்கள் அவனுக்கு ஒரு மனஅழுத்தத்தை கொடுக்க, அதன் விளைவு ஒருநாள் இரவில் அவனே தன் உயிரை மாய்த்துக் கொண்டான்..

சுரேஷின் இறப்பை எதிர்பார்க்காத அவனது பெற்றோரும் குமாரும் தவித்துப் போயினர்.. அதன்பிறகு சுரேஷின் இறுதி காரியங்கள் முடியும் வரை பொறுமையாக இருந்த குமார்… லத்திகாவை விட்டுவிட்டு தேனுவை பழிவாங்க திட்டமிட்டான்.. தனது இரு நண்பர்களின் சாவிற்கும் இவளும் இவளது குடும்பமும் தான் காரணம் என்று நினைத்து அவளை பழிவாங்கிட துடித்தான்..

இப்படி ஒரு நிகழ்ச்சி நடந்து முடிந்திருக்கிறது என்று தெரியாமலே நிலா தன் தாயுடன் மருத்துவமனைக்கும் வீட்டிற்குமாய் அலைந்து கொண்டிருந்தாள்.. அப்படி சுரேஷ் இறந்து பதினாறாம் நாள் காரியம் முடிந்து, குமார் தன் ஊருக்கு கௌம்ப பேருந்து நிலையத்தில நின்றிருந்தான். அப்போது தான் நிலா ஒரு ஆட்டோவில் ஏறி செல்வது தெரிந்தது… என் நண்பர்கள் இருவரையும் கொன்றுவிட்டு நீ மட்டும் நிம்மதியாக இருக்கலாமா, கூடாது… கூடவே கூடாது என்று நினைத்தவன் உடனே தனக்கு தெரிந்த ஒரு நண்பன் மூலம் ஒரு திட்டத்தை தீட்டி அதன்படி நிலாவை பழிவாங்க நினைத்தான்…

அதன்படி நிலாவை பாலோ செய்ய ஒரு ஆளை வைத்து அவர்களின் நடவடிக்கைகளை கண்டுகொண்டான். அது வேணிலா இறந்து விட்டதாக நிலாவின் அம்மாவிடம் கூறி இருந்தாலும், நிலா அதை முழுக்க நம்பவில்லை என்றும், எப்படியும் ஒருநாள் திரும்பி வருவாள் என்ற நம்பிக்கையில் அவள் இருப்பதும் தெரிய வந்தது.. அடுத்து நிலாவை தன் வலையில் விழவைக்க இந்த ஒரு காரணமே போதுமானதாக இருந்தது..

புது மலர்கள் பூத்திடும் வேளை - மதுவதனி

அடுத்தடுத்து அவனது திட்டப்படி வேலைகள் நடந்தன.. அதில் ஒன்று அவனது நண்பன் குரு மூலமாக நிலாவிடம் பேசவைக்க நினைத்தான். அவனும் குமாரிடம் கிடைக்கும் பணத்தின் மீதுள்ள ஆசையில் அவன் கூறியவாறு செய்வதாக ஒப்புக் கொண்டான்.

அன்று விஜயாவிற்கு உணவு கொடுத்துவிட்டு தன் புத்தகத்தை எடுத்தவள் அழைப்பு மணி அடிக்க எழுந்து சென்று பார்த்தாள்.. அப்போது வாசலில் நின்றின்ருந்த குருவைப் பார்த்ததும் “யார் நீங்க, என்ன வேணும்” என்றாள்.

“இது வேணிலா வீடுதானே.. எனக்கு அவங்க அம்மாவை பார்த்து கொஞ்சம் பேசணும், அவங்க இருக்காங்களா..” என்றான். “ஹ்ம்ம் முதல்ல நீங்க யாருன்னு சொல்லுங்க, வேணி உங்களுக்கு எப்படி தெரியும், அவ இப்போ உயிரோடு இல்லை.. நீங்க போகலாம்” என்று சொல்லி கதவடைக்கப் போனவளை…

“இருங்க.. நான் சொல்லப் போறதை முழுசா கேளுங்க.. நீங்க நினைக்கிறமாதிரி உங்க அக்கா இறந்து போகவில்லை.. உயிரோடுதான் இருக்காங்க.. அவங்கதான் என்னை உங்ககிட்ட பேசிட்டு வரசொன்னாங்க.. உங்களுக்கு நம்பிக்கை இல்லேன்னா இந்த நம்பருக்கு போன் பண்ணிக் கேளுங்க.. அப்புறம் இதுதான் அவங்க இப்போ தங்கியிருக்கிற இடத்தோட அட்ரஸ் நீங்களே போய் விசாரிச்சுகோங்க…. உங்களிடம் இதைக் கொடுத்து பேச சொன்னாங்க, சொல்லிட்டேன் அப்புறம் உங்க இஷ்டம்” என்றவன் அடுத்து அங்கு நின்றால் இன்னும் என்ன கேள்வியெல்லாம் கேட்பாளோ என்று பயந்து சொல்ல வேண்டியதை சொல்லிவிட்டு சென்றுவிட்டான்…

இதையெல்லாம் கேட்ட நிலா எப்படி ரியாக்ட் செய்வது என்பதையே மறந்து போனாள். தன் அக்கா உயிரோடு இருக்கிறாள் என்பதில் உண்டான மகிழ்ச்சி வந்தவன் யார் என்ற யோசனையில் முற்றிலும் தொலைந்து போனது.. அவன் சொன்னதை நம்புவதா வேண்டாமா என்று குழப்பத்திலேயே அன்றைய நாளை கழித்தாள்.

அடுத்தநாள் தன் தோழிகளிடம் கூறியது போல் அந்த ஆர்ட் காலரிக்கு போய்விட்டு, அப்படியே அந்த அட்ரசிலும் போய் விசாரித்துவிட்டு வரலாம் என்று முடிவெடுத்தவள் அவன் கொடுத்து சென்ற அந்த நம்பரில் அழைத்து பேசி முடிவெடுக்கலாம் என்று நினைத்தவள் அதை செயல்படுத்தினாள்.

புது மலர்கள் பூத்திடும் வேளை - மதுவதனி

# புது மலர்கள் பூத்திடும் வேளை…!

அப்போது குமாரின் திட்டப்படியே அந்தப் பக்கம் வேணிலா போலவே ஒரு பெண் பேசி முடிக்க நிலாவிற்கு இருந்த சிறு சந்தேகமும் இல்லாமல் போனது.. ஆனால் அன்னையிடம் என்ன சொல்வது என்று தெரியாமல் திணறியவள் முதலில் வேணியைப் போய் பார்த்துவிட்டு வருவோம். அதன்பிறகு அன்னையிடம் தெரிவிக்கலாம், என்று விஜயாவின் உடல்நிலையை முன்னிட்டு இந்த முடிவை தீர்மானமாய் எடுத்தாள். தன் வாழ்க்கையில் அடுத்து தான் செய்த தவறு இதுவென்று தெரியாமலே…

அடுத்தநாள் விஜயாவிடம் தான் ஒரு எக்ஸ்பிசன் போவதாகவும், தோழிகள் உடன் வருவதாகவும், பாதுகாப்பாக சென்று வருவதாகவும் கூற, அவரும் நிலாவிற்குப் பிடித்த ஒரே விருப்பம் தான் வரையாவிட்டாலும், மற்றவர்கள் வரைவதைப் பார்த்து மகிழ்ச்சி அடைய மிகவும் பிடிக்கும். அதனால் விஜயாவும் மறுப்புக் கூறாமல் அனுப்பி வைத்தார்.

ஊருக்குப் போகாமல் திருச்சியிலேயே இருந்தாலும் விஜயாவின் உடல்நிலை காரணமாக கல்லூரிக்கு போவதை நிறுத்தி இருந்தாள் நிலா.. அன்று கல்லூரி விடுமுறை என்பதை தொடர்ந்து தனது தோழிகளை அழைத்துக் கொண்டு அந்த ஆர்ட் கேலரிக்குள் நுழைந்தாள். அது அவளுக்கு மிகவும் பிடித்த ரவீந்தரின் ஓவியங்கள் என்பதால் அதிக ஆர்வமும் ஏற்பட்டது..

அப்படி அவள் ஓவியங்களை ரசிக்க, தன்னையும் ஒருவன் ரசித்துக் கொண்டிருக்கிறான் என்பது தெரியாமலே, தோழிகளுடன் சுற்றிக் கொண்டிருந்தாள்.. நீண்ட நாட்களுக்குப் பிறகு சிறிது மகிழ்ச்சியாகவும் உணர்ந்தாள் எனலாம்.. அதனாலேயே அன்று தனது கலையறிவு தலை தூக்க, ஒரு ஓவியத்திற்கு மனதிலே தன் கற்பனைத்திரனின் மூலம் அதன் வெளித் தோற்றங்ககளை மேலும் வடிவமைத்தாள்.. கிட்டதட்ட ஒரு மோனநிலையில் இருந்தாள் நிலா… அப்போதுதான் அவளது தோழிகள் அவளை அழைப்பதும், அவர்களுக்கு அவள் பதில் கூறி மீண்டும் மோனத்தில் ஆள்வதும் என நடந்து கொண்டிருந்தது.

அதன்பிறகு ஒரு முடிவோடு அவள் அங்கிருந்த வரவேற்பை அணுகி அந்த ரவீந்தரைக் காண காத்திருந்தாள். தனது நிலை என்ன, தனக்கு பாதுகாப்பில்லாத ஒரு இடம், அந்த எதிரிகளிடம் சிக்கினால் தன நிலை என்ன என்று எதைப் பற்றியும் யோசிக்காமல் அந்த ஓவியங்களில் லயித்துப் போனாள் நிலா..

புது மலர்கள் பூத்திடும் வேளை - மதுவதனி

அப்போதுதான் அவளை ஒருவர் அழைத்துப் பேச யாரென்று திரும்பி பார்க்க முதலில் அவள் விழிகளை தீண்டியது சரணின் அந்த ரசனையான பார்வைதான்… அதில் சிக்கித்தவித்த மனதை அடக்கி, ரவியிடம் பார்வையைத் திருப்பி அவனிடம் தன் கருத்துக்களைக் கூற, அவனும் அவளைப்பற்றி தெரிந்துகொண்டு பேசிக்கொண்டே போக அந்த இடத்தை விட்டு எப்போதடா போவோம் என்று யோசிக்க ஆரம்பித்து விட்டாள் நிலா…..

ஒருவழியாக அவளின் தோழிகள் வர அவசரமாக ரவியிடம் விடைப்பெற்றவள், சரணைப் பார்க்கவா வேண்டாமா என்று நொடியில் பட்டிமன்றம் நடத்திய மனதிற்கு பார்க்கலாம் என்ற விடையையும் கொடுத்தது. அதை ஏற்று அவனது காந்த விழிகளை தீண்டி ஒரு தலையசைப்புடன் விடைபெற்றாள். இது நடக்குமா நடக்காதா என்று தெரியாது… ஆனால் அவனின் பார்வை அவளுக்குள் ஒரு தெளிவையும், எந்தப் பிரச்சனை வந்தாலும் அதை சமாளிக்கும் தன்னம்பிக்கையையும் கொடுப்பதை அவளால் உணர முடிந்தது…

அந்த நம்பிக்கையும் தெளிவும் இன்னும் சிறிது நேரத்தில் நொறுங்கப் போவது தெரியாமல் தோழிகளிடம் கிளம்புவதாக கூறிவிட்டு குரு கொடுத்த விலாசத்தை நோக்கி பயணித்தாள்.

இருபது நிமிட பயணத்தில் வந்த அந்த இடத்தைப் பார்த்து அதிர்ச்சி அடைந்தாள். அது ஒரு லாட்ஜ், அதில் உள்ளே இருந்து வருபவர்களும் போவோர்களும் வித்தியாசமாக தென்பட்டனர். அதில் நிதானித்து காலையில் வேணியிடம் பேசிய எண்ணுக்கு அழைத்து விவரம் கேட்டாள். அப்போது வேணிக்கு உடல்நிலை சரியில்லை என்றும் வரவேற்பில் கூறி மேலே வருமாறும் ஒரு ஆண் குரல் கூற…

அதன்பிறகு நிலா எதையும் யோசிக்கவில்லை, அவளுக்கு வேணிக்கு என்ன ஆனதோ என்ற கவலைப் பிறக்க, அடுத்த நொடி அந்த அறையில் இருந்தாள்.. அவளைக் கடந்தவர்களுள் ஒருசிலர் அவரை ஒருமாதிரியாக பார்ப்பதை உணர்ந்தாலும், அதையெல்லாம் உதறிவிட்டு உள்ளே சென்றாள். ஆனால் அங்கு இருந்ததோ குமார் மற்றும் அவனது நண்பன் குருவும்…

புது மலர்கள் பூத்திடும் வேளை மதுவதனி

# புது மலர்கள் பூத்திடும் வேளை…!

அவர்களை கேள்வியாய் பார்த்துக் கொண்டே நின்றவள் “வேணிக்கா எங்கே, என்னாச்சு அவங்களுக்கு, நீங்க ரெண்டு பேரும் யாரு.. உங்களுக்கு வேணியை எப்படி தெரியும்” என்றாள் மூச்சுவிடாமல், அவளுக்கு வேணியை அழைத்துக் கொண்டு அந்த இடத்தை விட்டுப் போகவேண்டும் என்று தோன்றியது.. அவளது உள்ளுணர்வும் அவளை எச்சரித்துக் கொண்டே இருந்தது.. நீ முதலில் வெளியே போ என்று.. எங்கே அவளுக்குத்தான் வேணியைப் பார்த்தே ஆகவேண்டுமே..

அவளது அவசரத்தையும் கவனத்தையும் கவனித்த குமார் “அவ உள்ளே பாத்ரூமில் இருக்கா… ஒரே வாந்தி இப்போ வந்துடுவா.. நீ உட்காரு, உங்க அம்மா எப்படி இருக்காங்க, என்று அவளிடம் பேச்சு கொடுத்துக் கொண்டே குருவிடம் சைகை காண்பிக்க அவனும் அந்த அறையை விட்டு வெளியேறினான். பின்னர் குமாரும் இதில் தான் மாட்டக்கூடாது என்பதில் தெளிவாக இருந்ததால் அவனும் வாராதா போன் காலை அட்டென்ட் செய்வது போல அவளிடம் தலையசைப்பை கொடுத்துவிட்டு வெளியேறிவிட்டான்…

ஐந்து நிமிட காத்திருப்பிற்கு பிறகு கதவை படபட வென தட்டியபடி நான்கைந்து போலிஸ் ஆபிசர்கள் உள்ளே நுழைய விதிர்த்து போனாள் நிலா… ஏன் எதற்கு என்று யோசிப்பதற்கு முன்பே உள்ளே வந்தவர்களில் இருந்த ஒரு பெண் போலீஸ் அவளை அறைந்து இருந்தார். அதற்குள் மற்றவர்கள் அந்த அறையை அலச, குளியலறையில் இருந்து அரைகுறை ஆடைகளுடன் இரண்டு ஆண்கள் வந்தனர்…

நிலாவிற்கு எதுவும் புரியாமல் திருதிருவென முழிக்க, அவள் சுய உணர்வுக்கு வரும்பொழுது மற்றவர்களுடன் சேர்ந்து அவளும் காவல் நிலையத்தில் இருந்தாள்….

**ஊட்டி….**

அஸ்வத்திற்கோ மனம் ரணமாய் வலித்தது… இளமதியின் பேச்சைக் கேட்டு அவளின் குடும்பத்தாரைப் பற்றி விசாரிக்காமல் விட்டது எவ்வளவு பெரிய தவறு என்று அந்த நாளில் நூறாவது முறையாக யோசித்தான்.. சூர்யா அனுப்பிய மின்னஞ்சலில் இரண்டு ஆண்களுடன் நிலா கைது செய்து போலீஸ் வேனில் ஏற்றப்பட்ட காட்சி இருந்தது..

புது மலர்கள் பூத்திடும் வேளை - மதுவதனி

# புது மலர்கள் பூத்திடும் வேளை…!

அதோடு அவளுக்கு நடந்த கொடுமைகளும்… வேணிலா வீட்டை விட்டு வந்ததில் இருந்து சுரேஷ் இறந்தது, அதனால் குமார் செய்த சதி, அதற்கு பிறகு அவளின் அம்மாவிற்கு ஏற்பட்ட உடல் நலக்குறைவு, அதன்பிறகு அவர்களின் குற்றால பயணம், சரணின் சந்திப்பு, அவர்களின் திருமணம், பின் அவர்களுக்குள் ஏற்பட்ட பிரிவு, தற்போது அவள் ஏழுமாத கருவை சுமந்து கொண்டு இருப்பது வரை என்று அதில் எல்லாம் தெளிவாக இருந்தது…

இதை எப்படி இளாவிடம் கூறுவது, அதை எப்படி அவள் தாங்குவாள், அவள் அனுபவித்ததை விட நூறு மடங்கு துன்பம் அவளின் செல்லத்தங்கை அனுபவித்திருக்கிறாள் என்று தெரிந்தால் என்ன செய்வாள்.. அன்றே இவளை சமாதனப்படுத்தி அவளின் அம்மாவிடம் அழைத்துப் போயிருக்கலாமோ, அப்படி செய்திருந்தால் இந்த பிரச்சனை வராமல் தடுத்திருக்கலாமோ, இப்போது என்ன செய்வது என்று ஒன்றும் புரியாமல் அமர்ந்திருந்தான்..'

ஆனால் மனம் மட்டும் மானசீகமாக இளமைதிக்காக நிலாவிடம் மன்னிப்பை வேண்டியது… அவள் நிலையில் இருந்து பார்த்தால் அவள் செய்தது சரிதான்.. ஆனால் நிலாவின் நிலையில்…..? என்ற கேள்விக்கு விடை தெரியவில்லை..

பின் ஒரு முடிவோடு அதில் இருந்த முகவரியையும் போன் நம்பரையும் குறித்துக்கொண்டு சூர்யாவுக்கு அழைப்பு விடுத்தான்.. இவனது போனிற்காகவே காத்திருந்தது போல் "சாரி அஸ்வத் என்ன சொல்றதுனே தெரியல, உங்க வைப் எப்படி இதை தாங்குவாங்க.. என்ன செய்ய போறீங்க," என்றார் சூர்யா…

ஒருநிமிடம் அமைதி காத்துவிட்டு "எனக்கும் தெரியல சூர்யா, பட் இளாவை எப்படி சமாளிக்கிறதுன்னு தெரியல, நான் நெக்ஸ்ட் வீக் அங்க வரேன், நாம போய் அந்த சரணை மீட் பண்ணிட்டு வருவோமா..? நீங்க ப்ரீயா…?" என்றான்..

"யா ஸ்யூர் அஸ்வத், கண்டிப்பா உங்களுக்கு என்னாலான எல்லா உதவியும் பண்றேன், நீங்க டேட் சொல்லிடுங்க.. நான் ப்ரீ ஆகிடுறேன்", என்றவர் "எனக்கும் ரெண்டு பொண்ணுங்க இருகாங்க அஸ்வத்" என்றார்.

“தேங்க்ஸ் சூர்யா… இதை எங்க ஆரம்பிச்சு, எங்க முடிக்கறதுன்னு ஒரே குழப்பத்துல இருந்தேன், நீங்க எனக்கு ரொம்ப பெரிய ஹெல்ப் பண்ணிருக்கீங்க.. தேங்க்ஸ் பார் எவரிதின்க் சூர்யா.. தேங்க்ஸ் எ லாட்” என்ற அஸ்வத்திற்கு சிறு கண்டிப்பைக் காட்டி போனை வைத்தார் சூர்யா.

அடுத்து அஸ்வத் தனக்கு வந்த தகவல்கள் எல்லாவற்றையும் தன் பெற்றோர்களிடம் தெரிவித்துவிட்டு, தான் எடுத்த முடிவையும் கூறினான். அது சரணைப் பார்த்து பேசிவிட்டு, அதன் பிறகு இளாவிடம் உண்மையை கூறலாம் என்பது… ஏனென்றால் இப்போது சரணும் நிலாவும் பிரிந்து இருப்பது அவனுக்கு சில உறுத்தல்களை கொடுத்தது. அது ஒருவேளை பேமிலி ப்ராப்ளமா, இல்லை வேறு எதுவுமா என்ற குழப்பங்கள் தான்.. சோ அந்த உறுத்தல்களை சரி செய்துவிட்டு அதன்பிறகு இளாவிடம் கூறலாம் என்ற முடிவுக்கு வந்தான்.

அஸ்வத் கூறுவதும் சரி என்று பட, சரவணனும் பூங்குழலியும் ஒத்துக் கொண்டனர். விஷயம் தெரிந்ததும் அவர்களுக்கும் என்ன சொல்வது, அடுத்து என்ன செய்வது என்றும் தெரியவில்லை, அஸ்வத் யோசித்ததுபோல் தான் அவர்களும் யோசித்தார்கள்.

இளமதி கொஞ்சம் சரியானதும் கூட போய் அவளது குடும்பத்தினரை பார்த்து வந்திருக்கலாம் என்று… இப்போது ஒரு சின்னப்பெண் யாரும் இல்லாமல் எத்தனைக் கஷ்டங்களை சந்தித்து வருந்தியிருப்பாள் என்று இவர்கள் யோசித்து வருத்தப்பட்டனர்…

**நிலாவின் வீடு…**

காலையில் நிலா விடைபெற்று சென்றதும், மதிய உணவையும் மருந்தையும் எடுத்துக் கொண்ட விஜயா நல்ல உறக்கத்தில் இருந்தார். அப்போது காலிங்க் பெல் சத்தம் கேட்டு எழுந்து சென்றவர் அங்கு காசிராமன் நிற்பதைப் பார்த்ததும் சிறு தெம்பு வந்தது போல் உணர்ந்தார். அவரை வரவேற்று விட்டு அவருக்கு காபி கொடுக்க,

அவரோ “என்ன விஜயா இப்போ உடம்புக்கு எப்படி இருக்கு, உனக்கு எங்களை எல்லாம் கண்ணுக்கே தெரியாதா.. எவ்வளவு பெரிய பிரச்சனை வந்துருக்கு ஒரு வார்த்தை கூட என்கிட்டே சொல்லனும்னு தோணவே இல்லையா” என்று கோபப்பட்டார்..” பிறகு “சரி போனது போகட்டும்,

புது மலர்கள் பூத்திடும் வேளை - மதுவதனி

# புது மலர்கள் பூத்திடும் வேளை…!

இனியும் நீங்க இங்க இருக்க வேண்டாம், நாம உடனே ஊருக்கு கௌம்பிடுவோம், எப்போ என்ன நடக்குமோன்னு பயந்துட்டே இங்க இருக்கிறதை விட, அங்க வந்து கொஞ்சம் நிம்மதியா இருப்பீங்க” என்றார்.

விஜயாவும் “ நானும் அப்படித்தான் அண்ணா யோசிச்சிட்டு இருக்கேன், சீக்கிரம் இந்த ஊரைவிட்டுப் போகணும், என்றவர் “தேனு வெளியே போயிருக்கா வர நேரம்தான், இருங்க உங்களுக்கு ஏதும் சாப்பிட கொண்டுவரேன் என்றவர் கிச்சனுக்குள் நுழைந்தார், அப்போது  வீட்டு போன் அலற… நல்லவேளையாக அதை எடுத்தவர் காசிராமன் அந்தப்பக்கம் கூறிய செய்தியில் அதிர்ந்தவர விஜயாவை ஒரு பார்வை பார்த்துவிட்டு “எந்த ஸ்டேஷன்” என்று கேட்டு  “இப்போ வரேன்” என்று போனை வைத்துவிட்டு விஜயாவிடம் முக்கிய வேலையாக கிளம்புவதாகவும் வரும்போது தேனுவோடு வருவதாகவும் கூறிவிட்டு காவல்நிலையம் நோக்கி ஓடினார்.

நிலா சுற்றுப்புறம் உணரும் போது ஜீப் காவல் நிலையத்தை அடைந்திருந்தது. அதற்குள் அங்கு பத்திரிக்கையாளர்களும், மீடியாக்களும் குவிந்திருக்க, அடுத்து என்ன செய்வது என்று கூட நிலாவுக்கு யோசிக்கமுடியவில்லை.

அப்போது சுரேஷின் கேசில் லத்திகாவிற்கு கீழே வேலைப் பார்த்த ஒருவர் நிலாவைப் பார்த்து குழம்பி பின் சமயோசிதமாக சிந்தித்து அவளைக் கூட்டத்திலிருந்து நகர்த்தி ஒரு மரத்தின் பின்னே ஒளிய வைத்தார்..

ஆனால் அதற்குமுன் அவளது போட்டோ அங்கு வந்த ஒரு பத்திரிக்கையாளரின் கேமராவிற்குள் பதிவாகி அடுத்தநாளின் பரபரப்பு செய்தியாகப் போகிறது என்பதை அறியவில்லை. இது தெரியாத அவர் நிலாவைப் பிடித்து உலுக்கி “ஏன்மா நீங்க இன்னும் இங்கேயேவா இருக்கீங்க, இந்த ஊரைவிட்டு போகலையா…? அப்போ நான் வீட்டுக்கு வந்து பார்க்கும்போது வீடு பூட்டி இருந்துச்சு, நீங்க ஊருக்குப் போயிட்டீங்கனு நெனைச்சு மேடம் கிட்ட சொல்லிட்டேன்.. இப்போ பார்த்தா நீ இங்கே இருக்க…” என்றார்.

அவரது செயலில் நிகழ்வுக்கு வந்தவள் அன்று லத்திகாவின் வீட்டில் இருந்து கிளம்பிய பின் நடந்த அனைத்தையும், மேலும் தனக்கு வந்த போன் மற்றும் வீட்டுக்கு வந்தவன் கூறியது எல்லாவற்றையும் அவரிடம் சொன்னாள்.

புது மலர்கள் பூத்திடும் வேளை - மதுவதனி

# புது மலர்கள் பூத்திடும் வேளை…!

அவள் சொல்ல சொல்ல மெல்ல அவளுக்கே புரிந்தது.. தான் திட்டமிட்டு ஒரு வலையில் மாட்டப்பட்டு இருக்கிறோம் என்பது. அது அவருக்கும் தெரிந்தது. உடனே அவர் அன்று சுரேஷிற்கு நடந்ததையும், அவனுக்கு செலுத்தப்பட்ட மருந்தைப் பற்றியும், அவன் தற்கொலை செய்து கொண்டான் என்பது பற்றியும் கூறவும் நிலாவிற்கு பலத்த அதிர்ச்சியானது..

உடனே அந்த காவலர் அவளது வீட்டிற்கு தகவல் கொடுத்துவிட்டு, லத்திகாவின் பெர்சனல் நம்பரில் அவரை அழைத்து நடந்ததை சுருக்கமாக தெரிவித்தார்.. அவரும் இதை எதிர்பார்க்கவில்லை என்றும் கூறிவிட்டு, அந்த ஸ்டேஷன் இன்ஸ்பெக்டரிடம் கூறி நிலாவின் மேல் எந்தக் கேசும் இல்லாத மாதிரி செய்து அவளை அதில் இருந்து அகற்றிவிட்டார். அப்போது தகவல் அறிந்து வந்த காசிராமனிடமும் எல்லா உண்மையும் தெரிவிக்கப்பட்டது லத்திகாவும் நாளைக் காலை திருச்சிக்கு வருவதாக கூறினார். அதன் பிறகு நிலாவும் காசிராமனும் வீட்டிற்கு வர அங்கு அவர்களுக்கு ஒரு அதிர்ச்சி காத்திருந்தது….

**வேளை தொடரும்……..**

புதுமலர்கள் பூத்திடும் வேளை - மதுவதனி

# புது மலர்கள் பூத்திடும் வேளை…!



## வேளை - 21-1

*****************************************************************************************************

கண்ணில் என்ன கார்காலம்
கன்னங்களில் நீர்க்கோலம்
மனமே நினைவே மறந்து விடு
துணை நான் அழகே துயரம் விடு
விழியில் விழும் துளி என் மார்பில்
வீழ்ந்ததே கண்ணே…

அமுதம் சிந்தும் கண்ணில் கண்ணீரா
நியாயமா பெண்ணே….

கண்ணில் என்ன கார்காலம்
கன்னங்களில் நீர்க்கோலம்
நானே உன் சுமையாக ஏன் வந்தேன்
சிறகெல்லாம் சிதையாக வாழ்கின்றேன்

நான் உறங்கும் நாள் வேண்டும்
சாய்ந்து கொள்ளத் தோள் வேண்டும்
நான் உறங்கும் நாள் வேண்டும்

# புது மலர்கள் பூத்திடும் வேளை...!

**சாய்ந்து கொள்ளத் தோள் வேண்டும்**
**என் கண்ணில் நீர் வேண்டும்**
**சுகமாக அழ வேண்டும்**

**கண்ணில் என்ன கார்காலம்**
**கன்னங்களில் நீர்க்கோலம்**
**இருள் மூடும் கடலோடு நானிங்கே**
**என் தோணி கரை சேரும் நாளெங்கே**
**பூவுக்குள் பூகம்பம்... எங்கு வரும் ஆனந்தம்**
**பூவுக்குள் பூகம்பம்... எங்கு வரும் ஆனந்தம்**
**நிழலாக நீ வந்தால்... இது போதும் பேரின்பம்**

**கண்ணில் என்ன கார்காலம்**
**கன்னங்களில் நீர்க்கோலம்**
**மனமே நினைவே மறந்து விடு**
**துணை நான் அழகே துயரம் விடு**
**விழியில் விழும் துளி என் மார்பில்**
**வீழ்ந்ததே கண்ணே...**
**அமுதம் சிந்தும் கண்ணில் கண்ணீரா**
**நியாயமா பெண்ணே....**

**கண்ணில் என்ன கார்காலம்**
**கன்னங்களில் நீர்க்கோலம்**

**************************************************************************************************

காசிராமன் அவசரமாக கிளம்பவும் விஜயாவிற்கு குழப்பமாக இருந்தது. இவர் ஏன் இப்படி பதட்டப்பட்டு போகிறார் என்று. தனக்கு வந்த போனை எடுத்து பேசியதும் தான் அவருக்கு அந்தப் பதட்டம் என்ற நினைவு வந்ததும், உடனே அவர் ஒருவேளை நிலாவுக்கு ஏதேனும் பிரச்சினையா அதனால் தான் இப்படி போகிறாரா, இல்லை வேணியைப் போல் இவளும் ஏதேனும் காதல் என்று ஆரம்பித்து வேறு பிரச்சினையில் மாட்டிக் கொண்டாளா என்று பயந்த விஜயா உடனே நிலாவின் அறைக்குச் சென்று அவளது பீரோ, மேஜை, புத்தகங்கள் என்று ஒவ்வொன்றையும் சோதனையிட ஆரம்பித்தார்.

இப்படியாக அவரது சோதனையில் ஒரு புத்தகத்தில் இருந்து ஒரு பேப்பர் விழ அதை எடுத்து வாசித்தவர் அதில் தாங்கிய செய்தியைப் படித்துவிட்டு கண்கள் நிலைகுத்தி அப்படியே கீழே விழுந்தார்.

புது மலர்கள் பூத்திடும் வேளை - மதுவதனி

காவல் நிலையத்தில இருந்து ஓய்ந்து போய் வீடு வந்த நிலாவும் காசிராமனும் விஜயாவின் இந்த நிலையைப் பார்த்து அதிர்ச்சி அடைந்தனர். நிலாவோ செய்வதறியாது தன் அன்னையை அள்ளி மடியில் போட்டுக் கொண்டு கதற ஆரம்பித்தாள். நிலைமையின் தீவிரத்தை உணர்ந்த காசிராமன் ஆம்புலன்ஸ் வரவழைத்து அவருக்கு மருத்துவம் பார்க்கும் அதே ஹாஸ்பிடலில் சேர்த்தனர். அதிர்ச்சி தரும் செய்திகள் கூறவேண்டாம் என்று சொல்லியும் ஏன் இப்படி செய்தீர்கள் என்று டாக்டர்கள் ஒரு பக்கம் வசைபாட, இதை எதையும் யோசிக்காமல் இந்த உலகில் தனக்காக துடிக்கும் ஒரு இதயத்தையும் எடுத்துக் கொள்ளாதே என்ற தீவிர வேண்டுதலில் இருந்தாள் நிலா.

நீண்ட மயக்கத்திற்குப் பிறகு இரண்டு மணி நேரங்கள் கழித்து கண்விழித்தார் விஜயா. அவரது பார்வை நிலாவைப் பார்த்து மன்னிப்பை யாசித்தது. பின் என்னிடம் எதற்கு மறைத்தாய், இன்னும் என்னவெல்லாம் எனக்குத் தெரியாமல் நீயாக மனதிற்குள் வைத்துக்கொண்டு வருத்தப்படுகிறாய் என்று கேட்டது அந்தப் பார்வை.

அதற்கு மேல் நிலாவினால் தாங்கிக்கொள்ள முடியவில்லை. விஜயாவின் கைகளில் முகத்தைப் புதைத்து தேம்பி தேம்பி அழ ஆரம்பித்தாள். அம்மா நீங்களும் என்னை விட்டு போயிடாதீங்கம்மா என்ற ஒற்றை வரியே திரும்ப திரும்ப வந்தது அவளது வாயில் இருந்து… அதன்பிறகு அவளை சமாதானப்படுத்தி அந்த அறையில் இருந்து வெளியில் அழைத்து வந்தார் காசிராமன்..

ஒரு முழுநாள் ஓய்வுக்குப் பின் விஜயா வீடு திரும்பினார். அன்றே ராமன் விஜயாவிடம் பேசி அடுத்தநாள் தேனிக்கே போய்விடலாம் என்ற கோரிக்கையை முன்வைக்க, அவரும் இனி அதுதான் சரியான முடிவு என்று நினைத்து, ஊருக்கு கிளம்பும் வேலையை தொடங்க சொன்னார். அதன் பொருட்டு அக்கபக்கம் உள்ளவர்களிடமும் அவரது ஆபிசிலும் உடல்நிலை முன்னிட்டு ஊருக்கே போவதாக கூறி வீட்டை காலி செய்து தேனியை நோக்கி பயணம் செய்தனர்.

கணவர் கொடுத்த தன்னம்பிக்கையும் தைரியமும் எங்கோ போயிருந்தது விஜயாவிற்கு. அவருக்கு இன்னும் முழுதாக எந்த நிகழ்வும் தெரியாது, வேணி ஒருவனை நம்பி ஏமாந்து, அவனையும் கொன்று தன் உயிரையும் விட்டுவிட்டாள் என்று நினைத்துக் கொண்டிருந்தார். இது தன்னுடைய தப்புதான்.

# புது மலர்கள் பூத்திடும் வேளை...!

இரண்டு பெண் பிள்ளைகளை வீட்டில் தனியாக வைத்துக்கொண்டு வேலை வேலை என்று ஓடிய தன்னுடைய முட்டாள்தனத்தை எண்ணி நொந்து கொண்டார். அதன் பொருட்டு தேனுவையாச்சும் நல்லமுறையில் பார்த்து, அவளுக்கு ஒரு நல்ல வாழ்க்கையை அமைத்துக் கொடுக்க வேண்டும் என்று முடிவெடுத்தார்.

தேனுவின் மனதில் பல யோசனைகள் இருந்தாலும், விஜயாவின் உடல்நிலையை முன்னிட்டு ஊருக்குப் போவதே சரி என்று யோசித்தாள். இருவரின் எண்ணங்கள் போலவே காசிராமனின் எண்ணமும் இருந்தது. இனி இவர்களை தனியே விடவேண்டாம். ஆசிரம வேலைகள் முடியும் தருவாயில் இருப்பதால், இனி இவர்கள் இங்கே இருந்து அதை மேற்பார்வை பார்த்துக் கொள்ளட்டும் என்று நினைத்தார். மூவரின் என்ன ஓட்டங்களுக் கு முடிவு வந்தது போல் ஊரும் வந்து சேர்ந்தது..

பாண்டியனின் கனவுகளில் ஒன்றானது அவர்களின் வீடு.. முற்றிலும் இயற்கை அழகுடன் அமைந்தது. இன்னும் கிரகப்பிரவேசம் கூட வைக்கவில்லை. ஆசிரமத்திற்கும், வீட்டிற்கும் சேர்த்து ஒரே விழாவாக வைத்துக் கொள்ளாலாம் என்று முன்னமே முடிவெடுத்தனர். ஆனால் இப்போது அதெல்லாம் வேண்டாம் எனக் கூறி அந்த வீட்டிற்கே வந்து விட்டனர்.

வீட்டைத் திறந்ததும் முதலில் பட்டது அவர்களின் குடும்ப புகைப்படம்தான். அதைப் பார்த்ததும் இருவரும் ஒருவருக்குத் தெரியாமல் மற்றவர் கண்ணீரை அடக்க பாடுபட்டனர். ஆயினும் முடியாமல் ஒருவரையொருவர் கட்டிக்கொண்டு அழ ஆரம்பித்தனர். எத்தனை இன்பமாக இருந்த அவர்களது வாழ்க்கை, இப்படி கண்முன்னே கண்ணாடியாக நொறுங்கிப் போனதை நினைத்து நினைத்து கண்ணீர் வடித்தனர்.

அதன்பிறகு ஒருவரையொருவர் சமாதானப்படுத்தி கொண்டு அடுத்த கட்ட வேலையைப் பார்த்தனர். காசிராமனும் அவர்களைத் தனியே விட்டுவிட்டு ஆசிரமம் நோக்கி நகர்ந்தார். புதுவீடு, ஆசிரம வேலைகள் என்று கொஞ்சம் பழகிக்கொள்ள முயன்று கொண்டிருந்தார்கள். ஒருவாரம் சென்றிருந்த வேளையில் வீட்டின் முன்னே காவல்துறை வாகனம் வந்து நிற்கவும், இருவருக்குள்ளும் பயம் குமிழியிடத் துவங்கியது. ஆனால் அது தேவையே இல்லை என்பது போல லத்திகா தான் அதிலிருந்து இறங்கினார்.

புது மலர்கள் பூத்திடும் வேளை - மதுவதனி

அவரைப் பார்த்ததும் ஒரு ஆசுவாச பெருமூச்சை வெளியிட்ட விஜயா அவரை வரவேற்று அமரவைத்தார்.

“வாங்க மேடம் எப்படி இருக்கீங்க…”

“நல்லா இருக்கேன் மா, நீங்க … உங்களுக்கு இப்போ எப்படி இருக்கு, ரொம்ப முடியாம போச்சுன்னு சொன்னாங்க, நான் டெல்லி வரை போகவேண்டிய கட்டாயம் ஆகிடுச்சு, அதனால்தான் உடனே வரமுடியல… இப்போ செக்கப் போறீங்களா…”

“பரவாயில்லை மேடம், நான் இப்போ நல்ல இருக்கேன். போதும் அங்க இருந்து என் பொண்ணுங்க வாழ்க்கையை நானே கெடுத்தது, அதான் இங்கேயே வந்துட்டோம். இது தேனு அப்பாவோட கனவு.. இனி அதுதான் என்னோட வாழ்க்கையும், சீக்கிரம் தேனுவுக்கு ஒரு கல்யாணத்தை முடிச்சு கொடுத்துட்டா, அப்புறம் நிம்மதியா இருப்பேன்”

அப்போது உள்ளே இருந்து வந்த தேனு லத்திகாவைப் பார்த்து புன்னகைத்து வரவேற்றவள், அவரிடம் காபி எடுத்துட்டு வருவதாக கூறி மீண்டும் உள்ளே சென்றாள். “இப்போ தேனுவுக்கு என்ன வயசாகுது, நீங்களே இப்படி பேசலாம்மா.. அவ படிக்கட்டும், அப்புறம் இவளுக்கு மேரேஜ் பத்தி பேசலாம்.. இப்போ வந்தது தேனு அன்னைக்கு போலீஸ் ஸ்டேஷன் வந்துருக்கும் போது இந்த பேக்கை விட்டுட்டு வந்துட்டா.. அப்புறம் தான் இவர் சொன்னார், நீங்க இங்கே வந்துட்டீங்கனு, இதுவும் நல்லதுதான். இனி எதுக்கும் பயப்பட வேண்டாம்.. நான் எல்லாத்தையும் பார்த்துக்கிறேன்..

இந்த கேசை முடிச்சிட்டு தான் நான் மறுபடியும் டெல்லி போவேன். நீங்க எதுக்கும் கவலைப்படவேண்டாம்.. தைரியமா இருங்க.” என்றவாறு அந்த பேக்கை நீட்டவும், அது ஒரு நியூஸ் பேப்பெரினால் கவர் செய்யப்பட்டு இருக்கவும் அந்தப் பேப்பரை நீக்கி அந்தப் பேக்கை வெளியில் எடுத்தார் விஜயா.

அப்போது அந்த செய்தித்தாளை எடுத்தவரின் பார்வை ஒரு செய்தியின்மேல் நிலைத்து நிற்க.. கண்கள் தானாக சுழல அப்படியே அங்கிருந்த சோபாவில் தொப்பென அமர்ந்தார்.

புது மலர்கள் பூத்திடும் வேளை - மதுவதனி

அவரின் செய்கையை பார்த்த லத்திகா அவசரமாக அவரின் அருகில் வந்து அவர் கையில் இருந்த நியூஸ்பேப்பரைப் பார்த்தார். பார்த்தவரின் கண்களும் இயலாமையில் ஒரு நிமிடம் மூடியது. எது நிலாவிற்கும் விஜயாவிற்கும் தெரியக்கூடாது என்று நினைத்தாரோ அந்த செய்தியை விஜயாவே பார்க்க வேண்டிய சூழல் ஏற்பட்டது.. இதுதான் விதியின் விளையாட்டோ..

விஜயா அந்த செய்தியை நம்பாமல் மீண்டும் பார்க்க அதில் ‘விபச்சாரத் தொழிலில் இன்றைய கல்லூரிப் பெண்கள்’ என்ற தலைப்பில் நான்கைந்து பெண்களுடன், நிலாவும் அவளுடன் இருந்த மற்ற இரண்டு ஆண்களும் என்று புகைப்படத்துடன் வெளிவந்திருந்தது அந்த செய்தி. கண்கள் இருள தன் உலகமே வெடித்து சிதறிவிட்டது போல் தோன்றியது விஜயாவிற்கு..

அவருடைய நிலையை உணர்ந்த லத்திகா, உடனே தன் உதவியாளரிடம் ஆசிரமத்தில் இருக்கும் காசிராமனை அழைத்து வரும்படி கூறிவிட்டு, விஜயாவின் அருகில சென்று அவரது கைகளைப் பிடித்துக்கொண்டு “நீங்க பயப்படுற அளவுக்கு ஒன்னும் இல்லை, எல்லாம் திட்டம்போட்டு நிலாவை பழிவாங்க பண்ணிருக்கான்.

இதுல நிலா மேல எந்தத் தப்பும் இல்லை என்றவர் அன்று நிலா எப்படி அவனின் வலையில் மாட்டினாள் என்று விவரித்தார். அப்போது நிலாவும் வந்துவிட விஜயா நிலாவைப் பார்த்து “எனக்கு எல்லா உண்மையும் தெரியனும், அது உன்னால மட்டும்தான் சொல்ல முடியும் சொல்லு” என்றார்.

“அம்மா நான் எல்லாத்தையும் சொல்லிடுறேன், ஆனா உங்களுக்கு இப்போ எந்த அதிர்ச்சியும் கேட்க கூடாது என்று சொல்லிருகாங்க அப்படி இருக்கும்போது நான் எப்படி சொல்வேன், உங்களுக்கு ஏதும் ஆகிட்டா அப்புறம் எனக்கு யாரு இருக்கா, நான் மட்டும் இந்த உலகத்துல தனியா இருப்பேன்னு நினைக்கிறீங்களா, கண்டிப்பா இருக்க மாட்டேன், உங்களோடவே நானும் வந்துடுவேன்” என்று விஜயாவின் மடியில் படுத்து கதறினாள் நிலா.

புது மலர்கள் பூத்திடும் வேளை - மதுவதனி

“இல்ல குட்டிம்மா உன்னை மட்டும் தனியா அப்படி கஷ்டப்பட விடுவேனா.. எனக்கு ஒன்னும் ஆகாது, இதுக்குமேலையும் எதுவும் தெரியாம இருக்க கூடாது என்று நினைக்கிறேன், நீ உண்மையை மட்டும் சொல்லு, சரியா உண்மையை மட்டும்” என்றார்.. அந்த உண்மையில் அழுத்தம் கொடுத்து..

நிலாவும் இதற்குமேல் எதையும் மறைத்து பிரயோஜனம் இல்லை என்பதை புரிந்து கொணடவள் லத்திகாவைப் பார்க்க அவரும் அவளிடம் “சொல்லு தேனு, அதுதான் நல்லது” என்றார்.

அதன்பிறகு நிலாவிற்கு எந்த தடையும் இருக்கவில்லை. வேனிலா பற்றி, அவள் பட்ட கஷ்டங்கள் பற்றி, அவன் ஏமாற்றி பணம் பறித்தது பின் அவள் வயிற்றில் வளர்ந்த கருவோடு வீட்டை விட்டு சென்றது, கடைசியில் அவனை நம்பி சென்று தன் உயிரை விட்டது என்று எல்லாவற்றையும் கூறியவள், லத்திகாவின் புறம் திரும்பி மேடம் அந்த சுரேஷ் சொன்னதுல எனக்கு ஒரு டவுட் இருக்கு, அன்னைக்கு இறந்த பொண்ணு கர்ப்பமா இருந்தாளா இல்லையா என்று கேட்காம விட்டுட்டோம், ஏனென்றால் வேணிக்கா போகும்போது மூணுமாசம் கர்ப்பமா இருந்தாங்க” என்றவள் விஜயாவை கவனிக்க தவறினாள்.

லத்திகாவும் அதைப்பற்றி விசாரிக்கிறேன் என்று கூறி விஜயாவின் நடவடிக்கையைப் பார்க்க அங்கே அவரோ நிலா கூறிய செய்திகளைக் கேட்டு ரத்த அழுத்தம் அதிகமாகி விஜயாவின் ஒரு பக்கம் கையும் காலும் இழுத்துக்கொண்டு, வாயும் ஒருபுறமாக கோணி நுரைதள்ளி அப்படியே சாய்ந்திருந்தார்.

இதை யாருமே எதிர்பார்க்கவில்லை, நிலாவின் நிலையோ சொல்லில் வடிக்க முடியாது, என்ன செய்ய வேண்டும் என்று கூட தெரியாமல் கால்கள் இரண்டும் உறைய மரம் போல் நின்றிருந்தாள். அப்போது உள்ளே வந்த காசிராமனும் லத்திகாவின் உதவியாளரும் அவரைத் தூக்கிக்கொண்டு மருத்துவமனை விரைந்தனர். லத்திகாவும் நிலாவை அழைத்துக்கொண்டு அவர்களின் பின்னே சென்றார்.

விஜயா கண்விழிக்க ஒருவாரம் ஆனது. அந்த ஒருவாரமும் தன்னைச்சுற்றி என்ன நடந்தது என்று கூட தெரியாது நிலாவிற்கு. லத்திகா அடுத்தநாளே சென்றுவிட,

# புது மலர்கள் பூத்திடும் வேளை…!

காசிரமனும் அவரது குடும்பமும் நிலாவிற்கு முழுக்க முழுக்க உதவியாக இருந்தனர். விஜயாவிற்கு வந்திருப்பது ஸ்ட்ரோக் என்றும் இனி இப்படியே தான் இருப்பாள என்றும், கொஞ்சம் கொஞ்சமாய் பிசியோதெரபி செய்து குணப்படுத்த முயற்சிக்கலாம் ஆனால் முழுதும் குணமடைய சாத்தியம் இல்லை ஏனென்றால் இவர் ஒர் ஹார்ட் பேசன்ட் என்று விஜயாவை பரிசோதித்த மருத்துவ குழு தெரிவித்தது.

ஒருமாத மருத்துவமனை வாசத்திற்கு பிறகு விஜயா வீட்டிற்கு வந்தார். அதன்பிறகு அவர்களது உலகமே இருண்டு போன வான் போல அமைதியாக கழிந்தது. நிலாவும் தன் படிப்பை தொலைதூர கல்வி மூலம் படிக்க ஆரம்பித்தாள், அதுவும் விஜயாவின் உந்துதலினால் தான். காலையில் எழும் நிலா விஜாயாவை கவனித்த பிறகு, அவரையும் வீல்சேரில் அழைத்துக் கொண்டு ஆசிரமம் சென்று எல்லா வேலைகளையும் இழுத்துப் போட்டுக் கொண்டு செய்வாள்.

அப்படி ஒருநாள் மாலை வேலை முடிந்து கிளம்பும் நேரம் காசிராமனுடன் மற்றும் ஒருவர் வந்தார். அவரிடம் விஜயாவை சுட்டிக்காட்டி பேசிய காசிராமனை புரியாது பார்த்தார். நிலாவின் புறம் பார்வையை திருப்பிய ராமன் அருகே வரும்படி அழைக்க அங்கே சென்றாள்.

நிலா இவர் ஒரு சித்தவைத்தியர் குற்றாலத்தில் இருந்து வந்து இருக்கிறார், எனக்கு தெரிஞ்சவங்க தான் சொன்னாங்க. நான் விஜயா பத்தி சொல்லவும் மூலிகை மருத்துவம் முயற்சி செஞ்சீங்களா என்று கேட்டார். நான் இல்லை என்றதும் ஒரு முறை முயற்சித்துப் பாருங்கள் என்றவர், நானே வந்து அவருடைய கண்டிசன் எப்படி இருக்கிறது என்று பார்த்துவிட்டு கூறுகிறேன், அப்படி ஒருவேளை அவருக்கு இந்த மருத்துவம் சரிவரும் என்றால் அவர்களின் கட்டுப்பாட்டில் இருந்து தான் வைத்தியம் பார்க்கவேண்டி வரும் என்றும் சொன்னார். நான் உன்னையும் அம்மாவையும் கேட்டு சொல்கிறேன் என்று சொன்னேன், நீ என்ன சொல்கிறாய் நிலா" என்றார் ராமன்.

"என்ன மாமா சொல்றீங்க, அம்மாவுக்கு சரியாக இப்படி ஒருவழி இருக்கென்றால் நாம் முயற்சிக்கலாம் மாமா, அம்மாவிடம் நானே இதைப்பற்றி பேசுகிறேன், அம்மாவிற்கு சரியானால் போதும் பணம் பிரச்சினை இல்லையே அப்புறம் என்ன..?" என்றாள்.

புதுமலர்கள் பூத்திடும் வேளை - மதுவதனி

# புது மலர்கள் பூத்திடும் வேளை...!

“சரிம்மா... அவரிடம் சொல்கிறேன், அப்போதுதான் அவர் ஒருமுறை இங்கேயே செக் செய்வார், பிறகு அம்மாவிற்கு எந்தமாதிரி ட்ரீட்மென்ட் கொடுக்கவேண்டும் என்றும் சொல்வார், அதற்கப்புறம் நாம் விஜயாவை அழைத்துக் கொண்டு குற்றாலாம் போகவேண்டும், அதோடு நாம் அங்கு இருக்கமுடியாது. இரண்டு வாரங்களுக்கு ஒருமுறை அல்லது மாதமொருமுறை என்றுதான் போய் பார்த்துவிட்டு வரமுடியும், அதில் உனக்கொன்றும் பிரச்சினை இல்லையே”என்றார்.

“இல்லை மாமா... எனக்கொரு ப்ராப்ளமும் இல்லை, அவங்க சரியாகி வந்தாலே போதும்” என்று காசிராமனிடம் கூறிவிட்டாலும், விஜயாவின் சம்மதம் அவ்வளவு சீக்கிரம் கிடைத்து விடவில்லை, மிகுந்த போராட்டத்திற்கு பிறகு ஒருவழியாக சம்மதித்தார். அதன் பிறகு வேலைகள் துரித கதியில் நடந்தன.

அடுத்த ஒரு வாரத்தில் காசிராமனும் நிலாவும் விஜாயவை அழைத்துக்கொண்டு குற்றாலம் சென்று எல்லாவற்றையும் நன்கு விசாரித்து முதல் ஒருவாரம் மட்டும் நிலா அவர் உடன் இருக்க சம்மதம் வாங்கி, கூடவே இருந்த பார்த்துவிட்டு தேனி வந்து சேர்ந்தனர்.

அதன்பிறகு நாட்கள் நத்தையாக ஊர்ந்ததா இல்லை நதிபோல் சீறிப்பாய்ந்ததா என்று கேட்டால் தெரியாது, ஆனால் அவர்கள் வாழ்க்கையில் ஒரு தெளிவும் சிறு அளவில் நிம்மதியும் ஏற்பட்டது, முதலில் நிலாவிற்காக வேண்டா வெறுப்பாய் ட்ரீட்மெண்டை ஏற்றுக்கொண்ட விஜயாவும் நிலாவின் முகத்தில தோன்றி மறையும் கவலைகளைப் பார்த்து, பின்பு அதிலே ஒன்றி அதில் ஒத்துழைக்க ஆரம்பித்தார். இதுவே நிலாவிற்கும் போதுமானதாக இருக்க இருவாரங்களுக்கு ஒருமுறை நிலாவும், மாதத்திற்கு ஒருமுறை காசிராமனும் குற்றாலம் சென்று பார்த்து வந்தனர்.

**வேளை தொடரும்........**

புதுமலர்கள் பூத்திடும் வேளை - மதுவதனி

**வேளை - 21-2**

இரண்டு வருடங்கள் கடினமான பயிற்சிகள் இல்லையென்றாலும் சாதாரண பயிற்சிகள் தான் ஆனாலும் அதுவே விஜயாவிற்கு கஷ்டமாக இருந்தது, தன் நலனுக்காக வருத்தப்படும் மகளுக்காக அதைப் பொறுத்துக் கொண்டு இப்போது ஓரளவு அதில் இருந்து மீண்டு வந்தார்.

அன்று குற்றாலத்தில் இருந்து வந்த நிலா மிகவும் மகிழ்ச்சியாக இருந்தாள். அன்று விஜயாவிற்கு மருத்துவம் பார்ப்பவர் இன்னும் சிலநாட்களில் அவரை வீட்டிற்கு அழைத்து செல்லலாம் என்றும் முன்னே இருந்ததற்கு இப்போது பரவாயில்லை, மற்றவர்கள் துணையில்லாமல் அவரது வேலையை அவரே செய்து கொள்ளும் அளவுக்கு முன்னேறிவிட்டார் என்றும், பழையமாதிரி பேசமுடியாது கொஞ்சம் சிரமப்படுவார்..

அதற்கு மட்டும் கொஞ்சம் பயிற்சி வேண்டும், அதற்கு இங்கே இருக்க வேண்டிய அவசியம் இல்லை. வீட்டில் இருந்தே பயிற்சி எடுத்துக் கொள்ளலாம் என்றார்.

அந்த செய்தியில் முகம் முழுக்க மகிழ்ச்சியுடன் உள்ளே வந்த நிலா அந்த அறையில் இருந்த யாரையும் கவனிக்காமல் காசிராமனிடம் சென்று எல்லாவற்றையும் கூறி சந்தோசப்பட்டாள். அவருக்கு ஏற்கனவே தெரியும் என்றாலும் நீண்ட நாட்களுக்கு பிறகு நிலாவின் முகத்தில் தெரிந்த மகிழ்ச்சியை கலைக்க மனமின்றி அப்படியா என்று அவரும் அவளின் மகிழ்ச்சியில் பங்கெடுத்துக் கொண்டார்.

அதன்பிறகு அவர் அங்கு விருந்தாளிகள் வந்திருப்பதாகவும் அவர்களுக்கு காபி எடுத்துக்கொண்டு வரக் கூறிவிட்டு வெளியே வந்தார். அவளும் இது எப்போதும் நடப்பது தான் என்பது போல காபி எடுத்துக் கொண்டு போனாள். அப்படி சென்றவள் அங்கு அமர்ந்து இருந்தவனைக் கண்டதும் கால்கள் அந்த இடத்தை விட்டு அகலாமல் அப்படியே நிற்க, அவளது விழிகள் அவனையே ஆச்சரியத்துடன் பருகியது. தன் கண்கள் காண்பது கனவா இல்லை எப்போதும் தோன்றி மறையும் அவனின் மாயபிம்பமா என்று நொடிநேரம் யோசித்தவள், தன் கருவிழிகளை அழுந்த துடைத்துவிட்டு மீண்டும் அந்த இடத்தில் தன் பார்வையை செலுத்தினாள்.

புது மலர்கள் பூத்திடும் வேளை - மதுவதனி

# புது மலர்கள் பூத்திடும் வேளை…!

ஆம் அவள் காண்பது கனவல்ல, நிஜம்தான்…. உண்மைதான் என்பது, அவன் அவள் எந்தப்பக்கம் உள்ளே நுழைந்தாலோ அந்த பக்கம் இருந்த வாயிலையே பார்த்துக் கொண்டிருந்தான் ஏக்கமாக, அவனின் பார்வையில் தெரிந்த ஏக்கத்தில் பெண்ணவளுக்கு துக்கம் பொங்கியது, அது தனக்கானது என்று புரியாமல், அதன்பிறகு அவள் காபியை எடுத்துகொண்டு அந்த வாயிலின் வழியேதான் வந்தாள். அவள் வருகையை எதிர்பார்த்தவன் அவளது மாற்றங்களை கவனிக்க தவறினான்.

பார்த்த நொடியில் இருந்து அவளும் அவனைத்தான் விரும்புகிறாள் என்று அவனால் எண்ண முடியவில்லை, அவனாவது அவள் அறியாமல் சிலமணிநேரங்கள் பார்த்தான். ஆனால் அவளோ சில நிமிடங்கள் தானே பார்த்தாள். பிறகெப்படி அவனால் அப்படி நினைக்கத் தோன்றும்.

காபியோடு அவனருகில் சென்றவளுக்கு என்றுமில்லாத படபடப்பும், குறுகுறுப்பும் தோன்ற, மேலும் ஒருநொடி அவன் கண்களை சந்தித்துவிட்டு மீண்ட அவளது மான்விழிகள் அவன் மனதை அறிந்துவிட, அவனது பார்வையும் அவளையே மொய்க்க.. அங்கே இருப்பது ஒரு மாதிரியான வெக்கத்தைக் கொடுக்க, உள்ளே சென்றுவிடலாம் என்று திரும்பும்போது ரவியும் வந்துவிட அவனைத் தவிர்த்து கிளம்ப முடியாமல் நின்று ரவி கேட்கும் கேள்விகளுக்கு பதில் அளித்துக்கொண்டே சரணை அவனறியாமல் ஓரப்பார்வை பார்க்க, அவனது கண்களில் தெரிந்த குறும்பும் அவனது முகத்தில் தெரிந்த ஆர்வத்தையும் பார்த்து பெரும் அவஸ்தைக்கு உண்டானாள் நிலா.

அதன்பிறகு நடந்தது எல்லாம் கனவு போல் தோன்றியது நிலாவிற்கு… சரண் அங்கு வந்தது ஆச்சரியம் என்றால், அவன் அவளைத் தேடித்தான் வந்திருக்கிறான் என்பது தெரிந்ததும் சிறகில்லாமல் பறக்க ஆரம்பித்தாள். ஆனால் விஜயாவின் நிலை நிதர்சனத்தை உணர்த்த அவளால் அவனுடனான திருமணத்தை ஏற்கவும் முடியாமல், மறுக்கவும் முடியாமல் திண்டாடினாள். விஜயாவிடமும் காசிராமனிடமும் எவ்வளோ மறுத்தும், கெஞ்சியும் முடியாமல் சரணிடமே பேச முடிவு செய்தாள்.

ஆனால் அவனோ அவனது சிஷ்யர்களை விட்டு பேசி அவளிடம் இருந்து சம்மதத்தை பெற்றுகொண்டான், சரி என்று சொன்னபிறகு தான் நிலாவிற்கே தெரிந்து, நம் அம்மாவே பரவாயில்லை என்று, அந்தளவிற்கு பிடிவாதமாக இருந்தான் அவளது விசயத்தில்.

காசிராமன் நிலாவிடம் பேசும்போது சரணிடம் நடந்த அனைத்து விசயத்தையும் கூறிவிட்டதாகவே கூறினார். அவளுக்கும் அதுதான் சரியென்று தோன்றியது. உண்மையை கூறிவிட்டால் அதன்பிறகு நடக்கும் பிரச்சனைகளை சமாளிக்க முடியும், ஆனால் உண்மையை மறைத்து பொய்யாக ஒரு வாழ்க்கையை வாழ முடியாது என்பதில் உறுதியாக இருந்தாள். அதுவும் சரணிடம் பொய்யாக தன்னால் வாழவே முடியாது, அது அவனுக்கு நான் செய்யும் துரோகம் என்றும் நினைத்தாள்.

காசிராமன் அவளிடம் மறைத்த செய்தி விஜயாவின் மூலம் தெரியவந்தது. அது நிலாவின் மேல் விழுந்த வீண்பழியும், அந்த பத்திரிகை செய்தியும், அதை சரணிடம் கூறவேண்டாம் என்று விஜயாவே காசியிடம் தெரிவித்தார், அவர்களின் வீட்டுப் பெரியவர்களிடம் எல்லாவற்றையும் சொல்லலாம் என்ற காரணத்தையும் கூறி அவர்களின் முடிவுதான் முக்கியம் என்றும் தெரிவித்தார். அதை நிலா ஏற்றுக்கொள்ளவில்லை. சரணிடமும் உண்மை அனைத்தையும் கூறும்படி கெஞ்சினாள் அவளது அம்மாவிடம்..

அவருக்கு ஏனோ அது சரியென்று படவில்லை, அவனிடம் உண்மை சொன்னால் ஏற்றுக்கொள்வான், ஆனால் அவர்கள் வீட்டில் இதை சொல்ல வேண்டாம் என்று கூறி மறைக்க சொன்னால் பின்னாளில் அது நிலாவிற்கு பிரச்சனையாக அமையும் என்று நினைத்து சரணிடம் கூறாமல் அவர்கள் வீட்டுப் பெரியவர்களிடம் பேசினார்.

அவர்கள் சரணிடம் நாங்களே பேசிக்கொள்கிறோம் திருமணம் முடியும்வரை ஏது செய்ய வேண்டாம் என்று கூறிவிட, அவரும் நிலாவிடம் இப்போதைக்கு சரணிடம் ஏதும் சொல்லவேண்டாம் என்று வாக்குப் பெற்றுக்கொண்டார். அதுதான் அவர் தெரியாமல் செய்த தவறோ…? என்று நிலாவிற்கு அவ்வப்போது தோன்றும்.

நிலாவின் வாழ்க்கையில் வசந்தகாலம் என்றால் அது திருமண நிச்சயம் முடிந்து திருமணத்திற்கு காத்திருந்த அந்த இரண்டு மாதங்கள் தான்.. மிகவும் சந்தோசமாக இருந்தாள் நிலா. தினமும் சரண் பேசுவானோ இல்லையோ சிபியும் ஷானவியும் அவளிடம் பேசாமல் இருந்தது இல்லை. அவர்களிடையே நடக்கும் சின்ன சின்ன சண்டைகள், வாக்குவாதங்கள் அதை சரண் எப்படி பஞ்சாயத்து செய்து தீர்த்து வைப்பான் என்று அவர்களுக்கு தினமும் பேச நிறைய இருந்தது.

இடையில் அகிலாவும் தன் இருப்பைக் காட்டிகொள்வாள். சரணும் அவளிடம் தன்னைப் பற்றி முழுமையாக தெரிவித்தான், குடும்பம் நண்பர்கள், அவனது தொழில், விருப்பு, வெறுப்பு என்று எதையும் மறைக்காமல் எல்லாவற்றையும் கூறினான். அவன் இப்படிக் கூறும்போது நிலாவிற்கு குற்ற உணர்ச்சியாக இருக்கும், அப்போது திருமணம் முடிந்ததும் முதல்வேலையாக அவனிடம் எல்லாவற்றையும் சொல்லிவிட வேண்டும் என்று நினைத்து மனதைத் தேற்றிக்கொல்வாள். அப்போது காலம் கடந்து போயிருக்கும் என்று தெரிந்தால் என்ன செய்வாள் அந்தப்பேதை. இப்படியாக மகிழ்ச்சிக்கடலில் குளித்துக் கொண்டிருந்த நிலா ஆசையோடு திருமண நாளை எதிர்பார்த்துக் கொண்டிருந்தாள்.

கணவனின் அசைவில் நிகழ்வுக்கு வந்தாள் நிலா. மனம் என்னவோ கடந்த காலத்தை அசைப்போட்டாலும் அவளது விழிகள் கணவன் துயில் கொள்ளும் அழகை கண்ணெடுக்காமல் ரசித்துக் கொண்டிருந்தது. இனி எப்போது இப்படி ஒரு வாய்ப்பு கிடைக்கும் என்ற எண்ணம் தான் காரணம். சரணின் முடிவு அவளுக்குத் தெரிய வாய்ப்பில்லையே,! தூக்கத்தில் ஏதோ தோன்ற கண் விழித்து சரண் பார்க்க, அவளோ அவனது கைச்சிறையில் அவஸ்தையாய் நெளிந்து கொண்டிருந்தாள். அவள் அமர்ந்திருந்த விதம் அவனுக்கு பயத்தை உண்டாக்க, பதட்டமாக் எழுந்தவன் "என்ன… என்ன நிலா என்னாச்சு" என்றான், அவனுக்கு நேற்றிரவு போல் ஏதேனும் வலி வந்துவிட்டதோ என்ற பயம், அதனால் அவள் வயிற்றைத் தடவிக் கொண்டே கேட்டான். அவள் அமைதியாக அவனையே பார்த்தாள். அவளுக்கோ சரண் தன்னிடம் தான் பேசினானா ..? என்ற சந்தேகம் எழுந்தது.

மனைவியிடம் இருந்து எந்தப் பதிலும் வராததை உணர்ந்து நிமிர்ந்து அவளைப் பார்த்தவன் "என்ன நிலா வலி எடுக்குதா.. ஹாஸ்பிடல் போலாமா, இல்லை மல்லிம்மாவை எழுப்பவா, என்ன செய்துனு சொல்லும்மா..எனவும்.

இல்லை, வலியெல்லாம் ஒண்ணுமில்லை, நேரமா தூங்கினதுனால உறக்கம் களைஞ்சி போச்சு. அதான் சும்மா உட்கார்ந்திருக்கேன்" என்று அவனது பதட்டம் தனக்கானது என்பதை உணர்ந்து அதை குறைத்து விடும் பொருட்டு கணவனிடம் மெல்லிய குரலில் சொன்னாள்.

புது மலர்கள் பூத்திடும் வேளை - மதுவதனி

ஆனால் அவளது குரலில் தெரிந்த சோர்வு, அவனுக்கு இன்னும் ஏதோ இருக்கிறது என்று உணர்த்த "வேறென்ன நிலா, இன்னும் என்னமோ இருக்கு போலையே," ன்றான் அவளை உணர்ந்தவனாக.

ஒன்றுமில்லை எனும் விதமாக தலையை ஆட்டியவள், அவனின் முறைப்பில் "பசி எடுக்குது" என்றாள் முணுமுணுப்பாக….,

"இதை வாய் திறந்து சொல்றதுக்கென்ன, இப்படியே அமைதியா இருந்து செஞ்சது எல்லாம் போதும், இனியாச்சும் வாய் திறந்து பேசு" என்று கோபப்பட்டவன், அவளின் முக சுணுக்கத்தில் சட்டென்று அமைதியாக "சரி இரு நான் போய் ஏதாவது எடுத்திட்டு வரேன், பால் மட்டும் போதுமா" என்றான்.

அவன் கேள்வியில் திருதிருவென முழித்தவள் "பால் மட்டுமா" என்றாள், சத்தம் வெளியே வரவில்லை உதடுகள் மட்டும்தான் அசைந்தது. பரிதாபமாக அவனை பார்த்தாள் 'எனக்கு மட்டுமென்றால் பால் மட்டும் போதும், உள்ளே இருக்கிறவங்களுக்கு சேர்த்து எப்படி போதும், நிலா உன்பாடு ரொம்ப மோசம் போலவே, பசங்களா உங்க அப்பாவுக்கு உங்க மேல அக்கறையே இல்லை. பாருங்க உங்களைப் பத்திக் கவலைப் படாமால் எனக்கு மட்டும் பால் கொண்டு வரேன்னு சொல்றங்க. வெளியே வந்ததும் நல்லா சண்டை போடணும் சரியா…' என்று பேசிக்கொண்டாள். எல்லாம் மனதிற்குள்ளே தான். வெளியே சொல்லவில்லை.

அவளின் அமைதியைப் பார்த்து "எப்போதான் திருந்தப் போறியோ" என்றுக் கடிந்துக் கொண்டே எழுந்துக் கீழே செல்ல நினைத்தவன், திரும்பி அவளையும் பார்த்து "இங்கே இருந்து என்ன செய்யப்போற, ஹால்ல வந்து உட்காரு" என்று அவளையும் கைப்பிடித்து அழைத்துச் சென்றான்.

புதுமலர்கள் பூத்திடும் வேளை - மதுவதனி

கீழே வந்தவன் சோபாவில் அவளை அமர வைத்துவிட்டு அங்கிருந்த டிவியை ஆன் செய்துவிட்டு கிச்சனுக்குள் நுழைந்தான். நிலாவோ இதெல்லாம் கனவில்லையே என்று அடிக்கடி தன்னைத்தானே கிள்ளி சோதித்துக் கொண்டாள். அப்போது டிவியில் ***'நிலவு தூங்கும் நேரம், நினைவு தூங்கிடாது'*** என்ற பாடல் ஓட.. இருவரின் பார்வையும் நொடியில் சந்தித்து மீண்டது. கிட்சனில் இருந்தவன் என்ன செய்ய என்று அங்கிருந்தவற்றை ஆராய்ந்தான் பிறகு ப்ரிட்ஜை திறந்து பார்க்க இடியாப்பமும், குருமாவும் இருக்க அதை எடுத்து ஓவனில் சூடு செய்தான். பால் வேண்டுமா என்று அவளிடம் கேட்கலாம் என அவளை நோக்கித் திரும்ப அவளும் அவனைத் தான் பார்த்துக் கொண்டிருந்தாள்.

இப்போது ***'வெண்ணிலவுக்கு வானத்தைப் பிடிக்கலையா'*** என்ற பாடல் இசைத்துக் கொண்டிந்திருந்தது. சரண் மனைவியிடம் வந்து இடியாப்பம்தான் இருக்கு, உனக்கு வேறு எதாவது வேணுமா நூடுல்ஸ் செஞ்சு தரவா," என்றதும் அவனைப் பார்த்து முறைத்துவிட்டு டிவியைப் பார்க்க, எதுக்கு இப்போ முறைக்கிறா என்று பரிதாபமாக அவளை பார்க்க அவளோ அவனைத் திரும்பியும் பார்க்கவில்லை. சரண் அவளது தாடையைத் தன்புறம் திருப்பும்போது ***'நிலவே முகம் காட்டு, எனைப் பார்த்து ஒளி வீசு'*** என்ற வரிகள் ஒலிக்க சரியான சிச்சுவேசன் சாங் என்று நினைத்தவளால் என்ன முயன்றும் சிரிப்பை அடக்க முடியவில்லை. கலகலவென முத்துப்பற்கள் மின்னிட சலங்கையென சிரித்தாள்.

எத்தனை நாட்கள் கழித்து இந்த சிரிப்பை பார்க்கிறான். கண்ணிமைக்காது மனைவியின் புன்னகையையே பார்த்துக் கொண்டிருந்தவன் கண்ணில் பட்டது அவளது மலர்ந்த முகமும் சிரிப்பில் விரிந்த அதரங்களும்தான். அதையே வெறித்தவன் அதிலிருந்து மீளும் பொருட்டு, "முன்னெல்லாம் இந்த டைம் மிட்நைட் மசாலா தான் போடுவாங்க, இப்போ என்ன இப்படி போட்டு இம்சை பண்றாங்க மனுஷன் இருக்குற நிலைமை தெரியாம" என்று வாய்விட்டு புலம்பினான்.

அவனது புலம்பலில் மீண்டும் கோபமாக முறைத்தாள். இப்போ என்ன சொல்லிட்டோமேனு இப்படி முறைக்கிறா என்று யோசித்தவன் தான் சொன்னதை நினைவு படுத்தி பார்க்கவும் ஐயோ என்றானது.. இன்னைக்கு இவகிட்ட அடிவாங்காம போகமாட்ட போல சரண், சீக்கிரம் இடத்தைக் காலி பண்ணு என்று மனதிற்குள் நினைத்தவன், எழுந்து வேகமாக கிச்சனுக்குள் நுழைந்தான்.

புது மலர்கள் பூத்திடும் வேளை - மதுவதனி

# புது மலர்கள் பூத்திடும் வேளை…!

கணவனின் செயலில் மீண்டும் சிரித்த நிலா, அவனது செய்கையை ஒவ்வொன்றையும் நினைத்துப் பார்த்தாள். இவன் இப்படி நடந்து கொண்டால் என்ன அர்த்தம், தன்மேல் இருக்கும் கோபம் குறைந்து விட்டதா.. இல்லை குழந்தைக்காக அவனுக்கு அவனே சமாதானம் செய்து கொள்கிறானா என்று யோசித்தவள், பின் எதுவாக இருந்தாலும் இன்னும் சில நாட்களுக்குத்தானே, அதனால் இப்படியே இருக்கட்டுமே என்று நினைத்துக் கொண்டாள்.

அவளது நினைவைக் கலைக்கும் விதமாக சரண் அவளுக்கு சாப்பாடு எடுத்துக் கொண்டுவந்து நீட்ட, பதிலேதும் பேசாமல் வாங்கி அமைதியாக அனைத்தையும் காலி செய்தாள். அவளின் வேகத்தைப் பார்த்த சரண், பால் மட்டும் போதுமா என கேட்டதும் ஏன் முறைத்தாள் என்று இப்போது புரிந்தது.. அவளைப் பார்த்து அசடு வழிந்தான். ஆனால் அவள்தான் அவனை நிமிர்ந்து கூட பார்க்கவில்லையே.

மீண்டும் உள்ளே சென்றவன் ஆப்பிளை எடுத்துவந்து கட் செய்து அவளது தட்டில் வைத்தான். அப்போதுதான் அவனை நிமிர்ந்து பார்த்தவள் “ரொம்ப பசிச்சது அதான்” என்று அந்த ஆப்பிளையும் சாப்பிட அவனுக்கு என்ன சொல்வதென்றே தெரியவில்லை அமைதியாக அவளின் அருகில் அமர்ந்து அவளையே பார்த்துக் கொண்டிருந்தான்.

அவள் உண்டு முடித்ததும் அனைத்தையும் எடுத்துச் சென்று உள்ளே வைத்துவிட்டு வந்தவன் நிலாவின் அருகில் அமர, அவளோ உறக்கத்தின் பிடியில் சென்று கொண்டிருந்தாள். அவளை மெதுவாக எழுப்பி சிறிது நேரம் வெளியே அழைத்துச்சென்று தோட்டத்தில் நடக்க வைத்தான். அவளோ தூக்கம் வருது என சிறு பிள்ளையென சிணுங்க, அவளை அதட்டி உருட்டி நடக்க வைத்து உள்ளே அழைத்து வந்தான்.

மீண்டும் சோபாவிலே அமரவைத்தவன் கீழே உட்கார்ந்து அவளின் கால்களை பிடித்து விட்டான் அவள் தடுத்தும் கேட்காமல், இப்போது அவளுக்கு உறக்கம் எல்லாம் தூர போயிருந்தது. கணவனின் அருகாமையை ரசித்துக் கொண்டிருந்தாள். மனைவியின் பார்வையை கவனித்தவன் என்ன என்பதுபோல் புருவத்தை உயர்த்த, ஒன்றுமில்லை என்பதாக அவள் தலையசைத்தாள். ஆனால் சரணோ எழுந்து அவளது அருகில் அமர்ந்து அவள் கைகளை எடுத்துக்கொண்டு நிலாவையே பார்த்தான்.

புது மலர்கள் பூத்திடும் வேளை - மதுவதனி

“நிலா உனக்கு என்மேல் கோபமா..? என்னடா இத்தனை நாள் எட்டிக்கூட பார்க்காம இருந்துட்டு, இப்போ வந்து புதுசா அக்கறையா நடந்துக்கிறான் அப்படினு தோணுதா.. இப்படி நடந்துக்கிறது குழந்தைக்காக மட்டும் தான் என்று யோசிக்கிறியா… நான் செஞ்சது தப்புதான், அதுக்கு நீ எனக்கு என்ன தண்டனை கொடுத்தாலும் சரிதான், நான் மறுக்காம ஏத்துக்குவேன், ஆனா இன்னும் கொஞ்ச நாள் இப்படித்தான் இருக்க வேண்டியது வரும்.

நம்ம குழந்தை இந்த உலகத்துக்கு வரும்போது நாம ரெண்டு பேரும் சேர்ந்துதான் இருப்போம். என்னோட குழந்தையை என் கையில்தான் முதன்முதலில் வாங்குவேன், அதுவரைக்கும் நீ பொறுமையா இருக்கணும், எந்த தப்பான முடிவும் எடுக்க கூடாது, நாம பிரிஞ்சு இருந்து கஷ்டப்பட்டது எல்லாத்துக்கும் சேர்ந்து எனக்கு உன்கூடவும் குழந்தையோடவும் சந்தோசமா இந்த வாழ்க்கையை வாழனும், அது என்னோட ஆசை நான் சொல்றதை நம்புவே இல்லை.” என்று அவள் முகத்தை ஒருவித எதிர்பார்ப்புடன் பார்த்தான்.

அவனது முகத்தை பார்த்துகொண்டு இருந்தால் கூட போதும் என்று நினைத்திருந்தவளுக்கு, கணவனின் இந்த மாற்றம், அதுவும் தனக்காக என்பதில் மிகுந்த பரவசம் அடைந்தாள், அவள் மனதில் உண்டாகும் மகிழ்ச்சியை எப்படி தெரிவிப்பது என்று நினைத்தவள் சரணின் தோளில் சாய்ந்து அவளின் விருப்பத்தை அறிவித்தாள். சரணுக்கும் நிலாவின் நிலை புரிந்தே இருந்தது, அதனால் அவனும் அவளை அணைத்தபடியே மீண்டும் பேச ஆரம்பிக்க, அப்போது அவனது மனையாள் தன் விரல்களால் அவனின் வாயை மூடி வேண்டாம் என்பதுபோல் தலையசைத்து விட்டு மீண்டும் அவனது தோளில் சாய்ந்து கொண்டாள்.

சரணும் இப்போது இந்த நிமிடத்தை ரசிக்கலாம், இனிவரும் காலங்களிலாவது அவளை கண்கலங்காமல் பார்த்துக் கொள்ள வேண்டும் என்று நினைத்தபடி அவளது தலையை வருடிக் கொடுக்க ஆரம்பித்தான். அது காலம் கடந்த எண்ணம் என்று சரணுக்கு தெரியும் போது அவனின் நிலை என்னவாக இருக்கும்…?

அதன்பிறகு சரணின் எண்ணம் அனைத்தும் நிலாவே ஆக்கிரமிக்க, அவள் அவனிடம் பேசியதை நினைத்தான், அப்போது தான் அவள் ஒரு ஒதுக்கத்துடனும், ஒருமுறை கூட பாவா என்று அழைக்காததும் நினைவில் பட்டது.

புது மலர்கள் பூத்திடும் வேளை - மதுவதனி

அதற்கு காரணமும் நீதானே என்ற மனசாட்சியை அடக்கி விட்டு மனைவியைப் பார்க்க, அவள் சுகமான நித்திரையில் ஆழ்ந்திருந்தாள். அவளை பூவாக தன் கையில் ஏந்திக்கொண்டு ஏறினான் சரண் இனி வரும் விடியலாவது அவர்களது வாழ்க்கையில் வெளிச்சத்தைக் கொடுக்கட்டும் என்ற எண்ணத்துடன்…

இவர்களது அன்னியோன்யத்தை பார்த்த மல்லிகாவிற்கு கண்கள் ஆனந்தக் கண்ணீரை பொழிந்தன. ஹாலில் டிவி சத்தம் கேட்டதுமே எழுந்த மல்லிகா அடுத்து அவர்கள் என்ன செய்யப்போகிறார்கள் என்பதைக் கவனிக்க ஆரம்பித்தார். அதன்பிறகு நடந்ததை அவரால் நம்பவே முடியவில்லை இரண்டு வருடங்களாக பிரிந்து இருந்தவர்களா என்ற சந்தேகமே வந்துவிட்டது அவருக்கு… எப்படியோ இருவரும் நல்ல முறையில் குடும்பம் குழந்தை என்று வாழ்ந்தால் போதும் என்று நினைத்துவிட்டு அவரும் உறக்கத்தை தழுவினார்.

**வேளை தொடரும்………**

புதுமலர்கள் பூத்திடும் வேளை - மதுவதனி



## வேளை - 22

**********************************************************************************************************

நான்கு கண்ணில் இன்று ஒரு காட்சியானதே
வானம் காற்று பூமி இவை சாட்சியானதே
நான் உன்னை பார்த்தது பூர்வ ஜென்ம பந்தம்
நீண்ட நாள் நினைவிலே வாழும் இந்த சொந்தம்
நான் இனி நீ .. நீ இனி நான் வாழ்வோம் வா கண்ணா
நிலவு தூங்கும் நேரம்
நினைவு தூங்கிடாது
இரவு தூங்கினாலும்
உறவு தூங்கிடாது

இது ஒரு தொடர் கதை
தினம் தினம் வளர் பிறை
நிலவு தூங்கும் நேரம்
நினைவு தூங்கிடாது

**********************************************************************************************************

# புது மலர்கள் பூத்திடும் வேளை…!

வழக்கம் போல காலையில் எழுந்த மல்லிகா தன் வேலைகளைப் பார்க்க ஆரம்பித்தார். இதற்கிடையே நேற்றிரவு நடந்த சம்பவத்தை சிபிக்கும் ஷானவிக்கும் அழைத்துக் கூற மறக்கவில்லை. அதன் பிறகு தான் அவருக்கு நிம்மதியே வந்தது. அப்படியே சிபியும் மீனா வந்து ஆர்பாட்டம் செய்து விட்டுப் போனதைக் கூறவும், ஷானவியும் மல்லிகாவும் கொதித்துப் போயினர். முதலில் அவளுக்கு ஒரு முடிவு கட்ட வேண்டும். எதனால் அவள் இப்படி சொல்கிறாள் இவளுக்கு எப்படி அவ்வளவு தைரியம் வந்தது என்றெல்லாம் மூவர்குழு யோசிக்க ஆரம்பித்தது.

இன்று டாக்டர் ஷர்மியிடன் சென்று விசாரித்து விட்டு அதன் பிறகு இதைப்பற்றி பேசலாம் என்ற முடிவு எடுக்கப்பட்டது. ஷானவியும் சிபியும் டாக்டரைப் பார்க்க மருத்துவமனைக் கிளம்ப, மல்லிகாவும், பாதியில் விட்ட வேலைகளை தொடர்ந்தார்.

விடிந்து வெகு நேரமாகியும் எழுந்தே கீழே வராமல் இருந்த இருவரையும் நினைத்து சிரிப்புத்தான் வந்தது. நீண்ட நாட்களுக்குப் பிறகு நிம்மதியான உறக்கம் மேலே சென்று எழுந்துவிட்டார்களா எனப் பார்க்கலாம் என யோசித்தவர், எப்படியென்றாலும் கீழே தான வரவேண்டும் வரட்டும் என்று சமையலைத் தொடந்தார்.

எட்டு மணியாகி விட்டதை சரணின் செல்பேசி அலாரமாக ஒலித்துக் காட்ட, கண்களைத் திறக்காமலே போனைத் தேடியெடுத்து அலாரத்தை ஆப் செய்தான். பிறகு மீண்டும் மனைவியை அணைத்துக் கொண்டு தன் தூக்கத்தை தொடர, அலாரத்தின் ஓசையில் விழித்த நிலா, கதிரவன் தன் கதிர்களை அறைக்குள்ளும் பரவ விட்டிருப்பதை கண்டவள், கணவனைத் திரும்பி பார்த்தாள். அவன் உறங்குவது தெரிய, மெதுவாக அவன் கையணைப்பில் இருந்துவிடுபட முயற்சித்தாள் எங்கே அவன் தான் அவளை உடும்புப் பிடியாய் அணைத்திருந்தானே........

முகம் நாணத்தில் சிவக்க, "பாவா ப்ளீஸ், டைம் என்னனு பாருங்க, மல்லிம்மா என்ன நினைப்பாங்க, விடுங்க, நான் கீழே போறேன், நீங்க தூங்கி மெதுவா வாங்க" எனவும், அவளது பாவாவிலையே விழித்தவன், அவள் சொல்லும் முடிக்கும் போது மீண்டும் இறுக அணைத்திருந்தான்.

"ம்ம்.. பாவா..... என்று அவள் மீண்டும் சிணுங்க, அவன் மீண்டும் அணைக்க என தொடர்ந்தது. அவன் அணைத்ததில் நிலா அவன் மார்பிலையே அழுந்தியிருந்தாள்.

“நிலாம்மா நான் எவ்வளவு சந்தோசமா இருக்கேன் தெரியுமா, ரொம்ப சந்தோசமா இருக்கேன். நேத்திருந்து நீ ஒரு தடவை கூட பாவா-னு கூப்பிடலையா, நீ என்னை மன்னிக்கலையோ, என் மேல் ரொம்ப கோபமா இருக்கியோ என்றெல்லாம் யோசித்து பயந்து போயிட்டேன் இப்போதான் நிம்மதியா இருக்கு, தேங்க்ஸ் நிலாம்மா….” என்றான்.

நிலாவும் அப்போதுதான் யோசித்தாள், தன்னை அறியாமலே அவனை பாவா என்று அழைத்திருக்கிறோம் என்று அப்போது அவன் தேங்க்ஸ் எனவும் முறைத்தாள். அவளின் முறைப்பில் செய்த தவறு புரிய “சாரிம்மா இனி தேங்க்ஸ் சொல்லமாட்டேன் என்றான்.

“நிலா வயிறு ரொம்ப பெருசா இருக்கே, இப்படியெல்லாம் இருக்குமா, அகிலாவுக்கு இரண்டு குழந்தைக்கும் இப்படி இருந்தது இல்லை. உனக்குத்தான் இப்படி இருக்கு, ஒருவேளை ட்வின்ஸா, இல்லையே ஷர்மி அப்படின்னா என்கிட்ட சொல்லிருப்பாளே” எனவும் நிலாவிற்கு பயத்தில் வியர்த்தது. அவனிடம் உண்மையை சொல்லிவிடலாம் தான். ஆனால் எதற்காக மறைத்தாள் என்று தெரிந்தால் இன்னும் கோபப்படுவான் என யோசித்தவள் பேச்சை மாற்றும் பொருட்டு “உங்க பேபி உள்ளே இருக்குறதையே மறந்துட்டீன்களோ, நைட்டு வெறும் பால் மட்டும் போதுமானு கேட்டுறீங்க, எனக்கு பால் மட்டும் போதும் தான். ஆனா உள்ளே இருக்க உங்க பேபிக்குப் பத்தாதே, அப்புறம் ஒரே உதைத்தான் எனக்கு” என சோகமாக முடித்தாள்.

“ஹா ஹா” என்று சிரித்தவன் “நான் அதை யோசிக்கலடா, ரொம்பபடுத்துதா குட்டி, கொஞ்ச நாள் தானேப் பொறுத்துக்கோ, அப்புறம் நானே பார்த்துக்குறேன், என்று அவளது வயிறைத் தடவியவன் எழுந்து அவள் வயிற்றின் அருகே படுத்துக்கொண்டே குட்டிம்மா, அம்மா பாவம் டா, ரொம்ப படுத்தாதீங்க. அப்புறம் என்னைப் போட்டு டென்சன் ஏத்துவா, அப்பா பாவம்தானே சமத்தா இருந்துட்டு வந்துடுங்க, உங்களுக்கு என்ன செய்யனுமோ என்கிட்ட செய்யலாம். அப்பா உங்களுக்காக வெயிட் பண்ணிட்டு இருக்கேன் சீக்கிரம் வந்துடுங்க செல்லம்” என இதழ் பதிக்க அதில் குறுகுறுப்பை உணர்ந்த நிலா…

“பாவா எனக்கு பசி எடுக்குது, இப்படியே இருந்தீங்க, அப்புறம் உங்களைத்தான் கடிச்சுத் திங்கப்போறேன்”.

புது மலர்கள் பூத்திடும் வேளை - மதுவதனி

“என்னது பசி எடுக்குதா, முன்னாடியே சொல்றதுக்கு என்ன, மணி பாரு எவ்ளோ ஆச்சுனு, நீ ப்ரஷ் பண்ணு, நான் மல்லிம்மாகிட்ட மேலேயே கொண்டு வரச் சொல்றேன், அப்புறம் குளித்து ரெடியாகு”

“அய்யோ…… அதெல்லாம் வேணாம், பொறுத்துக்குற அளவு பசிதான். நான் கிளம்பி கீழே போறேன் முதல்ல, அப்புறம் நீங்க வாங்க” என்றவள் அவன் நகர்ந்த நேரம் பார்த்து அவனிடம் இருந்து விலகி பாத்ரூமிற்குள் நுழைந்தாள். அவளது செயலில் சிரித்தவன், பின் படுக்கையை ஒதுக்கிவிட்டு தன் ஆபிஸிற்கு போன் செய்து மதியம் தான் வருவேன் என்று கூறி சில ஆர்டர்களையும் பிறப்பித்துவிட்டு சிபிக்கு அழைத்தான்.

“அவனோ, சரண் ஹலோ சொல்வதற்கு முன் கங்க்ராட்ஸ் அண்ணா செகன்ட் ஹனிமூன் சூப்பரா கொண்டாடுறீங்க போல என்றதும் வாய்விட்டுச் சிரித்தவன்.

“என்னடா சொல்ற, அப்படியெல்லாம் ஒன்னுமில்லை, உனக்கு யாரு சொன்னா…….?”

“ஹா ஹா அதெல்லாம் உடனுக்குடனே அப்டேட் ஆகிடும் எங்களுக்கு…. ஹால்ல செமையா ஒரு ரொமான்ஸ் சீனே போச்சாமே… அப்படியா…..?

“டேய்…. அதுக்குள்ள மல்லிம்மா உனக்கு சொல்லிட்டாங்களா ஏண்டா இப்படி, சும்மா கிண்டல் பண்ணிட்டு இருக்க….. சரி எழுந்துட்டியா…….?

"அதெல்லாம் நாங்க எழுந்துட்டோம் நாங்க என்ன மிட்நைட் மசாலா பார்க்குற ஆளா…. அதைப் பார்த்துட்டு எட்டு மணி வரைத் தூங்குறதுக்கு………”

“ஏண்டா படுத்துற, உனக்கு வேலை இல்லையா, இப்படி என்னைக் காலையிலையே கலாய்க்குற”

“பின்ன இரண்டு வருசமா முகத்தை ஒன்றரை முழத்துக்கு தூக்கி வைச்சுட்டு அலைஞ்சவரு, ஒரே நாள்ல தாயே சரணம்னு பல்டி அடிச்சா கலாய்க்கமா என்ன

செய்வாங்க இன்னும் ஒருத்தி பாக்கி இருக்கா, இப்போ வருவா உங்கள் அருமைத் தங்கை” என்றதும்.

“டேய் போதும் விட்டுடு, அவ உனக்கு மேலே இருப்பா, நான் அப்புறம் கால் பன்றேன்” என்று சிபி பதில் சொல்லு முன் போனை அணைத்திருந்தான்.

“ஷப்பா………., இதுங்க எங்கே இருந்து இப்படி ஆராம்பிச்சதுங்க என்று புலம்பியவன் குளியலறைக் கதவு திறக்க பார்வை அங்கே சென்றது.

நிலா தான், வெளியே வந்தவள் அப்படியே கட்டிலில் சாய “என்ன நிலா, நிலாம்மா என்னடா செய்யுது”. என்று பதறினான் சரண்.

“ஒன்னுமில்லைங்க கொஞ்சம் தலை சுத்துற மாதிரி இருந்துச்சு” அவ்ளோதான், ஏதாவது சாப்பிட்டா சரியாப் போகும்,”

"ஏண்டி அறிவில்லை, நான் தான் முதல்ல சாப்பிடு அப்புறம் மெதுவா குளிக்கலாம் என்று சொன்னேன் தானே, இப்போ வெளியே வந்ததுனால பரவாயில்லை, உள்ளேயே மயங்கி விழுந்து இருந்தா என்ன செய்றது. இனிமேல் இப்படி பண்ணாத”, என்றவன்.

அவளைக் கீழே அழைத்துச் சென்று மல்லிகாவிடம் விசயத்தைக் கூறி கவனிக்கச் சொன்னான். மல்லிகாவும் அவர் பங்குக்கு அவளைத் திட்டிக் கொண்டே டிபனை எடுத்து வைத்தார்.

மேலே வந்த சரண் அவசர அவசரமாக குளித்து கிளம்பி கீழே வந்தான். அப்போது மல்லிகா நிலாவிடம் பேசிக் கொண்டிருந்தார்.

“தேனும்மா நைட்டு நல்லா சாப்பிட்டியா. என்ன சாப்பிட்ட சரண் வருவதை உணர்ந்தவள், “அதுவா மல்லிம்மா நூடுல்ஸ்தான் சாப்பிட்டேன் என்றதும். என்னது நூடுல்ஸா என்ன வயித்துல இருக்க பிள்ளை மேலே அக்கறையே இல்லையா,

புது மலர்கள் பூத்திடும் வேளை - மதுவதனி

# புது மலர்கள் பூத்திடும் வேளை…!

எத்தனை தடவை சொல்லிருக்கேன் இந்தமாதிரி சாப்பாடெல்லாம் சாப்பிடக் கூடாதுனு, கேட்கவே மாட்டியா வயிறு வலிக்கும், வயித்துக்கு சேராமா போயிடும் இதெல்லாம் தெரியாதா….. என்றவர், சரண் தான் உனக்கு செஞ்சுக் கொடுத்தானா….. அவனுக்கும் அறிவே இல்லை, இரண்டு பேரும் சேர்ந்து புள்ளையை ஒன்னுமில்லாம ஆக்கிடாதீங்க என்று பொரிந்து தள்ளி விட்டார்.

'ஆகா இவ நம்மளைத்தான் மாட்டி விட்டுருக்கா….. ஆனாலும் இந்த மூணு பேரும் இவளுக்கு ஓவரா ட்ரெயினிங்க் கொடுத்துட்டாங்க போலையே.

முன்னெல்லாம் ரொம்ப அமைதியா இருப்பா, இப்போ கிடைக்கிற கேப்புல எல்லாம் நம்மளை காமெடி பீஸ் ஆக்கிடுறாளே என்று மனதிற்குள் புலம்பியவன் மல்லிகாவைப் பார்த்து அசடு வழிந்தவன் "நூடுல்ஸ் வேணுமா என்று தான் கேட்டேன். ஆனா இடியாப்பத்தை தான் எடுத்துக் கொடுத்தேன்" என்றான். பொங்கிய சிரிப்பைக் கஷ்டப்பட்டு அடக்கியவள், உணவில் கவனத்தை செலுத்தினாள். அவனும் 'செய்யுறதையும் செஞ்சுட்டு பாரு கண்டுக்குறாளா பாரு' என்று மனதிற்குள் வசைபாடிய படியே அவளின் எதிரில் அமர்ந்தான். மல்லிகாவும் இருவரையும் பார்த்து நமட்டுச் சிரிப்பு சிரித்தவர் அவனுக்கும் தட்டை வைத்து பரிமாறினார். பின் இருவரும் பேசட்டும் என்று நினைத்து அவ்விடத்தைவிட்டு நகர்ந்தார்.

சாப்பிட்டு முடித்த சரண் நிலாவைப் பார்த்து நான் கிளம்பறேன் நிலா…. இன்னைக்கு ஒரு மீட்டிங்க் இருக்கு 10 மணிக்கு அது அட்டென்ட் பண்ணிட்டு அப்படியே ஆபிஸ் போயிடுவேன், சிபியும், ஷானுவும் ஏதோ வேலையா வெளியே போறாங்களாம். ஈவினிங் வரேனு சொன்னாங்க, நீ ரெஸ்ட் எடு, நான் ஆபிஸ் போய்டு போன் பண்றேன்" என்று பேசிக் கொண்டிருந்தவன் அவள் முகத்தில் தோன்றிய மாறுதல்களைப் பார்த்து "என்ன நிலா" என ஒன்றுமில்லை என்பது போல் தலையசைத்தாலும் அவளது விழிகள் கண்ணீரை சுரந்து கொண்டிருந்தது.

அதில் அவளை அழைத்து தன் மடியில் இருத்திக் கொண்டவன் "என்மேல் நம்பிக்கை இருக்குல்ல" என்றதும் அவள் தலை வேகமாய் ஆட, அப்படின்னா இன்னும் கொஞ்சமே கொஞ்ச நாள் தான், அதுவரைக்கும் பொறுமையா இரு, அதற்கப்புறம் என்ன தடை வந்தாலும், எத்தனைப் பிரச்சினை வந்தாலும் நம் இருவரையும் பிரிக்க முடியாது புரியுதா எனவும் சரி என்று தலையசைக்கவும், அவளது நெற்றியில் முத்தமிட்டுக் கிளம்பினான் சரண்,

புதுமலர்கள் பூத்திடும் வேளை - மதுவதனி

# புது மலர்கள் பூத்திடும் வேளை...!

கொஞ்சமே கொஞ்ச நாள் என்றதும் நிலாவின் மனதில் சிறுவலி வந்து போனது. கணவனை ஏமாற்றுகிறோம் என்றென்ன........டாக்டர் ஷர்மியின் அறையில் அமர்ந்திருந்த சிபியையும், ஷானவியையும் பார்த்த ஷர்மி கோபமாகப் பேச ஆரம்பித்தார்.

“வாங்க Mr. சிபி நந்தன் அண்ட் Miss. ஷானவி. எங்கே இந்தப் பக்கமெல்லாம் உங்க காத்து அடிக்குது, அதிசயமா இருக்கு”

“அது அண்ணியோட ஹெல்த் பத்தி விசாரிச்சுட்டு போகலாம்-னு வந்தோம்”

“அண்ணியா, யாரு மீனாவா, அவளுக்கு என்ன நல்லாத்தானே இருக்கா......”

“அக்கா ப்ளீஸ் விளையாடாதீங்க, சொல்லுங்க ப்ளீஸ்” , இப்போது ஷானவி.

“என்னம்மா இது, நான் ஏன் விளையாடறேன், நான் ரொம்ப பிஸிம்மா. நீங்க வந்த விசயத்தைச் சொல்லிட்டு சீக்கிரம் கிளம்புங்க

“அக்கா என்ன கோபம், யாருமேல இந்தக் கோபம், சொன்னாத்தானே தெரியும். ப்ளீஸ் ஏற்கனவே நிறைய ப்ராப்ளம், அதையே எப்படி சரி பண்றதுன்னு தெரியாம முழிச்சிட்டு இருக்கோம். நீங்களும் டென்சன் பண்ணாதிங்க” .

“அவள் அமைதியாக இருக்கவும் என்ன பிரச்சினை அக்கா அண்ணிக்கு டெலிவரில பிராப்ளமா, சொல்லுங்க அக்கா......”

“இது தான் நிலாவோட ரிப்போர்ட் நீங்க ரெண்டு பேரும் படிச்சிருக்கீங்க தானே நீங்களே தெரிஞ்சுக்கோங்க” அந்த ரிப்போர்டை வாங்கிப் படித்தவர்கள் முகம் குழப்பத்தைக் காட்டியது. ஏனென்றால் அதில் எல்லாமே நார்மலாக இருந்தது. அவர்கள் அதே குழப்பத்துடன் ஷர்மியைப் பார்க்க, அவர் கண்களை மூடி சீட்டில் சாய்ந்திருந்தார்.

புது மலர்கள் பூத்திடும் வேளை - மதுவதனி

# புது மலர்கள் பூத்திடும் வேளை…!

“ஷர்மிக்கா என சிபி அழைக்கவும், அவனை நிமிர்ந்து பார்த்தவர்” இந்த ரிப்போர்ட்டைத் தான் உங்க எல்லாரிடமும் காட்ட சொல்லிருக்கா…. நீங்க இப்படி வருவீங்க, வந்து என்கிட்ட விசாரிப்பீங்கனு முன்னாடியே அவளுக்குத் தெரிஞ்சிருக்கு, அதான் இப்படி செய்யா சொல்லிருக்கா..” அப்போ இது பொய்யான ரிப்போர்ட்ஸ்னா, உண்மையான ரிப்போர்ட் என்ன, அப்படின்னா நாங்க நினைச்ச மாதிரி அவங்களுக்கு ஹெல்த்ல ப்ராப்ளம்தான் இல்லையா, அண்ணி ஏன் இப்படி செஞ்சாங்க” என்று வாய்விட்டு புலம்பினான் சிபி.

இங்கே ஏண்டா புலம்புற, போ, போய் உன்னோட அண்ணன்கிட்ட கேளு, உருகி உருகி காதலிச்சிட்டு, கல்யாணமும் பண்ணிட்டு, எதையோ பார்த்து நீ துரோகம் செஞ்சுட்ட அப்படின்னு அவளை போட்டு வதைச்சான் பாரு அவனைப் போய்க் கேளு.

பாரின் போயிட்டு வந்ததும் சும்மா இல்லாம, அந்த மீனாவை சுரண்டிவிட்டு, இவளையும் இப்படி பண்ணிட்டான் பாரு, அவனைப் போய்க் கேளு, நிலா இங்கே எப்படி வந்தால் தெரியுமாடா, வெறும் எலும்பு மட்டும் தான் இருந்தது உடம்புல, அப்படி ஒரு மெலிவு, வீட்டுல உன்னோட அக்கா இருக்காளா இல்லையா? அவ கவனிக்க மாட்டாளா…

யாருமே இல்லைனு தானே அந்தப் பொண்ணை ஆளாளுக்கு இப்படி கஷ்டப்படுத்துறீங்க, என்னடா பாவம் பண்ணா, இப்படி பண்றான் உங்க அண்ணன்” என்று ஷர்மி பொறுமையின்றி கத்தினார். “ அக்கா என்ன சொல்றீங்க, அண்ணா என்ன பண்ணான், இதுக்கு மேலையும் என்னால பொறுமையா இருக்க முடியாது, சொல்லுங்கக்கா…. என சிபி கேட்டதும், நிலா “யாரிடமும் உண்மையைச் சொல்லக் கூடாதென்று கேட்டுக் கொண்டாள். ஆனால் உங்களுக்கு கண்டிப்பாக தெரிந்தே ஆக வேண்டும்” என்று கூறியவர் மற்றொரு ரிப்போர்ட்டை எடுத்துக் கொண்டு வந்து கொடுத்தார்.

“இது தான் நிலா ரிப்போர்ட் பாருங்க” , எனவும் அந்த ரிப்போர்ட்டை பதட்டமாக வாங்கிப் பார்த்தவர்கள் உண்மையிலேயே அதிர்ந்து தான் போனார்கள்…

புதுமலர்கள் பூத்திடும் வேளை - மதுவதனி

# புது மலர்கள் பூத்திடும் வேளை…!

“என்ன கேட்பது என்று தெரியாமல் ஷர்மியின் முகத்தையே பார்க்க, ஒரே ஷாக்கா இருக்கா, பின்ன இருக்காத நீங்கெல்லாம் நினைக்கிற மாதிரி ஒரு குழந்தை இல்லை ட்வின்ஸ் இரட்டைக் குழந்தை பிறக்கப் போகுது என்றவர் நிலாவைப்பற்றி கூற ஆரம்பித்தார்.

நிலா இங்கே வரும்போது த்ரி மந்த்ஸ் ஸ்டார்டிங்ல இருந்தா. நான் செக் பண்ணிட்டு இதை அபார்ட் பண்ணிடலாம் என்றேன். ஆனா அவளோ ஏன் எதுக்கென்று ஆயிரம் கேள்விகள் குழந்தை நல்லமுறையில் இல்லையோ என்றெல்லாம் பயந்து கேட்டாள். அன்றே ஆம் என்று சொல்லியிருக்கலாம்.

ஏதோ வேகத்தில் இரட்டைக் குழந்தைகள் இரண்டும் நன்றாக இருக்கிறது. ஆனால் உன் உயிருக்குத்தான் ஆபத்து, கரு கர்ப்பப்பையில் வளராமல் கர்ப்பப் பையில் உள்ளே நுழையும் ஒரு குழாயில் வளர்கிறது. இதனால் குழந்தை வளர வளர அதான் அருகிலையே பேலன்ஸ் செய்வது போல் ஒரு கட்டியும் வளர்கிறது. இதுதான் ஆபத்தானது இந்தக் கட்டி வளர்வதும், நீ உன் வாழ்நாட்களை எண்ணுவதும் ஒன்று. அதனால் இந்தக் குழந்தைகளை அபார்ட் பண்ணிடலாம்.

உனக்கும் வயசு இன்னும் இருக்கு, கொஞ்சம் உடம்பைத் கவனித்துவிட்டு அதன் பிறகு பார்க்கலாம் என்று எவ்வளவோ எடுத்து சொல்லியும் கேட்கவே இல்லை. இனி ஒரு குழந்தைக்கு வாய்ப்பே இல்லை, எனக்கு இந்தக் குழந்தைகள் கண்டிப்பாக வேண்டும், நீங்கள் இந்த உதவியை செய்தே ஆக வேண்டும். இல்லையென்றால் நான் யாருக்கும் தெரியாமல் எங்கேனும் போயிடுவேன் என்று சொல்லி மிரட்டி கெஞ்சும் போது என்ன செய்ய, அதே சமயம், அவளுக்கு என்னால முடிஞ்சளவுக்கு சரியான அளவுல ட்ரீட்மென்ட் கொடுத்துட்டு இருக்கேன். வலி வரும் வரைப் பொறுத்திருக்கக் கூடாது. நைன் மந்த் ஸ்டார்ட் ஆகும் போதே சிசேரியான் பண்ணிடனும் என்று சொல்லி இருக்கேன் எல்லாவற்றிற்கும் சரி என்றுதான் சொல்லியிருக்கிறாள்.

பிறகு ஒரு நாள் மல்லிகாவை பார்த்தேன். அவர்தான் நிலாவைப் பற்றியும், சரணின் இந்த பிரிவு பற்றியும் கூறினார். என்ன சொல்வது என்றே தெரியவில்லை என்னால் முடிந்தளவு அவர்கள் மூவரையும் காப்பாற்ற வேண்டும் என்று உறுதியுடன் இருக்கிறேன். ஆனால் நிலா என்னைக் காப்பாற்றுவதை முதலாக நினைத்து குழந்தைகளை விட்டுவிடாதீர்கள் என்று சொன்னாள், இல்லைக் கண்டிப்பாக உங்கள் மூவரையும் காப்பாற்றுவேன் என்று உறுதி அளித்திருக்கிறேன்.

இது தான் கடவுள் எனக்கு வைத்த பரிட்சையோ என்னவோ, இதில் கண்டிப்பாக நான் ஜெயிக்க வேண்டும் என்று கூறினார்.

“உங்க ரெண்டு பேருக்கும் தெரிஞ்சதும் நல்லதுதான். இனி வீட்டுலயும் அவளை கேர்புல்லா பார்த்துப்பீங்க, சரணிடம் சொல்வதும் சொல்லாததும் உங்கள் விருப்பம். பட் எது செஞ்சாலும் நிலாவுக்கு தெரியாம பண்ணுங்க, கடைசி நிமிஷம் வரைக்கும் தெரிய வேண்டாம்.

அப்புறம் டெலிவரில ஒத்துழைப்பு கொடுக்காம ப்ராப்ளம் பண்ணிருவா. சோ உங்களுக்கே தெரிஞ்சமாதிரி காட்டிக்காதீங்க, இல்லன்னா உங்களோடவும் அவ டிஸ்டன்ஸ் மெயின்டன் பண்ணாலும் ஆச்சரியப்படுறதுக்கில்லை. ஓகே அடுத்து செக்கப் வரும்போது பார்க்கலாம். இப்போ வரைக்கும் எல்லாம் நார்மலா தான் போயிட்டு இருக்கு.”. என்று அவர்களுக்கு நிலாவைப் பற்றி முழு தகவலையும் கொடுத்தார்.

அடுத்து என்ன செய்ய என்ற கேள்வியே இருவரையும் பைத்தியம் ஆக்கியது. ஷர்மி கூறிய செய்தி அவர்களுக்கு மிகவும் பயத்தைக் கொடுத்தது. அதே சமயம் நிலாவின் மேல் கோபத்தையும், பரிதாபத்தையும் வரவைத்தது. ஷர்மியைப் பார்த்துவிட்டு வெளியே வந்தவர்கள் வேறெங்கும் செல்லாமல் அந்த மருத்துவமனை வளாகத்திலேயே இருந்த பூங்காவில் அமர்ந்திருந்தனர். இதை சரணிடம் சொல்லலாமா வேண்டாமா என்று நினைத்தவர்கள், இப்போதைக்கு வேண்டாம் நிலாவின் பிரச்சினையை முழுதாக முடிக்கட்டும், அதோடு இன்றிரவு அகிலாவும் அவரது கணவனும் ஏற்காட்டில் இருந்து திரும்பிகின்றனர்.

அடுத்தநாள் இவர்கள் இருவரும் பெங்களூர் கிளம்ப வேண்டும். அதனால் இப்போதைக்கு எதையும் சொல்லவேண்டாம் நிலாவின் பிரச்சினையை முழுதாக முடிக்கட்டும், இந்த மீனாவிற்கும் ஒரு நிரந்தர முடிவை கொண்டுவரட்டும், அதுவரை எதுவும் தெரியவேண்டாம் மல்லிகாவை தவிர என்ற உறுதியை எடுத்தனர். அதன்பிறகு இருவருக்கும் மனம் அமைதி பெற, தேனுவைப் பார்க்க கிளம்பினர்.

# புது மலர்கள் பூத்திடும் வேளை…!

நாட்கள் அதன் வேகத்தில் கழிய சிபியும் ஷானுவும் பெங்களூர் வந்து முழுதாக ஒருவாரம் ஓடியது. இருவரும் ட்ரைன் ஏறுவதற்கு முன் அகிலாவிடம் முழு உண்மையையும் கூறாமல் தேனுவின் உயிருக்கு ஆபத்து என்று கூறி அதுவும் மீனாவால் தான் என்று கூறினர். அதனால் தேனுவை தொல்லை செய்யாமல் இருக்கும்படியும் முடிந்தால் உதவி செய்யும்படியும் அகிலாவிடம் கூறி விடைபெற்றனர்.

சரணும் அகிலாவிடம் என்ன கூறினானோ அன்றிலிருந்து நிலாவுடனே தங்க ஆரம்பித்தான். இது அகிலாவின் கணவனுக்கும், மீனாவிற்கும் பெருத்த அதிர்ச்சியைக் கொடுத்தது.

அகிலாவிடம் முறையிட அவள் இது சரணோட வாழ்க்கை, அவன்தான் முடிவு எடுக்கணும், அவனோட முடிவு நிலாவோடு சேர்ந்து வாழ்வது என்றால் அதை நான் ஆதரிக்கத்தான் செய்வேன். அவன் லைப்பில் நான் ஒன்னும் பண்ண முடியாது, எனக்கு என் தம்பியோட வாழ்க்கை ரொம்ப முக்கியம் என்று கூறி முடித்து விட்டாள்.

மீனாவோ தன் அண்ணனை நச்சரிக்க, அவரும் பொறுமையாய் இரு, நமக்கும் ஒரு சந்தர்ப்பம் கிடைக்கும் அப்போது எதாவது செய்யலாம் என்று அந்தநேரம் அவளது வாயை அடைத்து விட்டான்.

**வேளை தொடரும்……..**

புதுமலர்கள் பூத்திடும் வேளை - மதுவதனி




## வேளை - 23

*****************************************************************************************************

ஒங் கண்ணு ரெண்டும் துடிக்குதடி
கல்யாண மேளம் அடிக்குதடி

ஆசையை நெஞ்சில் சுமந்தபடி
அண்ணாந்து பாக்கும் இளைய கொடி

பொறக்காமத்தான் ஒம்ம பாத்தேன்
ஒமக்காகத்தான் கன்னி காத்தேன்

ஒம் மடியா நெனச்சு தல சாச்சேன்
ஆவாரம் பூவு ஆறேழு நாளா

நீ போகும் பாதையில் காத்திருக்கு
என் நுனி மூக்கு ஏனுங்க வேர்த்திருக்கு

*****************************************************************************************************

# புது மலர்கள் பூத்திடும் வேளை…!

மீனாவின் நடவடிக்கைகளை அவளறியாமல் சரண் கண்காணிக்க ஆள் வைத்தான். மீனாவும் அவளது அண்ணன் கூறியது போல் சில நாட்கள் அமைதியாகப் போகட்டும், அதன் பிறகு தன் வேலையைக் காட்டலாம் என்று முடிவு செய்தாள். ஆனால் சரண் அங்கேயே தங்கிக் கொள்வது அகிலாவின் மூலம் தெரியவும் கொதித்து போனாள் எது நடக்கக் கூடாது என்று நினைத்தாளோ. அதுவே நடக்கிறதே இனியும் பொறுமையாக இருக்க முடியாது. அண்ணனையும் நம்ப முடியாது, என்னதான் தங்கை மேல் பாசம் என்றாலும் அண்ணியின் பேச்சை மீறி அண்ணன் எதுவும் செய்ய மாட்டான் என்றும் தெரியும். அதனால் அவனை மீறியே நிலா விசயத்தில் களம் இறங்க முடிவு செய்தாள் மீனா.

நிலாவும் சரணும் ஒன்றாக வாழ்த்து வந்து இன்றோடு இருபது நாட்கள் ஆகியிருந்தன. வளைகாப்பும் குறித்த நேரத்தில் வைக்க முடியாமல் நிலாவின் ஏழாம் மாதம் முடியும் நாளில் வைப்பதற்கு ஏற்பாடானது.

அதற்கு இன்னும் மூன்று நாட்களே ஆனது. நிலாவுக்கு வேண்டிய நகை புடவை அனைத்தும் அகிலாவும் ஷானவியின் அம்மாவுமே வாங்கினர். அகிலா, ஷானவியின் அம்மாவிடம் சில விசயங்களைக் கூறி மன்னிப்புக் கேட்க, அதற்கு மேலும் கோபத்தை இழுத்து வைக்க முடியாமல், அகிலாவை அணைத்துக் கொண்டார். சரணும் மனைவிக் கென்று சில நகைகள் வாங்கினான். ஷார்மியையும் அழைத்தான். அவரும் வருவதாகக் கூறி இருந்தாள். வீட்டளவில் மட்டுமே சிறியதாக வைக்கலாம் என்று நினைத்தார்கள்.

ஆனால் அக்கம் பக்கம், ஆபிஸில் உள்ளவர்கள், அகிலாவின் தோழிகள், ஷானுவின் சொந்தங்கள் சரணின் நண்பர்கள் என்று அனைவரும் வருவது தெரிய, பெரிய பங்சனாகவே நடத்தலாம் என்று முடிவெடுத்தனர். அதுவே மீனாவிற்கு வசதியாகிப் போனது. இதுதான் சரியான நேரம் நிலாவை சரணின் வாழ்க்கையில் இருந்து வெளியேற்ற என்று நினைத்தாள். அதற்கு அவளுக்கு கிடைத்த துருப்புச் சீட்டு அந்த பத்திரிக்கை செய்தியும், பத்திரிக்கை செய்தியில் இடம் பெற்றிருந்த ஆண்களின் இருந்த ஒருவன் மீனாவின் நண்பன். அதனால் எல்லோர் முன்னாடியும் நிலாவைப் பற்றிக் கூறினாள், அவளை எப்படியும் ஒதுக்கி வைத்து விடுவார்கள், தான் சுலபமாக அவன் வாழ்வில் நுழைந்து விடலாம் என்று கணக்குப் போட்டாள்.

மீனாவின் எண்ணம் நிறைவேறுமா.....? சரண் நிலாவை விட்டு நிரந்தரமாகப் பிரிந்து விடுவானா...

# புது மலர்கள் பூத்திடும் வேளை…!

அதிகாலையில் அந்தப் பண்ணைவீடு மிகவும் அழகாக காட்சியளித்தது. இதோ, அதோ என்று நிலாவின் சீமந்தமும் இன்று ஆராவாராமாக நடைபெற இருக்கிறது. முதல் நாள் இரவு தான் ஷானுவும் சிபியும் வந்து சேர்ந்தனர். அதன் பிறகு அங்கு கலாட்டக்களுக்கு கேட்கவா வேண்டும், சிரிப்பும், மகிழ்ச்சியும், குதுகலமுமாய் வேலைகள் நடைபேற்றன. நிலாவிற்கு தான் பதட்டமாக இருந்தது. அவர்களின் திருமணம் விஜயாவின் உடல்நிலையை முன்னிட்டும், திருச்சியை முற்றிலும் மறுத்தாலும் தேனியிலேயே நடந்தது. அதனால் பெரிதாக பயம் இல்லை அவளுக்கு.

ஆனால் இன்றோ தனக்கென தன் உறவினர்கள் யாருமே இல்லாமல், தனியாக இருப்பது மிகவும் கொடுமையாக இருந்தது, என்னிடம் உனக்கு விருப்பமா என்று கேட்டிருந்தாள், வேண்டாம் என்றுதான் சொல்லியிருப்பேன்' என யோசித்தவள்.

அதுதான் யாருமே கேட்கவே இல்லையே பிறகேன் இந்த எண்ணம் என்று தன் போக்கில் நினைத்துக் கொண்டிருந்தாள். அப்போது உள்ளே வந்து ஷானு நிலாவின் நிலையறிந்து சரணை அழைத்து, நிலாவைப் பார்க்க சொன்னாள், சரணும் உடனே அறைக்கு வர, அங்கு யோசனையின் நாயகியாக அவனின் நிலா நன்றிருந்தாள்.

உள்ளே வந்து அவளது தோளைப் பிடித்து அழுத்தியவன் "நிலாம்மாவுக்கு என்ன யோசனை, சொன்னா நானும் ஹெல்ப் பண்ணுவேன், இன்னும் ரெடியாகலையா மேடம், ஒன்பது மணிக்கே பங்சன் ஸ்டார்ட் ஆகிரும். இப்போவே மணி ஏழு, இன்னும் கொஞ்ச நேரத்தில் ஆளுங்க வர ஆரம்பிச்சுடு வாங்க, என்றான்.

"ம்ம், கிளம்பறேன், கொஞ்சம் டையர்டா இருக்கு, அதான் அப்படியே நின்னுட்டேன்".

"எப்போ நிலா என்னிடம் உண்மையை பேசுவ, ஏன் என்கிட்ட இவ்ளோ பயம், நான் உன்னிடம் கோபப்பட்டது தப்புத்தான். ஆனால் அதுக்கப்புறம் நான் இப்படி நடந்துகிட்டதுக்கு ஒரு காரணம் இருக்கு, எப்பவுமே, உன்னை நான் காயப்படுத்த விரும்பினதே இல்லை. அன்றைக்கு நீ என்னிடம் மறைச்சுட்ட அப்படின்னுதான் கோபம் என்றவன் அன்றைய நாளை நினைவு கூர்ந்தான்.

# புது மலர்கள் பூத்திடும் வேளை…!

சரண் நிலாவின் எந்த ஒரு காரணங்களையும் பொருட்படுத்தாமல் தன் திருமணத்தை நடந்த முடிவு செய்தான். அவனால் மட்டுமே அவளை மகிழ்ச்சியாக வைத்துக் கொள்ள முடியும் என்ற அபரிமிதமான நம்பிக்கை தான் காரணம். அவள் கூறிய காரணங்களுக்கெல்லாம் சுலபமாக தீர்வு கூறி திருமணத்தை உறுதி செய்தான். அதன் பிறகு இரண்டு மாதங்கள் கழித்து திருமண நாள் குறிக்கப்பட்டது. அகிலாவும், அவளது கணவரும் சென்று விஜயாவிடம் பேசி முடிவெடுத்தனர். விஜயாவும் நிலாவைப் பற்றி அனைத்தையும் கூறினார். பத்திரிக்கைச் செய்தி உட்பட.

திருமண நாளுக்கு இடையேயான நாளில் இருவரும் போனில் பேச ஆரம்பித்தனர். முதலில் தயங்கிய நிலாவும் சரணின் கரைகானாத காதலில் கரைந்துதான் போனாள். அவளும் அவனிடம் உரிமையாகப் பேசி பழக ஆரம்பித்தாள். இடையில் விஜயாவிடம் சரணிடம் உண்மையைக் கூறிவிடலாம்.

அவரிடம் பேசும்போது குற்ற உணர்ச்சியாக இருக்கிறது என்று கூற, அதெல்லாம் வேண்டாம் என்று அந்தப் பேச்சிற்கு அன்றே முற்றுப் புள்ளி வைத்தார். ஆனால் சரணிடம் சொல்ல முடியாமல் நிலா தவித்ததை அவன் உணர்ந்தது போல, “நிலா நீ என்னிடம் எதாவது சொல்லனுமா, சொல்ல தயங்குறியா அப்படி இருந்தா, அதெல்லாம் தேவையே இல்லை, என்னிடம் உனக்கு அந்த தயக்கமும் வேண்டாம், நீ என்ன நினைக்கிறாயோ, என்ன சொல்ல விரும்புகிறாயோ அதை என்னிடம் தயங்காமல் சொல்லு” என்றான் சரண் ஒரு நாள்.

அதில் அவளது குற்ற உணர்ச்சி பன்மடங்காகப் பெருக “ஒன்றுமில்லை” என்று மட்டும் கூறி விடிய விடிய தலையணையை நனைத்தாள். அதன் பிறகு அவனிடம் சாதாரணமாக பேச பல நாள் ஆனது. அவன் ஏனென்று கேட்டதற்கு ஆசிரம வேலையைக் காரணம் காட்டினாள். உண்மையும் அதுதான், அதனால் சரணுக்கு சந்தேகம் வரவில்லை நாட்கள் கடந்து திருமண நாளும் இனிதாக விடிந்தது சரணுக்கு மகிழ்ச்சியாகவும், நிலாவிற்கு பதட்டமாகவும்.

மணமகள் அறையில் அமர்ந்திருந்த நிலாவைப் பார்க்க அகிலா உள்ளே வந்தவர். “தேனு ரெடியாகிட்டியா, இவள் என்னோட நாத்தனார், கணவரோட தங்கை பேரு மீனா…. வெளியூரில் இருந்தாள். இப்போ உங்க திருமணத்திற்குத் தான் வந்திருக்கா, உன்னை பார்த்தது இல்லையா, அதான் அழைச்சுட்டு வந்தேன்” எனவும்.

புதுமலர்கள் பூத்திடும் வேளை - மதுவதனி

# புது மலர்கள் பூத்திடும் வேளை…!

“சரிங்கண்ணி” என்றவள் மீனாவைப் பார்த்து சினேகமாக புன்னகைத்தாள். ஆனால் அவள் கண்கள் குரோதமாக அவளை அளவெடுத்தது, அதை அறியாமல் “உட்காருங்க” என்றாள் நிலா.....

“எனக்கு இங்கே உட்கார நேரம் இல்லை, நான் போகணும் என்று தன் அண்ணியைக் கூட பார்க்காமல் வெளியேறினாள், இதை பார்த்த அகிலா நிலாவிடம், “அவ கொஞ்சம் செல்லமா வளர்ந்தவ, அதான் அப்படி நடந்துக்கிறா, நீ ஏதும் தப்பா நினைச்சுக்காத தேனு” என, “என்ன அண்ணி நீங்க போய் என்னிடம் இதெல்லாம் சொல்லிட்டு, எனக்கு ஒன்னும் வருத்தம் இல்லை, நான் தப்பா நினைக்கல, குட்டீஸ் ரெண்டு பேரையும் வர சொல்லுங்களேன். எனக்குத் தனியா இருக்க ஒரு மாதிரி இருக்கு”.

“என்னது அதுங்க ரெண்டையுமா, அப்போ இன்னைக்கு உங்க மேரேஜ் நடந்த மாதிரி தான், சேட்டைப் பிடிச்சதுங்க, அப்புறம் மறுபடியும் உனக்கு மேக்கப் பண்ணனும், இன்னும் கொஞ்ச நேரம் தானே பொறுத்துக்கோ”.

“அப்படியென்றால் ஷானு கூட அனுப்பி வைங்க, ரெண்டு பேரையும் அவ பார்த்துப்பாளே”

“ஹாஹா, உனக்கு இன்னும் அவளைப் பத்தி தெரியல, இதுங்க ரெண்டும் பண்ற சேட்டைக்கு தலைவியே அவதான். ரெண்டு பேருக்கும் அந்தப் பிசாசு தான் குரு, அப்போ நீயே நினைச்சுப் பாரு மூணும் வந்தா உன்னோட நிலைமையை”.

“பரவாயில்லை அண்ணி, அனுப்பி வைங்க, எனக்கும் மனசு கஷ்டமா இருக்கு, அவர்களைப் பார்த்தாலாவது கொஞ்சம் குறையும்” என்னம்மா அம்மாவைப் பத்தி கவலைப்படுறியா, அப்படி ஒரு எண்ணம் உன் மனசுல வந்தா, அது உனக்கு சரண்மேல் நம்பிக்கையில்லை என்று அர்த்தம்”.

“அய்யோ அண்ணி ப்ளீஸ், இப்படியெல்லாம் பேசாதீங்க, எனக்கு அம்மா பத்தி கவலை இருக்கு உண்மை.

புது மலர்கள் பூத்திடும் வேளை - மதுவதனி

ஆனால் இனி அவங்க மட்டும் தனியா இருக்கனும், அந்தக் கவலைதான் இப்போ அதான் யோசனையாவே இருக்கு, நீங்க சொல்றமாதிரி அவர்மேல நம்பிக்கை இல்லாமா இல்லை. அவர்மேல் முழு நம்பிக்கை இருக்கப் போய்தான் இந்தக் கல்யாணத்துக்கு முழு மனசோட சம்மதம் சொல்லியிருக்கேன்".

"சரிம்மா நீ எதுவும் தேவையில்லாமல் யோசிக்காத நான் போய் குட்டிச் சாத்தான் குரூப்பை அனுப்பி வைக்கிறேன்" என்று கிளம்பினாள் அகிலா……

அகிலா நிலாவை சமாதானப்படுத்தி விட்டு வெளியே வரவும் மீனா அவளை எதிர்கொண்டாள் மீனாவை ஆச்சரியமாய் பார்த்த அகிலா" இங்கே என்ன பன்ற மீனு" எனவும் "ம்ம் அண்ணன் உங்களைக் கூப்பிட்டான். அதை சொல்லி உங்களை அழைச்சுட்டுப் போக வந்தேன்" என்றாள்.

"சரி சரி வா, வேலை இருக்கு" என்று விட்டு அகிலா முன்னே செல்ல மீனாவின் முகம் கோபத்தில் சிவந்தது.

"இன்னும் கல்யாணமே பண்ணல, அதுக்குள்ள எல்லோரும் இவளுக்கு சேவகம் பண்ணிட்டு இருக்காங்க, ஒன்னும் இல்லாத இவளுக்கு இவ்வளவு மரியாதையா, இதெல்லாம் யாரு கொடுத்த இடம், இந்த சரண் இவன் அப்பாவி, எப்படியும் அண்ணன் எனக்கே மேரேஜ் பண்ணி வச்சுடுவான் அப்படினு நான் அங்கே ஜாலியா சுத்திட்டு இருந்தாள், இங்கே இவன் எவளோ ஒருத்தியை காதலிக்கிறேன், கல்யாணம் பண்றேன்னு, வந்து நிக்குறான், இனி என்ன பண்றது. கண்டிப்பா சும்மா இருக்கக் கூடாது என்று குரோதமாக யோசித்துக் கொண்டிருந்தவளின் போன் அடிக்க எரிச்சலுடன் அதை எடுத்துக் காதுக்கு கொடுத்தாள்.

"ஹலோ வூ ஸ் திஸ்"

"ஹே பேபி, ஊருக்குப் போய் ஒரு நாள் கூட அதுக்குள்ள என்னை மறந்துட்டியா".

"ஏய் எரிச்சல் பண்ணாம என்ன மேட்டர்னு சொல்லு"

புது மலர்கள் பூத்திடும் வேளை - மதுவதனி

# புது மலர்கள் பூத்திடும் வேளை…!

“நோ ஸ்வீட்டி, நோ ஆங்க்றி வித் மீ, நீயில்லாமல் டேட்டிங் போகவே மனசில்லை”, உனக்கு எப்போ டைம் இருக்கு சொல்லு, டுடே ஓகே வா”

“ஹேய் ஸ்டாப்பிட்…… ஸ்டாப் இடியட், மனுசி இருக்கிற நிலைமை தெரியாம, ஐ ஹேட் திஸ் பர்போர்மன்ஸ், என்ன சொல்லு, நீ எப்போ இங்கே வந்தே”

“ம்ம் நீ ப்ளைட் ஏறவும், பின்னாடியே வந்துட்டேன் நீயிலாத மும்பை எனக்கு போர் அடிக்குது பேபி, அதான் உனக்கு பின்னாடியே வந்துட்டேன், ஓகே நாம் ரெண்டு பேரும் ஒன்னா இந்த ஊர்ல இருக்கோம் சோ இன்னைக்கு அதை செலப்ரேட் பண்ணுவோம். ஈவ்னிங் பார்ட்டி அரேஜ்ச் பண்ணவா. உனக்கு ஓகேவா, உனக்கும் ரிலாக்ஸா இருக்கும். என்ன சொல்ற”.

“ம்ம் ஓகே, ஈவ்னிங் ஒரு 7.30க்கு மேல வை, அப்போதான் நான் ப்ரீயாவேன், இப்போ எங்கே இருக்க.

“நான் இன்னும் பெட்டை விட்டே எழல”

“ஓ….. ஓகே நீ உடனே கிளம்பி லட்சுமி கல்யாண மண்டபம் வா….. அங்கே என்னோட கசின்னுக்கு மேரேஜ் நடக்குது, எனக்கும் உன்னோட ஹெல்ப்பும் வேணும் உடனே வா” என்று அவன் பேசி முடிப்பதற்குள் மீனா போனை அணைத்தாள்.

அப்படியே அந்தக் கூட்டங்களை விட்டு வெளியேறியவள் கார்டனில் போய் அமர்ந்தாள். அவனது நண்பன் ராகவிடம் கேட்டாள் யோசனை சொல்வான் என்றே அவனை வர சொன்னாள். அவனிடம் எப்படி கூறுவது என்று யோசித்து வார்த்தைகளைக் கோர்த்துக் கொண்டிருந்தாள்.

அடுத்த அரை மணி நேரத்தில் அவளின் எதிரில் நின்றான் ராகவ் “ஹே, பேபி எதுக்கு மூட இப்போ மூடு அவுட், மேரேஜ் பங்சனை நல்லா என்ஜாய் பண்ண வேண்டியது தானே”

புது மலர்கள் பூத்திடும் வேளை - மதுவதனி

“டேய் ஸ்டுப்பிட், செம வொர்ரிலே இருக்கேன், கடுப்பைக் கிளப்பாதே, அவன் என்னைத் தான் மேரேஜ் பண்றதா இருந்துச்சு. இப்போ என்னடானா அவன் ஒருத்தியை லவ் பண்றனாம், அவளையே எல்லோரும் சேர்ந்து பிக்ஸ் பண்ணிட்டாங்க, சரண் என்ன ஒரு ஹேண்ட்சம் தெரியுமா, நீ வேற கடுப்பைக் கிளப்பிட்டு இருக்க”

“ஓ காட், நீ என்ன சொல்ற, மேரேஜா, உனக்கா” என்றவன் கடகடவென சிரித்துவிட்டு உன்னை மாதிரி ஒரு வேர்ல்ட் பியூட்டியை மிஸ் பண்ண அந்த துரதிஸ்டசாலி யாரு” என்று கிண்டலடித்துவிட்டு மண்டபத்தின் வாயிலில் இருந்த ப்ளேக்ஸ் போர்டை பார்த்தான்.

அங்கு சரணின் தோளில் சாய்ந்த மாதிரி இருந்த நிலாவைப் பார்த்து அதிர்ந்து போனான். இவளோ… இவளேதானே என்று முணுமுணுத்தான் சத்தம் வரவில்லை. ஆனால் அதுவுமே மீனாவிற்கு கேட்டது. நான் பார்த்தது உண்மையா என்று மீண்டும் ஒரு முறைக் கண்களை கசக்கிவிட்டுப் பார்த்தான். அப்போதுதான் அது உண்மை என்பது புரிய, அவனையும் அறியாமல் நிம்மதிப் பெருமூச்சு எழுந்தது.

நிலாவின் வாழ்க்கையில் இந்த ராகவ் யார்…?

**வேளை தொடரும்……..**

புதுமலர்கள் பூத்திடும் வேளை - மதுவதனி

# புது மலர்கள் பூத்திடும் வேளை…!




## வேளை - 24

*****************************************************************************************************

**வசந்த கால கோலங்கள்**
**வானில் விழுந்த கோடுகள்**
**கலைந்திடும் கனவுகள்**
**கண்ணீர் சிந்தும் நினைவுகள்**

**அலையில் ஆடும் காகிதம்**
**அதிலுமென்ன காவியம்**
**நிலையில்லாத மனிதர்கள்**
**அவர்க்கும் என்ன உறவுகள்**

**உள்ளம் என்று அதில்**
**இரண்டும் உண்டல்லவோ….!**

*****************************************************************************************************

“ஹேய் ராகவ் இவளை உனக்குத் தெரியுமா, இதுக்கு முன்னாடி பார்த்து இருக்கியா, அதுவும் இந்த ஊர்ல, ஓ இவ பாமிலி கொஞ்ச நாள் திருச்சியில் இருந்ததா அண்ணா சொன்னான், அப்போ தெரியுமா…? உனக்குத் தெரிஞ்சா எனக்கும் தெரிஞ்சிருக்கனுமே, நான் பார்த்து இருக்கேனா…? எனக்கு அந்த மாதிரி ஞாபகம் இல்லையே, சொல்லு ராகவ்…." என்று அவனைப் பிடித்து உலுக்கினாள் மீனா.

# புது மலர்கள் பூத்திடும் வேளை…!

“ச்சு மீனு, எதுக்கு இப்படி பண்ற, எல்லோரும் பார்க்குறாங்க பாரு, முதல்ல இந்தக் கல்யாணத்தைப் பத்தி சொல்லு, அப்புறம் எனக்கு அவங்களை எப்படித் தெரியும்னு சொல்றேன்.”

“ம்ம் சரண் த்ரி எயர்ஸா அவளை லவ் பண்றானாம், திடிர்னு இவ எங்கே இருக்கா என்றே தெரியாமல் இருந்ததாம், அப்புறம் குற்றாலத்தில் பார்த்து அப்படியே அவங்க வீட்டுல பேசி மேரேஜ் பிக்ஸ் ஆகிருக்கு, எனக்கு என்னவோ, அவளும் முதல்ல இருந்தே லவ் பண்றா என்றுதான் தோணுது” என்றவள் சற்று முன் அகிலாவும் தேனுவும் பேசியதைக் கூறினாள்.

“ம்ம்” என்று பெருமூச்சு விட்டவன் “அப்படித்தான் எனக்கும் தோணுது. உனக்கு சரணை விட நல்ல பையன் கிடைப்பான், நீ ஏன் இவன்தான் வேணும்னு ஆசைப்படுற, அதுவும் அவன் வேற ஒருத்தியை லவ் பண்றான் என்று தெரிந்த பிறகும்” என்றான் ராகவ்,

“உன்னிடம் நான் கருத்துக் கேட்கலை, நான் கேட்டதுக்கு மட்டும் பதில் சொல்லு, அவளை எப்படித் தெரியும், உனக்கும் அவளுக்கும் என்ன சம்பந்தம்”

“நான் சொல்றேன், அவங்களைப் பத்தி தெரிஞ்சா நீயே அவங்க மேரேஜை அப்ரோச் பண்ணுவ” என்றவன் நிலாவை சந்தித்ததைப் பற்றி கூற ஆரம்பித்தான்.

“நான் திருச்சியில்தான யூஜி பண்ணேன், அப்போ நான் ஒரு பிரச்சனையில் மாட்டிக்கிட்டேன். அந்த சமயம் எனக்கு ஒருத்தர் ஹெல்ப் பண்ணார். அவர் பேரு குமார். அவர் மட்டும் அன்னைக்கு ஹெல்ப் பண்ணாமா போயிருந்தா நான் இன்னோரம் ஜெயில்லதான் இருந்துருக்கணும். அது ஒரு ஆக்ஸிடென்ட் கேஸ், நான்தான் டிரைவ் பண்ணேன், எதிர்ல வந்த காரை கவனிக்காம பாஸ்ட் ஓட்டிட்டு வந்தேன், ஆப்போசிட்டில் அந்த பாமிலி வரது தெரிஞ்சதும் ஸ்லொவ் பண்ணேன். முடியல… என்ன செய்யுறதுன்னு யோசிக்கிறதுக்குள்ள எல்லாம் முடிஞ்சிடுச்சு… அவங்க ஸ்பாட் அவுட், அப்போ என்ன பண்றதுனு தெரியாம முழிச்சுட்டு நின்னப்போ, அவர்தான் வந்து நீ கௌம்பு நான் பாத்துகிறேன் என்று சொல்லி என்னோட போன் நம்பரையும் வாங்கிட்டு அனுப்பி வைச்சார். எனக்கு அந்த நேரம் வேற எதுவும் செய்யத்தோணலை, அவருக்கு தேங்க்ஸ் சொல்லிட்டு அங்கே இருந்து கிளம்பிட்டேன்.

# புது மலர்கள் பூத்திடும் வேளை...!

அதான் பிறகு ரொம்ப நாள் நான் அவரைப் பார்க்கவே இல்லை, திடிரென்று ஒரு நாள் எனக்கு அவர் போன் பண்ணார். எனக்கு உன்னால ஒரு உதவி ஆகனும் கிடைக்குமா என்று, நானும் என்ன ஏதென்று கூட யோசிக்காமல் சரியென்று கூறிவிட்டேன்.

அடுத்த நாள் ஒரு அட்ரஸ் கொடுத்து அந்த வீட்டில் அவர் கூறியது போல கூறவேண்டும் என்று சொல்லி அனுப்பி வைத்தார்" என்றவன் கண்களை மூடிக்கொண்டான்.

சில நிமிட அமைதிக்குப் பிறகு மீண்டும் தொடர்ந்தவன் "அந்த அட்ரஸில் தான் இவங்க இருந்தாங்க, நான் போய் சொல்லிட்டு உடனே வந்துட்டேன், அப்புறம் அவங்க அந்தக் குமார் சொன்ன லாட்ஜிக்கு வந்தாங்க, இந்தப் பொண்ணை ரிசப்சனில் பார்த்துட்டுத் தான் நான் அந்த ரூமுக்குள்ளேயே போனேன் ஆனா அதுவரைக்கும் அங்கே என்ன நடந்தது என்றே தெரியாது. "பாத்ரூமில் லேடிவாயிசில் வாமிட் எடுக்குற சத்தம் கேட்டதும், நிஜமாவே உள்ள லேடிதான் இருக்காங்க என்று நினைத்து விட்டேன். உள்ளே வந்த இந்தப் பொண்ணும் அவங்க அக்காதான் என்றே நம்பியிருக்காங்க, அதுக்குள்ள குமார் என்னை கண்ணசைத்து கூப்பிடவும், நான் இந்தப் பொண்ணை உள்ளே விட்டுட்டு, சரி அக்காவும் தங்கையும் பேசட்டும் என்று வெளியே போனேன்.

ஆனால்...... ஆனால் அங்கே நடந்தது எவ்வளவு பெரிய அதிர்ச்சி தெரியுமா, அந்தப் பொண்ணோடு இரண்டு ஆண்களும் உள்ளே இருந்து போலீஸ்காரங்க அரெஸ்ட் பண்ணி கூட்டிட்டு போனாங்க, என்ன நடக்குது என்றேத் தெரியாமல் பிரம்மை பிடித்தது போல் நின்றிருந்தேன். எனக்கேத் தெரியாமல் என்னை இந்த வேலையை செய்ய வைத்திருக்கிறான் அந்தக் குமார் என்னால ஒரு பொண்ணோட வாழ்க்கை பாழாய் போயிடுச்சேனு நொந்து போயிட்டேன். குமாரிடம் கேட்டால் நான் உனக்கு செய்த உதவியை விட இது சின்ன உதவிதான்,

நீ பணத்துக்காக நடிக்க வந்தவன் என்றுதான் அவள் உன்னை நினைத்திருப்பாள், இல்லை என்னைப்போல் நீயும் ஒரு பொருக்கி என்றுதான் நினைத்திருப்பாள், இதற்கு பிறகு இந்த விஷயத்தை நோண்டாமல் உன் வேலையைப் பார் என்று உதாசீனப்படுத்தி பேசினான். எனக்கு குற்ற உணர்வு தாங்க முடியலை அந்த போலீஸ் வேனுக்கு பின்னாடியே நானும் போனேன்.

# புது மலர்கள் பூத்திடும் வேளை…!

அங்கே இந்தப் பொண்ணுக்குத் தெரிந்த போலீஸ் ஒருத்தர் இருந்து அந்தக் கூட்டத்தில் இருந்து காப்பாத்திட்டார். ஆனா என்ன முயன்றும் பத்திரிக்கையாளர்கள் கண்களில் இருந்து காப்பாத்த முடியலை, உடனே போட்டோஸ் எடுத்து அடுத்த நாளே நியூசா வந்துடுச்சு. அதுக்குப் பிறகுதான் இவங்க பேமிலி திருச்சியை விட்டுப் போயிருக்கனும்,

கொஞ்ச நாள் கழிச்சு நான் அந்தப் போலீஸிடம் விசாரிச்சேன், அப்போதான் சொன்னார் "தேன்நிலாவின் அம்மாவிற்கு ஸட்ரோக் வந்து ஊருக்கே போயிட்டாங்க என்று, அந்தக் குமார் என்ன ஆனான் என்று எப்படிக் கேட்பது என்ற குழப்பத்தில் இருப்பதைப் பார்த்தவர் "அவனை போட்டுடாங்க தம்பி, அவன் உயிரோட இருந்து இன்னும் எத்தனைப் பேரோட வாழ்க்கையை கெடுப்பானோ, அதனால் ப்ளான் பண்ணி அவனைப் போட்டுட்டாங்க என்று சொன்னார்.

நான் அதிசயமாக அவரைப் பார்த்தேன். அப்போதுதான் அவர் சொன்னார் ஏற்கனவே அவன் கேங்கை மொத்தமா பிடிச்சுட்டாங்க மும்பைல, இவன் சும்மா கையாளுதான் ஆனா சும்மா விட மனசில்லை. தேன்நிலா வாழ்க்கையை மொத்தமா சீரழிசுட்டான். அதுவே லத்திகா மேடத்துக்கு ரொம்ப கோபம், அதனால் அவனை சரியான நேரம் பார்த்து முடிச்சிட்டாங்க, பெங்களூர்ல ஒரு பொண்ணை ரேப் பண்ணிட்டு தப்பிக்கப் பார்த்து இருக்கான், உடனே அக்கம் பக்கம் உள்ளவங்க அவனைப் பிடிச்சு, துணியெல்லாம் உருவிட்டு நிர்வணமா ரோட்டுலயே நிற்க வச்சு கல்லாலையே அடிச்சுக் கொன்னுட்டாங்க, அப்படித்தான் வெளி உலகத்துக்கும் மீடியாவுக்கும் தெரியும். ஆனா அது எல்லாம் மேடத்தோட பிளான்தான், அந்தப் பொண்ணும் ஒரு போலீஸ், அதைக் கண்டுபிடிச்சு தப்பிக்கப் பார்த்திருக்கான், அந்த நேரம் ஆட்களை வச்சும் பிடிச்சுட்டாங்க, அவன் மயங்கி விழும் நேரம் பார்த்து சுட்டுட்டாங்க, அது பப்ளிக் கேசாகி ஒன்னுமே இல்லாம போயிடுச்சு. அவன் கூட்டாளிகள் யாருமே இப்போ உயிரோடு இல்லை, எல்லோரும் போய் சேர்ந்துடங்க என்றார், ஆனா நான் ஏன் இதையெல்லாம் உன்கிட்ட சொல்றேன்னு யோசிக்கலையா…? என்றார்..

நான் அதிர்ச்சியோடு அவரைப் பார்த்தேன், அப்போதுதான் சொன்னார், நீயும் இந்த கேஸ்ல இருக்கே தம்பி, என்ன ஏதுனு தெரியாமலே உதவி செய்யக்கூடாது, அதோட நீ செய்யமாட்டேன் என்று சொல்லி இருந்தாலும் அவன் பணத்தைக் காட்டி வேற யாரையாவது வச்சு செஞ்சுருப்பான். அதோட நீ நெனைக்கிற மாதிரி அந்த ஆக்ஸிடென்ட்ல அவன் உன்னைக் காப்பாத்தவில்லை, உன்னை அந்த இடத்தை விட்டு அப்புறப்படுத்தி இருக்கான், ஏனென்றால் அந்த ஆக்சிடென்ட் நடந்த காரில்தான் அவன் அடுத்து கடத்தப்போகும் பெண் இருந்திருக்கிறாள்.

அதனால் நீ இருந்தால் ஏதும் சொதப்பிவிடுமோ என்று உன்னை போக சொல்லிருக்கிறான். ஆனால் அந்த விபத்தில யாருமே பிழைக்கவில்லை என்று தெரிந்ததும் அதை அப்படியே விட்டுவிட்டான். அதோடு அந்த விபத்து நீ ஏற்படுத்தியது இல்லை, அந்த காரில் இருந்த பிரேக் வயரை முன்னரே அறுத்து இருந்திருக்கிறார்கள். அதனால்தான் அந்த விபத்தும் நடந்தது.

நீ நினைப்பது போல் எதுவும் இல்லை. இனிமேல் கவனமாக இரு, உன் எதிர்காலத்தை மனதில் வைத்தே லத்திகா மாம் உன்னை இந்த கேசில் இழுக்கவில்லை என்று கூற, அதைக் கேட்ட பிறகு தான் எனக்கு மனதே நிம்மதியானது.

அப்புறம் தான் நான் பிஜி பண்ண மும்பை வந்தேன், மூன்று வருடமாகி விட்டது, மீண்டும் இப்போது தான் தேன்நிலாவைப் பார்க்கிறேன் என்றான்." தன் நீண்ட உரையை முடித்த ராகவ் என்ற குரு ராகவ்.

ராகவ் பேசி முடித்த சிறிது நேரம் அமைதியாக கழிந்தது. பிறகு "பாவம்தான் இந்தப் பெண், நம்மளைப் போன்ற ஆட்களுக்கு ஈசியாக திருமணம் நடக்கும், ஆனால் இவளுக்கு சரணைத் தவிர வேறு மாப்பிள்ளைக் கிடைக்க மாட்டான், அதனால் இதை ஏற்றுக் கொள்ள முயற்சிக்கிறேன்" என்று மீனா வராத கண்ணீரை வருவதுபோல் நடித்து கண்களைத் துடைக்கவும்,

"எஸ் மீனு, பாவம் அவர்கள், விடு நடக்க வேண்டியதைப் பார்க்கலாம், நீயும் கொஞ்சம் இந்த நிகழ்வை மறைக்க முயற்சி செய்.. இதெல்லாம் உன்னோட கேரக்டருக்கு ரொம்ப சாதாரணம், சோ விட்டுடு. பீ ஹாப்பி ஓகே, ஈவ்னிங் பார்ட்டிக்கு வருவாய் தானே, அதோட இந்த ஊர்ல எந்த ஹோட்டல் நல்ல இருக்கும்னு விசாரிக்கிறேன்".

"எஸ், அப்கோர்ஸ் நான் இல்லாம உன்னோட பார்டியா" என்று அவனிடம் குழைந்து பேசிய படியே அந்தப் பத்திரிகை செய்தி எந்தத் தினத்தில் வந்தது, எந்தப் பத்திரிகை, எந்த ஆண்டு என்றெல்லாம் அவனுக்கு சந்தேகமே வராத படி கேட்டுத் தெரிந்து கொண்டாள். அவனும் அவள் மேலே விழுந்து பேசும் மயக்கத்தில் எல்லாவற்றையும் கூறிவிட்டு விடை பெற்றான்.

புது மலர்கள் பூத்திடும் வேளை - மதுவதனி

# புது மலர்கள் பூத்திடும் வேளை…!

ராகவ் சென்றதும் அவன் போன பாதையையே பார்த்து வெற்றிச் சிரிப்பு சிரித்தவள் "சாரி ராகவ் உன்னிடம் கேட்டால் சொல்லமாட்டாய் அதனால் இந்த விசயத்தில் இப்படி நடிக்க வேண்டியதாகிப்போனது", என்றுத் தனக்குத் தானே பேசியவள், உடனே அடுத்து அந்த ஊரில் பக்கத்தில் இருந்த நூலகத்திற்கு சென்று அங்கு உள்ளவர்களின் கைகளில் பணத்தை திணித்துவிட்டு தனக்கு வேண்டிய அன்றைய நாளின் செய்தித் தாளைப் பெற்றுக்கொண்டாள், ஆனால் அந்தோ பரிதாபம் அவள் தேடிய செய்திதான் இல்லாமல் போனது..

அதிர்ச்சியில் இருந்தாள் மீனா. எப்படி இல்லாமல் போனது என்று, ராகவ் கூறிய தேதியை மறுபடியும் சரிபார்த்தாள். சாரியான டேட் தான, அப்புறம் எப்படி மிஸ் ஆகும் என்று குழம்பியவளுக்கு அது ஒரு மாவட்ட செய்தி, அது அந்தந்த மாவட்டத்தில் மட்டுமே பிரசுரம் ஆகும் என்று தெரியாமல் போனது. திருச்சியில் பிரசுரம் ஆன அந்த நியூஸ் தேனியில் எப்படி கிடைக்கும். அதோடு எப்படி ராகவிடம் இதைக் கேட்பது என்றும் யோசித்தாள். அவனிடம் கேட்டால் அவன் தன்னை சந்தேகப்படவும் வாய்ப்பு இருப்பதை உணர்ந்து யோசிக்க ஆரம்பித்தாள்

கடைசியில் தோற்று விட்டோமோ என நினைத்தவள், இல்லை கண்டிப்பாக இல்லை, போயும் போயும் இவளிடமா நான் தோற்க வேண்டும், முடியாது இந்த சரண் என்னை மணக்கவில்லை என்றாலும் பரவாயில்லை, ஆனால் இவளோடு வாழக்கூடாது என்று முட்டாள்தனமாக பழிவாங்க துடித்தாள் ஏன்..? எதற்கென்று..? தெரியாமலே…

ஆனால் மீனாவே எதிர்ப்பார்க்காமல் சரணின் வாழ்க்கையில் இருந்து நிலா ஒதுங்கி போனாள்… ஆம் அதுவும் நடந்தது… காலையில் திருமணம்……….. மாலையில் அவர்களின் பிரிவு…!!!!!!!!

**வேளை தொடரும்……..**

புதுமலர்கள் பூத்திடும் வேளை - மதுவதனி




## வேளை - 25-1

*****************************************************************************************************

வலது அடி எடுத்து வைத்து
வாசல் தாண்டிவா வா
பொன் மயிலே பொன் மயிலே

புகுந்த இடம் ஒளிமயமாய்
உன்னால் தானே மாறும்
மாங்குயிலே மாங்குயிலே

இல்லம் கோயிலடி
அதில் பெண்மை தெய்வமடி
தெய்வம் உள்ள இடம்
என்றும் செல்வம் பொங்குமடி

மண மகளே மண மகளே
வாழும் காலம் சூழும் மங்களமே மங்களமே
குண மகளே குல மகளே
பாலும் தேனும் நாளும் பொங்கிடுமே பொங்கிடுமே

*****************************************************************************************************

புது மலர்கள் பூத்திடும் வேளை -

# புது மலர்கள் பூத்திடும் வேளை…!

தீபகாருண்யம் மிக அழகாய் ஜொலித்தது… ஆராவாரமும் பரபரப்புமாய் பெரியவர்கள் அங்குமிங்கும் ஓடிக்கொண்டிருக்க, குழந்தைகள் அவருக்கே உரிய உலகத்தில் சண்டையிட்டும், விளையாடிக்கொண்டும் தங்கள் இருப்பைக் காட்டிக்கொள்ள, விஜயா அங்கிருந்த ஒரு சக்கர நாற்காலியில் உட்கார்ந்திருந்தார். இன்னும் சிறிது நேரத்தில் தனது இளையமகளின் திருமணம். சொந்தங்கள் என்று சொல்லிக்கொள்ள சிலர் இருந்தாலும் அவர்கள் எல்லாம் வேடிக்கைப் பார்க்கும் சொந்தங்கள் மட்டும்தான் என்பதை உணர்ந்தவர் விஜயா. அதனால் சொல்லிகொள்ளும் அளவிற்கு சொந்தங்கள் இல்லையென்ற கவலை ஏதும் இல்லை அவருக்கு, அதற்கு தான் தன்னுடைய கணவர் ஒரு வழி கண்டுபிடித்துக் கொடுத்துவிட்டு சென்று இருக்காரே..? அதுதான் இந்த தீபகாருண்யம். இதை ஆரம்பிக்கும்போது சிறியதாக இருந்த மனக்குழப்பம் கூட இப்போது இல்லை. அதை நல்ல முறையில் வழிநடத்தி செல்ல காசிராமன் போன்றோர் இருக்கும்போது என்ன கவலை அவருக்கு,

நிலாவை பற்றி எல்லாவற்றையும் எடுத்துக் கூறி அவளுக்கு ஒரு திருமணம் செய்து விடவேண்டும் என்று உறுதியாக இருந்தவரிடம் தான் சரண் சென்று பெண் கேட்டது.. அதன்பிறகு சிறிதும் தாமதிக்காமல் அனைத்து வேலைகளையும் முடித்துவிட்டார். இதோ இன்னும் சில மணித்துளிகளில் **“திருமதி. தேன்நிலா அபிசரண்”** ஆகப்போகிறாள் அவரது சின்னமகள். மனம் முழுக்க மகிழ்ச்சியாக இருந்தாலும், ஒரு மூலையில் தன் குடும்ப உறவுகளை எண்ணி வருந்தாமல் இல்லை. உடனே மனதில் ஒரு இறுக்கம் வந்தது. போனவர்களைப் பற்றி யோசிக்க வேண்டாம், இருக்கும் இவள் ஒருத்தியையாவது நல்ல முறையில் வாழ வைக்க வேண்டும் என்று நினைத்து கொண்டார். அதன் பிறகு அங்கு வருவோர் போவோரையும், மேடையில் நடப்பதையும் பார்த்து தன் கவனத்தை பதித்துக் கொண்டார்.

நிலாவிடம் பேசிவிட்டு கீழே வந்த அகிலா ஷானுவின் குரங்கு கூட்டத்தை மேலே அனுப்பிவிட்டு சரணிடம் வந்தாள். அவனிடம் நிலாவின் சோர்வைக் கூற, அவனும் உடனே அவளுக்கு போன் செய்தான். அவள் போனை எடுத்ததும் “என் நிலாவுக்கு என்ன வருத்தம்… ஏன் சோகமா இருக்கீங்களாம்… என்னை கல்யாணம் பண்றது அவ்ளோ கஷ்டமான விசயமா… என்னைப்பத்தி உன்னிடம் அந்த ரெண்டும் ராங் இன்பர்மேஷன் கொடுத்துருக்கு, அதை நம்பி நீ என்னை சுத்தல்ல விட்டுட்டு இருக்க… இது சரியில்லை சொல்லிட்டேன், ம்ம்ம்… சரி அதை விடு இப்போ என்னாச்சு சொல்லுங்க மேடம்.” எனவும் அவள் சிரிக்க ஆரம்பித்தாள்..

# புது மலர்கள் பூத்திடும் வேளை…!

“ஏய் எதுக்குடி இந்த சிரிப்பு… நானே எப்படா தாலியைக் கட்டி எங்கயாச்சும் இழுத்துட்டு போகாலாம்னு இருக்கேன், என்னோட அவஸ்தை உனக்கு கிண்டலா இருக்கா….. இரு இரு … என்னிடம் மாட்டும்போது இருக்கு உனக்கு..”

“பாவா… ஹாஹா… நான் மாட்டும்போது பார்க்கலாம், இப்போ நீங்க மாட்டுனீங்க”

“என்ன…. என்ன சொல்ல வர… ஒன்னும் புரியல..” .என அவன் முடிக்கவும் அந்தப்பக்கம்.. “ஒன்னும் புரியல, சொல்ல தெரியல, கண்ணு முழியில, கண்ட அழகுல,” என ஷானவியும் சிபியும் கோரஸில் பாட, சரணுக்கோ தலையில் அடித்துக் கொள்ள வேண்டும்போல் இருந்தது.. பல்லைக் கடித்துக் கொண்டு “அங்க என்ன பண்றீங்க பிசாசுங்களா..” என்றான் சரண்…

“ம்ம்ம் அதுவா அண்ணா இதுவரைக்கும் ராங் இன்பர்மேஷன் கொடுத்துட்டு இருந்தோம், இனிமேல்தான் கரெக்ட் இன்பர்மேஷன் கொடுக்கனும். நம்ம பக்கத்து வீட்டு மலர் வந்து சரண் யு ஆர் வெரி ஹாண்ட்சம் சொல்லிச்சே அது, அப்புறம்… அப்புறம்…” என சிபி இழுக்க, உடனே ஷானு “டேய் அந்த சுமி சொல்லு” என எடுத்துக் கொடுக்கவும்.

“ம்ம்ம் ஆமாம் உங்க காலேஜ்ல அந்த சுமி சரண் யு லுக் வெரி ஸ்மார்ட்னு சொல்லிச்சே அது, இதெல்லாம் சொல்லவே இல்லை, அதான் இப்போ சொல்லவா வேண்டாமானு உங்ககிட்ட கேட்க வந்தோம்.”

“அட பக்கிகளா…உங்களை என்ன வேலை செய்ய சொன்னேன், நீங்க என்ன பண்றீங்க, டேய் கஷ்டப்பட்டு இப்போதாண்டா கல்யாணம் வரைக்கும் கொண்டு வந்துருக்கேன், அதுக்குள்ள குடும்பத்துல கும்மி அடிச்சிட்டு போய்டாதீங்க, நீங்க ஒரு மண்ணும் பண்ண வேண்டாம் இடத்தைக் காலி பண்ணுங்க,”

“தோடா… யாருக்கிட்ட, அப்படியெல்லாம் இடத்தை விட்டு போக முடியாது, நாங்க மெய்காப்பாளர்கள், கூடவேதான் இருப்போம், இப்படியே நீங்க பேசுனீங்க என்றால் அப்புறம் இன்னைக்கு நைட் ஏதோ பங்கசன் இருக்காமே, அதுக்கும் இந்த பூனைப்படை வருவோம் எப்படி வசதி” என ஷானு கலாய்க்க, நிலா சிரிப்பது சரணுக்கு கேட்டது, அவனுக்கும் சிரிப்புதான்.

புது மலர்கள் பூத்திடும் வேளை - மதுவதனி

# புது மலர்கள் பூத்திடும் வேளை…!

எப்படியோ நிலாவை சிரிக்க வைத்தார்களே என்று அவன் பூனைபடைக்கு மனதில் நன்றி கூறியவன், "டேய் ஏண்டா இப்புடி பண்றீங்க…. அவகிட்ட போனை கொடுங்க நான் பேசி முடிச்சதும் நீங்க உங்க ஆட்டத்தை ஆரம்பிக்க, இன்னும் கொஞ்ச நேரத்துல என்னை மேடைக்கு கூப்பிட்டு விடுவாங்க" என்று கெஞ்சினான் சரண்.

"ம்ம் அந்த பயம் இருக்கணும் சரியா… அதோட நீ இன்னும் வளரனும் தம்பி… நீயே இப்படி இருக்கியே… நீயெல்லாம் மேரேஜ் பண்ணி, புள்ளக்குட்டிங்களை எப்படி வளர்க்கப்போறியோ.." என்ற சிபி "ஷாவிக்குட்டி அந்த போனை ஸ்பீக்கர் ஆப் செய்து கொடுத்துட்டு இந்த சிம்பன்சிங்களையும் இழுத்துட்டு வா" என்று அகிலாவின் குழந்தைகளை காட்டி விட்டு வெளியேறினான்.

"எல்லாம் என் நேரம்தான்.. முளைச்சு மூணு இலை விடல இதெல்லாம் என்னை கலாய்ச்சிட்டு போகுது, சரண் உனக்கு வாச்சவங்க யாருமே சரியில்லடா.." என்று போனில் தன் போக்கில் புலம்பிக்கொண்டிருந்தான். அவனது புலம்பலைக் கேட்ட நிலா "பாவா… பாவா என்னாச்சு நமக்கு இன்னைக்கு மேரேஜ், நீங்க இப்படி புலம்புறதைப் பார்த்தா கீழ்பாக்கம் தான் அனுப்பனும் போல.. இருங்க யாரையாச்சும் வரசொல்லி உங்களை பார்க்க சொல்றேன்" என அப்பாவியாய் பேச…

"நீயா பேசியது என் அன்பே நீயா பேசியது…." என்று சரண் பாட, "இப்படியே பாடிட்டு இருங்க, நான் போறேன்" என் நிலா கூற…

"எங்க போறீங்க மேடம் எங்கே போறதா இருந்தாலும்… நான் போனதுக்கு பிறகுதான் நீயும் வரணும்… அது எங்கேயா இருந்தாலும் புரியுதா…" என அவன் சீரியசாகிவிட, நிலா சட்டென்று அமைதியாகி விட்டாள்.

அவள் அமைதியை கண்டதும்தான் அவன் பேசியதை உணர்ந்தவன் "ஹே நிலா.. நிலாம்மா.. அது சும்மாடா… அப்படியே ஒரு ப்லொவ்ல வந்துடுச்சு, இனி அப்படி பேச மாட்டேன். ப்ராமிஸ். பேசுடி.."

அவள் மீண்டும் அமைதியை தொடரவும் "ப்ளீஸ் நிலா… என் செல்லமில்ல", எனவும் "இல்லை" என்று நிலா பதில் அளிக்க,

“அப்போ தங்கம் “

“இல்லை”

“அப்போ லட்டு குட்டி”

“இல்லை”

“அப்போ பூந்திக்குட்டி”

“அதுவும் இல்லை…” என்று கடுப்பானவள் “இப்போ எதுக்கு இப்படி பேசுறீங்க, நல்ல நாள் அதுவுமா…. பேசுறதெல்லாம் பேசிட்டு கொஞ்சுறதுல ஒன்னும் குறைச்சலே இல்லை, நான் இன்னைக்கு முழுசும் கோபமா இருக்கேன் உங்க மேல.. ஆமாம் சொல்லிட்டேன், சும்மா சும்மா தொல்லை பண்ணக்கூடாது”

“என்னாது இன்னைக்கு முழுசுமா….?????????” என்று நெஞ்சைப் பிடித்துக்கொண்டவன், “உன் பாவா பாவமில்ல இப்படியெல்லாம் பண்ணக்கூடாது நிலாம்மா இனிமேல் இப்படி பேசமாட்டேன், ஓகே டீல்.. நானே எவ்ளோ ப்ளான்ஸ் வச்சிருக்கேன் இன்னைக்கு, பொசுக்குனு இப்படி சொல்லிட்டியேம்மா சொல்லிட்டியே.. உன் பாவா ஹார்ட் வெடிச்சிடாது”

“அதெல்லாம் வெடிக்காது, எதையும் தாங்கும் இதயம் மை பாவாவுக்கு”

“ஓவரா ட்ரெயின் பண்ணிருசுங்க போலையே சரண், ஏற்கனவே வீடு முழுசும் வானரப்படைகள் தான் இருக்கு, இப்போ எக்ஸ்ட்ரா ஒரு டிக்கெட். சரி விடு எவ்வளவோ மேச்சுட்டோம், இப்போ இதையும் சேர்த்து மேய்க்க வேண்டியதுதான்’” என சரண் மறுபடியும் தனக்குத்தானே புலம்புவதுபோல் தன் கிண்டலில் இறங்க நிலா வாய்விட்டு சிரித்தாள்.

அவள் சிரிப்பில் வழக்கம்போல தன் மனதைத் தொலைத்தவன், சில நொடிகளில் அதை உள்வாங்கி மனதுக்குள் சேமித்துக்கொண்டான். அவனின் அமைதியை அவள்தான் கலைத்தாள். “என்ன பாவா, என்ன பேசணும், அண்ணி உங்ககிட்ட என்ன சொன்னாங்க, கொஞ்சம் வருத்தமா இருந்ததுதான் அம்மா தனியா இருப்பாங்களேன்னு.

ஆனா இப்போ இல்லை, அதான் நீங்க இருக்கீங்களே அப்புறம் எனக்கென்ன கவலை, நீங்க பீல் பண்ணாதீங்க"

"தேங்க்ஸ் நிலா… நீ என்னை நம்பி என் பின்னாடி வந்ததற்கு, அத்தையைப் பத்தி நீ யோசிக்கவே யோசிக்காதே, அவங்களை நல்லபடியா பார்த்துக்க வேண்டியது என் பொறுப்பு ப்ளஸ் என்னோட கடமை. அத்தையும் எனக்கு அம்மா போலதான் கண்டிப்பா அவங்களுக்கு ஒரு கஷ்டமும் வரவிடமாட்டேன்.

இந்த நம்பிக்கையை மட்டும் கடைசி வரை வச்சுக்கோ.. அது போதும் எனக்கு சரியா… என் நிலா என்னை கடைசிவரைக்கும் நம்பனும் அதுதான் எனக்கு வேண்டும். ஒகே வா.."

"உங்களை நம்பாம யாரை நம்ப போறேன், உங்களை மட்டும்தான் நம்புறேன்," என்று நிறுத்தியவளிடம் சிறிது தயக்கம் வந்தது.. அந்த சிறு இடைவெளியில் அவன் "என்ன நிலா ஏன் என்கிட்டே எதாவது சொல்லனுமா.. சொல்லு, இல்லை கேட்கணுமா கேளு.." எனவும்… நிலாவின் அறைக்கதவு தட்டப்பட்டது…

சொல்ல வந்த விசயத்தை மறந்தவள் "பாவா கதவை தட்டுறாங்க நான் வைக்கிறேன்" எனவும் "சரிடா எதையும் போட்டு யோசிக்காத, இந்த நாள் நம் இருவரின் வாழ்க்கையிலும் மிக மிக முக்கியமான நாள் அதனால் அதை சந்தோசமா உள்வாங்கி மகிழ்ச்சியா இரு… அப்புறம் மணமேடையில் சந்திக்கலாம் பாய்.." என்று அவன் வைத்துவிட… நிலாவோ அவனது வார்த்தைகளில் இருந்த அன்பில் கரைந்து உருகிப் போய் நின்றிருந்தாள்.

**வேளை தொடரும்……..**

புதுமலர்கள் பூத்திடும் வேளை - மதுவதனி

**வேளை - 25-2**

அய்யர் மந்திரங்கள் ஓத… அதை பின்பற்றி சரணும் அந்த புகைமண்டலத்தின் நடுவே அமர்ந்து கூறிக்கொண்டிருந்தான். வாய் மட்டுமே மந்திரங்களை உச்சரித்தது,, அவனின் மனமோ அவனவளின் வரவை ஆவலோடு எதிர்நோக்கி கொண்டிருந்தது. இதற்கிடையில் அய்யர் அவன் கையில் வெற்றிலையை வைத்து நீர் ஊற்ற, அவனோ அதை கவனிக்காமல் நிலா வரும் வழியைப் பார்க்க, அய்யர் கடுப்பாகி அவனது கையில் தண்ணீரை ஊற்றினார். அதில் சுய உணர்வு வந்தவன் ஐயரைப் பார்க்க அவரோ அவனை முறைத்துக் கொண்டிருந்தார்.

"தம்பி சித்த நாழி பொருத்துக்கோங்கோ, முடிஞ்சிடும், இப்படி வேடிக்கை பார்த்தா என் வேலை கெடரது பாருங்கோ…" என்று சரணை முறைத்துக் கொண்டே ஐயர் கூற … சரணின் முகத்தில் அசடு வழிந்தது. பக்கத்தில் நின்றிருந்த சிபி வாய்க்குள்ளே சிரிப்பை அடக்குவதும் சரணின் ஓரக்கண்ணில் தெரிந்தது.. 'ச்சே என்னடா ஆச்சு உனக்கு, இப்படி எல்லாரும் உன்னை காமெடி பீஸ் ஆக்குறாங்க, சரண் பீ ஸ்ட்ராங், நீ தான் இன்னைக்கு ஹீரோ.. சோ அப்படியே கம்பீரமா இருக்கணும் ஓகே…….. ஓகே கெட் ரெடி..' என்று மனதிற்குள்ளே நினைத்தவன் வெளியே தன்னை கம்பீரமாக காட்டிக் கொண்டான், இன்னும் சிறிது நேரத்தில் தான் ஊற்றும் ஜொள் மழையில் அந்த இடமே மிதக்கப் போவது தெரியாமல்.

அதன்பிறகு அய்யர் அகிலாவை அழைத்து எதுவோ கூற, அவள் முகம் யோசனையைக் காட்டியது. அதைப்பார்த்த சிபி என்னவென்று கேட்க அவனிடம் ஒன்றுமில்லை என்று தலையசைத்து விட்டு நேராக ஷானுவின் பெற்றோரிடம் சென்றாள். அவர்களிடம் விசயத்தைக் கூற அவர்களும் உடனே மேடைக்கு வந்து நின்று கொண்டனர். சரணுக்கும் நடந்தது புரிந்துவிட விஜயாவைப் பார்த்தான். அவரும் அவனைத்தான் பார்த்துக் கொண்டிருந்தார். அவர் முகத்தில் நிரந்தரமாக ஒரு புன்னகை ஒட்டியிருந்தது. அதுவே அவரது மகிழ்ச்சியைக் கூற, அவனும் அவரைப் பார்த்து புன்னகைத்துவிட்டு மீண்டும் மந்திரங்களில் தன்னை ஆழ்த்திக் கொண்டான்.

அது பெண்ணின் பெற்றோருக்கு சரண் செய்யும் சடங்கிற்காக அவர்களை அழைத்தார் அய்யர், அதனால் அகிலா சிறிதும் யோசிக்காமல் அந்த இடத்தில் ஷானுவின் பெற்றோரான ரேணுகா-மகேஸ்வரன் தம்பதியை நிறுத்தினாள். இதை எதிர்பார்க்காத விஜயா அகிலாவை நன்றிப்பெருக்குடன் விழிகள் நனைய பார்த்தார்.

புது மலர்கள் பூத்திடும் வேளை - மதுவதனி

சரண் அவர்கள் இருவருக்கும் காலில் பால் ஊற்றிக் கழுவி விட்டுப் பின் சந்தனமும் குங்குமமும் தடவி ஆசீர்வாதம் வாங்க.. ரேணுகா அவரது கழுத்தில் இருந்த செயினைக் கழட்டி சரனுக்குப் போட, மகேஸ்வரனும் அவர் பங்குக்கு தன் விரலில் இருந்த மோதிரத்தைக் கழட்டி போட்டுவிட்டார். அவன் எவ்வளவோ மறுத்தும், அவர்கள் அவனைத் தடுத்து போட்டு விட்டனர்.

சிபியும் அவர்களிடம் தன் பங்கிற்கு தனக்கும் வேண்டும் என்று வம்பு செய்ய, அவர்கள் ஷானவியை அழைக்க சிபி பதறிக் கொண்டு ஓட…. என அந்த இடமே சந்தோசமாக இருந்தது. சரண் வேலைகளை செய்தாளும் அவன் கவனம் இங்கில்லை என்பதை அறிந்த அய்யர் "பொண்ணை அழைச்சிட்டு வாங்கோ" என அறிவிக்க… சரணின் மனமோ அய்யரே நீர் ரொம்ப நல்லவரைய்யா… சிறிது நேரத்தில் உங்களை தவறாக நினைத்து விட்டேன் மன்னித்துக் கொள்ளுங்கள்' என்று கிண்டலாக நினைத்துவிட்டு நிலா வரும் வழியில் தன் பார்வையை பதித்துக் கொண்டான்.

அகிலாவும் அவர்களது உறவினர்களும் நிலாவை அழைத்து வர, சரணின் நிலையை சொல்ல வேண்டியதே இல்லை, ஒப்பனையே இல்லாமல் ஜொலிப்பவள் இன்று திருமண அலங்காரத்தில் அவளது அழகு பன்மடங்காகி மின்னியது. வைத்தக் கண் எடுக்காமல் அவளையே பார்த்துக் கொண்டிருந்தான்.

நிலா மேடைக்கு அருகில் வரவும், அங்கு விஜயாவை பார்த்தவள் அவரின் அருகில் சென்று காலில் விழுந்து ஆசிர்வாதம் வாங்கினாள். அப்போது என்ன முயன்றும் விஜயாவின் அழுகையை கட்டுபடுத்த முடியவில்லை. நிலாவை அணைத்துக் கொண்டு அழுதுவிட்டார், அவளும் அந்த நேரம் அவளது உறவுகளை எண்ணி தாயைக் கட்டிக்கொண்டு அழுதாள். இதை மேடையில் இருந்த பார்த்த சரண் வேகமாய் எழ "தம்பி நீங்க எழக்கூடாது, உட்காருங்கோ" என்றவர் "பொண்ணை அழைச்சிட்டு வாங்கோ நாழியாறது" என மீண்டும் குரல் கொடுத்தார் அய்யர்.

அதன்பிறகு அடிமேல் அடிவைத்து மணமேடைக்கு வந்தவள் சரணின் பெற்றவர்கள் ஸ்தானத்தில் அவன் பக்கம் நின்றிருந்த அகிலாவிற்கும் அவளது கணவனுக்கும் மரியாதை செய்தவள், அவர்கள் காலில் விழுந்து ஆசிர்வாதம் வாங்கிவிட்டு சரணின் அருகில் அமர்ந்தாள். சரணோ வானில் பறந்து கொண்டிருப்பதாக நினைத்துக் கொண்டிருந்தான்.

புது மலர்கள் பூத்திடும் வேளை - மதுவதனி

நிலாவோ ஒருவித இன்ப அவஸ்தையில் நெளிந்து கொண்டிருந்தாள். அவள் நெளிவதைப் பார்த்தவன் “என்ன நிலா விட்டா எழுந்து ஓடிடுவ போல, நல்ல கம்பர்டபிலா உட்காரு” என அவளின் காதோரம் கிசுகிசுக்க, பின்னே நின்றிருந்த சிபியும் ஷானுவும் “நந்து இப்போ நாம பிலிம் பார்க்கவா வந்துருக்கோம், எவ்வளவு புகை வருது அக்காக்கு போட்ட மேக்கப் எல்லாம் இப்போ கலைஞ்சிடுமேனு நானே கவலைபட்டுட்டு இருக்கேன், இங்கே என்னமோ கம்பர்டபிலா உட்காரனுமாமில்ல.. என்னடா நடக்குது..”

“நானே இப்போ ஒரு போட் கிடைக்குமான்னு தேடிட்டு இருக்கேன், இரு உடனே எமர்ஜென்சிக்கு போன் பண்ணி கொண்டுவரசொல்றேன்.. எவ்ளோ தூரம் வந்துடுச்சுன்னு…”

“என்ன வந்துச்சுன்னு சொல்லுடா… எல்லாரும் நம்மளயே ஆர்வமா பார்க்குறாங்க பாரு”

“வேற என்ன.. எல்லாம் நம்ம அண்ணன் விட்ட ஜொள்ளுதான்” என்று இருவரும் சரனை கிண்டலில் இழுக்க.. அவனோ அவர்கள் பேசுவதை எல்லாம் காதில் வாங்காமல் நிலாவைப் பார்ப்பது மட்டுமே தன்வேலை என்பதுபோல் அவளைப் பார்த்து ஜொள்ளிக் கொண்டிருந்தான். நிலாவிற்குதான் மானமே போனது, அவர்கள் சிரிப்பதைப் பார்த்தவள் சரணின் இடையில் தன் கைகொண்டு இடித்துவிட்டு அவனைப் பார்த்து முறைத்தாள்.

நிலா இடிக்கவும் அவளைப் பார்த்தவன் அவள் முறைப்பதைக் கண்டு என்ன என்று புருவத்தை உயர்த்தி கண்களால் கேட்க.. அவளோ கடுப்புடன் பின்னாடி நிற்கும் அந்த வானரங்களை காட்ட, அவனோ அதெல்லாம் ஒரு மேட்டரே இல்லை என்பது போல் மீண்டும் தன் பார்வை எனும் ஆயுதத்தை அவள் மீது ஏவ.. அவளோ உங்களை எல்லாம் திருத்தவே முடியாது என்று நினைத்துவிட்டு தலையை குனிந்து கொண்டாள்.

இவர்களின் திருவிளையாடலை பெற்றவர்கள் பார்த்தாலும் கண்டு கொள்ளாமல் வந்தவர்களை கவனிக்க, அய்யரோ உச்சக்கட்ட கடுப்பில் அமர்ந்திருந்தார். அப்போது அவர் மாங்கல்யத் தட்டை எடுத்து சரணுக்கு நேரே பின்னே நின்றிருந்த ஷான்விடம் நீட்ட, சரணோ தன்னிடம் தான் நீட்டுகிறார் என்று வேகமாய் தாலியை எடுக்கப் போக

புதுமலர்கள் பூத்திடும் வேளை - மதுவதனி

அய்யரோ அவனை முறைத்துவிட்டு “இந்தாம்மா பொண்ணு இதை எடுத்துண்டு போய் பெரியவாகிட்ட ஆசீர்வாதம் வாங்கிண்டு வா” என ஷானவியிடம் கொடுத்தார்.. சுற்றி இருந்த அனைவரும் சிரிப்பை அடக்க பெரும்பாடு பட்டனர். சிபியோ வேகமாய் அந்த இடத்தை விட்டு ஷானவியின் பின்னே ஓடினான் சிரிப்பை கட்டுபடுத்த முடியாமல்….

நிலாவோ சரணின் செய்கையில் ஒருபக்கம் வெட்கம் தாளாமல் தலையை இன்னும் குனிய, மறுபக்கமோ அவனது இந்த செய்கைகளை ரசித்துக் கொண்டிருந்தாள். தன்மீது அவன் வைத்துள்ள காதலை எண்ணி பெருமிதம் கொண்டாள்.

மற்றவர்கள் தன்னைப் பார்த்து சிரிக்கிறார்கள் என்றெல்லாம் யோசிக்காமல் அவனின் அருகில் அமர்ந்து இன்னும் சில நொடிகளில் தன் மனைவியாகப் போகிறவளின் செவ்வானமாய் சிவந்த முகத்தை ஆசையும் ஆவலுமாய் பார்வையால் வருடிக்கொண்டிருந்தான். ஒருவழியாக ஷானவியும் மாங்கல்யத் தட்டை அய்யரிடம் நீட்ட, அவரோ இன்னும் தாமதித்தால் தன்னை ஒரு பொருட்டாக கூட நினைக்காமல் அவனே தாலியை எடுத்துக் கட்டி விடுவானோ என்று சரண் மேல் இருந்த நம்பிக்கையில் பயந்து போய் மாங்கல்யத்தை எடுத்து சரணிடம் நீட்டி “**கெட்டிமேளம் கெட்டிமேளம்**” என்றார்.

அய்யரின் அவசரத்தைப் பார்த்த சரண் அவனும் அவரிடமிருந்து அவசரமாய் வாங்கி நிதானமாய் நிலாவின் கழுத்தில் அந்த பொன்தாலியை கட்டினான். தாலியை வாங்கிய அந்த நொடி நிலாவின் முகத்தில் தோன்றிய மகிழ்ச்சி அதையும் மீறி அவள் கண்களில் வழிந்த கண்ணீர் எல்லாவற்றையும் பார்த்தவன் மூன்று முடிச்சுக்களைப் போட்டுவிட்டு, அவளது கண்ணீரைத் துடைத்து தன் தோளோடு அனைத்துக் கொண்டான்.

நிலாவும் யாரைப் பற்றியும் யோசிக்காமல் அந்த நேரம் அந்த அணைப்பு தேவைப்பட்டது போல் அவனிடம் ஒன்டிக்கொண்டாள். அதன்பிறகு அகிலா மெட்டியை எடுத்துக் கொடுக்க சரண் அதை வாங்கி நிலாவின் பாதங்களை தன்மடி மீதே தாங்கி அந்த மெட்டியை அனுவித்தான்.

புது மலர்கள் பூத்திடும் வேளை - மதுவதனி

# புது மலர்கள் பூத்திடும் வேளை…!

நிலாவும் சரணின் ஒவ்வொரு செய்கைகளிலும், அவனின் காதலை உணர்ந்து பாகாய் உருகிபோனாள். அது அவளது கண்ணில் இருந்து வெளிப்பட்ட கண்ணீரில் தெரிந்தது. சிறிது நேரம் அய்யர் கூறிய சடங்குகளை இருவரும் செய்துவிட்டு பெரியவர்களிடம் ஆசீர்வாதம் வாங்கினர். கீழே இறங்கி விஜயாவிடம் சென்றவர்கள் அவரிடமும் ஆசீர்வாதம் வாங்க அவரும் கண்கள் நிறைய கண்ணீருடனும் மனம் முழுக்க மகிழ்ச்சியுடனும் ஆசிர்வதித்தார்.. தீபகாருண்யத்தில் இருந்தவர்கள் எல்லாரும் மணமக்களை வாழ்த்தினர்.

காசிராமன் நிற்க கூட நேரமில்லாமல் கல்யாண வேளைகளில் இருந்தார், அவரிடமும் ஆசீர்வாதங்களையும் வாழ்த்துக்களையும் பெற, அங்கிருந்த சோபாவில் இருவரையும் சிறிது நேரம் அமரவைத்தனர். அப்போது நிலாவின் சகோதரி முறையில் இருக்கும் இரு பெண்கள் வந்து சரணிற்கு ஆரத்தி எடுத்து ஒரு மாலையும் போட்டனர். அவன் அவர்களைப் பார்க்க நிலாவிற்கு சிரிப்பை அடக்க முடியவில்லை, இன்னும் சிறிது நேரத்தில் இந்த பெண்கள் படுத்தும் பாட்டில் தன் கணவன் என்ன ஆகப்போகிறானோ என்ற எண்ணம் தான் வேறொன்றுமில்லை.

அந்தப்பெண்கள் சரணிடம் “மாமா இது ஒரு சடங்கு.. இப்போ நாங்க என்ன கேட்டாலும் நீங்க கொடுக்கணும், நீங்க வேற ஊருக்கு புதுசு, இந்த பொண்ணு ஊருக்கு புதுசுனு சொல்லுவாங்களே அந்தமாதிரி மாப்பிள்ளையும் ஊருக்கு புதுசு.. அதனால் என்ன கேட்கனும்னு தெரியல, நீங்களே எதாவது கொடுங்க” என்று பெரிய மனது பண்ணி ஒதுங்கினர்..

இப்படியே விட்டுருக்கலாம்.. இந்த ஆர்வக்கோளார் சரண் “அப்படியெல்லாம் நினைக்காதீங்கம்மா, உங்க அக்காவைத்தானே கல்யாணம் பண்ணிருக்கேன், சோ நானும் உங்களுக்கு மாமா தான். என்ன வேணுமோ கேளுங்க தரேன்..” எனவும், நிலாவோ ஐயோ இந்த மனுஷன் வேலியில் போறதை எடுத்து வேட்டியில் விடுறாரே என்ன ஆகப்போகுதோ என்று மனதிற்குள்ளே சரணை வறுக்க.. அந்தப் பெண்களோ “அப்படியா மாமா, நல்லா யோசிச்சி முடிவெடுங்க. அப்புறம் சேதாரத்துக்கு நாங்க பொறுப்பில்லை. தேனக்கா எங்களை திட்டாம பார்த்துக்கணும் சரியா” என்றனர்.

சரணும் “ஓகே” என்றவன் “உங்க அக்கா திட்டுவாளா.. அதெல்லாம் பேசுவாளா”…?

புது மலர்கள் பூத்திடும் வேளை - மதுவதனி

# புது மலர்கள் பூத்திடும் வேளை…!

“என்னாது திட்டுவாளா..வா? இன்னும் கொஞ்ச நேரத்துல நடக்கும் பாருங்க.. சரி வாங்க மாமா எங்களுக்கு என்ன வேணும்னு சொல்றோம்” என்று கிளம்பினார்கள்.

சரணோ எங்கே என்பது போல் நிலாவைப் பார்த்து முழிக்க, அவளோ அவனைப் பார்த்து பல்லைக் கடித்து கொண்டிருந்தாள். அங்குள்ள பெரியவர்களும் இந்த சடங்கில் இதெல்லாம் நடக்கும் என்பதால் அமைதியாக வேடிக்கைப் பார்க்க சரண் மீண்டும் நிலாவைப் பார்த்தான். அவள் “எலி தானா போய் மாட்டுனா விடுவாங்களா… போங்க போய் நல்லா வாங்கிட்டு வாங்க” என்று அவனருகில் வந்து முனுமுனுத்தாள். “என்னடி சொல்ற” என்றவன் அதிலே பாதி பீதியாகி, நிலாவையும் அழைத்துக் கொண்டு அந்தப் பெண்களின் பின்னால் சென்றான்.

அவர்கள் பின்னாடி நிற்கும் ஒரு தென்னை மரத்தின் கீழ் நின்றுகொண்டு “என்ன மாமா இன்னும் ஆரம்பிக்கவே இல்லை, இப்போவே அக்கா பின்னாடி போய் நின்னுட்டீங்க, அது ஒண்ணுமில்ல எங்களுக்கு இந்த மரத்தில் இருக்கும் இளநீர் தான் வேணும் மேலே ஏறி பறிச்சிக் கொடுங்க” என தங்கள் விளையாட்டை ஆரம்பித்தனர். அவனோ “என்னது இளநீயா, இப்போவா அதுவும் இந்த டிரஸ்ல, என்னால் முடியாது, வைட் டிரஸ் வேற அப்புறம் துவைக்க உங்க அக்காதான் கஷ்டப்படுவா.. அதனால வேற எதாவது கேளுங்க” என்றான்.

“அதெல்லாம் முடியாது.. நாங்க பர்ஸ்ட் டைம் கேட்டுருக்கோம், நீங்க இல்லைன்னு சொன்னா அப்புறம் சாமி குத்தமாகிடும், அதனால் கஷ்டப்பட்டாவது ஏறி இளநீர் பறிச்சுக் கொடுங்க..” என

அப்போது எப்பவும் நம்ம கூட இருக்குற டிக்கெட்டுங்க எங்க போச்சு, அதுங்க இருந்தாலும் எப்படியும் காப்பாத்திடுவாங்க. கையில மாட்டட்டும் அப்போ இருக்கு ரெண்டுக்கும். என்று மனதிற்குள் புலம்பியவன் வெளியே கெத்தாக வேறுவழியில்லாமல் மரத்திலேறி இளநீர் பறித்துக் கொடுத்தான். ஒருவழியாக அவர்களின் சடங்கை முடிப்பதற்குள் சரண் நொந்து நூடுல்சே ஆகிவிட்டான். மனைவி ஏன் தன்னை அப்படி முறைத்தாள் என்று அப்போதுதான் அவனுக்குமே புரிந்தது. நிலா அவனை நினைத்து ஒருபுறம் சிரித்தாலும், மறுபுறம் இப்படி கஷ்டப்படுகிறானே என்று வருத்தமும் பட்டாள்.

**வேளை தொடரும்……..**

புது மலர்கள் பூத்திடும் வேளை - மதுவதனி



## வேளை - 26

*******************************************************************************************

இதந்தரும் காதல் கவிதைகள்
படித்திடும் நேரம் இதழோரம்
இனி காமன் கலைகளில் பிறந்திடும் ராகம் புது மோகம்

பூமாலைகள் கொஞ்சும் பாமாலைகள் கெஞ்சும்
உனை மனதால் நினைத்தால் அணைத்தால் அது இனிமை
தோள் சேர்ந்திடும் கங்கை செவ்வாழையின் தங்கை
எனை ஒரு நாள் பல நாள் தொடர்ந்தால் அது புதுமை

கோவிலுக்குள் ஏற்றி வைத்த தீபமல்லவா
காதலுக்குக் காத்திருந்து காட்சி தந்ததோ
இனி வருவாய் தருவாய் மலர்வாய்

**எனை உயிராய் உறவாய் தொடர்வாய்**

**இதந்தரும் காதல் கவிதைகள் படித்திடும் நேரம் இதழோரம்**
**இனி காமன் கலைகளில் பிறந்திடும் ராகம் புது மோகம்**

**************************************************************************************************

சரணும் நிலாவும் சடங்குகளை முடித்துவிட்டு உள்ளே வரவும், சிபியும் ஷானவியும் வெளியே வரவும் சரியாய் இருந்தது. சரண் அவர்கள் இருவரையும் பார்த்து முறைக்க, அவனின் பின்னே நின்றிருந்த நிலா வாயை மூடி சிரித்துக் கொண்டிருந்தாள். அவர்கள் இருவரையும் வித்தியாசமாக பார்த்து கொண்டிருந்த ஷானவி "என்னக்கா….? ஏன் அண்ணா இப்படி இருக்காங்க.." எனவும்,

நிலாவோ சரணைப் பார்த்து மேலும் சிரிக்க "சிரிடி… சிரி…. உனக்கு இருக்கு… முன்னாடியே சொல்லமாட்டியா.. என்னடி சடங்கு இது… இப்படியெல்லாம் நான் கேள்விப்பட்டது கூட இல்லை, உன் தங்கச்சிங்க ரெண்டும் என்னை பழிவாங்கிடுச்சுங்க," என்று பொரிய…

"எதுக்கு இப்போ இப்படி சத்தம் போடுறீங்க… அவங்கதான் ஒன்னும் பண்ண வேண்டாம், நீங்களே எதுவா இருந்தாலும் கொடுங்கன்னு தானே சொன்னாங்க. பெரிய இவராட்டம் முந்திரிக்கொட்டை மாதிரி முந்திட்டு, இப்போ வந்து இங்கே குதிக்கிறது.." என்று அவளும் அவனிடம் எகிற….

மற்ற இருவரும் இவர்களை குழப்பமாக பார்த்தனர். இன்னைக்கு தான் கல்யாணம் ஆச்சு, என்னமோ ரொம்ப நாள் ஆனா மாதிரி இப்படி சண்டை போட்டுக்குறாங்க, என்ன நடக்குது இங்கே என்ற ரீதியில் நின்றிருந்தனர். பிறகு என்ன நடந்தது என்று விசாரிக்க… நிலா அங்கு நடந்ததைக் கூறினாள்.

நிலா கூறியதைக் கேட்டதும் இருவரும் விழுந்து விழுந்து சிரித்தனர். பின் "அண்ணா எதுக்கு உங்களுக்கு இந்த வேண்டாத வேலை, அதான் அவங்களே பெரிய மனசு பண்ணி விட்டுட்டாங்களே, நீங்களும் விட வேண்டியதுதானே, கெத்த காட்டணும்னு நினைச்சீங்களா, அதான் இப்படி ஆகிடுச்சு." என சிபி அவன் கிண்டலில் இறங்க

புது மலர்கள் பூத்திடும் வேளை - மதுவதனி

# புது மலர்கள் பூத்திடும் வேளை…!

சரண் மூவரையும் முறைத்துவிட்டு "முதல்ல நீங்க எங்க போனீங்க சொல்லுங்க" என்றதும். "அது வந்து அண்ணா ஷாவிக்கு ரொம்ப பசி எடுத்ததா அதான் போய் சாப்பிட்டு வந்தோம், இந்தக் குரங்குதான் பசி தாங்காதே, அதனால் நானும் போய் அவளுக்கு கம்பெனி கொடுத்தேன்."

"டேய் குரங்கு சொன்ன கடிச்சிடுவேன்" - ஷானவி

"குரங்கை குரங்குனு சொல்லாம எப்படி சொல்லுவாங்க, ஓ மங்கி சொல்லுவாங்க இல்ல, அதை மறந்துட்டேன், ஓகே இந்த மங்கி பசி தாங்காம என்னை கடிக்க வந்துச்சா அதான் அதுக்கு சாப்பாடு போட அழைச்சிட்டு போனேன்."- சிபி

"நந்தி நீ அடிவாங்கப்போற, கொழுப்பு அதிகமாகிடுச்சா.." - ஷானவி

"ஆமாம் இப்படி சாப்பிட்டா கொழுப்பு அதிகம் ஆகாது, அதுவும் உனக்கு, என்னா வெட்டு அந்த கேசரியை" என்று ஷானுவை கிண்டலடித்தவன் நிலாவிடம் திரும்பி

"அண்ணி சூப்பர் சாப்பாடு, என்ன டேஸ்ட் பொங்கல் வித் சாம்பார், அப்படியே நெய் சொட்டுது கேசரில, சும்மா சொல்லக்கூடாது இட்லி மல்லிகைப்பூவே தான், அவ்ளோ சாப்ட். உங்களுக்கு இதெல்லாம் சமைக்கத் தெரியுமா..? தெரியலன்னா கத்துகோங்க… செமையான சாப்பாடு…"

"இதோ இந்தம்மா எழுந்துக்கவே மாட்டேனுட்டா.. அப்புறம் அங்கே பரிமாறிக் கொண்டிருந்த ஆள் எங்களையே ஒரு மாதிரி பார்த்தார, வேற வழியில்லாமா இழுத்துட்டு வந்துருக்கேன், நீங்க போகும் போது அடுத்த ரவுண்டு கட்டலாம்னு சொல்லிருக்கேன், இல்லை மொத்தக் கேசரியும் முடிஞ்சிருக்கும்" என்று லொடலொட வென பேசிக்கொண்டே இருந்தவன் சரணின் முறைப்பில் அமைதியானான்.

புது மலர்கள் பூத்திடும் வேளை - மதுவதனி

# புது மலர்கள் பூத்திடும் வேளை…!

“ஏண்டா மார்னிங் ஒரு கப் காபி குடிச்சதோட சரி, அதுக்கு அப்புறம் ஒரு டம்ளர் தண்ணிக் கூட கொடுக்கல, ஆனா நீங்க போய் மொத்தமா கொட்டிக்கிட்டே வந்துட்டீங்க, கொஞ்சமாவது எங்களைப் பத்தி நினைச்சீங்களா..? பாரு நிலா எப்படி சோர்ந்து போயிட்டானு,” எனவும் அவள் திருதிருவென முழித்தாள்.

‘இவ ஏன் இப்படி முழிக்கிறா’ என யோசிக்க ஷானு “அக்காதான் மார்னிங் காபியோடு இட்லியும் சாப்பிட்டாங்களே, அச்சச்சோ பசிக்குதாக்கா, நான்தான் மூணு இட்லி பத்தாது இன்னும் ஒன்னு சாப்பிடுங்கனு சொன்னேனே கேட்டீங்களா, இப்போ பாருங்க எவ்ளோ டயர்டா ஆகிட்டீங்க, சரி சரி வாங்க முதல்ல போய் சாப்பிடலாம்,” என சரணை விட்டுவிட்டு நிலாவை இழுத்துக்கொண்டு அகிலாவிடம் சென்றாள்.

சிபியோ அத்தனை நேரம் இருந்த விளையாட்டுத்தனம் போய் தன் அண்ணனை இறுக தழுவிக் கொண்டான், “இப்போதான் அண்ணா ரொம்ப சந்தோசமா இருக்கேன், உங்க ரெண்டு பேர் முகத்திலையும் இருக்க இந்த சந்தோசம், மலர்ச்சி காலம் முழுதும் கூடவே இருக்கனும் என்று கடவுளிடம் வேண்டிக்கிறேன், இதே மகிழ்ச்சியோட அண்ணியை சந்தோசமா பார்த்துக்கனும், வாழ்த்துக்கள் அண்ணா.. உங்கள் கல்யாண வாழ்க்கை சிறப்பாக அமைய”…

“என்னடா பெரிய மனுஷன் மாதிரியெல்லாம் பேசுற, இதெல்லாம் உனக்கு செட் ஆகவே இல்லையே,”

“ஹல்லோ… நாங்க இன்னும் சின்ன பையன் இல்லை. இப்போ md பண்றேன். நாங்களும் டாக்டர்தான், சின்ன பையன் சின்ன பையன்னு சொல்லியே ஒதுக்கி வச்சிடாதீங்க,”

“ஹாஹா ஆமா ஆமா…. நீங்களே சொல்லிக்கிட்டா தான் உண்டு… நான் டாக்டர்.. நான் டாக்டர்” என்று சரண் சிரிக்கவும்,

“அண்ணா” என்று காலை உதைத்து சிணுங்க “இப்போதானே சொன்ன நீ பெரிய ஆளுனு, அதுக்குள்ள சின்னபையன் மாதிரி காலை உதைச்சிட்டு அழற, ஹாஹா நீ

புது மலர்கள் பூத்திடும் வேளை - மதுவதனி

எப்பவும் எனக்கு சின்ன பையன் தான், சரி வா எனக்கு ரொம்ப பசி, அதோட நீ இதெல்லாம் யோசிக்காத, நான் இப்படி இருந்தா நிலா எவ்வளவு சந்தோசப்படுறா, அவளோட மகிழ்ச்சிக்காக நான் என்ன வேணும்னாலும் செய்வேன். ஏன் அது என்னோட உயிரை விடுறதா இருந்தாலும்" என்றவனின் வாயை மூடிய சிபி "இதுக்கு மேல எதுவும் பேசவேண்டாம் வாங்க போகலாம்," என

"சாரி சிபி ஒரு வேகத்துல சொல்லிட்டேன். பட் அது உண்மைதான் உன்கிட்ட சொல்லவில்லை என்றாலும் என் மனதளவில் நான் அப்படி தான் வாழ்ந்து கொண்டிருக்கிறேன், அவள் இல்லாத வாழ்க்கை எனக்கு சூனியம் தான். நான் உளருவதைப் போல் தோன்றினாலும் நீயும் ஒருநாள் புரிந்து கொள்வாய். அதற்கு உனக்கும் காதல் வரவேண்டும்," என்றவன் "போகலாம் எனக்கு ரொம்ப பசி."

"அப்போ சீக்கிரம் வாங்க சாப்பிடலாம்," - சிபி

"அடப்பாவிங்களா… அடுத்த ரவுண்ட்டா… என்ன ஒரு வில்லத்தனம், என்னை சாப்பிடக்கூடாதுனு சொல்லிட்டு அவளுக்கு மட்டும் ஊட்டி விட்டுருக்கீங்க, சரண் உனக்கு இன்னைக்கு நேரமே சரியில்லடா, நீயும் சீக்கிரம் போ இல்லை மொத்தமா பட்டினி போட்டுடுவாங்க" என்று புலம்பிக் கொண்டே நிலாவின் அருகில் வந்து இடித்துக் கொண்டு நின்றான், அவளோ அவனைக் கண்டுகொள்ளாமல் அகிலாவிடம் அவர்களின் உறவினர் பற்றி பேசிக்கொண்டிருந்தாள்.

அதைப்பார்த்தவன் அவளிடம் குனிந்து "சாப்பாடு எப்போ போடுவாங்க நிலா, உன் பாவா வீர சாகசம் பண்ணிட்டு வந்துருக்கேன், என்னைக் கவனிக்காம உங்க சொந்தக்காரங்ககிட்ட பேசிட்டு இருக்க, இதுதான் இப்போ ரொம்ப முக்கியமா," என்று அவளிடம் சிணுங்க…

பேசுபவர்களை விட்டுவிட்டு கணவனை விழி விரிய பார்த்தாள். இந்த சரண் அவளுக்கு முற்றிலும் புதியவன். இத்தனை நாள் அவர்கள் போனில் பேசி இருந்தாலும் நிலாவிற்கு இன்னும் சில தயக்கங்கள் போகவில்லை, மேலும் அவள் இன்னும் அவனிடம் முழுமையான உண்மையக் கூறவும் இல்லை அதனால் எழுந்த குற்ற உணர்ச்சி அவனிடம் இருந்து அவளைத் தள்ளியே வைத்தது.

புதுமலர்கள் பூத்திடும் வேளை - மதுவதனி

ஆனால் சரணுக்கு அதெல்லாம் இல்லை, என்றைக்கு அவளை முதன்முதலாக பார்த்தானோ அன்றிலிருந்தே அவளுடன் மனதார வாழ்ந்து கொண்டிருந்தான். அதனால் அவனுக்கு எந்தவித தயக்கங்களும் நிலாவினிடத்தில் இல்லை. அதுவே நிலாவையும் தன் தயக்கங்களை உடைத்து அவனுடன் பழக வைத்தது.. அதனால் இருவரும் ஒருவருக்கொருவர் உண்மையான மகிழ்ச்சியை வெளிப்படுத்தி அன்புடன் களித்தனர் தான். ஆனால் இந்தளவு ஒரு குறும்பு பிடித்த சரணை அவள் முற்றிலும் எதிர்பார்க்கவில்லை. அதை அவள் கண்களே காட்டிக்கொடுத்தது.

அதை புரிந்தவன் இன்னும் அவள் அருகில் நெருங்கி

***"விழியிலே மலர்ந்தது...***
***புவியிலே கலந்தது..***
***பொன்னென்று பெண்ணழகே ...***
***அடடா எங்கெங்கும் உன்னழகே..."***

என்று பாட.... நிலா அவளையும் அறியாமல் சரணின் தோளில் சாய்ந்திருந்தாள்.

அப்போது "அண்ணா நாங்க எல்லாரும் இங்கேதான் இருக்கோம்" எனவும் நிலா அவசரமாக விலக, அவளை ஒரு கையால் தடுத்தவன் மறுகையால் சிபியின் முதுகில் ஒரு அடியைப் போட்டு "அவ உன்னை நந்தின்னு திட்டுரதுல தப்பே இல்லை, நல்லா பார்க்குற கரடி வேலை.. போடா போய் முதல்ல சாப்பாட்டுக்கு ஏற்பாடு பண்ணு, இல்லை உங்க அண்ணியைத் தான் கடிச்சி திங்கணும்" என்றான்.

அதன்பிறகு நிலாவிடம் திரும்பி "நிலா அத்தை ரொம்ப நேரம் உட்கார்ந்தே இருக்காங்க பாரு, யாருக்கிட்டயாச்சும் சொல்லி கொஞ்சம் படுக்க வைக்க சொல்லு, அப்புறம் பாடி பெயின் எடுக்கும் நைட் தூங்க கஷ்டப்படுவாங்க." என....

"ம்ம் சரி... இருங்க நான் போய் சொல்லிட்டு வரேன்," என்று நகர அவளை நகர விடாமல் பிடித்தவன் அகிலாவிடம் திரும்பி "அக்கா அத்தையை கொஞ்சம் ரெஸ்ட் எடுக்க சொல்லுங்க" என்றான்.

புது மலர்கள் பூத்திடும் வேளை - மதுவதனி

# புது மலர்கள் பூத்திடும் வேளை...!

“இல்ல சரண் நான் அப்போவே கேட்டேன், அவங்கதான் கொஞ்சம் போகட்டும் நானே சொல்றேனு சொல்லிட்டாங்க, முதல்ல வாங்க நீங்க ரெண்டு பெரும் சாப்பிடுங்க” என்று உணவறைக்கு அழைத்துச் சென்றார்.

அதற்கு முன்னரே சிபியும் ஷானவியும் இவர்களுக்கு அருகில் உட்கார இடம் பிடித்து இருந்தனர். புகைப்படம் எடுப்பவர் கூறியது போல் சரணும் நிலாவும் ஒருவருக்கொருவர் உணவை ஊட்டியும், பார்வையால் தழுவிக்கொண்டும் இருந்தனர். இதைபார்த்து மற்ற இருவரும் கிண்டலில் இறங்க.. நால்வரும் கிண்டலும் கேலியுமாய் உணவை முடித்துக் கொண்டு வெளியில் வந்தனர்.

சிறுவயதில் மரமேறி விளையாடி இருந்தாலும், இன்று மரமேறியது சரணுக்கு உடல்வலியை கொடுத்தது. அதை வெளிக்காட்டாமல் எல்லோரிடமும் பேசிக்கொண்டிருந்தான். அப்போது நிலாவின் சொந்தத்தில் ஒருவர் அங்கு வந்து “கோயிலுக்கு போயிட்டு வந்துடலாமா மாப்பிள்ளை, இனி சாயங்காலம் ரிசப்சன் வேற இருக்கே, இப்போவே மணி 10.30, ஆகிடுச்சு. 12.00 மணிக்கு நடை சாத்திடுவாங்க, அரை மணி நேரத்தில் போய்டலாம், என்ன சொல்றீங்க” எனவும்...

“பக்கம் தானே போயிட்டு வந்துடலாம், நாலு மணிக்கு மேல எல்லாரும் வர ஆரம்பிச்சிடுவாங்க, அப்புறம் ரொம்ப கஷ்டம், நாளைக்கு காலையில் நாங்க கிளம்பனும், டைம் இருக்காது அதனால் இப்போவே போயிட்டு வந்துடலாம்.”

சிபி-ஷானு மற்றும் அகிலாவின் குடும்பம் சகிதம் நிலாவும் சரணும் வீரபாண்டி கோவிலுக்கு தங்கள் பயணத்தை தொடர்ந்தனர். ஸ்ரீ கௌமாரி அம்மனைத் தரிசித்து விட்டு முல்லையாற்றின் கரையில் அமர்ந்திருந்தனர் அனைவரும். குழந்தைகள் இருவரும் தண்ணீரில் குதிக்க, அவர்களுடன் சேர்ந்து சிபியும் ஷானுவும் ஆட்டம் போட்டனர். அப்போது சரண் எழுந்து நிலாவை அழைத்துக் கொண்டு பக்கத்தில் இருந்த மாந்தோப்புக்குள் நுழைந்தான்.

“பாவா இங்க யாரையும் உள்ளே விட மாட்டாங்க, சத்தம் போடப்போறாங்க, வாங்க போய்டலாம்”-நிலா

புது மலர்கள் பூத்திடும் வேளை - மதுவதனி

"அதெல்லாம் யாரும் கத்தமாட்டாங்க, பெர்மிசன் வாங்கியாச்சு.. நீ சும்மா தவளை மாதிரி கத்தாம என்கூட வா"

"என்ன நான் தவளை மாதிரி கத்துறனா, உங்களை என்ன பண்றேன் பாருங்க" என்று அவனை அடிக்க துரத்த, அவனும் அவளது கைக்கு சிக்காமல் ஓடினான். ஒரு கட்டத்தில் மரத்தின் மீது சாய்ந்து அவளிடம் விரும்பியே மாட்டிகொண்டான்.

அவனைப் பிடித்தவள் "நான் பேசுறது தவளை கத்துரமாதிரியா இருக்கு, சொல்லுங்க.. இப்போ சொல்றீங்களா இல்லையா" என அவனது சட்டையைப் பிடித்துகொண்டு குதிக்க,

அவனோ அவளது செய்கையிலும், அருகாமையிலும் நிலை தடுமாறி இருந்தான். அவன் அவளது கைகளை விளக்கி, அவளை மரத்தின் மீது சாய்த்து இருபக்கமும் கைகளை ஊன்றி அரணாக வைத்துக் கொண்டு அவளைப் பார்த்தான்.

இப்போது அவள்தான் அவனது செய்கையில் நிலை தடுமாறி இருந்தாள். அதுவரை அவளிடம் விடைபெற்றிருந்த நாணமும், தயக்கமும் வந்து ஒட்டிக்கொள்ள, அவனை நிமிர்ந்து பார்க்க முடியாமல் திணறினாள். அவளது அவஸ்தையை ரசித்தவன், ஒரு விரலால் முகத்தை நிமிர்த்தி என்ன என்று புருவத்தை உயர்த்த, அவளோ அவனைப் பார்க்கும் சக்தியின்றி இமைக்கதவுகளை மூடிக்கொண்டாள்.

விழிகள் மூடி, இதழ்கள் துடிக்க, ஒரு வித மயக்கத்தில் நின்றிருந்தவளைப் பார்த்தவன், அதற்கு மேல் தன்னைக் கட்டுப்படுத்தும் திறனின்றி அவளது வதனத்தை கைகளில் ஏந்தி நெற்றியில் மென்மையாக தன் முதல் முத்தத்தை பதித்தான், அதில் அவள் சிலிர்க்க, மேலும் முன்னேறி அவளது மூடிய இமைகள், செம்பவளக் கன்னங்கள் என்று வலம் வந்தவன் அவளது இதழுக்கு வந்ததும் தன் விரலால் ஒருமுறை வருடி, அதில் தன் இதழை அழுத்தமாக பதித்தான். அந்த முத்தத்தின் மூலம் இருவரும் தங்களுக்குள் உள்ள காதலை வெளிப்படுத்த ஆரம்பித்தனர்.

புது மலர்கள் பூத்திடும் வேளை - மதுவதனி

# புது மலர்கள் பூத்திடும் வேளை...!

எத்தனை நேரம் நீடித்ததோ மரத்தில் இருந்து ஒரு மாங்காய் கீழே விழுந்த சத்தத்தில் இருவரும் சுய உணர்வு வந்து பிரிந்தனர். நிலாவின் முகம் அந்திவனமாய் சிவந்துவிட, கால்கள் இரண்டும் தொய்ந்து அவன் மேலேயே சரிந்து விழுந்தாள். அவளின் நிலை புரிந்து அவளை தன்னுடனே இறுக்கி அணைத்துக் கொண்டான். அவளும் தனக்கும் இதுதான் வேண்டும் என்பது போல அவனை இறுகக் கட்டிக்கொண்டு அவனுக்குள்ளே புதைந்து போனாள்.

அவளது அணைப்பில் சரணின் நிலைதான் பரிதாபமானது, யாரேனும் தங்களைத் தேடி வந்து விடுவார்களோ என்று சுற்றிலும் பார்த்து மனைவியிடம் "நிலா ஐ கான்ட் கண்ட்ரோல் மைசெல்ப்", என்றபடியே அவனது கைகள் எல்லை மீற, நிலா அவனது வார்த்தையிலும் குரலிலும் உள்ள தாபத்தில் மெய் சிலிர்த்து தான் போனாள்.

"பாவா ப்ளீஸ்... போகாலம், நம்ம வந்து ரொம்ப நேரமாச்சு, நம்மளைத் தேடி யாரும் வந்துட்டா மானம் போய்டும்...." அவனிடம் நெளிந்து கொண்டே கூறினாள் நிலா..

"ம்ம் போகலாம்.. போகலாம்... அதோட நம்மளைத் தேடி யாரும் வரமாட்டங்க, அதுக்குத்தான் ரெண்டு பாடிகார்ட்ஸ் வச்சிருக்கேன்" என்று கண்சிமிட்ட அவன் யாரை சொல்கிறான் என்பது புரிந்ததும்.. "பாவா நீங்கதான் அவங்க ரெண்டு போரையும் கெடுக்கிறீங்க, சின்ன பிள்ளைங்ககிட்ட போய் இந்த மாதிரி வேலை கொடுப்பீங்களா.." எனவும்...

"யாரு நானு... நான்... அதுங்களை கெடுக்கிறேன். அப்படி நீ நெனச்சிட்டு இருக்க... உன்னையெல்லாம் என்ன சொல்ல, அவங்க என்னை கெடுத்தா பத்தாது, இந்த தோப்பு ஐடியா கொடுத்ததே அவங்கதான், நான் வேணாம்னு சொல்ல சொல்ல கேட்காம அந்த தோப்பு காவல்காரர்கிட்ட போய் பெர்மிசன் வாங்குறவரை எல்லாம் அவங்க வேலைதான்..."

"இதுல நான் வேலை கொடுக்கிறேனா... இப்படி ஒரு தத்தியை வச்சு நான் எப்படி காலம் தள்றது, எல்லாம் அதுங்க ஐடியா தான், நாம போனாதான் கிளம்புவாங்க,

புது மலர்கள் பூத்திடும் வேளை - மதுவதனி

அதுவரைக்கும் யாரும் நம்மளை தேட மாட்டங்க, சரி விடு உன்கிட்ட கொஞ்சம் பேசணும் இப்படி வா..” என்று அழைத்தவன் அங்கிருந்த தரையை ஒட்டித் தொங்கி கொண்டிருந்த மரத்தின் கிளையில் அமர்ந்து அவளையும் தன் அருகில் அமர்த்திக் கொண்டான்.

தன் கைவளைவில் அவளை கொண்டு வந்தவன் “நிலா நான் சொல்ல வர்றதை பொறுமையா கேட்கணும், சொல்லி முடிச்சதுக்கு அப்புறம் நீ என்ன சொல்லணுமோ சொல்லு,” என்றதும் அவள் தலையை உருட்டி சம்மதிக்கவும், அந்த உருட்டிய தலையை இழுத்து தன் மார்பில் அழுத்தியவன் சில நொடிகள் அமைதியாக இருந்தான்.

பிறகு “நிலா உன்னை அந்த கேலரில பார்த்த அந்த நிமிசத்துல இருந்து இப்போ வரைக்கும் என்னோட உயிர் உனக்காகத்தான் துடிக்குதுனு நான் சொன்ன நீ நம்புவியா..? ஏதோ சிலமணி நேரம் பார்த்த ஒரு பொண்ணு மேல நான் இவ்ளோ பைத்தியமா ஆவேனு நினைச்சிக்கூட பார்த்ததில்லை. ரவியிடம் நான் முதலில் உன்னைப்பற்றி சொல்லும்போது நான் ஏதோ புலம்புவதாக நினைத்தான்.

அப்போது அவன்தான் சிலநாள் அவளைப்பற்றி யோசிக்காமல் இரு, அவள் நினைவே மறைந்து விடும், அந்த சிலநாட்கள் கழிந்த பிறகும் மறக்க முடியாமல் அவளின் நினைவு இருந்தால் அது காதல் தான் என்றான். அப்போது அவன்தான் புலம்புவதாக் எனக்குப்பட்டது. இப்போது இவனிடம் பேசி புரியவைக்க முடியாது, கொஞ்சநாள் போகட்டும் என்று இருந்தேன்.

அதே நேரம் எனக்கும் டெல்லி செல்ல வேண்டிய கட்டாயம், ஆனால் அந்த சிறு பிரிவு கூட முடியவில்லை என்னால். அதன் பிறகுதான் உன்னை உடனே பார்க்க வேண்டும், உன்கூடவே இருக்க வேண்டும், போன்ற எண்ணங்கள் தீ போல எனக்குள் பரவ ஆரம்பித்தது. அதோடு டெல்லியிலும் போன வேலை இழுத்தடித்து நான் வர தாமதமாகி விட்டது.

எத்தனை ஆசை தெரியுமா, ரயில்வே ஸ்டேஷனில் இருந்து நேரே உன்னைப் பார்க்க தான் வந்தேன் உன் வீட்டுக்கு, ஆனால் வீடு பூட்டி இருக்க மனம் முழுதும் சொல்ல முடியாத வேதனை, யாரிடம் கேட்டாலும் தெரியாது, தெரியாது என்ற பதில் தான்.

புதுமலர்கள் பூத்திடும் வேளை - மதுவதனி

உன்னுடைய கல்லூரியிலும் அதே பதில்தான். ஒரு கட்டத்தில் என்னடா வாழ்க்கை என்ற சலிப்பு, அதனால் எல்லார் மீதும் கோபம் என்று என்னுடைய கேரக்டரே மாற ஆரம்பித்தது.

அதை தெரிந்து தான் இந்த வானரங்கள் ரெண்டும் ரவியைப் போட்டு டென்சன் ஆக்கி உண்மையைக் கண்டுபிடித்து இருக்கிறார்கள். அவனும் என்னிடம் பேசிப்பார்த்தான் எங்கே நான் பிடி கொடுக்கவே இல்லை, அவனும் சிங்கப்பூரில் இருப்பதால் அவனிடம் இருந்து தப்பிப்பது ஈசியாகி போனது.

இப்படியே வாழ்க்கை முடிந்துவிடுமோ என்ற ஏக்கத்தின் பிடியில் நான் இருக்கும்போதுதான் மீண்டும் உன்னை குற்றாலத்தில் பார்த்தேன்." என்றவன் அந்தநாள் நினைவில் சிறிது அமைதியானான். அப்போது அவனது நெஞ்சை இதமாக நிலா வருட.. அந்த கையைப் பிடித்து அந்த மருதாணி விரல்களுக்கு முத்தமிட்டவன்.. "அப்போ அந்த நிமிஷம் தான் நான் இத்தனை நாள் உயிர் வாழ்ந்ததற்கான அர்த்தம் வெளிப்பட்டது. இனி எந்த ஒரு நிலையிலும் உன்னை விட்டு விடக்கூடாது என்று முடிவு செய்தேன். அதன் பிறகு நடந்தது தான் உனக்குத் தெரியுமே.." என்றவன்.

"உன்னை ஒரு கட்டாயத்தில் மணந்ததாக நீ நினைக்கிறாயோ என்ற பயம் வேறு... உன்னிடம் பேசினால் மறுத்து விடுவாயோ என்றுதான் சிபி ஷானவியை விட்டு உன்னிடம் பேச வைத்தேன். ஆனாலும் உன்னிடம் எப்போதும் ஒரு தயக்கம் இருந்து கொண்டே இருந்தது, அது நான் உன்னிடம் பேசும்போது எதிர்வினையாக செயல்பட்டு இந்த திருமணம் வேண்டாம் என்று சொல்லிவிடுவாயோ என்ற கவலை வேறு, நீ கேட்டு என்னால் மறுக்கவும் முடியாது.

அதனால் தான் திருமணத்தை உடனடியாக வைக்க வேண்டும் என்று நினைத்தேன், அப்படி இருந்தும் இரண்டு மாதம் ஆகிவிட்டது. உன் கழுத்தில் இந்த தாலியைக் கட்டி எனக்கு நீ சொந்தமாகும் வரை எனக்குள் ஒரு படபடப்பு இருந்து கொண்டே இருந்தது. அந்த உணர்வுகளை சொல்லமுடியாது ஒருவிதமான பயம் நீ எனக்கு இல்லையோ, இல்லை கடைசி நிமிடத்தில் இந்த திருமணம் நடக்காமல் போய்விடுமோ இப்படி எல்லாம் தோன்றி கொண்டே இருந்தது.

புது மலர்கள் பூத்திடும் வேளை

அதோடு உன்னுடைய கடந்தகாலம் அதை நினைத்து… அதை என்னிடம் சொல்ல தயங்கி, நான் அதை எப்படி எடுத்துக் கொள்வேன் என்பதையெல்லாம் போட்டு நீ குழப்பிக் கொளவதாக வேறு தோன்றியது. நீ தவறே செய்திருந்தாலும் என்னால் உன்னை விட முடியாது நிலா. அப்படியிருக்க உன்மேல் தவறே இல்லையெனும்போது உன்னை எப்படி விடுவேன். அதனால் உன்னுடைய கடந்த காலம் எனக்கு ஒரு பொருட்டே இல்லை. நீ பயப்பட வேண்டிய அவசியமே இல்லை.”

“அதோடு காசிராமன் அங்கிள் தான் எல்லாவற்றையும் என்னிடம் சொல்லி விட்டாரே இனியும் என்ன இருக்கிறது. நீதான் என்னிடம் எதையும் மறைக்கவில்லையே. நான் உன்னிடம் இதைதான் எதிர்பார்த்தேன், என்னை முழுதாக நம்பி என்னிடம் எதையும் மறைக்காமல் உண்மையைக் கூற வேண்டும். அது தப்போ சரியோ அதனால் வரப்போகும் பிரச்சினையை நாம் இருவரும் நேரடியாக சந்திக்கலாம். நம் இருவருக்கிடையே எந்த ஒரு ஒளிவும் மறைவும் இருக்கக்கூடாது என்பது என் எண்ணம்.”

“இப்போது தான் மனம் நிம்மதி அடைந்து அமைதியாக இருக்கிறது. அப்புறம் அத்தை இன்னும் தனியாக சமாளிக்க பழகவில்லை இல்லையா. அதனால் நாளை அங்கு நம்வீட்டுக்கு சென்று ஒருவாரம் அங்கு தங்கிவிட்டு பிறகு இங்கு வந்து இருந்துகொள்.

இன்னும் சிலநாட்கள் அத்தையை தனியாக விட வேண்டாம் என்று சொல்லி இருக்கிறார்கள். முன்னமே உன்னிடம் சொன்னால் நீ இந்த திருமணத்திற்கு ஒத்துக்கொள்ள மாட்டாய் என்பதால் அத்தை இதை மறைத்து விட்டார்கள்.”

“அத்தை சரியாகும் வரை அங்கேய இரு… நான் வாரமொருமுறை வருகிறேன். வீட்டிலும் எல்லோரிடமும் பேசிவிட்டேன், அவர்களுக்கும் இதில் சம்மதம்தான். இப்போதைக்கு என்னுடைய திட்டம் இவ்வளவுதான் உனக்கு இதில் மாற்றுக்கருத்து இருந்தால் சொல்லு, முடிந்தால் மாற்றிகொள்ளலாம்.” என்று தன் நீண்ட உரையை முடித்து தன் மார்பில் சாய்ந்து இருந்தவளைப் பார்க்க அவளோ கண்மூடி உறங்கிக் கொண்டிருந்தாள்.

புது மலர்கள் பூத்திடும் வேளை - மதுவதனி

# புது மலர்கள் பூத்திடும் வேளை…!

"அடிப்பாவி!!!!!!!!!!!!!!!!!… இவ்ளோ மோசமாவா இருந்துச்சு நான் பேசுறது, இப்படி தூங்கிட்டா… மனுஷன் கஷ்டப்பட்டு அவனோட பீலிங்க்ஸ் சொல்றானே, அதே மாதிரி பீல் பண்ணலைனாலும் பரவாயில்லை, கொஞ்சமாவது காது கொடுத்துக் கேட்டு இருக்கலாம்" என்று புலம்பியவனை 'உன்னோட பேச்சை காது கொடுத்து கேட்டதுனால தான் இப்படி தூங்கிருக்கா, அதான் இன்னும் எத்தனை காலம் இருக்கு, அப்போ எல்லாம் பேசுறது, கல்யாணம் முடிஞ்ச அன்னைக்கே இவ்ளோ பேசுனா தூங்காம என்ன செய்வா' என்று அவனது மனசாட்சி சாட.. "ச்சே என்னடா இது" என தன்னையே நொந்தவன் குனிந்து அவளைப் பார்க்க அவளோ கண்கள் மூடி இருந்தாலும் உதடுகள் மட்டும் புன்னகையில் லேசாக மலர்ந்திருந்தது.

அதைப்பார்த்தவன் 'ஓ மேடம் நடிக்கிறாங்களா, இப்போ பாருடி என்ன செய்றேனு' என்று நினைத்தவன் நொடியும் தாமதிக்காமல் மலர்ந்த அவளின் செவ்விதழ்களில் தேனை உறிஞ்சும் வண்டுபோல் தன் இதழைப் பதித்து அவள் இதழ்தேனைப் பருக ஆரம்பித்தான் அந்தக் காதல் கள்வன்.

கணவனின் முத்தத்தில் முதலில் அதிர்ந்தவள் பிறகு அவனின் விருப்பத்திற்கு ஈடு கொடுத்து அவளும் அவனோடு சேர்ந்து அதை ரசிக்க ஆரம்பித்தாள். அப்போது நிலா "பாவா பாட்டு ப்ளீஸ்… எனக்காக ஹ்ம்ம்" என செல்லமாய் மூக்கை உறிஞ்சு கண்களை சுருக்க, அந்த அழகில் மயங்கியவன் அவளுக்காக தன் மனதில் இருக்கும் வரிகளை பாட ஆரம்பித்தான்.

**பொன்மாலை நேரங்களே என் இன்ப ராகங்களே**
**பூவான கோலங்களே**
**தென் காற்றின் பிம்பங்களே தேனாடும் ரோஜாக்களே**
**என்னென்ன ஜாலங்களே**

**கண்ணோடு தோன்றும் சிறு கண்ணீரில் ஆடும்**
**கைசேரும் காலம் அதை என் நெஞ்சம் தேடும்**
**இது தானே என் ஆசைகள்**
**அன்பே….**

**என் இனிய பொன் நிலாவே**
**பொன்நிலவில் என் கனாவே**
**நினைவிலே புது சுகம்**
**தொடருதே தினம் தினம்**

பாடிமுடிப்பதற்காகவே காத்திருந்தது போல் சரணின் அலைபேசி ஒலித்தது. அதில் உணர்வுக்கு வந்தவன் அவளைப் பார்க்க, அவள் இன்னும் அந்த மயக்கத்திலே இருப்பது புரிய அந்தக் கிளையில் இருந்து இறங்கியவன் அவளையும் தன் கைவளைவிலேயே வைத்துக்கொண்டு போனை எடுத்துக் காதுக்கு கொடுத்தான். அந்தப்பக்கம் ரவிதான்....

“டேய் மச்சி எங்கடா இருக்க.. நாங்க தேனீ வந்துட்டோம்... ஈவ்னிங் ஸ்ட்ரெயிட்டா ரிசப்சனுக்கே வந்துடட்டா, இல்லை இப்போ வரவா, ஆதிராவும் வந்துருக்கா, நான் சித்தப்பா வீட்டுக்கு போயிட்டு மொத்தமா வந்துடுறேன் என்ன சொல்ற...”

“அதான் எல்லாமே நீயே சொல்லிட்டியே அப்புறம் என்ன”

“டேய் கோவிச்சுக்காதே மச்சி, உனக்கு தெரியுமே ஆரா இப்போ ப்ரெக்னன்ட் வேற, நான் வேண்டாம்னு சொல்லியும் கேட்காம வந்துருக்கா, ஏதும் ப்ராப்ளம் ஆகாம ஊருபோய் சேரனும் இல்ல அம்மாவும், அப்பாவும் எனக்கு டின் கட்டிடுவாங்க, நீ என்ஜாய் பண்ணு மச்சி, ரிசப்சன்ல உனக்கு முன்னாடி நான் இருப்பேன், ஓகே”...

“ம்ம் ஆரா பேரை சொன்னதுனால தப்பிச்சே, இல்லை உன்னை உண்டு இல்லை பண்ணிருப்பேன், ஓகே சீக்கிரம் வாங்க, நாங்க இங்க பக்கத்துல கோயிலுக்கு வந்தோம், கிளம்பிட்டு இருக்கோம்”

“ம்ம் எனக்குத்தான் தெரியுமே, ஒரே ரொமான்ஸ் சீனா ஓடுதாமே, கேள்விப்பட்டேன், முல்லையாறு ஒன்னே போதும் சரண் விடுற ஜொள்ளாறு வேண்டாம்னு தேனீ மக்கள் எல்லாம் போராட்டம் பண்றாங்களாம் அப்படியா..”

“அதுக்குள்ள உனக்கு யார் சொன்னா, அப்படியே இருந்தாலும், உங்களை விட கம்மிதான், டெல்லி ரயில்வே ஸ்டேசன்ல நடந்ததுல ஒரு ட்ரோப் கூட நான் பண்ணல, நீ என்னை சொல்றியா... போ..போ.... நீயெல்லாம் என்னை ஓட்டிட்டு இருக்க, பின்னாடி திரும்பி பாருடா ஆரா கல்லோட நிப்பா”

# புது மலர்கள் பூத்திடும் வேளை...!

“மகனே உனக்கு இன்னைக்கு இருக்குடா... இன்னைக்கு வந்து உன்னைப்பத்தி தேனுக்கிட்ட எல்லாத்தையும் சொல்லி உனக்கு ஆப்பு ரெடி பண்ணால நான் ரவி இல்லடா..”

“ஹாஹா... வாழ்த்துக்கள் Mr. ரவீந்திரன், உங்கள் வரவு நல்வரவாகுக...! சீக்கிரம் வந்துசேரு பன்னாடை, நான் வெயிட் பண்றேன்..”

“ம்ம் சரிடா.. அப்புறம் சீக்கிரம் ரெண்டு பேரும் தோப்பை விட்டு வெளியே போங்க, அந்த வானரங்கள் ரெண்டும் உங்களுக்காக வெயிட் பண்ணிட்டு இருக்குங்க, அக்காவும் மாமாவும் பசங்களை கூப்பிட்டு கால்டாக்சில போய்ட்டாங்களாம், அவனால் அந்த மங்கிய சமாளிக்க முடியலயாம், ஒரு கடை விடாம எல்லா கடையிலையும் போய் கொட்டிக்கிட்டு இருக்காளாம், சீக்கிரம் போங்க, இல்லை அவனை அடமானம் வச்சிர போறா”

“ஹாஹா எங்க போனாலும் இதுங்க மட்டும் திருந்தாதுங்க, சரிடா நாங்க கிளம்பிட்டோம், ஈவ்னிங் பார்க்கலாம், பாய்” என்று போனை வைத்துவிட்டு நிலாவைப் பார்த்து நிலா “அக்காவும் மாமாவும் கிளம்பிட்டாங்களாம், நாமளும் போவோம், ஐ நீட் சம் ரெஸ்ட்,” எனவும், சரி என்று தலையை உருட்ட, ஆனாலும் முகத்தில் சிறு யோசனை தெரிந்தது.

“என்ன யோசனை நிலா, என்கிட்டே ஏதும் சொல்லனுமா...” எனவும்

“அதுவந்து பாவா நான் ... நான் உங்ககிட்ட ஒன்னு சொல்லனும்,” என்று இழுக்க அந்த நேரம் சிபியிடம் இருந்து போன் வந்தது...

அதை எடுத்தவனிடம் “அண்ணா இவ தின்கிற தீனியப் பார்த்தா என்னை வித்துட்டு தான் வருவா போல, சீக்கிரம் வந்து என்னை காப்பாத்துங்க,” என்று அந்தப்பக்கம் சிபி கத்த, சரண் சிரித்துக் கொண்டே “கிளம்பிட்டோம் டா, வரோம் இரு...” என்று போனை வைத்துவிட்டு நிலாவை அழைத்துக் கொண்டு வெளியில் வந்தான். நிலா தான் சொல்ல வந்ததை சொல்ல முடியாமல் போனதில் மிகவும் வருத்தப்பட்டாள்.

புதுமலர்கள் பூத்திடும் வேளை - மதுவதனி

# புது மலர்கள் பூத்திடும் வேளை…!

பின் எப்படியும் இன்றைக்கு சொல்லிவிட வேண்டும் என முடிவெடுத்தவுடன் தான் அவளுக்கு மனம் லேசானது. அதன்பிறகு அவளும் அவனுடன் கைகோர்த்துக் கொண்டு அவனுடன் நடந்தாள். மனைவி தன்மேல் காட்டும் உரிமையில் அவனும் அவளின் தோள்மேல் கைகளைப் போட்டு அவளை அணைத்தவாறே தோப்பைவிட்டு வெளியேறினான்.

**வேளை தொடரும்……..**

புதுமலர்கள் பூத்திடும் வேளை - மதுவதனி

# புது மலர்கள் பூத்திடும் வேளை...!




வேளை - 27

*************************************************************************************************

மாவிலைத் தோரணம் ஆடிய காரணம்
தேவியின் திருமணமோ
ஆலிலையோ தொட ஆளில்லையோ
அதில் ஆடிடும் என் மனமோ

காதலின் பல்லவியோ - அதில்
நான் அனுபல்லவியோ
மஞ்சத்திலே ஏழு ஸ்வரம்
இன்பத்திலே நூறு வரம்
மிதந்து மறந்து மகிழந்த நெஞ்சத்தில்

இன்றைக்கு ஏன் இந்த ஆனந்தமே
இன்பத்தில் ஆடுது என் மனமே
கனவுகளின் சுயம்வரமோ
கண் திறந்தால் சுகம் வருமே

*************************************************************************************************

புது மலர்கள் பூத்திடும் வேளை

முன்பக்கம் சரண் அமர்ந்திருக்க அவனருகில் உட்கார்ந்து காரை ஓட்டிக்கொண்டு வந்தான் சிபி. பின்பக்கம் நிலாவும் அவளது மடியில் ஷானவியும் படுத்திருக்க, நால்வரும் வீட்டை நோக்கி பயணித்துக் கொண்டிருந்தனர். நிலாவும் சரணும் சிபியைப் பார்ப்பதும், ஷானவியைப் பார்ப்பதும் பின் தங்களுக்குள்ளே பார்த்து சிரித்துக் கொள்வதுமாக இருந்தார்கள்.

இவர்களின் கிண்டலை முன்பக்கம் கண்ணாடி வழியாக பார்த்த சிபி கடுப்பாகி "இப்போ எதுக்கு உங்களுக்கு இப்படி ஒரு சிரிப்பு… உங்களுக்கு ஹெல்ப் பண்ணப்போய் எனக்குத்தான் தலைவலி, இந்த தீனிப்பண்டாரத்தை என் தலையில் கட்டிட்டுப் போய் நல்லா ரொமான்ஸ் பண்ணிட்டு, இப்போ வந்து சிரிக்கிறீங்க, இப்படி என் பொழப்பு சிரிப்பா சிரிக்குது என்ன பண்றது, கழுத்துல தொங்குன வேதாளம் போல விடாம துரத்துது" என்று புலம்ப, ஆனால் அந்த புலம்பலுக்கு சொந்தக்காரியோ இது எதையும் அறியாமல் ஆழ்ந்த நித்திரையில் இருந்தாள்.

"டேய் விடுடா, சும்மா அவளை ஏதாவது சொல்லிக்கிட்டே இருக்கணும் உனக்கு இல்லைன்னா தூக்கம் வராது." என்று தம்பியை அதட்டியவனுக்கும் சிரிப்புத்தான். இவர்கள் இப்படி சிரிக்க காரணமும் உண்டு. சிபி போன் செய்ததும் விரைவாக வெளியே வந்தவர்கள் அங்கிருந்த காட்சியைப் பார்த்து அதிர்ந்து போனார்கள்.

அதற்கு காரணம் ஷானவி காரில் படுத்து உறங்கி கொண்டிருந்தாள். அவள் உறங்குவது அறியாமல் மயக்கம் போட்டு உடல்நிலை ஏதும் சரியில்லையோ என்று பதறி சிபியிடம் விசாரிக்க அவனோ பொரிந்து தள்ளிவிட்டான்.

"அண்ணா இப்படி வயித்துல கொஞ்சம் கூட கேப் விடாம கொட்டிக்கிட்டா என்ன ஆகும், மேடம் சாப்பிடாம மயக்கம் போடல, மொத்தமா சாப்பிட்டதுனால டயர்டாகி தூங்குறாங்க." என்றவன் சற்று முன்பு நடந்ததை கூறினான் மற்ற இருவரிடமும்.

சரணையும் நிலாவையும் தோப்பிற்குள் அனுப்பிவிட்டு குழந்தைகளுடன் சேர்ந்து ஆற்றில் இறங்கி விளையாட ஆரம்பித்தனர். நேரம் ஆக ஆக குழந்தைகள் சோர்வது தெரிந்து அகிலா அவர்களை அழைத்துக்கொண்டு சிபியிடம் சரணையும் நிலாவையும் அழைத்து வரும் பொறுப்பை கொடுத்துவிட்டு வீட்டுக்கு கிளம்பி விட்டார்கள்.

# புது மலர்கள் பூத்திடும் வேளை…!

வெகுநேரம் நீரில் ஆடியது ஷானவிக்கு பசியெடுக்க சிபியை நச்சரித்து ஒரு கடைக்கு அழைத்து சென்றாள். அவளைப்பற்றி தெரிந்தாலும் வந்த இடத்தில் அப்படியெல்லாம் நடந்து கொள்ள மாட்டாள் என்ற நம்பிக்கையில் அவளுடன் சென்று அவளுக்கு சாப்பிட வாங்கி கொடுத்தான்.

அப்படி சாப்பிட ஆர்மபித்தவள் நிறுத்தவே இல்லாமல் நான் ஸ்டாப்பாக போய்க்கொண்டே இருக்க, ஒரு கட்டத்தில் சிபி கடுப்பாகி அவளை நிறுத்த சொல்ல, அவளோ அவன் பேச்சைக் கேட்காமல் அடுத்தடுத்த கடைகளுக்குள் புகுந்து தன் சாப்பிடும் வேட்டையை ஆரம்பித்தாள். பணத்தைக் கொடுத்துக் கொண்டே வந்தவன் அதற்கு மேல் பொறுமை பறந்து காருக்குள் வந்து அமர்ந்து கொண்டான். சிறிது நேரம் கழித்து வந்தவள் பின்னே அத்தனைக் கடைகாரர்களும் வர அவன்தான் குழம்பி போனான்.

வந்தவள் அவனிடம் எதுவும் கூறாமல் கூட வந்தவர்களிடம் “அண்ணா இந்த ஆளுதான் என்னைக் கடத்திட்டு வந்தது. சாப்பாடு கூட வாங்கி கொடுக்காம கொடுமைப் படுத்துறான், இவன் இல்லாத நேரம் பார்த்து தப்பிச்சி வந்து உங்க கடைகளில் சாப்பிட்டேன். என்னை மன்னிச்சிடுங்க, என்கிட்டே பணம் இல்லை. இதோ இந்தாளுதான் என்னோட பணத்தையும் வச்சிருக்கான், வாங்கிகோங்க, அதோட அவன்மேல் கை வச்சிடாதீங்க, அப்புறம் என்னை கொன்னுடுவான்” என்று அப்பாவியாக மாறி பேச….

சிபிக்கு ஒன்றுமே புரியவில்லை. ‘இவ என்ன சொல்றா’ என்று யோசிக்கும் முன்னே அங்கு வந்த எல்லோரும் அவனிடம் மல்லுக்கு நிற்க, போதாக்குறைக்கு போலீசிடம் சொல்லுவோம் என்றும் பிரச்சினையைக் கிளப்ப, உண்மையிலேயே நொந்துதான் போனான் சிபி. அவர்கள் முன்னிலையில் எதுவும் பேசாமல், எப்பொழுதும் தன் பர்சில் வைத்திருக்கும் அவர்களின் குடும்ப புகைப்படத்தை காட்டி அவளுக்கு பைத்தியம் என்ற பட்டத்தையும் கட்டி, அந்த பிரச்சினையை தீர்த்து, அவர்களை அனுப்பிவிட்டு திரும்பி பார்த்தால் மேடம் நித்திரையில் இருந்தாள்.

வந்ததே கோபம் சிபிக்கு அவளை அடிக்க கை ஓங்க, அப்போது பார்த்து அங்கு வந்த கடைக்காரர்களில் ஒருவர் அவனைப் பார்த்து “தம்பி எனக்கு பணம் சேர்த்து கொடுத்துட்டீங்க இந்தாங்க, அப்புறம் உடம்புக்கு முடியாத புள்ளன்னு வேற சொல்றீங்க,

புது மலர்கள் பூத்திடும் வேளை - மதுவதனி

அதைபோய் அடிக்க போறீங்களே, விடுங்க தம்பி நீங்க சரியா சாப்பாடு வாங்கி கொடுத்துருந்தா அது எதுக்கு இப்படி எல்லா கடையிலையும் போய் சாப்பிடபோகுது," என்று போகிறபோக்கில் அவனுக்கு அட்வைஸ் செய்ய ஓங்கிய கையை காரின் கதவில் குத்தியவன்.

அங்கிருந்த மர நிழலில் அமர்ந்து கொண்டான் சரணும் நிலாவும் வரும் வரை. அவன் கூறியதைக் கேட்டதும் ஷானவியையும் அவளது சேட்டைகளையும் நினைத்து சிரிப்பு வந்தாலும், அதனால் சிபி படும் கஷ்டங்களை நினைத்து அவன்மேல் பரிதாபமும் வந்தது. எங்கே அவர்களும் அவனிடம் அவளைப்பற்றி சொன்னால் இன்னும் கோபப்படுவானோ என்றுவிட்டு அவனிடம் அன்றைய ரிசப்சன், அதன் வேலைகள் பற்றி பேச ஆரம்பித்தான் சரண்.

ஆனாலும் சிபி விடாமல் "அண்ணா அவளிடம் இந்த மாதிரி பண்ண வேண்டாம்னு சொல்லுங்க, இப்படியே செஞ்சா, அப்புறம் நான் என்ன செய்வேன்னு எனக்கேத் தெரியாது." என…

அப்போது ஒன்றுமே அறியாததுபோல் தூக்கத்தில் எழுந்தவள் "என்ன நந்து, என்ன பிரச்சினை, என்னிடம் சொல்லு, நான் இருக்கும்போது நீ கவலைப்படலாமா..? பிரச்சினை என்னனு மட்டும் சொல்லு, நான் பார்த்துக்கிறேன், அப்படி இல்லையென்றால் உனக்கு சொலுஷன் சொல்றேன்" என கேட்க…. சிபி அவளைப் பார்த்து முறைக்க, மற்ற இருவரும் அவர்களைப் பார்த்து சிரித்தனர். இப்படியாக இருவரும் கதகளி ஆட, அதை மற்ற இருவரும் ரசிக்க என்று அந்த பயணம் கலாட்டக்களோடு முடிந்து வீடு வந்து சேர்ந்தனர்.

அதன் பிறகு சரணுக்கும், சிபிக்கும் வேலைகள் அதிகரிக்க, மணமக்கள் இருவருக்கும் தனிமை கிடைக்காமல் போனது. நிலாவோ கிடைக்கும் கொஞ்ச நேரத்திலாவது உண்மையை சொல்லிவிடலாம் என்று சரணின் தனிமைக்கு காத்திருக்க, சரணோ இந்த ரிசப்சன் வேலை முடிந்து பங்க்ஸனும் நல்லமுறையில் நடந்துவிட்டால், அப்புறம் நிலாவுடன் கிடைக்கும் தனிமையை நினைத்து ஏங்க ஆரம்பித்தான். அதனால் அதை விரட்டும் எண்ணத்தில் அவனது வேலைகளை துரிதப்படுத்தினான்.

புது மலர்கள் பூத்திடும் வேளை - மதுவதனி

# புது மலர்கள் பூத்திடும் வேளை…!

அன்று காலையில் திருமணம் நடந்த இடமா இது என்று எல்லோரும் வியக்கும் வண்ணம் இருந்தது தீபகாருண்யம். ஒரு அரண்மனையின் தோற்றத்தில் காட்சியளித்தது. இதற்கு காரணம் சரண் அமைத்த டெகரேட்டர்களே காரணம். மூன்று மணி நேரத்தில் இந்த அரங்கத்தையே முற்றிலும் மாற்றியிருந்தனர். இவ்வளவு ஆடம்பரம் வேண்டாம் என்று நிலா மறுக்க, அப்படியென்றால் திருச்சியில் ஒரு ரிசப்சன் வைக்க வேண்டி வரலாம் இல்லையென்றால் தொழில் முறையில் சில தவறான பேச்சுக்கள் வரும் என்று கூற அதன்பிறகு அவன் மனைவி மறுத்துப் பேசவில்லை. நடப்பது நடக்கட்டும் என்று விட்டுவிட்டாள்.

அந்த இதய வடிவ மேடையில் சரண் நின்றிருக்க அவனைச் சுற்றி சிபியும் ரவியும் அதோடு அவனது மற்ற நண்பர்கள் இருவரும் நின்று பேசிக்கொண்டிருந்தனர். அப்போது சிபியின் செல்லுக்கு ஒரு மெசேஜ் வர அதை எடுத்துப் பார்த்தவன், உடனே அங்கிருந்தவர்களிடம் கூறிவிட்டு ஆர்கெஸ்ட்ரா நடக்கும் இடத்துக்கு சென்றான். அங்கு பாடியவரிடம் ஒரு பேப்பரைக் கொடுத்து விட்டு, மீண்டும் தன் அண்ணனிடம் வந்து நின்று கொண்டான்.மீண்டும் நண்பர்கள் தங்கள் பேச்சில் மூழ்க, அப்போது

***மலர் போன்ற பாதம் நடக்கின்ற போது***

***நிலம் போல உன்னை நான் தாங்க வேண்டும்***

***இடையினில் ஆடும்…. உடையென நானும்..***

***இணைபிரியாமல் துணை வரவேண்டும் உனக்காக***

***பனிக்காற்றை தினம் தூது போக வேண்டினேன்…..***

***வா வெண்ணிலா உன்னைத்தானே வானம் தேடுதே…***

என்ற பாடல் வரிகள் ஒலிக்க ஆரம்பித்தது. பாடலின் வரிகளிலேயே தன் தேவதையின் வருகையை உணர்ந்தவன் நொடியும் காலம் தாழ்த்தாமல் அவள் வரும் பாதையை நோக்கினான். நிலா தன் கால்களை மெல்ல நகர்த்தி, ஷானு மற்றும் அகிலாவின் துணையுடன் மேடைக்கு வந்து சேர்ந்தாள்.

# புது மலர்கள் பூத்திடும் வேளை…!

அவன் எதிர்பார்த்தது போலவே பொன்னென மின்னி வந்தாள் அந்த நிலவு மங்கை. அதன் பிறகு சரணுக்கு நிலா மட்டுமே உலகமானது சில நிமிடங்களுக்கு யாரைப்பற்றியும் கவலைப்படாமல் நண்பர்களின் கேலியையும் ஒன்றுமில்லாததாக்கி மனைவியின் அருகே நின்று அவளை சித்திரை செவ்வானமாய் சிவக்க வைத்தான் அந்த அன்பு கணவன்.

சரண் மீண்டும் தன் ஜொள்ளை திறந்துவிட நண்பர்கள் அவனை ஓட்ட, நிலா அவனது வெளிப்படையான இந்த செய்கைகளில் திண்டாடிப்போனாள். அப்போது ரவி கீழே இறங்கி சென்று தன் மனைவியை கைத்தாங்கலாக அழைத்துக்கொண்டு வந்தான். அவர்களைப் பார்த்ததும் சரணும் சென்று மறுபக்கம் அவளுக்கு கை கொடுத்து உதவினான்.

அவன் கையைப் நன்றியோடு பற்றியவள் “இதெல்லாம் டூ மச்சா இல்லை, உங்க வைப் மொத்தப்போறாங்க, அங்க போய் நில்லுங்க, அதான் எனக்கு சேவகம் செய்ய சம்பளமே இல்லாத ஆள் வச்சிருக்கேனே அப்புறம் என்ன கவலை.” என்று ஆதிரா சிரிக்க…

“பாருடா… இன்னைக்கு நான், நாளைக்கு நீ. இதைத்தான் சிம்பாளிக்கா மேடம் சொல்றாங்க,” என்றவன் “இங்க வந்தும் என் மானத்தை வாங்கனுமா, நீ சொல்றதுக்கு முன்னாடியே அவனுக்கு தெரியுமே குட்டி, நீ நில்லுனா நான் நிக்குறதும், உட்காருன்னா உட்காறதும், இதை ஏன் அவன்கிட்ட சொல்லிட்டு இருக்க” என்று பேசி முடிக்க நிலாவிடம் வந்து சேர்ந்தார்கள்.

நிலா அவர்களைப் பார்த்து புன்னைகைக்க, ரவி ஆதிராவின் தோளில் கைகளைப் போட்டு அணைத்தவாறு பிடித்துக்கொண்டு “தேனு இவங்கதான் என்னோட ப்ரைம் மினிஸ்டர், எப்படி இருக்காங்க..? என்னோட பெர்சனாளிட்டிக்கும் இவங்களுக்கும் ஏதாவது கொஞ்சமாச்சும் மேட்ச் ஆகுதா..? இதுல மேடத்துக்கு நான் இவங்களை விரட்டி விரட்டி லவ் பண்ணேன்னு பெருமை வேற… நீ சொல்லு மேடம் எப்படி..?” என….

புது மலர்கள் பூத்திடும் வேளை - மதுவதனி

“அண்ணா இது கொஞ்சம் ஓவர்… நான்தான் அன்னைக்கே சொன்னேனே இவங்க எப்படி உங்களுக்கு ஓகே சொன்னாங்கனு, நீங்க சொல்லவே இல்லை… இப்போ நானே கேட்கறேன்..” என்றவள் ஆதிராவிடம் திரும்பி “அண்ணி நீங்க எப்படி ஓகே சொன்னீங்க இவருக்கு..? என ரவி கொடுத்த பல்பை அவனுக்கே திருப்பிவிட…..

ஆதிராவும் சரணும் ரவியைப் பார்த்து “இது உனக்கு தேவையா…? என்று கோரஸில் கேட்க.. ரவியோ “தேனும்மா இப்படி இவ்வளவு சீக்கிரம் உனக்கு ட்ரெயினிங் கொடுத்தது யாருடா… இவ்ளோ ப்ரைட்டா பல்பு கொடுக்குறியேமா கொடுக்குறியே…?” என்று நெஞ்சை பிடித்துகொண்டு கேட்க இப்போது நிலாவும் அவர்களுடன் சேர்ந்து சிரிக்க ஆரம்பித்தாள்.

அப்போது அங்கு வேகமாக வந்த ஷானவி “என்ன சத்தம் இந்த நேரம்” என்ற பாடலை பாடியபடியே கேட்க… சிபி முகத்தை திருப்பிக்கொண்டு கீழிறங்க முயல, அதைப்பார்த்து அவன் கையை வேகமாக பிடித்தவள் “சாரி நந்து… ப்ளீஸ் இனி இப்படி பண்ணமாட்டேன்.. ப்ராமிஸ்” என கேட்க, அவன் முறுக்க, இவள் கெஞ்ச என்று ஒருவழியாக இருவரும் சமாதானம் ஆகினர். ஆதிரா என்னவென்று சரணிடம் விசாரிக்க அவன் காலையில் நடந்ததைக் கூற, அவளும் சிரிப்பில் இணைந்தாள்.

அதன்பிறகு நிலாவை அணைத்து வாழ்த்துக் கூறியவள் சரணைப்பற்றி அவளுக்குத் தெரிந்த விசயங்களை கூறாமலும் இல்லை. பின் அவள் கைகளைப் பிடித்துகொண்டு “இந்த சரண் அண்ணா ஏன் இப்படி ஒரு பொண்ணுக்காக பைத்தியம் மாதிரி ஆகிட்டாரு, அவ என்ன பெரிய இவளா, அவ இல்லன்னா வேற பொண்ணே கிடைக்காதனு நான் கூட ரவிகிட்ட சண்டை போட்டுருக்கேன், நீங்க எல்லாம் பிரண்ட்ஸ் தானே அவர்கிட்ட பேசவேண்டியதுதானே என்றெல்லாம் திட்டியிருக்கேன், ஆனா அண்ணன் அப்படி இருந்தார் என்றால் அதற்கு நீ தகுதி உள்ளவள் தான் என்பது உன்னைப் பார்த்ததும் தெரிந்தது. உன்னை தவறாக நினைத்து நான் அப்படி பேசவில்லை தேனு. அண்ணா படும் கஷ்டம் பார்த்துதான் அப்படி பேசிவிட்டேன். சாரி” எனவும் “எனக்கும் புரியுது அண்ணி இனி இப்படி அவர் கஷ்டப்படாம பார்த்துக்கிறேன்” என நிலாவும் கூறி அடுத்து அவளது உடல்நிலைப்பற்றி விசாரித்தாள்.

பின் ஏதோ நினைவு வந்தவளாக ரவியிடம் திரும்பி “ரவி தேனுவைப் பார்க்கும்போது எனக்கு முன்னாடியே தெரிஞ்சவங்க மாதிரியே தோணுது. இதுக்கு முன்னாடி நான் பார்த்துருக்கேனா..? என்றதும், “ஹ்ம்ம் நான்தான் அவ போட்டோஸ் எல்லாம் காட்டிருக்கேனே அதில் பார்த்து இருப்பாய்” என்றான். அவளும் அதை தலையசைத்து ஏற்றுகொண்டாளும், மனம் மட்டும் முரண்டிக்கொண்டே இருந்தது. அவர்களின் உரையாடலைக் கேட்ட ரவியும் சரணும் தங்களது துணையை நினைத்து பெருமைப்பட்டுக் கொண்டனர்.

ஆதிரா எட்டுமாத கர்ப்பிணி என்பதால் அவளது தலைப்பிரசவத்திற்கு இந்தியா வந்திருந்தாள். இவர்கள் பங்கசன் முடிந்ததும் அவளை ஊட்டியில் விட்டுவிட்டு ரவி மீண்டும் சிங்கப்பூர் செல்வதாக முன்னமே ப்ளான் செய்திருந்தார்கள். அதைப்பற்றி பேசிக்கொண்டே இருக்க, சரணின் உறவினர்களும் நண்பர்களும் வர ஆரம்பிக்க விழா இனிதே ஆரம்பித்தது.

ரவி ஆதிராவை அழைத்துக்கொண்டு ஷானவியிடம் பத்திரமாக பார்த்துக் கொள்ளுமாறு கூறிவிட்டு வந்து சரணோடு நின்று கொண்டான். திருமணத்தில் தான் இல்லாத குறையை இதில் கழித்துக் கொண்டான்.

அதுவரை இருந்த விளையாட்டுத்தனம் விடுத்து ஒரு தொழிலதிபராக மாறி இருந்தான் சரண். வந்தவர்கள் எல்லாரும் ஹைக்ளாஸ் சொசைட்டி மக்கள் என்பதால் அவர்களுக்கு ஈடு கொடுத்து நிலாவால் பேசமுடியவில்லை, ஆனால் அது மற்றவருக்கு தெரியாமல் சரண் அவளுக்கும் சேர்ந்து பேசினான்.

மேலும் சிலர் வம்பளக்க என்றே “ஏன் சரண் திருச்சியில் வைக்காம இங்கே வச்சிருக்கீங்க, செலவாயிடுமேனு பயந்துட்டீங்களா” என கிண்டலடிக்கவும் மறக்கவில்லை. அதிலெல்லாம் கோபப்படாமல் விஜயாவின் நிலையைக் கூறி சிரித்தே சமாளித்து அனுப்பினான். கணவனின் செயலில் நிலாவுக்கு கண்கள் பனித்தன.

சிறிது கிடைத்த தனிமையில் மனைவியிடம் தெரிந்த சோர்வில் “என்னடா, யாரும் ஏதும் சொல்லிட்டாங்களா,” என்றாவாறே அகிலாவை நோக்க, அவர்கள் குடும்பம் சகிதம் வரவேற்பறையில் நின்று வருபவர்களை வரவேற்று கொண்டிருந்தனர்.

புது மலர்கள் பூத்திடும் வேளை - மதுவதனி

கணவனின் வார்த்தையில் அவனது கைகளைப் பிடித்துக்கொண்டவள் "பாவா நான் என்னைப்பற்றி மட்டுமே யோசிச்சி முடிவெடுத்துட்டேனு தோணுது. இப்போ உங்களுக்கு கஷ்டம் இல்லையா..? எல்லாம் என்னால்தான், சாரி பாவா.." எனவும்,

அவள் பிடித்த கைகளை கொண்டே அவளை அணைத்தவன் "லூசு மாதிரி பேசக்கூடாது, எல்லாருமே நம்மளை வாழ்த்த மட்டும்தான் வருவாங்கன்னு எதிர்பார்க்க கூடாது, தொழிலில் சில எதிரிகள் இருப்பாங்க, அவங்களும் வந்து இந்தமாதிரி நல்ல நேரத்துல நம்மளை வருத்தப்பட வைக்க நினைப்பாங்க. அப்படியும் சிலர் இருப்பாங்க, அதையெல்லாம் யோசிக்க கூடாது."

"மனசை அந்தப்பக்கம் விட்டா அது பின்னாடியே நம்ம சந்தோசமும் போயிடும், சோ அதை யோசிக்காமா இப்போ இந்த நிமிசத்தை ரசிச்சு வாழ ஆரம்பிச்சா கைவிட்டுப்போன எல்லா சந்தோசமும் நம்மகிட்டயே திரும்ப வந்து சேர்ந்துடும்" என மனைவியை தெளிய வைத்தவன் யாரும் பார்க்கா வண்ணம் அவளது இடையில் தன்கைவரிசையைக் காட்ட, அதுவரை அவன் பேசியதை விழிகள் விரிய கேட்டவள் கடைசியில் அவன் காட்டிய செயலில் திகைத்து அவனைப் பார்த்து முறைக்க ஆரம்பித்தாள்.

அப்போது "அழகான போஸ் சார் இங்க பாருங்க" என போட்டோகிராபர் அந்த போட்டோவைக் காட்ட, அதைப்பார்த்த இருவரும் ஒருவரை ஒருவர் பார்த்துக் கொண்டனர். அதில் அவன் அவளது இடையில் கைவைத்து அவளை காதலாய்ப் பார்க்க அவளோ அவனைப் பார்த்து முறைத்துக் கொண்டிருந்தாள். அதைப்பார்த்து சரண் அந்த ஆளிடம் ஏதோ கூறிவிட்டு மீண்டும் அவளிடம் நின்றுகொண்டான்.

அப்போது "என்னடா நடக்குது இங்க....? சின்னபுள்ளைங்க இருக்குறது கூட தெரியாம என்ன பண்ணிட்டு இருக்கீங்க, அந்த வானரங்க சொன்னதுலயும் தப்பே இல்லைடா. கிடைச்ச கேப்புல எல்லாம் கோல் போட்டுட்டு இருக்க. ஏண்டா எத்தனை நாள் நான் உன்கிட்ட ஐடியா கேட்டுருப்பேன் என் குட்டிம்மாவ கரெக்ட் பண்ண, இப்போ இப்படி பண்றவன் அப்போ ஏண்டா எனக்கு இந்த ஐடியா எல்லாம் கொடுக்கல," என்று சரணிடம் சண்டைக்கு வந்தான் ரவி..

புது மலர்கள் பூத்திடும் வேளை மது

# புது மலர்கள் பூத்திடும் வேளை…!

“இதென்னடா வம்பா போச்சு… உனக்கு எல்லா ஐடியாவையும் கொடுத்துட்டு நாங்க என்ன பண்றது. அப்புறம் உன்னை மாதிரி ஒரு ஆள்கிட்டயா போய் நிக்க முடியும், இதைமட்டும் ஆரா கேட்கணும் அப்போ தெரியும் உனக்கு, ஒழுங்கா லவ் பண்ண கூட தெரியலன்னு சொல்லிடுவா… நாங்க எல்லாம் முன்னெச்சரிக்கையா இருப்போம் இந்த விசயத்தில” என்று தன் காலரைத் தூக்கிவிட்டுகொள்ள..

“நீ நல்லவன்னு தெரியும், ஆனால் இவ்ளோ நல்லவன்னு இதுவரைக்கும் தெரியாம போச்சே, நீயெல்லாம் நல்லா வருவடா” என்று சரனைக் கிண்டலடித்தவன் நிலாவின் புறம் திரும்பி “தேனும்மா உனக்கு என்னோட ஆழ்ந்த அனுதாபங்கள்டா, இப்படி ஒரு குரங்கு சேட்டை பிடிச்சவனை காலம் முழுவதும் நீ சமாளிக்கனும்ன்னு நினைக்கும் போது ஒரு அண்ணனா எனக்கு மனசே கேட்கலடா.. கண்டிப்பா உனக்கு இந்த பெட்ரமாக்ஸ் லைட்டே தான் வேணுமா..? எனவும் நிலா சதங்கையென சிரிக்க, சரண் அவன் முதுகில் ஓங்கி ஒன்று போட்டான்.

கீழே இருந்த ஆதிரா இவர்களைப் பார்த்து என்னவென்று கேட்க ரவி அவளிடம் விளக்கம் கொடுக்க கீழே சென்றான். அப்போது “தேனக்கா இப்போவும் சாப்பாடு சூப்பர்” என்று குரல் கேட்டது, திரும்பி பார்த்தால் சாட்சாத் ஷானவியே தான்.

“ஏய் மங்கி உன்னை எங்க எல்லாம் தேடுறது, ஒரு ப்ளான் பண்ணா முதல்ல அதை செய்யணும், அதை விட்டுட்டு எப்போ எங்கே சோறு போடுவாங்கன்னு ஓடக்கூடாது” என அவளைப் பார்த்து சிபி திட்டத் தொடங்க, அவளும் “ஏன் நீயும் இவ்ளோ நேரம் என் பக்கத்துல உட்கார்ந்துதானே உள்ளன் தள்ளுன, அப்போ தெரியலையா.. இந்த ப்ளான் எல்லாம்” என்று பதிலுக்கு அவனிடம் மல்லுக்கு நிற்க, ஒருவழியாக அவளை சரிகட்டி அந்த ஆர்கெஸ்ட்ரா நடக்கும் இடத்திற்கு இழுத்துக்கொண்டு சென்றான் சிபி.

அந்த ஆர்கெஸ்ட்ரா ஆளை மண்டை காய வைத்து இளையராஜாவின் இசையில் மணமக்கள் இருவருக்கும் பிடித்த பாடல்களை லிஸ்ட் போட்டு பாட செய்தனர். விழாவிற்கு விஜயாவின் உடல்நிலையால் அவர் அறையிலேயே இருக்க, காசிராமனும் அவரது குடும்பமும் தேனுவின் சார்பாக வேலையை செய்தனர்.

புது மலர்கள் பூத்திடும் வேளை - மதுவதனி

# புது மலர்கள் பூத்திடும் வேளை…!

“வந்திருக்கும் அனைவருக்கும் வணக்கம், இப்போது மணமகனான Mr. அபிசரண் அவரது காதல் மனைவிக்காக ஒரு பாடல் பாடுவார்” ஆர்கெஸ்ட்ரா மைக்கில் திடீரென சிபியின் குரல் கேட்க நண்பர்களுடன் பேசிக்கொண்டிருந்த சரண் இதை எதிர்பார்க்காமல் இங்கிருந்தே மறுக்க, நிலா அவன் கையைப் பிடித்து அழுத்த, அந்த அழுத்தம் கொடுத்த உந்துதலில் அவளையும் அழைத்துக்கொண்டு அந்த இடம் சென்றான்.

அனைவரும் கைத்தட்டி தங்கள் மகிழ்ச்சியை வெளிப்படுத்த, சரண் நிலாவை ஒருமுறை ஆழ்ந்து பார்த்தவன் பின் பாட ஆரம்பித்தான்.

*இளம் சிரிப்பு ருசியானது*
*அது கனிந்து இசையானது*

*குயில் மகளின் குரலானது*
*இருதயத்தில் மழை தூவுது*

*இரு புருவம் இரவானது*
*இருந்தும் என்ன வெயில் காயுது…*

*இனிக்கும் தேனே ….. எனக்கு தானே….*
*பூவே இளைய பூவே வரம் தரும் வசந்தமே*

*மடிமீது தேங்கும் தேனே*
*எனக்குதானே….எனக்குத்தானே… எனக்குத்தானே.*

*பூவே இளைய பூவே வரம் தரும் வசந்தமே*
*மடி மீது தேங்கும் தேனே*

*எனக்குத் தானே எனக்குத் தானே*
*பூவே இளைய பூவே வரம் தரும் வசந்தமே*

*மடி மீது தேங்கும் தேனே*
*எனக்குத் தானே எனக்குத் தானே*

புது மலர்கள் பூத்திடும் வேளை - மதுவதனி

# புது மலர்கள் பூத்திடும் வேளை…!

அவனின் பாடலிலே அவர்களின் காதல் மற்றவர்களுக்கு புரிந்துவிட, இத்தனை நாள் அவன் பட்ட கஷ்டம் இன்று ஒன்றுமே இல்லாததுபோல் தோன்றியது அவனைச் சார்ந்தவர்களுக்கு, நிலாவும் கணவனின் காதலில் தன் மெய் மறந்துதான் நின்றாள்.

அவர்களின் கொண்டாட்டங்களைப் பார்த்து அதுவரை தன்னால் எதுவுமே செய்ய முடியவில்லையே என்ற எரிச்சலில் அமைதியாக இருந்த மீனு அந்த நிமிடம் நிலாவின் மகிழ்ச்சியை உடைத்தே ஆகவேண்டும் என்று முடிவெடுத்தாள். அது நடக்கும் வண்ணம் ராகவிடமிருந்து போன் வர, அவளும் அவனை உள்ளே வர சொன்னாள். ஆனால் அவனோ உள்ளே வந்தால் ஏதோ ஒரு சந்தர்ப்பத்தில் நிலாவை சந்திக்கும்படி ஆகிவிட்டால் அவள் எப்படி எடுத்துக் கொள்வாளோ என்று பயந்து வரமாட்டேன் என்றான்.

ஆனால் அவளோ அவனிடம் நிலா உன்னை தெரிந்தது போல் கூட காட்டிக்கொள்ள மாட்டாள். அதனால் நீ என் நண்பன் என்ற முறையில் வந்து வாழ்த்து சொல்லிவிட்டு போகலாம் என்று அவனை கட்டாயப்படுத்தி அழைத்து சென்றாள்.

**வேளை தொடரும்……..**

புதுமலர்கள் பூத்திடும் வேளை - மதுவதனி




## வேளை - 28

**************************************************************************************************

மாலை கருக்களில் சோலை கருங்குயில் ஏன் வாடுதோ
சோடிக் குயிலொன்னு பாடிப் பறந்ததை தான் தேடுதோ
கண்ணுக்குள்ளே வா வா நெஞ்சுக்குள்ளே போ போ
கண்ணுக்குள்ளே வா வா நெஞ்சுக்குள்ளே போ போ -என் ஜீவனே
மாலை கருக்களில் சோலை கருங்குயில் ஏன் வாடுதோ
சோடிக் குயிலொன்னு பாடிப் பறந்ததை தான் தேடுதோ

உன்னோட கண்ணுக்குள் கண்ண வச்சு உலகத்தக் கண்டு கொண்டேன்
உன்னோட நெஞ்சுக்குள் நெஞ்ச வச்சு உறவொண்ணு கொண்டு வந்தேன்
நீ சிரித்தால் பூ உதிரும் நீ அணைச்சா தேன் சிதறும்
செவ்வந்தி பூவுக்கு சோகம் என்ன சிங்கார
கண்ணுக்குள் மேகம் என்ன- நீ சொல்லடி

மாலை கருக்களில் சோலை கருங்குயில் ஏன் வாடுதோ
சோடிக் குயிலொன்னு பாடிப் பறந்ததை தான் தேடுதோ

# புது மலர்கள் பூத்திடும் வேளை…!

**கண்ணுக்குள்ளே வா வா நெஞ்சுக்குள்ளே போ போ -என் ஜீவனே**
**மாலை கருக்களில் சோலை கருங்குயில் ஏன் வாடுதோ**

**மரணத்தில் இல்லாத துன்பம் உந்தன் கண்ணீரில் வந்ததம்மா**
**உறவுன்னு நீ சொன்ன சொல்ல நம்பி உயிரொண்ணு வாழுதம்மா**
**நீ அழவோ பொன்மணியே நீர் விழவோ கண் வழியே**
**கண்ணே நீ வாடாத நந்தவனம் கண்ணீர தாங்காது**
**இந்த மனம் - வா தேவியே**

**மாலை கருக்களில் சோலை கருங்குயில் ஏன் வாடுதோ**
**சோடிக் குயிலொன்னு பாடிப் பறந்ததை தான் தேடுதோ**
**கண்ணுக்குள்ளே வா வா நெஞ்சுக்குள்ளே போ போ**
**கண்ணுக்குள்ளே வா வா நெஞ்சுக்குள்ளே போ போ -என் ஜீவனே**
**மாலை கருக்களில் சோலை கருங்குயில் ஏன் வாடுதோ**
**சோடிக் குயிலொன்னு பாடிப் பறந்ததை தான் தேடுதோ**

*****************************************************************************************************

திருமண நிகழ்ச்சிகள் ஒவ்வொன்றையும் சரணும் நிலாவும் அனுபவித்து ரசித்து தன் மனப் பெட்டகங்களில் சேர்த்து வைத்தனர். இருவரும் ஒருவருக்கொருவர் அவர்களின் அருகாமையில் மெய்மறந்தனர் என்பதே உண்மை. ரிசப்சனுக்கு வந்தவர்கள் எல்லாம் கொஞ்சம் கொஞ்சமாக வெளியேற, ரவியும் ஆதிராவை அழைத்துக் கொண்டு மீண்டும் மேடைக்கு வந்தான். ரவி சரணின் தோளில் தட்டியபடி, மச்சான் நாங்க கிளம்புறோம்டா, ஆராவால ரொம்ப நேரம் உட்கார முடியல, நைட் ரெஸ்ட் எடுத்துட்டு, மார்னிங் ஊட்டி போகனும், அங்கே நான் டூ டேஸ்தான் இருப்பேன். அப்படியே இருந்தே சிங்கப்பூர் போய்டுவேன். அடுத்து டெலிவரிக்கு தான் ரிட்டர்ன், சோ அப்போ பார்க்கலாம், அடிக்கடி கால் பண்ணு, இந்த ரெண்டு மாசமா தான் போனோடவே குடும்பம் நடத்தின, இனியாச்சும் என் தங்கையோட குடும்பம் நடத்து" என கிண்டலடிக்க, அதைக் கேட்டு நிலா வெட்கத்தில் சரணின் பின்னே நெளிய, ஆதிரா, ரவியின் கைகளில் கிள்ளிவிட்டு "அதெல்லாம் எங்க அண்ணனுக்குத் தெரியும், நீங்க சொல்லத்தேவையில்லை, லவ் பண்ண பொண்ணுக்கிட்ட பேசத் தெரியாத ஆளெல்லாம் இங்க வந்து அட்வைஸ் பண்றாங்கப்பா, தாங்க முடியல," என்று ரவியை வாரியவள், நிலாவின் கைகளைப் பிடித்துக் கொண்டு சரணை நோக்கி "ப்ரதர் ஹனிமூன் எங்க ப்ளான் பண்ணியிருக்கீங்க, பேசாம நீங்களும் எங்க கூட ஊட்டி வாங்களேன், ஹனிமூனுக்கு, போனமாதிரியும் இருக்கும் எங்களோட வந்த மாதிரியும் இருக்கும்" என.

மதுவதனி புது மலர்கள் பூத்திடும் வேளை

# புது மலர்கள் பூத்திடும் வேளை…!

“ஏன்மா……. ஏன் நீங்க மட்டும் ஜாலியா பாரின் ட்ரிப் போவீங்க, நாங்க மட்டும் இங்கே இருக்க இந்த ஊட்டிக்கு போகனுமா, அதெல்லாம் வேண்டாம், உங்களுக்கு அந்த கவலையும் வேண்டாம் நாங்க ஆல்ரெடி ப்ளான் பண்ணிட்டோம். ஸ்விஸ் போறோம்”. என்றான் சரண்.

“என்னது ஸ்விஸ்ஸா அடப்பாவி!!!!!! எங்களுக்கு புக் பண்ண சொன்னப்ப இப்போ அந்த கன்ட்ரி அவ்ளோ சேப் கிடையாது சொன்ன, இப்போ என்னடானா, இப்படி சொல்ற”.

“மச்சி, நீ கேட்டது டூ யேர் முன்னாடி இப்போ அங்கே வெறி சேப், சோ போறோம் ஜாலியா என்ஜாய் பன்றோம்….. எப்படி….?

“இல்லை நீ அப்போதே ஏதோ ப்ளான் பண்ணியிருக்க, நீ சிரிக்கிற விதமே சரியில்லை, ஒழுக்கமா சொல்லு, என்னடா பண்ண”

“ஹா ஹா அப்படியா தெரியுது, வர வர நீயும் அறிவாளினு நிரூபிக்கிறடா மச்சான். அது வந்து அப்போ நானே சோகமா இருந்தேனா என் நிலா இல்லாம, நீ மட்டும் என்ஜாய் பண்ணனுமா னு நினைச்சு ப்ளேஷை மாத்திட்டேன்…. ஹி ஹி” “என்ன ஒரு வில்லத்தனம், உண்மையான நண்பன்னு சொல்லி உன்னிடம் கேட்டேனே, என்ன சொல்லனும், ஆனாலும் கொலை வெறியில ஆப்பிரிக்கா பக்கம் அனுப்பாம விட்டியே, அதுவரைக்கும் சந்தோசம், ஆராக்குட்டி கிளம்புவோம், இனியும் இங்கேயே இருந்தோம், அவனோட பாடிகார்ட்ஸ் வச்சே நம்மளை வெளியே தள்ளுவான். என்று ஆதிராவை அழைத்துக் கொண்டு இருவரிடம் விடைபெற்று கிளம்பினான் ரவி.

இதையெல்லாம் ஒரு ஓரமாய் அமர்ந்துப் பார்த்துக் கொண்டிருந்த மீனாவிற்கு கோபம் தலைக்கேறியது. ராகவிடம் இருந்து போன் வர அதை எடுத்துப் பார்த்தவளுக்கு மின்னலென ஒரு திட்டம் உருவானது அவள் மூலையில், உடனே எழுந்து வெளியில் சென்றவள் அவனிடம் பேச ஆரம்பித்தாள்.

“ஹே ராகவ் வந்துட்டியா, எங்கே இருக்க, ஓகே, ஓகே, நான் எண்ட்ரன்ஸ்ல தான் இருக்கேன் வா….. ம்ம் இதோ பார்த்துட்டேன் உள்ளே வா……. என்றதுடன் போனை அனைத்துவிட்டு அவனிடம் ஓடினாள். “ஹாய் டார்லி…… என்ன ஒரு வரவேற்பு,

புது மலர்கள் பூத்திடும் வேளை - மதுவதனி

என்னைப் பார்க்கவா, இவ்வளவு அழகா துள்ளிக் குதிச்சு ஓடிவர, “ம்ம் யா ராகவ், அப்படி வரக்கூடாதா.” “வாவ் ராகவ் செம ஹேப்பி டார்லி, ஓகே கேட்டின் பார்ட்டிக்கு டைமாச்சு”

“ஓ எஸ் போகலாம், அதுக்கு முன்னாடி உள்ளே போய் ஒரு என்ட்ரி கொடுத்துட்டு வந்துடலாம்” அண்ணா அண்ணி இரண்டு பேரும் கேட்டாங்க, ஏன் உன்னோட ப்ரண்ட்ஸ் யாரும் வரலைனு, எனக்கு சேமா போயிடுச்சு, அதனால் நீ வந்ததும் உன்னை அவங்களுக்கு இன்ட்ரடியூஸ் பண்ணனும்னு நினைச்சேன். வா போய் ஒரு ஹாய் சொல்லிட்டு போகலாம்”

“என்ன உள்ளேயா, அவங்க என்னைப் பார்த்து ஏதாவது நினைச்சு பயந்துடு வாங்க, அதனால் நீ வெளியே அழைச்சிட்டு வா, இப்படியே சொல்லிட்டு கிளம்புவோம்”.

“ஹோய் என்ன, கிண்டலா அப்படியெல்லாம் உன்னிடம் வந்து பேச நீ என்ன பெரிய ஆளா…? நீ கிளம்பு நான் வரல… அவளோட பீலிங்க்ஸ் பத்தி கவலைப்படறவன், என்னைப் பத்தி யோசிக்கமாட்டியா…? எல்லாரும் என்னைக் கிண்டல் பண்றாங்க, உனக்கு ஒரு ப்ரண்ட் கூட இல்லையா என்று, நான் அவமானப்படனும் அதுதானே உனக்கு வேணும் என்று வராத கண்ணீரை துடைத்துக் கொண்டாள்.

மீனாவின் செய்கைகளை எல்லாம் விசித்திரமாக பார்த்தான் ராகவ், அவன் அறிந்த மீனா இப்படி அழுபவள் இல்லை மற்றவர்களை அழ வைப்பவள். ஆனால் இன்று ஏன் இப்படி அழுகிறாள், ஒருவேளை அவனைத் திருமணம் செய்ய முடியவில்லை என்று வருத்தப்படுகிறாளோ, அவன் முன் தன்னை நிறுத்தி பெருமைப் பட நினைக்கிறாளோ என்று யோசித்துக் கொண்டிருந்தாள்.

மீனாவின் கைகளைப் பிடித்துக் கொண்டு “நோ டார்லி எதுக்கு இப்போ இப்படி ரியாக்ட் பன்ற, உனக்கு இந்த மாதிரி ஆக்சன்ஸ் செட் ஆகவே இல்லை. பட் நீ என்னிடம் இருந்து ஏதே எக்ஸ்பெக்ட்பண்ற, அது என்னவென்று நீயே சொல்லு, உனக்கு கண்டிப்பா ஹெல்ப் பண்றேன்” என ராகவ் அறிவிக்கவும் மீனாவின் முகம் ஒரு நொடி கருத்து மீண்டும் இயல்பானது. அவள் மனதிற்குள் இவனை எப்படி நம்ப வைப்பது என்று யோசித்துக் கொண்டிருந்தாள்.

அந்த நேரம் அவர்கள் இருவரையும் கடந்து சிபியும் ஷானவியும் ரவி தம்பதியினரை வழியனுப்ப வெளியே வந்தனர். அவர்களைப் பார்த்ததும், புதிதாக ஒரு திட்டம் தோன்ற அதை செயல்படுத்த தொடங்கினாள்.

“நீ என்னை தப்பா நினைக்காதே ராகவ், இதோ போறாங்களே, இதுங்க ரெண்டும் என்னை ரொம்ப இரிடேட் பண்ணிட்டாங்க நான் சரணுக்கு செட் ஆக மாட்டேன், அப்படி, இப்படினு ஓவரா பேசிட்டாங்க, அதான் அவங்ககிட்ட உன்னை இன்ட்ரோ கொடுக்க நினைச்சேன். ஆனா நீதான் பிகு பன்ற, ஓகே விடு, வா நாம கிளம்பலாம்”.

“உன்னோட ஆசையை ஏன் கெடுப்பானேன், வா டூ மினிட்ஸ் தான் போய் ஒரு கங்க்ராட்ஸ் சொல்லிட்டு வந்துடலாம்” என்றவன் அவளை அழைத்துக்கொண்டு மேடையை நோக்கி நடந்தான். மீனாவிற்கு தன் திட்டம் பழிக்கப் போவதை நினைத்து மகிழ்ச்சியில் குத்தாட்டம் போட்டது மனது.

ராகவின் கைகளில் தன் கைகளைக் கோர்த்துக் கொண்டு நடந்தவள் ஒரு கட்டத்தில் அவன் அறியாமல் அவனிடமிருந்து விடுவித்துக் கொண்டு போலியான ஒரு சோகத்தை முகத்தில் வைத்துக் கொண்டு மேடையேறினாள்.

சரண் ஏதோ பேச, அதற்கு நிலா அவனைப் பார்த்து முறைக்க அது முடியாமல் சிரித்துக் கொண்டிருந்தாள். அப்போது தூரமாய் மீனாவுடன் நடந்து வரும் ராகவைக் கண்டதும் கண்கள் இருள, அருகில் நின்றிருந்த சரணின் தோள்களை இருக்கமாகப் பிடித்துக் கொண்டாள். சரண் பதட்டமாக அவளைப்பிடித்து என்னவென்று விசாரிக்க, அவளோ என்ன சொல்வது என்றுத் தெரியாமல் பின்னாடி இருந்த சோபாவில் காலை இடித்துக் கொண்டதாக அவனிடம் கூறினாள். அதைக் கேட்டதும் அவன் அவளுக்கு கீழே அமர்ந்து அவளது காலைப் பார்க்க, நிலா பதட்டத்துடன் எழுந்து சுற்றும் முற்றும் பார்த்தாள் அதைப் பார்த்து கீழே இருந்தவர்கள்.

எல்லாம் மேலே வர, சிபி உடனே நிலைமையை உணர்ந்து மற்றவர்களை அப்புறப்படுத்தி சரணிடம் விவரம் அறிந்தவன், ஷானவியிடம் மெடிக்கல் கிட்டை எடுத்து வர சொன்னான்.

# புது மலர்கள் பூத்திடும் வேளை…!

அதற்குள்ளாக மேலே வந்திருந்தனர் மீனாவும் ராகவும் சரணின் அருகே வந்த மீனா அவனது தோளில் சாய்ந்து "வாழ்த்துக்கள் மாமா, இது என்னோட ப்ரண்ட் குரு ராகவ்" என்று அறிமுகப்படுத்த சரணும் எந்த ஒரு வித்தியாசமும் இன்றி மீனாவின் நன்றியை ஏற்றுக்கொண்டு, ராகவிற்கும் தன் நன்றியைத் தெரிவித்தான்.

ராகவுடன் மேடையேறும் வரை நிலாவின் செய்கைகளை தான் பார்த்துக் கொண்டிருந்தாள் மீனா அவளின் இருண்டு பயந்து போன முகமே, அவளுக்கு ராகவைத் தெரிந்துவிட்டது என்று புரிந்தது. இது தானே அவளுக்கு வேண்டும். அவள் எதிர்பார்த்ததும் இதைத்தானே இனி அடுத்து என்ன செய்ய வேண்டும் என்று யோசிக்க ஆரம்பித்தாள். அதற்கு முதல் வேலையாக இந்த ராகவை இங்கிருந்து அனுப்ப வேண்டும். என முடிவு செய்து அதற்கு தகுந்தாற்போல சில பல காரணங்களைக் கூறி அவனைக் கலட்டி விட்டாள்.

நிலாவிற்கு கிடைத்த சிறு தனிமையில் அவளை சந்தித்தவள், "உனக்கு ஏற்கனவே குருவைத் தெரியுமா? என்றாள் எந்த முன்னறிவிப்பும் இன்றி.

அதில் விதிர்த்துப் போனவள், "என்ன…… என்ன…… யார்……. எனக்கு அப்படி யாரையும் தெரியாது" என்றாள்.

உனக்கு பொய் பேசத் தெரியாது, அப்படி, இப்படினு சரண் பெருமை பேசிட்டு இருக்கான், நீ இப்படி பொய் சொல்ற, ஓ உனக்குத் தெரியாது போல, ஆனா அவனுக்கு உன்னைத் தெரியுமாம்….. இந்த லாட்ஜ்ல உன்னைப் பார்த்ததா என்கிட்ட சொல்லிட்டு போறான்." என்று போகிறபோக்கில் சொல்வது போல நிலா மனதில் பயத்தையும், குழப்பத்தையும் ஒரு சேர விதைத்து விட்டுக் கிளம்பினாள்.

சரண் தன் அருகே அமர்ந்து அவள் தோளைத் தொட்டு அழைத்ததைக் கூட உணராமல் ஒரு திக்பிரமைப் பிடித்து உட்கார்ந்திருந்தாள் நிலா…..

புது மலர்கள் பூத்திடும் வேளை - மதுவதனி

# புது மலர்கள் பூத்திடும் வேளை…!

நிலாவுக்கு ஒரே பதட்டமாக இருந்தது. அடுத்து என்ன செய்வது யாரிடம் இதைக் கூறுவது என்று கூட தெரியவில்லை. மற்ற விசயங்களில் சுயமாய் தைரியமாய் எதிர்த்து போராடி ஜெயித்தவளுக்கு இந்த விசயத்தில் அப்படி செய்ய முடியவில்லை. இதில் சரண் அவள் வாழ்க்கையில் வராமல் இருந்திருந்தால் அவள் எடுக்கும் முடிவே வேறு. இந்நேரம் அந்த குரு காவல் நிலையத்தில் இருந்திருப்பான். ஆனால் இப்போதோ அவளுக்கு எல்லாமே சரண்தான். அவளுக்கு ஒரு பிரச்சினை என்றால் அது அவள் கணவனையும் சேர்த்து பாதிக்குமே.

இதை சரணிடம் எப்படி சொல்வது, இன்னும் அவள் முழுதாக உண்மையை அவனிடம் கூறவில்லையே, அதுவே அவளுக்கு அவனுடன் ஒன்றமுடியாமல் குற்ற உணர்ச்சியைக் கொடுத்தது. இனி இது அவள் அல்லாமல் வேறு ஒருவர் மூலமாக தெரிந்தால் என்னாகும் என்பதும், அதனால் சரணிடம் எந்தமாதிரியான மாற்றங்கள் உண்டாகும் என்பதை நினைத்தாலே முதுகுத்தண்டு சில்லிட்டது. இனியும் காலம் தாழ்த்த முடியாது இன்றிரவே எப்படியும் சொல்லிவிட வேண்டும், அதன் பிறகு அவர் எந்த முடிவெடுத்தாலும் அதற்கு தான் உடன்பட்டே ஆக வேண்டும் என்று தீர்மானம் எடுத்த பின்னே மனம் சிறிது சமாதானம் ஆனது.

அதற்குள் ஷானவி மெடிக்கல் கிட்டுடன் வர, சிபி சரணையும் இழுத்துக்கொண்டு அங்கு வந்து அவளது காலை ஆராய்ந்த படியே "அண்ணியை விட்டுட்டு அங்க எங்கே போனீங்க" என்று கோவப்பட்டான்..

"நீ ஏண்டா கடிக்கிற, இங்க பக்கத்துல டாக்டர் இருக்காங்களானு ராமன் அங்கிள் கிட்ட கேட்டுட்டு இருந்தேன்" எனவும்….

சிபியும் ஷானவியும் அவனை அடிக்க துரத்த ஆரம்பித்தனர், முதலில் புரியாமல் ஓடியவனும், புரிந்த பின் சிரித்துக் கொண்டே நிலாவின் அருகே வந்து நின்றான்..

"சாரி கைஸ்….!!!!! நிலா முகத்துல வலியைப் பார்க்கவும் டென்சன்ல நீங்களும் டாக்டர் அப்படிங்கிறதேயே மறந்துட்டேன்….. ஹீ…. ஹீ… மன்னிச்சு மன்னிச்சு…!" - சரண்.

புது மலர்கள் பூத்திடும் வேளை - மதுவதனி

# புது மலர்கள் பூத்திடும் வேளை…!

அதுவரை தன் பிரச்சினையிலே உழன்று கொண்டிருந்தவள் இவர்களின் ஓட்டத்தையும், அங்கு நடந்த பேச்சுக்களையும் கேட்டதும் தன் நிலையையும் மறந்து சிரிக்க ஆரம்பித்தாள் நிலா..

“அக்கா சிரிச்சதுனால உங்களை சும்மா விடுறோம், இல்லை இந்நேரம் அக்காவைப் பேக்கப் பண்ணிருப்போம் பெங்களுருக்கு…”

“ஏன்மா… ஏன்…. எல்லாம் நல்லாதான போய்ட்டு இருக்கு, உனக்கு ஏன் இப்படி ஒரு டெவில் திங்கிங், எனக்கு வில்லன் வெளிய இருந்து வரவேண்டும். நீங்களே போதும்.” - சரண்

“ஹாஹா நாங்களா…? நாங்களா வில்லன்ஸ்…? ஹாஹா இங்க பாருங்கடா காமெடிய, உங்களுக்கு நீங்களேதான் வில்லன், வேணும்னா பாருங்க, ஒருநாள் எங்ககிட்ட வந்து ஹெல்ப் கேட்டு நீங்க நிக்கல… இல்ல நிப்பீங்க…. அப்படி ஒன்னு நடக்கல நாங்க எங்க பேரையே மாத்திக்கிறோம்…? என்ன நந்து”- ஷானவி

“ம்ம்ம் ஆமாம்… ஆமாம், டேய் கண்ணா, இந்த நிலாவை எப்படி கரெக்ட் பண்றதுன்னே தெரியல, கொஞ்சம் சொல்லுங்கடானு நீங்க கெஞ்சுவீங்க, அப்போ தெரியும் எங்களைப்பத்தி” என்றவன் நிலா எவ்வளோ தடுத்தும் கேட்காமல் இல்லாத காயத்திற்கு மருந்தை தடவி விட்டு எழுந்தான் சிபி.

ஒருவழியாக அனைத்து ஆரவாரமும் முடிய இரவு பத்து மணிக்கு மேலானது. அதன் பிறகு சிறிதும் தாமதிக்காமல் நிலாவை அன்றைய நாளுக்கு தயாராக்க விஜயாவின் அறைக்கே அழைத்து சென்றனர். அவரும் தன் மகளின் முகத்தில் மலர்ந்த மகிழ்ச்சியைப் பார்க்கட்டுமே என்று.

நிலாவிற்கு இருந்த குழப்பங்களில் இதையெல்லாம் யோசிக்கவே இல்லை. ஆனாலும் பெரியவர்களை மறுத்துப் பேச முடியாமலும், கணவனின் கண்களில் தெரிந்த ஆவலிலும், தன் குழப்பங்களை மறைத்து அவர்களுக்கு ஒத்துழைக்க ஆரம்பித்தாள், ஆனாலும் அவனிடம் உண்மையைக் கூறிய பிறகே வாழ்வைத் தொடங்க வேண்டும் என்ற முடிவோடு.

புது மலர்கள் பூத்திடும் வேளை - மதுவதனி

அவளை அலங்கரித்துவிட்டு தாயுக்கும் மகளுக்கும் தனிமை கொடுத்து அகிலா வெளியேற, விஜயா தன்னையே வைத்தக்கண் எடுக்காமல் பார்ப்பதை உணர்ந்தவள் எழுந்து அவர் அருகில் சென்று காலுக்கடியில் அமர்ந்து மடியில் தலை வைத்துக் கொண்டாள் தேனு. அவரும் மகளின் மனதில் நடக்கும் குழப்பங்களை அறியாமல் தன்னை விட்டு பிரியப்போவதால் தான் இப்படி இருக்கிறாள் என்று நினைத்து தன் நடுங்கும் கைகளால் அவள் தலையை வருட ஆரம்பித்தார்.

அதில் முற்றிலும் உடைந்து போனவள் அவரது இடுப்பைக் கட்டிக்கொண்டு உடல் குலுங்க வாய்விட்டு அழ ஆரம்பித்தாள். அவளது இந்த அழுகையை எதிர்பார்த்தவர் போல, அவளது தலையை வருடிக்கொண்டே பேச ஆரம்பித்தார். “குத்திம்மா, ஞான் சொள்ளலதைக் கேளுதா… ஞீ இப்பதி அழுதா அம்மாக்கு கட்டமா இருக்கதா.. ஹ்ம்ம்ம், உதக்கும் அந்த பையனைப் பிதிச்சிருக்குனு தெதியவும் தான் அம்மா இப்பதி ஒது முதிவெதுத்தேன்.. இன்னும் ஞீ கட்டம் பத வேந்தாம் தா…” என்று இதைப் பேசுவதற்கே மிகவும் கஷ்டப்பட்டார் விஜயா. வார்த்தைகள் இன்னும் தெளிவாய் வரவில்லை அவருக்கு….

தாயின் பேச்சில் அதிர்ந்து நிமிர்ந்து அவரைப் பார்த்தாள். அவளுக்கு அவனைப் பிடிக்கும் ரொம்பவே பிடிக்கும், இதோ அவனாக அவளைத் தேடி வரவில்லை என்றால், ஒருநாளும் அவளாக அவனைத் தேடி போயிருக்கமாட்டாள். இது அவளுக்கு மட்டுமே தெரிந்த உண்மை. இது எப்படி அவளது அன்னைக்கு தெரியும். குழப்பத்துடன் பார்த்தாள் விஜயாவை.

அவர் அதற்கு ஒரு புன்னகையை சிந்திவிட்டு, தன் தலையணைக்கடியில் இருந்த ஒரு குட்டி பர்சை எடுத்து அவள் கையில் கொடுத்தார். அது ஒரு ஓவியம், நிலா வரைந்த சரணின் ஓவியம். அது அவனைக் காண முடியாத ஏக்கத்தில் என்றோ வரைந்து, அதைப்பார்த்து மனதிற்குள்ளே அழுது, கிழித்து எறி என்று மூளை எவ்வளவோ எடுத்து சொல்லியும், அதை தட்டி அடக்கி மனம் சொன்னதைப்போல் பத்திரப்படுத்தினாள் அவள். ஒரு திடுக்கிடலுடன் மீண்டும் தன் தாயைப் பார்க்க, அவர் நான் உன்னை தப்பா நினைச்சிட்டேனு யோசிக்காத, உன்னை ஒருநாளும் அப்படி நான் நினைக்க மாட்டேன். இதோ இதைக்கூட நானா கண்டுபிடிக்கலைனா எனக்கு கடைசிவரைக்கும் இது தெரியாமலே போயிருக்கும். அப்புறம் நீயும் உனக்காக ஒரு வாழ்க்கையை அமைச்சிக்க மாட்டனு தெரியும், அதுவே உனக்கு பிடிச்ச பையனா இருந்தா, நீ கொஞ்சம் யோசிக்கவாவது செய்வ அப்படின்னுதான் நினைச்சேன்.



புது மலர்கள் பூத்திடும் வேளை - மதுவதனி

ஆனா மாப்பிள்ளை உன்னைவிட ஸ்மார்ட் போல இவ்வளவு வேகமா எல்லாத்தையும் முடிச்சிட்டார். நானே இவ்வளவு வேகத்தை எதிர்பார்க்கல, இப்போதான் எனக்கு நிம்மதியா இருக்கு… இந்த சந்தோசம் கடைசி வரைக்கும் இருக்கணும். அதுதான் நீ எனக்கு கொடுக்கிற பெரிய சந்தோஷம். என்று அவர் உள்ளத்தில் தோன்றிய உணர்வுகளை அவரது பார்வையால் பேசிக்கொண்டிருந்தார், அந்தப்பார்வைக்கான அர்த்தமும் அவளுக்கு புரிந்தது.

யாருக்கும் எந்த கஷ்டத்தையும் கொடுக்காமல் எப்படி இந்த விசயத்தில் முடிவெடுப்பது என்று மண்டையைப் போட்டு உடைத்தாள். தன்னிடம் இருந்த தைரியமும் தன்னம்பிக்கையும் இப்போது தன்னை விட்டு எங்கோ சென்றுவிட்டது போல் தோன்றியது அவளுக்கு.

அம்மாவிடம் இதைப்பற்றி பேசலாமா,.? என்று ஒருநொடி யோசித்தாள், ஆனால் அடுத்த நொடியே அவருக்கு மீண்டும் உடல்நிலை சரியில்லாமல் போய்விடுமோ என்ற பயம் ஆட்கொள்ள அந்த யோசனையை அப்போதே கைவிட்டாள். ஏதாவது விபரீதமாக நடப்பதற்குள் சரணிடம் தன்னைப்பற்றி கூறவேண்டும், அவர் என்னை புரிந்து கொள்வார் என்று உறுதியாக இருந்தாள். அந்த உறுதி இன்னும் சிறிது நேரத்தில் தவிடு பொடியாகப் போவது தெரியாமல்.

அடுத்தடுத்து தேனுவின் செய்கைகளை கண்காணித்துக் கொண்டிருந்த மீனாவிற்கு தாயும் மகளும் பேசியது ஒன்று புரியவில்லை என்றாலும், அந்த ஓவியத்தைப் பார்த்து ஓரளவுக்கு யூகித்துக் கொண்டாள். இவர்களைப் பிரிக்க இன்னும் நிறைய செய்ய வேண்டும் போலவே என்று தனக்கு தானே முணுமுணுத்துக் கொண்டாள். அப்போது அங்கு ஷானவியும் அகிலாவும் வர, இவள் அங்கிருந்து நகர்ந்தாள்.

ஆனால் ஷானு அவளை வித்தியாசமாகப் பார்த்ததை அவள் உணரவில்லை. அதோடு “ஏன் அண்ணி எப்படி இந்த பச்சைக்கிளியை சமாளிக்கிறீங்க… என்ன பந்தா, யாரு கூடவும் பேசவும் மாட்டேங்கிறா… பெரிய ரதினு நெனைப்பு, நல்ல வேலை சரண் அண்ணா தப்பிச்சாங்க… நான் கூட எங்க இந்தக்கிளியை அண்ணன் கூட கோர்த்து விட்டுடுவீங்களோனு பயந்துட்டேன்.” என்று அகிலாவிடம் ஷானவி புலம்ப….

புது மலர்கள் பூத்திடும் வேளை - மதுவதனி

“நீ கொஞ்சம் வாயை மூடு, யாரவது கேட்டா என்ன நினைப்பாங்க, உன்னையவே சமாளிக்கும்போது அவளை சமாளிக்க முடியாதா…? வந்த வேலையை மட்டும் பாரு. உனக்கும் அவனுக்கும் அவளை வம்பிலுக்காம இருக்க முடியாது,” என்று அவளையும் திட்டிக்கொண்டே விஜயாவின் அறைக்குள் நுழைந்தார்.

அவர்களுக்கு பின்னரே சரணும் சிபியும் உள்ளே வந்தனர். சிபிக்கும் ஷானவிக்கும் அடுத்த இரண்டு நாளில் தேர்வுகள் ஆரம்பிப்பதால் அன்றிரவே அவர்கள் கிளம்ப வேண்டும் என்று முன்னாடியே ப்ளான் செய்யப்பட்டிருந்தது. இரவு கிளம்பி திருச்சிக்கு சென்றுவிட்டு அடுத்தநாள் பெங்களூர் செல்வதாக இருந்தனர். இது ஏற்கனவே இரு வீட்டாருக்கும் முன்னமே தெரியும் என்பதால் அவர்களும் அதை பெரிதாக எடுக்காமல் வழியனுப்ப முடிவு செய்தனர். அதனால் நிலாவிடம் சொல்லிக்கொள்ள வந்தனர்.

நிலாவிற்கு ஏனோ திருமணம் நடந்து முடிந்த சந்தோசம் சிறிதும் இன்றி அவள் முகம் வெறுமையை பூசிக்கொண்டது. மற்றவர்களுக்காக முகத்தில் இருந்த புன்னகையை பார்த்தவனுக்கு அது அவளின் கண்களில் மலர்ச்சியை ஏற்படுத்தவில்லை என்பது புரிந்து. தன்னுடைய அன்னையைப் பற்றிய சிந்தனையில் தான் இப்படி இருக்கிறாளோ என்று நினைத்து அவளது யோசனையைக் கலைக்க அவனும் முற்படவில்லை. இன்னும் சிறிது நேரத்தில் அவள் தன்னிடம்தானே வருவாள். அப்போது பேசி சரி செய்து விடலாம் என்று நம்பினான்.

சிபியும் ஷானவியும் விடைபெற்று கிளம்ப, அகிலா நாளை மணமக்களை திருச்சிக்கு அழைத்து வருவதாக கூறிவிட்டாள். சரணும் தன் நண்பர்களை அனுப்புவதில் முனைப்பாக இருக்க, அங்கு வந்த அகிலா “எங்க சரண் மாமாவை ஆளையே காணோம்… சாப்பிட கூப்பிட்டேன், இதோ வரேன்னு சொல்லிட்டு இருந்தார் இன்னும் காணோம்.” எனவும்….

“குட்டீஸ்களோட இருப்பார் அக்கா… நல்லா பாருங்க”

“சரி அதை நான் பார்த்துக்கிறேன், நீ போ… நான் இன்னும் கொஞ்ச நேரத்துல நிலாவை அனுப்பி வைக்கிறேன்.”

புதுமலர்கள் பூத்திடும் வேளை - மதுவதனி

# புது மலர்கள் பூத்திடும் வேளை…!

“அக்கா அவ ஏதோ குழப்பத்துல இருந்த மாதிரி இருக்கு, அதனால் இதெல்லாம் இப்போதைக்கு வேண்டாம்னு தோணுது…” தமக்கையின் முகத்தைப் பார்க்காமல் எங்கோ பார்த்துகொண்டு சொன்னான்.

அவனின் செயலில் சிரித்தவள் “ஆமாம் அவ குழப்பத்துல தான் இருக்கா… அதை நீதான் தெளிய வைக்கணும்… முழுசா முடியலைனாலும்… முயற்சியாவது செய்யாலாம். அதற்காக நீ இதை வேண்டாம்னு சொல்ல முடியாது.. இதுவும் ஒரு சடங்கு.. உன்னைப்பத்தி எனக்கு தெரியும் நீ போ” என்றார்.

அக்காவின் வார்த்தையில் தெளிந்தவன் தங்களுக்காக அலங்கரிக்கப்பட்ட அறைக்குச் சென்றான், அங்கு போனதும் தான் தெரிந்தது அது நிலாவின் அறையென்று.

காரணம் அவனது ஓவியம்…..!!!!!!!!!!!!! அவளது குட்டிப்பர்சில் இருந்த அவனது ஓவியம் விஜயாவின் மூலம் வெளியாகி காசிராமனின் உதவியுடன் அந்த அறையை அலங்கரித்துக் கொண்டிருந்தது.

அந்த ஓவியத்தையே பார்த்துக் கொண்டிருந்தவன் தனக்கு பின்னால் வந்து நின்ற நிலாவை கவனிக்காமல் அதிலேயே லயித்து இருந்தான். அது அந்த கேலரியில் அவன் போட்டிருந்த சர்ட்… அன்று அவன் எப்படி இருந்தானோ அதை அப்படியே தத்ரூபமாக வரைந்து இருந்தாள் அவளது ஆருயிர் மனைவி…

**வேளை தொடரும்……..**

புதுமலர்கள் பூத்திடும் வேளை -மதுவதனி




## வேளை - 29-1

****************************************************************************************************

உண்மைப் பொய்யக் கண்டறிய ஞானம் எனக்கில்லை
இல்ல பொய்களையும் நம்பிடும் நான் தெய்வத்தையும் நம்பவில்லை

மையை கண்ணில் பூசி - என்னப் பொய்யா வளைச்சு புடிச்சா
கையாள சாம்பல குழச்சு எந்தன் நெத்தியில் பட்டையை அடிச்சா

சித்தர்களும் சொன்னதெல்லாம் என் வாழ்விலே
சித்தரிச்ச தெய்வம் இப்போ என் நெஞ்சிலே

ஏயச்சுப்புட்டு போனாளே அவ பொம்பளே
நெஞ்சவிட்டு போகாது என்காதலே

அவ பொம்பளயா நான் அவளை நம்பலையா...
ஆணுக்கொரு பெண்ணில்லையா ..?

# புது மலர்கள் பூத்திடும் வேளை...!

**வாழ்க்கையில் வம்பில்லையா...? - ஐயா**
**எல்லோருடைய வாழ்க்கையிலும் பொம்பளை உண்டு..**

**என்னுடைய வாழ்விலும் ஒரு பொம்பளை உண்டு....**
**அவ காதலியா... இல்ல காதகியா...**

**எந்தன் நாயகியா...? ரெண்டும் கேட்ட பாதகியா...?**

**************************************************************************************************

தான் வந்ததைக்கூட அறியாமல் ஏன் சுவரை வெறித்துக் கொண்டிருக்கிறான் என்ற யோசனையுடன் அவன் பார்த்துக் கொண்டிருந்த திசையில் தன் பார்வையை ஓட்டியவளுக்கும் அதிர்ச்சிதான்..... ஆனந்த அதிர்ச்சி... இன்று முழுவதும் இந்த அறைக்குள்ளே விடாமல், எல்லாரும் சேர்ந்து ப்ளான் செய்து இந்த ஓவியத்தை இங்கு மாட்டி இருக்கிறார்கள் என்பது அவளுக்கு புரிந்தது.

மெதுவாக அவன் அருகில் நடந்து வர, தன் அருகில் யாரோ நிற்கும் அரவம் உணர்ந்து திரும்பியவன் நன்றாக மாட்டினோம் என்ற பாவனையுடன் கண்ணில் தெரிந்த திருட்டுத்தனத்தை மனைவியிடம் பார்த்தவன் அவளை இறுக அணைத்து வாய்விட்டு சிரிக்க ஆரம்பித்தான். அவன் தன்னைக் கிண்டல் செய்யப்போகிறான் என்று நினைத்தவளுக்கு அவனது அறையை எதிரொலிக்கும் இந்த சிரிப்பு வியப்பைக் கொடுத்தது. அவன் கண்களில் நீர்வர சிரிக்கவும், அவன் இப்போது சிரிப்பை நிறுத்த மாட்டான் என்று உணர்ந்தவள் சற்று எக்கி அவன் வாயைத் தன் தளிர் கரங்களால் மூடினாள்.

அவளது செயலைப் பார்த்து மேலும் சிரித்தவன், அவளை மேலும் மேலும் இறுக்கி நிலா... நிலாக்குட்டி.... என்ற வார்த்தைகளைத் தவிர வேறு வார்த்தைகள் மறந்து போனது போல் அதையே உச்சரித்துக் கொண்டிருந்தான். அவளுக்கும் அதுவரை இருந்த குழப்பங்கள் எல்லாம் மனதின் ஒரு மூலைக்கு சென்று, கணவனின் மேல் இருந்த காதல் தண்ணீரில் மூழ்கிய பலூனாய் மேலெழும்பியது.

கண்களை மூடி அணைத்திருந்தவன் உதடுகள் மட்டும் அவள் பெயரையே உச்சரிக்க, அதில் நெகிழ்ந்தவள் விழிகளில் நீர் சுரக்க அவனது தலையை வருட ஆரம்பித்தாள்.

புது மலர்கள் பூத்திடும் வேளை - மதுவதனி

# புது மலர்கள் பூத்திடும் வேளை...!

அவளின் அந்த செயலில் உணர்வுகளின் பிடியில் சிக்கியவன் அவளை அப்படியே கைகளில் ஏந்தி அங்கிருந்த மஞ்சத்தை நோக்கி நகர்ந்தான்.

அவளோ அவனது செயலில் முற்றிலும் தன்னைத் தொலைத்திருந்தாலும் உதடுகள் மட்டும் "பாவா .... என்ன இது.... விடுங்க.... ப்ளீஸ்.... நான் உங்ககிட்ட கொஞ்சம் பேசணும்.... ப்ளீஸ் பாவா..." என.

அவளது அந்த வார்த்தைகள் மூளையை தொடாமல், அது அவனுக்கு அவளது சிணுங்கலாகப் பட்டு மனதைத்தொட்டது. அந்த சிணுங்களில் மேலும் தன்னைத் தொலைத்தவன் அவளது இதழ்களை தன் இதழால் வருடிக்கொண்டே "தவளை என்று சொன்னால் மட்டும் மேடத்துக் கோபம் வருது, இப்போ என்ன பண்றீங்க...ஹ்ம்ம் ஹ்ம்ம்" என்று அவளை சீண்டி கண்களை சிமிட்ட, அதில் அவள் மயக்கம் தெளிந்து முறைக்க, அந்த விழிகளின் பாவத்தில் சொக்கிப்போய் அவள் மலரதரங்களை சிறை செய்தான் அவளின் அன்புக் கணவன்.

அவனது முத்தத்தில் மயங்கியவளின் விழிகள் திறவாமலே இருக்க, அதைப் பார்த்தவன் அவளை சீண்டும் வண்ணம் அவளது கன்னத்தில் பற்கள் பதிய அழுந்தக் கடித்தான். அதில் மயக்கம் தெளிந்து கோபம் வரப்பெற்றவள் அவனை விலக்கித் தள்ளிவிட்டு எழுந்து அமர்ந்தாள். அவளின் செய்கையில் மேலும் சிரிக்க, அவளோ அவனை முறைக்கும் வேலையை செய்து கொண்டிருந்தாள்.

"என்ன பாவா இப்படியெல்லாம் பண்றீங்க..? வலிக்குது தெரியுமா...?"

"ம்ம்ம்ம் வலிக்குதா... அப்போ உண்மைதான்.."

"என்னாச்சு உங்களுக்கு, எதுக்கு இப்போ சம்மந்தமே இல்லாம பேசுறீங்க.. என்ன உண்மை...?"

புதுமலர்கள் பூத்திடும் வேளை - மதுவதனி

“அது இல்ல நிலாக்குட்டி, நான் உன்னை கிஸ் பண்ணும்போது நீ அப்படியே மயங்கிப்போய் என் கைக்குள்ள இருந்தீயா..? முன்னாடியெல்லாம் கனவுலயும் இப்படித்தான் வருவ.. சோ இதுவும் கனவோனு பயந்துட்டேன். அதான் கடிச்சுப்பார்த்து நீ கத்துனதும் காணவில்லை நிஜம் என்று நம்பிட்டேன்” எனவும்

“ச்சீ … பாவா நீங்க என்ன இப்படியெல்லாம் பேசுறீங்க, பேட் பாய் நீங்க…” என்று தன் சிவந்த கன்னங்களை அவனுக்கு காட்டாமல் வேறு பக்கம் பார்த்து பேசினாள்.

“என்னது பேட் பாயா..? அடிப்பாவி…..!!!!!!!!!! பொண்டாட்டிக்கிட்ட இப்படித்தான் பேசணும் அப்போதான் குட்பாய், இப்படி பேசலைனா தான் பேட்பாய்… ஒரு பேட்பாய்னா என்னனே தெரியாமா இருக்காளே சரண்…. இனி எவ்வளவோ இருக்கே அதுக்கெல்லாம் என்ன சொல்லுவாளோ தெரியலையே..? என்று மனைவியை கிண்டலைடிக்கவும்…..

“ம்ம்ம்ம் பாவா… பாவா…” என்று சிணுங்க மட்டுமே முடிந்தது அவளால். மனைவியின் முகத்தைப் பார்த்தவன் அதற்குமேல் தாங்க மாட்டாள் என்பதை உணர்ந்து அவளை இழுத்து தன் மடியில் அமர்த்தி “நிலாம்மா நீ ஏதோ பேசணும்னு சொன்னியே என்னடா… அத்தையைப்பத்தின பயமா..?” என்றான்.

“ச்சே ச்சே … இல்லை பாவா… அம்மாவைப்பத்தி எந்த பயமும் இல்லை. அப்படிப் பயந்தா உங்கமேல நம்பிக்கை இல்லைன்னு அர்த்தம். அதை எப்பவும் செய்யமாட்டேன். எந்த சூழ்நிலையிலும் உங்களை சந்தேகப்படவே மாட்டேன்” என உறுதியாய் கூற அதில் நெகிழ்ந்தவன் மீண்டும் தன் சில்மிசங்களை அவள் இடையில் இருந்து ஆரம்பித்தான். அவனது வருடலில் உடலும் மனமும் மயங்க அவனோடு இசைந்தபடியே “பாவா நான் பேசணும்னு சொன்னேன்” என்ற குரல் அவளுக்கே கேட்கவில்லை.

“ம்ம்ம் இப்போவே பேசணுமா…? அதுக்குத்தான் முன்னாடியே அவ்ளோ டைம் கேட்டேன். நீ என்கிட்டே ஏதும் பேசனுமா என்று…. இனி டைம் இல்லை, இன்னும் எத்தனை நாள் இருக்கு பின்னாடி நமக்கு பேசுறதுக்கு… அப்போ பேசிக்கலாம். நோ மோர் டாக் பேபி…!!!!” என்றவன் அதற்கு மேலும் அவளை பேசவிடாமல் மீண்டும் தன் முத்த யுத்தத்தை இதழ்களில் இருந்த ஆரம்பிக்க…. அப்போது அபஸ்வரமாய் அந்த அறையின் கதவு படபடவென தட்டப்பட்டது.

# புது மலர்கள் பூத்திடும் வேளை...!

கதவு தட்டும் சத்தத்தைக்கேட்டு பதறி உடனே பிரிந்தவர்கள் அவசரமாய் ஒருவரையொருவர் பார்த்தபடி "இந்நேரத்துக்கு யாரு... அப்படியென்ன அவசரம்... ஒருவேளை அம்மாவுக்கோ..." என்ற வார்த்தை நிலாவின் வாயிலிருந்து நடுங்கியபடியே வந்தது.

"டேய் என்ன நீ... சும்மா இரு... அப்படியெல்லாம் இருக்காது.... இரு... முதல்ல நான் போய் கதவை திறக்கிறேன்..." என்றவன் கதவைத் திறக்க....

அவன் கதவைத் திறக்க காத்திருந்தவள் போல் அவனைப் பார்த்ததும் பாய்ந்து வந்து கட்டிக்கொண்டு கண்ணீர் வடித்தாள் மீனா... மீனாவின் இந்த செய்கையைப் பார்த்து கணவன் மனைவி இருவரும் ஒருசேர அதிர்ந்தனர்.

அந்த அதிர்ச்சி விலகும் முன்னே அவனைப்பிடித்து உலுக்கிக் கொண்டே "நம்ம ரெண்டு பேருக்கும் மேரேஜ் பண்ணனும்னு பேசினது உங்களுக்கு தெரியுமா தெரியாதா..? அப்போ இருந்து உங்களை நான் எவ்ளோ விரும்புறேன் தெரியுமா..? எப்படியும் நம்ம ரெண்டு பேருக்கும்தான் மேரேஜ் ஆகும், அப்போ உங்ககிட்ட என்னோட மனசை சொல்லலாம் என்று இருந்தேன். ஆனா என்னோட கனவு இப்படி பாழாபோகும் என்று நினைக்கவே இல்லை. சரி நீங்க இவளை லவ் பண்றீங்க... அவளையே கல்யாணமும் செய்துக்கப்போறீங்க என்று சொன்னதும், சரி நம்ம விருப்பம்தான் நடக்கல, நம்ம மாமாவோட விருப்பமாவது நடக்கட்டும் என்று என் மனசை தேத்திக்கிட்டு, உள்ளுக்குள்ளே வருத்தப்பட்டாலும் வெளியே சந்தோஷமா இருக்கிற மாதிரி நடிச்சேன்"

"இன்னைக்கு புல்லா உங்களை பார்க்குறேன், எத்தனை சந்தோசமா இருக்கீங்க, ஒரு சின்ன அடிக்கு இவளை எப்படித் தாங்குனிங்க, அதையெல்லாம் பார்த்தும் மனசு ஓரமா வலிச்சாலும் உங்களுக்காக நான் வெளிகாட்டாம இருந்தேன். ஆனா உங்களோட இந்தத் தவிப்புக்கும், துடிப்புக்கும், காதலுக்கும் இவள் பொருத்தமானவளே இல்லையே... போயும் போயும் இவளுக்காகவா நீங்க இவ்ளோ கஷ்டப்பட்டீங்க, உங்களோட இந்த அன்புக்கு அவள் அருகதையானவளே இல்லை மாமா..." என்று பொங்கி வந்த கண்ணீரைத் துடைத்தாள்.

புது மலர்கள் பூத்திடும் வேளை - மதுவதனி

அவளது பேச்சில் நிலா சிலையாக நிற்க, தன் மேல் சாய்ந்திருந்த மீனாவை உதறித் தள்ளி அவள் கன்னத்தில் பளாரென்று ஒரு அறைவிட்டான். "என்ன விட்டா பேசிட்டே போற.. நான் என்னைக்கும் உன்னை மேரேஜ் பண்றேன்னு சொல்லல, அப்படி ஒரு பேச்சுவார்த்தை நடந்ததும் எனக்கு தெரியாது. நீயா எதையும் உளறிட்டு இருக்காதே… அதோட என் மனைவியைப்பத்தி எனக்குத் தெரியும், தேவையில்லாம அவளைப்பத்தி தெரியாம நீயா எதையும் பேசாத, இனிமே என் கண் முன்னாடி நீ வரக்கூடாது. அக்காவுக்காகவும், மாமாவுக்காகவும் தான் நான் உன்னை பொருத்துபோறேன். நான் அடுத்து ஏதும் பேசுறதுக்கு முன்னாடி இங்கே இருந்து நீ வெளியே போ… " என்று கர்ஜித்தான்.

பின் தன் மனைவியின் வெளுத்த முகத்தைப் பார்த்து அருகில் சென்று அவளது முதுகை வருடிக் கொடுத்தபடியே "ஒன்னுமில்லடா அவ ஏதோ உளர்றா… நீ பயப்படாதே……." என்றான்.

தன்னைப்பிடித்து தள்ளியதும் இல்லாமல் சரண் பேசியதும் அதிகம், அவள் இதெல்லாம் நடக்கும் என்று எதிர்பார்த்தாள் தான். அத்தனை விரைவில் அவன் மனைவியை சந்தேகப்படுவான் என்று அவள் நினைக்கவில்லை. ஆனாலும் அவன் நிலாவிடம் காட்டிய நெருக்கம்தான் கொஞ்சம் பயத்தைக் கொடுத்தது. ஒருவேளை தான் நினைத்து வந்தது நடக்கவில்லை என்றால்….?

அதனால் உண்டான ஆவேசம் அதிகமாக "எனக்குத் தெரியும் நீங்க நான் என்ன சொன்னாலும் நம்பமாட்டீங்க என்று.. ஆனால் உண்மைத் தெரிஞ்சா நீங்க ரொம்ப வருத்தப்படுவீங்க மாமா.. அதுக்காத்தான் நான் இவ்வளவு சொல்றேன்.."

"ஏய் நீ இன்னும் போகல.. உன்னை போகச்சொல்லி ரொம்ப நேரமாச்சு.." என்று கத்தினான்.

"நான் உங்களுக்கு உண்மையை சொல்லாம போகமாட்டேன்." என்று பதிலுக்கு கத்தியவள், நிலாவைப் பார்த்து "ச்சீய் நீயெல்லாம் ஒரு பொண்ணா… உன்னைப் பார்த்தாலே அருவருப்பா இருக்கு… இப்போக்கூட நீ உண்மையை சொல்ல மாட்டே இல்லையா.. எப்படிடி…….. இப்படி ஒரு நல்ல மனுசனை ஏமாத்த முடியுது…" எனவும் அவளைத் தன் பக்கம் திருப்பிய சரண்.

# புது மலர்கள் பூத்திடும் வேளை…!

“போதும் மீனா.. இதுதான் லிமிட்.. இதுக்குமேல போன… உன்னைக் கொலைப் பண்ணக்கூட தயங்க மாட்டேன். என்னோட மனைவியைப் பற்றி எல்லா உண்மையும் எனக்குத் தெரியும், எல்லாமே தெரிஞ்சு அதற்கு பின்னாடிதான் இந்தக் கல்யாணமே நடந்தது.. உனக்கு சந்தேகம் என்றால் போய் உன்னோட அண்ணனிடம் கேளு… முதல்ல இந்த இடத்தைக் காலி பண்ணு… இல்லை எல்லோரையும் எழுப்பி உன்னை வெளியே போக வச்சிடுவேன்.” என்று அழுத்தம் திருத்தமாக தெரிவித்தான் சரண்.

அவன் பேச்சே சொன்னதை செய்வேன் என்று சொல்லாமல் சொன்னது. அதற்குமேல் பேசினால் பிரச்சினை வேறுவிதமாக போகும் என்பதை உணர்ந்தவள் “எனக்குத் தெரியும் நீங்க இவளை எவ்வளவு நம்புறீங்க என்று… அதேசமயம் நான் சொல்றதை நம்ப மாட்டீங்க என்றும்…. அதனாலதான் என்னிடம் இருக்கும் ஆதாரத்தைக் கொண்டு வந்தேன்.

இன்னைக்கு ரிசப்சன்ல பார்த்தீங்களே என்னோட பிரண்ட் ராகவ் அவனோட பேரு குருராகவ்… அவனை இவளுக்குத் தெரியுமா என்று கேளுங்க… அவளுக்குத் தெரியும்… அவன் உங்க வைபை திருச்சியில் இருக்க ******** இந்த லாட்ஜில் பார்த்திருக்கான் அதுவும் ரெண்டு ஆண்களோட….!!!

“என்னிடம் சொன்னான் நான் நம்பவே இல்லை… ஆனா அவன் இதோ இருக்க இந்த பேப்பரை என் கையில் கொடுத்து நான் பொய் சொல்லலாம் இந்த நியூஸ் பொய் சொல்லாது வேண்டுமென்றால் செக் பண்ணிக்கோ’ என்று சொல்லிவிட்டு போறான். அதைப் பார்த்ததும் எனக்கு ஒரே ஷாக், அதான் யாருக்கிட்டயும் சொல்லாம நேரடியா உங்ககிட்டேயே வந்து சொல்றேன். எல்லாருக்கும் தெரிஞ்சா எத்தனை அவமானம் கேவலம்… இவளை நம்பாதீங்க மாமா… நான் சொல்றது பொய்யென்றால் இதோ நிக்கறாளே அவளைக் கேளுங்க… என்ன சொல்றா என்று பார்க்கலாம்…” என சவால் விட்டாள் ஒரு வெற்றிபெருக்கோடு…

கண்களை ஒருமுறை இறுக மூடி திறந்தவன், “ஓகே………. நீ சொல்ல வந்ததை சொல்லி முடிச்சிட்டியா…. முடிஞ்சது என்றால் கிளம்பு…. அப்புறம் உனக்கு ஒரு விஷயம் சொல்லணும் இனிமே இப்படி அடுத்தவங்களோட ரூமை அநாகரீகமா தட்டி அவங்களை தொல்லை செய்யாதே, எங்க விசயத்துல இதுவே கடைசி முறையா இருக்கட்டும்” என்று குரல் இறுக அழுத்தமாக அவளை எச்சரித்தான்.

புதுமலர்கள் பூத்திடும் வேளை - மதுவதனி

இதுவரை விளையாட்டும், சிரிப்பும், குறும்புமாய் இருந்த கணவனின் குரலில் இருந்த அழுத்தமும், உடலில் தெரிந்த இறுக்கமும் நிலாவுக்கு உள்ளுக்குள் குளிரைப் பரப்பியது. மேலும் அவன் அவளை விட்டுத் தள்ளிச்சென்று தான் மீனாவிடம் பேசினான். அவனது இந்த விலகலுமே அவளுக்கு ஒருவிதமான பயத்தை விதைத்தது. மேலும் அவன் என்ன சொல்லப்போகிறான் என்ற நினைப்பினூடே அவனையே பார்த்துக் கொண்டிருந்தாள்.

சரணிடம் தோன்றிய வித்தியாசத்தை நிலாவைப்போல் மீனாவும் உணர்ந்து கொண்டாள். அதுவே அவளுக்கு வெற்றி என்பது போல் அவனை மிதப்பாக பார்த்தவள் "அடுத்தவங்களோட ரூமை எதுக்கு நான் தட்டப் போறேன். என்னோட மாமா ரூம் இருக்கும்போது" என்று அவனைக் கடுப்படித்தவள். "இன்னும் இவளை நம்புறீங்களா, இவ உங்களை ஏமாத்தியிருக்கா…" என்று உச்சஸ்ததியில் கத்தினாள்.

அதில் அடக்கி வைத்திருந்த சரணின் கோபம் வெளிப்பட, "ஏய் என்னை என்ன நினைச்சிட்டு இருக்க… பொம்பளையாச்சே என்று பொறுமையா பேசிட்டு இருக்கேன். இதுக்கு மேல நீ பேசுன… நான் எதுக்கும், யாருக்கும் பயப்படாம உன்னைக் கொலை பண்ணிடுவேன். அறிவில்ல உனக்கு எத்தனை தடவை சொல்றது என மனைவியைப்பற்றி எந்த விசயமும் எனக்கு தெரியாம இல்லை. எல்லாம்….. நான் சொல்றது புரியுதா எல்லாமே…. உன்னிடம் இருக்கிற அந்த நியூஸ் உட்பட…. இது எல்லாமே எனக்குத் தெரியும்… அதனால் அவளைப்பத்தி பேசுறதை நிறுத்திட்டு இடத்தைக் காலி பண்ணு.." என்று வார்த்தைகளை கடித்து துப்பினான்.

இதைக்கேட்ட இரு பெண்களுக்குமே அதிர்ச்சி… எப்படி….. எப்படி தெரியும்.. யார் சொல்லியிருப்பார்கள். இருவர் முகத்திலும் குழப்பம்… இனி இங்கிருந்தால் வேலைக்கு ஆகாது என்று உணர்ந்த மீனு தோல்வியில் துவண்டாலும், தலையைச் சிலுப்பிக்கொண்டு வெளியேறினாள்.

அவள் போனதும் பட்டென்று முகத்திலடித்தாற்போல் கதவை அறைந்து சாத்தினான். அதில் நிலாவுக்கு அவனின் கோபம் புரிய, மீனாவுக்கோ அவள் மீதான அவன் அலட்சியம் புரிந்தது. அதில் வெகுண்டவள் தன் அறைக்கு செல்லாமல் பக்கத்தில் இருந்த தோட்டத்தைப் பார்த்து இருந்த ஒரு சிறிய அறைக்குள் சென்று குறுக்கும் நெடுக்குமாக நடந்தாள்.

புது மலர்கள் பூத்திடும் வேளை மதுவதனி

கதவை மூடியவன் எதுவும் பேசாமல் அங்கிருந்த சோபாவில் தன் சக்தியெல்லாம் வடிந்து விட்டாற்போல தொப்பென்று அமர்ந்து கண்களை மூடிக்கொண்டான். முகத்தில் இருந்த இறுக்கம் மட்டும் குறையவே இல்லை. நிலாவுக்கு அவனது அருகில் செல்லவே பயமாய் இருந்தது. கால்கள் இரண்டும் பின்னிக்கொள்ள மெதுவாய் அவன் அருகில் நகர்ந்தாள்.

எத்தனையோ தைரியமாய் எல்லா விசயத்திலும் அதிரடியாய் முடிவெடுத்தவளுக்கு, தன் விசயத்தில் கணவனை எப்படி சமாளித்து சமாதானப்படுத்துவது என்றே தெரியவில்லை. கண்களில் தானாக ஒரு மிரட்சி வந்து ஒட்டிகொண்டது. அருகில் வந்து அவன் தோளை தன் நடுங்கிய விரல்களால் தொட, அவளது தொடுகையை வெறுத்தவன் போல் பட்டென்று கையைத் தட்டிவிட்டு அந்த இடத்தில் இருந்து எழுந்து கட்டிலில் சென்று அமர்ந்தான்.

அதில் விழுக்கென துள்ளியவள் அவனின் இந்த செய்கை அவளுக்கு விழிகளில் நீரை அரும்பச் செய்தது. அவள் கண்ணில் நீருடன் பரிதாபாமாக அவனையேப் பார்க்க, அவனோ தன் மனையாளை நிமிர்ந்து கூட பார்க்கவில்லை. கணவனின் இந்தச் சிறு ஒதுக்கம் கூட தாங்கமாட்டாமல் அவன் காலடியில் அமர்ந்தவள் “பாவா… பாவா… நான்…”என்ற வார்த்தைகள் தொண்டைக்குழியில் இருந்து திணறலாக வந்தது.

அப்போது அவன் அவளை நிமிர்ந்து பார்த்தான். அவளைப் பார்த்தவன் பார்வையில் இதுவரை இருந்த அன்பு, பாசம், காதல், கனிவு, ஏன் சற்று நேரத்திற்கு முன் இருந்த கோபம் ஆற்றாமை இது எதுவுமே இல்லை, அந்தப்பார்வை வெறுமையை காட்டியது, அதில் துடித்தவள் மீண்டும் தன் வாய் திறக்க, அதை கை நீட்டி தடுத்தவன் “இனிமேல் என்னை பாவா… என்று கூப்பிடாதே, இதுவே கடைசியாக இருக்கட்டும்” என்று தன் வார்த்தைகளால் அவளைத் தாக்க துவங்கினான்.

அவள் மேல் இருந்த அளவுக்கு அதிகமான காதல் அவன் கண்ணை மூடியது, தன் அருகில் கிடந்த பேப்பரை எடுத்து அவள் முன்னே எறிந்தவன் “இதில் இருப்பது உண்மையா..?” என்றான்.

“அது வந்து…. இல்லை… என்ன நடந்தது என்றால்….” என நிலா வார்த்தைகளுக்காக தடுமாறினாள்.

புது மலர்கள் பூத்திடும் வேளை - மதுவதனி

# புது மலர்கள் பூத்திடும் வேளை…!

ஏற்கனவே அவனிடம் மறைத்துவிட்டோம், அது முற்றிலும் தன்னுடைய தவறுதான் என்று குற்ற உணர்ச்சியில் இருந்தவள், கணவனின் இந்தக் கேள்வி அவளுக்குள் தடுமாற்றத்தை விதைத்தது.

“நான் உன்னிடம் எந்த வரலாறையும் கேட்கல, அதில் இருக்கிறது உண்மையா… இல்லையா…. அதை மட்டும் சொல்லு..”

“அது… அது… உண்மைதான்…. ஆனால் என்ன நடந்தது…” என்று அவள் வார்த்தையை முடிக்கும் முன் ஓங்கி அவள் கன்னத்தில் அறைந்தான். அந்த அறையில் பொறிகலங்கி போனவள் தானாக ஒரு கை மேலெழும்பி அவளது கன்னத்தை தாங்க, கண்கள் மிரட்சியுடன் சேர்ந்த பயத்தைக் கொடுக்க, சிந்தனைகள் செயலிழக்க அவனைப் பார்த்தாள்.

அவளை அறைந்தவன் மனைவியின் கண்ணில் தெரிந்த மிரட்சியில், அவளை அடித்துவிட்டோமே என்ற கோபமும், அவள் மறைத்துவிட்டாளே என்ற கோபமும் சேர, தன் கையை மீண்டும்….. மீண்டும் அந்த கட்டிலில் உள்ள பலகை போன்ற முகப்பில் ஓங்கி குத்த ஆரம்பித்தான். அதில் அவன் கையில் உதிரம் கசிய ஆரம்பித்தது, ஆனாலும் அவன் குத்திக்கொள்வதை நிறுத்தவில்லை. தன் ஒட்டுமொத்த கோபத்தையும் அந்த கட்டிலில் காண்பித்தான்.

அதிர்ச்சியில் இருந்து மீண்ட நிலா கணவனின் கையைப் பார்த்து பதறிப்போய் “அய்யோ என்ன பண்றீங்க…. ரத்தம் வருது பாவா…” என்று அவன் கைகளைப் பிடிக்கப்போனவள், அவளிடம் இருந்து தன் கையை தள்ளியவன் “ச்சீ போதும் நிறுத்து, இனியும் எதுக்கு நடிக்கிற, ஏண்டீ… ஏன்… நான் உன்னை எவ்வளவு உயரத்துல வச்சிருந்தேன் தெரியுமா..? அதை ஒரு நிமிசத்துல சாக்கடைக்குள்ள தள்ளிட்டீயே, பாவி…. எத்தனை சந்தோசமா ஆரம்பித்த நாள், இப்படி ஒரு துரோகத்துக்கு அடையாளமா மாறும் என்று நான் நினைக்கக் கூட இல்லை.”

“என்னைப்பத்தி A TO Z எல்லாமே உன்னிடம் சொல்லியிருக்கேன். நீயும் என்னிடம் அப்படித்தான் இருக்கிறாய் என்ற மகிழ்ச்சியில் வானத்தில் பறந்தேன், ஆனா போடா மடையா ரொம்ப பறக்காதே என்றுத் தலையில் தட்டிக் கீழே தள்ளி விட்டுட்ட உன்னோட இந்த செய்கையால்.

புது மலர்கள் பூத்திடும் வேளை - மதுவதனி

எத்தனை முறைக் கேட்டேன் உன்னிடம்…. நீ என்கிட்டே எதுவும் சொல்லனுமா… சொல்லனுமா என்று…? ஏன் உன் திருவாய் மலர்ந்து இதை சொல்ல உனக்கு அத்தனைக் கஷ்டமா..? இது முன்னாடியே தெரிந்திருந்தால் மட்டும் என்ன செய்திருப்பேன், சொல்லு என்ன செய்திருப்பேன், அய்யோ என் மனைவி எத்தனைக் கஷ்டத்தைக் கடந்து வந்திருக்கிறாள், அந்த நேரம் எப்படி துடித்து இருப்பாளோ..? என்று உனக்காக இந்த முட்டாள் வருத்தப் பட்டிருப்பேன்.” என அவனது ஒவ்வொரு வார்த்தைகளும் சாட்டையடிகளாய் விலாச அவள் கொஞ்சம் கொஞ்சமாய் துவள ஆரம்பித்தாள். அவன் மனக்கோட்டையில் தன் மீது இருந்த நம்பிக்கை சிறிது சிறிதாக உதிர ஆரம்பித்தது அவளுக்குப் புரிந்தது.

“நீ என்ன சொல்லியிருந்தாலும் பைத்தியக்காரன் மாதிரி கேட்டு நம்பியிருப்பேனே… அது உனக்கு தெரியலையா…? யார் என்ன சொல்லி இருந்தாலும் நீ என்னிடம் எதற்கு இதை மறைத்தாய், எவளோ ஒருத்தி உன்னைப் பத்தி சொல்லி அதை தெரிஞ்சிக்க வேண்டிய அளவில் தான் உன்னோட மனசுல நான் இருக்கேன்னு நினைக்கும்போது எனக்கு வலிக்குதுடீ….

இத்தனை வருஷம் உன்னை என்னோட தேவதையா நினைச்சு பூஜித்த எனக்கு செருப்பால அடிச்ச மாதிரி ஒரு அவமானத்தை உண்டாக்கி கொடுத்துட்ட…. இனி அது காலம் முழுசும் ரணமா இருக்குமே… என்ன செய்ய போறேன்…. இப்படி ஒரு துரோகம் பண்ண உனக்கு எப்படி மனசு வந்தது.” என்று அவளையும் வருத்தி, தன்னையும் வருத்தி புலம்பித் தவித்தான்.

எப்படியும் இந்த செய்தியை சொன்னால் கோபம் வரும், இத்தனை நாளாக மறைத்து விட்டாயே என்று கோபப்படுவான். ஆனால் உடனே தன் சூழ்நிலைகளை எடுத்துச் சொன்னால் புரிந்து கொள்வான் என்றெல்லாம் அவனைப்பற்றி நினைத்திருந்தவளுக்கு, இந்தக்கோபம் மிகவும் புதிது… எப்படி இதை அவனிடம் சொல்லி புரிய வைப்பது என்றே அவளால் யோசிக்க முடியவில்லை, மனமும் மூளையும் மரத்துப் போயிருந்தது.

ஆனால் அவள் கணவனோ தன்னைத்தானே வருத்திக் கொள்கிறானே…? தப்பு செய்த என்னை விட்டு அவன் ஏன் அவனையே காயப்படுத்திக் கொள்கிறான். இனியும் தான் அமைதியாக இருப்பது முறையல்ல, அவனிடம் பேசவேண்டும், பேசி தன்னை புரிய வைக்க வேண்டும். தான் ஏன் இவனிடம் மறைத்தோம் என்பதையும் கூற வேண்டும். அப்போது அவன் என்னை புரிந்து கொள்வான்.

புது மலர்கள் பூத்திடும் வேளை

‘எத்தனையோ பேர் எத்தனையோ விதமாக என்னை தவறாக பேசினார்கள். தவறாக நினைத்தார்கள். அதெல்லாம் எனக்கு ஒரு பொருட்டே இல்லை…. என் கணவன், என்னவன் என்னைத் தவறாக நினைத்து விடக்கூடாது. அது நடக்கவும் கூடாது.’ என்று தனக்குள்ளே உறுதி பூண்டவள் அவனை நோக்கி நடந்தாள். ஆனால் அவனோ பால்கனியில் நின்றுகொண்டு தோட்டத்தில் ஒளிர்ந்த விளக்குகளை வெறித்துக் கொண்டிருந்தான்.

தான் எடுத்து வைக்கும் ஒவ்வொரு அடிக்கும் அவனது உடல் இறுகுவது அவளுக்குத் தெரிந்தது. தான் வருவதை உணர்கிறான் என்றும் தெரிந்தது. அவனிடம் வந்தவள் “ பாவா நான் ….” என்றதும் அவன் முறைப்பாக திரும்ப, “நான் என்ன சொல்ல வர்றேன்னு கொஞ்சம் கேளுங்க பாவா…! ப்ளீஸ், நான் உங்ககிட்ட மறைத்தது தப்புதான்… ரொம்ப பெரிய தப்புதான்.

ஆனால் என்னோட சூழ்நிலை தான் அப்படி செய்ய வச்சது. நான் ஏன் அப்படி இருந்தேன் என்று இந்த ஒருமுறை மட்டும் கேளுங்க, இதற்கு பிறகு உங்களிடம் மறைத்து நானாக எந்த வேலையும் செய்யமாட்டேன். ப்ளீஸ் பாவா… ப்ளீஸ்..” என்று கண்கள் கலங்க தன் கைகளை ஏந்தியவளைப் பார்க்க பார்க்க உள்ளுக்குள்ளே நொறுங்கிப் போனான் சரண். தன் தேவதை தன்னிடம் இறைஞ்சுகிறாளா…? கலங்கத் துடித்த கண்களை சிரமப்பட்டு மறைத்துக் கொண்டு மீண்டும் வெளியே வெறிக்க ஆரம்பித்தான்.

அவனது அமைதியையே அவள் சம்மதமாய் எடுத்துக்கொண்டு தன் வாழ்வில் நடந்த கொடூரங்கள் முழுவதையும் தன் வாயாலையே சொல்லி முடித்தாள் நிலா. அந்த நியூஸ் பேப்பர் செய்தியையும் சேர்த்து…. அனைத்தையும் கூறி முடித்தவள் சுவரோடு சுவராக கீழே அமர்ந்து தன் முழங்காலில் முகம் புதைத்து கதற ஆரம்பித்தாள். முன்னமே அவனுக்கு எல்லாமே தெரியும் என்றாலும் அந்த செய்தித்தாளில் வந்தது புதிது. அதை அவனிடம் யாரும் கூறவில்லை, ஏன் மறைத்தார்கள் என்றும் தெரியவில்லை. இது தெரிந்தால் நான் என்ன செய்திடுவேன் என்று இதற்கு பயந்து போய் சொல்லாமல் இருந்தார்கள். என்மேல் அவ்வளவு நம்பிக்கையா…? அவர்களின் மேல் கோபம் அதிகமாகியது.

புது மலர்கள் பூத்திடும் வேளை - மதுவதனி

கட்டுகடங்காமல் வந்த கோபத்தை அடக்கியவன், அவள் கதறுவதை தாங்க முடியாமல் அவளருகில் சென்று அழுகையில் குலுங்கிய தோளைத் தொட்டான். அதில் திடுக்கிட்டவள் "பாவா…. நான் சொல்றதை நம்புறீங்க தானே.. என்மேல் எந்தத் தப்புமே இல்லை. நான் எந்த தப்பும் செய்யவில்லை, என்னை நம்புங்க பாவா… யார் யார் என்ன சொன்னாலும் எனக்கு வருத்தம் இல்லை. ஆனா நீங்க என்னை சந்தேகமா ஒரு பார்வை கூட பார்த்துடாதீங்க பாவா.., அதை மட்டும் என்னால தாங்கிக்க முடியாது." என்று அதே அழுகையுடன் கூற, அவன் கால்களை பிடித்திருந்தவளின் கைகளை தட்டிவிட்டவன் "ஏய் நிறுத்து… என்னைப்பற்றி என்ன நினைச்சிட்டு இருக்க, உன்மேல் எந்தளவுக்கு அன்பு வச்சிருக்கேன் என்று உனக்குத் தெரியலையா..? நீ என் உயிர்டி .. என்னோட உயிரைப்போய் நான் எப்படி சந்தேகப்படுவேன். ஆனால் இத்தனை நாளா என்மேல் துளிகூட நம்பிக்கை இல்லாமல் நீ தான் இருந்திருக்க அப்படித்தானே..!"

"அப்படி நம்பிக்கை வச்சிருக்கவ, எந்த உண்மையையும் மறைச்சு இருக்க மாட்டா… யார் உன்னை மிரட்டி இருந்தாலும்…!! இந்த மீனாவா வந்து சொல்லியிருக்கவில்லை என்றால் நீயாக வாயைத் திறந்து இருக்கமாட்டாய் அப்படித்தானே..?

நான் உன்மேல் எப்போ சந்தேகப்பட்டேன். என்னோட காதலை இதுக்கு மேல யாரும் கேவலப்படுத்த முடியாது. யார் என்ன சொல்லி இருந்தாலும் நீ என்னிடம் மறைச்சது தப்பு… நம்பிக்கை வேற… சந்தேகம் வேற… எனக்கு உன்மேல் இருந்த நம்பிக்கை பொய்யா போகிடுச்சு… அதற்காக நான் உன்னை சந்தேகப்படுவேன் என்று நீயா எப்படி ஒரு முடிவுக்கு வரலாம்."

"போதும்… போதும்.. எல்லாம் போதும்… நானேதான் உன்னைத் தேடி அலைஞ்சேன். உன் மனதில் ஆசையிருந்தும் நீ மூச்சே விடவில்லை. கேட்டால் உன்னோட அம்மாவை காரணம் சொல்வாய். சரிதான்…. உண்மையும் தான். உன்னோட நிலையில் யார் இருந்தாலும் இப்படித்தான் ஒரு முடிவு எடுப்பாங்க. அதற்கு உன்னைப் பாராட்டுறேன். என்னோட மனைவி ஏற்கனவே நிறைய கஷ்டப்பட்டுட்டாள்."

"கல்யாணத்துக்கு அப்புறம் அவளை ராணி மாதிரி பார்த்துக்கணும் என்று எவ்வளவோ ஆசைகளோட காத்திருந்தேன். அது நீ எப்படி இருந்திருந்தாலும், அது உன்மேல் இருந்த காதலில்…….. அந்தக் காதல் எப்பவும் பொய்யா போகாது.. ஏனென்றால் என்னுடைய காதல் உண்மையான காதல்." என்றவன் அவளின் அதிர்ச்சியடைந்த முகத்தைப் பார்க்காமல் கூட கதவைத் திறந்து கொண்டு கோபமாக வெளியேறினான்.

**வேளை தொடரும்……..**

புது மலர்கள் பூத்திடும் வேளை - மதுவதனி

**வேளை - 29-2**

சரணின் உதாசீனத்தில் பக்கத்து அறையில் இருந்த மீனாவுக்கு அவர்களின் உரையாடல் அனைத்தும் அப்படியே கேட்டது. அவளால் அதை நம்பவே முடியவில்லை. மனம் மகிழ்ச்சியில் குத்தாட்டம் போட்டது. தன்னிடம் அவன் மனைவியை விட்டுக் கொடுக்காமல் பேசியவன், அவனுக்குள் இத்தனைக் கோபமா..? கொஞ்ச நேரத்தில் என்னையவே லூசாக்கி விட்டானே..? அவனைப் பார்த்து ஏளனமாக சிரிக்க வேண்டும் போல் நினைத்தாள். வெளியே போனானே எங்கே போனான், தோட்டத்திற்குள் போனானோ..? என்று அந்த அறையில் இருந்தே ஜன்னல் வழியாக துலாவினாள். அப்போது கார் கிளம்பி வெளியேறும் ஓசைக் கேட்க அங்குப் பார்த்தவள் சரண் காரோடு வெளியேறுவது தெரிந்தது.

மீனாவின் முகத்தில் வெற்றி கொண்ட மகிழ்ச்சி குரூரமாக தெரிந்தது. இனி இதை இப்படியே விடவும் மனமில்லை. போனவன் சிறிது நேரத்தில் சமாதானம் ஆகிவிட்டால் என்ன செய்வது, அதனால் தேனுவிடம் பேசி அவளை மேலும் குழப்பி விட்டால் என்ன என்று யோசித்தவள் அவர்களின் அறைக்குள் நுழைய துவண்ட கொடியாய் தரையில் அவள் அமர்ந்திருந்த கோலம் மீனாவிற்கு ஒரு திருப்தியை வரவைத்தது.

நேராக அவளிடம் சென்றவள் "என்ன உன் புருஷன் உன்னை விட்டுட்டு போய்ட்டானா..? என்றாள் எகத்தாளமாக. அதில் நிமர்ந்த நிலா

"ரூமுக்குள்ள வரும்போது கதவைத் தட்டிட்டு வரணும்னு மேனர்ஸ் தெரியாதா..? வெளியே போ முதல்ல... என்றால் ஆவேசமாய்...

"ஹாஹா உனக்கு கோபம் வருதா...? எதுக்கு வருது, அதெல்லாம் உனக்கு வரவே கூடாது புரியுதா.. ஒரு நல்ல மனுசனை ஏமாத்தி கல்யாணம் பண்ணதும் இல்லாம உனக்கு கோபம் வேற வருதா..? இவ்வளவு நம்பிக்க வச்சவனை ஏமாத்த உனக்கு எப்படி மனசு வந்தது. தொங்க தொங்க தாலி வாங்கிட்டா மட்டும் நீ ஒழுக்கமான நல்ல மனைவியா..? ச்சீ நீயெல்லாம் ஒரு பொண்ணு, உன்னையும் ஒருத்தன் இத்தனை வருஷம் லவ் பண்ணான் பாரு லூசு... அவனை சொல்லணும். இனி எங்கே பைத்தியம் புடிச்சு அலையிறானோ.. யாருக்குத் தெரியும்..

நீ அவனோட இந்த சொத்துக்கும் சுகத்துக்கும் தானே ஆசைப்பட்டாய் அது கிடைச்சிருச்சு தானே, இனி நீ சந்தோசமா இரு. “ஆனா உன்னை உண்மையா லவ் பண்ண அவனும், அவனை உண்மையா லவ் பண்ண நானும் நிம்மதி இல்லாம காலம் முழுசும் இப்படி மெண்டல் மாதிரி புலம்பிக்கிட்டே அலையணும்… அதுதானே உன்னோட ஆசை…. நீயெல்லாம் என்ன ஜென்மமோ….? ச்சே..” என்று வார்த்தைகளைத் தீயாய் கொட்டியவள் அவளை அற்பமாக ஒரு பார்வைப் பார்த்து விட்டு விடுவிடுவென வெளியேறினாள்.

பின் தன் அண்ணனுக்கு போன் செய்து “நாம நினைச்ச மாதிரியே முடிஞ்சது நான் வெளியே இருக்கேன் நீ வா..” என்றதுடன் போனை அணைத்துவிட்டு தோட்டத்துப் பக்கம் சென்று அங்கு மறைவில் போட்டிருந்த கல்மேடையில் அமர்ந்து அவனுக்காக காத்திருந்தாள் சந்தோசமாக..

*சில மணி நேரங்களுக்கு முன்……*

ராகவைக் கழட்டி விட்ட மீனா அந்த வீட்டின் தோட்டத்தில் அடுத்து என்ன செய்வது என்ற யோசனையில் நடை பயின்று கொண்டிருந்தாள். அப்போது அங்கு வந்த காரில் இருந்து சோர்ந்த முகத்துடன் மீனாவின் அண்ணன் மணி இறங்கினான்.

அவன் கையில் குழாய் வடிவில் ஒரு கிப்ட் பார்சல் இருந்தது. அதைப் பார்த்ததும் அவன் அருகில் சென்றவள் “என்ன அண்ணா கிப்ட் எல்லாம் வாங்கிட்டு வந்துருக்க, யாருக்கு இது…? என…

“நம்ம சரணுக்குத்தான்.. நான் அவனுக்கு ஒரு கிப்ட்டும் கொடுக்கல, அதான் இதைக்கொடுத்து சர்ப்ரைஸ் பண்ணலாம்னு ஐடியா…”

அதில் கடுப்பானவள் “ஓ” என்று கேட்டுவிட்டு பின் “இதெல்லாம் உங்களுக்கே ஓவரா தெரியல, அவன் உங்க தங்கையவே அதாவது என்னையவே வேண்டாம்னு சொல்லியிருக்கான். என்னை பத்தி அவனுக்கு எவ்வளவு தப்பான எண்ணம் இருந்தா, அவன் என்னை வேண்டாம்னு சொல்லியிருப்பான்.

புதுமலர்கள் பூத்திடும் வேளை - மதுவதனி

நானே அவனை பழிவாங்காம விடக்கூடாதுன்னு நினைச்சிட்டு இருக்கேன். நீங்க என்னவென்றால் அவனுக்கு ஓடி ஓடி வேலை செய்றது மட்டுமில்லாமல் அவனுக்கு கிப்ட்டும் வாங்கி கொடுக்குறீங்க. என்ன இருந்தாலும் நீங்க இப்படி ஒரு பொண்டாட்டிதாசனா மாறியிருக்கக்கூடாது. என்னைப்பத்தி நீங்க யோசிக்கவே இல்லையில்ல.” என்று கோபமாக கத்த தொடங்கினாள்.

யாரும் பக்கத்தில் இருக்கிறார்களா என்று பதட்டத்துடன் சுற்றும் முற்றும் பார்த்த மணி வேகமாக அவளது வாயை மூடியவன் “கொஞ்சம் பொறுமையா பேசு மீனு, எதுக்கு எடுத்தாலும் அவசரம்.

உன்னோட இந்தக்குணம் தான் அவனை உன்கிட்ட இருந்து தள்ளி வச்சிருக்கு, எதையும் யோசிக்காம செஞ்சுட்டு அப்புறம் இப்படி ஆகிடுச்சேனு குதிக்க வேண்டியது. இப்போ உனக்கு என்ன பிரச்சினை தெளிவா என்கிட்டே சொல்லு..? எனவும்.....

எனக்கு சரண் வேணும்... அவன் எப்படி என்னை வேண்டாம்னு சொல்லலாம். அவன் எனக்கு வேணும்...” என சிறுபிள்ளையென அழுது பிடிவாதம் பிடித்த தங்கையைப் பார்த்தவனுக்கு, தான் முதலிலேயே ஏதாவது செய்திருக்க வேண்டும், எல்லாம் முடிந்த நிலையில் இப்போது போய் என்ன செய்ய முடியும் அவனால் என்ற சிந்தனையில் இருந்தவன் தன் கையில் இருந்த கிப்ட் பேக்கை பார்த்தான். அதைப் பார்த்ததும் கண்ணில் ஒரு வெறி வந்து போனது.

அதை தன் தங்கையின் முன் காட்டாமல் அவளை இப்போது சாமதானம் செய்யும் நோக்குடன் “மீனு இப்போ வந்து இப்படி சொன்னா என்ன அர்த்தம்.. நான்தான் உன்கிட்ட முன்னாடியே கேட்டேனே, நீதான் இன்னும் கொஞ்சநாள் போகட்டும்னு சொன்ன, நானும் சரியென்று சொன்னேன். எல்லாம் நாம நினைச்ச மாதிரியே நடக்கும்னு நானும் கொஞ்சம் அசட்டையா இருந்துட்டேன். பட் அவன் இப்படி ஒரு முடிவேடுப்பானு யாருமே நினைக்கல. அவனை வற்புறுத்தவும் முடியாது. அது சரியாவும் இருக்காது. இனி அதைபத்தி யோசிக்காத... அதன் அண்ணன் இருக்கேனில்ல, உனக்கு இவனை விட நல்ல மாப்பிள்ளையா பார்த்து மேரேஜ் பண்ணி வைக்கிறேன்” என்று கூறி அவளை அமைதிப்படுத்தினான்.

மதுவதனி புது மலர்கள் பூத்திடும் வேளை - மதுவதனி

ஆனால் அதில் அடங்காதவளாக “இல்லை எனக்கு ஒரு சமாதானமும் தேவையில்லை. எனக்கு அவன் வேணும் அவ்ளோதான். அவன் எப்படி என்னை வேண்டாம்னு சொன்னான். என்னை மீறி எப்படி போயிடுவான்னு நான் கொஞ்சம் இவனை கவனிக்காம விட்டுட்டேன். ஆனால் அவன் இந்தளவுக்கு உறுதியா இருப்பானு நினைக்கல. ஒன்னு அவன் என்கூட வாழனும். இல்லை வேற யார்கூடவும் வாழக்கூடாது.”

“என்னை வேண்டாம்னு சொன்னவன் மட்டும் சந்தோசமா இருக்கனுமா?, அவன் அப்படி இருக்கக்கூடாது… அவன் முகத்துல நான் பார்த்த அந்த சந்தோசம் நிம்மதி எதுவும் அவனுக்கு நிலைக்க கூடாது.

அவனோட நிம்மதியே அவன் பொண்டாட்டிதானாமே, அப்போ அவளை கொன்னுட்டா அவன் நிம்மதி போயிடுமில்ல, அதுதான்… அதுதான் எனக்கும் வேணும்.”

அவன் எப்படி இருந்தாலும் எனக்கு வேணும், இல்லை அந்த தேனு சாகனும். இந்த மீனுவை அவன் அவ்வளவு சாதரணமாக எப்படி நினைக்கலாம். இவளைப்போய் பகைச்சிட்டோமே என்று அவன் ஒவ்வொரு நொடியும் துடிக்கனும். அதை நான் பார்த்து சந்தோசப்படனும். உன்னால இதை செய்ய முடியுமா… சொல்லு…. இல்லை விட்டுடு… நானே பார்த்துக்குறேன். எனக்கு தெரிஞ்ச ஆளுங்க இருக்காங்க… நான் சொன்னா என்ன வேண்டுமென்றாலும் செய்வாங்க… அவங்களை வைத்து என்ன செய்யணுமோ, அதை நான் செய்றேன்.” என்று மூச்சுவிடாமல் பேசி முடிக்க மணி அதிர்ந்து போனான். அவனது தங்கையின் இன்னொரு கோரமுகத்தை இப்போதுதான் பார்க்கிறான்.

எப்பொழுதுமே அவள் பிடிவாதம் பிடித்தவள்,அவளுக்குப் பிடித்தது ஒன்று அடுத்த நிமிடம் அவள் கையில் இருக்கவேண்டும். வீட்டிலே செல்லப்பெண்ணாக வளர்த்து அவளது பெற்றோர் பெரிய தப்பு செய்துவிட்டனர். காலம் கடந்த யோசனை, இனி இவளை மாற்ற முடியாது என்ன செய்ய..? ஆனாலும் மணிக்குமே இந்த திருமணத்தில் துளியும் விருப்பமில்லை. அவருக்கு எப்படியும் மீனாவை அவனுக்கு முடித்து விட வேண்டும் என்ற நினைப்பில் உறுதியாக இருந்தார். அதை அவனது வீட்டிலும் தெரிவிக்க, அவனது பெற்றோர்களும் அந்த திட்டத்திற்கு மகிழ்ச்சியாக ஒத்துக்கொண்டனர்.

புது மலர்கள் பூத்திடும் வேளை - மதுவதனி

அதை அவன் மனைவியிடம் கூறியபோது, "நான் என்ன சொன்னாலும் என் தம்பி கேட்பான்தான். அதற்காக அவன் வாழ்க்கையில் நான் எப்படி முடிவெடுக்க முடியும். அவனுக்கு விருப்பமில்லை என்றால் நான் கட்டாயப்படுத்த மாட்டேன். இது அவனுக்கான லைப், அவனது விருப்பமே முக்கியம். அவனுக்கு இஷ்டமில்லை என்றால் விட்டுவிட வேண்டும், என்னை வைத்தோ குழந்தைகளை வைத்தோ அவன் மீது இந்த விருப்பத்தை திணிக்க கூடாது" என்று உறுதியாக தெரிவித்துவிட்டாள். மணியும் முதலில் மனைவிமேல் கோபப்பட்டாலும், காதல் மனைவி மீது அந்தக் கோபம் மூன்று நாட்களுக்கு மேல் தாக்குபிடிக்கவில்லை. அவரும் பொறுத்திருந்து பார்க்கலாம். அவளும் சிறுபெண் தானே என்று அமைதி காத்தார்.

அந்த அமைதிக்கு கிடைத்த பரிசுதான் நிலா-சரண் திருமணம். வந்த கோபத்தில் மனைவியிடம் கத்த, அவள் எதையும் கண்டுகொள்ளாமல் சரணது வாழ்க்கைதான் முக்கியம் என்பதுபோல் பேசி முடித்துவிட்டாள். மேலும் வீட்டோடு மாப்பிள்ளை என்று ஊரில் எல்லோரும் ஒருமாதிரியாக பேசுவது கொஞ்ச நாளாகா காதில் அரசல் புரசலாக விழுந்தது.

இதில் மனைவியும் மதிக்கவில்லை என்று நினைத்தவர், அதோடு சிபி வேறு அவர்களின் குடும்பத்தை முற்றிலுமே மதிப்பதில்லை என்பதும் நேரம் காலம் தெரியாமல் நினைவலையில் வர, இவர்களை இப்படியே விடக்கூடாது என்று வன்மமாக நினைத்து சரியான தருணம் வரும்வரை காத்திருந்தார்.

திருமண வேலைகள் தடபுடலாக நடந்தது. அவர் எதிர்பார்த்த தருணமும் கிடைத்தது. விஜயா அகிலாவையும் மணியையும் அழைத்து அனைத்து உண்மைகளையும் கூறினார். அந்த செய்தித்தாள் நிகழ்ச்சி உட்பட, கூறிவிட்டு சரணிடம் நீங்களே இந்த உண்மையைக் கூறிவிடுங்கள் என்று விஜயா தெரிவிக்க, அகிலா அதை ஆமோதிக்கும் முன் மணி முந்திக்கொண்டு இப்போது வேண்டாம், திருமணம் முடியட்டும் அதன்பிறகு சரணிடம் சொல்லிகொள்ளலாம் என்று தேவையற்ற சில காரணங்களைக் கூறி அவர்களையும் சம்மதிக்க வைத்தான்.

# புது மலர்கள் பூத்திடும் வேளை…!

மனைவி தன்னையே வித்தியாசமாக பார்ப்பதை உணர்ந்தவன் "ஏற்கனவே சரண் ரொம்ப கஷ்டப்பட்டுட்டான் அந்தப் பொண்ணைத் தேடி, இதைக்கேட்டு இன்னும் கஷ்டப்படவேண்டாம்" என்று காரணம் கூற, தம்பியின் இந்த நரக வாழ்க்கையை நேரில் பார்த்தவளாயிற்றே, அதனால் அவளும் மறுத்துப் பேசவில்லை. அதுவே அவனுக்கு வசதியாகிவிட அவர்களை பழிவாங்கும் எண்ணத்துடன் காத்திருந்தான். இவன் இப்படி ஆனதற்கு மற்றுமொரு காரணமும் உண்டு.

சரணின் அன்னை இறந்த சமயம் தன் தம்பிகள் இருவரும் ஆதரவில்லாதவர்களாக போய்விட்டனர், என்ற மனைவியின் அழுகை நாளுக்கு நாள் அதிகரிக்க, மனைவியை சாந்தப்படுத்த வேறுவழி தெரியாமல் தன் வேளையில் மாறுதல் வாங்கி திருச்சிக்கே அழைத்து வந்தான். இதில் அவன் பெற்றோருக்கு துளியும் விருப்பமில்லை. அவனது உறவுகளில் அவனை மாமியார் வீட்டில் இருப்பவன் என்று கிண்டல் அடிக்க ஆரம்பித்தனர். அதோடு அவனை யாரும் மதிக்கவுமில்லை.

இதில் சரணும் தான் மும்பையில் பார்த்துகொண்டிருந்த வேலையை விட்டுவிட்டு சொந்தமாக தொழிலை தொடங்கி பெரிய அளவில் வெற்றியும் பெற்றான். அதில் அவன் ரவியை தன் பார்ட்னராக சேர்த்தவன் மணியைப் பற்றி யோசிக்கவே இல்லை. மனைவியிடம் கேட்டால் சென்ட்ரல் கவெர்ன்மென்ட் வேலையைவிட்டு பிசினஸ் பார்க்க போறீங்களா.. அதெல்லாம் வேண்டாம், அதோடு உறவுகளுக்குள் இந்த பிரச்சினையே வேண்டாம் என்று முடித்துவிட்டாள்.

வழக்கம்போல் அவள் தன் பேச்சைக் கேட்கவில்லை என்று நினைத்தான். நானானால் அவன் அக்காவிற்காக என் குடும்பத்தை விட்டு பிரிந்திருக்க, இவன் மாமா என்ற மரியாதையைத் தவிர வேறெதுவும் கொடுப்பதில்லை என்ற எல்லா கோபங்களும் சேர்ந்து அவனுக்கு பழிவெறியையே கொடுத்தது.

மேலும் இப்போது சரண் வளர்ந்து வரும் ஒரு தொழிலதிபன், சொத்துக்களும் கணிசமான அளவில் வாங்கி போட்டிருந்தான். அதனால் மீனாவை இவனுக்கு திருமணம் செய்து வைத்துவிட்டு அவன் சொத்தைக் கைப்பற்றலாம் என்று நினைத்திருந்தான். ஆனால் நடந்ததோ வேறு, திடீரென ஒருநாள் ஒரு பெண்ணின் புகைப்படத்தை காட்டி இவளைத் தான் திருமணம் செய்துகொள்வேன் என்று அறிவித்தான். யாருடைய சம்மதமும் தேவையில்லை என்பது போல்.

அதில் தன்னுடைய திட்டமெல்லாம் தவிடுபொடியாகி விட்டதை நினைத்து மனதளவில் நொந்து போனான். இனி செய்வதற்கு ஒன்றுமில்லை என்று யோசித்த நேரம் தான் விஜயா அந்த செய்தியை இவர்களிடம் பகிர்ந்து கொண்டது. அதை தனக்கு சாதகமாக பயன்படுத்திக்க நினைத்து அதில் வெற்றியும் பெற்றான். சரணைப் பொறுத்தவரை அவன் நேசிக்கும் சொந்தங்கள் அவனுக்கு உண்மையாக இருக்க வேண்டும்.

அவனிடம் உண்மையை மட்டும் மறைக்க கூடாது. அது அவனுக்கு தெரியும் போது அவன் அவர்களை அவனது வாழ்க்கை வட்டத்தில் இருந்தே ஒதுக்கி வைத்துவிடுவான். அவனது இந்த கேரக்டரை மட்டும் யாராலும் மாத்த முடியவில்லை, அதுவே இப்போது மணிக்கு வசதியாகிவிட, நிலாவின் இந்த விஷயத்தை மட்டும் கூறாமல் விட்டு விட்டான்.

நிலாவின் மீதான சரணின் காதலை நேரடியாக பார்த்தவர் இந்த செய்தியைக் கேட்டாலும் சில நாட்கள் இருவருக்குள்ளும் பிரச்சினை வந்தாலும், பிறகு சமாதானம் ஆகிவிடுவார்கள். அந்த சில நாட்களாவது அவர்களை பிரிக்க வேண்டும் என்று வன்மமாகா திட்டம் போட்டு கொண்டிருந்தான்.

ஆனால் எதிர்பாராத விதமாக மீனா இந்த விசயத்தில் இத்தனை ஈடுபாடோடு இருப்பதை பார்த்தவன் மீனாவிடம் அனைத்து உண்மைகளையும் கூறி அவளிடம் அந்த கிப்ட் பார்சலை நீட்டினான். மேலும் சரணின் கேரக்டரையும் எடுத்து உரைத்தான். அதையெல்லாம் கேட்ட மீனாவின் கண்களில் ஒரு வெறி வந்தது. தன் அண்ணனைக் கட்டி கொண்டவள் “இது போதுமே ப்ரதர்… இதை முன்னாடியே சொல்லியிருந்த என்னோட வொர்க் ரொம்ப சுலபமா முடிஞ்சிருக்குமே.. ஓகே தேவையில்லாம பேசி நேரத்தை கடத்த வேண்டாம். எனக்கு அவன் எச்சில் பழமா கிடைக்க கூடாது. எப்படி உள்ளே போனானோ அப்படியே எனக்கு வேணும்.”

“இனி என்னோட வேலையை நான் ஆரம்பிக்கிறேன்… இந்த மீனு யார் என்று அவர்கள் எல்லாருக்கும் காட்டுறேன்… நீ கொஞ்ச நேரம் உன்னோட வைப்பை மட்டும் வெளியே விட்டுடாத… அவங்க வந்தா நாம நினைச்ச எல்லா காரியமும் கெட்டுடும். அப்புறம் மொத்த பிளானும் கொலாப்ஸ் ஆகிடும்… இனி நான் பார்த்துக்கிறேன்… நீ போ…. நான் உள்ளே போயிட்டு வந்து உனக்கு கால் பண்றேன்.

புது மலர்கள் பூத்திடும் வேளை - மதுவதனி

இது இனி என்னோட பிரச்சினை" என்று மூச்சு விடாமல் பேசிவிட்டு தான் பேச இடம் கொடுக்காமல் உள்ளே செல்லும் தங்கையைப் பார்த்தான். ஒரு பக்கம் மனைவியை நினைத்து பயம் எழுந்தாலும் தங்கையின் மேல் இருந்த நம்பிக்கையில் அதை தூக்கி தூரபோட்டு விட்டு, மீனா சொன்னதேற்கேற்ப அகிலாவை வெளியில் விடாமல் இருக்க அந்த அறைக்குள் நுழைந்தான்.

**வேளை தொடரும்……..**

புதுமலர்கள் பூத்திடும் வேளை - மதுவதனி

# புது மலர்கள் பூத்திடும் வேளை…!




வேளை - 30-1

*********************************************************************************************

ஏதோ நினைவுகள் கனவுகள் மனதிலே மலருதே
காவேரி ஊற்றாகவே காற்றோடு காற்றாகவே
தினம் காண்பது தான் ஏனோ ….

மார்பினில் நானும் மாறாமல் சேரும்
காலம் தான் வேண்டும் ..ம் ..ம்ம்ம்
வான்வெளி எங்கும் என் காதல் கீதம்
பாடும் நாள் வேண்டும் ..ம் ..ம்ம்ம்

# புது மலர்கள் பூத்திடும் வேளை...!

**தேவைகள் எல்லாம் தீராத நேரம்**
**தேவன் நீ வேண்டும் ..ம்ம் தேடும் நாள் வேண்டும் ..ம்ம்**

**நாடிய சொந்தம் நாம் காணும் பந்தம்**
**இன்பம் பேரின்பம் ..ம் ..ம்ம்**
**நாளொரு வண்ணம் நாம் காணும் எண்ணம்**
**ஆஹா ஆனந்தம் ..ம் ..ம்ம்**
**காற்றினில் செல்லும் என் காதல் எண்ணம்**
**ஏங்கும் எந்நாளும் ..ம்ம் ஏக்கம் உள்ளாடும் ..ம்ம்**

**************************************************************************************************

இரவின் நிசப்தத்தில் முல்லையாற்றில் சுழித்தோடும் ஆற்று நீரையே வெறித்துப் பார்த்துக் கொண்டிருந்தான் சரண். அவன் மனமோ வஞ்சனையில்லாமல் அவனையே வசைப்பாடிக் கொண்டிருந்தது. நிலாவிடம் கோபமாக பேசிவிட்டு வீட்டை விட்டு வெளியேறியவன் மனம் போன போக்கில் காரைச் செலுத்த ஆரம்பித்தான். அப்போது அந்த ஆற்றின் பாலத்தைக் கார் தொட்டதும் கால்கள் தானாக பிரேக்கை அழுத்தி காரை நிறுத்த செய்தது. நைட் இந்த பாலத்துக்கு மேல நின்று பார்த்தால் தண்ணீர் ஆடி, பாடி, விளையாடி செல்வது மிகவும் அழகாக இருக்கும் என்று அவன் மனைவி ஒருமுறை சொன்னது ஞாபகம் வந்தது.

அந்தப் பாலத்தின் மீது ஏறி அமர்ந்தவன் ஓடும் தண்ணீரையே பார்த்துக் கொண்டிருந்தான். ‘இந்தக் கரிய இருளில் அப்படி என்ன அழகாக தெரிகிறது என்று அவள் சொன்னாள்....!

பார்த்தால் இருளைத் தவிர வேறு ஒன்றுமே தெரியவில்லை. என்ன ரசனையோ.... இவளை வைத்து எப்படி குப்பைக் கொட்டுவது.... இப்படி ஒவ்வொரு நைட்டும் அது அழகா இருக்கும், இது நல்லா இருக்கும் என்று வெளியே சுற்றினால் உன் பாடு அவ்ளோதான் சரண்’ என்று மனம் மனைவியை நினைக்க அதுவரை இருந்த கோபமெல்லாம் வடிய, மனம் லேசாகி மனைவியின் செயல்களை அசைபோட ஆரம்பித்தான்.

புது மலர்கள் பூத்திடும் வேளை - மதுவதனி

# புது மலர்கள் பூத்திடும் வேளை…!

அவள் நிலையில் இருந்து யோசிக்க ஆரம்பிக்கவும் தான் அவன் செய்த தவறு புரிந்தது. இதுவரை கஷ்டத்தை மட்டுமே பார்த்து வந்தவள், என்னிடம் வந்தால் தான் சந்தோசமாக இருப்பாள் என்று அவசர அவசரமாக திருமணத்தை முடித்தவிட்டு, இன்று யாரோ ஒருத்தி சொன்னாள் என்று அவள் பேச்சைக் கேட்டு தன் மனைவிமேல் கோபம் கொண்டதற்கு தன்னையே வெறுத்தான் அவன். தப்பே செய்திருந்தாலும் அவளை வருத்தக்கூடாது என்றெல்லாம் நினைத்துவிட்டு, இன்று அவள்மேல் சிறு தவறு கூட இல்லையென்று தெரிந்தும் அவளை வருத்தியது அவனைக் கொல்லாமல் கொன்றது.

என்னிடம் மறைத்து விட்டார்கள், என்னில் நம்பிக்கையில்லாமல் போய்விட்டது என்ற கோபம் தான் அதற்கு காரணம். அதை நான் அவளின் அம்மாவிடம் தான் காட்டியிருக்க வேண்டும். அதை விடுத்து இவளிடம் கோபத்தைக் காட்டியது பெருந்தவறு என்று புரிந்தது. கணவன் மனைவி உறவுகளுக்குள் எந்த ரகசியமும் இருக்க கூடாது என்று இத்தனை வருடம் வாழ்ந்தவர்களுக்கு ஏன் புரியவில்லை. இதனால் தன் பெண்ணுடைய வாழ்க்கை பாதிக்கப்படும் என்றும் ஏன் நினைக்கவில்லை அவர்கள்.

நானே என் நிலாவை அடித்து விட்டேனே… நான் பேசிய வார்த்தைகளுக்கு அவள் எத்தனை துடித்துப் போயிருப்பாள். எப்படியெல்லாம் வருந்தினாளோ..? கடவுளே ஏன் எங்களை இப்படியெல்லாம் சோதிக்கிறாய். அவள் மேல் உனக்கு கருணையே வராதா..? யார் யாரோ செய்த தவறுக்கெல்லாம் அவளை ஏன் பலிகடா ஆக்குகிறாய் என்று தன்போக்கில் மனதிற்குள்ளே அரற்றினான்.

தவறு செய்தது நீ.. அதற்கு ஏன் கடவுளைத் திட்டுகிறாய் என மனசாட்சி அந்த நேரம் இடித்துரைக்க, 'ஆமாம் நான்தான் தவறு செய்தேன், என் நிலாவைப் பற்றி தெரிந்தும், அவளைக் காயப்படுத்தி விட்டேன். முதலில் என்னுடைய செயலுக்கு மன்னிப்பு கேட்க வேண்டும். என் நிலா என்னை வெறுக்க மாட்டாள்.

என்னை மன்னித்து விடுவாள் என்று நினைத்துக் கொண்டே வந்தவன் 'அவள் எப்படி என்னை அப்படி நினைக்கலாம், நான் எப்படி அவளை சந்தேகப்படுவேன். நான் அவளல்லவா..! அவள் நானல்லவா…! அவள் இன்னும் அதை உணரவே இல்லையா..? என்று ஒரு மனம் கேட்க…

புது மலர்கள் பூத்திடும் வேளை - மது வதனி

# புது மலர்கள் பூத்திடும் வேளை…!

இன்னொரு மனமோ 'அவள் அதெல்லாம் உணர்ந்துதான் இருந்தாள். இல்லையென்றால் ஒரு முத்தத்திற்கே உன்னிடம் மயங்கிப்போய் இருப்பாளா..? இல்லை பாவா… பாவா.. என்று உன்னை உரிமையாக அழைப்பாளா..? நீதான் அவளை புரிந்து கொள்ளவே இல்லை. உன்னுடைய நிதானம் எங்கே போனது. உன் அவசரத்தனத்தினால் இன்று அவள் எப்படி வருத்தப்பட்டுக் கொண்டிருப்பாள் என்று சாடியது இன்னொரு மனது. அவனது மனம் சுய அலசலில் முற்றிலும் தெளிந்து போயிருந்தது.

மனைவியின் பாவா என்ற அழைப்புக்கு மனம் ஏங்கியது. அவளை வேறு இனி அப்படி கூப்பிடாதே என்று சொல்லியாச்சு… கூப்பிட சொன்னால் ரொம்ப பிகு செய்வாளோ.. சரி யாரிடம் செய்கிறாள், என்னிடம் தானே… காலில் விழுந்தால் தான் கூப்பிடுவேன், இல்லை தோப்புக்கரணம் போட்டால்தான் கூப்பிடுவேன் என்று சொன்னாலும் பரவாயில்லை செய்து விட வேண்டியதுதான். என் நிலா என்னை அன்பாக…. ஆசையாக.. பாவா என்று கூப்பிடவேண்டும் அதுதான் முக்கியம் என்று நினைத்ததும் மனம் முழுதும் மகிழ்ச்சிப் பூக்கள் பூக்க ஆரம்பித்தன.

அவன் மீனாவைப் பற்றி சிந்திக்க கூட இல்லை, அவனுக்கு மீனா ஒரு பொருட்டே இல்லை. ஏதோ சிறு பெண் ஆத்திரத்திலும் அவசரத்திலும் தெரியாமல் செய்து விட்டாள். அக்காவிடமும் மாமாவிடமும் விசயத்தைக் கூறி புரிய வைத்து விடலாம் என்று நினைத்தான். இன்னும் சில மணிநேரத்தில் தான் நினைத்தது எத்தனை தவறு என்று புரியும் போது என்ன செய்வான்.

இனி இங்கிருந்து நேரத்தை வீணாக்காமல் வீட்டுக்குப் போகலாம், அவள் எப்படி இருக்கிறாளோ…. அவளை சமாதனம் செய்ய என்ன செய்யலாம் என்று நினைத்தவன், இதெல்லாம் ஒரு மேட்டரா.. இருக்கவே இருக்கு இசைஞானியின் பாட்டு, அதில் ஒன்றை எடுத்து விட்டு கரெக்ட் பண்ணிடலாம். நாம பாடினாதான் மேடம் அப்படியே ப்ரீஸ் ஆகிடுவாங்களே என்று மனதில் தோன்றியதும் மனைவியின் செயலை நினைத்து தானாக உதட்டில் புன்னகை வந்தமர்ந்தது.

அதே புன்னகையுடன் பாலத்தை விட்டு இறங்கியவன் காரை நோக்கி நடக்க, தனக்கு எதிரே ஒரு காரின் மேல் சாய்ந்து நின்று கொண்டு தன்னையே பார்ப்பதை எதேச்சையாக கவனித்தான். இருளில் யார் என்றுத் தெரியவில்லை தெரிந்து கொள்ளவும் ஆர்வமில்லை, அவன் மனைவியைக் காணும் ஏக்கத்தில் காரில் ஏறி அமர்ந்தான்.

புது மலர்கள் பூத்திடும் வேளை - மதுவதனி

அப்போது எதிர்பக்கம் இருந்தவர் அவனை நோக்கி வருவதை உணர்ந்தவன் யார் என்று பார்க்க காரின் ஹெட்லைட்டை ஆன் செய்தவன் அது யாரென்று தெரிந்ததும், உடல் இறுக கைகள் ஸ்டியரிங்கை அழுத்திப் பிடித்தான். வந்தவன் காரின் கதவை தட்டவும். அதுவரை இருந்த சந்தோஷ மனநிலை போய், இன்றைய மகிழ்ச்சியை கெடுத்தவனே இவன்தான் என்ற கோபம் தலைக்கேற, அவனது முகத்தில் ஓங்கி ஒரு குத்துவிட்டான். இதை எதிர்பார்க்காத ராகவ் நிலை தடுமாறி கீழே விழுந்தான்.

மீனா ராகவை அலட்சியப்படுத்தி அவனுடன் பார்ட்டிக்கு வராமல் ஏதோ ஏதோ காரணங்களை சொன்னாலும் அதெல்லாம் உண்மை இல்லை என்று அவனுக்கு இந்த இரண்டு வருட பழக்கத்தில் புரிந்தது. அவள் என்னவோ தவறு செய்யப் போகிறாள், அதனால் பாதிக்கப்பட போவது தேன்நிலாவும் அவளது கணவனும் தான் என்று யூகித்தான். அதே போல் சிறிது நேரத்தில் தன் நண்பன் போனில் அழைத்து சில விசயங்கள் கூற முற்றிலும் உடைந்து போனான். மீனாவைக் கொலை செய்துவிடும் அளவுக்கு கோபம் வந்தது.

அதை நினைத்ததும் அவனுக்கு அந்த பார்டி இனிமையைக் கொடுக்கவில்லை. உடனே அங்கிருந்து வெளியேறி வந்தவனுக்கு பாலத்தில் சூனியத்தை வெறித்த படி அமர்ந்திருந்த சரணைக் கண்டதும் அவன் நினைத்தது உண்மை என்று புரிந்தது. ஆனாலும் சரணின் மேல் நம்பிக்கை இருந்தது.

உயிராக நினைப்பவன் அப்படி ஒன்றும் அடுத்தவர்கள் பேச்சைக் கேட்டு மனைவியை சந்தேகப்படமாட்டான் என்று உறுதியாக நினைத்தான். ஆனால் சரண் இப்படி இங்கு வந்து தனியே அமர்ந்திருப்பதைப் பார்த்தால் விஷயம் கைமீறி போய்விட்டதோ என்ற பயம் வந்தது அவனுக்கு. இதில் இருந்து இவர்களை எப்படி மீட்க, என்ற யோசனையுடன் இருந்தவன் சரண் கிளம்புவதைப் பார்த்ததும்தான் அவனிடம் வந்து இப்படி அடிவாங்கியது.

கீழே விழுந்தவனை தூக்கி நிறுத்திய சரண் “இன்னும் என்னடா ப்ளான் வச்சிருக்கீங்க ரெண்டு பேரும்… அவ அப்படி என்னடா உன் வாழ்க்கையை நாசம் பண்ணினா… ஏண்டா இப்படி அவளை விடாம துரத்துற…. இதுவரைக்கும் ஓகே………, ஆனா இனிமேல் அவளோட நிழலைக் கூட நீ தொட முடியாது… இப்போவே உன்னை கொன்னுடுறேன்.” என்று நிறுத்தாமல் அவனை அடித்துக் கொண்டிருந்தான்.

புது மலர்கள் பூத்திடும் வேளை - மதுவதனி

# புது மலர்கள் பூத்திடும் வேளை…!

“பாஸ் நான் என்ன சொல்ல வரேன்னு கொஞ்சம் கேளுங்க… முதல்ல கொஞ்சம் பொறுமையா இருங்க…. உங்க வைப் பத்தி உங்ககிட்ட பேசதான் வந்துருக்கேன்.” என்று அவனிடம் தன்னை விளக்க….

சரணோ இன்னும் ஆத்திரம் அதிகமாகி “என் மனைவியைப் பத்தி உனக்கு என்னடா தெரியும், அவளைப்பற்றி பேசக்கூட அருகதை இல்லாத பரதேசி, நீயெல்லாம் என் நிலாவைப்பற்றி பேசுறியா…” என்ற கர்ஜிக்க.

“பாஸ் ஒரே நிமிஷம் நான் என்ன சொல்ல வரேன்னு கேளுங்க… உங்க வைப் மேல எந்த தப்பும் இல்லை. எனக்கு நல்லாத் தெரியும். ப்ளீஸ் புரிஞ்சிகோங்க…” என்று அவன் மன்றாடவும் தான். சரண் சிறிது சமநிலைக்கு வந்தான். ஆனால் கோபம் மட்டும் குறையவே இல்லை.

அவன் கேள்வியாக ராகவைப் பார்க்க, அவன் பார்வையை உணர்ந்து தான் சொல்ல வந்த செய்தியைக் கூற ஆரம்பித்தான். Mr. சரண் நீங்க நினைக்கிற அளவுக்கு நான் ரொம்ப மோசமானவன் இல்லை.

நான் என் வாழ்க்கையில் செய்த முதலும் கடைசியுமான தவறு உங்க வைப் விசயத்தில் தான்.” என்றவன் அன்று அவன் நடந்து கொண்டதையும், அதற்கான காரணங்களையும், அதனால் நிலா பாதிக்கப்பட்டதையும், அதன் பிறகு அவளைப்பற்றி முழுதாக தெரிந்து மனம் நொடிந்து திருச்சியை விட்டுக் கிளம்பி மும்பை சென்றதையும் கூறினான்.

“மும்பையில் தான் எனக்கு ஒரு நண்பனின் மூலம் அறிமுகம் ஆனாள் மீனா. பார்த்ததுமே அவளது அழகு எனக்கு மிகவும் பிடித்தது… மீண்டும் மீண்டும் பார்க்க தூண்டிய அழகு… ஆனால் அதை அவளிடம் வெளிபடுத்த பயந்தேன். தெரியாமல் செய்த ஒரு தவறே வாழ்க்கை முழுதும் பாவமாக துரத்தப் போகிறது. இதில் தெரிந்தே ஒரு தவறை செய்யனுமா என்று நினைத்து அந்த ஆசையை அப்படியே அடக்கிக் கொண்டேன்”

புது மலர்கள் பூத்திடும் வேளை மதுவதனி

# புது மலர்கள் பூத்திடும் வேளை...!

"அதோடு மீனாவும் நான் எதிர்பார்த்த மாதிரியான பெண் இல்லை என்று போகப்போக புரிந்தது. ஆனால் எனக்கேத் தெரியாமல் என் மனதில் அவள் மீதான காதல் வளர்ந்து என்னை பயமுறுத்தி நின்றது. உண்மையிலேயே நான் பயந்ததுதான் போனேன். எப்படி இவள் மீது காதல் வந்தது என்று..... எனக்கேத் தெரியவில்லை நான் எவ்வளவு கட்டுப்பாடாக இருந்தாலும் என் மனம் என்னைக் கேட்காமல் அவளையே நினைக்க ஆரம்பித்தது. உன் காதலுக்கு அவள் தகுதியானவள் இல்லை என்று நானே என்னை சமாதானம் செய்து கொள்ள பார்ப்பேன். முடியாது.... என்ன செய்தாலும் முடியாது...!"

"அதன் பிறகுதான் நான் ஒரு முடிவுக்கு வந்தேன். அவள் இதுவரை எப்படி இருந்தாலும் பரவாயில்லை, இனிமேலாவது அவள் எனக்காக... எனக்கு மட்டுமே வேண்டும் என்று முடிவு செய்து அவளிடம் என் காதலை அவளிடம் கூறினேன். நான் எதிர்பார்த்து போல அவள் என் காதலை ஏற்றுக்கொள்ள வில்லை. மேலும் எனக்கு உன்னைப் பிடித்திருக்கு, அது லவ் என்றெல்லாம் கிடையாது. பிடித்திருக்கும் வரை சேர்ந்து இருக்கலாம், ஒத்துவரவில்லை என்றால் பிரிந்து அவரவர் வாழ்க்கையைப் பார்த்துக் கொள்ளலாம் என்று சொன்னாள். எனக்கு முதலில் அருவெறுப்பாக இருந்தது. ஒத்துகொள்ளவே மனம் வரவில்லை. இருந்தும் அவள் என்னைத்தாண்டி வேறு யாரிடமும் போய்விடக்கூடாது என்பதில் உறுதியாய் இருந்த நான் சம்மதித்தேன்."

"ஒரு வருடம் நானும் அவளும் ஒன்றாக வாழ்ந்திருக்கிறோம். கணவன் - மனைவி என்ற அங்கீகாரம் இல்லையென்றாலும், அப்படித்தான் வாழ்ந்திருக்கிறோம். அந்த ஒரு வருட வாழ்வில் அவளுக்கே தெரியாமல் அவளுக்கு என்மேல் காதல் இருந்ததை என்னால் உணர முடிந்தது. வெகு சீக்கிரம் அவள் எனக்கே எனக்காக என மாறிவிடுவாள் என்று நினைத்துக் கொண்டிருந்தேன். ஆனால் திடீரென ஒருநாள் ஊருக்கு கிளம்பி வந்துவிட்டாள். அவளுக்கு பின்னாடியே நானும்....."

"இங்கு வந்ததும் தான் தெரியும் உங்கள் திருமணம் என்று... அப்போதுதான் உங்கள் மனைவியை அந்த ப்ளெக்ஸ் போர்டில் பார்த்தேன். மீனு என்னிடம் தெரியுமா என்று கேட்க... நானும் பழக்கதோஷத்தில் எல்லாவற்றையும் உளறிவிட்டேன். அவள் என்னிடம் இருந்து மட்டும் தகவல்களை பெறவில்லை அவளுக்கு வேறு ஒருத்தரும் உதவி இருக்கிறார். அவர் உங்கள் வீட்டில் உள்ளவர்தான்."

புது மலர்கள் பூத்திடும் வேளை - மதுவதனி

"அவள் உங்கள் மேல் உள்ள ஆசையில் இப்படியெல்லாம் செய்யவில்லை, உங்கள் மனைவிமேல் இருக்கும் பொறாமையில்தான் அப்படி செய்கிறாள். அவளுக்காக … அவள் செய்த… சொன்ன செயலுக்கெல்லாம் உங்கள் மனைவியைத் தவறாக நினைக்க வேண்டாம். மேலும்….." அதுவரை மனப்பாடம் செய்ததைப் போல கடகடவென பேசியவன், சிறிது தயங்க …..

ராகவின் பேச்சில் பிரமித்துப் போயிருந்த சரண் அவன் தயங்குவதைப் பார்த்து, "என்ன Mr. ராகவ்….. எதுவாக இருந்தாலும் தயங்காமல் சொல்லுங்க" என்றான்.

நீண்ட பெருமூச்சு ஒன்றை எடுத்து விட்டவன் "அது வந்து நீங்களும் நானும் நினைத்த மாதிரி மீனு சாதாரண ஆள் இல்லை. இப்போதான் மும்பையிலிருந்து என்னோட பிரண்ட்ஸ் கால் பண்ணிருந்தாங்க, மீனு அவர்களிடம் இம்ரான் பத்தி விசாரிச்சிருக்கா…" என்றான் தயக்கமும் கலக்கமுமாய்…

என்ன இம்ரான் பத்தியா…. அவனைப் பற்றி இவ ஏன் விசாரிச்சா… இவளுக்கும் அவனுக்கும் என்ன சம்மந்தம்… என்று மேலும் அதிர்ச்சியானான். ஏனென்றால் மும்பையில் இவனைப்பற்றி தெரியாதவர்கள் இல்லை.

சட்டத்துக்கு தெரிந்தும், தெரியாமலும் பெண்களை வெளிநாடுகளுக்கும், வெளி மாநிலங்களுக்கும் கடத்துபவன். பிரபலமான அரசியல்வாதிகளில் இருந்து தொழிலதிபர்கள் வரைக்கும் இவனிடம் தொடர்பில் இருப்பார்கள். அவனைப்பற்றி தெரிந்து குடும்ப சூழலை முன்னிறுத்தி சில பெண்கள் இந்த தொழிலில் இறங்குவதுண்டு. அதிலும் முக்கியமாக கல்லூரி பெண்கள்…. அப்படியானால் மீனு………. நினைக்கவே பயமாய் இருந்தது சரணுக்கு…

சரணின் அதிர்ந்த முகம் ராகவிற்கு அவன் நிலையை சொல்ல…. "எஸ் சரண்… நீங்க கெஸ் பண்ணது சரிதான்…. உங்க முகத்தைப் பார்த்தாலே தெரியுது உங்களுக்கும் இம்ரான் பத்தி முழுதும் தெரியுமென்று…. ஆனால் மீனா அந்த மாதிரி பெண் இல்லை. எனக்கு நன்றாக தெரியும்…." என்றான்.

“ம்ம்ம்ம்…. இல்லாமல் இருந்தால் சரிதான்…. உங்கள் பிரெண்ட்ஸ்சிடம் என்ன பேசினாள்”

ஒரு பெண்ணைக் கடத்தணும், அதுவும் இப்போ வேண்டாம், அவள் சொல்லும்போது கடத்தினால் போதுமாம். மேலும் அவளை இங்கே வைத்திருக்க கூடாது, முடிந்தால் வெளிநாடுகளுக்கு அனுப்ப வேண்டும் என்று…. அதற்குத்தான் இம்ரான் பற்றி கேட்டிருக்கிறாள். மீனாவின் எந்த விசயமும் என்னைத்தாண்டி வெளியேப் போகாது… ஆனால் இதை என்னிடம் கேட்டால் நான் அவளுக்கு ஹெல்ப் பண்ண மாட்டேன் என்றுத் தெரிந்து என் நண்பர்களிடம் பேசியிருக்கிறாள்.

இப்போது இவளிடம் நான் எப்படி நடந்து கொள்வது என்றே தெரியவில்லை, நான் நினைத்தது தவறோ… அவள் நான் நினைத்த மாதிரி இல்லையோ…. உண்மையிலேயே அவள் என்னை விரும்பவில்லையோ… என்று தன்னிலை மறந்து புலம்பியவன் சரணின் அதிர்ந்த முகம் கண்டு தன் புலம்பலை விட்டுவிட்டு “சரண் இதுக்கு மேலையும் உங்களிடம் எதையும் மறைக்க கூடாது என்றுதான் எல்லாவற்றையும் கூறிவிட்டேன். இனி மீனாவைப்பற்றி நான் எதையும் யோசிக்கப் போவது இல்லை.”

“அதே சமயம் உங்கள் மனைவி விசயத்தில் நான் தெரியாமல் செய்த தவறை, மீனா தெரிந்தே செய்ய விடமாட்டேன். இதற்கு நான் முழு அளவில் உங்களுக்கு உதவி செய்கிறேன். உங்களுக்கு நான் எந்த வகையில் உதவமுடியும் என்று சொல்லுங்கள் செய்கிறேன். மேலும் இன்னும் இரண்டு மாதத்தில் நான் பிரான்ஸ் போவதாக இருக்கிறது. அது நான் கட்டாயமாக போக வேண்டிய வேலை. இரண்டு வருடங்கள் ஆகும் திரும்பி வருவதற்கு..”

“என் பெற்றோரும் என்னுடன் வருகிறார்கள். அதனால் இந்த ட்ரிப்பை என்னால் கேன்சல் செய்ய முடியாது… இருக்கும் இந்த இரண்டு மாதத்தில்தான் ஏதேனும் செய்துவிடவேணும் என்ன செய்வது..” என்றபடியே சரணைப் பார்த்தான்.

தன்னைப் பார்ப்பதை உணர்ந்த சரண் “முதலில் உன்னைத் தப்பாக நினைத்ததற்கு என்னை மன்னித்து விடு ராகவ். நீ இவ்வளவு யோசித்து பேசியதற்கு ரொம்ப தேங்க்ஸ்.. இனி நான் பார்த்துக் கொள்கிறேன். மீனாவை என்ன செய்ய வேண்டும் என்று நான் முடிவு செய்கிறேன்.



புது மலர்கள் பூத்திடும் வேளை மதுவதனி

அவள் இனி எங்கள் வாழ்க்கையில் வராமல் பார்த்துக்கொள்ள என்னால் முடியும், இது உன் வாழ்க்கை, அதை நல்ல முறையில் நீதான் முடிவு செய்ய வேண்டும்."

நானும் காதலித்தவன் என்ற முறையில் சொல்கிறேன் உன் காதலைத் தவறு என்று நான் குறிப்பிடவில்லை. ஆனால் அதற்கு அந்தக் காதல் தகுதியானவள் மீது வரவேண்டும் என்று சொல்கிறேன். நீ அவளைப்பற்றி முழுதும் சொல்லும்வரை என்னாலையே நம்ப முடியவில்லை. மீனா அப்படிப்பட்டவள் என்று… உனக்கு அவள் வேண்டுமா… வேண்டாமா…என்று நீதான் முடிவு செய்ய வேண்டும். ஒரு நல்ல நண்பனாக நான் எப்போதும் உனக்கு துணை இருப்பேன் அதை மனதில் வைத்து முடிவு செய்…." என்று சரண் பேசிக் கொண்டிருக்கும்போதே அவனது செல்போன் அலறியது….

யார் இந்த நேரத்தில் என்று நினைத்தாலும், ஒருவேளை நிலாவிடமிருந்தா…? அவளுக்கு என்னமோ..? என்று எடுத்துப் பார்த்தான். இல்லை ரவியிடமிருந்து….. அவசரமாக எடுத்துக் காதுக்கு கொடுத்தவன் அந்தப் பக்கம் ரவி சொன்ன செய்தியில் அதிர்ச்சியானான்……………………………………………………

"ஹலோ சொல்லுடா ரவி…. என்னடா இந்த நேரத்தில்…"

"டேய் மச்சான், ஆராக்கு பெயின் வந்துடுச்சுடா.., நைட் இருந்தே இருக்கு, இவ என்னிடம் சொல்லவே இல்லடா… சித்தி பார்த்துட்டு ஹாஸ்பிடல் கூட்டிட்டு போக சொன்னாங்க, இங்கே வந்தா ப்ரீ மெச்சூர் பேபி, ரிஸ்க் பேக்டர் அதிகம், மதுரைக்கு கொண்டு போங்க என்று சொல்றாங்கடா..

எனக்கு ரொம்ப பயமா இருக்குடா… அவளும் பயந்துட்டா… அதனால் டென்சன் ஆகிட்டா… இப்போ என்ன செய்றதுனே தெரியல, நீ கொஞ்சம் வரியாடா.. ப்ளீஸ்" என்றான் பதட்டத்துடன்…..

பர்ஸ்ட் எந்த ஹாஸ்பிடல் என்று சொல்லு, நான் வந்துட்டே இருக்கேன்" எனவும் கற்பகம் ஹாஸ்பிடல் என ரவி கூறியதும்… டென்சன் ஆகாத, அவளுக்கு தைரியம் சொல்லு, நான் இன்னும் டென் மினிட்ஸ்ல வந்துடுவேன்…" என்று போனைக் கட் செய்துவிட்டு ராகவிடம் திரும்பினான்.

புது மலர்கள் பூத்திடும் வேளை - மதுவதனி

“ராகவ் எனக்கு ஒரு ஹெல்ப் பண்ணுங்களேன், நீங்க உடனே ஊருக்குப் போக வேண்டாம், ஒரு டூ டேஸ் இங்கே இருக்கிறமாதிரி ப்ளான் பண்ணுங்க, நான் அவசரமா மதுரைக்கு போகணும். நான் மார்னிங் தான் ரிட்டர்ன் ஆகமுடியும், அதோட நீங்க மீனாவிடம் பேசி அவளை இந்த விசயத்தில் கவனம் செலுத்தாம வேறு எதாவது பண்ண முடியுமா பாருங்க... நான் அதுக்குள்ள என்ன செய்றது என்று உங்களுக்கு சொல்றேன்.”

“xxxxxxxxxx” இதுதான் என்னோட நம்பர், அடிக்கடி கால் பண்ணமாட்டேன். பட் வாட்ஸ் ஆப்ல மெசேஜ் பண்ணுவேன். நீங்க பார்த்துகோங்க. நீங்களும் போன் பண்ண வேண்டாம், அவள் உஷாராகி உங்களை அவாய்ட் செய்ய வாய்ப்பு இருக்கு, சோ கவனமா இருங்க... ப்ளீஸ் உங்களால் பண்ண முடியுமா..?”

"எஸ்" சரண் கண்டிப்பா உங்களுக்கு செய்வேன். என்னோட பாவத்தை தொலைக்க ஒரு வழிக்கிடைக்கும் போது அதை எப்படி மிஸ் பண்ணுவேன், நான் கேர்புல்லா ஹண்டில் பண்ணிக்கிறேன். நீங்க போயிட்டு வாங்க, அப்புறம் மறக்காம உங்க வைப்கிட்ட பேசிடுங்க, ரொம்ப பயந்துட்டு இருப்பாங்க... ப்ளீஸ் நீங்களும் அவங்களை கஷ்டப்படுத்தாதீங்க..”

கண்டிப்பா ராகவ், எப்போதுமே நிலாவை என்னால் கஷ்டப்படுத்த முடியாது. இன்னைக்கு கொஞ்சம் கோபம் அதுதான், இனிமேல் அதுவும் வராமல் பார்துக்காறேன் சரியா...?

தேங்க்ஸ் சரண்.... நீங்க கிளம்புங்க... பார்க்கலாம்.. பாய் என்றதுடன் ராகவும் கிளம்ப, சரணும் நிலாவுக்கு அழைத்துக்கொண்டே காரிலேறி ஹாஸ்பிடல் நோக்கி விரைந்தான்.

மீனா வந்து தன்னிடம் பேசிவிட்டு சென்றதிலேயே உழன்று கொண்டிருந்தாள் நிலா... அவன்மேல் அளவு கடந்த காதலும் ஆசையும் இருந்தும் அவனைத் தேடி போகாமல் இருந்ததற்கு இதுவும் ஒரு காரணம். என்னதான் அன்றைய நிகழ்வில் உண்மையில்லை என்றாலும், அன்று நடந்ததும், அவள்மேல் ஒரு களங்கம் வந்ததும் உண்மைதானே.. அதில் அவள் அவனைத்தேடி சென்றால், இந்த களங்கமும் அவளுடன் அவனை சேருமே என்றுதானே அவள் அவனை நாடாமல் அவனது நினைவுகளிலேயே உயிர்த்திருந்தாள்.

புதுமலர்கள் பூத்திடும் வேளை - மதுவதனி

இன்று கணவன் பேசிய அத்தனை வார்த்தைகளிலும் இருந்த உண்மை அவளை உறைய செய்திருந்தது. அவனிடம் மறைத்து அவள் பட்ட கஷ்டங்கள் கண்முன் நிழலாடியது. இப்படி அவனிடம் மறைத்து நீயும் கஷ்டப்பட்டு, அவனையும் கஷ்டப்படுத்தியதற்கு… எல்லாவற்றையும் உன் வாயலேயே அவனிடம் கூறியிருக்கலாம். உன் அம்மாவைப் பற்றி யோசித்த உனக்கு… உன் வாழ்நாள் முழுவதும் உன்னுடனே வரபோகும் உன் கணவனைப்பற்றி யோசிக்க முடியவில்லையா… இன்று யார் யாரோ அவனைப் பார்த்து கேள்வி கேட்கும் நிலைக்கு கொண்டுவந்து விட்டாயே என்று அவளது மனம் நூறாவது முறையாக அவளை குற்றம் சாட்டிக் கொண்டிருந்தது.

இந்த நள்ளிரவில் எங்கே போனானோ… தான் மன்னிப்பு கேட்டும் அவன் மன்னிக்க தயாராகவில்லையோ…. என்ன செய்ய… இந்தப் பிரச்சினையை யாரிடமும் சொல்ல முடியாது.. சொன்னாலும் அவனுக்கு பிடிக்காது… அவன் வரட்டும்.. அவனே இந்த பிரச்சினைக்கு ஒரு தீர்வு சொல்லட்டும்..' என்று தன் போக்கில் யோசித்துக் கொண்டிருந்தவள் செல்போன் அலறலில் நிகழ்வுக்கு வந்து அதை எடுத்துப் பார்த்தாள். அதில் சரணின் நம்பரிலிருந்து போன் வரவும் அவசரமாக எடுத்துக் காதுக்கு கொடுத்தாள்.

முழுதாக மூன்று அழைப்புகளுக்குப் பிறகு போனை எடுத்த நிலா பதட்டமாக "பாவா… எங்கே போனீங்க… எனக்குப் பயமா இருக்கு, சீக்கிரம் வாங்க…" என்று அழுகையுடன் கூற, காதல் கணவனுக்கு மிகவும் வருத்தமாய் போய்விட்டது.

அவளிடம் சுருக்கமாக விசயத்தைக் கூறி, அவளைப் பதட்டமடையாமல் இருக்கும்படியும், அவன் திரும்புவதற்கு மறுநாள் கூட ஆகலாம் என்றும் கூறிவிட்டு வைத்தான். அதன்பிறகு அவனுக்கு அவர்களின் விசயத்தைப் பற்றி யோசிக்க கூட நேரமிருக்கவில்லை.

சரண் அந்த மருத்துவமனைக்குள் நுழையவும், ஆதிராவை ஏற்றிக்கொண்டு ஆம்புலன்ஸ் கிளம்பவும் சரியாய் இருந்தது. சரணும் அவர்களுக்கு பின்னே காரை விரட்டினான். ஒருமணி நேரத்தில் மதுரை மீனாட்சி மிசன் ஹாஸ்பிடலுக்குள் நுழைந்து, அடுத்த மூன்று மணி நேரத்தில் சில சிக்கல்களுக்குப் பிறகு ஆதிராவுக்கு அழகிய ஆண்குழந்தை பிறந்தது.

புதுமலர்கள் பூத்திடும் வேளை - மதுவதனி

# புது மலர்கள் பூத்திடும் வேளை…!

அதன்பிறகுதான் சுற்றுப்புறம் உணர்ந்தான் ரவி. சரண் வந்து தன் நிலையில் இருந்து ஹாஸ்பிடலில் பணம் கட்டி, ஆபரேசனில் ப்ளட் தேவைப்பட, அதற்கு ஏற்பாடு செய்து என அத்தனை வேலைகளையும் அவன் இழுத்துப்போட்டு செய்தது கூட தெரியவில்லை ரவிக்கு.

ஆதிராவுக்கு வீசிங் பிரச்சினையும் சேர்ந்து கொள்ள அவளை ICUவில் வைத்தனர். இவையெல்லாம் முடிய காலை ஏழு மணி ஆனது. அப்போது ஆதிராவின் பெற்றோரும் வந்துவிட, சரண் சிறிது ஆசுவாசமாக வீட்டில் அனைவருக்கும் அழைத்துக் கூறினான். ரவி அவனிடம் வந்து தன் நன்றியைத் தெரிவித்துவிட்டு, அவனது வேலைகளையும் சேர்த்து பார்க்கும்படி கூறினான்.

“மச்சான் ரொம்ப தேங்க்ஸ் டா.. நீ மட்டும் இல்லை என்றால் நினைத்துக் கூடப் பார்க்க முடியல, அம்மா ஆயிரம் முறை சொன்னங்க போக வேண்டாமென்று… நான்தான் கேட்காமல்….” என்று விட்டு அவன் தோளில் சாய்ந்து அழ,

“ரவி… ரவி.. இங்கே பாரு…. அதான் இப்போ எல்லாம் சரியாகிடுச்சு இல்லை…. பேபி வெயிட் கம்மி அவளோதான்… அது எல்லாம் சரியாகிடும்டா.. ஆரா இன்னும் ரெண்டு நாளில் நார்மல் ஆகிடுவா…இதுக்குப் போய் உடைஞ்சி போயிட்ட…..

உன்னோட இந்த அழுமூஞ்சியை ஆரா பார்க்க வேண்டாம் .எங்கே ஒரு போஸ் கொடு பார்க்கலாம்” என்று தன் மொபலை எடுத்துக் கொண்டு அவனை நோக்கி காட்ட….

ஏய் வேண்டாம்… அப்புறம் பயந்துக்குவா.. என் ஆராக்குட்டி…. போடா வேலையைப் பார்த்துட்டு, வந்துட்டான். என்னைக் கிண்டல் பண்ண, நாங்களும் பார்ப்போம் Mr. சரண் எப்படியெல்லாம் துடிக்க போறாரென்று” என பதிலுக்கு பதில் பேசியவனின் முகத்தில் சிறிது மலர்ச்சி வந்தமர்ந்தது.

பின் “சரண் உன்னிடம் ஒரு ஹெல்ப் கேட்கணும்டா.. எப்படிக் கேட்கறதுன்னே தெரியல, தப்பா எடுத்துக்காதே டா…”

புது மலர்கள் பூத்திடும் வேளை - மதுவதனி

"ச்சீ லூசு... முதல்ல என்னனு சொல்லித்தொலை, அப்புறம் சீனைப்போடு..."

"இல்லடா... இப்போதான் உனக்கு மேரேஜ் ஆகிருக்கு, இந்த நேரத்துல எப்படிடா கேட்கமுடியும்... அதான் யோசிக்கிறேன்..

"இப்போ என்கிட்டே உதைதான் வாங்கபோற... நான் வந்து ரெண்டு நாளாச்சுடா ... இன்னைக்கு மட்டும் போகல என் பொண்டாட்டி என்னை ஒரேடியாக துரத்தியே விட்டுருவா... சீக்கிரம் சொல்லுடா பன்னாடை.."

"அதுவந்து மச்சான்... நான் போகவேண்டிய இந்த ட்ரிப் என்னால போகமுடியும்னு தோணலைடா... இவங்க ரெண்டு பேரையும் இப்படி பார்த்துட்டு என்னால அங்கெ போய் நிம்மதியா இருக்க முடியாதுடா.. எப்படி சொல்றது ஆராவை அப்படி பார்த்ததுக்கு அப்புறம் நான் அவளைப் பிரிஞ்சி இருக்க முடியாது என்று உறுதியா நினைக்கிறேன். அதே சமயம் பிசினஸ்ளையும் என்னால கவனம் செலுத்தவும் முடியாது..."

அதுவே நமக்கு பெரிய லாஸ் ஆக வாய்ப்பு இருக்கு. அதனால் பர்ஸ்ட் ப்ளான் பண்ண மாதிரி நீயே போய்ட்டு வந்துடு.. தேனையும் கூட்டிட்டு போயிடு... ஹனிமூன் போறதை இங்கே போய் செலப்ரெட் பண்ணுங்க... என்ன சொல்ற.."

"என்னடா... என்ன ... சொல்ற... விளையாடாதே.... நான் எப்படி...?

"இல்ல மச்சான், நீ என்னைத் தப்பா நினைக்காதே ப்ளீஸ்... நீ இதைக் கண்டிப்பா செய்யணும், இந்த ட்ரிப் கேன்சல் ஆகிடுச்சு என்றால் நம்ம பிசினஸ் டோட்டலா டவுன் ஆகிடும்... ஆல்ரெடி இந்த மீட்டிங் நீ போறதா தானே ப்ளான். உன்னோட மேரேஜ் பிக்ஸ் ஆனதுல மாறிடுச்சு, இப்போ நான் போனாலும் என்னால் அங்கே கான்செண்ட்ரெட் பண்ண முடியுமா தெரியல, அதுக்குத்தான் இவ்வளவு சொல்றேன்... புரிஞ்சிக்கோ மச்சான்."

ரவி சொல்ல வருவதும் புரிந்தது. ஆராவின் உடல்நிலையை முன்னிட்டு ரவி ஆறுமாதம் இந்தியாவில் இருப்பதாகவும், அவனுக்குப் பதிலாக சரண் சிங்கப்பூரில் இருப்பதாகாவும் தான் முன்னமே ப்ளான் செய்யப்பட்டு இருந்தது.

# புது மலர்கள் பூத்திடும் வேளை...!

திடீரென நிலாவைச் சந்தித்ததும், மீண்டும் ஒருமுறை அவளை தவறவிட மனமில்லாமலும் தான் உடனே திருமணத்திற்கு ஏற்பாடு செய்திருந்தான். அதன் பொருட்டு ஆதிராவை அவள் பெற்றோர் வசம் விட்டுவிட்டு ரவி ஆஸ்திரேலியா சென்று ஒரு மீட்டிங்கை முடித்த கையேடு சிங்கப்பூர் செல்வதாக ப்ளான் மாற்றப்பட்டது.

இப்போது திடீரென ஆதிராவுக்கு குழந்தை பிறக்கவும், அதில் அவள் பட்ட கஷ்டங்களைப் பார்த்துதான் ரவி இப்படி ஒரு முடிவு எடுத்திருக்கிறான் என்றும் புரிந்தது. ஆனால் இப்போது அவனுடைய பிரச்சினையே பெரிது, இதில் எப்படி ரவிக்கும் உதவ முடியும், அதோடு நிலாவை அவனுடன் அழைத்துச் செல்வது சாத்தியமே இல்லை. அவளது அம்மாவின் உடல்நிலையை முன்னிட்டு இதை செய்ய அவனால் முடியவே முடியாது.

நான் அழைத்ததும் அவள் வருவாள் தான் ஆனால் அதை என்னால் செய்ய முடியாது, இப்போது தான் இரண்டரை ஆண்டுகள் பிரிந்து அவளை சேர்ந்திருக்கிறேன், மீண்டும் ஒரு பிரிவா..? அதுவும் இரண்டு வருடங்கள்...

நினைக்கவே மலைப்பாய் இருந்தது சரணுக்கு.. இதற்கிடையில் மீனாவை சமாளிக்க வேண்டும், அவள் இன்னும் எத்தனை பிரச்சனைகளை கிளப்பி விட்டுருக்கிறாளோ... அன்று பேசியதுதான்.

அதன்பிறகு ராகவ்வையும் அவன் தொடர்பு கொள்ளவில்லை, அப்படி முக்கியப் பிரச்சினை என்றால் அவனே என்னை தொடர்பு கொண்டிருப்பான் என்று தனக்குள்ளே யோசித்தவன்,

ரவி தன் பதிலுக்காய் காத்திருப்பதை பார்த்து “சரிடா மச்சான் நான் நிலாவிடம் பேசிவிட்டு உனக்கு சொல்றேன். எப்படியும் உனக்கு பேவரான பதிலாதான் இருக்கும். கவலைப்படாதே, நான் கிளம்புறேன். ரெண்டு நாளாச்சு வீட்டை விட்டு வந்து, நாளைக்கு நைட் ப்ளைட். இப்போ போனாதான் கொஞ்சமாவது ரெஸ்ட் எடுத்துட்டுய், கிளம்ப முடியும்.” என்றதும், ரவியின் கட்டித்தழுவலையும், கண்ணீருடன் கூடிய நன்றியையும் பெற்றுக்கொண்டு தேனிக்கு திரும்பினான் சரண்.

**வேளை தொடரும்........**

புது மலர்கள் பூத்திடும் வேளை - மதுவதனி

# புது மலர்கள் பூத்திடும் வேளை...!

**வேளை - 30-2**

பயணத்தில் இருந்த சரணின் மனம் ஒரு தெளிவான முடிவை எடுக்க தடுமாறியது. ரவியிடம் சரி என்று கூறிவிட்டு வந்தாலும், அவன் மனம் இந்த ட்ரிப்பை எண்ணி சுணக்கம் கொண்டதென்னவோ உண்மைதான். வேறு யாரையும் இதற்காக அவர்கள் தயார்படுத்தவுமில்லை, இவர்கள் இருவரைத் தவிர வேறு யாராலும் இந்த டீலிங்கை கேண்டில் செய்ய முடியாது, என்ன செய்யலாம், ரவி கூறியது போல நிலாவையும் அழைத்து போகலாமா என்றால் அவள் ஒத்துக்கொண்டாலும், அவளுக்கு நான் கொடுத்த வாக்கை எப்படி மீறுவது, அத்தையின் உடல்நிலை சரியாகாமல் எப்படி அவளை தன்னோடு திருச்சிக்கே அழைக்க மாட்டேன் என்றுவிட்டு இப்போது சிங்கப்பூர் அழைத்தால் சரியாகாது. அவள் என்னைப்பற்றி என்ன நினைப்பாள். இப்படி பலவாறாக யோசித்துக் குழம்பிக் கொண்டிருந்தவனின் கவனத்தை அலைபேசி அலறிக் கலைத்தது.

போனை எடுத்துப் பார்த்தவன் அது அகிலாவிடம் இருந்து என்றதும் எடுத்துப் பேசினான். "சொல்லுங்க அக்கா... ஹ்ம்ம் கிளம்பிட்டேன்... வந்துட்டே இருக்கேன்"

ஓ அப்போ சரி.... நாங்களும் கிளம்பி ரெடியா இருக்கோம்.... நீ வந்ததும் அப்படியே கிளம்பிடலாம்...." - அகிலா..

"அக்கா கொஞ்சம் பொறுங்க... நான் வந்ததுக்கு அப்புறம் பேசலாம்.... இன்னும் அரைமணி நேரத்தில் அங்கே இருப்பேன்."

"ம்ம்ம் சரி வா.... நான் வைக்கிறேன்...."

போனை கட் செய்தவன் ராகவ்விற்கு அழைத்தான்... அவனும் போனை உடனே எடுத்துவிட..... இந்த இரண்டு நாளில் என்ன நடந்தது என்று கேட்டான் சரண்.

"சரண் நானும் மீனுவும் இப்போ மூணாறில் இருக்கிறோம். இங்கே வந்து டூ டேஸ் ஆச்சு.... பர்ஸ்ட் என்னை அவாய்ட் பண்ணத்தான் பார்த்தா... அப்புறம் அவளோட ப்ரதரிடம் பேசிட்டு வந்து சரி என்று சொல்லிட்டா... இப்போ இங்கே இருந்து கிளம்பிட்டோம்... ஈவ்னிங் தேனீ ரீச் ஆகிடுவோம்....

புது மலர்கள் பூத்திடும் வேளை - மதுவதனி

நான் சில மேட்டர்ஸ் கேதர் பண்ணிட்டேன்… அது இப்போதைக்கு உங்க ரெண்டு போரையும் பிரித்து வைக்கிறது தான் அவளோட ப்ளான். நீங்கள் தேனுவோடு சேர்ந்து வாழக்கூடாது என்பதில் உறுதியாய் இருக்கிறாள்.

“நீங்கள் இருவரும் ஒருநாள் சேர்ந்து வாழ்ந்தாலும் அடுத்த நாள் உங்கள் மனைவியை என்ன வேண்டுமானாலும் செய்யப்போவதாக பேசியிருக்கிறாள். அது இதற்கு முன்னால் பேசியது போல கடத்துவதாகவும் இருக்கலாம், இல்லை வேறு கூட இருக்கலாம்….. அவள் இப்போது எதற்கும் துணிந்து விட்டாள். என்னையும் ஒரு பொருட்டாக நினைக்காமல் இதைப்பற்றியே யோசித்துக் கொண்டிருக்கிறாள்.”

“நான் அழைத்ததும் அவள் என்னுடன் வந்தது….. எங்களுடைய ரிலேசன்சிப்பை பிரேக்கப் செய்யத்தான் என்று என்னிடமே கூறினாள். இதுவே கடைசிமுறை என்னோடு வெளியில் வருவது என்றும் கூறுகிறாள்…. எனக்கு என்னவோ அவளிடம் அதிரடியாக எந்த நடவடிக்கையும் செல்லுபடியாகாது என்றுதான் நினைக்கிறேன். அவள் வழியிலேயே போய்தான் அவளை அடக்க முடியும் என்று தோன்றுகிறது.”

மேலும் இதில் உங்கள் மாமாவிற்கும் தொடர்பு இருக்கும் என்றும் நினைக்கிறேன். இனி நீங்கள் தான் முடிவெடுக்க வேண்டும்… நான் நாளை திருச்சி சென்றுவிட்டு மீண்டும் மும்பை கிளம்ப வேண்டும்…” என்று ராகவ் பேசி முடித்ததும் சரண் சிறிது நேரம் அமைதி காத்தான். பிறகு ராகவிடம் இப்போதைய தன் நிலையையும் விளக்கிவிட்டு, இனி தான் பார்த்துக் கொள்வதாக கூறினான். மேலும் அவனது நண்பர்களிடம் மீனாவின் நடவடிக்கைகளில் ஒரு பார்வையை வைத்திருக்கும்படியும் கேட்டுக்கொண்டு, அவனுக்கு நன்றியையும் கூறிவிட்டு போனை வைத்தான்.

அடுத்து என்ன என்ற கேள்வி அவனை தடுமாற்றத்தில் தள்ளியது. எதிலும் நிதானமாக் செயல்படுவதுதான் சரணின் சுபாவம். அந்த நிதானம் நிலா விசயத்தில் பொய்யாகிப் போய்விட, அவளை மீண்டும் சந்திக்கும் வரை ஒரு நிலையில் இல்லாமல் தவித்தான். மறுமுறை அவளைப் பார்த்ததும் கடவுள் தனக்கு ஒரு வாய்ப்பளித்ததாகவே எண்ணி, தன் நிதானத்தை விட்டு அதிரடியாய் முடிவை எடுத்து அவளைத் தன் வாழ்க்கையில் இணைத்தான். ஆனால் இப்போது அதிரடியாய் செயல்பட்டால் தன் வாழ்க்கையோடு சேர்ந்து அவனது அக்காவின் வாழ்க்கையும் பாதிக்கப்பட்டால் என்ன செய்வது…..

புது மலர்கள் பூத்திடும் வேளை மதுவதனி

# புது மலர்கள் பூத்திடும் வேளை…!

தனக்கும் சிபிக்குமாகத்தான் அக்கா தன் மாமனார் குடும்பத்தை விட்டுவிட்டு இங்கு வந்து இருக்கிறாள். இதனால் ஏற்பட்ட பிரச்சினைகள் அதிகம்… அதை அகிலா இவர்களிடம் மறைத்து விட்டாலும்…. ஏதோ ஒரு சந்தர்ப்பங்களில் அவர்களது உறவினர்களைப் பார்க்கும் பொது அவர்களின் மூலம் தெரிந்து விடும். அப்படி ஒரு சந்தர்ப்பத்தில் தான் சிபியிடம் அகிலாவின் மாமியார் பேசியதைக் கூறியது…. அதுவரை அவர்களிடம் மரியாதையாக நடந்து கொண்டவன் அதன்பிறகு அவர்களை சுத்தமாக மதிப்பதில்லை.

இத்தனைப் பிரச்சினைகளுக்கு மத்தியிலும் அவள் தங்களை விட்டுப் போகவில்லை. இனியும் போகமாட்டாள் தான். அப்படி சென்றால் அவர்கள் வீட்டில் அவளை மதிக்க மாட்டார்கள்.. தங்களுக்காக கஷ்டப்பட்டவளுக்கு மேலும் ஒரு கஷ்டத்தைக் கொடுக்க முடியாது… ராகவ் கூறியதுபோல் பொறுமையாகத்தான் செயல்பட வேண்டும்…. முதலில் மீனாவைப் பற்றி அக்காவிடம் பேசலாம்' என்று பலவாறாக யோசித்து ஒரு முடிவுக்கு வரவும், வீடு வரவும் சரியாக இருந்தது…

காரில் இருந்து இறங்கியவன் தங்கள் அறைக்கு கூட செல்லாமல் நேராக அகிலாவைத்தான் பார்க்க சென்றான். அவளிடம் நடந்த அனைத்தையும் கூறியவன் , அடுத்து தன்னுடைய பயணத்தைப் பற்றியும் கூறினான். அகிலாவிற்கு என்ன பேசுவது என்று கூட தெரியவில்லை. சில நாட்களாக கணவனின் செயல்களில் மாற்றம் இருந்து வந்தது அவளுக்கும் தெரியத்தான் செய்தது. ஆனால் அது அவளது ஆசைத் தம்பியின் வாழ்வை அழிக்ககூடியது என்று தெரியாமல் போனது தான் துரதிருஷ்டம்….

தனது அக்காவின் நிலையை அறிந்தவன் அவளுக்கு ஆறுதலாக பேசிவிட்டு, "நீங்கள் மாமாவிடம் நம் இருவருக்கும் இந்த செய்தி தெரியும் என்பது போல காட்டிகாதீங்க… அப்புறம் நிலாவிடம் நீங்க நெருங்கி பழக வேண்டாம். அப்படிப் பழகினா அது உங்களுக்கே ஆபத்தானாலும் ஆகலாம்… நிலாவைப் பற்றி நீங்க மாமாவிடமும், மீனாவிடமும் நல்ல விதமா பேசாதீங்க…. அவளைப்பற்றி தவறான கண்ணோட்டம்தான் உங்களுடையது என்பதுபோல் செய்ங்க… அப்போதுதான் அவர்கள் உங்களையும் கூட்டு சேர்க்க முயற்சி செய்து, அவர்களின் திட்டங்களையும் கூறுவார்கள்."

“மேலும் இங்கு நடந்த எந்தப் பிரச்சினையும் சிபிக்கோ, ஷானவிக்கோ தெரியக்கூடாது. சிபிக்குத் தெரிந்தால் அவன் சும்மா இருக்க மாட்டான். நீங்களும் மாமாவிடம் சண்டைப் போடாதீங்க…..” என்று நீளமாக பேசியவன், அகிலாவின் கண்ணில் துளிர்த்த நீரைத் துடைத்துவிட்டு “எனக்கு நிலா எவ்வளவு முக்கியமோ… அதே அளவுக்கு நீங்களும், சிபியும் முக்கியம்…. உங்களுக்கு ஒரு பிரச்சினை வந்தால் என்னால் தாங்கவே முடியாது… நான் ஏன் இப்படி நடந்து கொண்டேன் என்று நிலாவுக்கு தெரிய வரும்போது அவள் என் செயலையோ என்னையோ தப்பாகவே நினைக்க மாட்டாள்…. மாறாக எனக்கு சாதகமாக தான் பேசுவாள்…. அதனால்…….” என்று நிறுத்தி நீண்ட பெருமூச்சை விட்டவன்…

“அதனால் எனக்கும் நிலாவுக்கும் பிரச்சினை வந்து நான் கோபமாக இருப்பதாகவே இருக்கட்டும்…. நான் சமாதானமானது தெரிந்தால் நிலா சந்தோசப்படுவாள் தான். ஆனால் மீனா அவளை நிம்மதியாக இருக்க விடமாட்டாள். நான் அவள் அருகில் இருந்தாலும் பரவாயில்லை அவளது கஷ்டங்களைப் போக்கி விட முடியும்… ஆனால் நானும் இல்லாமல் அந்த மீனா ஏதும் செய்து விட்டால் அவள் என்ன செய்வாள்… இனியும் அவளை கஷ்டப்படுத்தக்கூடாது அக்கா….

ஏற்கனவே இருக்கிற எல்லா கஷ்டங்களையும் அனுபவித்து விட்டாள். இப்போது என் பங்குக்கு நானும் அவளை வதைக்கப் போகிறேன்… என்ன….. அவளைவிட நான்தான் அதிகம் வருத்தப்படுவேன்… பரவாயில்லை….. கொஞ்ச நாட்கள்தானே…. நான் வந்ததும் இதற்கு ஒரு முடிவு கட்டுகிறேன்… நான் கோபமாகப் போனதாகவே இருக்கட்டும்… அப்போதுதான் அந்த மீனா நிலாவை விட்டுவிட்டு என்பக்கம் திரும்புவாள். அவள் என்னிடம் பேசவேண்டும், அவளிடமிருந்துதான் நான் எல்லா உண்மைகளையும் வாங்க வேண்டும்… அதற்காகத்தான் நான் இப்படி சொல்கிறேன்… இது நம் இருவருக்கும் மட்டுமே தெரிந்ததாக இருக்கட்டும்….” என்றான்.

தன் தம்பியின் கைகளைப் பற்றி அதில் தன் முகத்தை அதில் புதைத்துக்கொண்டு “சரண் இதெல்லாம் தேவையே இல்லை… நான் என்னோட வாழ்க்கையை வாழ்ந்துட்டேன். இரண்டு குழந்தைகளுக்கு அம்மாவும் ஆகிட்டேன். இனியும் நீ எனக்காக எதையும் செய்யாதே…. போதும் போதும் என்றளவுக்கு எல்லாம் செய்தாச்சு….. இனியும் வேண்டாம்….

நீ இன்னும் வாழவே ஆரம்பிக்கல, கல்யாணமே வேண்டாம் என்று சொன்ன பொண்ணு நீதான் மாப்பிள்ளை என்றதும் கண்ணை மூடிட்டு சரியென்று சொன்னாள். அவளோட மனசுலயும் எத்தனை விதமான ஆசைகள் இருக்கும்... அதையெல்லாம் நொறுக்கப் போறியா...”

“ஏன் நீயும் அவளுக்காகத்தானே தவம் இருந்தாய்.... இப்போது எனக்காக நீங்கள் இருவரும் ஏன் கஷ்டப்படனும்.... இதுக்கு மேலையும் அவரோட மனசொத்து நான் வாழ்வேன்னு நீ நினைக்கிறியா.... கண்டிப்பா அது என்னால் முடியாது.... நிலாவோட அம்மா அன்றே எங்களிடம் எல்லாவற்றையும் சொன்னாங்க... ஆனால் அவர்தான் இப்போ சொல்ல வேண்டாம் என்றார்.

நானாவது உன்னிடம் சொல்லியிருக்க வேண்டும்... தவறு எங்கள் மேல்தான். நிலா மீது கிடையாது... எனக்காகவும் குழந்தைகளுக்காகவும் நீங்கள் இருவரும் கஷ்டப்பட வேண்டாம்... உடல்வலியை விட மனவலி ரொம்ப கொடுமையானது... அது உங்களுக்கு வேண்டாம்.... நான் அவரிடம் பேசுகிறேன்... நீ உன் முடிவையும் மாற்றி அவளையும் உன்னுடன் அழைத்துப் போக முடியுமா என்று பார்..” என கண்ணீருடன் பேச....

“அக்கா நான் சொன்னது சொன்னதுதான்... நான் யோசித்துதான் இந்த முடிவு எடுத்திருக்கிறேன். மேலும் மாமாவும் நீங்களும் பிரிந்து வாழ நான் இப்படி ஒரு முடிவு எடுக்கவில்லை... மாமா ஏதோ தங்கை மேல் இருக்கும் பாசத்தில் அப்படி செய்கிறார்... மற்றபடி உங்கள்மேல் அவர் பாசமாகத்தான் இருக்கிறார். அதனால் நீங்கள் எதையும் போட்டுக் குழப்பிக்கொள்ள வேண்டாம்...”

“நான் ஏற்கனவே ப்ளான் செய்தபடி நிலா அங்கு வந்து ஒருவாரம் இருந்ததும், இங்கு கொண்டுவந்து விட்டுவிடுங்கள், அடிக்கடி வந்து பார்த்துக் கொள்ள்ளுங்கள்... அத்தைக்கு எந்த சந்தேகமும் வந்துவிடக்கூடாது... பிறகு அவர்களும் வருத்தப்பட்டு அவளையும் வருத்துவார்கள்.... நீங்கள் நான் சொன்னதை மட்டும் செய்யுங்கள்.. நான் சென்று அவளிடம் பேசிவிட்டு, அவளையும் அழைத்து வருகிறேன்... அத்தையிடம் சொல்லிவிட்டு கிளம்புவோம்...” என்றான்.

புது மலர்கள் பூத்திடும் வேளை - மதுவதனி

“சரண் எனக்கு இதில் எந்த உடன்பாடும் இல்லை… ஆனால் உனக்காக இதை செய்கிறேன்… உங்கள் இருவருக்கும் இன்னும் கஷ்டகாலம் முடியவில்லைபோல. சீக்கிரம் எல்லாம் சரியாகிடும், அவளிடம் கோபமாகப் பேசாதே… அவளை வருத்தப்படுத்தாதே…” என்றவள் “என் தம்பியைப் பற்றி எனக்குத் தெரியும்… அவனுக்கு யாரையும் வருத்தபடுத்தவோ, கஷ்டப்படுத்தவோ முடியாதென்று… நீ போய் அவளிடம் பேசிவிட்டு கிளம்பி வாங்க… நானும் அத்தையிடம் சொல்லிட்டு வரேன்..” என்றாள்.

அக்காவின் முகத்தில் சிறு தெளிவு வந்ததை உணர்ந்தவன், அவளைப் பார்த்து புன்னகைத்து விட்டு தன் அறை நோக்கி சென்றான்… தன் உயிரானவளை எப்படி எதிர்கொள்வது என்ற பதட்டமான மனநிலையுடன்…

**வேளை தொடரும்……..**

புதுமலர்கள் பூத்திடும் வேளை - மதுவதனி

# புது மலர்கள் பூத்திடும் வேளை…!




**வேளை - 31-1**

*******************************************************************************************

**கண்ணா உனைத் தேடுகின்றேன் வா**
**கண்ணீர் குயில் பாடுகிறேன் வா**
**உன்னோடு தான் வாழ்க்கை**
**உள்ளே ஒரு வேட்கை**
**கண்ணீர் இன்னும் ஓயவில்லை**
**கன்னங்களும் காயவில்லை**
**கண்ணா உனைத் தேடுகின்றேன் வா**
**கண்ணீர் குயில் பாடுகிறேன் வா**

**ஏன் இந்த காதல் என்னும் எண்ணம் தடை போடுமா**
**என்பாடல் கேட்ட பின்னும் இன்னும் பிடிவாதமா**
**என்ன நான் சொல்வது இன்று வந்த சோதனை**
**மௌனமே கொல்வதால் தாங்கவில்லை வேதனை**
**உன்னை தேடி வந்தேன் உண்மை சொல்ல வேண்டும்**
**இந்த சோகம் கொள்ள என்ன காரணம்**

**கண்ணே உனை தேடுகிறேன் வா**
**காதல் குயில் பாடுகிறேன் வா**

# புது மலர்கள் பூத்திடும் வேளை…!

**உன்னோடு தான் வாழ்க்கை உள்ளே ஒரு வேட்கை**
**காதை என்றும் தீர்வதில்லை கண்ணே இனி சோகம் இல்லை**
**கண்ணே உனை தேடுகிறேன் வா**
**காதல் குயில் பாடுகிறேன் வா**

**சோகதின் பாஷை என்ன சொன்னால் அது தீருமா**
**கங்கை நீர் காயகூடும் கண்ணீர் அது காயுமா**
**சோதனை நேரலாம் பாசம் என்ன போகுமா**
**மேகங்கள் போய்விடும் வானம் என்ன போகுமா**
**ஈரமுள்ள கண்ணில் தூக்கம் இல்லை பெண்ணே**
**தோகை வந்த பின்னே சோகமில்லையே**

**கண்ணே உனை தேடுகிறேன்………**

**************************************************************************************************

கணவனின் கார் சத்தத்தைக் கேட்டதும் துல்லிய மனதை அடக்கியபடி அவன் வரவிற்காய் காத்திருந்தாள் நிலா. அவன் முன்னே சென்று நிற்க பயம்… எங்கே மீண்டும் கோபம் கொள்வானோ என்று..? அதனால் அவன் வந்தது தெரிந்தும் வெளியே வராமல் தன் அறைக்குள்ளேயே முடங்கிப் போனாள். அவன் வந்து இத்தனை நேரமாகியும் தன்னைக் காண வரவில்லை என்றதும் போன பயம் மீண்டும் தொற்றிக்கொண்டது.

கணவன் இன்னும் தன் மேல் கோபமாகத்தான் இருக்கிறானா..? என்று நினைக்கும்போதே கண்கள் அவளையும் அறியாமல் கண்ணீர் முத்துக்களை உதிர்க்க ஆரம்பித்தது. அவன் வரும்பொழுது அழக்கூடாது……. பார்த்தால் வருத்தப்படுவான் என்று நினைத்தவள் குளியலறைக்குள் புகுந்து சில பெருமூச்சுக்களை எடுத்துவிட்டு வந்த அழுகையை கட்டுப்படுத்தி முகத்தைக் கழுவிக்கொண்டு வெளியில் வந்தாள்.

அவள் வெளியே வரவும், சரண் உள்ளே நுழையவும் சரியாய் இருக்க…. அவள் அவன் முகத்தைப் பார்க்கத் தயங்கிக் கொண்டு கீழே குனிய…. சரண் அவளைத்தான் பார்த்துகொண்டிருந்தான். என்னதான் முகத்தைக் கழுவியிருந்தாலும் அவளது அழுது வீங்கிய முகமும், சிவந்த கண்களும், கீழே குனிந்திருந்தாலும் அவளது துடிக்கும் இதழ்களும் அவளது நிலையை சொல்லாமல் சொல்ல…. அந்தக் கணவனின் மனம் கனத்துப் போனது….

புது மலர்கள் பூத்திடும் வேளை - மதுவதனி

அவளுக்குத் தன் வாழ்நாள் முழுமைக்கும் மகிழ்ச்சியை மட்டுமே கொடுக்கவேண்டும் என்று தான் எடுத்த சபதம் இரண்டே நாளில் முறிந்துபோகும் என்று மறந்தும் கூட நினைத்துப் பார்த்ததில்லை… ஆனால் நடந்ததோ வேறு… அகிலாவிடம் இதுவரை பேசிய அனைத்தும் மறந்து போக, அந்த நிமிடம் அவனது மனையாளின் துன்பத்தைப் போக்க வேண்டும் என்ற எண்ணம் மேலெழும்ப, அவனுக்கிருந்த தடைகளையெல்லாம் ஒதுக்கி வைத்துவிட்டு அவளை இழுத்து தன் மார்போடு இறுக்கி அணைத்துக் கொண்டான்.

கணவனின் இந்த செயலால் முதலில் திகைத்தவள், அதுவரை அவன் பார்க்கக் கூடாது என்று அடக்கி வைத்த அழுகை, அவனது அணைப்பில் அணையை மீறிய வெள்ளமாய் அவளது இமைக்கரைகளை உடைத்துக் கொண்டு வெளியேறியது.

அவனது மார்பில் முகத்தைப் புதைத்துக் கொண்டு எந்தவித தயக்கங்களையும் முன் கொண்டுவராமல் அவளும் அவனை இறுக அணைத்துக் கொண்டு விசும்ப ஆரம்பித்தாள். ஆதரவாக அவளது முதுகை வருடியவனின் கண்களும் கண்ணீரைச் சிந்தின….

நொடிகள் நிமிடங்களாக மாறியும் இருவரது அணைப்பும் விலகவில்லை. தன் ஒட்டுமொத்த நிம்மதியும் அவன்தான் என்று அவளும், தன் ஒட்டுமொத்த சந்தோசமும் அவள்தான் என்று அவனும் உணர்ந்து இருவரும் அந்த மௌனக் கடலில் மூழ்கிப் போயிருந்தனர். முதலில் சுதாரித்து விலகியது நிலாதான். அவள் அவன் அணைப்பில் இருந்து விலக, அதை தடுத்து தன் கையணைப்பிலே வைத்திருந்தவன் அவளின் முகம் பார்க்க……

அவளோ தன் செய்கையை விளக்கும் பொருட்டு "பாவா… நான் செய்தது தப்புத்தான்… ரொம்ப பெரிய தப்புத்தான்….. உங்களிடம் மறைக்க வேண்டும் என்று நினைக்கவே இல்லை…. அம்மா…. அம்மாதான்…." என்று வார்த்தையைக் கோர்த்துக் கொண்டிருந்தவளின் வாயைத் தன் கரங்களால் மூடியவன் "எனக்கு எந்த விளக்கமும் சொல்லத் தேவை இல்லை நிலா… இப்போது அதைப்பத்தி பேசவும் நேரமில்லை." என்று தன் பயணத்தைப் பற்றி கூறியவன் "நீ எப்போதும்போல் இங்கேயே இரு…

புது மலர்கள் பூத்திடும் வேளை - மதுவதனி

# புது மலர்கள் பூத்திடும் வேளை…!

அத்தையைப் பார்த்துக் கொள்… முக்கியமான விசேஷம் என்றால் அக்கா கூப்பிட்டால் ஊருக்குப் போயிட்டு வா… நான் எப்போதும் தொடர்பில் இருக்க முடியாது நேரம் இருக்கும் பொது உனக்கு போன் செய்து பேசுகிறேன்…. இல்லை ஸ்கைப்பில் வருகிறேன்….. ரவியும் ஆதிராவும் உன்னை வந்து அடிக்கடிப் பார்த்துக் கொள்வார்கள்" என்று பேசிக்கொண்டே வந்தவன்…

அவளது அதிர்ந்த முகம் பார்த்து "என்மேல் உனக்கு நம்பிக்கை இருக்குதானே.." என்றதும், அவள் தலையை வேகமாக உருட்டவும், அந்த தலையை இழுத்து மீண்டும் தன் நெஞ்சோடு அழுத்திக் கொண்டவன் "அந்த நம்பிக்கையை எப்போதுமே நான் காப்பாற்றுவேன். இது எனக்கு மிகவும் முக்கியமான வேலை. நான் போய்த்தான் ஆகவேண்டும். நமக்கு காலம் இன்னும் இருக்கு, அதில் நாம் சந்தோசமாக வாழத்தான் போகிறோம்…. நான் எது செய்தாலும் அது நம் இருவரின் நன்மைக்காக மட்டும்தான் என்பதை நினைவில் வைத்துக்கொள்."

நீ எனக்கு வேணும் நிலா… எப்பவுமே… என்னோட கடைசி மூச்சு இருக்கிற வரைக்கும் நீ எனக்கு வேணும்…. அதுக்காகத்தான் இப்போ நான் போறேன். இந்தப்பிரிவு நிரந்தரமில்லை…. என் மனதும், உயிரும் உனக்காக மட்டும்தான் துடிக்கும்… அதை நீ எப்பவுமே நினைவில் வைத்துக்கொள்… இடையில் முடிந்தால் வருகிறேன்… நீ அத்தையையும் அவர்களோடு சேர்த்து உன்னையையும் நல்லமுறையில் பார்த்துகோடா ப்ளீஸ் எனக்காக…!"

இப்போது கிளம்பலாம், எனக்கு நேரம் ரொம்ப குறைவு… நீ ஏற்கனவே பேக் பண்ணிட்டதா அக்கா சொன்னாங்க… வா அத்தையிடம் சொல்லிட்டு கிளம்பலாம்…" என்றதும் அவள் தலையசைத்து உடன் வர, அவள் ஏதும் பேசுவாள் என்று அவன் பார்க்க… எதுவுமே பேசவில்லை… ஆனால் அந்த விழிகளில் தெரிந்த சோகத்தையும் ஏக்கத்தையும் பார்த்தவனுக்கு, அவளை அப்படியே விட்டு சென்றால் அவள் இன்னும் தனக்குள்ளே ஒடுங்கிப்போவாள் என்றுணர்ந்தவன் அவளிடம் "நிலாமா நீ இப்படியே இருந்தால் நான் எப்படி அங்கே நிம்மதியா இருக்க முடியும்… இனி நீ அழுது நான் பார்க்கவே கூடாது… இதுவே கடைசி முறையாக இருக்க வேண்டும்…"

"உனக்கு கிடைத்திருக்கும் இந்த இடைவெளியில் ஆசிரமத்தில் என்ன என்ன மாற்றங்கள் செய்ய வேண்டுமோ செய்து அதை நல்லமுறையில் நிர்வாகம் செய்… உனக்கு எப்போதும் உறுதுணையாக நானும் காசி அங்கிளும் இருப்போம்…உன்னுடைய வளர்ச்சியுடன் சேர்த்து ஆசிரமத்தின் வளர்ச்சியையும் நான் ஆவலோடு எதிர்பார்ப்பேன்… என்னுடைய எதிர்பார்ப்பை மெய்யாக்குவதும் பொய்யாக்குவதும் உன் கையில்தான் இருக்கிறது…

புது மலர்கள் பூத்திடும் வேளை - மதுவதனி

# புது மலர்கள் பூத்திடும் வேளை…!

அப்புறம் ஒரு முக்கியமான விஷயம்… நீ வரைவதை நிறுத்திவிட்டாய் இல்லையா… இனி எனக்காக உன் ஓவியத் திறமையை வெளிக்கொண்டு வர வேண்டும்..

என் கையால்தான் உனக்கு தூரிகையை பரிசாக கொடுக்க வேண்டும் என்று எண்ணினேன். ஆனால்… ஆனால் இப்போது அது முடியாது. நான் ரவுயிடம் பேசுகிறேன். நீ அவனிடம் அனைத்தையும் கேட்டுக்கொள்… நீ வரைவதை பார்க்க மிகுந்த ஆவலாக இருக்கிறேன்.. வரைவாய் தானே…" என்று கண்களில் ஒரு ஆர்வத்துடன் எதிர்பார்ப்பாய் தன்னைப் பார்த்துக் கேட்ட கணவனின் சொல்லை மறுக்க முடியாமல்….

"ம்ம்ம்ம்…. சரி…… பாவா… எனக்கு… ரொம்ப நாளாகிடுச்சு… இருந்தாலும் உங்களுக்கு பிடிக்கும் என்பதால் வரைகிறேன்…. ஆனால் நீங்கள் என்னை மன்னித்து விட்டீர்கள்தானே…. என்னை வெறுத்து ஒதுக்க மாட்டீர்கள்தானே… எனக்கு உங்களைத் தவிர வேறு யாருமில்லையே என்னிடம் அன்பு காட்ட…" என்று அவனது சட்டையைப் பிடித்துக்கொண்டு அழவும், அவனாலும் அவனது கண்ணீரைத் தடுக்க முடியவில்லை… இருவரும் உணர்வுகளின் பிடியில் இருந்தனர்.

நிலா அதிலிருந்து வெளியே வரவேண்டும் என்று யோசிக்க கூட இல்லை… சரண்தான் நேரமாவதை உணர்ந்து அவளை சமாதானப்படுத்தினான். அவளோ இப்போது அவன் அவளை விட்டுப் போய்விடுவான்.. அடுத்து எப்போது பார்ப்போமோ… இனி இப்படி ஒரு தனிமை வாய்க்குமோ என்றெல்லாம் பயந்து அவனிடம் இருந்து விலக மறுத்தாள்.

"நிலா நீயே இப்படி இருந்தா, இனி அத்தையை எப்படி நான் சமாதானம் செய்றது.. கொஞ்சம் புரிஞ்சுக்கோடா…. சீக்கிரமே எல்லாம் சரியாயிடும்… இல்ல நான் சரி பண்ணிடுவேன்…. உனக்கு இருக்குற இதே வருத்தம் எனக்கு மட்டும் இல்லையா…? நீ அழுதுட்டே என்னை அனுப்பி வைத்தால் நான் அங்கு நிம்மதியா இருப்பேனா..? எதையும் போட்டுக் குழப்பிக்காம வா… நீயும் பேசினால் தான் அத்தை கொஞ்சம் சமாதானம் ஆவாங்க…"

"இதெல்லாம் நீயே யோசிச்சிப்பாரு… உனக்கே புரியும்… ஆல்ரெடி ஐ பீல் வெரி டயர்ட்….. ஐ நீட் சம் ரெஸ்ட்…. காரில் போகும்போதுதான் கொஞ்சம் ரெஸ்ட் கிடைக்கும்… போகலாமா..? என்று சரண் கூறியதும்….. அப்போதுதான் கணவனின் சோர்வு அவளது கண்களில் பட கணவனின் பேச்சிற்கு மறுப்பேச்சில்லாமல் கிளம்பி வெளியே வந்தாள்.

# புது மலர்கள் பூத்திடும் வேளை…!

விஜயாவிடம் ஏற்கனவே அகிலா அனைத்து விசயங்களையும் கூறி, சரணின் பயணத்தையும் கூறி அவரை ஓரளவு தயார்படுத்தி வைத்திருந்தாள். அதனால் அவர் அதிகம் மறுப்புத் தெரிவிக்கவில்லை. மாறாக மகள் தன்னுடன் இன்னும் சில காலம் இருப்பாள் என்ற எண்ணம் எழுந்து நிம்மதியைக் கொடுத்தது…

அடுத்து நிலா நினைத்தது போல் அவர்களுக்கான தனிமை கிடைக்கவே இல்லை… காரில் செல்லும்போது அகிலாவுடன் குழந்தைகளை வைத்துக்கொண்டு பின்னிருக்கையில் நிலா அமர…. முன்னே மணி காரோட்ட சரண் தூங்கிக் கொண்டு வந்தான். திருச்சிக்கு வந்தவர்களை ரேணுகா ஆரத்தி எடுத்து வரவேற்க… அதன்பிறகு சரண் சிறிது நேரம் கூட வீணாக்க விரும்பவில்லை…

தன் ஆபிசுக்கு சென்றவன் அடுத்த கட்ட வேலைகளை தனது உதவியாளர்களுக்கு பிறப்பித்துவிட்டு, அவன் முடிக்க வேண்டிய வேலைகளையும் முடித்துக்கொண்டு, எடுத்துச் செல்லும் பைல்களையும் டாக்குமென்ட்ஸ்களையும் எடுத்துக்கொண்டு வீட்டுக்கு வர மாலை நான்காகியது. அகிலாவும் நிலாவும் அவனுக்கு தேவையானவற்றை பேக் செய்து வைத்திருக்க ஆறுமணியளவில் சென்னை விமான நிலையத்தில் குடும்பத்துடன் இருந்தான் சரண்.

நிலா தனியாக அவனிடம் பேச சிறிது நேரம் கூட கிடைக்காதா..? என ஏங்க, சரணோ அவளுடன் தனிமையில் பேசினால் அவளை விட்டுப் போகமுடியாது என்று அந்த தனிமையை நேரவிடாமல் தடுத்தான். அகிலா அவனிடம் எவ்வளவோ எடுத்துக்கூறியும் அவன் தன் நிலையில் இருந்து மாறமால் பிடிவாதமாக அவளிடம் பாராமுகமாக இருந்தான். இது எதுவும் அறியாத நிலாவோ அவனுக்கு வேலை டென்சன், மேலும் தன்மேல் உள்ள கோபமும் குறையவில்லை போல என்று தானாக சில காரணங்களை கற்பித்துக் கொண்டாள் சரணின் பாராமுகத்திற்கு…..

ப்ளைட் கிளம்ப போவதாக அழைப்பு வரவும், அனைவரிடமும் விடைபெற்று நிலாவிடம் வந்தவன், அவளின் விழிகளில் வழிந்த நீரையும் அதையும் தாண்டி அதில் தெரிந்த வலியையும் கண்டவன் ஒரு நிமிடம் அந்த வலியில் துடித்து பின் தன்னை அதிலிருந்து மீட்டவன் அவளது கைகளைப் பிடித்து அழுத்திவிட்டு, அவளிடம் சில அறிவுரைகளை கூறிவிட்டு விடைபெற்றான்.

புது மலர்கள் பூத்திடும் வேளை - மதுவதனி

# புது மலர்கள் பூத்திடும் வேளை…!

அவனது மார்பில் சாய்ந்து ஒரு மூச்சு அழுதிடவேண்டும் என்று போராட்டம் செய்த மனதை அடக்கும் வலி தெரியாமல் தன்னை விட்டு செல்லும் தன் மணாளனையே வைத்தக்கண் வாங்காமால் பார்த்துக் கொண்டிருந்தாள்.

இவ்வாறாக அவர்களின் பிரிவை சரணே பிள்ளையார் சுழி போட்டு ஆரம்பித்து வைத்தான்.

**வேளை தொடரும்……..**

புதுமலர்கள் பூத்திடும் வேளை - மதுவதனி

**வேளை - 31-2**

விமானத்தில் பயணித்த அத்தனை நேரமும் மனைவியின் கலங்கிய விழிகளே சரணின் மனதில் தோன்றி இம்சித்தது. அவளை அப்படியே விட்டுவிட்டு வந்திருக்க கூடாதோ என்றெல்லாம் யோசிக்க ஆரம்பித்திருந்தான்.

நிலாவின் நிலை புரிந்து அகிலா அவளுடனே இருந்தாள். அவர்களது குடும்பம், சரணின் சிறுவயது, அவர்களின் தந்தையின் இராணுவ வேலை, சிபி ஷானவியின் குறும்புகள், அவர்களது பெற்றோரின் இறப்பு…. இப்படி அவர்களின் குடும்பத்தைப் பற்றி நிலாவுக்கு இருந்த கவலைகள் மறக்கும் வண்ணம் கூறி ஆறுதல்படுத்தினாள்.

என்னதான் மற்றவர்கள் முன் இயல்பாக இருப்பது போல் காட்டிகொன்டாலும் அவளது நினைவுகள் முழுவதும் அவள் கணவனே வியாபித்திருந்தான். அங்கிருந்த ஒருவாரமும் சரணின் நினைவிலேயே தன்னை மூழ்கடித்துக் கொண்டாள். குலதெய்வ வழிபாடு, மற்ற சடங்குகள் அனைத்தும் முடிந்து ஷானவியின் பெற்றோரின் துணையோடு மீண்டும் தேனிக்கு வந்து சேர்ந்தாள் நிலா..

தேனிக்கு வந்தவள் சிலநாள் மிகுந்த அமைதியானாள். எந்த வேலையிலும் மனம் செல்லாமல் அமைதியாக இருந்தாள். கணவன் தன்னிடம் தினமும் பேசினாலும் அதில் ஏதோ ஒட்டாத தன்மை இருப்பது போலவே தோன்றியது அவளுக்கு…. ஆனால் விஜயாவிடம் பேசும்போது அந்தமாதிரி எதுவும் இருப்பதாக தெரியவில்லை. அகிலாவும் அதேபோல்தான் விஜயாவிடம் எப்போதும் போல் சாதரணமாக பேசுபவள் நிலாவிடம் ஒரு இறுக்கத்துடனே பேசிவிட்டு வைப்பாள்.

ஆனால் சிபியும் ஷானவியும் அப்படி இல்லை, அவர்கள் எப்போதும் போல குதூகலமாகவும் கொண்டாட்டமாகவும்தான் பேசினார்கள். இதெல்லாம் சேர்ந்து அவளுக்குள் பெரும் குழப்பத்தை உண்டாக்கியது. இப்படி நிலா எதிலும் கவனமில்லாமல் இருப்பதைக் கண்ட விஜயா, இவள் ஏன் இப்படி இருக்கிறாள், எத்தனையோ கஷ்டத்திலும் கூட அவள் இந்தமாதிரி இருந்தது இல்லையே…. இப்போது ஏன் இப்படி இருக்கிறாள் என்ற கேள்வியுடன் அன்றிரவு போன் செய்த சரணிடம் கேட்க…. அவனுக்கும் சிலநாட்களாய் தெரிந்துதான் இருந்தது.

புது மலர்கள் பூத்திடும் வேளை - மதுவதனி

# புது மலர்கள் பூத்திடும் வேளை…!

தன் மனைவி இப்போதெல்லாம் சாதரணமாக இல்லை என்று… அவன் போன் செய்தாலும் ஏதோ கடமைக்காக பேசுபவளைப் போல் பேசுகிறாள் என்றும் தன்னுடைய ஒதுக்கம்தான் அவளை வருத்துகிறது என்றும் தெரிந்தது. என்ன செய்வது என்று யோசித்தவன், அந்த நேரம் விஜயாவிடம் ஏதேதோ பேசி வைத்தாலும் அடுத்து அவளை எப்படி அதிலிருந்து வெளிக்கொண்டு வருவது என்று மண்டையைப் பிய்த்துக் கொள்ள ஆரம்பித்தான்.

அதன் முடிவாக அவனுக்கு கிடைத்த விடை அவளது ஓவியத் திறமைதான், ரவியிடமும் காசிராமனிடமும் பேசியவன் அடுத்து அவளிடம் தன்னுடைய திட்டத்தைக் கூறினான் அவள் மறுத்துப் பேசிவிடாத அளவிற்கு. அவளும் சரியென்றுவிட்டாள். அது ரவியின் மூலம் ஒரு ஓவியக்கல்லூரியில் முறையாக ஓவியம் கற்க வைப்பதுதான். அது ஒரு வருட படிப்பு… மேலும் தொலைதூரக் கல்வி என்பதும் அதற்கு வசதியாகி விட, அவளால் எதையும் மறுக்க முடியவில்லை.

இதொரு பக்கமென்றால் மற்றொரு பக்கம் காசிராமன் தங்கள் தீபகாருன்யத்தின் முழு நிர்வாகத்தையும் அவளின் கீழ் கொண்டுவந்தார். இதற்கு முன் மேற்பார்வை மட்டுமே பார்த்துக் கொண்டிருந்தவள், இப்போது முழுபொறுப்பும் அவள்மேல் வந்தது. அடுத்து எதைப்பற்றியும் யோசிக்காமல் தனக்கு கொடுத்த கடமையில் தன் கவனத்தை செலுத்த ஆர்மபித்தாள். சரண் சிலநேரங்களில் போன் செய்தாலும் இவளே ‘வேலை இருக்கு வைக்கட்டுமா’ என்று தன்னை அந்த வேலைகளில் மூழ்கடித்துக் கொண்டாள்.

சரணுக்கு ஒரு பக்கம் வருத்தமும் மறுபக்கம் குற்ற உணர்ச்சியும் சேர்ந்து அவனை தவிக்க வைத்தது. நாட்கள் மாதங்களாகி வருடமும் கடந்தது. சிபியும் ஷானவியும் தங்களுக்கு கிடைத்த விடுமுறையை முழுவதும் நிலாவுடன் கழித்து தேனியை ஒரு வழியாக்கினர். நிலாவும் அவர்களின் வரவால் தன் பழைய உற்சாகத்தை மீட்டெடுத்தாள். அவர்கள் திரும்பி சென்றதும் அவர்களோடு அவளது உற்சாகமும் சென்றுவிடும்…

அகிலா அவர்களது பெற்றோரின் திதிக்கு திருச்சி வரவேண்டும் என முன்னமே கூறியிருக்க, காசிராமனின் உதவியோடு வந்து சேர்ந்தாள். அன்று காலையில் தான் சரணும் வந்திருந்தான். அப்போதுதான் நிலா மீனாவை மீண்டும் சந்திக்கிறாள்.

# புது மலர்கள் பூத்திடும் வேளை…!

அன்று அந்த பிரச்சினையை கிளப்பிவிட்டு சென்றவளை மீண்டும் இன்றுதான் பார்க்கிறாள். அவர்களது வாழ்க்கை இப்படி ஆனதற்கோ, சரண் தன்னை விட்டு பிரிந்து இருப்பதற்கோ அவள்தான் காரணம் என்று தெரியாமல் அவளைப் பார்த்து புன்னகைத்தாள்.

ஆனால் அவளோ எள்ளல் பார்வையுடன் நிலாவைக் கடந்து செல்ல, சரணிற்கு வந்த கோபத்தில் அவளை அடித்துவிடுவோமோ என்று நினைத்து வேறுபக்கம் பார்க்க, நிலா அவன் திரும்பியது தன்னைப் பார்க்க விரும்பாமல்தான் என்று தவறாக நினைக்க ஆரம்பித்தாள். இதற்கிடையில் மீனாவின் செய்கையில் வீறு கொண்டெழுந்த சரணின் படைத்தளபதிகள் இருவரும் அவளுடன் மல்லுக்கு நிற்க, பதிலுக்கு அவளும் எகிற….. கடைசியில் அகிலா வந்துதான் சமதானப் படுத்த வேண்டியிருந்தது….

அவர்களின் சண்டையை விலக்கினாலும் சரணிடம் ஒரு கண்டனப்பார்வையை செலுத்த தவறவில்லை அகிலா. இதற்கு காரணம் நீதான் என்பது போல். இது எதையும் அறியாத நிலா தன் கணவனையே விழி எடுக்காமல் பார்த்துக் கொண்டிருந்தாள். சரணுக்கும் அதே உணர்வுதான். ஆனால் அதை வெளிக்காட்டாமல் அவளைத் தவிர்த்து மற்றவர்களிடம் தன் பார்வையைப் பதித்துக் கொண்டான்.

அன்றிரவு முழுவதும் வேலைகள் இருந்ததால் ஒருவரை ஒருவர் சந்திக்க முடியவில்லை. அதிகாலையில் கிளம்பியவர்கள் காவிரியில் திதியைக் கொடுத்துவிட்டு அங்கு உள்ள ஆசிரமத்தில் அன்றைய உணவிற்கு சொல்லியிருக்க அங்கு சென்றிருந்தனர். அத்தனை வேலைகளையும் சரண் மற்றும் நிலா இருவரையும் முன்னிட்டே நடந்தாலும், நிலாவிடம் தெரியும் படபடப்பு… ஆசை… அதன் பின் அவன் மீது உண்டான கோபம் எதுவுமே சரணிடம் காணவில்லை.

இவன் ஏன் இப்படி இருக்கிறான் என்று மீண்டும் தனக்குள்ளேயே யோசனையில் மூழ்கியவள் அவனின் பெற்றோரை நினைத்து வருத்தத்தில் இருக்கிறான் போல என்று அதற்கும் அவளே ஒரு காரணத்தை கற்பித்துக் கொண்டாள். அன்று மாலையே சரண், சிபி மற்றும் ஷானவி மூவரும் கிளம்ப ஆயத்தமாயினர்.

புது மலர்கள் பூத்திடும் வேளை - மதுவதனி

கிளம்ப வேண்டும் என்று சொன்னவுடன் மனைவியின் முகத்தில் தெரிந்த உணர்வுகளைப் பார்த்தவன், அவளை அழைத்துக்கொண்டு தங்களது அறைக்கு வந்தான். இதுவே அவர்கள் இருவரும் ஒருசேர அந்த அறைக்குள் இருக்கும் தருணம். நிலா ஒரு ஏக்கத்துடன் சரணைப் பார்க்க, அவனோ அதையெல்லாம் கண்டுகொள்ளாமல் “இன்னும் இரண்டு மாதத்தில் வந்துவிடுவேன், அதற்குள்ளாக நீயும் உன்னுடைய வேலைகளையெல்லாம் முடித்துவிடு… காசி அங்கிளிடம் எல்லா பொறுப்புக்களையும் கொடுத்துவிடு, இனி உன்னுடைய வேலையையும் இங்கிருந்தே பார்க்கலாம். அத்தைக்கு ஏற்கனவே ஒரு நர்ஸ் அப்பாயிண்ட் பண்ணியாச்சு. இனி அத்தை அவர்களின் பொறுப்பு… என்ன செய்ய வேண்டும் என்ற ரொட்டின் வொர்க்கெல்லாம் அவளிடம் சொல்லிவிடு…” என்று மனனம் செய்தது போல் ஒப்பித்தவன் அவள் முகத்தைப் பார்த்தான்.

அவன் பேசியது எதுவுமே காதில் விழாமல் அவனையேதான் அவள் பார்த்துக் கொண்டிருந்தாள். ஆனால் அந்தப்பார்வையில் ஒரு பிடிவாதமும் ஒரு கோபமும் இருந்தது.. இவள் இப்படி பார்த்தால் நான் எப்படி இவளிடம் என்னுடைய கோபத்தைக் காட்டுவது போல் நடிப்பது என்று தன்னையே அவன் மனதுக்குள் கடிந்தவன் மீண்டும் அவளையே நோக்க….

“எதுக்கு பாவா இந்த கண்ணாமூச்சி ஆட்டம், உங்களுக்கு என்ன பிரச்சினை…. நான் உங்கள் வாழ்க்கையில் வந்தது யாருக்கும் பிடிக்கலையா… (இதை அவள் அகிலாவை மனதில் வைத்துக் கூற, சரணோ மீனாவை நினைத்துக் கொண்டான்.) எதற்காக என்னிடம் இப்படி நடந்துக்கிறீங்க, நான் என்ன தப்பு செஞ்சேன்னு நிஜமாவே எனக்கு தெரியல பாவா… அன்னைக்கு நடந்தது, அதுக்கு உண்டான காரணம் எல்லாம் சொல்லிட்டேன்…. இன்னும் இப்படியே என்னோடு பேசாமல் இருந்தால் நான் என்ன நினைக்கிறது… ஒருவேளை உங்களுக்கே என்னை பிடிக்கலையோ…! என்னைப் பிடிக்காம ஏன் கல்யாணம் செய்துக்கிட்டீங்க, இன்று நீங்களும் நிம்மதியா இல்லாமல், என்னையும் பைத்தியம்போல ஆக்கிட்டீங்க, இதுக்கு பேசாமல் செத்துப் போய்டலாம் போல தோணுது…” என்ற வார்த்தைகள் முடிக்கும் முன் சரணின் கைகள் அவளின் கன்னத்தைப் பதம் பார்த்திருந்தது.

சரண் திரும்பி வந்து இன்றோடு இரண்டு வாரங்கள் ஆகியும் மகளைக் காண வராததால் விஜயாவுக்கு சிறிது சந்தேகம் எழுந்தது. அதன்பிறகுதான் நிலாவின் நடவடிக்கைகளை கவனிக்க ஆரம்பித்தார்.

புது மலர்கள் பூத்திடும் வேளை - மதுவதனி

அவள் எப்போதும் போல தன் வேளைகளில் மும்முரமாய் இருப்பதும், சிறிது நேரம் கூட தனிமையை விரும்பாத பெண் போல எப்போதும் அந்த ஓவிய அறையையே வாசம் செய்து கொண்டிருந்தாள்.

கடந்த இரண்டு வருடங்களும் இப்படித்தான் இருந்தாள். ஆனால் அப்போது சரண் இங்கு இல்லை. வெகுதூரத்தில் இருந்தான். இடையில் இரண்டுமுறை வந்து சென்றாலும் இரண்டே நாட்களில் திரும்பியும் சென்றிருந்தான். அதனால் இருவருக்கிடையும் பெரிய வித்தியாசம் தெரியவில்லை. மேலும் மற்றவர்கள் முன்னே குறிப்பாக விஜயாவின் முன் நல்ல கலகலப்பான தம்பதிகள் போலவே காட்டியிருந்தனர்.

இதனால் யாருக்கும் எந்த ஒரு சந்தேகமும் எழவில்லை. ஆனால் இப்போது இருவருக்குமிடையே ஏதோ பெரிய பிரச்சினை இருப்பது போல் தெரிந்தது அவருக்கு.. அது எதனால்… யாரால்… ஒருவேளை அந்த உண்மையை மறைத்ததாலா..? என்று பலவற்றை யோசித்து இறுதியாக சரியான காரணத்தை கண்டுபிடித்தார். மேலும் தன் மகளை எத்தனை நாள்தான் தன் அருகிலேயே வைத்திருக்க முடியும். அவளுக்கும் ஒரு வாழ்க்கை இருக்கே அதிலும் அவள் வெற்றி பெற வேண்டுமே… என்று அந்த தாயுள்ளம் தவிக்க தொடங்கியது.

இதற்கு முடிவு சரணிடம்தான் என்பதும் தெளிவாக தெரிய, அவனுக்கு போன் செய்து தன் எண்ணத்தை மறைமுகமாக கேட்டார். சரண் சிங்கப்பூரில் இருக்கும்போதே மீனாவிடம் பேச ஆரம்பித்திருந்தான். அவளும் அவனிடம் தன் மனதை மறைக்காமல் நேரடியாக உரிமையாக பழக ஆரம்பித்தாள். சரண் அவளிடம் பழக ஆரம்பித்ததும் மீனாவின் பார்வை நிலாவை விட்டு விலகியது. அவள் நிலாவை பற்றி யோசிப்பதை விட்டு விட்டாள். சரணை தன் பக்கம் கொண்டுவரும் முயற்சியில் இறங்கினாள். இதையெல்லாம் கண்ட சரண் இப்போதைக்கு நிலா அங்கிருப்பதே நல்லது என்று அவன் எடுத்த முடிவு சரியானது என்றே நினைத்தான்.

இந்தியா திரும்பும் நாளும் நெருங்க நெருங்க மனைவியின் முகம் வந்து இம்சிக்க அவளை எப்போது பார்ப்போம் என்ற எண்ணமே அவனை படுத்தியது. அந்த நேரம் தான் அகிலா மீனாவிற்கு ஒரு வரன் வந்திருப்பதாகவும், அவள் அதை ஒத்துக்கொள்ளாமல் சரனைத்தான் திருமணம் செய்யப்போவதாக கூறி அவர்களை அனுப்பி விட்டதாக கூறினாள்.

# புது மலர்கள் பூத்திடும் வேளை...!

மேலும் நிலாவை சரண் வாழ்க்கையில் இருந்து வெளியேற்றி கண்டிப்பாக அந்த இடத்தில் தான் இருப்பேன் என்று அவளது அம்மாவிடம் பேசிக்கொண்டிருந்ததைக் கேட்டதாகவும் அகிலா கூறினாள். அதைக் கேட்டவன் என்ன குடும்பமோ என்று தனக்குள் பொங்கிய கோபத்தை வெளிப்படுத்தும் வழி தெரியாது இந்த மீனாவுக்கு ஒருமுடிவு கட்டிவிட்டு அதன்பிறகு நிலாவைத் தன்னுடன் அழைத்து வரலாம் என்ற முடிவுக்கு வந்து தாயகம் திரும்பும் வேலையில் இறங்கினான்.

ஆனால் அவன் நினைத்ததற்கு மாறாக மீனா அவனிடம் திருமணத்தைப் பற்றியோ, அவர்களின் பிரிவைப்பற்றியோ பேசவே இல்லை. பதிலாக நிலாவை எப்போது இங்கு அழைத்து வருவீர்கள் எனக்கேட்க... சரணுக்கு ஏதோ விபரீதம் நடக்கபோகும் அறிகுறி தெரிந்தது. அதனாலதான் திருச்சி வந்து இரண்டு வாரங்கள் ஆகியும் மனைவியைக் காணவோ அவளிடம் பேசவோ அவன் முயற்சிக்கவில்லை.

இது எதையும் அறியாத நிலா 'என்மேல் உனக்கு நம்பிக்கை இருக்குதானே அதை எப்போதும் காப்பாற்றுவேன்' என்ற சரணின் வார்த்தைகளையே மந்திரம் போல் உச்சரித்து அவனது நினைவிலே சஞ்சரிக்க தொடங்கினாள். எத்தனைக் கோபம் இருந்தாலும் அவனால் என்னை வெறுத்து ஒதுக்க முடியாது என்று திடமாக நம்பினாள்.

அதற்கு காரணம் அன்று அவள் சாவைப்பற்றி பேசியதும் அவளை அடித்துவிட்டு அவளது அதிர்ந்த முகத்தைப் பார்த்து வலித்தாலும் அதை ஒதுக்கிவிட்டு, "உனக்கெல்லாம் அறிவே இருக்காத... கொஞ்சமும் யோசிக்க மாட்டியா... பிடிக்காமல் தான் ஊரு ஊரா தேடிக் கல்யாணம் பண்ணேனா.. மனுஷன் இப்படி இருந்தா அதுக்கு நீயா ஒரு காரணத்தைக் கண்டுபிடிச்சு, நீயா ஏதாவது பேசுவியா... எனக்கு இப்போ வேலையில் பயங்கர நெருக்கடி, ப்ராஜெக்ட் முடியப்போகுது அந்த டென்சன், சிபி இந்த வருடம் காலேஜ் விட்டு வந்துடுவான்."

"அடுத்து அவனோட ப்ளான் என்ன, இப்படி ஏகப்பட்ட டென்சன் இருக்கு, நீயும் என்னை டென்சன் பண்ணாதே, அன்னைக்கு சொன்னதுதான் இப்பவும் என்மேல் நம்பிக்க இருந்தா இரு.... இல்லாட்டி போயிட்டே இரு...

புது மலர்கள் பூத்திடும் வேளை - மதுவதனி

இனிமேல் செத்துடலாம் கித்துடலாம் என்று பேசிடாதே, அப்புறம் நானே உன்னைக் கொலை பண்ணிட்டு, உன்னோடவே சேர்ந்து நானும் வந்துடுவேன்" என்று கர்ஜித்தவன் அந்த அறையை விட்டு வெளியேறினான். அதை நினைத்து பார்த்து மனதுக்குள் எப்போதும் போல சந்தோசப்பட்டுக்கொண்டாள்.

*"பிரிவை கண்டு*
*கவலை கொள்ளாதே…*
*இமைகள் பிரிந்தால்தான்*
*உலகை ரசிக்க முடியும்…!!*

எங்கோ படித்த வரிகள் நினைவுக்கு வர, தன் வாழ்க்கையை அதன் போக்கிலையே விட்டுவிட்டாள். விஜயா மகளைப்பற்றி பேசியதும் துணுக்குற்றவன், அகிலாவிடம் பேசி, என்ன நடந்தாலும் பரவாயில்லை என்ற நிலையில் நிலாவை அழைத்து வர சென்றான்.

அகிலாவும் அவனது முடிவை வரவேற்க வேறு எதையும் யோசிக்காமல் தேனியை நோக்கித் தன் பயணத்தை தொடர்ந்தான். இடையில் தன் பெற்றோரின் திதிநாளுக்கு வந்திருந்தவன் தம்பதி சகிதமாக அவர்களுக்கு திதி கொடுத்துவிட்டு அன்றிரவே மீண்டும் சிங்கப்பூர் சென்று விட்டான். மறுபடியும் ஒருமுறை வந்தவன் திருச்சி வராமலே சென்னையில் இரண்டு நாட்கள் தங்கி தன் வேலையை முடித்துவிட்டு விமானம் ஏறிவிட்டான்.

ரவி அவனை சந்தேகமாகப் பார்ப்பதை உணர்ந்து 'வந்ததும் உடனே கிளம்பினால் நிலா ரொம்ப வருத்தபடுவாள்' என்ற காரணத்தை முன்வைக்க அவனும் எதுவும் கேட்கவில்லை. காரை ஓட்டிக்கொண்டு இருந்த சரண் மிகுந்த மன வருத்தத்தில் இருந்தான். ஒரு பெண்ணின் மிரட்டலுக்காகப் பயந்து போய் மனைவியை பிரிந்து வாழும் நிலையை எண்ணி….. மேலும் தன் அக்காவின் வாழ்க்கை மட்டும் இதில் குறுக்கே வராமல் இருந்தால் அவனது நடவடிக்கையே வேறுமாதிரி இருந்திருக்கும்.. ஆனால் இப்போதோ…? இவ்வாறாக யோசித்தவன் தீபகாருண்யம் செல்லும் கிளைப்பாதையில் காரை செலுத்தினான்.

புது மலர்கள் பூத்திடும் வேளை - மதுவதனி

# புது மலர்கள் பூத்திடும் வேளை...!

அங்கிருந்து அவர்களது இடம் ஆரம்பமாகிறது என்பதை ஒரு வரவேற்பு பலகை அறிவித்தது. அந்த இடம் இதற்கு முன் வெறும் கருவேலம் காடுகளாக இருந்தது. ஆனால் இப்போது அதற்கான சின்ன அடையாளம் கூட இல்லை... அங்கங்கு சின்ன சின்ன குடிசை போல் வீடுகள் இருந்தன... நிழற்குடைகள் இருந்தன... சுற்றியிருந்த வேப்பமரங்களை வெட்டாமல் அதை சுற்றிலும் மரப்பலகைகளில் இருக்கைகளும் வைத்து வயதானவர்கள் காலையிலும் மாலையிலும் நடைப்பயிற்சியின் பின் அமர்ந்து ஆசுவாசப்படுத்திக் கொள்ள அமைக்கப்பட்டிருந்தது.

இந்த ஒரு விசயத்திலே நிலாவின் கடுமையான உழைப்பு தெரிய, இதற்கே இப்படி உழைத்திருந்தால், மற்ற வேலைகளுக்கெல்லாம் இன்னும் எத்தனை வேலை செய்திருக்கிறாளோ என்ற வருத்தம் கணவனான அவனுக்கு உண்டானது. சரணின் கார் உள்ளே நுழைந்ததும் அங்குள்ளவர்கள் எல்லாம் அவனை சூழ்ந்துகொண்டு அவனிடம் நலம் விசாரிக்க, அவரவருக்கு ஏற்றவாறு தன் நலனை தெரிவித்தவன் அவர்களது நலனையும் விசாரித்தான்.

அங்கு வந்த காசிராமனும் அவர் பங்குக்கு வரவேற்று நிலா வீட்டில் இருப்பாள் என்ற தகவலோடு அவனையும் அழைத்துக் கொண்டு வீட்டிற்கு வந்தார். வீடு அமைதியாக இருக்க, காசியை அவன் கேள்வியாய் பார்க்க அவரும் விஜயா நேரமா தூங்கிடுவாங்க, நிலா அவளோட ரூம்ல இருப்பா, இருங்க கூப்பிடுறேன் எனவும்.... அவரிடம் வேண்டாமென மறுத்து, நானே போய் பார்க்கிறேன் என்று கூறி அவள் அறை நோக்கி சென்றவன் அங்கு அவன் பார்த்த காட்சியில் அப்படியே சிலையாகி நின்றான்.

**வேளை தொடரும்........**

புதுமலர்கள் பூத்திடும் வேளை மதுவதனி

# புது மலர்கள் பூத்திடும் வேளை…!



**வேளை - 32-1**

வீட்டின் உள்ளே நுழையவும் மனைவியைக் காணப்போகும் ஆவல் கட்டுக்கடங்காமல் பெருக, அவனது மனதுக்குள் பெரும் போராட்டமே நடந்து கொண்டிருந்தது. காசிராமனிடம் கூறிவிட்டு புயலை விட வேகமாய் அறைக்குள் நுழைந்தவனை யாருமில்லா வெற்று அறையே வரவேற்க. ஒருநிமிடம் குழம்பியவன் அறையைச் சுற்றி அவனது கண்கள் சுழன்றடித்து ஒரு இடத்தில் நிலைபெற்றது.

அன்று மாலை வீட்டுக்கு வந்த நிலா தாயிடம் சிறிதுநேரம் பேசிவிட்டு தன் அறைக்குச் சென்றாள். இப்போதெல்லாம் விஜயா அவருடைய தேவைகளை அவரே ஓரளவு செய்துகொள்ள பழகியிருந்தார். அது நிலா தன் புகுந்த வீட்டிற்குப் போகப் போகிறாள் என்பதால்தான். அந்த நினைவு வந்து அவர் நிலாவிடம் பேசுவதையும் அவளுடன் செலவிடும் நேரங்களையும் குறைத்து தன் தனிமைக்குத் தன்னை தயார்படுத்திக் கொண்டிருந்தார்.

# புது மலர்கள் பூத்திடும் வேளை…!

நிலாவுக்கும் இது ஓரளவு புரிய சில நேரங்கள் அவரிடம் சண்டையிட்டிருக்கிறாள். என்ன இருந்தாலும் நிதர்சனம் எதுவென்பது புரியவும், வேறு வழியில்லாமல் அவரைப் பார்த்துக் கொள்பவரிடம் தேவையானவற்றைக் கூறி அவரது தனிமையை குறைக்கும் வழி செய்திருந்தாள் நிலா.

தனது அறைக்கு வந்தவள் குளித்துவிட்டு இலகுவாக ஒரு உடையை அணிந்துகொண்டு தன்னுடைய ஓவிய அறைக்குள் நுழைந்தாள். அங்கு இருந்த ஓவியங்கள் அனைத்தையும் பார்வையால் தழுவியவளின் மனம் சத்தமில்லாமல் ஒரு பெருமூச்சைக் கிளப்பியது. மீண்டும் தன் தூரிகையை எடுத்தவள் கண்களில் ஏக்கம் பொங்க அதில் ஒரு படத்தை தீட்ட ஆரம்பித்தாள். அந்தப்படத்திலேயே ஒன்றியவள் சரண் வந்ததையோ, அவளைத் தேடியதையோ அறியாமல் அதிலே திளைத்துப் போயிருந்தாள்.

சரண் அந்த அறையை பார்வையால் அலசி அவளைக் காணாமல் பக்கவாட்டில் பால்கனியுடன் ஒட்டியிருக்கும் அந்த ஓவிய அறையை காண, அதில் மனைவியின் பின்பக்கத் தோற்றமே முதலில் விழுந்தது.

அந்தப் படத்தில் பினிசிங் டச் செய்து கொண்டிருப்பாள் போலும், ஆங்காங்கே பிரஷை வைத்து இழுத்தும் தடவியும் சரி செய்து கொண்டிருந்தாள்.

அப்போதுதான் அவளது உடையை பார்த்தான். அது அவன் சிங்கப்பூரில் இருந்து அவளுக்கும் ஷானவிக்கும் சேர்ந்து எடுத்தது. இவள் இந்தமாதிரி உடைகள் அணிவதில்லை என்று தெரியும். விஜயா முற்றிலும் இதற்கு தடை விதித்திருந்தார். ஆனால் அவன் மனமோ அவர்கள் மட்டும் தனியாக இருக்கும்போதாவது இந்த உடையை அணியச் செய்ய வேண்டும் என்று நினைத்து எடுத்திருந்தான்.

அதன்பிறகு உண்டான பிரச்சினைகளில் இதை அவளிடம் நேரடியாக கொடுக்க முடியாமல், ஷானவியிடம் கொடுத்து நிலாவைப் பார்க்கும்போது தந்துவிட சொல்லியிருந்தான். அவளும் அவன் சொன்னதை சரியாக செய்திருக்க, தன் படைத்தளபதிகளை நினைத்து அந்தநேரம் அவன் பெருமைப்படாமலும் இல்லை.

புதுமலர்கள் பூத்திடும் வேளை - மதுவதனி

சும்மாவே அவன் கோடு போட்டால் ரோடு போடுகிறவர்கள், இந்த விசயத்தில் பைபாஸ் ரோடே போட்டிருக்கிறார்கள் என்று நினைத்தவன் அவர்களின் செயலில் சிறு புன்னைகையை உதிர்த்தான்.

அவர்களை பற்றிய எண்ணங்களை உடனே தவிர்த்தவன் அவளை ஆராயும் வேலையை விட்ட இடத்தில் இருந்து மீண்டும் ஆரம்பித்தான். அடர் பச்சையில் கையில்லாமல் ஒரு ஷர்ட்டும், வெள்ளையில் பச்சையும், ஆரஞ்சுமாய் பூக்களை அள்ளித் தெறித்தாற்போல, நடக்கும்போது அலை அலையாய் துள்ளும் வகையில் இருந்த ஸ்ப்ரிங் ஸ்கர்ட்டும் அவளுக்கு அத்தனை பொருத்தமாய் இருந்தது. பார்ப்பதற்கு சிறுபெண் போலவே இருந்தாள். அவளது இடைத் தாண்டிய கூந்தல் காற்றில் அலைபாய்ந்து அவள் முகத்தில் மோதி விளையாடியது.

அந்த ஷர்ட் அது சோலி போலவும் இல்லாமல் ஷர்ட் போலவும் இல்லாமல் அவளது உயரத்திற்கு சற்று குறைவாக இருக்க, அதை அட்ஜஸ்ட் செய்யும் பொருட்டு தன் ஸ்கர்ட்டை சற்று மேலே ஏற்றி விட்டிருப்பாள் போலும், அவள் கைகளைத் தூக்கி வரையவும் அது சற்று கீழிறங்கி அவள் மென்னிடையை காட்ட, அந்த மின்னலின் ஒளிக்கீற்று போல் தெரிந்த அவள் பால் வண்ண இடை அவனை போதை கொள்ள செய்தது.

அந்த அமைதியான இடம் இத்தனை ரம்மியமாய் இருக்கிறதா என்று சற்றே ஊன்றிக் கவனித்தவன் அப்போதுதான் அங்கு இளையாராஜாவின் மெல்லிசையில், அவரது இசையின் மாஸ்டர் பீசான தளபதி படத்தில் இருந்து பாடல்கள் மெலிதாய் ஒழுத்துக் கொண்டிருந்ததைக் கேட்டான். அதிலும் அப்போது

***யமுனை ஆற்றிலே ஈர காற்றிலே***
***கண்ணனோடுதான் ஆட..***
***பார்வை பூத்திட பாதை பார்த்திட***
***பாவை ராதையோ வாட***
***(யமுனை..)***

***இரவும் போனது பகலும் போனது***
***மன்னன் இல்லையே கூட..***
***இளைய கன்னியின் இமைத்திடாத கண்***
***அங்கும் இங்கும் தேட....***
***(இரவும்..)***

# புது மலர்கள் பூத்திடும் வேளை…!

***ஆயர்பாடியில் கண்ணன் இல்லையோ***
***ஆசைவைப்பதே அன்பு தொல்லையோ…***
***(ஆயர்பாடியில்..)***

***யமுனை ஆற்றிலே ஈர காற்றிலே***
***கண்ணனோடுதான் ஆட..***
***பார்வை பூத்திட பாதை பார்த்திட***
***பாவை ராதையோ வாட….***

என பாடல் ஒலிக்க ஆரம்பிக்கவும் அவளது கைகள் சிறிது தயங்கி மீண்டும் வரையத் தொடங்கியதைக் கண்டவன், அந்தப்பாடல் அவளது மனதை தெள்ளத்தெளிவாய்க் காட்டியதை உணர்ந்தான். அதோடு அவளது முகத்தில் தோன்றிய சிறுவலியும் அவனது கண்களில் படாமல் இல்லை.

அந்த நேரம் அவள் முன்னே சென்று அவளை இறுக அனைத்து அவளது வலியெல்லாம் போக்க வேண்டும் என்ற எண்ணம் ஆழிப்பேரலையாய் தோன்றி அவனை வதைத்தது.

ஆனாலும் அவன் முன்னேதான் அவளுடைய எந்த உணர்சிகளையும் அவள் காட்டுவதே இல்லையே, ஏதோ தப்பு செய்தவள் போல தலையைக் குனிந்து கொள்கிறாளே. அவள் இயல்பில் எப்படி இருக்கிறாள், என்னவெல்லாம் செய்கிறாள் என்று பார்க்கலாம் என்ற எண்ணம் தோன்ற அப்படியே அங்கிருந்த சுவரில் சாய்ந்தபடி அவளையே அளவிட்டுக் கொண்டிருந்தான்.

அப்போது அவளது கற்றைக் கூந்தல் காற்றில் பறந்து, முகத்தில் மோதி இதழில் மாட்டிக் கொண்டது. அதைக் கண்டவனின் மனமும் அந்த முடியைப் போல அந்த இதழில் சிக்கிகொண்டது. ஆனால் அவளோ இங்கு ஒருவன் அவள் அழகில் சிக்கித் தவித்து கொண்டிருக்கிறான் என்பதை அறியாமல் தன் போக்கில் கைகொண்டு எடுக்காமல் தன் நுனிநாக்கில் அதை லேசாக ஒதுக்கி ஊப் என்று ஊதித் தள்ளிவிட அது பறந்து மற்ற முடிகளுடன் சேர்ந்து கொண்டது.

தன் மனைவியின் செயலில் மோகமும் தாபமும் ஏற அவளை இனியும் யாருக்காகவும் ஒதுக்க முடியாது என்ற எண்ணமும் மூளையில் சட்டென்று பதிய, அவளை கனிவும் காதலும் கூடிய பார்வையுடன் அளந்தான்.

புது மலர்கள் பூத்திடும் வேளை - மதுவதனி

# புது மலர்கள் பூத்திடும் வேளை...!

அவளும் அந்தப் படத்தை வரைந்து முடித்திருப்பாள் போலும், ப்ரஷை அதன் இடத்தில் வைத்துவிட்டு இரண்டு கைகளையும் ஒருமுறைத் தட்டிவிட்டு அதற்கு எதிர்புறம் இருந்த சுவரில் சாய்ந்து ஒருகாலை மடக்கி இருகைகளையும் கட்டிக்கொண்டு தான் வரைந்த ஓவியத்தையே பார்த்தாள்.

சரணுக்கும் அவள் நகர்ந்ததும் தான் அந்த ஓவியம் அவன் கண்ணில் முழுதாக பட்டது. அதைப்பார்த்தவன் பார்த்தபடி அப்படியே நின்றிருந்தான். அந்த ஓவியம் சரண் அவளை பின்னிருந்து அணைத்தபடியே அவளது முன் நெற்றியை உரசி அவளது முகத்தைப் பார்த்து சிரிப்பது போலவும், அவளோ தன் விரிந்த கூந்தல் முன்பக்கமாய் சரிய அவளும் அவனைப் பார்த்து புன்னகைப்பது போலவும் அத்தனை அருமையாய் இருந்தது அந்த சித்திரம்.



*(மக்களே என்னோட வர்ணனை இவ்ளோதான்.... இதுக்கு மேல எனக்கு வரலீங்கோ... கோச்சுக்காதீங்க மக்காஸ்... என்னோட வர்ணனையில் தப்பு இருந்தா இந்த போடோவை இமேஜின் பண்ணிகோங்க... ஹிஹிஹி)*

# புது மலர்கள் பூத்திடும் வேளை...!

அவளது ஓவியத்திறமை மேல் அவனுக்கு அபார நம்பிக்கை இருந்தது, அது கண்டிப்பாக அவள் அருமையாய் வரைவாள் என்று. ஆனால் அவன் பிரமித்தது அந்த படத்தில் இருவர் கண்களிலும் தெரிந்த காதலும் அந்நியோன்யமும் தான். இத்தனை உயிர்ப்புடன் ஒரு படத்தை வரைய முடியுமா..? முடிந்ததே அவளால் முடிந்ததே.... அவன் மீது அவள் கொண்டுள்ள காதலை உணரும் பொருட்டு இருந்தது அவளது அந்த சித்திரம். அதன்பிறகுதான் அவன் அந்த அறையை நோட்டம் விட்டான். அந்த அறை முழுவதும் அவனும் அவளும் மட்டுமே.....

முன்னமே சிபியும் ஷானவியும் இதையெல்லாம் கூறியிருந்தாலும், இன்று நேரிலே பார்த்ததும் தன்னிலை மறந்து ஆனந்த அதிர்ச்சியில் ஒரு நிமிடம் மூச்சு விட மறந்தான். அப்படி அவன் நின்றிருந்த வேளையில் அடுத்த பாடலான

*" சுந்தரி கண்ணால் ஒரு சேதி!*
*சொல்லடி இந்நாள் நல்ல தேதி?*

*என்னையே தந்தேன் உனக்காக!*
*ஜென்மமே கொண்டேன் அதற்காக!*
*நான் உனை நீங்க மாட்டேன்*
*நீங்கினால் தூங்க மாட்டேன்*
*சேர்ந்ததே நம் ஜீவனே!*
*சுந்தரி... என்னையே...*

*வாய் மொழிந்த வார்த்தை யாவும்*
*காற்றில் போனால் நியாயமா?*
*பாய் விரித்து பாவை பார்த்த*
*காதல் இன்பம் மாயமா?*

*வாள் பிடித்து நின்றால் கூட*
*நெஞ்சில் உந்தன் ஊர்வலம் !*
*போர்க்களத்தில் சாய்ந்தால் கூட*
*ஜீவன் உன்னை சேர்ந்திடும்*
*தேன் நிலவு நான் வாழ*
*ஏன் இந்த சோதனை?*

*வான் நிலவை நீ கேளு!*

புது மலர்கள் பூத்திடும் வேளை - மதுவதனி

# புது மலர்கள் பூத்திடும் வேளை…!

*கூறும் என் வேதனை!*
*எனைத்தான் அன்பே மறந்தாயோ?*
*மறப்பேன் என்றே நினைத்தாயோ?*
*என்னையே தந்தேன்… சுந்தரி…*

*சோலையிலும் முட்கள் தோன்றும்*
*நானும் நீயும் நீங்கினால் !*
*பாலையிலும் பூக்கள் பூக்கும்*
*நானுன் மார்பில் தூங்கினால் !*

*மாதங்களும் வாரம் ஆகும்*
*நானும் நீயும் கூடினால்*
*வாரங்களும் மாதம் ஆகும்*
*பாதை மாறி ஓடினால்*
*கோடி சுகம் வாராதோ?*

*நீ எனை தீண்டினால்*
*காயங்களும் ஆறாதோ?*
*நீ எதிர் தோன்றினால்*
*உடனே வந்தால் உயிர் வாழும்!*
*வருவேன் அந்நாள் வரக்கூடும் !*
*சுந்தரி…*

ஒலிக்க ஆரம்பித்தது. அதில் ஒலித்த வரிகள் அனைத்தும் அவர்களின் வலியும் காதலும், எதிர்பார்ப்பும் என்று அனைத்தையும் வெளிக்காட்டியது.

பாடலின் வரியைக் கேட்டதும் சரண் நிலாவைப் பார்த்து 'நிலாமா' என வாயசைக்க, சத்தம் வரவில்லை வெறும் காற்றுதான் வந்தது. ஏதேதோ எண்ணங்களின் ஊர்வலத்தில் இருந்த நிலாவை அவனின் குரல் திகைப்படைந்து நிகழ்வுக்கு இழுத்து வந்தது. பட்டென்று தன் அறைவாசலை நோக்கி அவள் தன் பார்வையைத் திருப்ப அங்கு இருந்த சரணைக் கண்டு, உள்ளம் பூரிக்க கண்களில் கண்ணீர் பெருக்க, அதற்கு மாறாக உதட்டில் சிறு புன்னகையுடன் அவனையே விழி எடுக்காமல் பார்த்தாள்.

புது மலர்கள் பூத்திடும் வேளை - மதுவதனி

மனைவியின் நிலையறிந்த அவனும் ஒவ்வொரு அடியாய் எடுத்துவைத்து அவளை நெருங்க, அவன் இங்கு வந்ததையே நம்பமுடியாமல் ஆச்சரியமாய் பார்த்து கொண்டிருந்தவள், அவன் இன்னும் தன்னை நெருங்கி வருவதை உணர்ந்து ஒரு படபடப்புடன் விழியகல அவனையே நோக்கினாள்.

மனைவியை நெருங்கியவன் அவளைத் திருப்பி பின்னிருந்து அணைத்து அவள் முன் நெற்றியை உரச, அவன் செய்கையின் காரணம் சட்டென்று உணர்த்த, அவனின் எதிர்பார்ப்பை பொய்யாக்காமல் அவன் போலவே அவளும் ஒட்டுமொத்த காதலையும் கண்களில் தேக்கி அவனை நோக்கி தன் பார்வைக் கனைகளை வீசினாள்.

தான் சொல்லாமலே செய்த மனைவியின் செயலில் உருகியவன் அவளது இடையில் கைகொடுத்து அவளை முன்புறம் திருப்பி சற்றுமுன் அவளது கூந்தல் உறவாடிய அவளின் செவ்விதழை தன் உதடுகள் கொண்டு உறவாடினான். கணவனின் செயலில் முதலில் திகைத்தாலும், பின் அதில் உடன்பட்டு அவனோடு இணைந்து அந்த முத்த யுத்தத்தில் போராட ஆரம்பித்தாள். முழுதாக நெடிய இரண்டு ஆண்டுகள் கழித்து கிடைத்த கணவனின் நெருக்கத்தை விட்டு விலகும் எண்ணமில்லாமல் அவனுக்குள்ளே புதைந்து விடுபவள் போல அவனை இறுக அணைத்துக் கொண்டாள்.

ஏற்கனவே அவளது அழகில் மயங்கி, அவளது காதலில் உருகி போயிருந்தவன் மனைவியின் இந்த செயலில் முற்றிலும் தன்னை இழந்தான். அப்போது அங்கு கணவன் மனைவியின் அடுத்த கட்டத்தை அவர்களுக்கு நினைவூட்டும் விதமாக அடுத்த பாடல் ஒலிக்க ஆரம்பித்தது.

***புத்தம் புது பூ பூத்ததோ***
***எண்ணங்களில் தான் தேன் வார்த்ததோ***
***மொட்டவிழ நான் ஆனதோ***
***சொல்லடி என் செல்ல கிளியே (உ)***

***வாய் பேசும் வார்த்தை எல்லாம்***
***கண் பேசும் அல்லவோ***
***கண் பேசும் வார்த்தையை தான்***
***கண்ணீரும் சொன்னதோ***

புது மலர்கள் பூத்திடும் வேளை - மதுவதனி

## புது மலர்கள் பூத்திடும் வேளை…!

*பால் நிலா தேய்கின்ற தென்று*
*பகல் இரவும் என் நெஞ்சம்*
*பழிவிழுமோ என்றஞ்சும்*
*ஆதவன் நீ தந்ததன்றோ*
*நிலவு மகள் என் வண்ணம்*

*நினைவுகளில் உன் எண்ணம்*
*கருணைக் கொண்டு நீ தான்*
*காயம் தன்னை ஆற்ற*
*பார்வை கொண்டு நீ தான்*
*பாச தீபம் ஏற்ற*
*உயிரென நான் கலந்தேன்*

*புத்தம் புது பூ ….*

*வாழ்வென்னும் கோலங்கள் இன்று*
*அறிந்தது உன் பொன் உள்ளம்*
*நெகிழ்ந்தது என் பெண்ணுள்ளம்*
*ஈதிசை பூபாளம் என்று*
*எழுந்தது பார் நம் கானம்*
*விடிந்தது நம் செவ்வானம்*
*கூந்தல் மீது பூவாய்*
*நானும் உன்னை சூட*
*தொகை உன்னை நான் தான்*
*தோளில் இன்று வாங்க*
*உனக்கென நான் பிறந்தேன்*

*புத்தம் புது பூ …*

பாடலின் வரிகள் புரிந்ததாலோ எண்ணவோ, இல்லை இனியும் மனைவியின் உணர்வுகளையும் காதலையும் அவமதிக்க கூடாது என்ற எண்ணம் உதித்ததனாலோ என்னவோ சரண் அவனின் நிலாவை கைகளில் ஏந்தியபடியே அங்கிருந்த மஞ்சத்தை நோக்கி நகர்ந்தான். கணவன் தன்னைக் காண வந்தது ஒரு ஆச்சரியம் என்றால், அடுத்தடுத்து அவன் நடந்து கொண்ட விதம் அவளுக்கு வியப்பையும் மகிழ்ச்சியையும் ஒருங்கே கொடுத்தது.

புது மலர்கள் பூத்திடும் வேளை - மதுவதனி

இதுநாள் வரை கணவனுக்கு என்ன பிரச்சினை என்று அவளும் கேட்டதில்லை, அவனும் தன் பிரச்சினையை அவளிடம் பகிர்ந்ததில்லை. மாறாக இருவருக்குள்ளும் ஜனித்தது உயிர் கொண்ட நேசம்.

இதில் எத்தனை மீனாக்களும், மணிகண்டன்களும் வந்தாலும் அவர்களை பிரிக்க முடியாது என்று அந்த நிமிடம் சரணின் மனதில் தோன்றியது. அந்த நினைவு தந்த மகிழ்ச்சி, அவனின் முகத்தில் நிம்மதியையும் புன்னகையும் அள்ளி வழங்க, தன் மனையாளை நேருக்கு நேராய் பார்த்து "நீ எனக்கு வேணும் நிலா… இப்போவே…. இந்த நிமிசமே…. எடுத்துக்கட்டா…!" என்றான் தாபமேறிய குரலில்…

அவன் முகத்தில் நிலைத்த காதலும், குரலில் இருந்த தாபமும் நிலாவைக் கட்டிபோட, அவனுக்கு சம்மதம் அளிக்கும் விதமாக அவனது மார்பில் புதைந்து அவனை இறுக அணைத்துக் கொண்டாள். மனைவியின் பதிலில் மனம் குளிர்ந்தவன் அவளைத் தன்னுடைய நிலாவாய் மாற்றி தன் இல்லறத்தில் முதற்படியை எடுத்துவைத்தான். சீண்டலும் சிணுங்கலும், தீண்டலுமாய் இனிதே அரங்கேறியது அவர்களது இனிய இல்லறம்….

இருவரும் ஒருவரை ஒருவர் காதலிக்கிறேன் என்று வாய்விட்டு சொன்னதில்லை. I Love You என்ற வார்த்தை அவர்களின் காதலுக்கு அப்பாற்பட்டது என்றே தோன்றியது. பார்க்கும்போதெல்லாம் I Love You, ஒரு முத்தம், ஒரு கட்டியணைத்தல், போனில் பேசும்பொழுது ஒரு I Miss You என்ற இது போன்ற எந்த செயல்களும் அவர்களது வாழ்வில் அதிகம் இருந்ததில்லை.

இருவரும் ஒருவரை ஒருவர் அடுத்தவர் மனதைக் கஷ்டப்படுத்தி விடக்கூடாது என்பதில் உறுதியாய் இருந்தனர். இத்தனை அன்பும் காதலும் எப்படி பொய்யாகிப் போய்விடும் என்று அந்த நிமிடம் அவர்கள் இருவரின் மனதிலும் தோன்றாமல் இல்லை. சாதாரண உள்ளங்கள் கொண்டவர்களின் ஒரு சிறு ஊடலே ஒரு கூடலுக்கு வழிவகுக்கும் போது, உயிர்நேசம் கொண்ட இரு உள்ளங்களின் ஊடல் ஒரு இன்ப கூடலுக்கு வழிவகுத்ததில் தப்பில்லையே…!!!!

# புது மலர்கள் பூத்திடும் வேளை…!

தன் வாழ்நாளின் பொக்கிசத்தை அடைந்துவிட்ட நிம்மதி, அதை யாருக்கும்…. யாருக்காகவும் விட்டுக்கொடுக்க மாட்டேன் என்ற உறுதி, அவளின் காதலின் மேல் கொண்ட மகிழ்ச்சி, அவள் அழகில் கொண்ட மோகமும் தாபமும் என்று ஒரு கூடலுக்கு உண்டான அத்தனை அம்சமும் வெளிப்பட்டது சரணின் செய்கையில்.

அவனின் வேகம் கண்டு அவள் அதிர்ந்தாலும் அவன் கண்களில் கண்ட காதலிலும், கனிவிலும் அவன் தன்னை துன்புறுத்தமாட்டான் என்ற 100% நம்பிக்கையில் அவனுக்கு அவளை ஒப்புக்கொடுத்து ஒரு மனைவியாய் அந்த இன்பத்தில் பங்கெடுத்தாள் நிலா…

**வேளை தொடரும்……..**

புதுமலர்கள் பூத்திடும் வேளை - மதுவதனி

# புது மலர்கள் பூத்திடும் வேளை...!

**வேளை - 32-2**

களைத்து ஓய்ந்துபோய் தன் கூந்தலில் வாசம் பிடித்து முகத்தை மூடிக்கொண்டு தூங்கும் கணவனையே விடாது பார்த்திருந்தாள் நிலா. அவன் முகத்தில் தெரிந்த சோர்வும் களைப்பும் அவனது வேலைப்பளுவையும், அலைச்சலையும் சொல்லாமல் சொல்ல அந்த காதல் கொண்ட அன்பு மனைவிக்கு உருகிவிட்டது. தான் பக்கத்தில் இருந்திருந்தாலாவது அவனது சோர்வை சிறிதளவேனும் குறைத்திருக்கலாம் என்று நினைத்தாள்.

அதன்பிறகு மணியைப் பார்த்தவள் இரவு 10.30 யைக் காட்ட எப்போது வந்தான் என்ன ஏதென்ற கேள்விகள் ஒருபுறம் மலையாய் குவிந்தாலும், அவன் எப்போது சாப்பிட்டானோ என்ற கேள்வி அடுத்ததாய் முளைக்க, அவனிடம் இருந்து தனது கூந்தலை மெதுவாக விலக்கி, அவன்மேல் போர்வையை இழுத்து போர்த்திவிட்டு, தன் உடைகளை அள்ளிக்கொண்டு குளியலறை நோக்கி சென்றாள். அடுத்த பத்து நிமிடத்தில் குளித்து கீழே வந்தவள் கணவனின் வரவு எல்லாருக்கும் தெரிந்திருக்கிறது என்று அங்கிருந்த உணவு வகையிலேயே தெரிய, ஒரு தட்டில் உணவுகளை அடுக்கிக் கொண்டு அவனைக் காண சென்றாள்.

அவனின் பசியையும் சோர்வையும் கண்டு ஏதோ வேகத்தில் உணவை எடுத்து வந்துவிட்டாள்தான். ஆனால் ஒரு பெண்ணாக சில மணிநேரங்களுக்கு முன் நடந்தது படமாக கண்களில் விரிய, வெட்கம் அழையா விருந்தாளியாய் வந்து ஒட்டிக்கொண்டது. இப்போது அவனை எப்படி எழுப்புவது என்ற கேள்வி எழும்ப, திருதிருவென விழிக்க ஆரம்பித்தாள்.

எழுப்பினால் அவன் முகத்தைப் பார்க்க வேண்டுமே, எப்படி பார்ப்பது........., என்ன பேசுவது....., கிண்டல் செய்வானோ... இல்லை மீண்டும் தன் சீண்டல்களை ஆரம்பித்து விடுவானோ...(ஆனாலும் மனதிற்குள் இதையெல்லாம் அவள் எதிர்பார்க்காமல் இல்லை) என்று நினைத்தவள் அவன் அருகில் அமர்ந்து, வலது கையை மெத்தையில் ஊன்றிக்கொண்டு இடது கையால் அவனது சிகையை கோதிவிட ஆரம்பித்தாள்.

புது மலர்கள் பூத்திடும் வேளை மதுவதனி

# புது மலர்கள் பூத்திடும் வேளை…!

***நீ என்னுடன் பேசாத***
***பொழுதுகளிலும் நான்***
***உன்னுடன் பேசத்தானே***
***துடித்தேன்……!***

***உன் மௌனங்கள் என் இதயத்தை***
***எத்தனையோ முறை அழவைத்தும்***
***என் இதயம் உன்னை ஒருபோதும்***
***வெறுத்தது இல்லையடா…!!***

அவளின் மனம் அவனின் செயல்களை நினைத்து, அதில் அவள் கண்ட மனதின் வலியையும் நினைத்துப் பார்த்து கவிதை கோர்த்தது. ஆனாலும் அவன் செயலுக்குப் பின் ஒரு காரணம் இருக்கும், அதுவும் தன்னுடைய நன்மையைக் கருதியே இருக்கும் என்ற அவளின் எண்ணம் மட்டும் மாறவே இல்லை. இருவருமே ஒரு பக்குவப்பட்ட வயதுடையவர்கள் தான். ஆனால் ஒரு பெண்ணை முழுமையாய் உணர்ந்ததும், ஒரு ஆணை முழுமையாய் உணர்ந்ததும் இருவருக்குமே முதல் புது அனுபவம்.

இந்த நிலையில் இருவரும் ஒருவரை ஒருவர் எப்படி எதிர்கொள்வது என்ற யோசனை அவளுக்குள் ஓடியது. அப்போது அவனது சிகையில் இருந்த கையை எடுத்து அதில் தன் உதடுகளைப் பதித்துவிட்டு, மீண்டும் அதைத் தன் தலையிலேயே விட்டு, கோதி விடுமாறு அழுத்திவிட்டான். அவளது மறு கையைத் துழாவி எடுத்து தன் கன்னத்தின் அடியில் வைத்துக்கொண்டு மீண்டும் உறங்க ஆரம்பித்தான் சரண்.

அவனது திடீர்செய்கையில் தடுமாறியவள்…… அவள் ஊன்றியிருந்த கையை எடுத்ததும் பேலன்ஸ் இல்லாமல் சட்டென்று அவன் மீதே கவிழ…. அதில் எதிர்பாராமல் அவளது இதழ்கள் அவன் கன்னத்தில் பதிய…… கூந்தலில் இருந்த நீர்த்துளிகள் அவன் நெற்றியில் விழ…. இந்த அடுத்தடுத்த தாக்குதலில் பட்டென்று கண்களைத் திறந்தான் சரண். குளித்து முடித்து புதுமலர்கள் போல தன்மேல் கவிழ்ந்திருப்பவளைப் பார்த்ததும் மூளைக்கு பல்பு எரிந்து அவனது உறங்கிய உணர்வுகளைத் தூண்டிவிட்டது.

புது மலர்கள் பூத்திடும் வேளை - மதுவதனி

கணவனின் கண்களைக் கண்டவள்………. அடுத்து அவன் என்ன செய்யப்போகிறான் என்பதை ஓரளவுக்கு அனுமானித்து அவனிடமிருந்து அவள் நழுவப் பார்க்க…. அவளது எண்ணத்தை உணர்ந்தாற்போல அவன் அவளது இடையில் கைகொடுத்து அவளை தூக்கி மெத்தையில் கிடத்தி… இரண்டு பக்கமும் கையை வைத்து அவள் நழுவி விடாமல் பிடித்துக் கொண்டான்.

அவனது செயலில் முதலில் திகைத்தவள் பின்பு அவனைப் பார்த்து முறைக்க… அவனோ அவளைக் கண்டுகொள்ளாமல் அவள் கழுத்தில் முகம் பதித்து வாசம் பிடித்துக் கொண்டிருந்தான். சிலநிமிட திமிறல்கள் எதுவும் வேலைக்கு ஆகாது போக….. அவனின் காதில் மெதுவாக கிசுகிசுக்க ஆரம்பித்தாள்.

“பாவா…” கிசுகிசுப்பாக

“ம்………..”

“ம்ம் பாவா ….” சற்று அழுத்தமாக

“ம்ம்ம்……சொல்லு….”

“பாஆவாஆஆஆ” என்றாள் குரலுயர்த்தி….

“ச்சை… என்னடி… ஒருத்தன் இப்போதான் புதுசா ஆராய்ச்சி பண்ணிட்டு இருக்கான், சும்மா பாவா பாவா னுட்டு, என்னனு சீக்கிரம் சொல்லு..”

அவன் பேச்சில் ஹான் என வாய்பிளந்தவள்…. பிறகு அவனது மூக்கைப் பிடித்து திருகிவிட்டாள். அதோடு அவனிடம்…”பாவா ப்ளீஸ் நான் இன்னைக்கு மட்டும் மூணு தடவை குளிச்சிட்டேன்….. அதுவும் தலைக்கும் சேர்த்து…. இந்த முடிவேற சீக்கிரம் காயாது எனக்கு… அப்புறம் சளி பிடிக்கும்… காய்ச்சல் வரும்… டாக்டர்கிட்ட போகணும்… ஊசி போடணும்… ஊசினா எனக்கு ரொம்ப பயம்….” என இழுத்துக் கொண்டே போக

புது மலர்கள் பூத்திடும் வேளை - மதுவதனி

# புது மலர்கள் பூத்திடும் வேளை…!

சடாரென்று அவளை விட்டு விலகியவன் “டேய் சரண் உனக்கு வெளிய இருந்து எல்லாம் வில்லன் வரவேண்டியது இல்லடா…. அதான் பக்கத்திலேயே இருக்காளே அவளே போதும்…. இதுதான் உனக்கு விதிச்சது…. வேறவழி இல்லை” என்று தன் சுண்டுவிரலை தன் முகத்துக்கு நேரே நீட்டி பேசியவன், அவளிடம் திரும்பி “அதெப்படிடீ நான் உன்கிட்ட வந்தா மட்டும் தவளை மாதிரி கத்துறது, இல்லை ஊழு ஊழுனு அழறது… எங்கே இருந்துடி இந்த டெக்னிக்கெல்லாம் பிடிச்ச…. மனுசனோட மூடு தெரியாம…. காய்ச்சல் வந்தா வரட்டும்… ஊசி உனக்கு பதிலா நான் போட்டுக்கிறேன்…” என்று கடுப்படிக்க

முதலில் அவன் சொன்னதில் அர்த்தம் புரியாமல் விழித்தவள், புரிந்ததும் பக்கத்தில் இருந்த பில்லோவைத் தூக்கிக் கொண்டு அவனைத் துரத்த, அவனும் அவளிடம் மாட்டாமல் போக்கு காட்ட, நிலா குளித்ததும் புடவை உடுத்தியிருந்தாள் அது அவளை பிடிக்க முடியாமல் தடுக்க… அந்தக் கோபத்தில் அங்கிருந்த மெத்தையில் அமர்ந்து மேல்மூச்சு கீழ்மூச்சு வாங்க அவனை முறைத்தாள்.

அவளின் செயலில் வாய்விட்டுச் சிரித்தவன் அவளருகில் அமர்ந்து அவளை பின்னிருந்து அணைத்து அவள் கூந்தலில் முகத்தைப் புதைத்து ஆழவாசம் பிடித்தான். கணவனின் செய்கையில் அவள் நெளிய….. அவன் கைகள் இடையில் விளையாட….. அவள் நெளிந்துக்கொண்டே “பாவா… நீங்க எப்போ சாப்பிட்டீங்க., முதல்ல குளிச்சிட்டு வாங்க சாப்பிடல்லாம்…. நான் எங்கேயும் போகப்போறது இல்ல… நீங்களும் தான். நான் உங்களுக்கு சாப்பாடு கொண்டு வந்துட்டேன்…. போய் குளிச்சிட்டு வாங்க….”

“ஏன்மா… அவ்ளோ தூரம் ஸெல்ப் டிரைவ் பண்ணிட்டு வந்துருக்கேன்…. அதோட இங்கேயும் வந்து முக்கியமான வேலை பார்த்துருக்கேன்…. இன்னும் எக்ஸ்ட்ரா டியுடி பார்க்கணும்… ரொம்ப டயர்டா வேற இருக்கு…. நீயே குளிச்சு விடக்கூடாதா..? உன்னோட பாவா பாவமில்ல…”

“என்னாது நான் குளிக்க வைக்கணுமா…. இதெல்லாம் உங்களுக்கே ஓவரா தெரியல…. போய் குளிங்க இல்ல இப்படியே வந்து சாப்பிடுங்க…. என்னாலெல்லாம் செய்ய முடியாது…. ஆசை தோசை… ஆளப்பாருடா….”

புது மலர்கள் பூத்திடும் வேளை - மதுவதனி

“ஓ அப்பபடியா….. சரி அப்போ நீ வரமாட்டே அப்படித்தான…” என்றவன் அவனின் செல்லை எடுத்து விஜயாவிற்கு அழைக்கப்போக

“ஹே என்ன பண்றீங்க……… நீங்க…. மணியைப் பாருங்க…. அம்மா இப்போ தூங்கிட்டு இருப்பாங்க… மாத்திரை வேற போட்டுருப்பாங்க” என அழாக் குறையாக கேட்க….

“அது இல்லடி செல்லக்குட்டி….. இதெல்லாம் ஒரு மனைவியோட கடமைனு கேள்விப்பட்டுருக்கேன்… அதோட ரவி விசயத்துல உண்மைன்னு தெரிஞ்சது…. சும்மா பீத்திகுவான் அவனும்…. ஆனா நம்ம விசயத்துல பொய்யா போகிடுச்சே… அதான் அத்தைக்கிட்ட நியாயம் கேட்கலாம்னு நினைச்சேன்.. நீ என்ன நினைக்கிற…”

“ம்ம் நானா…? நான் இப்போ உங்களை நல்லா நாலு போடணும்னு நினைக்கிறேன்… அப்படியே இப்படியெல்லாம் பேசுற அந்த வாயில திண்டுக்கல்லு பூட்டு ஒண்ணு வாங்கி மாட்டணும்னு நினைக்கிறேன்…. என்ன ஒரு வில்லத்தனம் உங்களுக்கு…. அம்மாக்கு தெரிஞ்சது அவ்ளோதான்…. நாலுநாள் உட்காரவச்சு செமினார் எடுத்துடுவாங்க… என் காதுல ரத்தம் வரணும்… அதை நீங்க பார்த்து சந்தோசப்படனும்….. அப்படித்தான…. நல்லா வருவீங்க நீங்க.. இப்போ போய் குளிச்சிட்டு வரீங்களா இல்லையா… பசிக்கிது சாப்பிடலாம்”

“சாப்பாடா…. எனக்கா…. ஏன்… நான்தான் இப்போ நல்லா சாப்பிட்டேனே….?

“எப்போ சாப்பிட்டீங்க.. இப்போவா… நான் பார்க்கவே இல்லையே… அப்போ நான் கீழே போனதும் நீங்க ஏதோ சாப்பிட்டுருக்கீங்க… ஆனா இங்கே ஒண்ணுமே இல்லையே… எதை சாப்பிட்டீங்க….” என்றுத் தன் போக்கில் புலம்பியவள் கணவனைப் பார்க்க, அவன் கண்களில் வழிந்த குறும்பில் சட்டென்று விஷயம் புரிய……

“உங்களை…” என்று பல்லைக்கடித்தவள்… “போங்க எப்போ பார்த்தாலும் கிண்டல் பண்ணிட்டு….” என்று அவனிடமே புதைய……….

“ஹாஹா…… நிலாமா…… நீ ரொம்ப விவரம்னு எல்லாரும் சொல்றாங்க… ஆனா சரியான டியூப் லைட்டுன்னு எனக்கு மட்டும்தான் தெரியும்…. எப்படியெல்லாம் பேசுது இந்த வாய்… இதுல எனக்கு பூட்டு போடப்போறீங்களா நீங்க..” என்று அவளது உதடுகளை தடவிக்கொண்டே அவளை விடாமல் சீண்டிக் கொண்டிருந்தான்.

சிறிதுநேரம் இப்படியே இருவரும் மாறி மாறி சீண்டி தங்கள் விளையாட்டைத் தொடர்ந்தனர். பிறகு தன் விளையாட்டுத்தனத்தை ஒதுக்கிவைத்துவிட்டு அவளைத் தன்புறம் திருப்பி நேருக்கு நேராய் பார்த்தான். அவன் கண்களில் அவளிடம் இத்தனைநாள் பிரிவிற்கு மன்னிப்புக் கேட்கும் பாவனை தெரிந்தது. அடுத்து அவன் வாய் திறந்து ‘சாரி நிலா’ என்ற வார்த்தைகள் உதிர்க்குமுன் அவனின் முரட்டு உதடுகளை தன் ரோஜா இதழ்கள் கொண்டு சிறை செய்தாள் நிலா.

கணவனிடம் தனக்கு எந்த கோபமும் இல்லை… அவன் எந்த தவறும் செய்யவில்லை… அதோடு அவன் அவளிடம் மன்னிப்புக் கேட்க வேண்டிய அவசியமும் இல்லை என்ற செய்திகளை அவளது முத்தத்தின் மூலம் அவனுக்கு உணர்த்த…. மனைவியிடமிருந்து இப்படியொரு செயலை எதிர்பாராதவன் அவளது முத்தத்தில் கரைந்து, அவள் தனக்கு உணர்த்திய செய்தியைப் புரிந்து கொண்டேன் என்ற விதமாக அவளது வேலையைத் தனதாக்கி… மீண்டும் அங்கே ஓர் காதல் போர் தொடங்க வகை செய்தான்.

தங்கள் பிரிவின் வலியை, காதலின் வலியை இருவரும் தங்கள் முத்தத்தின் மூலம் தீர்த்துக்கொள்ள முனைய.. அது இப்போது தீராதது என்று அவனைத் தள்ளிவிட்டு நிலா மூச்சுக்கு ஏங்க… அவளைப் பார்த்து கண்களை சிமிட்டி சிரித்தவன் அவளை அணைத்து நெற்றியில் முத்தமிட்டு குளியலறைக்குள் புகுந்தான்.

அவன் போனதும் ஒரு பெருமூச்சு விட்டவள் ‘என்ன பிடிவாதம்’ என்று தனக்குத்தானே பேசியவள், மெத்தை சரி செய்துவிட்டு, தனது புடவையையும் சரிசெய்து அவனுடைய உடைகளை எடுத்துக்கட்டிலில் வைத்துவிட்டு அமர்ந்திருந்தாள். குளித்துவிட்டு வந்தவனிடம் அதுவரை இருந்த விளையாட்டுத்தனம் எல்லாம் விடை பெற்றிருந்தது. அவன் முகம் தீவிர ஆலோசனையில் இருப்பதைப் பார்த்தவளும் ஒன்றும் பேசாது அவனுக்கு உடைகளை எடுத்துக் கொடுத்தாள்.

புது மலர்கள் பூத்திடும் வேளை - மதுவதனி

# புது மலர்கள் பூத்திடும் வேளை…!

அதன்பிறகு இருவரும் சேர்ந்து உணவை உண்டுவிட்டு பால்கனியில் இருந்த ஊஞ்சலில் அமர்ந்தனர். சில்லென்ற காற்று மேனியைத் தழுவ, ஏதோ ஒரு சுழலில் இருந்து விடுபட்டதுபோல் இருந்தது சரணுக்கு. அது கொடுத்த நிம்மதி, மனைவியத் திரும்பி பார்த்தான் அவளோ வானில் ஜொலித்த முழுமதியை ரசித்துக் கொண்டிருந்தாள்.

சிலநிமிடங்கள் அதில் கரைய, அதன்பிறகு அவளை பார்த்து "மேடத்துக்கு அந்த டிரஸ் சூப்பரா இருந்தது. அப்படியே அசந்து போயிட்டேன்…. ரூம் மாத்தி வந்துட்டேனோனு கூட நினைச்சேன்…. அப்படியே அள்ளுது போங்க… ஆனா போடமாட்டீங்கனு இல்ல நினைச்சேன்…. பார்த்தா கண்ணுக்கு குளிர்ச்சியா மேடம் அப்படியே தேவதை மாதிரி நிக்குறீங்க…. நான் அப்படியே மெர்சல் ஆகிட்டேன்" என கலாட்டாவாய் அவளை வம்பிழுத்தான்…

"ம்ம்ம் என்னவோ இன்னைக்கு என் மனசு உங்களை ரொம்பத் தேடிச்சு பாவா… நீங்க ஊருக்கு வந்தும் என்கிட்டே பேசவே இல்லையா….? ஏதோ மாதிரி மனசு தவிச்சது, நானே கிளம்பி வந்துடலாம்னு கூட நினைச்சேன், ஆனா நீங்க என்ன நினைப்பீங்கலோனு பயமா இருந்தது… அதோட ஒரு மனசு சொல்லிச்சு நீங்க என் பக்கத்துல நெருங்கி வரமாதிரி…. இந்தக் கஷ்டமெல்லாம் காத்தா பறந்துடப் போகுதுன்னு….. அதான் இந்த டிரஸ் எடுத்து போட்டேன்.."

"ஷானு கூட சொன்னா நீங்க ரொம்பத் தேடி தேடி எனக்காக எடுத்ததுன்னு, அம்மாக்கூட இதெல்லாம் போடதேனு சொன்னாங்க, அவங்ககிட்ட சரின்னு சொல்லிட்டேன், இன்னைக்கும் போடுறதுக்கு ரொம்ப யோசிச்சேன், ஆனா ரூமுக்குள்ளயே தானே இருப்போம்…. அப்புறம் என்னனு நினைச்சு எடுத்துப் போட்டுட்டேன். ஸ்கர்ட் ஓகே……….. ஆனா அந்த ஷர்ட் எனக்கு பத்தல,… கையும் இல்ல, என்ன டிரஸ் எடுக்குறீங்களோ…. இனிமேல் இப்படி எடுக்காதீங்க…." என்று அவனிடம் தன் மனதை கூறினாள்.

"ஹாஹா…. நிலாமா…. சான்ஸே இல்லடா…. உன்னைமாதிரி ஒரு ஆள் தேடினாலும் கிடைக்காது… ஹாஹா…"

புது மலர்கள் பூத்திடும் வேளை - மதுவதனி

# புது மலர்கள் பூத்திடும் வேளை...!

"இப்போ எதுக்கு இந்த வீரப்பா கெட்டப்பு.... எதுக்கு இப்படி ஒரு சிரிப்பு..."

"இல்லடா அந்த ஷர்ட் இன்னும் குட்டையா..." அவளது வயிற்றுக்கு மேலே ஒரு இடத்தைக்காட்டி "இவ்ளோதான் இருக்கும், உனக்கு கொஞ்சம் பெருசா இருக்கு, நானே பெருசா எடுத்துட்டேனேனு கவலைப்பட்டுட்டு இருக்கேன், நீ என்னடானா சின்னதா இருக்கு, பத்தலைன்னு சொல்லிட்டு இருக்க... உன்னை என்ன பண்றது" என்று மீண்டும் சிரிக்க....

ஹான் என்று வாய்பிளந்தவள், பின் அவன் தலையில் நங்கென்று கொட்டிவிட்டு "நீங்க இப்படியெல்லாம் பேசுவீங்களா.... கொஞ்சம் கூட கூச்சமே இல்லையா... போங்க நான் போறேன்..." என்று எழ, அவளது இடையைப்பிடித்து தன்மடியில் அமர்த்தியவன் "இப்படியெல்லாம் பேசலைன்னாத்தான் தப்பு கண்ணம்மா... உன் பாவா தப்பே பண்ணமாட்டான் தெரியாதா..?" என்று அவனது சில்மிசங்களை ஆரம்பிக்கவும், அதில் நெளிந்துகொண்டே அவன் மீது கொண்ட மயக்கத்தில் சாய்ந்து அவன் கழுத்தில் முகத்தை புதைத்துக் கொண்டாள். தன் சீண்டலை நிறுத்திய சரணும் அவளது மோனத்தில் பங்கெடுப்பது போல அந்த நிமிடத்தை ரசித்து தன் மனப்பெட்டகத்தில் சேகரிக்க ஆரம்பித்தான்..

**வேளை தொடரும்........**

புதுமலர்கள் பூத்திடும் வேளை - மதுவதனி

# புது மலர்கள் பூத்திடும் வேளை...!

**வேளை - 32-3**

மனைவியுடானான தனிமை, அவளது முகத்தில் தெரிந்த மகிழ்ச்சி, நிம்மதி.... இதையெல்லாம் பார்த்தவன் தேவையில்லாமல் பேசி இன்றைய இனிமையை கெடுக்க வேண்டாம் என்று நினைத்துக் கொண்டான். அதன் பொருட்டு மனைவியின் மடியில் படுத்துக்கொண்டு அவளது ஒரு கையை எடுத்து அவன் தலையில் வைத்துவிட்டு, மறுகையை தனது இரண்டு கைகளுக்குள் பொக்கிசமாய் மூடிக்கொண்டான்.

"நிலா நாளைக்கு நாம கிளம்பலாம்" என்றான் கண்களை மூடிக்கொண்டே....

இதை அவள் ஓரளவுக்கு எதிர்பார்த்தால்தான், ஆனால் நாளைக்கே என்றால்..... அதனால் கணவனிடம் குனிந்து "போகலாம் பாவா... ஆனால் நாளைக்கேவா.... ஒரு ரெண்டுநாள் கழிச்சு போகலாமா... காசி அங்கிள்கிட்ட எல்லாமே செட்டில் பண்ணிட்டேன். அங்கே ஒரு வேலையும் இல்லை. ஆனால் உடனே கிளம்பினா அம்மா ரொம்ப வருத்தப்படுவாங்க..... நீங்களும் இங்கே வந்து தங்கினதே இல்லையே.... சோ ஒரு டூ டேஸ் மட்டும் இருந்துட்டுப் போகலாம். ப்ளீஸ் பாவா....!" என்றாள் நெற்றியில் முத்தமிட்டபடி.

"நீ சொன்னா நான் சரியென்று சொல்லப்போறேன்...... இதுக்கு ஏன்மா ப்ளீஸ் போடுற...." என்று எழுந்தவன் அவளைத் தன் தோளில் சாய்த்து அவள் தலையில் தன் கன்னத்தை பதித்தவன் "என்மேல் வச்சிருக்க நம்பிக்கையை மட்டும் விட்டுடாதே, இந்த ஜென்மத்தில் நான்தான் உனக்கு, நீதான் எனக்கு, இடையில் ஏதேதோ பிரச்சினை இப்போ எதுவும் என்னால் சொல்ல முடியாது, ஆனால் சொல்லாமலும் இருக்க மாட்டேன்... கண்டிப்பா சொல்வேன்... அதுவரைக்கும் நீ கொஞ்சம் பொறுமையா இருக்கணும், எனக்காக.... ப்ளீஸ்" என்றான் கரகரத்த குரலில்..

"என்ன பாவா... இப்படி எல்லாம் பேசறீங்க... எனக்கு உங்கமேல முழுநம்பிக்கை இருக்கு அது எப்பவும் மாறாது.."

புது மலர்கள் பூத்திடும் வேளை - மதுவதனி

# புது மலர்கள் பூத்திடும் வேளை…!

இப்படியே இவர்கள் பேசி, அவன் சிங்கப்பூரில் நடந்ததையெல்லாம் சொல்லிக் கொண்டிருக்க… இடையிடையே 'ம்ம்ம் … ம்ம்ம் ' போட்டுக்கொண்டிருந்தவளின் சத்தம் நின்று போனதும் என்னவென்று பார்க்க ஆழ்ந்த உறக்கத்தில் இருந்தாள் நிலா… அவள் செய்கையைப் பார்த்து சிரித்தவன் "சங்கு சத்தம் அவ்ளோ பெருசாவா கேட்டுச்சு… ஹாஹா…. இவ தெரிஞ்சி செயறால, இல்ல தெரியாம செயறால…. சரண் உனக்கு பல்பு கொடுக்குற ஒரே ஆள் இவ மட்டும் தாண்டா…." என்று நினைத்ததும் உதடுகள் அவனையுமறியாமல் புன்னைகைத்தன….

களங்கமில்லா அவளின் முகத்தைப் பார்த்தவன் அவளைத் தன் மடியில் சாய்த்து வானில் இருக்கும் அந்த நிலவுக்கும், தன் மடியில் இருக்கும் இந்த நிலவுக்கும் எந்த ஒரு வித்தியாசமும் இல்லை, என்று நினைத்தான். எந்த வித சலனமும் இல்லாமல் அமைதியாய் உறங்கி கொண்டிருந்தாள். அவள் கூறியதில் இருந்து அவள் தன்னை எந்தளவுக்கு தேடியிருக்கிறாள், எதிர்பார்த்திருக்கிறாள் என்று புரிந்தது.

இவள் விஷயத்தில் மட்டும்தான் நான் இத்தனை நிதானமாய் நடந்து கொண்டுருக்கிறேன். இந்த நிதானம் தவறோ…. ஆனால் என்னால் வேறு என்ன செய்திருக்க முடியும், மாமா தலையிடாமல் இருந்திருந்தால் அந்த மீனாவை அவன் கையாண்டிருக்கும் முறையே வேறு. ஆனால் இதில் அவர் தலையிட்டு அதனால் அவர்களின் வாழ்க்கையும் மாட்டிக் கொள்ள, ஒரு தம்பியா அக்காவின் வாழ்க்கையை எப்படி வீணாக்க முடியும், இப்போதும் இவளிடம் உண்மையை சொல்லவில்லை, அப்படியே சொல்லியிருந்தாலும் என்னுடைய முடிவைத்தான் அவளும் எடுத்திருப்பாள், அவள் தான் சொன்னாளே உங்களுக்கு எப்போது சொல்ல தோணுதோ அப்போது சொல்லுங்கள் என்று….

அவள் சொன்னாள் என்பதற்காக நீண்ட காலம் மறைக்க முடியாது. கூடிய சீக்கிரம் இதற்கான ஒரு சந்தர்ப்பதை உருவாக்கி அவளிடம் கூறிவிடவேண்டும் என்று நினைத்தவன், காற்று குளிர் கலந்து வீச, அதில் அவள் இன்னும் அவனுள் புதைய, அவளைத் தன் இரு கைகளாலும் அள்ளிக் கொண்டு உள்ளே சென்று கட்டிலில் படுக்க வைத்துவிட்டு, தானும் அருகில் படுத்து தான் நீண்ட நாட்களுக்கு முன் தொலைத்த தன் நிம்மதியான உறக்கத்தை தொடர்ந்தான்.

புது மலர்கள் பூத்திடும் வேளை மதுவதனி

# புது மலர்கள் பூத்திடும் வேளை…!

அவர்களின் விடியல் அழகாய் பூத்திட, அடுத்த இரண்டு நாட்கள் சென்றதே தெரியவில்லை இருவருக்கும்………. இதுவரை கண்டிராத சொர்க்ககடலில் மூழ்கி முத்தெடுத்தனர் என்றே கூறவேண்டும்… சொர்க்கத்தில் கூட இத்தனை இனிமையான சந்தோசங்கள் கிடைக்குமா என்று அவர்களுக்கு சந்தேகம் கூட எழுந்தது…… இவர்களைப் பற்றித் தெரிந்த யாரும் நம்ப மாட்டார்கள் இரண்டு ஆண்டுகள் இவர்கள் பிரிந்து இருந்தார்களா என்று… அத்தனை நெருக்கம் இருவருக்குள்ளும்….

அந்த அளவுக்கு இருவரிடமும் நெருக்கமும் அன்னியோன்யமும் கூடியிருந்தது, இதற்கிடையில் சிபி-ஷானவி… ரவி-ஆதிரா இவர்களும் போன் செய்து அவர்களை கலாய்க்காமல் விடவில்லை. அவர்களது பேச்சில் நிலாவின் முகம் சிவந்து அவனுடனே புதைந்து கொள்பவளைப் பார்க்க அவனுக்கு மிகவும் பிடிக்கும்….

மருமகனின் திடீர் வருகை, அதைத் தொடர்ந்து மகளின் முகத்தில் தெரிந்த வெட்கம் கலந்த மலர்ச்சி, ஒரு நொடி கூட விடாமல் மகளையே தொடரும் மாப்பிள்ளையின் பார்வை இதெல்லாம் பார்த்த விஜயாவின் மனம் சந்தோசத்தில் அமைதியடைந்தது. நிலாவைப் பற்றிய கவலை முற்றிலும் நீங்கியது.

விஜயாவின் கூற்றுப்படி முதலில் வீரபாண்டி ஸ்ரீ கௌமாரியம்மனை தரிசித்தவர்கள், அதன் பிறகு சுருளி அருவி… லோயர் கேம்ப், கும்பக்கரை அருவி என்று அந்தநாள் முழுவதும் சுற்றிவிட்டு, அடுத்தநாள் வைகை அணை, மீனாட்சி அம்மன் கோவில் என்று ஒவ்வொரு இடத்தையும் ஒரு நிமிடம் கூட தவறவிடாமல் சந்தோசமாக சிறகடித்து சுற்றி வந்தனர்.

மூன்றாம் நாள் அவர்களின் திருச்சி பயணம் ஆரம்பித்தது. நிலாவும் விஜயாவும் ஒரு பேச்சற்ற மௌனத்தில் பிரிந்தனர். அன்று காசிராமனின் குடும்பம் முழுவதும் நிலாவை வழியனுப்ப வந்துவிட, விஜயாவுக்கு தனிமை பெரிதாய் தெரியவில்லை… தெரிந்தாலும் மகளின் பொருட்டு வெளிக்காட்டவில்லை. நிலாவிற்கும் கணவனோடு செல்கிறோம் என்ற சந்தோசம் ஒருபுறம் என்றாலும், உடல்நலம் சரியில்லாதவரை விட்டுச் செல்வது அவளுக்கு குற்ற உணர்வைக் கொடுத்து பேசவிடாமல் செய்தது.

புது மலர்கள் பூத்திடும் வேளை - மதுவதனி

அதனால் அமைதியாக விடைபெற்று சரணுடனான தன் பயணத்தை தொடர்ந்தாள். காரில் ஏறியதில் இருந்து அமைதியாக வருபவளை என்ன சொல்லித் தேற்றுவது என்றுத் தெரியாமல் அவளை இழுத்து தன்மேல் சாய்த்துக் கொண்டு காரை ஓட்ட ஆரம்பித்தான். இரண்டு நாட்களின் அலைச்சல், உறக்கமின்மை, மனதின் சோர்வு எல்லாம் சேர்ந்து அவளை உறக்கத்தின் பிடியில் தள்ளியது… அவன்மேல் சாய்ந்து நன்றாக உறங்க ஆரம்பித்தாள்.

கார் கரூரை அடையும்போது அவனது போன் அடிக்க, அதை எடுத்துப்பார்த்தவன் அது அவனது பி.எவிடமிருந்து என்பதால் காரை ஓரமாக நிறுத்திவிட்டு ஜன்னலை லேசாக திறந்து அவனிடம் பேச ஆரம்பித்தான். அவன் பேசி முடித்ததும் சரணின் முகம் யோசனையில் சுருங்க, பின் ஒரு முடிவுடன் அவனிடம் சம்மதம் சொல்லிவிட்டு நிலாவைப் பார்த்தான். அவளுக்கும் கடந்துபோன வாகனங்களில் இரைச்சலிலும், சரணின் குரலிலும் விழிப்புத் தட்டிவிட நிமிர்ந்து அவனைப் பார்த்தாள்.

அவள் விழித்ததை உணர்ந்தவன் அவளிடம் “நிலா…. நாம போனதும் உடனே பெங்களூர் போகணும்…. நான் இப்போ முடிச்சிட்டு வந்த ப்ராஜெக்ட் சம்மந்தமா ஏதோ பிரச்சினையாம்… அதுக்கு என்னை வர சொல்லிருக்காங்க…. நாளைக்கு போகணும்… இந்த ப்ராஜெக்ட் ஆரம்பிச்சதுல இருந்து ஒரே ப்ராப்ளமா இருக்கு, சீக்கிரம் முடிச்சு கொடுக்கணும் என்று பேசியவன் அவளைப் பார்க்க, அவளோ அதிர்ந்து போய் மீண்டும் ஒரு பிரிவா என்று யோசிக்க ஆரம்பித்திருந்தாள்.

அவளின் எண்ண ஓட்டத்தை துல்லியமாக கணித்தவன் அவளது தலையில் முட்டி “ஏன் லூசுப் பொண்டாட்டி.. நான் முன்னாடி சொன்னது காதுல விழுகலையா..? ஹ்ம்ம்…. ரெண்டு பேரும் தான் போறோம்… அங்கே தான் உனக்கு போரடிக்காம இருக்க…… நம்ம சிஷ்யபுள்ளகள் இருக்காங்களே… அப்புறம் என்ன….? வீட்டுக்கு போயிட்டு அக்காகிட்ட பேசிட்டு…. நாம கிளம்பலாம்… ஓகேவா…. இனி கொஞ்சம் சிரிக்கலாமே…” என்று கிண்டல் செய்யவும் அதில் தெளிந்தவள் அவனிடம் ஒரு புன்னகையை செலுத்திவிட்டு… மீண்டும் அவன் மீது சாய்ந்து கொண்டாள் நிம்மதியாக…..!!!! அவனும் ஒரு மனதில் நிலைத்த நிம்மதியுடன் வீடு நோக்கி காரை செலுத்த ஆரம்பித்தான்.

புது மலர்கள் பூத்திடும் வேளை - மதுவதனி

நினைத்ததெல்லாம் நடந்து விடுமா என்ன..? இவர்களுக்கு முன் விதி தன் ஆட்டத்தை மீண்டும் ஆரம்பித்ததை அறியாமல் இனிமையான பயணத்தை மேற்கொண்டன அந்த அன்பு நெஞ்சம் கொண்ட இரண்டும்.....

**வேளை தொடரும்........**

புதுமலர்கள் பூத்திடும் வேளை - மதுவதனி

# புது மலர்கள் பூத்திடும் வேளை...!




வேளை - 33-1

**************************************************************************************************

நீங்காத பாரம் என் நெஞ்சோடுதான்
நான் தேடும் சுமைதாங்கி நீயல்லவா

நான் வாடும் நேரம் உன் மார்போடுதான்
நீ என்னைத் தாலாட்டும் தாய் அல்லவா

ஏதோ ஏதோ ஆனந்த ராகம்
உன்னால் தானே உண்டானது

கால்போன பாதைகள் நான் போனபோது
கைசேர்த்து நீதானே மெய் சேர்த்த மாது

**************************************************************************************************

# புது மலர்கள் பூத்திடும் வேளை…!

திருச்சி வந்த நிலாவிற்கு தடபுடலான வரவேற்பு….. சரணே இதை எதிர்பார்க்கவில்லை என்றால் நிலவோ முற்றிலும் எதிர்பார்க்கவில்லை, ஆனந்த அதிர்ச்சியில் ஆழ்ந்து போயினர் இருவரும். சரண் காரை விட்டிறங்கியதுமே அவனின் படைத்தளபதிகள் இருவரும் அவனை சூழ்ந்து வாழ்த்து சொல்ல, இந்த ஏற்பாட்டிற்க்கு யாரு காரணம் என்று புரிந்துபோனது அவர்களுக்கு. அவர்களை மகிழ்ச்சியுடன் அணைத்தவன் நிலாவை இறங்குமாறு சைகை செய்ய, இறங்கியவளை ஷானவி வந்து கட்டிக்கொள்ள, நால்வரும் உள்ளே சென்றனர்.

அப்போது ஆரத்தியுடன் வந்த அகிலா சரண் நிலாவை ஜோடியாக நிறுத்தி, ஆரத்தி எடுத்து உள்ளே அழைத்தாள். நிலா நம்பமாட்டாமல் ஒவ்வொன்றையும் பார்க்க, அகிலாவோ, அடுத்து அவளை யோசிக்கவிடாமல் குளித்துவிட்டு உடனே வந்து விளக்கேற்றுமாறு கூற, அவளும் துரிதமாக செயல்பட்டாள். அடுத்த பத்து நிமிடத்தில் குளித்து கீழே வந்தவளை விளக்கேற்றி, சமையலறையில் பாலைக் காய்ச்சி எல்லாருக்கும் காபி கொடுக்க சொன்னாள்.

சரணோ அசதியில் மேலே சென்று உறங்கிவிட, அவர்களின் உறவினர்கள் அனைவரும் வந்திருக்க, வீடு திருமணக்களை கட்டியது. சிபி-ஷானவியின் குறும்பு, கிண்டல், பெரியவர்களின் அன்பு, அகிலாவின் அதட்டலான அனுசரிப்பு, இதெல்லாம் நிலாவிற்கு மிகுந்த சந்தோசத்தைக் கொடுத்தது.

இந்த வீடு ஒன்றும் அவளுக்கு புதிதில்லை…. திருமணமாகி இரண்டாண்டுகள் ஆகிருந்தாலும், இடையிலே அடிக்கடி இங்கு வந்து போயிருந்தாலும், என்னவோ இன்றுதான் திருமணமாகி முதன்முறையாக கணவனுடன் தன் புகுந்த வீட்டிற்கு வந்தது போல், ஒரு உணர்வு ஏற்பட்டது.

தனிமையில் அகிலாவும் அதையேக் கூறினாள். “பழசு எதையும் மனசுல வச்சுக்காத தேனு, இப்போதான் கல்யாணம் ஆகிருக்குனு நினைச்சுக்கோ, சரண் கூட நீ சந்தோசமா வாழனும், அது தான் எனக்கும் நிம்மதி, கடந்துபோன எதையும் நினைச்சு மனசைக் குழப்பிக்காதே, நான் தான் நம்ம சொந்தக்காரங்களை எல்லாம் வரசொன்னேன். உங்க கல்யாணத்துக்கு அப்புறம் யாரும் உன்னைப் பார்க்கலையே அதான் ஒரு விருந்து மாதிரி கொடுத்து எல்லாருக்கும் உன்னை அறிமுகப்படுத்தலாம்னு நினைச்சு செஞ்சேன்.”

“இது முன்னாடியே செஞ்சிருக்கணும்……. அப்போதான் உனக்கே தெரியுமே….. எவ்ளோ பிரச்சினை என்று….. இப்போதான் எல்லாம் சரியாயிடுச்சே. அதனால் இனியும் காலம் தாமதிக்காம செய்துடலாம்னு இந்த ஏற்பாட்டை பண்ணிட்டேன். சிபிக்கிட்ட சொன்னதும் உடனே கிளம்பி வந்துடுச்சுங்க ரெண்டும்.” என்றாள் சிரித்துக்கொண்டே…..

“அய்யோ அண்ணி நீங்க இதெல்லாம் சொல்லனுமா..? நான் புரிஞ்சிக்கிட்டேன். நீங்க வருத்தப்படாதீங்க…. எனக்கும் வருத்தமில்ல…. சொல்லப்போனா நான்தான் உங்க எல்லாருக்கும் நன்றி சொல்லணும்…. ரொம்ப நன்றி அண்ணி….” என்றாள் நிலா நா தழுதழுக்க…

“போதும் தேனு… நீ என்னைத் தப்பா நினைக்காமல் இருந்தாலே போதும்… நன்றியெல்லாம் சொல்லி பெரியாளாக்காதே… சரி நீ போய் தம்பியை எழுப்பிக் கூட்டிட்டு வா… ஏதோ பேசணும்னு சொன்னான்.” என்றதும் “ம்ம்ம் சரிங்கண்ணி…” என அவளிடம் சொல்லிவிட்டு சரணைக் காண சென்றாள்.

ஆழ்ந்த உறக்கத்தில் இருந்தவனை ஒருவழியாக எழுப்பி, கணவன்-மனைவிக்கே உண்டான சீண்டலும், சிரிப்பும், தீண்டலுமாய் சில நிமிடங்கள் கழித்து இருவரும் கீழே வந்தனர்.

அதன்பிறகு வந்த உறவினர்கள் எல்லாம் அவனை பிடித்துக்கொள்ள…. நிலா அகிலாவோடு சேர்ந்து சமையல் வேலைகளை தொடர்ந்தாள். சிபியும் ஷானவியும் வந்தவர்களை விழுந்து விழுந்து கவனிப்பதும், திடீரென குழந்தைகளோடு குழந்தையாக ஷானவி செய்யும் குறும்பை அதட்டி உருட்டி, சிபி அவளை மீண்டும் வேலை வாங்குவதும் என்று அன்றைய தினமே சந்தோஷ தருணங்களாக மாறிப்போயிருந்தது. நிலாவுக்கு முகத்தில் மகிழ்ச்சியைத் தவிர வேறொன்றுமில்லை. அத்தனை சந்தோசமாய் அவள் இருந்து வெகு வருடங்கள் ஆகியிருந்தன.

இதற்கிடையில் இவளை வம்பிழுக்கும் ஆட்கள் இல்லாமலும் இல்லை. அகிலாவின் மாமியார் நிலாவைப் பார்த்து ‘தன்மகள் இருக்க வேண்டிய இடம், இப்போ யார் யாரோ இருக்காங்க’ என்று ஜாடையாகப் பேசுவதும், அவள் என்ன பதில் சொல்வது என்று தெரியாமல் முழிக்கும்போது ஷானவி அவர்களை எதிர்த்துப் பேசி நிலாவைக் காப்பாற்றுவதும் நடக்கத்தான் செய்தது. ஆனால் அதெல்லாம் அவள் மனதில் பதியவில்லை. மகிழ்ச்சி…..மகிழ்ச்சி மட்டுமே அவளிடம் கரைபுரண்டது.

புது மலர்கள் பூத்திடும் வேளை - மதுவதனி

அனைவரையும் அமரவைத்து மருமகளாக அவளையே எல்லாருக்கும் பரிமாறவைக்க வந்தவர்களுக்கு எல்லாம் உச்சி குளிர்ந்து போனது. அதில் ஒரு வயதான பாட்டி அவளைத் தன்னருகே அமரவைத்துக் கொண்டு அவளிடம் பேச்சுக் கொடுத்துக்கொண்டே சாப்பிட்டு முடித்தார். அதன்பிறகு குடும்பத்தினர் மட்டும் சாப்பிட, அப்போதுதான் தன் மாமா இல்லாததை உணர்ந்து எங்கே எனக் கேட்டான் சரண்.

“அவரும் மீனாவும் ஏற்காடு போயிருக்காங்க… பசங்களுக்கு ஒரு ஐ.டி கார்ட் கொடுக்கிறாங்க… அதே மாதிரி பேரன்ட்ஸ்க்கும் கொடுக்குறாங்க, அதை வாங்க போயிருக்கார்.. அவர் கூடவே இந்த மீனாவும் போயிருக்கா…. என்ன வம்பை இழுத்துட்டு வருவாளோ… சரி அதை விடு… நீ ஏதோ பேசணும்னு சொன்ன..? என்ன பேசணும்..?”- அகிலா…

“பேசனும்தான்… அது இப்படி நடுவீட்ல உட்கார்ந்து இல்லை…. நம்ம ஹெஸ்ட் ரூம்ல போய் பேசலாம்…”- சரண்

“சரி நீங்க சாப்பிட்டு போங்க… நாங்க இதை ஒதுக்கி வச்சிட்டு வரோம்..” - அகிலா…

“ம்மா சரிக்கா…” - என்ற சரண் சாப்பிட்டு முடித்து சிபியுடன் அந்த அறைக்கு போக…. சாப்பிட்ட பாத்திரங்களை ஒதுக்கி விட்டு நிலாவும் அகிலாவும் அங்கு வந்தனர்.

“என்ன பேசணும் சரண்… வீட்ல இத்தனை விருந்தாளிங்க இருக்கும்போது அப்படி என்ன அவசரம் சொல்லு…. என்ன விஷயம்…” என்று தம்பியிடம் விசாரிக்க… அவன் தன் பெங்களூர் பயணத்தைக் கூறி நிலாவையும் அழைத்துச் செல்லும் விசயத்தையும் தெரிவித்தான்.

அதைக்கேட்டதும் ஒன்றும் பேசாமல் அமைதியாக இருந்தாள் அகிலா… நிலா இதில் எதிலும் கலந்து கொள்ளவில்லை… அமைதியாக ஓரிடத்தில் அமர்ந்திருந்தாள். அகிலா ஒன்றும் பேசாததை பார்த்த சரண் “என்னக்கா ஒன்னும் சொல்லாம இருக்கீங்க..” என்றான்.

புதுமலர்கள் பூத்திடும் வேளை - மதுவதனி

# புது மலர்கள் பூத்திடும் வேளை…!

“என்ன சொல்லனும்… இப்போ இங்கே என்ன என்ன பிரச்சினை போயிட்டுருக்குத் தெரியுமா…? அதை சமாளிக்கவே எத்தனை நாளாகுமோ தெரியல… இப்போ புதுசா ஒரு பிரச்சினை, பேசாம இந்த ட்ரிப்பை கேன்சல் பண்ணிடு அதுதான் நல்லது…”

“என்ன பிரச்சினை, என்ன நடந்தது… எதுவும் சொல்லாம நீங்க இப்படி சொன்னா நான் என்ன நினைக்கட்டும்… என்ன நடந்தது சொல்லுங்க…”

“இனி என்ன நடக்கனும்… அன்னைக்கே உன்கிட்ட அவ்ளோ சொன்னேன்… தேனுவையும் கூட அழைச்சிட்டு போ என்று கேட்கவேயில்லை. முன்னமே இங்கே எல்லாரும் கேட்டாங்க…. ஏன் திருச்சியில கல்யாணம் வைக்கல… என்ன இத்தனை நாளாகியும் இங்க கூட்டிட்டு வராம இருக்கீங்க… பிரிஞ்சிட்டாங்களா… ஒதுக்கி வச்சுட்டீங்களா… என்று எத்தனைக் கேள்வி…. இப்படி காரணமே இல்லாம பேசிட்டு இருந்தவங்களுக்கு அவல் கிடைச்சமாதிரி, என்னோட மாமியார் போற விசேசத்துக்கு எல்லாம் நல்லது பண்றாங்களோ இல்லையோ…”

“நீயும் தேனுவும் பிரிஞ்சிட்டீங்க… ரெண்டு பேருக்கும் ஏதோ பிரச்சினை…. அதான் சரண் இந்தியா வந்து, இன்னும் போய் கூப்பிட்டு வராம இருக்கான்… அப்படின்னு இல்லாத விசயத்தை எல்லார் காதுலயும் ஓதி விட்டுட்டு வந்துருக்காங்க…. அது எப்படியோ நம்ம ஆத்தாக் காதுல விழுந்து, ஆத்தா எனக்கு போன் பண்ணி பேசினாங்க… உன்னோட மாமியார் பேசினது உண்மையா என்று கேட்டாங்க… நான் அதெல்லாம் இல்லை, அவங்க பொண்ணை தம்பிக்கு கட்டிவைக்கலன்னு இப்படித்தான் சொல்லிட்டு திரியிறாங்கனு சொன்னேன்.”

“அப்போதான் அவங்க இந்த விருந்தை வச்சு எல்லார் வாயையும் அடைச்சிடலாம்னு சொல்லி ஏற்பாடு பண்ண சொன்னாங்க…. ஆத்தா சொன்ன மாதிரிதான் எல்லாம் செஞ்சிருக்கேன்… இப்போதான் நம்ம சொந்தபந்தங்கள் அமைதியா இருக்காங்க, நீ மறுபடியும் இப்படி சொன்னா என்ன செய்றது…”

“அக்கா நீங்களே இப்படி சொன்னா நான் என்ன செய்வது…. ஜஸ்ட் ஒன் மந்த்தான்…. எல்லாம் முடிச்சிட்டு வந்துடுவேன்… மத்தவங்களுக்காக நான் என் வேலையை விட முடியுமா..? இது பிஸினஸ்க்கா… இதை விட்டுட்டேன் பெரிய லாசாகிடும்….

புது மலர்கள் பூத்திடும் வேளை மதுவதனி

இதுல நான் மட்டும் சம்மந்தப்படல…. ரவியும் ஷேர் போட்டுருக்கான்.. உப்புசப்பில்லாத விசயத்துக்கு எல்லாம் இதை நான் விட முடியாதுக்கா… நீங்களே பாத்து பண்ணுங்க… இன்னைக்கு ஈவ்னிங் ரெண்டு பேரும் போகணும்..”

“ஏண்டா… இவ்ளோ பிடிவாதம், கொஞ்சம் பொறுமையா யோசிச்சுப்பாரு… நான் சொல்ல வறது புரியும்…”

“இதுக்கு மேல பேச இதுல ஒன்னுமில்ல… என்ன செய்யணுமோ செய்ங்க… நான் டிக்கட் போடுறேன்.”

“என்ன விளையாடுறியா..? அதெல்லாம் சரிவராது… நீ ரவிக்கிட்ட பேசு… அவனை போகச்சொல்லு… உன்னோட கம்பெனியில் அவனும் பார்ட்னர் தானே அவன் போகட்டும்…. நீ போககூடாது… அவ்ளோதான்…”

“அக்கா என்ன பேசுறீங்க…. நீங்க சொல்ற எதையும் என்னால செய்ய முடியாது… கண்டிப்பா போயே ஆகனும் அவ்ளோதான்… ரவிக்கு இதைப்பத்தி எல்லாம் தெரிஞ்சாலும், இப்போ அவனால் டீல் பண்ண முடியாது… நான்தான் அதை புல் அன் புல் ஹான்டில் பண்ணிருக்கேன்… நான்தான் போயாகனும்… வீனா ஏதும் பிரச்சினை பண்ணாமா விடுங்க… ஒன் மந்த் தான்… முடிஞ்சதும் நாங்க வந்துடுவோம் அப்புறம் என்ன அக்கா…”

“இதோ பாரு சரண் இருக்குற பிரச்சினை பத்தாதுன்னு நீயும் புது பிரச்சினை கிளப்பாதே… நான் சொல்றதை புரிஞ்சிக்க ட்ரை பண்ணு…”

“என்னக்கா அதான் அண்ணா அவ்ளோ சொல்றாங்களே… நீங்களும் கொஞ்சம் யோசீங்களேன்…. இரண்டு வருஷம் பிரிஞ்சு இப்போதான் சேர்ந்து இருக்காங்க, அதையும் கொஞ்சம் புரிஞ்சுகோங்க….” என்றான் அதுவரை உடன்பிறந்தவர்கள் இருவரின் பேச்சையும் கேட்ட சிபி…

புதுமலர்கள் பூத்திடும் வேளை - மதுவதனி

"உனக்கு என்ன தெரியும்....... நீ பேசாத... ஏற்கனவே எங்க மாமியாரும், மாமனாரும் சேர்ந்து ஊருக்குள்ள கிளப்பிவிட்ட பிரச்சினையை எப்படி தீர்குரதுன்னு தெரியாம இந்த விருந்து ஏற்பாடு பண்ணி அவங்க வாயை அடைச்சிருக்கேன்... இது தெரிஞ்சா...... இந்த அகிலா வந்து உக்காந்துட்டு, வீட்டுக்கு வந்த மருமகளை வாழ விடாமா பண்றான்னு சொல்லவா.... அந்த வேலையே வேண்டாம்..."

"அக்கா ப்ளீஸ்.... நாங்க பிரிஞ்சு இருக்கலையே... ஒன்னாதான இருக்கப்போறோம்... அப்புறம் என்ன பிரச்சினை...." என்று உருக்கமாக மன்றாடிய தம்பியைப் பார்க்க பாவமாக இருந்தது அகிலாவிற்கு.... இப்போது என்ன செய்வது என்று யோசித்தவள் "சரி சரண்.... நான் நம்ம ஆத்தாவைக் கூப்பிடுறேன் அவங்ககிட்ட ஒரு வார்த்தைக் கேட்போம்.... சும்மாவே நீங்க யாரும் மதிக்கிறது இல்ல... அப்புறம் எப்படி மத்தவங்க மதிப்பாங்க.... நான் மட்டும் அங்கே இருந்திருந்தா உன் மாமியார் இப்படி பேசியிருப்பாளானு கேட்டு சத்தம் போட்டாங்க... இந்த நேரத்துல அவங்ககிட்ட கேட்டா ஏதும் நல்லவிதமான ஐடியா தருவாங்க.. என்ன சொல்ற.."

"அப்போ சரிக்கா... நானும் ஆத்தாக்கிட்ட சரியாவே பேசல... ஆத்தாக்கிட்டயே கேட்போம்" என சரண் கூறவும் சிபியை அழைத்துக்கொண்டு வெளியேறினாள் அகிலா...

"ம்ம் சரிடா... நான் போய் அழைச்சிட்டு வரேன்.... நீங்க இருங்க... சிபி நீ வா... ஷானு எங்கடா போனா.... ஆளையே காணோம்..." என்றபடியே வெளியேற....

"அக்கா அவ புல் கட்டு கட்டிட்டு நல்லா தூங்குறா.... மதியம் தூங்கலேனா சாமி குத்தம் ஆயிடும்னு டயலாக் விட்டுட்டு அவ வீட்டுக்கு போயிருக்கா... அங்கபோய் ஆன்டிய என்ன பண்றாளோ... என்று அக்காவிற்கு பதில் சொல்லிக்கொண்டே அவள் பின்னே சென்றான் சிபி...

அவர்கள் இருவரும் வெளியேறவும் கணவனிடம் வந்த நிலா... "ஏன் பாவா இவ்வளவு பிடிவாதம்... அண்ணி சொல்றமாதிரி கொஞ்சம் யோசிக்கலாம்தான, அவங்க சொல்றதுலயும் உண்மை இருக்கே... தப்பு எல்லாம் நம்ம ரெண்டு பேர் மேலயும் தான இருக்கு... இப்போ அண்ணியை கோவிச்சு என்ன ஆகப்போகுது.... அது சரி அந்த ஆத்தா யாரு... நல்லா பேசினாங்க எங்கிட்ட...." என்றாள் நிலா..

புது மலர்கள் பூத்திடும் வேளை - மதுவதனி

"நீயும் புரிஞ்சிக்காம பேசாத… இனியும் நாம தனித்தனியா இருக்க கூடாது… அதுவும் என்னால் இருக்கவே முடியாது…" என்று கண்களை சிமிட்டி அவளிடம் ஒரு முறைப்பை பரிசாக பெற்றுக்கொண்டு அந்த ஆத்தாவைப் பற்றிக் கூறினான்.

"ஆத்தா அப்பாவோட சித்தி… எங்க தாத்தாவோட தம்பி மனைவி… கல்யாணம் ஆகி ரொம்ப நாளா குழந்தையில்லாம இருந்ததுனால எங்க தாத்தாவும், பாட்டியும் அப்பாவை ஆத்தாக்கிட்ட வளர்க்க கொடுத்துட்டாங்களாம். அப்பாவை அவங்கதான் வளர்த்ததா சொன்னாங்க. அவங்க என்றால் ரொம்ப இஷ்டம் எங்களுக்கு… அந்த தாத்தாதான் மிலிட்டரியில் இருந்தது…அவரைப் பார்த்துதான் அப்பாவும் மிலிட்டரியில் சேர்ந்ததா சொல்லுவாங்க ஆத்தா… அம்மாவும் ஆத்தாவோட சொந்தம் தான். அதனாலையே அப்பா மறுபேச்சு இல்லாம அம்மாவைக் கல்யாணம் செய்துக்கிட்டாராம்."

"நாங்க லீவுக்கு ஊருக்கு வரும்போது எங்களுக்கு முன்னாடி அப்பாதான் ஹேப்பி ஆகிடுவார், ஆத்தாவைப் பார்க்க… அம்மாக்கூட கிண்டல் பண்ணுவாங்க.. அதே மாதிரி ஆத்தாவும் எங்களையெல்லாம் விட்டுட்டு அப்பாவைத்தான் செல்லம் கொஞ்சுவாங்க… அப்பா இறந்ததுக்கு அப்புறம் ஆத்தா ரொம்ப நொடிஞ்சு போயிட்டாங்க… திரும்பி இப்படி வருவாங்கன்னு நாங்க நினைச்சுக்கூட பார்க்கல… அவ்ளோ மோசமா உடம்பு முடியாம இருந்தாங்க.. அம்மாதான் ஹாஸ்பிடல் சேர்த்து எல்லாம் பார்த்து பண்ணாங்க…"

"அதனாலையே ஆத்தாவுக்கு நாங்கனா ரொம்ப ஸ்பெஷல்…. அதான் மாமாவோட அம்மா பேசினதைக் கேட்டு டென்ஷன் ஆகி சத்தம் போட்டுருக்காங்க…"

"ம்ம்ம் ரொம்ப நல்லவங்கதான் போல… என்னைப்பத்தி… எங்க குடும்பத்தைப்பத்தி எல்லாம் தெரியுமா..?"

"ஆத்தாக்கிட்டதான் முதல்ல சொன்னேன்… ரொம்ப வருத்தப்பட்டாங்க… எப்படியாவது அந்தப்பொண்ணை நம்ம வீட்டு மருமகளா கொண்டு வந்துடு தம்பி… அதுதான் நீ எனக்கு செய்ற சந்தோஷமான விஷயம் அப்படின்னு சொன்னாங்க… அவங்களுக்கு எல்லாம் தெரியும்…. நீயும் உன்னோட பங்குக்கு என்னை குழப்பியடிக்காதே…" என்ற இவர்கள் பேசிக்கொண்டிருக்கும் போதே அகிலாவும் சிபியும் ஆத்தாவுடன் உள்ளே வர… சரண் எழுந்து சென்று அழைத்து வந்து தன் அருகில் அமர வைத்தான்.

புதுமலர்கள் பூத்திடும் வேளை - மதுவதனி

# புது மலர்கள் பூத்திடும் வேளை…!

“என்னடா தம்பி… அகிலா என்னென்னவோ சொல்றா..” - ஆத்தா

“ஆத்தா அதான் அக்காவே எல்லாம் சொல்லியிருப்பாங்களே.. இனி நான் என்ன சொல்ல… இப்போ என்ன பண்றதுன்னு மட்டும் சொல்லுங்க…” என்றான் அதட்டலாக…..

“டேய் இவனே…. எதுக்கு இப்படி கத்துற… நல்லா என் வாயில எதாவது வந்திடப்போகுது…. என்னமோ எல்லாம் என்கிட்டே கேட்டுட்டு செய்றமாதிரி… இதைப்பத்திக் கேட்க வந்துட்டான்…. போடா திருவாத்தா…”

“ஆத்தா எதுக்கு இப்போ தேவையில்லாத விவாதம்… நான் அவளை விட்டுட்டு எல்லாம் போகமுடியாது… அதுக்கு எதாவது ஐடியா சொல்லு…. அதை விட்டுட்டு சும்மா திட்டாதே… நான் உன்கிட்ட கேட்காம எதுவும் செய்யல…” என்றான் கடுப்புடன்.

“தம்பி கொஞ்சம் பொறுமையா பேசு… அக்கா சொல்றதுலயும் தப்பில்லையே….. அதே சமயம் நீ சொல்றதும் சரிதான்… என்ன பண்ணலாம் சரி நான் ஒன்னு சொல்றேன் கேட்பியா…”

“ என்னனு சொல்லு ஆத்தா.. டென்ஷன் ஆக்காம..”

“கன்னுக்குட்டி நீங்க எப்போடா மறுபடியும் காலேஜ் போறீங்க..” என்று அதுவரை அவர்கள் பேச்சில் இடையிடாமல் அமைதியாக கேட்டுக்கொண்டிருந்த சிபியைப் பார்த்துக் கேட்டார் ஆத்தா..

“ஏய் கிழவி, எத்தனை தடவை சொல்லிருக்கேன்… கன்னுக்குட்டி பன்னிக்குட்டினு கூபிடாதே என்று…. கேட்கமாட்டியா…” என்றான் சிபி ஆத்தாவை முறைத்துக்கொண்டே…..

**வேளை தொடரும்……..**

புது மலர்கள் பூத்திடும் வேளை - மதுவதனி

# புது மலர்கள் பூத்திடும் வேளை...!

**வேளை - 33-2**

ஆத்தாவிற்கு சிபி ரொம்ப செல்லாம், அதனால் அவனை அவர் கன்னுக்குட்டி என்று செல்லமாக கூப்பிடுவார். ஆனால் அவனுக்கு அது பிடிக்காது..... எப்போதும் திட்டிக்கொண்டே இருப்பான். மற்றவர்கள் யாரும் இதில் தலையிட மாட்டார்கள்.

"கேட்ட கேள்விக்கு மட்டும் பதில் சொல்லு.."- ஆத்தா

"சொல்ல முடியாது போ.... இனிமேல் அப்படி கூப்பிடமாட்டேனு சொல்லு" - சிபி

"சரி கூப்பிடமாட்டேன் சொல்லு..." - ஆத்தா

"ம்ம் இன்னும் ஒரு வாரம் கழிச்சு போறோம்..." என்று சிபி பதிலளிக்க சரியென்று கேட்டுக்கொண்டவர் சிறிது யோசனை கழித்து சரணைப் பார்த்து...

"தம்பி இங்கே பாரு, நானும் பத்துநாள் இங்க இருக்கலாம்னுதான் வந்துருக்கேன்.. பேத்தி இங்கேயே ஒருவாரம் இருக்கட்டும்... உன்னோட கைத்தடிங்க வரும்போது கூட அழைச்சிட்டு வரட்டும்... நீயும் போய் உன்னோட வேலையை சீக்கிரம் முடிச்சிக்கோ, அவ வரும்போது கொஞ்சம் ப்ரீ ஆகிக்கலாம். இங்கேயும் பிரச்சினை இல்லாம இருக்கும் என்ன சொல்ற..." என்றார்.

சரணுக்கு அவர் சொல்ல வருவதும் ஓரளவுக்கு சரியெனப்பட்டது. அவனும் அங்கு போய் ஓட வேண்டியிருக்கும்... இவளுக்காக நேரம் ஒதுக்க முடியாது. இந்த வானரங்களும் அங்கு இல்லை.... இவளும் வந்தால் தனியாகத்தான் இருக்க வேண்டியதிருக்கும்... அதனால் ஆத்தா சொல்வது போலவே செய்யலாம்... ஆனால் நிலா என்ன நினைப்பாளோ தெரியவில்லையே என்று நினைத்து அவளைப் பார்க்க, அவள் முகத்தில் எந்த வருத்தமும் இல்லை. ஆத்தாவிடம் அமர்ந்து அவர் ஏதோ கேட்க அவள் பதில் சொல்லிக் கொண்டிருந்தாள். அவன் யோசிப்பதைப் பார்த்த அகிலா "இன்னும் என்ன யோசனை சரண்... ஆத்தா சொல்றமாதிரி செஞ்சுடலாம்..' என்றாள்.

புது மலர்கள் பூத்திடும் வேளை - மதுவதனி

“ம்ம்ம் சரி…. எரிச்சலா வருது… என்னவோ பண்ணுங்க….” என்றுவிட்டு தன் அறைக்கு போய் விட்டான். அப்போது அகிலா நிலாவைப் பார்த்து “தேனு உனக்கு இதுல வருத்தம் இல்லையே..” என, “அண்ணி நீங்க எது செய்தாலும் சரிதான்… எனக்கு ஒரு வருத்தமும் இல்லை…. நீங்க சங்கடப்படாதீங்க…” என்றாள் நிலா…

எல்லாம் ஒருவழியாக சரியாகிவிட்டது என்று நினைத்து சிபி அங்கிருந்து வெளியேறப்போக, அதைப்பார்த்த ஆத்தா அவனை வம்பிலுக்கும் பொருட்டு… “ஏண்டா… கன்னுக்குட்டி உனக்குத்தான் இந்த வருசத்தோட படிப்பு முடியப்போகுதாமே… உனக்கு ஒன்னும் பசுமையா மாட்டலையா…” என்றார்.

“கிழவி… வேண்டாம்…. சும்மா என்னை வம்புக்கு இழுக்காதே…” என்று கடுப்பானவன் அவர் கேட்ட கேள்விக்கு பதிலாக “நீ எங்க காலேஜ் வந்து பாரு… எல்லாம் அறையும் குறையுமா துணியை மாட்டிக்கிட்டு அலைவாங்க… எல்லாம் வெளிநாட்டு பசங்க… நம்ம நாட்டுல தான் கம்மியா பணம் வாங்குறாங்கலாம், அதான் வெளிநாட்டுல இருந்து இங்க வந்து படிக்குதுங்க.. எல்லாம் காஞ்சி போன கருவாடுங்க மாதிரி இருக்கும்.”

“அப்போ நம்ம ஊரு புள்ளைங்களும் கூடவா இப்படி அறையும் குறையுமா அலையும்..”

“எல்லாம் ஒரே கேஸ்தான் கிழவி… அங்க என்ன பெத்தவங்களா இருக்காங்க மிரட்ட…. அதுங்க இஷ்டம்தான்….. அப்படியே ஊரச்சுத்திக்கிட்டு திரியுங்க…”

“ஓ இப்படியெல்லாம் பண்ணுவாங்களா..? இந்தக்காலத்துப் புள்ளைங்களை என்ன செய்ய சொல்லு… சரி அதை விடு… நம்ம வீட்டுல இருக்கவ எப்படி…. அதான் உன்கூடவே ஒட்டுண்ணி மாதிரி சுத்துறாளே ஷானவி…. அவளும் அப்படித்தானா.. இந்தப்புள்ளக்கூடவா உனக்கு பசுமையா தெரியல..” என்று அறை வாசலை ஒருமுறைப் பார்த்துவிட்டு நமட்டு சிரிப்புடன் கேட்டார்.

“அகிலாவும் தேனுவும் அவன் என்ன சொல்லப் போகிறானென்று கேட்க ஆர்வமாகி அவர்களும் வாசலில் யார் நிற்கிறார்கள் என்று பார்க்கவில்லை.

பின்னாடி விழும் அடியைப் பற்றி யோசிக்காமல் “உனக்கு வயசாயிடுச்சுன்னு சொன்னா மட்டும் கேட்கமாட்ட… இப்போ பாரு யாரு பசுமையா இருக்காங்கனு கூடத் தெரியல…. உனக்கு கண்ணு நல்லாத் தெரியுதா… இல்லையா…? அவளை எல்லாம் கண்ணுக்கு குளிர்ச்சின்னு சொன்னா… அப்போ நிஜமாவே குளிர்ச்சியா இருக்கிறவங்களை என்ன சொல்லுவ..?”

“அவ பார்க்க முதல்ல எப்படி இருக்கா சொல்லு…? மல்லி சமைச்சுப் போடுறதை நல்லா சாப்பிட்டு சாப்பிட்டு உருளைக்கிழங்குக்கு துணியை மாட்டி உருட்டி விட்ட மாதிரி இருக்கா… அவ உனக்கு பசுமையா…? நம்ம ரேஞ்சே வேற கிழவி… நீ அவளோட என்னைக் கோர்த்து விட்டுடாதே…” என ஷானவியைக் கிண்டலடித்து சிரிக்க…….

மற்ற மூவரும் சிரிப்பு வந்தாலும் சிரிக்காமல் அவனைப் பாவமாக பார்த்தனர். இதற்கிடையில் ஆத்தாவின் சைகையில் அகிலாவும் நிலாவும் ஷானு வந்திருந்ததை அறிந்து கொண்டனர். அதனால் அவள் கோபப்படுவாள் என்று சிரிக்கவில்லை. இவர்களின் ரியாக்சனைப் பார்த்த சிபி “அக்கா இப்போ நீங்க சிரிக்கணும், நான் உங்களுக்கு காமெடி சொல்லிருக்கேன்” என, அகிலாவும் “ஓ சிரிக்கணுமா…. சிரிக்கலாம்…சிரிக்கலாம்…. ஆனா இன்னும் கொஞ்ச நேரத்துல நீ அழப்போறியே அப்போ நாங்க என்ன பண்ணட்டும்..” என்றாள் பதிலுக்கு…..

“லூசாக்கா…. நீங்க… நான் ஏன் அழப்போறேன்……” என்று குழம்பினான்.

“எதுக்கா… இதுக்குத்தான்… இக்கடச்சூடு நைனா…” என்று அவளுக்குப் பின்புறம் இருந்து வந்தக் குரலில் திடுக்கிட்டுத் திரும்பியவன், அவள் கையில் இருந்த ஒட்டடைக் குச்சியைப் பார்த்து அரண்டடித்து ஓடத்துவங்கினான்.

“ஏண்டா பன்னாடை…. நான் உனக்கு உருட்டிவிட்ட உருளக்கிழங்கா… செத்தடா… உன்னை என்ன பண்றேன் பாரு… எருமை…” என்று கொலைவெறியுடன் அவனைத் துரத்த….

அவனோ “கிழவி உனக்கு வயசாயிடுச்சுன்னு சொன்னதுக்கா இப்படி இவகிட்ட மாட்டிவிட்டுருக்க… உனக்கே இது நல்லா இருக்கா… சும்மாவே ஆடுவா… இதுல சலங்கை வேற கட்டிவிட்டுட்ட…. மொத்தமா என்னை டேமேஜ் பண்ணிடுவாலே…” என்று அவர்கள் மூவரையும் சுற்றிக்கொண்டே இருந்தவன் அவள் முகத்தில் கோபம் அதிகமானதை உணர்ந்து அறையை விடு வெளியே ஓடினான்.

அவர்கள் இருவரின் விளையாட்டையும் பார்த்து மூவரும் வாய்விட்டு சிரித்தனர். அதன்பின் நிலாவைப் பார்த்த அகிலா…”நீ போய் அவனைப்பாரு தேனு.. பேக் பண்றதுக்கு ஹெல்ப் பண்ணு.. நான் டிபன் செஞ்சுட்டு உன்னை கூப்பிடுறேன்…. அவனைக் கொஞ்சம் சமாதானப்படுத்து” எனவும் சரியெனத் தங்கள் அறை நோக்கி சென்றாள் நிலா.

அவள் அகன்றதும் “தங்கமான பொண்ணு என்ன அகிலு….” என்றார் ஆத்தா…

“ஆமாம் ஆத்தா… இந்த வயசுல எத்தனைக் கஷ்டப்பட்ட்டுருக்கா… எவ்வளவு பக்குவம் இப்போவே… நல்ல பொண்ணு ஆத்தா… நம்ம சரணுக்கு ஏத்த பொண்ணு… ரெண்டு பெரும் சந்தோசமா இருக்கணும்… அதுதான் நமக்கும் வேணும்…” என்றாள் அகிலா…

“உன் மாமியார் மாதிரி உன் நாத்தனார் மாதிரி அடுத்தவப் புருசனுக்கு ஆசைப்படுறவங்க இருக்கிறவரைக்கும் இவங்க எங்க நல்லா இருக்கப் போறாங்க… இன்னும் என்ன என்ன பார்க்க வேண்டியிருக்கோ… கடவுளுக்குத்தான் வெளிச்சம்..” என்றவர் “சரி அகிலு நீ போய் வேலைய பாரு நான் கொஞ்சம் தலையை சாய்க்கிறேன்..” எனவும் “சரி ஆத்தா..” என அகிலாவும் தன் வேலையை கவனிக்க சென்றாள்.

அறைக்குள் வந்தவள் சரண் மீண்டும் படுத்திருப்பதைப் பார்த்து, இன்னைக்கு என்னாச்சு இவருக்கு என்று நினைத்தபடியே அவனை எழுப்ப ஆரம்பித்தாள். “என்ன பாவா மறுபடியும் படுத்துட்டீங்க… பேக் பண்ணலையா…. எழுந்துருங்க…. இதென்ன சின்னபுள்ள மாதிரி பிடிவாதம்…..என்றாள் நிலா சிறு அதட்டலுடன்.

“ஏண்டி புருஷங்காரன் ஊருக்குப் போறான். அதுக்கு கொஞ்சமாச்சும் பீல் பண்றியா…? பேக் பண்றதுலையே குறியா இருக்கே..”

“நான் ஏன் பீல் பண்ணனும்…. என் பாவா என்ன மறுபடியும் சிங்கப்பூரா போறார்…. இதோ இருக்குற பெங்களூர்…. நானும் இன்னும் ஆறு நாளில் அவர்கிட்ட போயிடுவேன்…. அப்புறம் எதுக்கு பீல் பண்ணனுமாம்..”

“எல்லாம் ஒரு ப்ளான்னோடதான் இருந்திருக்கீங்க… எனக்குத்தான் ஒன்னும் தெரியாம இந்த நிலாப் பேய் அடிச்ச மயக்கத்துல இருந்திருக்கேன்….” என்றான் அவள் மடியில் சரிந்தவாறே….

“ரொம்ப பீளிங் போலயே நிலாப்பேய் அடிச்சதுக்கு…” என்று சிறு கோபமாக அவன் மூக்கைப் பிடித்து திருக….

"ஹா ஹா … நான் வாழ்ற வரைக்கும் இந்தப் பேயோட மயக்கத்துலையே இருக்கனும்னுதான் ஆசை…. நடக்குமா… நடக்காதா…. தெரியல…. இதுக்கு பேய்தான் மனசு வைக்கணும்” என்று வாக்கியத்துக்கு ஒரு பேய் போடவும், முகம் கோபத்தில் சிவக்க அவனின் இரண்டு கன்னங்களையும் அழுந்தப்பிடித்து கிள்ளி வைத்தவள், “பேய் இப்படித்தான் மனசு வைக்கும்..” என்று கடுகடுத்தாள்.

அவளது செயலில் வாய்விட்டு சிரித்தவன், எழுந்து அவளது முகத்தைக் கைகளில் ஏந்தி “நிலாமா உனக்கு இதுல வருத்தம் இல்லையே… சின்னதா ஒரு கஷ்டம் என்றாலும் என்னிடம் சொல்லிடனும்…. உடனே பிளானை மாத்திக்கலாம்…. நீ என்னிடம் மறைக்காமல் சொல்லணும் சரியா…” என்றதும்…

தன் கன்னங்களைப் பற்றியிருந்தவனின் கைகளை விலக்கி அவன் மார்பில் சாய்ந்து கொண்டவள் “எனக்கு துளிகூட வருத்தம் இல்ல பாவா… ரொம்ப ரொம்ப சந்தோசமா இருக்கேன்… இப்படி சந்தோசமா இருந்து எவ்ளோ நாளாச்சு தெரியுமா…? நீங்க கஷ்டப்படாம போயிட்டு வாங்க…. நான் மேனேஜ் பண்ணிப்பேன்… நோ வொர்ரிஸ் Mr. அபிசரண்” என்று சிரிக்கவும்… அவனும் சிரித்தான்.

பிறகு நீ மேனேஜ் பண்ணிப்ப… ஆனா நான்…. நான் நீயில்லாமல் எப்படி மேனேஜ் பண்றதுன்னு தெரியலடா…. மிஸ் யூ சோ மச் நிலாமா….? என்ற அவனின் உருகிய குரலில் அவளும் “ம்ம்ம்….. நானும்…நானும்…” என்ற வார்த்தைகளுடன் கரைந்து போனாள்.

சிறிதுநேரம் மௌனமே இருவருக்கும் ஆறுதலாய் அமைய, சுதாரித்து விலகிய சரண், அவள் இன்னும் அந்த மோன நிலையிலேயே இருப்பதை உணர்ந்து “நிலா உன்னிடம் முக்கியமான விஷயம் பேசணும்… இப்போ பேசலாமா….” என்றதும் தன் சோகத்தை மூட்டைக்கட்டு வைத்துவிட்டு அவன் மீது சாய்ந்து கொண்டே…”ஓ பேசலாமே… பேசுங்க…” என்றாள்.

“அதுவந்து……”

“ஹ்ம்ம் “

“அதுவந்து..”

ஹ்ம்ம் சொல்லுங்க..”

“அடிக்க கூடாது..”

“ஏன் இப்படி சொல்றீங்க… அப்போ ஏதோ கிண்டலா கேட்கப்போறீங்க… அப்படித்தானே..?”

“அப்படி எல்லாம் இல்லடி லட்டுக்குட்டி…… அதுவந்து நீ ஏன் பாவான்னு கூப்பிடுற..”

“உங்களை…… எத்தனை தடவை சொல்லிட்டேன்… திரும்ப திரும்ப கேட்டா அடிக்காம என்ன செய்வாங்க…”

புது மலர்கள் பூத்திடும் வேளை - மதுவதனி

“இந்த ஒரு தடவை மட்டும் சொல்லு குட்டிம்மா… இன்னொரு தடவைக் கேட்க மாட்டேன்..”

“ம்ம்ம் ஓகே ஓகே… இதுதான் லாஸ்ட்…. அது எங்க குடும்பத்துல வீட்டுக்காரரை எல்லாம் அப்படித்தான் கூப்பிடுவாங்க… அம்மா அப்பாவை அப்படித்தான் சொல்வாங்க…. நானும் அக்காவும் சேர்ந்து அம்மாவை கிண்டல் பண்ணுவோம்… அப்பாவும் எங்களோட சேர்ந்துப்பார். அப்போ அப்பா சொல்லுவாங்க என் பொண்ணுங்க ரெண்டு பேரும் அவங்க ஹஸ்பண்டை பேரை சொல்லித்தான் கூப்பிடுவாங்க… நீதான் பட்டிக்காடு…. படிச்சிருந்தாலும் பட்டிக்காடு மாதிரி பாவா…. பாவா-நு இழுத்துக்கிட்டு இருக்க… என் பொண்ணுங்க அப்படி இருக்க மாட்டாங்க… என்று சொல்லி அம்மாவை வெறுப்பேத்துவாங்க…”

அது நிஜம்னு நம்பி அம்மாவும் எங்களுக்கு அட்வைசா பண்ணி அறுத்து தள்ளுவாங்க…. அப்பா சொல்றமாதிரி அப்படி செய்யக்கூடாது…. அப்படி…. இப்படின்னு….. நாங்களும் தலையை தலையை ஆட்டுவோம்… அப்புறம் அப்பா சொல்றதுதான் சரினு சொல்லி அம்மாவை கிண்டல் பண்ணுவோம்….. அதெல்லாம் அம்மாவுக்கு மறக்கவே இல்லை போல…. நம்ம கல்யாணம் பிக்ஸ் ஆனதும் அம்மா என்னைக் கூப்பிட்டு பர்ஸ்ட் சொன்னது இதுதான்… ‘பாவா தவிர வேற எதுவும் சொல்லக்கூடாது என்று. ஆனா எனக்கும் பாவான்னு கூப்பிடத்தான் ஆசை… அதுதான் நானும் அப்படி கூப்பிடுறேன்.”

“ஏண்டீ…. மரியாதையா பேசுங்கன்னு அட்வைஸ் பண்ணா அது அறுத்து தள்ளுறதா… இரு அத்தைக்கு பேசும்போது சொல்றேன்…”

“ம்ம் சொல்லுங்க… சொல்லுங்க… நல்லா சொல்லுங்க…” என்று அவனை கிண்டலடிக்க….

“சரி அதைவிடு… பேச வந்ததை விட்டுட்டு வேற ஏதோ பேசுறேன்….” என்று தன் போனில் ஏதோ செய்தவன் அதை ஓரமாக வைத்தவிட்டு, அவளிடம் குனிந்து “என் வைப் என்னை எப்படிக் கூப்பிடனும்னு எனக்கு ஆசை இருக்காதா… அப்படி ஓர் ஆசை இருந்தா அதை நிறைவேத்தி வைக்க மாட்டியா நீ…..” என்றான்.

# புது மலர்கள் பூத்திடும் வேளை...!

அந்தக்குரல் அவளை ஏதோ செய்ய... "ம்ம்ம் நிறைவேத்தலாமே.... என்ன சொல்லி அழைக்கணும்... சொல்லுங்க..." என்றாள் மறுப்பு ஏதும் சொல்லாமல்.....

அவனும் "என்னோட பேரை உனக்கு செல்லமா எப்படி கூப்பிடனுமோ அப்படிக் கூப்பிடு..." என..... "என்னது பேர் சொல்லியா... அதெல்லாம் முடியாது...." என அவள் மறுக்க "அப்போ விடு என் ஆசை நிராசையாவே போகட்டும்" என அவன் முறுக்க..... "என்ன பாவா இது பெரிய வார்த்தையெல்லாம்....." அவள் கலங்க, "அப்போ சொல்லு.... ம்ம்... சொல்லு..." என அவன் ஊக்க.... அவனைப் பார்க்காமலே "அபி"என்றாள் மெதுவாக.... அவனுக்கு கேட்டாளும் கேட்காததுபோல் "சத்தமா சொல்லுமா.... ஒன்னும் கேட்கல," என்றதும்..... "ம்ம்... ம்ம்ம்... என்ற சிணுங்கலுடன் "அபி" என்றுவிட்டு முகத்தைக் அவன் மார்பில் புதைத்துக் கொண்டாள்.

அவளது செயலை நினைத்து சிரித்தபடியே "ஒரு பேரைச் சொல்றதுக்கு இத்தனை அலப்பறையா... ஏண்டீ..... அது என்ன பொண்ணு பேர் மாதிரி இருக்கு..." என்று கிண்டலடிக்கவும்.......

"அதான் ஊரு உலகமே சரண் சரண்னு சொல்லுதே.... நான் பிறகு அந்தப்பேர் எப்படி சொல்றது.... அதான் உங்க நேம்ல இருக்க பர்ஸ்ட் ஹாப் எடுத்துட்டேன்...நல்லா இல்லையா...?" கோபமாக ஆரம்பித்து பரிதாபமாக முடித்தவளை பார்த்தவனுக்குச் சிரிப்பு வந்தது. இருந்தும் அடக்கி கொண்டு 'நல்லா இல்லை' எனும் விதமாக உதடு பிதுக்க.....

அவளோ "அப்போ இன்னும் வசதியாப்போச்சு, யாருமே இந்த பேர் வச்சு கூப்பிடமாட்டாங்க... நான் மாட்டும் தான் கூப்பிடுவேன்.... எப்பூடி.....!" எனவும்.... அவளது கொண்டாட்டம் அவனுக்கும் மகிழ்ச்சியைக் கொடுத்தது. அவன் தன் இறுகிய அணைப்பைக் கொடுத்து தன் மகிழ்ச்சியை அவளுக்கு காட்டினான்.

அணைப்பின் பேதத்தை உணர்ந்து அவனிடம் இருந்து விலகப் போனவள், அவனது 'நிலா ப்ளீஸ்' என்ற வார்த்தையில் இருந்த வேண்டுதலில், அவனைப் பிரியப்போகிறோம் என்ற வலியும் சேர்ந்துகொள்ள மறுப்பேதும் சொல்லாமல் அவனோடு இசைந்தாள். பிரிவின் தாக்கத்தை இருவரும் ஒருவருக்கொருவர் உணர்த்த மீண்டுமொரு காதல் சங்கீதம் அங்கே இசைக்க ஆரம்பித்தது.

புது மலர்கள் பூத்திடும் வேளை - மதுவதனி

# புது மலர்கள் பூத்திடும் வேளை…!

அன்றிரவு சிபி வந்து ட்ரெயின் ஏற்றிவிட சரண் பெங்களூர் வந்து சேர்ந்தான். என்னதான் முயன்றும் நிலாவின் முகத்தில் தெரிந்த சோர்வையும், துக்கத்தையும் அவனால் மறக்க முடியவில்லை. யார் என்ன சொல்லியிருந்தாலும் நீ ஏன் அவளை விட்டு வந்தாய் என்ற மனசாட்சியின் கேள்விக்குப் பதில் சொல்ல முடியவில்லை அவனால்.

கணவன் வருந்தக்கூடாது என்று அவன் முன் சிரித்து மகிழ்ந்தாலும், கிளம்பும் நேரம் அவளையும் அறியாமல் சோகம் அழையா விருந்தாளியாய் அவள் முகத்தில் வந்து ஒட்டிக்கொண்டது. என்ன முயன்றும் மாற்ற முடியவில்லை.... மற்றவர்கள் அதை உணர்ந்தும் ஏதும் பேசவில்லை. அவளிடம் ஒரு இறுக்கமான அணைப்பு... ஒரு அழுத்தமான முத்தத்தோடு விடைபெற்றான். ஸ்டேசனுக்கு வருகிறேன் என்றவளை வேண்டாமென்று விட்டான். இன்னும் அதிகம் வருத்தப்படுவாள் என்று......

சரனை அனுப்பியதும் நிலாவை யாரும் தனியே விடவில்லை... சிபியும் ஷானவியும் அவளை மையமாக வைத்து தங்கள் குறும்புகளையும் சேட்டைகளையும் ஆரம்பித்து அவளை மற்றதை சிந்திக்க விடாமல் சிரிக்க செய்தனர். அகிலாவும் அவளது பங்கிற்கு அவளுக்கு வேலைகளைக் கொடுக்க, ஆத்தாவும் இரவில் அவருடனே தங்க வைத்துக் கொண்டார்.

அடுத்தடுத்த நாட்களும் அவளுக்கு அழகாகவே விடிந்தது.... காலையில் அகிலாவுக்கு சமையலில் உதவுவது.... பின்னர் சிபி-ஷானுவோடு கோவில், பார்க், சினிமா என்று அந்த நாளின் நேரத்தை செலவிடுவது... இடையில் உறவினர் வீடுகளுக்கு சென்று வருவது... இரவில் சரணுடனான பேச்சு... என்று ஒவ்வொரு நாளும் அழகாகவே விடிந்தது நிலாவுக்கு...........

சரணுக்கு அவனுடைய வேலை மிகவும் இழுபறியாகச் சென்றது.... இன்று, நாளை என்று மிகவும் இழுத்துக் கொண்டது... வீடு வரவே நள்ளிரவானது. ஒரு சிலநாட்களில் அங்கேயே தங்க வேண்டியதும் இருந்தது.... அதனால் மனைவியை அங்கேயே விட்டு வந்தது மிகவும் நல்லது என்று நினைத்தான். அந்த வார ஞாயிறன்று இரவு சிபி-ஷானு-நிலா மூவரும் கிளம்ப முடிவானது. அதனால் முதல் நாள் இரவு கணவனும் மனைவியும் அடுத்தநாள் கிடைக்கும் தனிமையை நினைத்து கனவுலகில் மிதந்தனர்.

புது மலர்கள் பூத்திடும் வேளை - மதுவதனி

# புது மலர்கள் பூத்திடும் வேளை…!

தன்னுடைய உடமைகளை பேக் செய்தவள், அன்றைய மதிய உணவிற்காக அகிலாவிற்கு சமையலில் உதவி செய்ய ஆரம்பித்தாள்… அவள் எவ்வளவோ தடுத்தும் கேட்கவில்லை…. சமைத்த அனைத்தையும் எடுத்து டேபிளில் அடுக்கிக் கொண்டிருந்தாள் நிலா… பொறித்த அப்பளத்தை கையேடு அகிலா எடுத்து செல்ல…. தண்ணீர் எடுக்க உள்ளே போன நிலா ‘அம்மா’ என்ற அலறலுடன் கீழே விழுந்தாள்.

நிலாவின் அலறலில் எல்லோரும் சமையலறைக்குள் வர… அங்கு கண்ட காட்சியில் அனைவரும் ஸ்தம்பித்து போயினர்…..

**வேளை தொடரும்……..**

புதுமலர்கள் பூத்திடும் வேளை - மதுவதனி



## வேளை - 34-1

****************************************************************************************************

ஜீவன் ரெண்டும் சேர்ந்தது தேவன் வகுத்த சாசனம்
காதல் எந்த நாளிலும் கவிதை போல சாஸ்வதம்
என்று வந்த நேசமோ பூர்வ ஜென்ம யோகம்
இன்னும் ஏழு ஜென்மமும் வளரும் இந்த யாகம்
மீண்டும் மீண்டும் பூமியில் தோன்றலாம்
காதல் ஓவியம் பார்வையில் தீட்டலாம்
பிரிவு என்பதே உறவுக்காகத்தான் கண்ணே

தென்றல் காற்றே கொஞ்சம் நில்லு
அங்கே சென்று அன்பைச் சொல்லு
தனிமை கொதிக்குது நினைவினில் அனலும் அடிக்குது
இதயம் துடிக்குது உனை வரத்தான்

****************************************************************************************************

புது மலர்கள் பூத்திடும்

# புது மலர்கள் பூத்திடும் வேளை...!

“என்ன அண்ணி பார்த்து வரமாட்டீங்களா...? பாருங்க.... எப்படி ஆகிடுச்சுனு....” என்று நிலாவைக் கடிந்தவாறே அவளது பாதங்களில் மருந்திட்டு கட்டு போட்டுக் கொண்டிருந்தான் சிபி. ஒருபக்கம் அகிலாவும், மறுபக்கம் ஷானவியும் அமர்ந்து அவளது காலுக்கு விசிறிக் கொண்டிருந்தனர். ஆத்தாவும் அவளது தலையை வருடிக்கொண்டிருந்தார். தண்ணீர் எடுக்கப் போனவள் கீழே சிந்தியிருந்த சூடான எண்ணையை கவனிக்காமல் காலை வைத்து.... அது உணரும் முன்னே அடுத்த காலையும் வைத்திருந்தாள்.

இதனால் அவளுடைய இரண்டு பாதங்களும் வெந்து கொப்பளங்களாகி இருந்தன... அவள் அலறியதும் பதறியடித்து வந்த அனைவரும் அவள் கீழே விழுந்துவிட்டால் என்று நினைத்து தூக்கி நிறுத்த முயற்சிக்க... அவளோ அவர்களிடம் தன் காலைக் காட்டினாள்.

ஆபத்திற்கு பாவமில்லை என்று நினைத்த சிபி அவளைத் தூக்கி அங்கிருந்த சோபாவில் உட்கார வைத்து முதலுதவிப் பெட்டியை எடுத்து வந்தான். ஷானவிக்கு தானும் ஒரு டாக்டர் என்பது கூட மறந்து போய் பிரம்மை பிடித்து நின்றிருந்தாள்.

அவளை உலுக்கி, அவனுக்கு உதவும்படி அவளையும் தன்னுடன் இணைத்தான். அவளுக்கு கட்டுப்போட்டு முடிக்கும் வரைக்கூட யாரும் எதுவும் பேசவில்லை... அகிலாவிற்கும் ஆத்தாவிற்கும் மிகவும் வருத்தமாகிவிட்டது. இதைக் கேட்டால் சரண் என்ன சொல்வானோ என்ற பயம் வேறு அவர்களுக்கு... என்ன செய்வது என்று புரியாமல் இருக்கும் போதுதான் சிபி அவளிடம் அப்படிக் கடிந்தான். அதற்கு அவள் என்ன சொல்லப் போகிறாள் என்று பார்த்தனர் மற்ற மூவரும்..

“நான் கவனிக்கல தம்பி... நான் போகும் போது ஜன்னலில் ஒரு பூனை நின்னுட்டு இருந்தது. என்னைப் பார்த்ததும் வெளிப்பக்கம் குதிச்சது. நானும் உள்ளே வந்துட்டு என்னைப் பார்த்ததும் ஓடிடுச்சுனு நினைச்சேன். ஆனா அது எண்ணையை தட்டி விட்டுட்டு போயிருக்குன்னு நினைக்கல.. அதுதான் பார்க்காம காலை வச்சுட்டேன்...” என்றாள்.

அவளுக்கு வலி தெரியாமல் இருக்க ஷானு இன்ஜெக்ஷன் போட்டுவிட, "தேனு நீ சாப்பிட்டு கொஞ்சம் நேரம் தூங்கு... மத்ததெல்லாம் அப்புறம் பேசிக்கலாம்.." என்ற அகிலா ஷானுவிடம் சாப்பாட்டை கொண்டு வந்து கொடுக்க சொல்லிவிட்டு வெளியேறினாள். அவளுக்கு இதை சரணிடம் எப்படி சொல்வது என்ற பயமே பெரிதாய் இருந்தது.

அனைவரும் வெளியேற.... ஆத்தாவின் முகத்தில் ஏதோ சிந்தனை தெரிந்தது.... அதைப் பார்த்த நிலா... "நான் தான் தெரியாம மிதிச்சுட்டேன் பாட்டிம்மா.... நீங்க ஒன்னும் யோசிக்காதீங்க..." எனவும் "சரி நீ சாப்பிடு, இதோ வரேன்" என்று அவரும் கிளம்பினார். நிலாவிற்கு வலி உயிர் போனது... மற்றவர்கள் முன் காட்டினால் பயந்து விடுவார்கள் என்று நினைத்து வலியை ஓரளவுக்கு சமாளித்தாள்.

ஆனாலும் அந்த நேரம் தோள் சாய... தன் வலியை பகிர்ந்துகொள்ள கணவனின் அருகாமையை மிகவும் தேடினாள்.... அது கிடைக்காமல் போய்விட.... மருந்தின் மயக்கம்.... வலியின் வீரியம் எல்லாம் சேர்ந்து அவளுக்கு சோர்வைக் கொடுக்க... ஷானு கொடுத்த உணவை ருசியறியாமல் விழுங்கி விட்டு அப்படியே சாய்ந்து கொண்டாள்.

சரணிடம் இந்த விஷயத்தைக் கூறியதும் அவனுக்கு இருந்த டென்ஷனில் எல்லோரையும் போட்டுத் தாளித்து எடுத்து விட்டான். அடுத்து அவளால் பயணம் செய்யமுடியாது என்பதை எப்படி அவனிடம் சொல்வது என்றும் தெரியவில்லை அனைவருக்கும்.

அகிலா பயந்து போய் வாயேத் திறக்கவில்லை. ஆனால் சரணே போன் செய்து அவளை அனுப்ப வேண்டாம், நானே கிளம்பிவிட்டேன் என்று கூறி வைத்தான். அப்போதுதான் மற்றவர்களுக்கு மூச்சே வந்தது. பல அறிவுரைகளை நிலாவுக்கு வழங்கிவிட்டு சிபியும் ஷானுவும் தங்கள் பெங்களூர் பயணத்தைத் தொடர்ந்தனர்.

அன்றிரவு நிலாவிடம் பேசிய சரண் காலையில் வருவதாகக் கூறி வைத்தான். அடுத்த நாள் கணவனின் வரவை ஆர்வமாய் எதிர்பார்த்தவளுக்கு ஏமாற்றமே மிஞ்சியது. அவன் வரவே இல்லை. அவனைத் தொடர்பு கொண்டால் போன் ஸ்விட்ச் ஆப் ஆகி இருந்தது.

புது மலர்கள் பூத்திடும் வேளை - மதுவதனி

சிபியிடம் விசாரித்ததில் அவர்கள் அவனைப் பார்கவே இல்லை என்றும் தெரிய வந்தது.

ஒரு வேளை விபத்தில் எதிலும் மாட்டிக் கொண்டானா…? என்ற கேள்வி பூதாகரமாக எழுந்து அவளை மிரட்டியது. அகிலாவிடம் அவள் தன் பயத்தைக் கூற அவளும் பயந்தாலும் வெளியேக் காட்டிக் கொள்ளாமல் பல இடங்களில் விசாரித்து ஒரு வழியாக அவனைப் பிடித்தாள்.

அவனோ வேலை இருந்தது, இப்போது வரமுடியாது என்று கூற, அவனது வார்த்தைகளை நம்ப முடியாது இருந்தனர். இதுவே பல நாட்கள் தொடர்ந்தன. அகிலாவிடம் அவன் நேரடியாக எதுவும் கூறவில்லை. மீனா மீண்டும் அந்த வீட்டிற்கு வந்து போய் கொண்டிருந்தாள் அவளின் வரவை உணர்ந்த அகிலாவும் பத்து நாளில் கிளம்ப இருந்த ஆத்தாவை சில நாட்கள் தள்ளிக் கிளம்ப வைத்தாள். அவரும் புரிந்து கொண்டு இருந்து விட்டார்.

சரண் நிலாவிடம் ஓரிரு முறை சம்பிரதாயமாகப் பேசிவிட்டு வைத்ததை கண்டு கொண்டவள் வேலை டென்ஷன் போல என்று தன் கவலையை மறைக்க முயல, அதன் பிறகு சரண் அவளிடம் பேசுவதையே தவிர்த்திருந்தான்.

நிலாவின் கால்களும் இப்போது சரியாகி இருக்க அவள் வீட்டிலையே இருப்பதைப் பார்த்து, சரண் முன்னமே அவளுக்கு வாங்கி வைத்திருந்த கேன்வாஸ், பிரஸ் போன்ற பொருட்களை எடுத்துக் கொடுத்து அவளது ஓவியத் திறமையை ஊக்குவிக்க ஆரம்பித்தாள் அகிலா.

நிலாவின் மனம் தன் கணவனை நினைத்து மிகவும் குழம்பியது…. இன்றோடு அவனிடம் பேசி இருபது நாட்களாகி விட்டது…. முதல்நாள் கிளம்பிவிட்டேன் என்றவன்…. அடுத்தநாள் வேலையை காரணம் காட்டுகிறான்.

ரவியும் ஆதிராவும் அவளிடம் பேசும்போது அந்தப் ப்ராஜெக்ட் வேலை முடிந்துவிட்டதாக பேச்சோடு பேச்சாக ரவி கூறியது நினைவில் வந்தது….

புது மலர்கள் பூத்திடும் வேளை - மதுவதனி

அதோடு அவர்களும் குடும்பத்தோடு சிங்கப்பூர் செல்வதாகவும் தெரிவித்தனர். அப்படியானால் அவனுக்கு வேறு ஏதோ பிரச்சினை.... என்ன..? என்ன...? என்று மண்டையை போட்டுக் குழப்பிக் கொண்டாள்.

ஒன்றுமே சொல்லாமல் மீண்டும் முருங்கை மரம் ஏறிவிட்டானா...? என்ற எண்ணம் வந்து அவளை கொன்றது... இனி அவனாக வந்து பேசினால் தான் உண்டு... நாமாக என்ன பேசினாலும் அவன் எந்தப் பதிலும் சொல்லப் போவதில்லை. அதென்ன நமக்கு புதுசா... நடப்பது நடக்கட்டும் என்று வழக்கம் போல அவளது மனம் நினைக்க முகத்தில் ஒரு விரக்தி புன்னகை நிலவியது..... எதுவுமே எனக்கு நிரந்தரமாய் கிடைக்காதா என்ற கேள்வி அவளுக்குள் தன்னாலே முளைக்க ஆரம்பித்தது.

அடுத்த சிறிது நாட்களில் அந்த வயதானவரும் கிளம்பி விட..... மீனாவின் வருகை அதிகமானது.... அவள் மட்டுமில்லாமல் அவளது அம்மாவின் வருகையும்.... அவர்களுக்கு மத்தியில் நிலாவைத் தனியே விட பயமாய் இருந்தது அகிலாவுக்கு..... ஏதோ இப்போதுதான் ஒருவழியாக சரியான பாதையில் போகும் அவர்கள் வாழ்க்கையை மீண்டும் இவர்கள் குழப்பி விடுவார்களோ என்று பயமாக இருந்தது அவளுக்கு.... ஆனால் மீண்டும் சரணின் வாழ்க்கையை ஒரு சுழலுக்குள் இழுத்து விட்டுத்தான் இப்படி வந்து உட்கார்ந்திருக்கிறாள் என்று தெரிந்தால் என்ன செய்வாள் அகிலா....!!!

ஏற்காடு சென்ற மீனாவும் அவளது அண்ணனும் விடுதிக்குச் சென்று குழந்தைகளைப் பார்த்துவிட்டு, வார்டனிடம் தன் தங்கையையும் விசிட்டர் லிஸ்டில் சேர்த்து விட்டான் மணி.... ஏற்கனவே அதில் சிபி, சரண், ஷானவி பெயரும், பெற்றோர் பெயரும் இருக்க, மீனாவின் பெயரை சேர்க்க பெரும் யோசனை வந்தது வார்டனுக்கு... ஒரு கார்டுக்கு ஐந்து விசிட்டர்கள் தான் என்று எவ்வளவோ எடுத்துக் கூறியும் கேட்காமல் ஆறாவது பெயராக மீனாவையும் சேர்த்து விட்டான் மணி...

அதன்பிறகு குழந்தைகளை அழைத்து சுற்றிவிட்டு பல இடங்களில் போட்டோக்களையும் எடுத்துவிட்டு, அவர்களுக்கு வேண்டியவற்றை வாங்கி, மாலையில் ஹாஸ்டலில் விட்டனர்.... அன்றிரவே மணி திருச்சிக்கு போகலாம் என்றதும்..... இரவுப்பயணம் வேண்டாம் என மீனா மறுக்க வேறு வழியில்லாமல் அன்று அங்கேயேத் தங்கினர்.

புதுமலர்கள் பூத்திடும் வேளை - மதுவதனி

அன்றிரவு மீனா தன் போனில் ஒருவனுக்கு குழந்தைகளுடைய படங்களை அனுப்பியவள், நான் எப்போது சொன்னாலும் உடனேத் தூக்கிடனும் என்று அவனிடம் பேரம் பேசினாள். அவனுக்கு ஐந்து லட்சம் பணம் தருவதாக பேரம் பேசியிருந்தாள்.

இது எதையும் அறியாத மணி அடுத்தநாள் மீனாவுடன் திருச்சிக்கு வந்தான். அங்கு நிலாவைப் பார்த்து முதலில் ஒதுங்கினாலும், அவளுடைய பணிவான... அன்பான பேச்சிலும், கவனிப்பிலும் தன் தவறை உணர்ந்து அவளிடம் சாதரணமாக பேச ஆரம்பித்தான்.

மேலும் தன் மனைவியிடம் சில நாட்களாகத் தெரியும் மாற்றங்களும் அவனுக்குத் தன் தவறை உணர்த்தி இருந்தது.... என்னதான் தங்கை ஆசைப் பட்டிருந்தாலும், அவளுக்குப் புத்திமதி கூறி திருத்தாமல்... அந்த நேரம் தனக்கு இருந்த கோபத்தில், அவனும் சேர்ந்து தூபம் போடுவது போல் பேசி அவளுக்கு கெட்ட எண்ணங்களை வளர்த்துவிட்டு விட்டோம்.

இதில் அகிலாவிற்கு அவர்கள் பேசிய சில விசயங்கள் தெரியும் போல... அதனால்தான் அவள் அவனிடம் இருந்து ஒதுங்கி இருக்கிறாள். மற்றவர்கள் முன் எந்த மாற்றமும் இல்லை அவளது செய்கையில்...

ஆனால் தனியறையில் அவளிடம் பேசக்கூட வாய்ப்பிருப்பது இல்லை... ஏன் இப்படி என்று கேட்க நினைத்தாலும் குற்றம் செய்த நெஞ்சம் அதைக் கேட்க விடாமல் தடுக்க.... அவளின் மனதறிந்து நடக்க ஆரம்பித்தான்.

காலங்கள் கடந்த இந்த நிலையிலும் அவளிடம் பெரிதாக எந்த வித்தியாசமும் தெரியவில்லை என்றாலும்.... அவளின் ஆசைத் தம்பியும் அவனின் மனைவியும் சேர்ந்தது அவள் முகத்தில் நிம்மதியைக் கொடுத்திருந்தது. அதுவே அவனுக்கும் போதுமானதாக இருந்தது....

அவள் தனக்கு ஒரு வாய்ப்பளித்தால் அவளிடம் அனைத்து உண்மையையும் கூறி மன்னிப்புக் கேட்கலாம் என்று ஓரிரு முறை அவளிடம் சென்றாலும்.... அகிலாவோ அந்த வாய்ப்பை அவனுக்கு கொடுக்க மறுத்தாள்.

புது மலர்கள் பூத்திடும் வேளை - மதுவதனி

இதனால் மணியின் அவனது ஆண் என்ற ஈகோ தலைத் தூக்க.... இனிதே அவர்களின் வாழ்க்கையில் கண்ணாம்மூச்சி ஆட்டத்தை விதி நடத்த ஆரம்பித்தது.

நிலா இங்கு வருவதை உணர்ந்துதான் அவன் தன் தங்கை மீனாவை ஏற்காடு அழைத்து சென்றான். ஆனால் அதுவே அவனுக்கு வினையாகிப் போகுமென்று அப்போது யோசிக்கவில்லை.... வீட்டிற்கு வந்த தங்கையிடம் பல அறிவுரைகளைக் கூறி சரணை மறந்து விடுமாறு கூறினான்.

அவளோ அவனை கடுமையாய் முறைக்க.... ஆனால் அவன் இனிமேல் உனக்கு எந்த விதத்திலும் உதவமாட்டேன் என்று உறுதியாக கூறிவிட்டான். அதோடு உனக்கு உடனடியாக வேறு மாப்பிள்ளை பார்க்கப் போகிறேன் என்றும் அதிரடியாக அறிவித்தான். இதைக் கேட்டு கோபமாக வெளியேறினாள் மீனா... தன் தவறை உணர்ந்து திருந்தி விடுவாள் தங்கை என்று நினைத்தான் அந்த அண்ணன்.... கால கடந்த எண்ணம் என்று தெரியும் போது.......?????????

நிலாவிற்கு ஏற்பட்ட விபத்தைக் கேட்டதும் சரணுக்கு அவனின் அக்காவின் மேலேதான் கோபம் வந்தது.... அன்றே அவன் கேட்ட போதே அவனுடன் மட்டும் அனுப்பியிருந்தால் இப்போது இத்தனை பிரச்சினை வந்திருக்காதே... ஏன் எனக்கு மட்டுமென்ற கேள்வி எழுந்து அவனின் கோபத்தை அதிகரித்தது.

அந்த கோபம் அகிலாவையும் மற்றவர்களையும் சேர்த்து திட்ட வைத்தது. அவனுக்கு மனைவியின் மேலும் கோபம் தான். அவளை என்ன சொல்லித் திட்டுவது... கவனமா இருக்காமல் இப்படி செய்து விட்டாளே என்ற ஆற்றாமைதான் அவனுக்குள் எழுந்தது.

அடுத்த கணமே அவளைப் பார்க்க வேண்டும் என்ற வேகம் எழ.... உடனே திருச்சி வருவதாக வீட்டில் உள்ளவர்களுக்கு கூறி விட்டு வைத்தான். அதன்படியே ஊருக்கு கிளம்ப ஆயத்தமானவனின் போன் அலற, எடுத்துப் பார்த்தான் அது மீனாவிடம் இருந்து... இவள் எதற்கு இப்போது அழைக்கிறாள் என்ற கேள்வியுடன் போனை எடுகாமல் முதலில் அலட்சியப் படுத்தினான். அவள் தொடர்ந்து அழைப்பு கொடுக்கவே ஒரு சலிப்புடன் எடுத்துக் காதுக்கு கொடுத்தான் சரண்.

"ஹலோ....." - சரண்

புது மலர்கள் பூத்திடும் வேளை - மதுவதனி

# புது மலர்கள் பூத்திடும் வேளை…!

"என்ன அத்தான்… ரொம்ப சந்தோசமா இருக்கீங்க போல… உங்க வைப் வரப்போறாங்களா…. இவ்வளவு ஹேப்பியா இருக்கீங்க…."

"உனக்கு என்ன வேணும்… இப்போ எதுக்கு நீ கால் பண்ணிருக்க…"

"நீங்கதான் வேணும்…. கிடைக்குமா…"

"என்னடி கொழுப்பா…. உனக்கு ஒருதடவை சொன்னா புரியாது… நான் இன்னொருத்திக்கு புருஷன்…. மைன்ட் இட்…"

"ஹா..ஹா ஹல்லோ அத்தான்… எனக்கு எத்தனை தடவை சொன்னாலும் புரியாது…. ஏன்னா… நான் பைத்தியமா இருக்கேன்… அதுவும் உங்க மேல முழுப்பைத்தியமா இருக்கேன்…. அதனால் என்ன சொன்னாலும் புரியாது…. இப்போ உங்களுக்கு ஒரு முக்கியமான நியூஸ் சொல்லப்போறேன்….. நீங்க இங்கே கிளம்பிட்டீங்களா…. அப்படிக் கிளம்பினா…. அந்தப் பிளானை டிராப் செய்துடுங்க…. நீங்க இங்கே வரக்கூடாது…. ஒகே…. இது என்னுடைய ஆர்டர்….." என்றாள் கூலாக

"இங்கே பார் நீ இப்படித்தான் புலம்பிட்டு இருப்பேன்னு சொன்னா… அதைக் கேட்குற அளவுக்கு எனக்கு பொறுமை இல்லை… எனக்கு ப்ளைட்க்கு டைமாச்சு…. உன்கிட்ட பேசவும் எனக்குப் பிடிக்கல…."

"ஓ….. நான் விளையாடுறேன்னு உங்களுக்கு இப்போதான் தெரியுதா…. ஆமாம் விளையாடுறேன்…. அப்படி விளையாடினதுலதான் உங்க வைப் கால்ல எண்ணெய் பட்டுடுச்சு….. வெரி சாரி அத்தான் தெரியாமா செய்யல… தெரிஞ்சே தான் செஞ்சேன்…. இதுதான் ஆரம்பம்…. இன்னும் இருக்கு…" என்றாள் குரூரமாக.

"என்னது…." என்றான் அதிர்ச்சியாக

**வேளை தொடரும்……..**

**வேளை - 34-2**

“ஹா ஹா என்ன புரியலையா…. ஷார்ப் மைன்டெட் அத்தானுக்கு இன்னும் புரியலையா…..? அந்த தேன்நிலா காலில் பட்ட எண்ணெய் பூனைத் தட்டிவிட்டது இல்லை…. இந்த மீனாத் தட்டிவிட்டது…. பூனை அங்கே வந்தது நானே எதிர்பார்க்கல…. அதெப்படி நேத்து வந்தவ மேல ஒட்டுமொத்தக் குடும்பமும் பாசத்துல பின்னி பினையுறீங்க…

“அப்போ இத்தனை நாள் நான் காத்துக் கிடந்தது எல்லாம் வீணா….? அவளை நீங்க நெருங்க நெருங்க சேதாரம் உங்களுக்கு இல்லை அவளுக்குத்தான்…. ஏன்னா நீங்க எனக்கு வேணுமே…. அதுவும் முழுசா…. இனியும் அவளைப் பார்க்க வரேன்னு கிளம்புனீங்கனா… இப்போ பாதம்…. அடுத்து கால்…. அப்படியே ஒவ்வொரு பார்ட்டா டேமேஜ் பண்ணப் போறேன்… இப்போ நீங்க என்ன பண்ணப் போறீங்க…” என்றாள் மிகக் கொடூரமாய்…

“ஏய்… உன்னை இத்தனை நாள் விட்டு வச்சதே தப்புடி… நீயெல்லாம் ஒரு பொம்பளையா…. நான் நினைச்சா ஒரு நிமிசத்துல உன்னை அடையாளமே தெரியாம செய்ய முடியும்…. ஆனா உன்னோட அண்ணனுக்காகத் தான் இதை செய்யாம விட்டு வச்சேன்….. இதுக்குப் பிறகு நான் யாருக்காகவும் பார்க்கப் போறது இல்லை… இனியும் பொறுமையா இருந்தா நான் என்ன மனுஷன்…. இந்த நிமிஷம் உன்னை என்ன பண்றேன் பாருடீ…” என்று கர்ஜித்தான்.

அவனுடைய கோபத்தை தூசு போல ஒதுக்கியவள் “என்ன யாருக்காகவும் பார்க்க மாட்டியா… யாருக்காகவும்…. ஹ்ம்ம் கேட்க நல்லாத்தான் இருக்கு… ஆனா நீ ஒரு செண்டிமெண்டல் இடியட்னு எனக்குத் தெரியும்… அப்படி இல்லைன்னா உன்னோட வாழ்க்கையை நான் என் கையில் எடுக்க முடியுமா..? இப்போ வாட்ஸ் ஆப்ல உனக்கு ஒரு போட்டோ அனுப்பிருக்கேன்… அதைப்பாரு… பார்த்துட்டு சொல்லு…. யாருக்காகவும் பார்க்க மாட்டியானு….” என்று கூறியவள் தன் போனை வைத்தாள்.

மீனா பேசியதைக் கேட்க கேட்க சரணால் ஜீரணிக்கவே முடியவில்லை…. தொழிலில் எத்தனை சுலபமாய் எதிரிகளை சமாளிக்க முடிந்த அவனால், தன் சொந்த வாழ்க்கையில் மீனாவை எதிர்த்து சமாளிப்பது குதிரைக் கொம்பாகவே இருந்தது.

மனிதர்களின் உணர்வுகளைப் புரிந்து…. அவர்களுக்கு உறுதுணையாக இருப்பது அவ்வளவு பெரிய தவறா…? அடுத்து என்ன செய்வது….. அவள் ஏதோ பெரிய ப்ளான் செய்துவிட்டால் போல… இனியும் அவளுக்கு பயந்து என் வாழ்க்கையை இழக்க நான் தயாராக இல்லை… அக்கா-மாமா யாருக்காகவும் பார்க்கப் போவதில்லை…

ஆனால் ஏதோ போட்டோ என்றாளே என்ன அது என்று வேகமாக தன் போனில் உள்ள வாட்ஸ் ஆப் சென்று அவள் அனுப்பியிருந்த புகைப்படத்தைப் பார்த்தவனுக்கு சர்வமும் நடுங்கியது…. போன் தன் கையை விட்டு நழுவி கீழே விழுந்தது கூட தெரியாமல் அப்படியே அமர்ந்திருந்தான் அவன்……

அதிலிருந்த புகைப்படத்தைப் பார்த்தவன் சிறிது நேரம் அதிர்ச்சி விலகாமல் அப்படியே உட்கார்ந்திருந்தான். அவள் சொல்வது போல தான் ஒரு செண்டிமெண்டல் இடியட் என்பது உண்மைதான். அதனால் தான் இப்படி ஒரு முடிவை எடுத்திருக்கிறாள். நிலாவைத் தாக்க ஆரம்பித்தால் நான் இனி பொறுமையாக இருக்க மாட்டேன் என்று என்னை சரியாகக் கணித்து இப்படிக் குழந்தைகளை வைத்து மிரட்டுகிறாள் என்று நினைத்தான்.

ஆம்…. அந்தப் போட்டோவில் இருந்தது அவனின் அக்கா குழந்தைகள்…. அவர்கள் இருவரும் ஒரு ஐஸ்க்ரீம் பார்லரில் ஒரு வாலிபனுடன் தனியாக அமர்ந்து ஐஸ்க்ரீம் சாப்பிட்டுக் கொண்டிருந்தனர். அவனைப் பார்க்கும்போதே தெரிந்தது அவன் ஒரு வட இந்தியன் என்று…. இது எப்படி இவளுக்கு சாத்தியமானது……

படிக்க அனுப்பிய இடத்தில் அதைத் தவிர மற்ற எல்லாவற்றையும் கற்றுக்கொண்டு வந்திருக்கிறாள்… தாதா போல என்ன ஒரு மிரட்டல்…. கண்டிப்பாக இவளுக்கு யாரோ உதவி செய்கிறார்கள்… இல்லையென்றால் இந்தளவிற்கு தைரியமாக இதில் இறங்க மாட்டாள். மாமாவும் இதில் உடந்தையா…. இல்லை நிச்சயமாய் இருக்காது…. இவள் வேறு ஏதோ ப்ளான் செய்திருக்கிறாள்.

அவளாக சொல்லாமல் நமக்கு ஒன்றும் தெரியப்போவதில்லை….. வேறு வழியும் இல்லை….. என்று யோசித்து அவளுக்கு அழைத்தான்.

புது மலர்கள் பூத்திடும் வேளை - மதுவதனி

இவனது அழைப்பை எதிர்பார்த்தது போலவே அந்தப்பக்கம் எடுத்தவள் “என்ன என் ஆருயிர் அத்தான்…. இமேஜ் எல்லாம் பார்த்தாச்சா…. எப்படி இருக்காங்க என அண்ணன் பசங்க….” என்றாள் கேலியாக

“உனக்கெல்லாம் மனசாட்சியே இல்லையா… அவங்க குழந்தைங்கடீ… அவங்களை வச்சு விளையாட உனக்கு எப்படி மனசு வந்துச்சு…. உனக்கும் அவங்க உன்னோட அண்ணன் குழந்தைங்க தானே… அந்தப்பாசம் கொஞ்சம் கூட இல்லையா…?

“ம்ம்ம்ம் இதென்ன இப்படி சொல்லிட்டீங்க…. அதெல்லாம் இல்லாம போகுமா… நிறைய இருக்கு….. ஆனால் அதை வச்சு எனக்கு என்ன கிடைக்கப் போகுது…. கிடைக்கும் கிடைக்கும்னு நினைச்ச நீயே கிடைக்கல…. இப்போ சொல்லு நீ என்னை மேரேஜ் பண்ணிப்பியா..”

“ச்சீ…. நீ என்ன பொம்பளை டீ….. ஒரு கல்யாணம் ஆனவனைப் பார்த்து எப்போ பாரு கல்யாணம் பண்ணு கல்யாணம் பண்ணுனு அலையற… உனக்கெல்லாம் வெட்கமா இல்லை… நீயெல்லாம் மனுஷ ஜென்மமே கிடையாது… என்ன வேணும்னாலும் பண்ணிக்கோ…..” என்றான் ஆத்திரமாக.

“நல்லாத்தான் பேசுற…. பட் நீ பேசுறதைக் கேட்குற மூட்ல நான் இல்லை… என்னைப்பத்தி தெரிஞ்சே நீ பேசுறது நல்லா இல்லை சரண்… இப்போ நான் உன்னோட ஆசை அக்கா பசங்கலோடதான் இருக்கேன்…. இப்படியே அவங்களை கடத்துவேன்… அப்புறம் நானே போலீஸ்ல கம்ப்ளைன்ட் தருவேன்….”

“என்னை அடிச்சுப் போட்டுட்டு குழந்தைகளை கடத்திட்டாங்கனு….. அப்புறம் என்ன நடக்கும் தெரியுமா…? குழந்தைகள் ரெண்டு போரையும் எங்கேயாவது கொண்டுபோய் பிச்சை எடுக்க விட்டுடுங்கனும் சொல்லுவேன்…” என்று முடிக்கவில்லை சரணின் “ஏய் ” என்ற அலறல் அவளின் செவிப்பறையைக் கிழித்தது.

புது மலர்கள் பூத்திடும் வேளை - மதுவதனி

"இப்போ எதுக்கு இவ்ளோ டென்சன், கோபம்….. நான் இன்னும் எதையும் ஆரம்பிக்கவே இல்லை… சும்மா சாம்பிள் போயிட்டு இருக்கு…. இதுக்கே இப்படியா…. நீ சொல்ற பதிலை வச்சுத்தான் நான் என்ன செய்றதுன்னு முடிவு பண்ணனும்….. இதை வீட்டுல சொல்லலாம்… இல்ல போலீஸ்ல சொல்லலாம் என்றெல்லாம் நீ நினைச்சிடாதே…. அது உனக்குத்தான் ஆபத்து…. சாரி…. சாரி…. உன்னோட அக்கா குழந்தைங்களுக்கு தான் ஆபத்து…."

"இந்த விஷயம் நம்மளைத் தவிர வேற யாருக்காவது தெரிஞ்சது அடுத்த நிமிஷம் என்னோட சாவுக்கு நீதான் காரணம் என்று லெட்டர் எழுதி கமிசனர் ஆபிஸ்க்கு அனுப்பிட்டு நான் சூசைட் பண்ணிக்குவேன். அப்புறம் என் பாசமலர் அண்ணன் உன்னோட பாசமலர் அக்காவை டிவோர்ஸ் பண்ணிடுவான்…. நீ ஜெயிலுக்குப் போவ…."

"அப்புறம் உன் ஆசை… அருமை மனைவி பைத்தியக்காரியா ரோட்டுல அலைவா….இதெல்லாம் இன்னும் நடக்கல… ஒருவேளை நடந்துடுமோனு எனக்கு பயமா இருக்கு…. சரி நீ எனக்கு பதில் சொல்லு… நான் சொல்றதை செய்யப்போறியா… இல்லையா…?

தன்னை வேறு எந்த வகையிலும் யோசிக்க விடாமல் முற்றிலும் ஒரு வட்டத்துக்குள் கொண்டு வந்துவிட்டாள்…. அதிலிருந்து யாருக்கும் எந்த கஷ்டமும் இல்லாமல் வெளியே வரவேண்டும்…. அவள் வழியே போய் அவளை மடக்குவோம் என்று நினைத்து அவளிடம் சரியென்றான்.

அவன் சரிஎன்றதும் சற்று நேரம் யோசித்தவள் "நீ என்னை ஏமாத்தணும்னு மட்டும் நினைச்ச… என்னை மாதிரி ஒரு மோசமானவளை நீ பார்க்கவே முடியாது…." என்றவள் இனிமேல் நீ உன் நிலாவோடு பேசக்கூடாது… அவளை டிவோர்ஸ் பண்ணனும்… என்னை மேரேஜ் பண்ணனும்… இதெல்லாம் சீக்கிரம் நடக்கணும்…" என்றாள்.

இவளது வார்த்தைகளில் அதிர்ச்சியானாலும் அதை வெளிப்படுத்தாது "உடனே கண்டிப்பா முடியாது…. சீக்கிரம் முயற்சி செய்றேன்…. ஆனா நீ குழந்தைகளையோ இல்லை நிலாவையோ… எதுவும் செய்யக்கூடாது" என்று அவளிடம் உறுதி வாங்கிவிட்டு பைத்தியம் போல் அமர்ந்திருந்தான்.

புது மலர்கள் பூத்திடும் வேளை - மதுவதனி

# புது மலர்கள் பூத்திடும் வேளை…!

ஒரு சிறு பெண்ணிற்கு எப்படி இவ்வளவு தைரியம் வந்தது…. அந்த ஒரு கேள்விதான் அவனுக்கு மனதில் ஒலித்துக் கொண்டே இருந்தது…. இவளை எப்படி டீல் செய்வது… இவளைப் பற்றி முழுவதும் தெரிந்த ஒரே ஆள் ராகவ் தான்… அவனிடம் பேசலாம் என்று அவனுக்கு அழைத்து நடந்த அனைத்தையும் கூற…. அவன் இன்னும் இரண்டு மாதங்களில் வந்துவிடுவேன் அதுவரை சமாளியுங்கள்' என்று கூறவும் சரி என்று வைத்தான்.

அதைக் கேட்டதும் ஓரளவுக்கு தெம்பு வந்தது போல உணர்ந்தவன் அடுத்து நிலாவைப் பற்றி யோசித்தான். அவளை எப்படி சமாளிப்பது…. அவளிடம் உண்மையைக் கூறிவிடலாம்… ஆனால் அவள் வேறுவிதமான முடிவு எடுத்து விட்டால் என்ற நினைவே பயம் கொடுத்தது… முதலில் அவளிடம் இருந்து கொஞ்சம் ஒதுங்கி இருக்கலாம் அதுதான் அவளுக்கு நல்லது என்று நினைத்தான்.

ஆனால் அவளிடம் என்ன சொல்லி சமாளிப்பது….. ஏற்கனவே இருவருக்குள்ளும் பேசித் தீர்க்கப்படாத பிரச்சினைகள் எல்லாம் அப்படியே இருக்க…. இப்போது புதிதாக இந்த பிரச்சினையை எப்படி அவளிடம் பேசுவது…… என்று பலவாறாக யோசித்தவன் இப்போதைக்கு எதையும் சொல்லவேண்டாம் என்ற முடிவுக்கு வந்தான்.

நாட்கள் அதன் வேகத்தில் செல்ல…. நிலாவிடம் பேசும் நேரத்தையும் குறைத்துக் கொண்டான்….. முதலில் எதிர்பார்ப்பாக பேசிக்கொண்டிருந்தவள் அவனின் சிடுசிடுப்பிலும்…. ஆர்வமற்ற பேச்சிலும்…. அவளும் அவனிடம் தன் எதிர்பார்ப்பைக் குறைத்துக் கொண்டாள்.

ஒவ்வொருமுறையும் அவனிடம் கெஞ்சுவது போல…. தன்னிலை தரம் இறங்கியது போல அவளுக்கு தோன்ற ஆரம்பித்தது…. அதுவே ஒரு சுயமரியாதை உள்ள பெண்ணான நிலாவிற்கு அவனிடம் இருந்து ஒதுங்க வைத்தது…..

இருவரும் தங்களுக்குள் ஒரு கண்ணாமூச்சி ஆட்டத்தை மீண்டும் தொடர ஆரம்பித்தனர். அகிலா இருவருக்குள்ளும் சில சமரசங்கள் பேச வந்தாலும் அனைத்தும் தோல்வியே தழுவியது….

புதுமலர்கள் பூத்திடும் வேளை - மதுவதனி

சரண் அவளை ஊரில் இருந்து அழைத்து வந்தது கூட மற்றவர்களின் வாயை அடைக்கத்தானோ…. அவனுக்கு இன்னும் அவள் மேல் உள்ள கோபம் முழுதாக போகவில்லையோ…. அதனால் தான் இப்படி இருக்கிறான் போல… என்று அவளாகவே ஒரு முடிவுக்கு வந்து இவர்களின் ஆட்டத்தில் எதுவும் செய்ய முடியாதவளாக ஒதுங்கி விட்டாள்.

நாட்கள் கடந்து மாதங்கள் ஆன நிலையில் ஒருநாள் காசிராமனிடம் இருந்து சரணுக்கு போன் வந்தது… அதை எடுத்து அதில் கேட்ட செய்தியில் மிகவும் ஆடிப்போய்விட்டான்…இதை எப்படி தன் மனைவியிடம் தெரிவிப்பது என்ற குழப்பம் வேறு…. ஆனால் யோசித்துக் கொண்டிருக்க நேரமில்லை என்று மூளை அறிவுறுத்த அகிலாவிற்கு அழைத்து சுருக்கமாக விசயத்தைக் கூறி நிலாவிடம் பதமாக எடுத்து சொல்லி அழைத்து வருமாறு கூறினான்.

அதைக்கேட்ட அகிலா…. நான் எப்படி அவளிடம் சொல்ல முடியும்…. இதை அவள் எப்படி தாங்குவாள்…. என்று மனம் முழுக்க பயம் வந்தது…. தன் அருகில் இருந்த மனைவியின் முகத்தில் தெரிந்த குழப்பத்தைப் பார்த்த மணி என்னவென்று கேட்க…… அந்தநேரம் இருவருக்குள்ளும் இருந்த மனஸ்தாபங்கள் மறந்து அவனிடம் சரண் கூறிய விசயத்தைக் கூறி அழ ஆரம்பித்தாள்.

இங்க பாரு அகில்… இப்போ அழுதுட்டு இருக்க நேரமில்லை… நாம தாமதிக்காம சீக்கிரம் கிளம்பனும்…. நிலாக்கிட்ட எதையும் சொல்ல வேண்டாம்…. சரண் மதுரைக்கு வரசொன்னான் அப்படியென்று மட்டும் சொல்லலாம்… என்ன காரணம் கேட்டா….. எங்களுக்கும் தெரியாதுன்னு சொல்லிடலாம்… தேனினு சொன்னா அவளுக்கு கண்டிப்பா தெரிஞ்சிடும்…. அதோட இப்போ மதுரையில தான இருக்காங்க…. அப்படியே சொல்லிடலாம்….” என மனைவிக்கு ஆறுதல் கூறி அவளைத் தேற்றி அடுத்து செய்ய வேண்டியதையும் நினைவு படுத்தினான்.

கணவனின் பேச்சில் சிறு தெம்பு வந்தவள் நிலாவிடம் ஒருவழியாக விசயத்தைக் கூறி அவளைக் கிளப்பி மதுரை நோக்கி பயணித்தனர். ஏன் இந்த பயணம் என்ற கேள்வி அவளுக்கு முளைவிட்டு மரமாக வளர்ந்து நின்றது….

புதுமலர்கள் பூத்திடும் வேளை - மதுவதனி

அவள் கேட்ட எந்தக் கேள்விக்கும் யாரிடமும் பதில் இல்லை.... மற்றவர்களும் அவளிடம் என்ன சொல்வது என்று தெரியாமல் அமைதி காத்தனர்..... மனதுக்குள் பெரும் போராட்டமே நடந்து கொண்டிருந்தது... அவர்களது கார் மதுரை மீனாட்சி மிசன் மருத்துவமனையில் நிற்பதை கூட உணரவில்லை....

சிபி வந்து அழைக்கவும் தான் அவள் சுய உணர்வு பெற்றாள். அங்கே சிபியை பார்க்கவும் கேள்வியால் புருவத்தை சுருக்கி.... சரணைத் தேட.... அவனைக் காணாமல்.... அதோடு அவர்கள் நிற்குமிடமும் ஹாஸ்பிடல் என்பதும் உறைக்க.... சிபியின் சட்டையைப் பிடித்து உலுக்கி.... “பாவாக்கு என்ன... அவர் எங்க.... இங்கே எதுக்கு வந்திருக்கோம்...” என்றாள் கண்ணீரோடு.

“அண்ணி அண்ணாக்கு ஒண்ணுமில்ல.... நீங்க உள்ளே வாங்க.... அவர் உள்ளதான் டாக்டரிடம் பேசிட்டு இருக்கார்.... நீங்க கொஞ்சம் அமைதியா வாங்க....” என்று அவர்களை அழைத்து உள்ளே சென்றான். அப்போது icu வாசலில் பதட்டமாக காசிராமனும், சரணும் நிற்பது தெரிந்தது.... சரணுக்கு ஒன்றுமில்லை... அங்கிளும் வந்திருக்கிறார் என்றால் அப்போ அம்மா... அம்மாவுக்கா...... அம்மாவுக்கு என்னாச்சு.... நேற்று கூட என்னிடம் பேசினாரே.... ஒன்றுமே சொல்லவில்லையே..... என்று நடையின் வேகத்தைக் கூட்டி காசிராமனிடம் விரைந்தவள் அவரிடம் என்ன கேட்பது என்று கூட தெரியாமல் அங்கிருந்த கதவின் வழியே உள்ளே பார்த்தவள்..... அப்படியே அந்த இடத்தில் மயங்கி சரிந்தாள்.

**வேளை தொடரும்........**

புதுமலர்கள் பூத்திடும் வேளை - மதுவதனி




**வேளை - 35-1**

********************************************************************************************

பொழுதாகி போனதே இன்னும் தூக்கமா
சொல்லாமல் போவது தாயே நியாயமா
உயிர் தந்த தேவிக்கு உயிரில்லையோ
பாலூட்டி பார்த்தியே பாலூற்றலாமோ
அன்னம் போட்ட என் தாயே உனக்கு அரிசி போட வந்தேன்
எனை நானே நொந்தேன்
ஆராரிரோ பாடியதாரோ தூங்கி போனதாரோ
யாரோ யாரோ எனக்காரோ யாரோ
என் தெய்வமே இது பொய் தூக்கமா
நான் தூங்கவே இனி நாளாகுமா
ஆராரிரோ பாடியதாரோ தூங்கி போனதாரோ
யாரோ யாரோ எனக்காரோ யாரோ

********************************************************************************************

# புது மலர்கள் பூத்திடும் வேளை…!

மருத்துவ உபகரணங்கள் புடை சூழ மயக்கத்தில் இருந்த விஜயாவைப் பார்த்ததும் தன் நிலை மறந்து மயங்கி சரிந்தாள் நிலா. இதை சற்றும் எதிர்பார்க்காத சரண் அவளைக் கைகளில் ஏந்திக்கொண்டு அங்கிருந்த செவிலியர்களின் வழிகாட்டுதலின் படி அவசர சிகிச்சைப் பிரிவுக்கு கொண்டு சென்றான். அடுத்த அரைமணி நேரத்தில் அவளுக்கு முதலுதவி வழங்கப்பட்டது.

மேலும் அவளது உடலிலும் போதிய அளவு அதிர்ச்சியை உள்வாங்கிக் கொள்ளும் சக்தி இல்லை, ஆகவே சில மணிநேரம் அவள் தூங்கி எழட்டும் என்று அவளுக்கு உறக்கம் வருவதற்கான இன்ஜக்சனை போட்டு நாலு மணிநேரம் உறங்க வைத்தனர் மருத்துவர்கள். ஆழ்ந்த உறக்கத்தில் இருந்த நிலா தன் கையை யாரோ பிடித்திருப்பது உணர்ந்து லேசாக கண்களை திறக்க முயற்சிக்க, அவளால் முடியவில்லை இமைகள் இரண்டும் பிரிய மறுத்தன.

அதில் லேசாக எரிச்சல் படர, கைகளைக் கொண்டு கண்ணைக் கசக்க எடுத்தவள், தன் ஒரு கை யாரிடமோ சிறைப்பட்டிருக்க.. மற்றொரு கையை அசைக்க முடியாதபடி ட்ரிப் போடப்பட்டிருந்தது புரிந்தது.

எனக்கு ஏன் இதெல்லாம் செய்கிறார்கள் என்று தன் ஞாபக அடுக்குகளை தேட, அதில் அவள் மதுரை வந்தது…. கணவனுக்கு ஏதோ என்று பயந்தது….. பின் அம்மாவைப் பார்த்தது…. என்று ஒவ்வொன்றாக யோசித்தவள் அம்மா என்றதும் பிரிய மறுத்த இமைகளைப் பட்டென்று பிரித்தாள்.

அதுவரை அவள் அருகில் அமர்ந்து அவளையேப் பார்த்துக் கொண்டிருந்த சரண், அவள் கண்களைத் திறக்கவும் வழியறியமால் தனியாக விடப்பட்ட குழந்தை போல் அலங்க மலங்க விழித்த தன் துணையாளைக் கண்டு கடலளவு துன்பம் கொண்டான். இவளுக்கு நான் இருக்கிறேன் என்ற எண்ணத்தை ஆழமாக விதைக்க மறந்து விட்டேன் என்ற நினைவு… காலம் கடந்து அவனிடத்தில் பிறந்தது. என்னதான் மனைவிக்கு தன்மேல் நம்பிக்கை இருந்தாலும் அந்த நம்பிக்கையையும் தாண்டி உறவாய்… உலகமாய்…. தான் இருப்பதை அவளுக்கு உணர்த்தியிருக்க வேண்டும்.

புது மலர்கள் பூத்திடும் வேளை - மதுவதனி

அப்படி உணர்த்தியிருக்க இன்று தனக்கு யாருமில்லை என்ற இப்படி ஒரு மனநிலையில் அவள் இருந்திருக்க மாட்டாள். அவளுக்குள் இருந்த தைரியத்தையும் தன்னம்பிக்கையையும்… காதல் என்ற பெயரில் நானே கொன்று விட்டேனோ என்று பயந்து போனான். இல்லை அவளை இப்படியே விடக்கூடாது… என் நிலாவின் மென்மைதான் என்னை ஈர்த்தது. அதன்பிறகு அவளைப்பற்றி முழுதும் அறிந்ததும் அவளது தைரியமும் சுய மரியாதையும், தன்னம்பிக்கையையும் பார்த்து அவள் மீதான காதல் பன்மடங்காகப் பெருகியது…

இதை அவளிடம் அவன் நூறு முறையாவது சொல்லியிருப்பான் திருமணத்திற்கு முன்பு… அதன் பிறகு நடந்த கூத்தில் இருவரும் மனம்விட்டுப் பேசியே வருடங்களாகி விட்டது. இனி என் பழைய நிலாவை நான் மீட்டெடுப்பேன். நானே இல்லையென்றாலும்… அவள் தனியாக தன்னம்பிக்கையாக வாழ வேண்டும். அதற்காகவாவது அவள் பழைய மாதிரி மாறவேண்டும்.. மாறவைப்பேன் என்று உறுதிபூண்டு அவளைப் பார்க்க… அவள் மீண்டும் கண்களை மூடி மூடி திறந்து கொண்டிருந்தாள்.

அவள் தலையை வருடியவன்..”நிலாமா…. இங்க பாரு…. அத்தைக்கு ஒண்ணுமில்ல… இப்போ தூக்கத்துல இருக்காங்க… அவங்க நல்லா இருக்காங்க… அவங்களுக்கு ஒண்ணுமில்ல என்று மட்டும் மனசில் பதிய வச்சுக்கோ…

அப்போதான் உனக்கு ஹார்ட்பீட் நார்மல் ஆகும்… ஸ்ட்ரெஸ் அதிகமாகி மயக்கம் வந்துடுச்சுன்னு டாக்டர் சொன்னாங்க… ஸ்ட்ரெயின் பண்ணிக்காத…. நீ நல்லா இருந்தா தான் அத்தையை நல்லா பார்த்துக்க முடியும்…. நான் சொல்றது கேட்குதா… நிலா… நிலாமா..” என அவன் பேசப்பேச அவள் கேட்கிறது எனும் விதமாக தலையை ஆட்டினாள்.

அப்போது உள்ளே வந்த டாக்டர் நிலாவைப் பார்த்து “Mrs.தேன்நிலா…. வில் யு ஆல் ரைட்…. டோன்ட் வொரி… கொஞ்சம் ரெஸ்ட் எடுத்தாப் போதும்… அப்புறம் உங்க ரெண்டு பேருக்கும் ஒரு குட் நியூஸ் சொல்ல போறேன்.. யு வில் பீ ஹேப்பி நவ்….” என்று பீடிகைப் போட்டவர் “இவங்க மயக்கம் போட்டதும் சில டெஸ்ட்ஸ் பண்ண சொல்லியிருந்தேன்… அதுல ப்ரேக்னன்சியும் ஒன்னு… கங்க்ராட்ஸ்… சீ இஸ் ப்ரெக்னன்ட்…. நீங்க ஒரு குழந்தைக்கு பெற்றோர் ஆகப் போறீங்க….” என்றதும்.

புது மலர்கள் பூத்திடும் வேளை - மதுவதனி

முதலில் இருவரும் புரியமால் பார்த்துக் கொண்டிருக்க.. சரணுக்கு லேசாக டாக்டர் சொல்ல வந்தது புரிந்ததும்… கண்கள் மின்ன அவரது கைகளைப் பிடித்து நன்றி தெரிவித்தவன்… மனைவியைப் பார்க்க… அவளும் கண்ணோரங்களில் நீர் வடிய… உதட்டில் புன்னகை விரிய அவனைத்தான் பார்த்துக் கொண்டிருந்தாள்.

இருவரும் ஒருவரை ஒருவர் நீண்ட நாட்களுக்குப் பிறகு காதலாகப் பார்த்துக் கொள்ள, டாக்டர் லேசாக செருமி அவர்களின் மோனத்தைக் கலைத்து நிகழ்வுக்கு இழுத்து வந்தார். “Mr.சரண் உங்க வைப் சொல்ற அளவுக்கு ஹெல்தியா இல்லை… ஹீமோகுளோபின் லெவல் வெரி லோ… அதோட ஸ்ட்ரெஸ் அதிகமாகி பீபி லெவலும் ரைசாயிடுது… இது ஹெல்த்துக்கு நல்லது இல்ல…. இந்த மாதிரி நேரத்துல கண்டிப்பா இவங்க இப்படி இருக்க கூடாது…”

“முக்கியமா ஸ்ட்ரெஸ் ஆகாம பார்த்துகோங்க… ஏன்னா இப்படியே இருந்தா உள்ளே இருக்க பேபி மென்டலி பாதிக்கப்பட வாய்ப்புகள் அதிகம்… தென் அபார்ட் ஆகவும் சான்சஸ் இருக்கு… சோ கொஞ்சம் கவனமா பார்த்துகோங்க… டுடே ஈவ்னிங் டிஸ்சார்ஜ் பண்ணிடலாம்… எதுக்கும் உங்களோட கைனகாலஜிஸ்டிடம் ப்ராப்பர் செக்கப் பண்ண ஆரம்பிச்சிருங்க… இட்ஸ் பெட்டர் நவ். ஓகே Mr.அபிசரண் அவங்களை நிறைய கேர் எடுத்து பார்த்துக்கோங்க.. ஒரு உயிரை சுமக்கிறது ஒன்னும் அத்தனை சுலபமான காரியமில்லை. சந்தோசமா இந்த நிமிசத்தை கொண்டாடுங்க….” என்றவர்

நிலாவிடம் குனிந்து “Mrs.தேன்நிலா இந்தக் குழந்தையோட ஹெல்த் முழுவதும் உங்க கையில்தான் இருக்கு… புதுசா ஒரு உயிரை நீங்க இந்த உலகத்துக்கு அறிமுகம் செய்ய போறீங்க… நீங்க நல்ல விதமா உங்களைக் கேர் பண்ணிக்கிட்டாத்தான் உங்க பேபி நல்ல முறையில் வளரும்… பேசினால் தீர்க்கப்படாத பிரச்சினை என்று எதுவுமே இல்லை… மனசுவிட்டு அவர்கிட்ட பேசுங்க…. எது நடந்தாலும் நல்லதுக்குத்தான்” என்றார். அவளது மனநிலையில் தெரிந்த மாற்றங்கள் ஒருவேளை கணவன் மனைவிக்கு இடையே நடந்த பிரச்சினைகள் கூட காரணமாக இருக்கலாம் என்று யோசித்து அவளிடம் இதை சொன்னார்.

அந்தக்கடவுளே வந்து தன் வாழ்க்கையை தெளிந்த நீரோடையாக மாற்றியது போல் தோன்றியது நிலாவிற்கு… அவர் எதை நினைத்து ‘எது நடந்தாலும் நல்லதுக்குத்தான்’ என்று இந்த வார்த்தைகளை சொன்னாரோ…..

புது மலர்கள் பூத்திடும் வேளை - மதுவதனி

அந்த வார்த்தைகள் நிலாவின் மனதை யோசிக்க வைத்தது. சரண் அவளை அணைத்து நெற்றியில் முத்தமிட்டு தன் மகிழ்ச்சியை தெரிவிக்க... அவளோ அவனுக்கு பதில் தராமல் அமைதியாக இருந்தாள்.

அவள் மனநிலை அவனுக்கு புரிய... 'இனியாவது அவளிடம் எல்லா உண்மைகளையும் சொல்லிவிடலாம்' என்ற முடிவுக்கு வந்து, அவள் முகத்தை நிமிர்த்தி "நிலா உனக்கு என்மேல் இருக்கும் கோபம் நியாயமானதுதான். அது எனக்குத் தெரியும்... என்மேலும் தப்பு இருக்கு... நான் உன்னிடம் சில விசயங்களை மறைத்துவிட்டேன். அதில் மீனாவைப் பற்றியும் உண்டு..... உன்னிடம் மறைக்க வேண்டும் என்று நினைக்கவில்லை.... ஆனால் அதைக் கேட்டதும் நீ வேறமாதிரி முடிவெடுத்துட்டா என்ன பண்றதுனு தான் உன்கிட்ட சொல்லல... என்னை மன்னிச்சிடு நிலாமா.... ப்ளீஸ்..." என்றவன் அவள் அவனைப் பார்க்கும் பார்வை மாறாது அவனையே பார்த்துக் கொண்டிருக்கவும், ஒரு பெருமூச்சுடன் "உன்கிட்ட முதலிருந்து சொன்னால்தான் புரியும்" என்று அவன் மீண்டும் பேச ஆரம்பிக்கவும், கதவைத் தட்டிவிட்டு அகிலாவும், சிபியும் உள்ளே வரவும் சரியாய் இருந்தது.

உள்ளே வந்த இருவர் முகமும் பிரகாசமாய் இருப்பதைப் பார்த்ததும் அவர்களுக்கு விஷயம் தெரிந்துவிட்டது.... என்று புரிந்தது. சிபி தன் அண்ணனை அணைத்து தன் வாழ்த்தை தெரிவிக்க, அகிலா நிலாவின் தலையை வருடி தன் வாழ்த்துக்களை தெரிவித்தாள்

இருவரும் நன்றி கூறினாலும், அதற்கான சந்தோசம் எதுவுமே இருவர் முகத்திலும் இல்லை என்பதை உணர்ந்தவர்கள் சரணிடம் "சரண் அத்தையைப் பத்தி உன்கிட்ட பேசணும்னு சொன்னாங்க... நீ போய் கேட்டுட்டு வந்துடு... சிபி நீயும் போ..." என்றதும் இருவரும் வெளியேற, அகிலா அத்தை என்றதும் நிலாவின் உணர்வுகள் விழித்தெழ அகிலாவின் கைகளைப் பற்றிக்கொண்டு "அம்மாவுக்கு என்னாச்சு அண்ணி... ஏன் யாருமே என்கிட்ட சொல்லல..." என்றாள் கண்களில் வழியும் நீரோடு.....

"தேனு உன்கிட்ட சொல்லக்கூடாதுன்னு எதுவுமே இல்லடா... நீ பயந்துடக்கூடாதுன்னு தான் சொல்லல.... அதோட அத்தையும் இப்போ நல்லா இருக்காங்க.... மைல்ட் அட்டாக்தான்... உடனே ஆஞ்சியோ பண்ணிட்டாங்க.... எந்தப் பிரச்சினையும் இல்லை... உனக்கு சந்தேகம் என்றால் நீயும் வா போயிட்டு பார்த்துட்டு வரலாம்." என்றதும்



புதுமலர்கள் பூத்திடும் வேளை - மதுவதனி

# புது மலர்கள் பூத்திடும் வேளை…!

பெட்டை விட்டு அவள் வேகமாய் இறங்க…. சடாரென்று எழவும் தலை சுற்றி விழப் போனவளை அகிலா சுதாரித்து பிடிக்கும் முன் உள்ளே வந்த சரண் தாங்கிப் பிடித்து படுக்க வைத்தான்.

“இன்னும் உனக்கு சரியாகல நிலா…. அதுக்குள்ள எழுந்து எங்கே போகபோற…. டாக்டர் என்ன சொல்லிட்டு போனார். நீ என்ன பண்ணி வச்சுருக்க….. எழுந்த வேகத்துல எங்கேயாவது விழுந்து அடிப்பட்டிருந்தா பரவாயில்லையா..?” என்று அவளைக் கடிய…. “சரண் அவளை ஒன்னும் சொல்லாத… நான்தான் அவளை சமாதானப் படுத்துறேனு லூசுத்தனமா பேசிட்டேன்…” என அகிலா கூற, அவளையும் சேர்த்து முறைக்கத் துவங்கினான்.

சரண் பேசியது, செய்தது எதுவுமே நிலாவின் மூளையை எட்டவில்லை… அவளுக்கு தன் அம்மாவைப் பற்றி தெரியவேண்டும், அது மட்டும் தான் முக்கியம் என்பதுபோல் கணவனைப் பார்த்து “அம்மா எப்படி இருக்காங்க… டாக்டர் என்ன சொன்னாங்க… நான் அவங்களைப் பார்க்கணும்…” என்றாள் தீவிரமாக….

“அத்தைக்கு மைல்ட் அட்டாக்… ஏற்கனவே ஸ்ட்ரோக் இருந்ததுனால கொஞ்சம் ப்ராப்ளம் ஆகிடுச்சு… இப்போ பெட்டரா இருக்காங்க… மார்னிங் ஆஞ்சியோ பண்ணிட்டாங்க… கம்ப்ளீட் பெட் ரெஸ்ட் எடுக்க சொல்லி அட்வைஸ் பண்ணிருக்காங்க…

நாளைக்கு மார்னிங் ICU ல இருந்து ரூமுக்கு சிப்ட் பண்ணிடுவாங்க… அப்போ போய் நீ பார்க்கலாம்.. ஒன் வீக் இங்கேயே அட்மிட் செய்ய சொல்லிருக்காங்க….

அவ்ளோதான்… நீ பெருசா எதுவும் இமேஜின் பண்ணிக்காத… இப்போ நல்ல உறக்கத்துல இருக்காங்க… நீயும் எதையும் போட்டுக் குழப்பிக்காம, முக்கியமா டென்சனாகாம நல்லாத் தூங்கு….. நான் இங்கேயேதான் இருப்பேன்…. அத்தைக்கூட அக்கா இருப்பாங்க..” என்றான்.

அவள் மறுத்துக்கூற எதுவுமில்லாமல் அவனே அனைத்தும் பேசி முடிக்க…. மருந்தின் தாக்கம் அவளை உறக்கத்துக்கு இழுக்க…. கண்கள் தாமாக மூடிக்கொள்ள…

புது மலர்கள் பூத்திடும் வேளை - மதுவதனி

சுற்றுப்புறம் மறந்து ஆழ்ந்த உறக்கத்துக்குச் சென்றாள் நிலா… சில நொடிகளிலேயே அவள் அயர்ந்து உறங்குவது தெரிய சரண் டாக்டர் நிலாவைப் பற்றிக் கூறிய அனைத்தையும் அகிலாவிடம் கூறிவிட்டு ஓய்ந்து போய் கைகளில் தலையை தாங்கிக் கொண்டு ஓர் ஓரமாக அமர்ந்துவிட்டான்.

அடுத்து வந்த நாட்கள் அனைவருக்கும் அமைதியாகவே கழிந்தது. நிலாவின் உடல்நிலை சரியானதுபோல் அவளது மனநிலை சரியாகவில்லை. எப்பொழுதும் ஏதோ ஒரு யோசனையிலேயே இருப்பதாகத் தெரிந்தது. சரண் அவளிடம் எல்லாவற்றையும் கூறிவிட வேண்டும் என்று நினைக்கும் போதெல்லாம் ஏதோ ஒரு தடங்கல் வந்து கொண்டே இருந்தது அவனுக்கு…..

நிலாவும் அவனிடம் பெரிதாக முகம் கொடுத்து பேசவில்லை… குழந்தை உண்டான மகிழ்ச்சி இருந்தாலும், அதை வெளிக்காட்டிகொள்ளவோ, மற்றவர்களிடம் பகிர்ந்து கொள்ளவோ இருவராலும் முடியவில்லை. சிபி கூறி ஷானவியும், ரவியும்- ஆதிராவும் அழைத்து இருவருக்கும் வாழ்த்து தெரிவித்தனர்.

விஜயாவிடம் எந்த மாற்றமும் இல்லை. நிலாவிற்காக சொன்ன பொய்தான் அவருக்கு மைல்ட் அட்டாக் என்பது… ஆனால் அவர் தன் வாழ்நாட்களை என்பதை விட மணி நேரங்களை எண்ணிக் கொண்டிருந்தார். அதற்கு காரணம் தனிமைதான். நிலா சரணுடன் திருச்சி வந்த பிறகு தனிமை அவரை பலமாக தாக்கியது.

மேலும் வழக்கமாக எடுத்து கொள்ளும் மருந்துகளை எடுக்க தவறி விட்டார். அதனால் அவரது நோயின் தாக்கம் அதிகமாகிவிட்டது. அதோடு இரண்டு முறை செஸ்ட் பெயினும் எடுக்க…. அவர் சாதாரணமான நெஞ்செரிச்சல் என்று விட்டு விட்டார். ஆனால் இந்தமுறை வந்தது சிவியர் ஹார்ட் அட்டாக், அதுவும் மூன்றாவது முறை மேலும் சர்ஜரி செய்வதற்கான சாத்தியக்கூறுகள் மிகவும் குறைவு என்று மருத்துவர்கள் தெரிவித்து விட்டனர். அதனால் சரண் நிலாவிற்கு சந்தேகம் வராத அளவிற்கு அவரை ஹாஸ்பிடலில் வைத்து பார்த்துக் கொள்ள சொல்லியிருந்தான்.

இதை ஏற்று மற்றவர்களும் அவனுடன் சேர்ந்து நிலாவின் முன் நடிக்க ஆரம்பித்தனர் மருத்துவர்கள் உட்பட… இதுவே சரணின் மகா கவலையாகிப்போனது. எந்த நேரம் எது வேண்டுமானாலும் நடக்கலாம்….

இதை அவன் மனைவி எப்படி தாங்குவாள், அவளுக்கு எப்படி தைரியம் சொல்ல… என்ற சிந்தனையில் ஆழ்ந்தவன் மனைவியின் ஒதுக்கத்தை கவனிக்க மறந்து விட்டான்.

நிலா மயக்கம் தெளிந்து ஒரு சில மணிநேரங்கள் தன்னைச் சுற்றி நடப்பதை உள்வாங்க ஆரம்பித்தாள். அதில் தன் அம்மாவின் உடல்நிலை இவர்கள் எல்லாரும் சொல்வது போல் இல்லை… அதையும் தாண்டி வேறு எதுவோ பெரிதாக இருக்கிறது என்று உணர ஆரம்பித்தாள். அதோடு அவள் தன் தாயின் அருகிலேயே இருக்க வேண்டும் என்பதை மனம் உரைக்க, உடனடியாக தன் சோர்வைப் போக்கி அதில் இருந்து வெளியே வந்தாள். நீண்ட நேரம் தூங்கியதும் அதற்கு உதவியாய் இருந்தது….

அதன் பொருட்டு விஜயாவின் அருகிலேயே இருந்தாள் நிலா… மூன்றாம் நாள் காலையில் கண்விழித்த விஜயா முதலில் பார்த்தது நிலாவைத்தான். அவர் அவளைப் பார்த்து புன்னைகைக்க…. அதுவே அவளுக்கும் போதுமானதாக இருந்தது. அவர் நிலாவிடம் ஏதோ பேச வருவது புரிய, அதைத் தடுத்து அமைதியாக இருக்கும்படிக் கூறினாள். இருவர் கண்ணிலும் கண்ணீர்.

அவளை மட்டும் தனியாக விட்டுவிட்டு தன் அம்மாவும் இல்லாமல் போய்விடுவார்களோ என்று பயந்து அதை வெளிக்காட்டிக் கொள்ளாமல் கண்ணீரிலே கரைந்தாள் நிலா. அதற்கு எதிர்மாறாக விஜயாவோ 'என்னால்தான் அவள் வாழ்க்கை இத்தனை நாளாய் வீணானது….. இனியும் வீணாக வேண்டாம்…

இந்த வாழ்க்கையில் இருந்து, இந்த உலகத்தில் இருந்து எனக்கு விடுதலைக் கொடு இறைவா…' என்று கடவுளை வேண்டியபடி அழுதார்.

தாயும் மகளும் அவரவர் வேதனையில் உழல, அதைப் பார்த்த அகிலா இந்த வயதானவர் தன் கடைசிக் காலங்களிலாவது ஒரு சந்தோசத்துடனும், மகளின் வாழ்க்கை பற்றிய கவலை அகன்ற நிம்மதியுடனும் இருக்க வேண்டும் என்று நினைத்து விஜயாவின் கைகளைப் பிடித்துக் கொண்டு நிலா கன்சீவ் ஆன செய்தியைக் கூறினாள். ஒளியிழந்த கண்களில் பிரகாசம் மின்ன, மகளின் கையை எடுத்து தன் நெஞ்சோடு அணைத்துக் கொண்டார்.

புது மலர்கள் பூத்திடும் வேளை - மதுவதனி

# புது மலர்கள் பூத்திடும் வேளை...!

தங்கள் குடும்பத்தின் பெயர் சொல்ல ஒரு வாரிசு... தன் குட்டியம்மாவிற்கு ஒரு குழந்தை... என்மகள் அவள் வாழ்க்கையில் ஜெயித்து விட்டாள். நான் நினைத்து பயந்தது போல் இல்லை... அவள் நல்லமுறையில் கணவனுடன் குடும்பம் நடத்துகிறாள்... இதையெல்லாம் பார்க்க தன் குடும்பத்தில் வேறு யாரும் இல்லையே..... இல்லை.... எல்லோரும் இருக்கிறார்கள்.... மேலேயிருந்து அவளைப் பார்த்துக் கொண்டே இருப்பார்கள்... அவளுக்கு நீண்ட ஆயுளைக் கொடுத்து அவளுக்கு துணை இருப்பார்கள்... என்று மனதில் நினைத்து மகிழ்ச்சியடைந்தார்.

யோசனைக் கலைத்து நிலாவைப் பார்க்க அவள் முகத்தில் லேசான மலர்ச்சி இருந்தாலும், கண்களில் அதைவிட அதிகமாய் சோர்வு இருந்தது. அதைக் கண்டவர் இந்த மாதிரி நேரத்தில் இப்படித்தான் இருக்கும்... மேலும் என்னைப் பார்த்தும் பயந்திருப்பால் போல... அதனால் தான் இப்படி இருக்கிறாள் என்று அவராகவே ஒரு காரணம் கண்டுபிடித்தார்.

இந்த நிலைமையில் இருக்கும் மகளை தன்னோடு அழைத்துப்போய் அவளுக்கு நல்லது, கெட்டது பார்த்து சீராட்டி அழகு பார்க்க முடியாமல் போன தன் இயலாமையை நினைத்து மனம் வெதும்பி போனார். அகிலா இருவருக்கும் ஆறுதல் கூறி தேற்றினாலும், இருவருக்குள்ளும் இருக்கும் வருத்தம் மட்டும் குறையாமல் கூடிக்கொண்டே போனது. இந்த வாழ்க்கை யாருக்கு என்ன வைத்திருக்கும் என்று யாருக்குமே தெரியாது... அதன் போக்கில் போகத்தான் வேண்டும்....

தன் அம்மாவிற்கு கொடுத்த ட்ரீட்மெண்டைப் பார்த்து ஒரளவுக்கு கணித்து விட்டாள் நிலா. கணித்தவளுக்கு நிதர்சனம் புரிய சில மணி நேரங்கள் ஆனது... ஆனால் அவளுக்கு தெரிந்ததை யாரிடமும் வெளிக்காட்ட முயலவில்லை.. அவளுக்கு குழந்தை பற்றிய எண்ணம் தோன்றவே இல்லை.... இந்த உலகத்தில் அவள் மட்டும் தனியாக... தனக்கென்று யாருமே இல்லை என்று நினைக்க ஆரம்பித்திருந்தாள். மேலும் அதைப்பற்றி பேசவும் மற்றவருக்கும் நேரமில்லை... சரண் ஓடிக்கொண்டே இருந்தான். அகிலா இருவரையும் மாறிமாறி பார்த்து ஓய்ந்து போனாள்.

காசிராமன் இரண்டு நாட்களுக்கு ஒருமுறை வந்து போனார். விஜயா ICU வில் இருந்து ரூமுக்கு மாற்றியதுமே, சிபியும் - மணியும் கிளம்பி சென்றிருந்தனர்.

புது மலர்கள் பூத்திடும் வேளை - மதுவதனி

அதனால் சரணுக்கும் அகிலாவுக்கும் ஓய்வு இல்லாமல் ஓட வேண்டியிருந்தது. இவை எல்லாம் நிலாவுக்குத் தெரிந்தாலும் மூளைக்குள் சென்று பதிய மறுத்து விட்டன.

நிலாவிற்கு சரண் அவளிடம் எல்லாவற்றையும் மறைத்து விட்டான் என்ற கோபம் அதிகமாகியது. மேலும் அவளின் அம்மாவின் இந்த நிலைமைக்கும் தான்தான் காரணம் என்ற குற்ற உணர்ச்சியும் எழுந்தது… அன்று சரணை திருமணம் செய்ய கேட்ட போது ஒரேயடியாக மறுத்திருக்கலாம்… அப்படி மறுத்திருந்தால் இன்று தன் அம்மாவிற்கு இந்த நிலைமை வராமலே போயிருந்திருக்கும்….. எல்லாம் என்னால் தான்…. இல்லை இவனால்தான்…. இவன் வந்து கேட்டதால்தான் அம்மா இப்படி ஒரு முடிவெடுத்தார்கள் என்று மனம் முழுவதும் அவனையே குற்றப்படுத்தியது..

அவனை பார்த்த நொடியில் இருந்து அவளுக்கு அவனை மட்டுமே பிடிந்திருந்தது…. சூழ்நிலையின் காரணமாக அவள் நினைக்காதது எல்லாம் நடந்து, அவள் அதை விட்டு வெளியே வரும்போது காலம் இரண்டாண்டாகி இருந்தது. அதன் பிறகு சரண் அவளைத் தேடி அலைந்தான்… எதிர்பாராமல் பார்த்ததும் மீண்டும் தொலைத்து விடாமல் இருக்க, உடனே திருமணத்திற்கு கேட்டது எல்லாம் தெரிந்து அவன் மேல் அவளுக்கு காதல் கூடியதே தவிர குறையவில்லை…. சரண் வந்து பேசிவிட்டு சென்றபின் மகளின் நடவடிக்கையில் தெரிந்த மாற்றத்தை வைத்தே இந்த திருமணத்திற்கு ஒத்துக்கொண்டார் விஜயா.

இந்த திருமணம் நடந்த விதத்தில் அவன்மேல் எந்த தவறும் இல்லையென்ற போதும்…. மனம் ஏனோ அவனையே குற்றவாளியாக்கியது… அதனால் விஜயாவோடு இருக்கும் போது அவள் சரணை கண்டுகொள்ளவேயில்லை. முதலில் அவனுக்கும் இந்த விலகல் தெரியாமல் இருந்தது. காரணம் அவனும் ஓடிக்கொண்டே இருந்தான். அடுத்து வந்த நாட்களில் அவனாக சென்று பேசினாலும்… ம்ம்ம்…. ஹூம்ம்ஹூம்… என்ற வார்த்தைகளும், தலையாட்டலுமே பதிலாக வந்தது. மனைவியின் ஒதுக்கம் அவனுக்கு புரிந்தது… அதை சரிசெய்ய இது சரியான நேரமும் இல்லை இடமும் இல்லை என்று புரிந்து அமைதி காத்தான்.

ஆனாலும் அவளது உடல்நிலை குறித்து மருத்துவர் கூறிய அறிவுரைகளை அவன் கருத்தில் கொள்ளாமல் இல்லை…. அவளை அகிலாவும் சரணும் கண்ணுக்குள் வைத்தே பார்த்துக்கொண்டனர்.

புது மலர்கள் பூத்திடும் வேளை - மதுவதனி

# புது மலர்கள் பூத்திடும் வேளை…!

அவளது புறத்தை கவனித்தவர்களால், அவள் உள்ளுக்குள்ளே அழுது புழுங்கும் அகத்தை கவனிக்க முடியவில்லை…. இரு உள்ளங்களும் அவரவர் துணையை எண்ணி மறுகத் துவங்கியது என்னவோ உண்மை.

நாட்கள் ஆமை வேகத்தில் நகர…. ஹாஸ்பிடலில் சேர்த்த ஆறாவது நாள் விஜயாவின் உயிர்பறவை அவரது உயிர்கூட்டை விட்டு பறந்தது…. நிலாவை நினைத்து பயந்த அனைவரும் அவளது நிதானத்தில் ஒன்றும் புரியாமல் குழம்பினர். ஆனால் தன் தாயின் நிலையை மற்றவர்கள் கூறாமல் அவளாகவே உணர்ந்து அவரது பிரிவுக்கு தனக்குள்ளே தன்னை தயார் படுத்தியிருந்தாள். அதனால் அவர் இறந்ததும் அனைவரும் எதிர்பார்த்து பயந்தது போல் அவள் அழுது ஆர்ப்பாட்டம் செய்யவில்லை.

முகத்தில் விரக்தியும், கண்களில் வெறுமையுமாய் அவள் அமர்ந்திருந்த கோலம் அங்கு இருந்த அனைவரையும் கலங்க வைத்தது. காசிராமன் மேற்பார்வையில் எல்லாம் நடந்தாலும் அங்கு நடக்கும் ஒவ்வொரு சடங்குக்கும் சரண் தேவைப்பட்டான். அதனால் அவளுடன் இருக்கவோ சமாதானம் செய்யவோ அவனுக்கு நேரம் வாய்க்கவில்லை… அப்பொழுதும் அவன் அகிலா-ஷானவி இருவரையும் அவளது அருகிலேயே இருக்க வைத்தான். அவளது ஒவ்வொரு முகமாறுதலையும் கவனிக்க வைத்தான்.

இறுதிச் சடங்குகள் அனைத்தும் சரணை வைத்தே நடைபெற்றது…. தீபகாருன்யத்தில் இருந்தவர்கள் அனைவரும் அழுத அழுகையில் நிலாவின் முகம் அதுவரை இல்லாத பயத்தை மொத்தமாக காட்டியது….

அந்த நிமிடம் வரை வெறுமையிலே இருந்து இந்த வாழ்க்கையை கொடுத்த கடவுளை மனதில் சபித்துக் கொண்டிருந்தவள் அங்கு அழுதவர்களைப் பார்த்து விழித்தாள்.

தாய் இறந்த செய்தி கேட்ட நிமிடத்தில் இருந்து இந்த நிமிடம் வரை அவளது கண்ணில் இருந்து சொட்டு கண்ணீர் கூட வரவில்லை…. சரணுக்கு மனதெல்லாம் பயம்…. அவளை அணுகவே பயந்தான். ‘இப்படி இருக்க கூடாது, அவள் அழவேண்டும்… வாய்விட்டு அழவேண்டும்… அதுதான் அவளுக்கு நல்லது…. இல்லையென்றால் அவள் மனநிலை மேலும் பாதிக்கப்படலாம்..’ என்று நினைத்தவன் காசிராமனின் மனைவியிடம் நிலமையைக் கூற, அவர் வந்து நிலாவை விதம் விதமாக கெஞ்சியும், கொஞ்சியும் அழ வைக்க முயற்சித்தும் முடியவில்லை….

இறுதியாக விஜயாவின் உடலை எடுக்கும்போது 'இதோ போறாங்க… இனி வரமாட்டாங்க.. நான் இனி எப்போதும் பார்க்கவே முடியாது… எனக்கு கடைசியா அவங்களைப் பார்க்கணும்' என்ற எண்ணங்கள் அலை அலையாய் அவளுள் பரவ… அதுவரை அவளுக்குள் இருந்த மன தைரியம் கடந்து போக… 'ஓ வென வாய்விட்டு கதறி அழ ஆரம்பித்தாள். ஊர்வலத்தில் கையில் கொள்ளிப்பானையுடன் நின்றிருந்த சரண், அவள் அழுகையைக் கண்டு பதறி பக்கத்தில் இருந்தவர்களிடம் கொடுத்துவிட்டு அவளிடம் ஓடி வந்தான்.

அதற்குள் அங்கிருந்தவர்கள் அவளை பிடிக்க முயல, யாராலும் அவளைக் கட்டுபடுத்த முடியவில்லை. அவள் அருகில் வந்தவன் மற்றவர்களை விலக்கி அவளை அணைத்துக் கொண்டான். ஆனால் அவளின் அழுகையை கட்டுபடுத்த நினைக்கவில்லை. நன்றாக அழட்டும், அப்போதுதான் அவள் மனம் அமைதியடையும், மனதில் உள்ள பாரம் முழுவதும் குறையும் வரை அவள் அழுது தீர்க்கட்டும் என்று நினைத்து அவளை தன் கைவளைவிலேயே வைத்திருந்தான்.

அழுது அழுது அப்படியே மயங்கியவளை அவளது அறையில் படுக்க வைத்து ஷானவியை முதலுதவி செய்ய சொல்லிவிட்டு, மற்றவர்களை அவளுக்கு துணைக்கு இருக்க செய்து, அவன் இறுதிச்சடங்கில் பங்கெடுத்தான். மூன்றாம் நாள் காரியம் முடிந்து அனைவரும் கிளம்ப ஆரம்பித்தனர். நிலாவுக்கு யார் யார் வந்தார்கள்… போனார்கள் என்றே தெரியாது…. பாதிநேரம் அழுகையிலும் மீதிநேரம் மயக்கத்திலுமே இருந்தாள்.

அகிலா வந்து பத்துநாட்கள் ஆகியிருந்ததால் வேறுவழி இல்லாமல் அவளும் கிளம்ப வேண்டிய கட்டாயத்தில் இருந்தாள். சிபியும் ஷானுவும் அகிலாவோடு அடுத்த நாள் போவதாக கூறியிருந்தனர். அதனால் நிலாவை இங்கே தனியே விடமுடியாது கூடவே அழைத்துப் போகலாம் என்று யோசித்தபோது 30 நாள் கழியாமல் இருவரும் வெளியே செல்லக்கூடாது என்று கூறிவிட்டனர். தன் தாயின் இழப்பை மறக்க இந்த முப்பது நாள் அவகாசம் நிலாவுக்கு சரியாக அமையும். அவளும் தன் தனிமை கூட்டிலிருந்து மெதுவாக வெளியே வருவாள். அதனால் அவர்கள் சொல்வது போல இங்கேயே இருக்கலாம் என்று முடிவெடுத்தான் சரண்.

புது மலர்கள் பூத்திடும் வேளை - மதுவதனி

சரணும் நிலாவும் தேனியிலேயே இருப்பதாக முடிவு செய்து…. அவர்களுக்கு ஆயிரம் கவனங்களையும், பத்திரங்களையும் கூறிவிட்டு மற்றவர்கள் அனைவரும் தங்கள் பயணத்தை தொடர்ந்தனர். விஜயா இறந்த செய்தி தாமதமாகத்தான் காசிராமன் மூலம் தெரிந்ததாக லத்திகாவும் வந்திருந்தார். அவர் வந்து நிலாவிடம் துக்கம் விசாரித்து அவளுக்கு ஆறுதல் கூறிவிட்டு. சரணிடமும் பேசிவிட்டு சென்றார். அப்போது அவன் லத்திகாவிடம் அன்று நிலாவைக் காப்பாற்றியதற்காக நன்றி தெரிவித்தான்.

அவனைப் பார்த்து வியந்து அன்று நடந்தவைகளை அவருடைய பார்வையில் எடுத்துச் சொன்னார். மேலும் நிலாமேல் அவனுக்கிருந்த காதலை எண்ணி பாராட்டி எந்த நேரமும், எந்த உதவி என்றாலும் அவரை அழைக்கலாம் என்று தன் பெர்சனல் எண்ணையும் கொடுத்துவிட்டு சென்றார். பதினாறாம் நாள் காரியங்கள் சிறிய அளவில் நடைபெற்று முடிய… அதுவரை இருந்த ஒன்றிரண்டு உறவினர்கள் கூட சென்றுவிட… வீடே அமைதியாய் இருந்தது. இத்தனை நாளில் அவன் மனைவி அவனிடம் ஒரு வார்த்தை கூட பேசவில்லை,

விஜயாவின் அறையிலேயே வாசம் செய்தாள். எந்நேரமும் அழுகை… இல்லை ஏதாவது ஒரு யோசனை இப்படியே இருந்தாள். அவளிடம் சென்று பேசினால் அவள் அவனைத் திரும்பியும் பார்ப்பது இல்லை. அப்படியே பார்த்தாலும் அது ஒரு குற்றம் சாட்டும் பார்வை பார்த்துவிட்டு ஒதுங்கிவிடுவாள். சரண் எத்தனயோ முறை கெஞ்சியும் கொஞ்சியும் பார்த்தும் முடியாமல் போக, அவர்கள் வீட்டுக்கு வந்தால் கொஞ்சம் கொஞ்சமாக சரி செய்து விடலாம் என்று நினைத்து அவளை அவள் போக்கிலேயே விட்டான். இதில் இருவருமே வயிற்றில் வளரும் அந்த குட்டி ஜீவனை மறந்தனர்.

நிலா திருச்சிக்கு வந்த பிறகு ஆசிரம வேலைகளை காசிராமன் பார்த்துக் கொண்டாலும், அதில் சரணின் மேற்பார்வை இருந்தது. இப்போது பாதியில் நிறுத்தியிருந்த வேலைகளை முடிக்க இந்த இடைவெளியை பயன்படுத்திக் கொள்ளலாம் என முடிவு செய்து அதில் இறங்கினான். பகல் முழுவதும் தீபகாருன்ய வேலைகள் என்றால், இரவு முழுவதும் தான் ஆபிஸ் வேலைகள் என்று அவனும் தன் கவனத்தை அதில் முழுமுச்சில் செலுத்தினான்.

புது மலர்கள் பூத்திடும் வேளை - மதுவதனி

# புது மலர்கள் பூத்திடும் வேளை…!

நிலா சிறிது சிறிதாக தன்னைச் சுற்றி நடப்பதை கிரகிக்க ஆரம்பித்தாள். அதில் அவளை மிகவும் பாதித்தது சரண் அன்று ஏதோ மீனாப்பற்றி சொல்ல வந்ததும், அதன்பிறகு அவன் அதை அப்படியே விட்டதும் ஞாபகத்திற்கு வந்தது. ஒருவேளை அந்த மீனா மீண்டும் பிரச்சினை செய்கிறாளா..? அதனால் அவன் அப்படி இருந்தானா..? அப்படியென்றால் என்னிடம் சொல்ல ஏன் தயங்க வேண்டும்.... அது இல்லை... வேறு ஏதோ இருக்கிறது... அப்படி வேறு என்ன பிரச்சினை இருக்கும்... அவனிடம் கேட்கலாமா..? இல்லை வேண்டாம் அவனே வந்து சொல்லட்டும்...

அன்று அவன் கூப்பிட்டதும் ஏன் எதற்கு என்று கேட்காமல் அவன் பின்னாடியே போனதால் தான் நான் இன்று தனியாக இருக்கிறேன். இவனுடன் போகாமல் இருந்திருந்தால் என் அம்மா இன்னும் சில நாள் என்னோடு இருந்திருப்பார்கள். எல்லாம் இவனால்தான். எது செய்ய வேண்டும் என்றாலும் அக்காவிடம் கேட்கவேண்டும்... ஏன்...? என்னிடம் கேட்க வேண்டாம்.. ஆனால் செய்து முடித்ததும் சொல்லவாவது செய்யலாம்... எதுவும் சொல்வதுமில்லை... கேட்பதுமில்லை....

ஆனால் இவன்மேல் இருக்கும் நம்பிக்கை மட்டும் குறையக்கூடாது என்றால் எப்படி..? என்று மனம் போன போக்கில் யோசிக்க ஆரம்பித்தாள். ஏற்கனவே மனஸ்தாபத்திலும், குழப்பத்திலும் இருந்த மனம், தேவையில்லாததை எல்லாம் யோசித்து மேலும் மேலும் அவன் மேல் கோபத்தை உருவாக்கிக் கொண்டது. அதுவே அவர்களை பிரிக்க மீண்டும் வழிவகை செய்தது.

**வேளை தொடரும்……..**

புதுமலர்கள் பூத்திடும் வேளை - மதுவதனி

**வேளை - 35-2**

30-ஆம் நாள் காரியங்கள் ஆரம்பிக்க முதலில் பக்கத்தில் இருக்கும் சுருளி அருவி எனும் கோவில் ஸ்தலத்தில் சென்று அவர்களது தலையில் எண்ணெய் வைத்து தலை முழுகி அங்கிருக்கும் சுருளியப்பன் எனும் பெயர் கொண்ட முருகன் கோவிலில் தரிசனம் முடித்து, அங்கே இருந்த சாமியார்களை அழைத்து அன்னதானம் கொடுத்து வீடு வந்தனர். அன்று மாலை வீட்டிலேயே அவர்கள் உறவினரை அழைத்து விஜயாவின் படத்தை முதன்முதலாக வைத்து விளக்கேற்றினர்.

அகிலா மட்டுமே இந்த விசேசத்திற்கு வந்திருக்க.... சிபி-ஷானு இருவரும் தேர்வு வரமுடியவில்லை என கூறியிருந்தனர். அடுத்த நாள் மூவரும் கிளம்பலாம் எனும்போது நிலா தான் வரவில்லை என்று கூறிவிட்டாள் அகிலாவிடம். அவளுக்கு என்ன பிரச்சினை என்று எதுவும் தெரியவில்லை... ஆனால் இருவருக்குள்ளும் ஏதோ சரியில்லை என்று மட்டும் தெரிந்தது. ஆனாலும் நிலாவை எப்படியாவது சமதானப்படுத்திவிடும் நோக்குடன் குழந்தையைப் பற்றி பேசி கரைத்தாள்.

குழந்தை என்றதும் சற்று கரைந்தவள் கணவனின் மேல் இருந்த கோபம் அதை மேலும் கரையவிடாமல் செய்தது. தன் பிடியில் உறுதியாய் இருந்தால் நிலா. அகிலாவுக்கு நிலாவின் பிடிவாதத்தைப் பார்த்து பயம் வந்தது. இருவரும் பேசி ஒரு முடிவுக்கு வரட்டும் என்று சரணிடம் மெதுவாக நிலாக் கூறியதைக் கூறி அவளிடம் பக்குவமாக பேசும்படி சொன்னாள்.

சரண் தேனீ வந்து இன்றோடு ஒன்றரை மாதங்கள் ஆகியிருந்தன. விஜயாவின் இறப்பு அவனுக்குமே பெரும் அதிர்ச்சிதான். அவனுக்கே இப்படி எனும்போது அவன் மனைவியின் ஒரே சொந்தம் அவர். அவளுக்கு அவனை விடவே அதிகமான அதிர்ச்சியாய் இருந்திருக்கும் அதிலிருந்து அவள் வெளிவர சிறிது நாட்களாகும். அதுவரை அவனும் அவளை சிரமப் படுத்தாமல் திருச்சி அழைத்துப் போனதும் வேறு வழியில் அவளை திசை திருப்பலாம் என்று முடிவு செய்திருந்தான். மேலும் அவனது வேலைகளும் முடங்கிப் போயிருந்தன. முடிந்தளவு ரவி உதவியிருந்தாலும் இவனே பார்க்க வேண்டிய வேலைகள் அதிகம் இருந்தன.

# புது மலர்கள் பூத்திடும் வேளை…!

அதனால் இந்தக் காரியங்கள் எல்லாம் முடிந்ததும் கிளம்பலாம் என்று நினைத்துக் கொண்டிருந்தவன் அகிலா சொன்ன செய்தியைக் கேட்டு கொதித்துப் போனான். இனி அவளிடம் தன்மையாகப் பேசினால் அவளை அவன் வழிக்கு கொண்டு வரமுடியாது, அதனால் அதிரடியாகத் தான் இதில் இறங்க வேண்டும் என்று முடிவு செய்து கொண்டான். அதற்கு காரணம் அவனால் நிலாவை அணுகவே முடியவில்லை.

என்ன பேசினாலும் அவளிடமிருந்து மௌனத்தை தவிர வேறு எந்த பதிலும் வருவதில்லை. அவனும் ஊருக்குப் போனதும் எல்லா விசயங்களையும் பற்றி பேசி தீர்த்து ஒரு சுமூகமான வாழ்க்கையை இருவரும் ஆரம்பிக்கலாம் என்று பொறுத்துப் போனான்.

தனக்கு முன்னே நின்றிருந்தவனைப் பார்க்கவே பயமாய் இருந்தது நிலாவுக்கு… இவ்வளவு கோபமாக பேசி அவள் பார்த்ததே இல்லை. திருமணமான அன்று கூட அவன் இத்தனைக் கோபத்தைக் காட்டியது இல்லை. ஆனால் இன்று……………..

அகிலா கூறியதும் கோபம் வந்தாலும் சிறிது நிதானமாகத்தான் அவளிடம் பேச வந்தான். அவன் வந்ததும் அவனை தவிர்ப்பதற்காக அவள் அறையை விட்டு வெளியேறவும் நிதானமாவது ஒன்றாவது என்று நினைத்தவன் அவள் கையைப் பிடித்து அங்கிருந்த சோபாவில் அமரவைத்து அவள் நகர முடியாதபடி ஒட்டி நின்றான்.

இதை எதிர்பார்க்காத நிலா கையை உருவ முயன்று தோற்று அவனைக் கோபமாக முறைக்க ஆரம்பித்தாள். அதை எல்லாம் கண்டுகொள்ளாமல் “நாளைக்கு நைட் நாம ஊருக்கு போறோம், இங்கு பண்ண வேண்டிய ஏற்பாடெல்லாம் முடிச்சிட்டேன். உன்னோட திங்க்ஸ் எல்லாம் பேக் பண்ணிடு..” என்றான்.

“நான் எங்கேயும் வரல… எனக்கு எங்கேயும் வரப் பிடிக்கல…” என்றாள் அவளும் கோபமாக…

“ஏன்” என்ற ஒற்றை வார்த்தை அழுத்தத்துடன் வந்தது சரணிடமிருந்து.

“எனக்குப் பிடிக்கல..” என்றாள் அவளும்

புதுமலர்கள் பூத்திடும் வேளை - மதுவதனி

“அதுதான் ஏன் பிடிக்கல... என்ன பிடிக்கல...” என்றான் சரணும் விடாப்பிடியாக....

“எதுவுமே பிடிக்கல... வாழப் பிடிக்கல... இந்த வாழ்க்கையே பிடிக்கல.... ஒன்னே ஒண்ணுதான் பிடிச்சிருக்கு.... சாகப் பிடிச்சிருக்கு.... சீக்கிரம் இந்த உலகத்தை விட்டுப் போக பிடிச்சிருக்கு...” என்று கோபமாக கத்தியவள் சரணின் ஒரு அறையில் அந்த சோபாவிலேயே விழுந்தாள்.

ஆள்காட்டி விரலை நீட்டி அவளை எச்சரித்தவன் “இதுக்கு மேல ஒரு வார்த்தைப் பேசக்கூடாது, என்னடி நினைச்சிட்டு இருக்க, என்னைப் பார்த்தா பைத்தியக்காரன் மாதிரி இருக்கா... உன் பின்னாடி நாய் மாதிரி அலைஞ்சு கெஞ்சிட்டு இருக்கேன்.... எதையும் கண்டுக்காம இருந்துட்டு.... இன்னைக்கு வந்து சாகப்போறேன்... அப்படின்னு கத்திட்டு இருக்க... என்ன பொம்பளடீ நீயெல்லாம்.... வயித்துல குழந்தை இருக்கிறது கூட உனக்கு தோணவே இல்லையா...”

“அப்போ என் குழந்தையும் சேர்த்து கொலை செய்ய முடிவு பண்ணிட்டியா.... ச்சே உன்கிட்ட இருந்து இப்படி ஒரு மோசமான செயலை எதிர்பார்க்கல... எப்படிடீ உனக்கு மனசு வந்தது. எப்படி.... நான்.... இந்தக் குழந்தை.... எதுவுமே உன் மனசுல பதியவே இல்லையா.... அப்படி என்ன இந்த வாழ்க்கையில உனக்கு விரக்தி வந்துடுச்சு.... நானும் போனாபோகுது அவளோட அம்மா... அவளுக்கு இருந்த ஒரே சொந்தம், அவங்களோட இழப்பை தாங்க முடியாம தவிக்கிறா... நாமளும் கொஞ்சநாள் விட்டுபிடிப்போம்னு நினைச்சா பேசிட்டே போற.... இதுக்கு மேல உன்கிட்ட எந்த ஒரு பதிலும் நான் எதிர்பார்க்கல.... நான் சொல்றதை மட்டும் தான் செய்ற... நாளைக்கு நைட் நாம கிளம்பறோம் அவ்ளோதான்.” என்றான் முடிவாக.

“இதுதான் உங்க முடிவா.... இதுக்கு என்னால் ஒத்துக்க முடியாது. என்னால அங்க வந்து இருக்க முடியாது... இந்த ஒருமாசம் உங்ககிட்ட நான் பேசாம இருந்ததுக்கே உங்களுக்கு இத்தனை வலி எடுத்தா.... இரண்டரை வருஷம் ஏன் எதுக்குனு தெரியாம... ஒவ்வொரு நாளும் யோசிச்சு யோசிச்சு பயந்து, பைத்தியம் பிடிக்காத குறையா... நான் இருந்ததுக்கு காரணம் நீங்கதான்னு உங்களுக்குத் தெரியுமா..?

நீங்க ஏன் இப்படி நடந்துக்குறீங்க... எதுக்கு இப்படி என்னை தள்ளி வச்சீங்க.... எதுவும் தெரியாம புரியாம என் மனசு எவ்வளவு கவலைப் பட்டிருக்கும்...?

அதெல்லாம் உங்களுக்கு சரின்னு பட்டுச்சா… அப்படி அதெல்லாம் சரியா பட்டுச்சுனா…. எனக்கு இதுவும் சரிதான்…” என்றாள் அவளும் அத்தனை நாள் மறைத்து மனதுக்குள் புழுங்கிக் கொண்டிருந்த கோபத்துடன்.

முதன்முறையாக அவளது கோபத்தைப் பார்த்தவன், அது நியாயமான கோபம் என்று புரிந்ததும் அவளிடம் தன்மையாக பேசினான். “நிலா எதுக்கும் எதுக்கும் முடிச்சு போடுற… அது வேறடா.. அதைப்பத்தி உன்கிட்ட முழுசா நானே ஒருநாள் சொல்றேன். நான் என்ன சொன்னேன்… என்மேல் வைத்த நம்பிக்கையை மட்டும் குறைச்சிடாதேனு… இப்போ நீ பேசுறதைப் பார்த்தா அந்த நம்பிக்கை ஆட்டம் கண்டுடுச்சுனு தோணுது… அப்படித்தான்னா…? அது தப்பு இல்ல…. என்மேலையும் தப்பு இருக்கு… உன்கிட்ட எல்லாத்தையும் மறைச்சது என்னோட தப்புதான். ஆனால் அதுக்கு நீ கொடுக்கிற தண்டனை ரொம்ப அதிகம்… தயவு செய்து புரிஞ்சுக்கோ…. நாம நம்ம வீட்டுக்கு போனதும் எல்லாம் விவரமா சொல்றேன்.”

“ஆமா…… உங்களைப் பத்தி எனக்கு என்ன தெரியும்…. உங்களை சுத்தி என்ன நடக்குது… என்ன சுத்தி என்ன நடக்குது… நீங்க எங்க போறீங்க… எப்போ வரீங்க… ஏன் கோபமா பேசுறீங்க… எதுக்கு சிரிக்கிறீங்க… எதுவுமே எனக்குத் தெரியாது…. நான் ஒவ்வொரு முறையும் அதைத் தெரிஞ்சிக்க முயற்சிக்கும் போது எதையாவது காரணம் காட்டி மறைக்கிறீங்க…”

“எதைக்கேட்டாலும் அக்காவைக் கேளுன்னு சொன்னா…. எனக்கு நீங்கதான புருஷன்.. உங்க அக்கா இல்லையே… நான் உங்கமேல வச்சிருக்க நம்பிக்கை ஆட்டம் காண காரணம் நீங்கதான். நீங்க சரியா இருந்திருந்தா நான் இன்னைக்கு இவ்ளோ பேசவேண்டிய அவசியமே இல்லை. நீங்க என் வாழ்க்கையில் வராம இருந்திருந்தால் என் அம்மா இப்போ உயிரோட இருந்திருப்பாங்க..” என்று கோபத்தில் என்ன பேசுகிறோம்.. ஏது பேசுகிறோம் வனத் தெரியாமல் வார்த்தைகளை விட்டாள் நிலா..

அவள் பேசப்பேச சரணின் கோபம் அதிகமாகிக்கொண்டே போனது அவனின் கைமுஷ்டி இறுகியதிலே தெரிந்தது. அவள் ஏதோ மனக்குழப்பத்தில் பேசுகிறாள். அவளது மனக்குமுறல்கள் எல்லாம் வெளியே வந்தால் அமைதியாகி விடுவாள் என்று நினைத்து அகிலாவைப்பற்றி பேசும்போது கூட அவன் தன் கோபத்தை வெளிக்காட்டவில்லை…. ஆனால் அவளின் அம்மா இறந்ததுக்கு அவன்தான் காரணம்… அவனை திருமணம் செய்தது தான் காரணம் என்றதும் அவன் உள்ளுக்குள் உடைந்தே போனான்.



புது மலர்கள் பூத்திடும் வேளை - மதுவதனி

# புது மலர்கள் பூத்திடும் வேளை…!

இத்தனை நாள் யாருக்காக அவன் இத்தனை கஷ்டம் பட்டானோ.. அவளே அவனை அசிங்கப்படுத்தியதை அவனால் தாங்கிகொல்லவே முடியவில்லை. ஆனால் தன்மேலும் தவறு இருக்கிறது என்றுதான் பொறுமை காத்தான். இனி அது தேவையில்லை… அவள்தான் அவனை அவன் மனதைப் பற்றி யோசிக்காமலே பேசிவிட்டாளே…. என்று நினைத்து அவளைப் பார்த்தான். அவள் இன்னும் பேசிக்கொண்டே இருந்தாள். ஆனால் எதுவுமே அவன் செவிகளுக்கு எட்டவில்லை.

இதற்குமேல் கேட்பதற்கு என்ன இருக்கிறது என யோசித்தவன் அவளைத் தன்புறம் திருப்பி "நாளைக்கு நாம போறோம்…. அதுல எந்த மாற்றமும் இல்லை… எனக்கு என்னுடைய குழந்தை ரொம்ப முக்கியம்…. அதை என்கிட்டே கொடுத்துட்டு நீ என்ன வேணும்னாலும் செய்துக்கோ… உன்னை ஒன்னும் சொல்ல மாட்டேன்.." என்றான் குரலில் வெறுமையைத் தேக்கி…

"நீங்க என்ன சொன்னாலும் நான் வரமாட்டேன்… அப்போ உங்க குழந்தை தான் உங்களுக்கு முக்கியமா… நான் என்ன ஆனாலும் பரவாயில்லையா…." என்றாள் மீண்டும் கோபத்துடன். அப்போது அவனுக்கு ஒரு போன் வர, எடுத்துப் பார்த்தவன் புது நம்பராக இருக்கவும் கட் செய்துவிட்டு நிலாவைப் பார்த்து "ஆமாம் எனக்கு என் குழந்தைதான் முக்கியம்… உன்னைப் பத்தி கவலைப் பட்டதுனலாதான் எனக்கு இத்தனைக் கஷ்டம், இனி எனக்கு எதுக்கு அந்த வேலை…. உன்னைப்பத்தி ஒரு கவலையும் எனக்கு இல்லை…."

"எனக்கு என் குழந்தை முழுசா… ஆரோக்கியமா என் கையில் நீ கொடுக்கணும்… அதுதான் எனக்கு முக்கியம்… அதுக்கு அப்புறம் நீ கேட்காமலே நான் உனக்கு டிவோர்ஸ் கொடுக்குறேன்….

எல்லாத்துக்கும் நீ ரெடியா இரு…" என்று அவளுக்கு மேல் கத்தியவன் மீண்டும் அதே எண்ணில் இருந்து போன் வரவும் ஏதோ அவசரம் போல என்று அதை எடுத்து கொண்டு அதிர்ந்து நின்றவளைப் பொருட்படுத்தாமல் வெளியேறினான்.

ஹாலில் இருந்த தனது அக்காவை, அவளைப் போய் பார்க்குமாறு செய்கையிலே கூறிவிட்டு காரில் ஏறி சீறிப்பாய்ந்தான். இருவருடைய வாக்குவாதங்களும் ஓரளவுக்கு அகிலாவிற்கும் கேட்கத்தான் செய்தது.

# புது மலர்கள் பூத்திடும் வேளை...!

இதை எப்படி சரி செய்வது என்றே தெரியவில்லை. இருவர் மீதும் தப்பில்லையே... இனி என்ன செய்வது என்று மனதிற்குள் புலம்பியவள் சரண் காரை எடுத்த விதத்தைப் பார்த்து பயந்து நிலாவின் அறை நோக்கி ஓடினாள்.

சரண் அவளை எப்படி விட்டுபோனானோ அதே நிலையில் தான் நிலா நின்றிருந்தாள். அவளது அதிர்ந்த தோற்றம்... சோர்ந்த முகம்... பார்க்கவே பாவமாக இருந்தது. அகிலாவைப் பார்த்ததும் தன்னை மறந்து புலம்ப ஆரம்பித்தாள். அவளுக்கு தண்ணீர் கொடுத்து அவள் அதிர்ச்சியில் இருக்கும் போது பீபி அதிகமானால் கொடுக்கும் மாத்திரையையும் கொடுத்து படுக்க வைத்தாள்.

ஆனால் நிலாவின் புலம்பல்கள் நின்றபாடில்லை... தன்போக்கில் புலம்ப ஆரம்பித்தாள். அப்போது அகிலா தன் தோழியான டாக்டர் ஷர்மியிடம் நிலாவைப்பற்றிக் கூறி அடுத்து என்ன செய்வது எனக் கேட்க.... அவரும் அவள் புலம்பல்களை நிறுத்த வேண்டாம்... அவள் மனதில் உள்ள கோபம், வெறுமை, எல்லாம் புலம்பல்களாக வெளியே வரட்டும்.... அதன்பிறகு அவள் தூங்கி எழும்பொழுது மனம் அமைதியாகி பழைய நிலாவாக இருப்பாள் என்று கூறவும் அகிலாவும் அதையே செயல்படுத்தினாள்.

நிலாவின் புலம்பல்களை கேட்ட அகிலாவிற்கு கண்களில் கண்ணீர் நிற்காமல் ஓடியது... அவளின் சிறுவயது முதல் நேற்று நடந்தது வரை அவள் மனதில் இருந்த ஆசைகளும் ஏக்கங்களும், கோபங்களும் புலம்பல்களாக வெளிவந்தது. அதிலும் அவள் இந்த வாழ்க்கையை வெறுத்துப் பேசியபோது அகிலாவே கேவி கேவி அழ ஆரம்பித்திருந்தாள். கொஞ்சம் கொஞ்சமாக தன்புலம்பல்கள் நின்று விசித்தபடியே உறங்கியிருந்தாள். அடுத்து என்ன செய்வது என்று அகிலாவுக்கு எதுவும் புரியவில்லை.

கோபமாக வெளியில் வந்த சரண் அந்த எண்ணுக்கு அழைத்தான். அவனை அதிகம் காக்க வைக்காமல் எடுத்தது மீனாதான். இருந்த பிரச்சினைகளில் அவன் அவளை மறந்தே விட்டிருந்தான். இப்போது ஏன் அழைக்கிறாள் என்று எரிச்சலும் கோபமும் வந்தது... இருந்தும் அதைக் கட்டுப்படுத்தி விட்டு அவள் பேசுவதைக் கேட்டான்.

“என்ன Mr.அத்தான்.... மாமியார் வீட்டுலையே டேரா போட்டுட்டீங்க போல, நான் சொன்ன கண்டிசன் மறந்துடுச்சா....”

புது மலர்கள் பூத்திடும் வேளை - மதுவதனி

"ஹ்ம்ம்…. அது எப்படி மறக்கும்…. போககூடாது…. சம்பிரதாயம்… அது, இதுனு என்று சொல்லியிருக்காங்க… இன்னும் ரெண்டு நாள்ல வந்துடுவேன்.."

"ஓகே… ஓகே.. உங்களை நம்புறேன்…. அப்புறம் நம்ம அட்சயனும், அட்சராவும் உங்ககிட்ட பேசணுமாம்…. பேசுறீங்களா….?"

"என்னது அவங்களா… குட்டீஸ் ஊருக்கு வந்துருக்காங்களா… இருக்காதே… இப்போ லீவ் கூட கிடையாதே… அக்காவும் ஒன்னும் சொல்லலையே…. அப்போ… அப்போ… நீ ஏற்காடு போயிருக்கியா..?

"ஹாஹா… என் ஸ்மார்ட் அத்தான் கரெக்டா கண்டுபிடிச்சிட்டீங்க… நான்தான் ஏற்காடு வந்துருக்கேன்… ட்ரம்ப் கார்ட் இல்லாம உங்களை மிரட்ட முடியுமா…? நான் என்ன சின்ன பிள்ளையா…?"

"ஏய்ய்ய்யி…. உனக்கு ஒரு தடவை சொன்னா புரியாது… நான்தான் நீ சொல்ற மாதிரி கேட்கறேன்னு சொல்லிட்டேனே… அப்புறமும் ஏண்டீ குழந்தைங்களை வச்சு விளையாடுற… அதுங்க ஒன்னும் தெரியாத பிஞ்சு குழந்தங்க டீ…."

"இப்போ நீங்க சொன்னா எல்லாமே உங்களுக்கு ஞாபகம் இருந்தா சரிதான். என்னை ஏமாத்தணும்னு மட்டும் நினைச்சிடாதீங்க… இன்னும் ரெண்டு நாள்ல திருச்சியில் மீட் பண்றேன். பாய் அத்தான்." என்று போனை அனைத்து விட்டாள்.

மீனா போனை வைத்ததும் ஸ்டியரிங்கில் முகத்தைப் புதைத்து கொண்டான். இன்னும் எத்தனை அடிகள் தான் தாங்க வேண்டியதிருக்கும்… இவளால்தானே எல்லா பிரச்சினையும்… இவளைக் கொலை செய்தால் கூட என் ஆத்திரம் அடங்காது… பொண்ணாச்சேனு பொறுமையா போனால், அளவுக்கு அதிகமா போறா… இவளுக்கு முதலில் ஒரு முடிவு கட்டுறேன். அதுக்குப் பிறகு தெரியும் இந்த சரண் யாரென்று….. என்று நினைத்தவன்,

புது மலர்கள் பூத்திடும் வேளை - மதுவதனி

அதற்கு பிறகு நொடியும் தாமதிக்காமல் அகிலாவிற்கு போன் செய்து நிலாவின் நிலைப்பற்றி முழுதும் கேட்டறிந்தான். அதன் முடிவாக அவளுக்கு இப்போது தேவை தனிமையும்…. தாயிற்கு நிகராக பாசம் காட்டும் ஒரு உறவும்தான் என்று உறுதியாக நினைத்தான். அவள்மேல் அவனுக்கு கோபமே வரவில்லை. அந்த நேரம் அவள் சாவைப்பற்றி பேசியதும் உண்டான கோபத்தில் அடித்து விட்டாந்தான். ஆனால் அதன்பிறகு யோசித்ததில் அவளுடைய தவறென்று எதுவுமே இல்லை என்பது புரிந்தது. எல்லாத் தவறும் அவனது மேல்தான் என்பதும் புரிந்தது. அதற்கு தீர்வாக அவன் அடுத்தடுத்து செயல்களில் தீவிரமாக இறங்கினான்.

சிபியை அழைத்து மல்லிகாவை உடனே திருச்சி வர வைத்தான். ரவியிடம் பேசி அவனது பண்ணை வீட்டை அன்றே விலைக்கு வாங்கி நிலாவின் பெயரில் மாற்றினான். வீட்டிற்கு வந்தவன் உறங்கிய மனைவியை கண்களால் தழுவி, அழுது சோர்ந்த முகத்தை வருடி நெற்றியில் இதழ் பதித்தான். அகிலாவிடம் வந்து உடனே திருச்சிக்கு கிளம்புவதாகவும், இரண்டு நாட்களில் வந்து அவர்களை அழைத்துச் செல்வதாகவும் , அடுத்து அவன் செய்த ஏற்பாட்டையும் கூறிவிட்டு, அகிலா மறுத்துக் கூறிய எதையும் காதில் வாங்காமல் திருச்சி வந்தான்.

அங்கு வந்தவன் ஷர்மியிடம் அவளது உடல்நிலைப்பற்றி அனைத்தையும் கூறி என்ன செய்வது எனக்கேட்க, அவளோ அவன் கூறுவதையெல்லாம் கேட்டு… கணக்கு பார்த்தவள் மூன்று மாதங்கள் முடிந்திருக்கும் என்று நம்பினாள். மூன்று மாதங்கள் வரை எந்த ஒரு ட்ரீட்மெண்டும் எடுக்காமல் இருந்ததைப் பார்த்து அவனை வறுத்து எடுத்து விட்டாள். ஆனாலும் அவனின் நிலையையும் உணர்ந்து அவனிடம் தன் கோபத்தைக் கைவிட்டு அவள் பார்த்துக் கொள்வதாக வாக்கு கொடுத்தாள்.

அடுத்து ஒரு செக்யுரிட்டி ஏஜென்சியிடம் நிலாவின் பாதுகாப்பிற்கு இரண்டு ஆட்களை வைத்தான். மீனாவைக் கண்காணிக்க ஒரு ஆளையும் ஏற்பாடு செய்தான். தன்னுடைய மாமாவிடம் எதைப்பற்றியும் கூறாமல் பள்ளிக்கு அழைத்து மீனா வந்து அழைத்தால் குழந்தைகளை வெளியே அனுப்ப வேண்டாம் என்று கூறிவிட்டான். அவர்களின் ஏன் எதற்கு என்ற கேள்விகளுக்கு டொனேசன் எனும் பெயரில் பெருந்தொகையைக் கொடுத்து வாயை அடைத்தான். அதன்பிறகுதான் அவனுக்கு மூச்சு சீரானது.

இங்கு காசிராமனின் மனைவியிடம் நிலா-சரண் விஷயத்தை மேலோட்டமாக அகிலா கூற… அவர்கள் ஒரு ஜோசியரிடம் அழைத்து சென்றார்கள்.

அங்கு இருவரின் ஜாதகமும் அலசி ஆராயப்பட அதில் குழந்தை பிறக்கும் வரை இருவருமே தனித்தனியாக இருப்பதே நல்லது… இல்லையென்றால் இருவருக்குமே ஆபத்து என்ற பெரிய குண்டைத் தூக்கிபோட….. நிலைகுலைந்து போனாள் அகிலா.

நிலா இப்போது அமைதியாக, பொறுமையாக யோசித்தாள். அவனிடம் தான் நடந்து கொண்ட முறை எத்தனை அசிங்கமானது என்று நூறாவது முறையாக வருத்தப்பட்டாள். அவனை திருமணம் செய்தது தப்பென்று சொன்னது அவனுக்கு எவ்வளவு வருத்தமாக இருக்கும்… அவன் முகமே கருத்துப்போனதே….

இத்தனை நாள் பொறுமையாக இருந்தா நான் இப்போது மட்டும் ஏன் இப்படி ஆகிப்போனேன். போய்விட்டானே… என்னை விட்டு போய்விட்டானே…. திரும்பி வரமாட்டானா…. அவன் சொன்னதுபோல் டிவோர்ஸ் கொடுத்து விடுவானா… நான்எப்படி அப்படி நினைத்தேன்…. அவன் கூறியதில் தப்பே இல்லையே…. நான் குழந்தையைப் பற்றி கூட யோசிக்க வில்லையே…தாய்மையை உணராத பெண் ஜென்மமா நான்…?

கடவுளே இன்னும் எத்தனைக் கஷ்டங்களை எனக்கு தரப்போகிறாய்…? என் கணவன் எனும் உறவையாவது எனக்கு என்னிடம் நிரந்தரமாய் கொடு… என்று மனதிற்குள்ளே அரற்றிக் கொண்டிருந்தாள். மூவரும் அவரவர் வேதனையிலும் சோதனையிலும் மூழ்கியிருந்தனர். இது எதுவுமே இவர்களைத் தவிர வேறு யாருக்கும் தெரியவில்லை… தெரிய விடவில்லை சரண்..

இரண்டு நாட்கள் கழித்து திரும்பி வந்தவன்… மற்ற இருவரையும் அழைத்துக்கொண்டு மீண்டும் திருச்சி சென்றான். திருச்சி வந்தவன் அவர்கள் வீட்டிற்கு போகாமல் நேராக அவன் வாங்கிய பண்ணை வீட்டுக்கு வந்தான்…. ஏன் எதற்கு என்ற நிலாவின் கேள்விகளுக்கு ஜாதகத்தை காரணம் காட்டினாள் அகிலா…

நிலா சரணிடம் பேசப்போக அவளை கைகாட்டி தடுத்தவன் “இனி நீ என்னைப் பார்க்க வேண்டிய அவசியம் இல்லை…. நீ தனியாக இருக்கலாம்… உன்னைத் தொல்லை செய்ய யாரும் இருக்க மாட்டோம்… நீயும் எதற்கெடுத்தாலும் யாரிடமும் கேட்க வேண்டாம். எனக்கு என் குழந்தை மிகவும் முக்கியம்… அதற்கு எந்தக் குறையும் வரக்கூடாது…” என்றான் வெறுமையாக.

புதுமலர்கள் பூத்திடும் வேளை - மதுவதனி

# புது மலர்கள் பூத்திடும் வேளை...!

அவள் அதிர்ந்து "பாவா.... அது நான் ஏதோ... கோவத்துல..... தெரியாமா..." என வார்த்தைக்கு தடுமாற, மீண்டும் அவள் பேச்சை நிறுத்தியவன் "இனி என்னை அப்படிக் கூப்பிடாதே.... இதுதான் என் முடிவு..." என் நிர்தாட்சண்யமாய் கூறிவிட்டு வெளியேறினான்... முடிந்தது... எல்லாமே முடிந்தது.. தன் அவசரத் தனத்தினால் இன்று தன் பொன்னான வாழ்க்கையை இழந்துவிட்டாளே.... என்று மனம் ஊமையாய் அழுதது...

அவனுக்கு கொடுத்த வலிக்கு சமமாய் இந்த நிலை தனக்கு தேவைதான் என்று மனதார ஏற்று அவனோடு நினைவிலும், கனவிலும் வாழ ஆரம்பித்தாள். ஷர்மி இந்தக் குழந்தையை அபார்சன் செய்து விடலாம் என்று சொல்லும்போது , எனக்கு என்ன ஆனாலும் பரவாயில்லை, குழந்தைகள் நல்லமுறையில் அவன் கையில் கொடுக்க வேண்டும் என்று உறுதியாக சொல்லிவிட்டாள். அதை ஷர்மி மூலம் தெரிந்த சரண் என்ன உணர்ந்தான் என்றே தெரியவில்லை... ஆனால் அவளது முடிவில் மிகவும் ஆடிப்போயிருந்தான்.

ஷர்மிதான் அவனுக்கு ஆறுதல் கூறி தாயையும் சேயையும் நல்லமுறையில் உன்னிடம் சேர்க்கிறேன் என்று வாக்கு கொடுத்து, நிலாவுக்கு பல வழிமுறைகளில் ட்ரீட்மென்ட் கொடுக்க ஆரம்பித்தாள். அன்று நிலாவை விட்டுவிட்டு சென்றவன் தான் அதன் பிறகு அவன் நிலாவை வந்து வீட்டில் பார்க்கவில்லை..

ஆனால் அவள் செல்லும் கோவில், ஹாஸ்பிடல், பார்க் என்று எல்லா இடத்திலும் தவமிருக்க ஆரம்பித்தான் அவளுக்காக... மல்லிகாவிடமும் ஷர்மியிடமும் பேசி அவளது உடல்நிலையையும், குழந்தைகளின் வளர்ச்சி பற்றியும் அறிந்து கொண்டான். அக்கம் பக்கம், உறவினர்கள் கேட்டதற்கு ஜாதகத்தை காரணம் காட்டினார்கள். ஆத்தாவும் இரண்டு மாதத்திற்கு ஒருமுறை வந்து பார்த்து சென்றார்.

ஷர்மியிடம் நிலா கூறியதைக் கேட்டதை அறிந்த சரண் அவள்மேல் கோபம் கொண்டாலும், அன்று அவன் பேசியதும் தவறுதானே என்று புரிந்து அவளுக்கு பாசிடிவ் திங்கிங் கவுன்சிலிங் கொடுக்கும்படி கேட்டுகொண்டான். இரட்டைக்குழந்தைகள் என்பது சரணுக்கு தெரியும் என்று நிலாவுக்கு தெரியாது... அவளை சுற்றி அனைவரும் அவளுக்கு பாதுகாப்பு வலையமாகவே மாறிப்போயிருந்தனர். அவளின் ஒவ்வொரு அசைவும் சரணிடம் ரிப்போர்ட் ஆகிறது என்று அவளுக்கு தெரியாது.

புதுமலர்கள் பூத்திடும் வேளை - மதுவதனி

# புது மலர்கள் பூத்திடும் வேளை…!

நிலா ஷர்மி தனக்கு உதவுகிறாள் என்றே நினைத்துக் கொண்டிருந்தாள். மீனாவால் யாரையும் நெருங்க முடியாமல் செய்தான். பள்ளிக்கு சென்று கேட்டால் அவர்கள் இவளை குழந்தைகளை பார்க்க கூட அனுமதிக்கவில்லை. குழந்தைகளை விட்டு நிலாவிடம் நெருங்கலாம் எனும்போது அவளது வீட்டைக் கூட பார்க்கமுடியவில்லை மீனாவால். அதனால் அகிலாவிடம் நிலாவின் பெயிண்டிங்கைப் பார்ப்பதாக கூறி அங்கு சென்றாள்.

அகிலாவும் மீனாவின் மேலேயே தன் பார்வையை வைத்திருந்ததால், அவளது அசைவுகளை வைத்தே மீனாவின் அடுத்த திட்டத்தை கண்டுபிடித்து விடுவாள். அதனால் இப்போது மீனாவைப் பற்றி எந்த கவலையும் இருக்கவில்லை யாருக்கும்… ஆனால் அவள் இப்போது அமைதியாக இருப்பதே ஏதோ பெரிய பிரச்சினையை கொண்டு வரப்போகிறாள் என்றுதான். அதனால் இன்னும் அவள் மேல் அதிக கவனம் வைத்தாள்.

மீனாவும் சரணை நெருங்க பல வழிகளில் முயற்சித்து தோற்று கொண்டிருந்தாள். அவளது ஒவ்வொரு செயலும், அடுத்து என்ன செய்ய போகிறாள் என்பது வரை அவனுக்கு அப்டேட் ஆகிக்கொண்டிருந்தது. இன்றைய வளைகாப்பு விழாவிலே அவளுக்கும் ஒரு முடிவு கட்டிவிடலாம் என்று நினைத்தான்.

தன் கடந்த கால நிகழ்வுகளை மனைவியை அணைத்தபடியே நினைவு கூர்ந்தவன், கதவு தட்டும் ஓசையில் நிகழ்வுக்கு வந்தான். யாரென்று பார்க்கலாம் என மனைவியை அழைக்க நினைத்தவன் அவளைப் பார்க்க, அவளோ அவன் மேல சாய்ந்தாவரே தூங்கியிருந்தாள். அதைப்பார்த்தவனுக்கு என்ன முயன்றும் சிரிப்பை அடக்க முடியவில்லை. என்னடா இவ எப்போ பார்த்தாலும் தூங்கிட்டு இருக்கா… நாம பக்கத்துல இருக்கும்போது மட்டும் தான் தூங்குறா… என்று நினைத்தவன் அவளை மெத்தையில் கிடத்திவிட்டு கதவை திறந்தான். அங்கு அவனது படைத் தளபதிகள் இருவரும் குறும்பு புன்னைகையுடன் நிற்பதை பார்த்து அசடு வழிய புன்னகைத்தான் சரண்…

**வேளை தொடரும்……..**

புது மலர்கள் பூத்திடும் வேளை - மதுவதனி




வேளை - 36

**************************************************************************************************

வண்ண வண்ண எண்ணங்களும்
வந்து விழும் உள்ளங்களும்

வானின் மீது ஊர்வலம் போகின்ற காலங்களே
சின்ன சின்ன மின்னல்களும்

சிந்தையின் பின்னல்களும் சேரும்போது தோன்றிடும்
ஆயிரம் கோலங்களே

இன்று முதல் இன்பங்கள் பொங்கி வரும்
இந்தமனம் எங்கெங்கும் சென்று வரும்
காவிய ராகம் காற்றில் கேட்கும் காலங்கள் ஆரம்பம்

**************************************************************************************************

# புது மலர்கள் பூத்திடும் வேளை…!

தன் அருகே சிறு குழந்தையென உறங்கும் மனைவியைப் பார்த்து மலையளவு வேதனை கொண்டான் அஸ்வத். அழுதழுது சோர்ந்து போயிருந்தாள். "குட்டிம்மா என்னை மன்னிச்சிடுடா, நான் பாவிடா, நான் பாவி… ஐய்யோ… இப்போ நான் என்ன செய்வேன், நானே என் குட்டிம்மா வாழ்க்கையைக் கெடுத்துட்டேனே, அம்மாவை கடைசியா ஒரு தடவை கூட பார்க்க முடியாம போயிடுச்சே, என்னோட சுயநலத்தால, என் குடும்பம் இந்த நிலைமைக்கு போயிடுச்சே, என்னை அந்தக் கடவுள் கூட மன்னிக்கமாட்டார்" என்று தலையில் அடித்துக் கொண்டு அழுத தன் மனைவியை சமாதனப்படுத்தும் வழி தெரியாமல் தவித்தான்.

தூக்கத்தில் கூட புலம்பியவாறே படுத்திருந்தவளின் தலையை வருடியவாறே சற்று முன் நடந்ததை நினைத்துப் பார்த்தான். கடந்த சில நாட்களாக அஸ்வத் மிகவும் அமைதியாகக் காணப்பட்டான். பெரியவர்களும் அப்படியேதான் இருந்தார்கள். குழந்தைகளிடம் கூட அவன் அமைதியாக இருந்தது அவளுக்கு உறுத்த ஆரம்பித்தது.

அஸ்வத்தைப் பொறுத்த வரை வெளியில் எத்தனை ஸ்டிரிக் ஆபீசரோ, அதற்கு எதிர் மறையாக வீட்டில் அவ்வளவு குறும்பு பிடித்தவன். பிள்ளைகள் அமைதியாக இருந்தால் கூட அவர்களை வம்புக்கு இழுத்து, அவர்களிடம் சண்டையிட்டு சமாதானமாகி, மற்ற மூவரையும் ஒரு வழி ஆக்கி விடுவான். அவன் இருக்குமிடம் எப்போதும் கலகலப்பாய் தான் இருக்கும்.

அப்படி இருப்பவன் சில நாட்களாக அமைதியின் சிகரமாய் இருப்பது இளமதிக்குள் உறுத்த ஆரம்பித்தது. மேலும் அவன் அடிக்கடி இரண்டிரண்டு நாட்களாக சென்னை பயணமும் செய்கிறான். என்னவென்று கேட்டால், வேலை அது சம்பந்தமான பிரச்னை என்கிறான்.

பெரியவர்களிடம் கேட்டாலும் சரியான பதில் இல்லை, மாறாக அவர்கள் பார்க்கும் பார்வையும் மாறிருந்தது. அன்பாக பார்த்த பார்வையில் இப்போது பரிதாபமும் சேர்த்திருந்து. ஏன் எதற்கு என்ற கேள்விகள் வண்டாய் மனதைக் குடைய இன்று எப்படியும் கணவனிடம் கேட்டு விட வேண்டும் என்ற முடிவோடு குழந்தைகளைப் பெரியவர்களோடு படுக்க வைத்து விட்டு தங்கள் அறைக்கு வந்தாள் இளமதி.

புது மலர்கள் பூத்திடும் வேளை - மதுவதனி

# புது மலர்கள் பூத்திடும் வேளை…!

கட்டிலில் சாய்ந்து அமர்ந்திருந்த கணவனைப் பார்த்தவள், அவன் அருகே சென்று தோளில் கைவைக்க, அதை உணர்ந்தவன் அவளை இழுத்து தன் மடியில் உட்காரவைத்துக் கொண்டான். சிறிது நேரம் எதுவும் பேசவில்லை, அமைதியாக சில நிமிடங்கள் கழிந்தது. அவனிடம் பேசவேண்டும் என்று வந்துவிட்டாலும், என்ன பேசுவது.... எங்கிருந்து ஆரம்பிப்பது என்றே தெரியவில்லை.

மேலும் அவளுக்குத் தெரிய வேண்டிய விசயமாக இருந்தால் கண்டிப்பாக சொல்லியிருப்பார்கள். இவர்கள் சொல்லவில்லை என்றால் அது தனக்கு தேவை இல்லையோ...? ஆனால் கணவன் படும் கஷ்டத்தைப் பார்த்து தெரிந்து கொள்ளாமலும் இருக்க முடியவில்லை அவளால்.

இப்படி யோசித்துக் கொண்டிருந்தவளை "மதிம்மா.." என்று அழைத்தான். அவனது அழைப்பிலேயே அவன் ஏதோ பெரிய விஷயம் பேசப்போகிறான் என்பதை உணர்ந்தவள், அப்படியே திரும்பி அவனைப் பார்த்தவாறு அமர்ந்தாள்.

தன்னையே பார்க்கும் மனைவியின் முகத்தை இரு கைகளாலும் தாங்கிப் பிடித்தவன், அவள் கண்களை நேராக நோக்கி "மதிம்மா.... நான் சொல்ல வர்றதைப் பொறுமையா, அவசரப்படாம கேட்கணும். இடையில் எதுவும் பேசக்கூடாது. அதோட நான் சொல்லி முடிச்சதும் நீ தப்பா எந்த முடிவும் எடுக்க கூடாது."

"அப்படி ஒரு எண்ணம் உன் மனசுல வந்துட்டா, நானும் குழந்தைகளும் உன்னை எந்த வகையிலும் பாதிக்கலைன்னு அர்த்தம். நீ எங்க மேல பாசமா இல்லைன்னு அர்த்தம்.." என்று அவன் பேச.... "என்ன பாவா.... என்னென்னமோ பேசுறீங்க... எனக்கு பயமா இருக்கு என்னனு சொல்லுங்க பாவா... ப்ளீஸ்" என்ற குறுக்கிட்டாள்.

"நான் என்ன சொன்னேன் நடுவுல பேசாதேன்னு தான... நீ என்ன பண்ற... இன்னைக்கு உன்கிட்ட எல்லாத்தையும் சொல்லிடுற முடிவோடுதான் இருக்கேன். அதனால் பதட்டப்படாம நான் சொல்லப் போறதைக் கேளு.. மேலும் உன்கூட எப்பவும் நாங்க இருப்போம்... நீ பயந்துக்காத... தேவையில்லாம மனசைக் குழப்பிக்காத.... முதல்ல எனக்கு ப்ராமிஸ் பண்ணிக்கொடு" என்று தன் கையை நீட்டினான் அஸ்வத்.

புதுமலர்கள் பூத்திடும் வேளை - மதுவதனி

# புது மலர்கள் பூத்திடும் வேளை…!

“ஏற்கனவே ஒரு தடவை சுயநலமா முடிவெடுத்துதான் ஒரு குடும்பத்தையே அசிங்கப்படுத்திட்டு வந்தேன்…. மறுபடியும் அப்படி ஒரு தப்பை செய்யமாட்டேன்…. என்னை நீங்க நம்பலாம், இப்போ சொல்லுங்க…” என்றாள் கசப்பான ஒரு முறுவலுடன்.

அவள் அப்படிக் கூறியது அவனுக்கு கஷ்டமாக இருந்தாலும், தான் இந்த விசயத்தை பேசியே ஆகவேண்டிய கட்டாயத்தில் இருந்ததால்…. அவளைப் பார்க்காமல் தன் பேச்சை ஆரம்பித்தான். “இளா உனக்கு கொஞ்சநாளா சந்தேகமா இருக்கும் என்மேல… நான் நார்மலா இல்லை… உன்கிட்ட எதையோ மறைக்கிறேன்… அப்படியெல்லாம் தோணியிருக்கும்….. உண்மைதான்.”

“எனக்கு கொஞ்சநாட்கள் முன்னாடி சில உண்மைகள் தெரிய வந்தது. அது தெரிஞ்சதில் இருந்து என்னால உன்கிட்ட நார்மலா ரியாக்ட் பண்ண முடியல… ஆனா இப்போ உன்கிட்ட எல்லாத்தையும் சொல்ல வேண்டிய அவசியம் வந்துடுச்சு….

இதுக்குமேல என்னாலையும் மறைக்க முடியாது… எனக்கும் மூச்சு முட்டுது.” என்று கண்களை இறுக மூடித் திறந்தவன். “நான் வேலை விஷயமா அடிக்கடி சென்னை போயிட்டு வந்தேன்னு சொன்னது பொய். நான் போனது திருச்சிக்கு…” என்றதும் அவள் முகத்தில் அப்பட்டமான அதிர்ச்சி….

அந்த அதிர்ச்சி சிறிது சிறிதாக கோபமாக மாறியது. அவள் முகத்தையே பார்த்தவன் அடுத்து என்ன சொல்ல போகிறாள் என்று பார்க்க… “ஏன் இப்படி செஞ்சீங்க… நான் அவங்களைப் போய் பார்க்க கூடாது… என்று சொல்லியும் நீங்க செஞ்சா என்ன அர்த்தம், என்னோட உணர்வுகளுக்கு மதிப்பே இல்லையா….. என்னைப்பத்தி தெரிஞ்சா அவங்க தாங்க மாட்டாங்களே..” என்று அவன் சட்டையைப் பிடித்து உலுக்க….

அஸ்வத்தின் கோபம் எல்லையைக் கடந்தது “போதும் நிறுத்து இளா… இதுக்கு மேல எதுவும் பேசக்கூடாது… உன்னைமாதிரி ஒரு செல்பிஷ் பெர்சனாலிடிய பார்த்ததே இல்லை…. என்ன பொண்ணு நீ…. இத்தனை நாள் கழிச்சு சொல்றேன்… எப்படி இருக்காங்க…? என்ன பண்றாங்க..? எதுவும் கேட்காம, ஏன் போனீங்க..? எதுக்கு போனீங்கனு… கேட்டுட்டு இருக்க… ச்சே……. என்ன சொன்ன… உன்னோட உணர்வுகளுக்கு மதிப்பு கொடுக்கலையா….? ஏன் சொல்ல மாட்ட….. அதுக்கு மதிப்பு கொடுத்ததுனாலதான் இந்த அஞ்சு வருசமும் உன்னைப்பத்தி எதையும் விசாரிக்காம நீ சொன்னதை மட்டும் நம்பியிருக்கோம்.”

புது மலர்கள் பூத்திடும் வேளை - மதுவதனி

“இல்லைன்னா எனக்கு ஒருநாள் போதும் உன்னைப்பத்தி தெரிஞ்சிக்க... பேசுறா பாரு...... என்ன தெரியும் உனக்கு.....? நீ வீட்டை விட்டு வந்ததுக்கு அப்புறம் அங்கே என்ன நடந்தது தெரியுமா...? ஒரு சின்ன பொண்ணுக்கு இருந்த அறிவும், பக்குவமும் கூட உனக்கு இல்ல..... உன்னையெல்லாம்....!!!!” என்று கோபமாக கத்தியவன், அவளது அதிர்ந்த முகம் பார்த்து, அவளிடம் “நான் சொன்னேன் தானா... குறுக்கே எதுவும் பேசாதேன்னு....... சொன்னா கேட்கணும்.... ஏன் இப்படி பண்ற...?” என்றான்.

“அம்மாவுக்கு என்னாச்சு....? குட்டிம்மாவுக்கு என்ன பிரச்சினை... இப்போ எங்கே அவங்க.... அம்மாவுக்கு ஒன்னுமில்லையே.... எல்லாமே என்னாலையா..? இப்படி எதுவும் ஆகிடக்கூடாதுனு தான நான் வீட்டை விட்டு வந்தேன்.... அப்படி இருந்தும் என்னாச்சு.....? சொல்லுங்க என்ன பிரச்சினை... அம்மா எப்படி இருக்காங்க...?” என்று இளமதி முகத்தை மூடிக்கொண்டு கதறவும் அஸ்வத்தால் பார்க்க முடியவில்லை.

அவளை நோக்கி “இளா நீ இப்படி ரியாக்ட் பண்ணா கண்டிப்பா என்னால் எதையும் உன்கிட்ட ஷேர் பண்ண முடியாது.... முதல்ல அழுகையை நிறுத்து.... நீ இப்போ ஒரு குடும்பத்தோட பொறுப்புகள் அதிகம் இருக்கிற மருமகள்... இரண்டு குழந்தைகளுக்கு அம்மா.... அதை மனசுல வச்சு நிதானமா நான் சொல்ல வர்றதைக் கேளு..... இதுக்கு முன்னாடி எப்படியோ...? ஆனா இதுக்கு பிறகும் நீ இப்படியே இருக்குறதை நான் விரும்ப மாட்டேன்.” எனவும்....

அவன் கூறிய எதுவும் அவள் மனதில் பதியவில்லை மாறாக, அவளின் குடும்பம் அவளால் ஏதோ பெரும் பிரச்சினையில் மாட்டியிருக்கிறது... அதுவும் அவளது செல்லத்தங்கை தன் நடத்தையால் பாதிக்கப்பட்டிருக்கிறாள் என்று புரிய.... அவர்களை பற்றித் தெரிந்து கொள்ள வேண்டிய அவசியத்தினால் முகத்தை அழுந்த துடைத்துவிட்டு அவன் சொல்ல வருவதைக் கேட்க ஆரம்பித்தாள்.

“இளா இதை நீ எப்படி எடுத்துக்குவனு எனக்கு தெரியல... நாங்க எல்லாரும் உன்னோட நல்லதுக்குத்தான் இப்படி பண்ணோம்... ஆனா அது தப்புன்னு இப்போ புரியுது... நீ இங்க வந்த கொஞ்ச நாளிலேயே உன்னை அழைச்சிட்டு போய் உங்க வீட்டுல காமிச்சிருக்கணும்.... அதை செய்யாம விட்டு எவ்ளோ பெரிய தப்பை செஞ்சிட்டோம்னு மனசு முழுக்க வருத்தமா இருக்கு.... அம்மாவும், அப்பாவும் எவ்ளோ வருத்தப்படுறாங்க தெரியுமா...?”

புது மலர்கள் பூத்திடும் வேளை - மதுவதனி

“அன்னைக்கு நீ மட்டும்தான் எனக்கு பெருசா தெரிஞ்ச…. உன்னை மேலும் மேலும் கஷ்டப்படுத்த என்னால முடியல, அதனால் நீ சொன்னதும் நாங்க யாரும் உன் குடும்பத்தைப்பத்தி எதையும் விசாரிக்கல, ஆனா உனக்குத் தெரியாம நானாவது தொடர்புல இருந்திருக்கணும்னு இப்போ தோணுது…” என்றவன் “நீ வீட்டை விட்டு வந்ததும்…. நீ நினைச்ச மாதிரியே தான் உங்கம்மா நம்பியிருக்காங்க… ஆனா தேனு நம்பவே இல்ல… அப்போ மட்டும் இல்ல…. இப்போவரைக்கும் நீ உயிரோடதான் இருக்கேனு நினைச்சிக்கிட்டு இருக்கா….” என்றவன்,

அவள் வீட்டை விட்டு வந்ததும், அவர்கள் குடும்பத்திற்கு ஏற்பட்ட அவமானம்…. சரண்-நிலாவின் சந்திப்பு…. நிலாவிற்கு நடந்த கொடுமை….. லத்திகாவின் வரவு…. விஜயாவிற்கு வந்த உடல்நலக்குறைவு….. அவர்களின் இரண்டு வருட குற்றாலத்தில் மருத்துவ வாசம்…. அதன்பிறகு சரணின் தேடல்…. நிலாவைக் கண்டு கொண்டது….”

“திருமணத்திற்கு கேட்டது…. அவள் மறுத்தது…. விஜயா அவளைக் கட்டாயப்படுத்தியது…. திருமணம் நடந்தது…. அதனால் அவன் பார்த்த பிரச்சினைகள்…. இருவரும் பிரிந்தது…. சரணின் சிங்கப்பூர் பயணம்… திரும்பி வந்ததும் தேனுவை அழைத்துசென்றது….

அவர்கள் இருவருக்குமிடையே மீனாவின் வருகை… அதனால் மீண்டும் பிரிவு…. நிலாவின் தாய்மை…. விஜயாவின் மரணம்….. இப்போது அவள் தனித்திருக்க என்ன காரணம்…. என்று எல்லாவற்றையும் கூறியவன்….. இன்னும் மூன்று நாட்களில் நிலாவிற்கு சீமந்தம் என்பதையும் சேர்த்து கூறினான்.

அனைத்தையும் கேட்ட இளமதி திக்பிரமைப் பிடித்தவள் போல் அமர்ந்திருந்தாள். மனைவியின் நிலைப் புரிந்து அவளை உலுக்க…. அதில் தன்னிலை உணர்ந்தவள், அவனது கையிலேயே தன் முகத்தைப் புதைத்துக் கொண்டு “இல்ல பாவா… அம்மாவுக்கு ஒண்ணுமில்ல…… என்னால நம்பமுடியல…. அய்யோ இப்படியெல்லாம் ஆகுமென்று நான் நினைக்கவே இல்லையே…. குட்டிம்மா எவ்வளவு கஷ்டப்பட்டாளோ….. எல்லாமே என்னாலதானா…? நான் என்ன செய்வேன்….?”

புது மலர்கள் பூத்திடும் வேளை - மதுவதனி

“அன்னைக்கே அவ்ளோ தூரம் சொன்னாளே, நீங்க தப்பா எந்த முடிவும் எடுக்காதீங்க அக்கா என்று… அப்போ எனக்கு சரியா தெரிஞ்சது….. இப்போ எவ்வளவு பெரிய தப்பு….. எனக்கே தெரியாம… புரியாம எத்தனை பெரிய பாவத்தை செஞ்சுட்டேன்…. என்னோட பாவம் தீரவே தீராதே…. அம்மாவும் இல்லாம நானும் இல்லாம எப்படியெல்லாம் வருத்தப்பட்டாளோ…? என்று முகத்தில் புதைத்திருந்த அவன் கையை வைத்தே தன்னை அடித்துக் கொள்ள ஆரம்பித்தாள்.

அழும் மனைவியை சமாதனப்படுத்தவில்லை அஸ்ஷ்த். ‘அவள் அழுது ஓயட்டும்…. அப்போதுதான் அவளுக்குள் ஒரு தெளிவு பிறக்கும்…. அதன்பிறகு அவள் எடுக்கும் முடிவும் தெளிவாக இருக்கும்’ என்று நினைத்தவன் அவளைத் தன் வயிற்றோடு அனைத்து தலையை வருடிக் கொடுக்க ஆரம்பித்தான்.

அழுது அழுது ஓய்ந்தவள் ஒருவாறாக அப்படியே உறங்கியும் போனாள். அவளை மெத்தையில் கிடத்திவிட்டு அருகிலேயே அமர்ந்தான். இனி அவள் புது இளமதியாகத் தான் எழுவாள் என்பதில் அவனுக்கு துளியும் சந்தேகமில்லை. ஆனால் சரண் கூறுவது போல் தேன்நிலா இளமதியை ஏற்றுக் கொள்ள வேண்டுமே என்றும் யோசித்தான்.

தேனுவின் மனதை மாற்றி, தன் மேல் இருக்கும் கோபத்தை போக்க வைப்பது இளமதியின் வேலைதான். அதில் அவனோ அவனது பெற்றோரோ தலையிடக்கூடாது என்பதில் உறுதியாய் இருந்தான்.. ஆனால் அவளது முயற்சிகளுக்குக் கண்டிப்பாக துணையிருக்க வேண்டும் என்றும் முடிவெடுத்தான். அழுகையும் மறைந்து புலம்பல்களும் குறைந்து அமைதியாய் உறங்கும் மனைவியை பார்த்துவிட்டு, விளக்கை அணைத்துவிட்டு வெளியில் வந்தான்.

இவன் வரவிற்காய் காத்திருந்தவர்கள் போல் சரவணனும் பூங்குழலியும் அவனை எதிர்கொள்ள, “எல்லாத்தையும் சொல்லிட்டேன்மா…. ரொம்ப அழுதா… இப்போ தூங்குறா… மார்னிங் எழுந்ததும் தான் தெரியும் என்ன முடிவெடுப்பானு… நானும் கொஞ்சம் ஹார்ஷா பேசிட்டேன்..” என்றவன் அவர்களுக்குள் நடந்த உரையாடலைக் கூறி சோபாவில் சாய்ந்தபடியே கண்களை மூடிக்கொண்டான்.

புது மலர்கள் பூத்திடும் வேளை - மதுவதனி

சரவணன் அவனது தோளில் தட்டிக் கொடுத்தவாறே “எல்லாம் சரியாகும் கண்ணா… நீ பீல் பண்ணா அவளைத் தேத்த ஆள் வேண்டாமா…. நீ ஸ்ட்ராங்கா இரு… நீதான் அவளுக்கு புல் சப்போர்ட் கொடுக்கணும்… எத்தனையோ கஷ்டத்தை தாங்கியிருப்பா…. ஆனா இது ரொம்ப கொடுமையா இருக்கும்…. கண்டிப்பா இளாக்கு குற்ற உணர்ச்சி அதிகமாகும்.. அதுவே அவளை இன்னும் வருத்தப்படுத்தும்…. நீயும் அடுத்து என்ன பண்றதுன்னு யோசி….”

“அப்புறம் ரவிக்கிட்ட இப்போதான் சரண் பேசியிருந்தாராம்.. ஆதி சொல்றா எனக்கு முன்னமே தேனுவை எங்கயோ பார்த்த மாதிரி இருந்தது…. ஆனா அண்ணியோட சேர்த்து பார்க்க தோணலை, கொஞ்சம் யோசிச்சிருந்தா…. அப்பவே கண்டுபிடிச்சிருக்கலாம் என்று அவளும் பீல் பண்ணா… அவங்க மூணு பேரும் ஸ்ட்ரெயிட்டா சீமந்தம் பங்கசனுக்கே வந்துடுவாங்களாம்….

நாமளும் இங்கே இருந்து மொத்தாமாவே கிளம்பிடலாம். குழந்தைகளைப் பார்த்தா தேனு சமாதானம் ஆக வாய்ப்புகள் இருக்கு. நீ என்ன சொல்ற குழலி..” என்று மகனிடம் ஆரம்பித்து மனைவியிடம் முடித்தார்.

“ஹ்ம்ம் நீங்க சொல்றதும் சரிதான்…. நமக்கேத் தெரியாம நம்மளும் ஒரு தப்பு பண்ணிட்டோம், அதுக்கு கண்டிப்பா பிராயச்சித்தம் பண்ணியே ஆகணும், அப்புறம் பிள்ளைகளுக்கு ஒரு ஒன்வீக் லீவ் சொல்லிடு கண்ணா… இளாக்கிட்ட ரொம்ப பொறுமையா, நிதானமா யோசிக்க சொல்லு… தப்பா ஒரு வார்த்தை அவளை அறியாம வந்துட்டாக்கூட, தேனோட மனசு ரொம்பக் கஷ்டப்படும். நாங்க அந்த சரண்கிட்ட பேசணுமே அச்சு…. சரி இப்போ வேண்டாம்…. நாளைக்கு பேசுவோம்… இப்போ போய் நீ இளாவைப் பாரு…”என்றார் குழலி….

அவன் மறுக்க முடியாத அளவிற்கு பெற்றோர் இருவரும் பேச… ஒரு பெருமூச்சை வெளியிட்டான். அவன் இன்னும் தெளியவில்லை என்பதை உணர்ந்த குழலி.. “என்ன கண்ணா…. ஏன் இவ்ளோ அப்செட்டா இருக்க…. நீ என்ன நினைக்கிற சொல்லு… அப்போதான் நான் உனக்கு சொல்யுஷன் சொல்ல முடியும்” எனவும்…..

புது மலர்கள் பூத்திடும் வேளை - மதுவதனி

# புது மலர்கள் பூத்திடும் வேளை...!

“அம்மா சரண் என்கிட்ட பேசினதை நினைச்சா... அந்தப்பொண்ணோட நிலைமை எவ்வளவு கஷ்டம்னு யோசிச்சேன்... அன்னைக்கு நாம அவளுக்கு சப்போர்ட்டா இருந்திருந்தா இவ்ளோ கஷ்டம் வந்துருக்காது. அத்தையும் இவ்வளவு சீக்கிரம் இறந்திருக்க மாட்டாங்க... அதுதான் மனசுல குற்ற உணர்ச்சியா இருக்கு”

“கண்ணா இந்த இருந்திருந்தால்.... ஆனால் .... போயிருந்தால்...இப்படி அப்படி.... என்று நாம் இந்தமாதிரி யோசிக்ககூடாது. அப்படி நாம யோசிக்க யோசிக்க அது நம்ம கஷ்டத்தைக் கூட்டத்தான் செய்யுமே தவிர குறையாது... எது நடக்க வேண்டுமென்று இருக்கோ அதுதான் நடக்கும்.... நீ குழப்பிக்காம, அவளையும் குழப்பாம போய் படு... நாளைக்கு எழும்போது ரெண்டுபேரும் குழப்பம் தெளிஞ்சு புது ஆட்களா ரூமை விட்டு வெளியே வருவீங்க...” என்றதும் அஸ்வத்தும் சிறு தெளிவுடன் தன் அறைக்கு வந்து படுத்தான்.

அப்போது நான்கு நாட்களுக்கு முன்னாடி சரணை சந்தித்ததைப் பற்றி யோசித்துக் கொண்டிருந்தான்.

************************************************************************************************************************************

சூர்யபிரகாஷிடம் பேசிய இரண்டே நாளில் அஸ்வத் திருச்சி சென்றான். சூர்யா ஏற்கனவே சரணிடம் பேசி அப்பாய்ன்மென்ட் வாங்கியிருந்தார். ஆனால் காரணம் எதுவும் கூறவில்லை. சரணும் அவரது வேலையை மனதில் வைத்து விஜயாவை பற்றி பேசுவதற்காக கூட இருக்கலாம் என்று நினைத்து ஒத்துக் கொண்டான். அஸ்வத்தை அவன் முற்றிலும் எதிர்பார்க்கவில்லை, அவனையே எதிர்பார்க்கவில்லையெனில் அஸ்வதின் மனைவியாக நிலாவின் சகோதரியை அவன் நினைத்துக் கூட பார்க்கவில்லை.

சரணின் அறைக்குள் நுழைந்த இருவரையும் யாரென்று தெரியவில்லை என்றாலும், புன்னகைத்தாவாறே வரவேற்றான். அந்த அறைக்குள் நுழைந்ததுமே சரணின் சீட்டிற்கு மேல் உள்ள சுவற்றில் சரணும் நிலவும் ஒரேபோல இருந்த இரண்டு குழந்தைகளுடன் சித்திரமாய் காட்சியளித்தனர். அதைப் பார்த்ததும் அஸ்வதின் மனதில் லேசாக நிம்மதி பரவத் துவங்கியது. அவன் நினைத்ததுபோல் இருவருக்கும் பெரியதாக எந்தப் பிரச்சினையும் இல்லையென்றுதான் அந்த நிம்மதி.

புது மலர்கள் பூத்திடும் வேளை - மதுவதனி

சூர்யா தன்னை அறிமுகப்படுத்தி முடித்ததும், அஸ்வத்தைப் பார்த்தார். சரணும் அவனையேதான் பார்த்தான். ஆனால் அஸ்வதின் பார்வை அந்த ஓவியத்தில் நிலைத்திருந்தது. ஓவியத்தின் அடியில் ரவி என்ற பெயர் ஆங்கில எழுத்தில் பொறித்திருந்தது. அதைப் பார்த்ததும் சிறிது குழம்பினான். சூர்யா அவனது கையைத் தொட, அதில் சுய உணர்வுப் பெற்று இவர்களைப் பார்த்து மன்னிப்புக் கோரியவன் சரணிடம் "லவ்லி & லைவ்லி பெயிண்டிங்க்" என்றான்.

சரணும் அதை ஆமோதிக்கும் வண்ணம், "மை லைப் & மை பேமிலி, என் பிரண்ட் பண்ணது, இப்போ சிங்கப்பூர்ல இருக்கான். ஓவியர் ரவீந்தர் தெரியுமா..? அவர்தான்" என்றான்.

அஸ்வதிர்க்கு இது அடுத்த அதிர்ச்சி... அதோடே "என்ன உங்களுக்கு ரவியைத் தெரியுமா...? அப்போ ஆதியையும் தெரியுமா..? அவங்க மேரஜுக்கு வந்துருக்கீங்களா..?" என்றான் படபடப்புடன்.

"ம்ம் தெரியுமே... ரவியோட பிரண்ட்... பிஸினஸ் பார்ட்னர் எல்லாம் நான்தான்.... ஆராவை எப்படி தெரியாமா இருக்கும்... ரொம்ப நல்லாத் தெரியும்.... அவளோட அப்பா அம்மாவையும் தெரியும்.... அவளோட டெலிவெரி டைம் நான் மதுரையில இருந்தேன்... அப்போ பார்த்தேன்.... அதோட மேரேஜ்க்கு வரல, ரிசப்ஷன் புல்லா நானே பாத்துக்கிட்டதுனால வரமுடியல, ரிசப்ஷன் வந்தேன் அப்போவும் பார்த்தேன்.... ஏன் கேக்குறீங்க...." என்றான் புரியாமல்...!!

"ஓ அவளுக்கு ஒரு அண்ணன் இருக்கான் தெரியுமா..? அந்த அண்ணனுக்கும் ஒரு குடும்பம்..." அந்த சித்திரத்தைக் காட்டி "சேம் டூ ஏஞ்சல்ஸ் இருக்காங்க தெரியுமா..?

"ஆமாம் ஒரு அண்ணன் ஊட்டியில் ஆர்மில இருக்கிறதா சொன்னா... ஆனால் நான் பார்த்தது இல்லை, அதுக்கான நேரம் சரியா அமையவில்லை... பட் அவங்க குட்டீஸ் பார்த்துருக்கேன் போட்டோஸ்ல... ஆமாம் இதையெல்லாம் ஏன் நீங்க கேக்குறீங்க...."

பக்கத்தில் இருந்த சூர்யாவுக்கு ஏதோ புரிவது போல இருந்தது... அவனும் அஸ்வத்தை பார்க்க.... "அந்த அண்ணன் நான் தான்.... மேஜர் அஸ்வத் சரவணன்...."

புதுமலர்கள் பூத்திடும் வேளை - மதுவதனி

# புது மலர்கள் பூத்திடும் வேளை…!

“ஓஹ் காட் நீங்களா அது….. சொல்லுங்க சார்…. நான் உங்களைப் பார்த்ததே இல்லையே…. அவனோட பேமிலி போடோஸ்ல கூட பார்த்தது இல்லையே…. ஏன் சார்…. சாரி சார்…”

“ஹே ஸ்டாப் ஸ்டாப்…. Mr. சரண்… சார் எல்லாம் வேண்டாம்…. சும்மா அஸ்வத் என்றே சொல்லுங்க…. அப்புறம் சாரி எல்லாம் எதுக்கு…. அதெல்லாம் வேண்டியதில்லை…. நான் வந்ததே உங்க வைப் பத்தி பேசத்தான், ஆனால் இங்க இப்படி ஒரு சர்ப்ரைஸ் எதிர்பார்க்கல, கொஞ்சம் ஷாக்கிங்காவும், சர்பரைசாவும் இருக்கு… அதோட ரொம்ப சந்தோஷமாவும் இருக்கு..” என்று அங்கிருந்த தண்ணீரைக் குடித்தான்.

சரணுக்கு அவன் நிலாவைப் பற்றி ஏதோ பேச வந்திருக்கிறான் என்பது புரிய, வந்தவர்களுக்கு காபியும் டிபனும் சொல்லிவிட்டு, அவனாக கூறும் வரை யாரையும் உள்ளே விட வேண்டாம் என்றுக் கூறிவிட்டான். டிபன் முடிந்தும் மூவரும் அமைதியாக இருந்தனர்.

யார் முதலில் பேசுவது என்ற தயக்கம். சரணுக்கு இருப்பு கொள்ளவில்லை. நிலாவைப் பற்றி என்ன சொல்லப் போகிறார் என்ற பதட்டம்…. அவனின் நிலைப் புரிந்து அஸ்வத் தான் கொண்டுவந்த பேக்கில் இருந்து ஒரு புகைப்படத்தை எடுத்துக் கொடுத்தான். அது அவனின் குடும்ப புகைப்படம் என்பது பார்த்தவுடனே புரிந்தது.

அதில் அவனுக்கு இளமதியையும் அஸ்வத்தையும் தவிர மற்ற நால்வரையும் தெரிந்திருந்தது…. “எனக்கு குட்டீசையும், அங்கிள் ஆன்டி ரெண்டு பேரையும் தெரியுமே… மதுரை ஹாஸ்பிடல் ல ஆரா டெலிவெரி டைம்மில் பார்த்துருக்கேன். அதோட தஸ்வந்த் பர்த்டே பார்ட்டியிலும் குழந்தைங்களோட வந்துருந்தாங்க… உங்க ரெண்டு பேரையும் இப்போதான் பார்க்கிறேன்..” என்றான்.

“உங்களுக்குத் தான் தெரியுமே ஆர்மியில் இருந்தா அடிக்கடி லீவ் கிடைக்காது என்று…. என்னை விட்டு என் வைப் எங்கேயும் போகமாட்டா…. சோ மேக்ஸிமம் நாங்க இரண்டு பேரும் எந்த பங்க்ஷன்லயும் இருக்கமாட்டோம்…. அவ்வளவுதான்…. என் வைப் பார்த்தா உங்களுக்கு யாரையாவது பார்த்த மாதிரி இருக்கா….?

"ஆமாம்….. இவங்களை எங்கையோ பார்த்தமாதிரி இருக்கு… பட் ஸ்ட்ரைக் ஆகல, என யோசித்துக் கொண்டிருந்தவன் சட்டென்று கண்கள் மின்ன "இவங்க என் வைப் மாதிரி இருக்காங்க… எஸ் ஐ காட் இட்…. கொஞ்சம் தான் வித்தியாசம்… டேமிட் எவ்வளவு நேரம் யோசிச்சிருக்கேன்…. எப்படி..? எப்படி…. இவங்க நிலா மாதிரி இருக்காங்க, உங்க வைப்புக்கும் என் நிலாவுக்கும் என்ன சம்மந்தம் சொல்லுங்க சார், அவளோட ப்ளட் ரிலேசன்ஸ் யாருமே இப்போ உயிரோட இல்லை…. அதனால்தான் என்னால இவங்களை சடனா கண்டுபிடிக்க முடியல…. நீங்க இப்போ என்ன சொல்ல வந்தீங்க…. சொல்லுங்க ப்ளீஸ்.." என்றான் பரபரப்புடன்…..

"சரண் அதை சொல்லத்தான் நான் வந்துருக்கேன்.." என்றவன் வேணிலா-இளமதி ஆன கதையை சரணிடம் விளக்கத் துவங்கினான். அதைக் கேட்க கேட்க அஸ்வதின் மேல் அவனுக்கு மரியாதைக் கூடிக்கொண்டே போனது… அவன் குடும்பத்தின் மேலும்தான்.

ஏற்கனவே ஆதிராவைப் பற்றி தெரியும் என்பதால், அவனால் அஸ்வத் சொல்வதை நம்பாமல் இருக்க முடியவில்லை. முழுதும் கேட்டு முடித்தவன் ஒரு பிரமிப்புடன் அமர்ந்திருந்தான். சூர்யாவிற்கும் அதே பிரமிப்புத்தான். என்ன மாதிரி மனிதன் இவன். இவனைப் பெற்றவர்களும், மனைவியும் பெருந்தவம் செய்திருக்க வேண்டும் என்றே நினைத்தார்.

அனைத்தையும் கூறி முடித்துவிட்டு சரணிடம் "இப்போது உங்கள் முறை… நீங்கள் சொல்லுங்கள் தேனுவைப் பற்றி…." என அஸ்வத் கூற…

சரண் சிறிதும் யோசிக்கவில்லை, மனைவியை மனதில் நினைத்தவன், தன் வேணியக்காவைப் பார்த்தால் அவள் முகத்தில் தெரியும் மகிழ்ச்சியை ஒரு கணம் நினைவில் கொண்டு வந்து, அவர்கள் வாழ்க்கையில் நடந்த அனைத்தையும் கூறிவிட்டான். இன்னும் ஒரு வாரத்தில் அவளுக்கு சீமந்தம் செய்வது உட்பட…..

இப்போது பிரமிப்பது அஸ்வத் முறையாயிற்று… சூர்யா இருவரையும் பார்த்து மெச்சிக் கொண்டார். இன்னும் இந்த உலகில் நல்லவர்கள் இருக்கத்தான் செய்கிறார்கள் என்று தோன்றியது அவருக்கு…

சூர்யாவின் மூலம் முன்னமே அவனுக்கு அனைத்தும் தெரிந்திருந்தாலும், இத்தனை விளக்கமாய்க் கேட்டதும் மனைவி மேல் கோபம்தான் வந்தது… ஆனாலும் அதை வெளிக்காட்டாமல் அடுத்து என்ன செய்வது என்பது போல சரணைப் பார்க்க, அவனோ "உங்களுக்கு எப்படி நன்றி சொல்றதுனே தெரியல அஸ்வத் நீங்க என் மனைவியோட மகிழ்ச்சியான உலகத்தையே திருப்பிக் கொடுத்துருக்கீங்க… தேங்க்ஸ்…. தேங்க்ஸ் எ லாட் அஸ்வத்" என்றான்.

"ஹலோ… இருங்க… இருங்க…. இதையே நானும் சொல்லலாம், அதுவும் இன்னும் எமோஷனலா…. ஆனா இப்போ வேண்டாம் அதெல்லாம் பொறுமையா பார்த்துக்கலாம், இந்த சீமந்தத்துக்குள்ள ரெண்டு போரையும் சேர்த்து வச்சிடணும், நான் இன்னும் மதிக்கிட்ட பேசல…. அவளுக்கு இன்னும் தெரியாது…"

"மதியா….? அது யாரு..?

"ஹாஹா என்னோட மனைவி பேரு இளமதி…. அந்த மதி…."

"ஓ… அவங்க பேரு வேனிலா தெரியும் நீங்க இளா என்று சொன்னீங்க… இப்போ புதுசா மதி எனவும் புரியல…."

"ம்ம் அவளை முழுசா மாத்த முயற்சி செஞ்சேன், அதுல பர்ஸ்ட் நேம் சேஞ் பண்ணதுதான். வேனிலா-இளமதி ரெண்டுக்கும் ஒரே மீனிங்தான்"

"சூப்பர் ப்ரோ… கலக்கிட்டீங்க…" என்று இருவரும் ஒரு சகஜமான உரையாடலுக்குள் வந்தனர். அதன்பிறகு முழுமையாக அலசி ஆராய்ந்து அஸ்வத் முதலில் இளமதியிடம் பேசி அவளை தயார் செய்வது எனக்கூறினான்.

நிலாவிடம் இப்போது இதைப்பற்றி பேசமுடியாது என்றும் அவளுக்கு அக்காவின் மேல் பாசம் இருந்தாலும் கோபமும் இருக்கிறது அதுவும் அதிகமாக என்றும் கூறினான் சரண். இந்த நேரத்தில் எதுவும் விபரீதமாக முடிவெடுக்க வேண்டாம் என்றும் முடித்துவிட்டான்.

புதுமலர்கள் பூத்திடும் வேளை - மதுவதனி

ஏனென்று மற்ற இருவரும் கேட்டதற்கு, வேணிலா வீட்டை விட்டுப் போகாதிருந்தால், இந்தப் பிரச்சினையை வேறுவிதமாக கையாண்டிருக்கலாம் என்றும், தன் அம்மா இன்னும் சில காலம் உயிரோடிருந்திருப்பார் என்றும் உறக்கத்தில் புலம்பியதாக கூறினான்.

அதை வெளிப்படையாக யாரிடமும் காட்ட முடியவில்லை என்பதால், இளமதியை நேரடியாகப் பார்க்கும் போது கண்டிப்பாக கோபப்படுவாள் என்று உறுதியாக கூறினான்.

அதைக் கேட்ட மற்றவருக்கும் அவன் கூறுவதில் இருந்த உண்மை புரிந்தது, அஸ்வதிற்கும் இளமதி இதில் தெரியாமல், புரியாமல் செய்தாலும்… அவள் செய்தது தவறுதான்… அதை அவளே நேராக்க வேண்டும் என்றும் நினைத்தான். மேலும் நிலாவின் கஷ்டங்களும் இழப்புகளும் அவனுடைய முடிவை உறுதிப்படுத்தின.

அதன்பிறகு அஸ்வத்தின் வேண்டுகோளின் படி நிலாவை வீட்டில் சென்று பார்த்தான். இருவரையும் தன் நண்பர்கள் என்றே அறிமுகப்படுத்தினான். அவளுடைய ஓவியங்களையும் காட்டினான். அஸ்வத் சரணையும் நிலாவையும் சேர்த்து ஒரு போட்டோ எடுத்தான்… நிலா வரைந்த ஓவியங்கள் சிலதையும் வாங்கி கொண்டு அவளிடமிருந்து விடைபெற்றான்.

இவையனைத்தையும் நினைத்துக் கொண்டிருந்தவன் அடுத்து வரும் விடியலாவது இவர்களது வாழ்க்கையில் வெளிச்சத்தைக் கொண்டுவரும் என்ற நம்பிக்கையுடன் உறக்கத்தை தழுவினான்.

அடுத்தநாளில் இருந்து மனைவியின் முகத்தில் தெரிந்த மலர்ச்சியில் அவள் தெளிவான முடிவை எடுத்துவிட்டாள் என்பதை உணர்ந்து கொண்டான் அஸ்வத். ஆனால் இது காலம் கடந்த தெளிவு என்பதில் அவனுக்கு சற்று வருத்தம் தான். வீட்டில் உள்ளவர்கள் அனைவரிடமும் அவளது இந்த செயலுக்கு மன்னிப்பை வேண்டினாள்.

# புது மலர்கள் பூத்திடும் வேளை...!

கணவனிடம் மட்டும் தன் மனதில் தோன்றும் பயத்தை வெளிப்படையாகவே பகிர்ந்து கொண்டாள். அவனும் அவளுக்கு ஆதரவாக பேசி அவளை சமாதானப்படுத்தினான். இளமதியும் ஒரு முடிவோடு இருந்தாள். இனி அழுது ஒரு பிரயோஜனமும் இல்லை.... முடிந்தது முடிந்தது தான்.... இதுவரை என்னுடைய துன்பம் தான் பெரிது என நினைத்து முட்டாள்தனமாக ஒரு முடிவையும் எடுத்து... அது யாரை பாதிக்கும் என்றும் அறியாமல் இருந்தேன்..

ஆனால் என்னால் பாதிக்கப்பட்டு என்னைவிட அதிகமாய் கஷ்டப்பட்ட என் குட்டிம்மாவுக்கு நான் காலம் முழுவதும் துணையாக இருக்க வேண்டும்.... அது நிலா எத்தனை கோபப்பட்டாலும், ஏன் அவள் தன்னை வெறுத்து ஒதுக்கினாலும் கூட அதைப் பொறுத்து போவது என்பதுதான். மேலும் சரவணனும்-குழலியும் அவளுக்கு நீண்ட அறிவுரைப் பட்டியல் வழங்கினர்.

அவர்கள் கூறுவதைக் கேட்டாலும் அவளுமே அந்த முடிவுக்குத்தான் வந்திருந்தாள் என்பதால் மறுத்து எதுவும் பேசவில்லை. மேலும் அவள் செய்த தவறுக்கு தன் தங்கை சிலுவை சுமக்கிறாள் என்று தெரிந்ததில் இருந்து, அனலில் இட்ட புழுவாக துடிக்க ஆரம்பித்தாள்.

அவள் மனம் பட்ட கஷ்டத்தை வார்த்தைகளால் விவரிக்க முடியாது... அவளை உடனே பார்க்க வேண்டும்.... என்ற ஆவலும் அவளை வதைக்க அஸ்வதிடம் தன் எண்ணத்தை பகிர்ந்தாள்.

அவனும் மனைவியின் ஆசையை அறியாதவனா..? என்னதான் அவர்களைப் பார்க்க வேண்டாம் என்று ஒதுங்கியிருந்தாலும், தினமும் ஒருமுறையாவது தங்கையின் பெயரை சொல்லி, அவர்களது சிறுவயதில் நடந்த ஏதாவது ஒரு நிகழ்வைக் கூறுவாள்.

அவள் அப்படிக் கூறி அவனுக்குத் தெரிந்தது தான், நிலா ஓவியம் வரைவது.... மேலும் அவளாக வந்து கேட்காமல் போட்டோவைக் காட்டக்கூடாது என்பதிலும் உறுதியாக இருந்தான். இப்போது அவளாக வந்து கேட்கவும், தன்னிடம் இருந்த போட்டோக்களையும், நிலா வரைந்த பெயிண்டிங்குகளையும் அவளிடம் கொடுத்தான் சிறு கேலி கிண்டலுடன்...

புதுமலர்கள் பூத்திடும் வேளை - மதுவதனி

கணவன் என்ன சொல்கிறான் என்று கூட கேட்காமல், அதை வாங்கி அந்தப் போட்டோக்களை ரசித்து, அதிலே ஆழ்ந்து போனாள். மேலும் அஸ்வத் சரணிடம் கூறி அவர்களது திருமணப் புகைப்படங்களையும் தன்னுடைய மெயிலுக்கு அனுப்ப வைத்திருந்தான். அதையும் மனைவியிடம் காட்டலாம் என்று அவளைப் பார்க்க…. அவளோ அந்தப் போட்டோவிலேயே மூழ்குபவள் போல அமர்ந்திருந்தாள்.

அவள் கண்களில் தெரிந்த வலியும், இதெல்லாம் தான் இழந்துவிட்டோம் என்ற ஏக்கமும் அவள் கண்களில் அப்பட்டமாய் தெரிய…. அதிலிருந்து அவளை மீட்கும் பொருட்டு "மதி…. உனக்கு ஒரு சர்ப்ரைஸ் வச்சிருக்கேன்…. வேணுமா..? வேண்டாமா..?"

"என்ன வச்சிருக்கீங்க… சும்மா என்னை ஏமாத்தி கிண்டல் பண்ணாம போய் வேலையை பாருங்க…"

"ஏய் நிஜமாதாண்டி….. உனக்கு வேணுமா….. வேணாமா..?"

"பொய் மட்டும் சொன்னீங்க… அப்புறம் உங்களை என்ன பண்ணுவேனு எனக்கேத் தெரியாது.."

"பொய்யா….. அதுவும் நானா…? என்ன வார்த்தை சொல்லி விட்டாய் என் ஆருயிரே…?

"ஆமாம் உங்களைப் பார்த்துதான்…. ஏன் நீங்க பொய்யே சொன்னது இல்லையா…. இதுல நாடக வசனம் வேற…"

"சரி…. சரி….. விடு…… அதெல்லாம்…. இளா மேடம் நம்மளை கவனிக்கிறதுக்காக பண்றது…. ஆனா இப்போ உண்மையாவே ஒரு சர்ப்ரைஸ் இருக்கு.."

"ம்ம்… அப்போ நீங்க சொல்றதை நம்புறேன்… சொல்லுங்க…. இல்லை காட்டுங்க…"

புது மலர்கள் பூத்திடும் வேளை - மதுவதனி

“என் அழகுப் பொண்டாட்டி கேட்டு நான் காட்டாம இருப்பேனா…? ஆனா அதுக்கு மேடம் என்னை ஓவர்டைம் ட்யுடி பார்த்து கவனிக்கனுமே….. அதுக்கு ஓகே னா… இதுக்கும் ஓகே…. எப்படி வசதி..”

“அதானே பார்த்தேன்…. சார் இன்னும் குரங்கு சேட்டைய ஆரம்பிக்கலயே என்று…. நீங்க முதல்ல என்ன சர்ப்ரைஸ் என்று காட்டுங்க…. அப்புறம் உங்களை கவனிக்கலாமா வேண்டாமான்னு நான் சொல்றேன்….”

“Mrs.சரவணன் உனக்கு ஓவர் ட்ரெயினிங் கொடுத்து கெடுத்துட்டாங்க…. என்ன சொன்னாலும் எதிர்வாதம் பண்றதே வேலையா போச்சு…. உனக்கு வேண்டாம் என்றால் போ…. என் ஏஞ்சல்ஸ் வந்ததும் காட்டிக்கிறேன்…..” என்று தன் லேப்பில் இருந்த போட்டோக்களை அவள் பார்க்க வேண்டும் என்றே ஜூம் செய்துப் பார்த்தான்.

அதைக் கண்டவள் அவனைக் கட்டியணைத்து முத்தமிட்டு விட்டு அந்த லேப்டாப்பை தூக்கிக்கொண்டு ‘அத்தை’ என்ற கூவலுடன் தன் மாமியாரிடம் ஓடினாள்… அஸ்வத் “மதி…….. மதி” என்று அழைத்ததைக் கூட சட்டை செய்யாமல்…………..

இதோ திருச்சி வந்து இறங்கியாகிவிட்டது…… என்னதான் மற்றவர்கள் முன் தைரியமனவளாக இளமதி தன்னைக் காட்டிக் கொண்டாலும், மனதிற்குள் ஒரு பிரளயமே வெடித்து சிதறியது என்னவோ உண்மை…. மனைவியின் மனநிலை புரிந்தவன் குழந்தைகளை பெற்றோரின் வசம் விட்டுவிட்டு அவளை தன் கைக்குள்ளேயே வைத்துக்கொண்டான்.

ரயில்வே ஸ்டேசனில் இறங்கியதும் பழைய ஞாபகங்களும் முட்டி மோத, கைவிரல்கள் சில்லிட்டுபோக…. உடல் நடுங்க அஸ்வத்தின் மேலேயே சாய்ந்து கொண்டாள். அவளது படபடப்பை உணர்ந்து அங்கிருந்த இருக்கையில் அமரவைத்து அவளை ரிலாக்ஸ் செய்தான்.

புது மலர்கள் பூத்திடும் வேளை - மதுவதனி

அப்போது சரணும் சிபியும் இவர்களை அழைக்க வர, இளாவின் நிலை கண்டு குழந்தைகள் பயந்து விடுவார்கள் என்று சிபியுடன் பெற்றோரையும் குழந்தைகளையும் முன்னாடியே அனுப்பி வைத்தான் அஸ்வத். அதன்பிறகு இளாவை அழைத்துக்கொண்டு கிளம்பினர்.

சரணை பார்ப்பதற்கு முன் அவனிடம் என்னவெல்லாம் பேசவேண்டும்… எப்படி மன்னிப்பு கேட்க வேண்டும்… எப்படி நன்றி கூறவேண்டும் என்றெல்லாம் யோசித்து இருந்தவளின் மூளை இப்போது வேலை நிறுத்தம் செய்திருந்தது.

மனைவியை ஒரு பார்வை பார்த்துவிட்டு சரணிடம் நலம் விசாரித்துவிட்டு, தாமதமான நலம் விசாரிப்புக்கு மன்னிப்புக் கேட்டான் அஸ்வத்….

“என்ன ப்ரோ இதுக்கெல்லாம் ஏன் ஒரு சாரி வேஸ்ட் பண்றீங்க…. விடுங்க…. இப்போ நேரா வீட்டுக்கே போயிடலாம்… அண்ணி கொஞ்சம் ரெஸ்ட் எடுக்கட்டும்…. நிலா நான் வரும்போது தூங்கிட்டுதான் இருந்தா… அதோட இன்னைக்கு நான் வந்து கூப்பிடாமா கீழே வரக்கூடாது என்றும் சொல்லியிருக்கேன்… அதனால் கவலை வேண்டாம்…..” என்றான் சரண்.

“ம்ம் நாம தேவையில்லாம ரிஸ்க் எடுக்குறோம் என்று தோணுது சரண்…. தேனுவிற்கு டென்ஷன்ல ஏதும் விபரீதமா ஆகிடக்கூடாது…. எனக்கு அந்த யோசனைதான் இப்போ…..”

“அதெல்லாம் ஒன்னும் ஆகாது…. ஷர்மி பங்க்சனுக்கு வரா…. அவ எல்லாத்தையும் மேனேஜ் பண்ணிருவா… அதோட எந்த தப்பும் நடந்திடக் கூடாது என்பதிலும் நான் கவனமா இருக்கேன்… சோ இதுதான் சரியான சந்தர்ப்பம்… கண்டிப்பா தேனு கோபப்படுவா … ஆனா அது ரொம்ப நேரத்துக்கு தாங்காது… சீக்கிரம் சரியாயிடுவா…. அதுவும் அவங்க வேணிக்காவையும், அவங்க குட்டீஸ்களையும் பார்த்த பிறகும் அந்த கோபம் இருக்குமா என்ன..?” என்று சிரித்தான் சரண்…

புது மலர்கள் பூத்திடும் வேளை - மதுவதனி

“அதுதானே” என்ற அஸ்வத்தின் முகத்திலும் புன்னகை…. இருவரின் பேச்சையும் கேட்ட இளமதியின் முகத்திலும் தங்கையை நினைத்து லேசான புன்னகை மலர்ந்தது…..

“அண்ணி…. தேனு உங்களை ரொம்ப தேடினா…… அதுவும் அத்தை இறந்த சமயம் அவ மென்டலி டிஸ்டர்ப் ஆகி…. வயிற்றில் இருந்த குழந்தைகளைப் பற்றிக்கூட யோசிக்காம செத்துப்போறேனு சொன்னா… அந்தளவுக்கு இந்த வாழ்க்கையை வெறுத்து போயிருந்தா…. நான்தான் அவளை மிரட்டி உருட்டி இப்போ கொஞ்சம் நார்மலுக்கு கொண்டு வந்துருக்கேன்… உங்களைப் பார்த்து முகத்தை திருப்புவா…. அதை நினைச்சு வருத்தப்படாதீங்க…. சீக்கிரம் சரியாகிடுவா…”

“என்ன சரண் நீங்க இதெல்லாம் என்னிடம் சொல்லவே வேண்டாம்…. நான் செஞ்ச தப்புக்கு அவ தண்டனை அனுபவிச்சிட்டு இருக்கா…. அதுவே என்னை ஒவ்வொரு நிமிசமும் கொல்லுது…. நீங்க வேற இப்படி பேசி என்னைக் கொல்லாதீங்க… நான் என்னை பெத்தவங்களுக்கு ஒரு நல்ல பொண்ணா இருக்கல, ஒரு தங்கைக்கு நல்ல அக்காவா இருக்கல….”

“அதையெல்லாம் யோசித்து தான் நான் முடிவெடுத்துருக்கேன்…. அவ என்ன சொன்னாலும் நான் பொறுத்து போயிடுவேன்… நீங்க பயப்படாதீங்க… அப்புறம் டெலிவெரி எங்க பார்க்க போறீங்க… இவர்கிட்ட கேட்டேன்… அவர் உங்களயே கேட்க சொல்றார்….”

“நிலா ஹெல்த் பத்திதான் தெரியுமே உங்களுக்கு, ஷர்மி தான் அவளுக்கு ட்ரீட்மென்ட் கொடுக்குறா… அதனால் எங்கேயும் அனுப்பல…. காசிராமன் அங்கிள் கூட தேனிக்கு அழைச்சிட்டு போறேன்னு சொன்னார்…. நான்தான் வேண்டாமென்று விட்டுட்டேன். அங்கிளுக்கு உங்களைப் பத்தி சொல்லிட்டேன், ரொம்ப சந்தோசப்பட்டார்…. அவரும் வருவார்….”

“ம்ம் பாவா சொன்னார்….. ரொம்ப நன்றிகடன் பட்டிருக்கேன் உங்க எல்லாருக்கும்….” என இளமதி கூறவும், சரண் அவள் பாவா என்ற வார்த்தையில் திரும்பி பார்த்து சிரித்துவிட்டு மீண்டும் காரை ஓட்டுவதில் கவனத்தை செலுத்தினான்.

புது மலர்கள் பூத்திடும் வேளை - மதுவதனி

அதை அஸ்வத் கவனித்தாலும் பெரிதாக ஒன்றும் நினைக்கவில்லை…. மூவரும் பேசிக்கொண்டே வீடுவந்தனர். அந்த விடிந்தும் விடியாத காலைப்பொழுதில் வீடே அமைதியாக இருந்தது….

ஏற்கனவே சிபியுடன் வந்தவர்கள் குழந்தைகளுடன் ஒரு அறையில் முடங்கியிருக்க, சரண் இவர்களை அழைத்து வரவும் சிபியும் மல்லியும் வந்து வரவேற்றனர்.

மல்லிகாதான் இளாவின் கைகளைப் பிடித்துக்கொண்டு தேனுவைப்பற்றி பேசிக்கொண்டே இருந்தார். அவர்களுக்கு காபியை சிபி கொண்டுவர மூவரும் குடித்தனர். இளாவிற்கு அந்த காபி தேவையாய் இருந்தது… தன் தங்கை நல்ல இடத்தில், ஒரு நல்லவன் கையில் தான் கிடைத்திருக்கிறாள் என்று மனம் முழுவதும் நிம்மதியை பரப்பிக்கொண்டாள்.

வந்த கொஞ்ச நேரத்திலேயே அவர்களின் அன்பையும் மரியாதையும் பார்க்கிறாளே, அதிலும் சிபி தேனுவை விட்டுக் கொடுக்காமல் சரணைக் கிண்டல் செய்வதும், அதற்கு மல்லிகா சப்போர்ட் செய்வதும் என்று அதையெல்லாம் பார்த்ததும் அவளுக்குள் பரவும் நிம்மதி முழுமை அடைவதை தடுக்க முடியவில்லை இளாவால்…….

இளாவின் இந்த நிம்மதி அவளுக்கு நிலைக்குமா…..? மற்ற எல்லாரும் கூறுவது போல விரைவில் இளாவை மன்னித்து ஏற்றுக்கொள்வாளா நிலா…? மீனாவின் எண்ணம் இப்போதேனும் நடக்குமா…?

ஒரு உயிரின் இழப்பின் மத்தியில் அனைவரும் எதிர்பார்த்த நிலாவின் சீமந்தம்…….. !!!!!!!!?????????

**வேளை தொடரும்……..**

புதுமலர்கள் பூத்திடும் வேளை - மதுவதனி

# புது மலர்கள் பூத்திடும் வேளை…!




**வேளை - 37**

******************************************************************************************************

அடி ராக்குமுத்து ராக்கு புது ராக்குடியை சூட்டு
வளை காப்பு தங்க காப்பு இவ கை பிடிச்சு பூட்டு
அட வேலாண்டி பால்பாண்டி வேட்டிய கட்டுங்கடா
அட மாயாண்டி முனியாண்டி மத்தளம் கொட்டுங்கடா

கிளி மூக்கு முத்தம்மா என் வாக்கு சுத்தம்மா
வானவராயனுக்கும் ராணிக்கும் வாரிசு வந்தாச்சு
அடி ராக்குமுத்து ராக்கு புது ராக்குடியை சூட்டு

வான்சுமந்த வான்சுமந்த வெண்ணிலவ வெண்ணிலவ
தான்சுமந்த தான்சுமந்த பெண்நிலவே பெண்நிலவே
மூணு மாசம் ஆன பின்னே முத்துவரும் முத்துவரும்

பூர்வஜென்மம் சேர்த்து வச்ச சொத்துவரும் சொத்துவரும்
வெள்ளிமணி தொட்டில் ஒண்ணு
விட்டத்தின் மேலே மாட்டிடனும்
தங்கமணி கண்ணுறங்க தாலேலோ பாடி ஆட்டிடனும்

# புது மலர்கள் பூத்திடும் வேளை...!

அடி வாடி ரங்கம்மா தெரு கோடி அங்கம்மா
வானவராயருக்கும் ராணிக்கும் வாரிசு வந்தாச்சு
அடி ராக்குமுத்து ராக்கு புது ராக்குடியை சூட்டு
ஏழு சட்டி மார்கழிக்கும் பொங்கவச்சி பொங்கவச்சி
மாவிளக்கும் பூவிளக்கும் ஏற்றிடனும் ஏற்றிடனும்

வாரிசு ஒண்ணு தந்தற்கு நன்றி சொல்லி நன்றி சொல்லி
ஏழைக்கெல்லாம் கூழு காய்ச்சி ஊத்திடனும் ஊத்திடனும்
அம்மன் அருள் இல்லையின்னா

பெண்ணிங்கு தாயாய் ஆவதெங்கே
பிள்ளை செல்வம் இல்லையென்ற பேச்சுக்கள்
பொய்யாய் போனதிங்கே

ஊரில் எல்லாரும் ஒண்ணு சேரும் இந்நேரம்
வானவராயருக்கும் ராணிக்கும் வாரிசு வந்தாச்சு
அடி ராக்குமுத்து ராக்கு புது ராக்குடியை சூட்டு
அட வேலாண்டி பால்பாண்டி வேட்டிய கட்டுங்கடா
அட மாயாண்டி முனியாண்டி மத்தளம் கொட்டுங்கடா

கிளி மூக்கு முத்தம்மா அவர் வாக்கு சுத்தம்மா
வானவராயருக்கும் ராணிக்கும் வாரிசு வந்தாச்சு
அடி ராக்குமுத்து ராக்கு புது ராக்குடியை சூட்டு

அடி ராக்குமுத்து ராக்கு ராக்குடியை சூட்டு
காப்பு தங்க காப்பு கை பிடிச்சு பூட்டு

*******************************************************************************************

மணிக்குயில்கள் இசைத்ததும், ஆதவன் மெல்லத் தன் கதிர்களை பூமிக்குள் படர விட்டும் புலர்ந்தும் புலராத அந்த அதிகாலைப் பொழுதை மிகவும் ரம்மியமாக்கிக் கொண்டிருந்தான். சரணின் வீட்டில் முதல் விசேஷம் என்பதால் வீடே அலங்காரத்தில் ஜொலித்தது. விடியலின் முன்னே வந்திருந்தாலும், வீட்டில் சொல்லிக் கொள்ளும் அளவிற்கு பெரியவர்கள் இல்லை என்பதால் குழலியும் சரவணனும், தங்கள் வீட்டு விசேஷமாகவே கருதி வேலையை இழுத்துப் போட்டுக்கொண்டு செய்தனர். ஷானவியின் பெற்றோரும் வந்துவிட வேலை ஜரூராய் நடைபெற்றது.

புது மலர்கள் பூத்திடும் வேளை - மதுவதனி

# புது மலர்கள் பூத்திடும் வேளை…!

நிலாவை கீழே வரவிடாமல் சரணைக் காவலுக்கு வைத்துவிட்டு, அனைவரும் இளமதியிடம் நலம் விசாரித்தனர். இளமதியின் கடந்தகாலம் எல்லோருக்கும் ஓரளவு தெரிந்திருந்தாலும் அதை வெளிக்காட்டாமல், அவளோடு நட்போடு பழகினர். ஆதிரா, அகிலா, ஷானவி என்று எல்லோருமே நிலாவின் புகழ் பாட, இளமதிக்குள்ளும் நிலவைப் பார்க்க வேண்டும் என்ற ஆசை அதிகமாகியது. ஆனாலும் சூழ்நிலைக் காரணமாக அமைதியாகிவிட்டாள். இதைக் கவனித்த அகிலா அவளைத் தேற்றி இன்னும் சிறிது நேரத்தில் எல்லாம் சரியாகி விடும் என்று சமாதானப்படுத்தினாள்.

குழலியும் சரவணனும் ஆதிரவோடு குழந்தைகளையும் அழைத்துக் கொண்டு நிலவைக் காண சென்றனர். அப்போதுதான் சரண் அவளை உறங்க வைத்திருந்தான். அதை ஷானவி மூலமாகத் தெரிந்து அவர்கள் திரும்ப நினைக்க, நிலா விழிப்புத் தட்டி எழுந்து, சிறு சங்கோஜத்துடன் வரவேற்றாள்.

உள்ளே வந்தவர்களை முந்திக்கொண்டு ஆதிராவின் மகன் தஸ்வந்த் “தேனு ஆண்டி” என்று ஓட, மற்ற குழந்தைகளும் அவன் பின்னே ஓடி வந்து கட்டிக்கொண்டனர். அவர்கள் மூவரையும் தன் கைகளால் பிடித்துக் கொண்டு அவர்களிடமே சிறிது நேரம் பேசிக் கொண்டிருந்தாள். மற்றவர்களிடம் சரண் பேசிக் கொண்டிருந்தான். குழந்தைகளுடைய மாநாடு முடிந்ததும் இவர்களிடம் வந்தவள், பெரியவர்களுக்கு வணக்கம் கூறிவிட்டு ஆதிராவிடம் நலம் விசாரித்தாள்.

“என்ன அண்ணி நீங்க வருவீங்க என்று சொல்லவே இல்லை, இப்படி ஒரு சர்ப்ரைஸ் எதிர்பார்க்கவே இல்லை……… உங்களைப் பார்த்தும் சந்தோசமா இருக்கு” - தேனு

“பார்ரா வாயில்லாப் பூச்சுக் கூட என்னைக் கலாய்க்குது……………! என்ன தேனு கிண்டலா….. நான் தான் உன்கிட்ட போன்லயே சொன்னேனே!

"அப்புறம் ஏன் இப்படிக் கேட்குற ஓ!!…….. இதெல்லாம் Mr. அண்ணன் கொடுக்குற ட்ரெயினிங்கா………………? "

“ஹோய் அவள் கேள்வி கேட்டா, நீ பதில் சொல்லு அதை விட்டுட்டு எதுக்கு இடையில் என்னை இழுக்குற, நான் பாவம்…………” - சரண்.

புதுமலர்கள் பூத்திடும் வேளை - மதுவதனி

# புது மலர்கள் பூத்திடும் வேளை…!

“அய்யோடா பாவமாம் இல்ல பாவம்……….! அதுவும் நீங்க………… நம்பிட்டேன்……….! என்று சரணை வாரியவள்.

நிலாவிடம் திரும்பி “நீ சொல்லு - தேனு எப்படி இருக்கு இப்போ, செக்கப் எல்லாம் சரியா போறியா ஷர்மிதான உன்னோட டாக்டர், ரவி சொன்னார். இப்போ எப்படி இருக்கு ஹெல்த்”

“அண்ணி நான் ரொம்ப நல்லா இருக்கேன். நீங்க கொஞ்சம் மூச்சு விட்டுப் பேசுங்க, நீங்க எப்போ வந்தீங்க, இவங்களைப் பத்தி சொல்லவே இல்லையே என்று ஆதிராவின் பெற்றோரைக் காட்டினாள் நிலா……!

அதுவரை மூவரின் பேச்சையும் கேட்டு அமைதியாக இருந்த குழலி, நிலாவைப் பார்த்து “இப்படித் தான்மா….. தேவையானதை பேசவே தெரியாது, எப்போ என்ன பேசணும் என்று தெரியாமலே இருக்கா… பாரு வந்து இத்தனை நேரம் ஆகியும் எங்களைத் பத்தி சொல்லவே இல்லையே……. நான் இந்த லூசோட அம்மா…..இவர் அப்பா……! என்று ஆதிராவைக் கிண்டலடித்தபடியே தங்களை அறிமுகம் செய்து கொண்டார் குழலி. தாயின் கிண்டலில் சிணுங்கிய மகள், தந்தையின் தோளில் சாய்ந்து கொள்ள, அவரும் அவளை அனைத்துக் கொண்டு மகளோடு சேர்ந்து மனைவியை வம்பு வளர்க்க ஆரம்பித்தார்.

அவர்கள் மூவரின் ஒற்றுமையும் பாசத்தையும் கண்ட நிலாவிற்கு, தனக்கும் இதுபோல் ஒரு குடும்பம் இல்லையே என்ற ஏக்கம் பிறந்து நொடியில் மறைந்தது. மற்றவர்கள் கவனிக்கவில்லை என்றாலும் சரணின் கண்களுக்கு அது தப்பவில்லை. எல்லாம் சிறிது நேரம் தானே. பிறகு அனைத்தும் சரியாகி விடும் என்று நினைத்து அவள் தோளைப் பிடித்து லேசாக அழுத்தினான். அதை உணர்ந்தவள் அவனிடம் அமைதியாகப் புன்னகைத்துவிட்டு, மற்றவர்களிடம் பேச ஆரம்பித்தாள்.

குழலி தங்கள் குடும்பத்தைப் பற்றி முழுவதுமாக கூற, நிலாவுக்கு இதை ஏன் நம்மிடம் சொல்கிறார்கள் என்ற எண்ணம் எழுந்தாலும், அதை மறைத்துக் கொண்டு அமைதியாக அவர்கள் சொல்வதைக் கேட்டுக் கொண்டிருந்தாள். இளமதியின் வரவு பற்றி எதையும் அவர்கள் கூறவில்லை, அது அவர்களாக பேசித் தீர்க்க வேண்டிய விஷயம் என்று அமைதி காத்தனர்.

புது மலர்கள் பூத்திடும் வேளை - மதுவதனி

முழுவதும் கேட்ட நிலாவிற்கும் அவர்களது மேலும், அஸ்வத்தின் மேலும் மிகுந்த மரியாதையை உண்டானது அவர்களிடம் தெரிவிக்கவும் செய்தாள். அவர்கள் பேசிக் கொண்டிருக்கும் போதே அங்கு வந்த அகிலா நேரமாகிவிட்டது என்பதை உணர்த்த ஆதிராவின் பெற்றோர் விடைபெற்று சரணுடன் கிளம்ப, அகிலாவும் ஆதிராவும் நிலாவை அலங்கரிக்க ஆரம்பித்தனர்.

கடந்து செல்லும் ஒவ்வொரு மணித்துளியும் இளமதிக்கு ஒரு யுகம் போல் ஆனது தனது தங்கையைக் காணும் ஆவல் அலை அலையாய் பொங்கி வழிந்தது. அது அதை வெளிப்படுத்த முடியாமல் தவித்தவளைக் கண்ட ஷானவி சரணின் திருமண ஆல்பத்தையும் தீபகாருண்யம் திறப்பு விழா ஆல்பத்தையும் கொடுத்து, ஆவலுடன் அமர்ந்து அந்தப் புகைப்படங்கள் எடுக்கும் பொது அங்கு நடந்த நிகழ்வுகளை அவளுக்கு விளக்கிக் கொண்டிருந்தாள். ஷானவி ஒவ்வொரு நிகழ்வையும் கூற, இளமதி தான் இழந்தவைகளின் மதிப்பு எத்தனை பெரியது என்று நினைத்து கண்கலங்கத் துவங்கினாள்.

வீடே உறவினர்களால் களைக்கட்ட, அங்கிருந்த பெரியவர்கள் நிலாவை அழைத்து வர சொல்ல, ஆதிராவும் ஷானவியும் அழைத்து வந்து மனையில் அமர வைத்தனர். அடர்பச்சையில் தங்க நிற ஜரிகையில் மாயக்கண்ணன் தன் வெண்ணைப் பானையுடன் அமர்ந்திருப்பது போல் புடவையின் முந்தானையில் வேலைப்பாடு செய்யப்பட்டு இருந்த புடவையில் தாய்மை மிளிர வந்தால் நிலா.

சந்தன நிலத்தில் அஜந்தா நீலப்பூக்கள் தூவிய காக்ரா சோளியில் தேவதையின் மறுபிம்பம் போல் நிலாவைப் பிடித்துக் கொண்டு இறங்கி வந்த ஷானவியின் விழிகளில் மகிழ்ச்சியும் குறும்பும் சரி பாதியாய் இருந்தது. சிபியுடன் பேசிக்கொண்டு இருந்த சரண் மனைவியின் வருகையில், அவளைப் பார்ப்பது போல் வசதியாக திரும்பி நின்றான்.

இதுவரை தன்னோடு பேசிக் கொண்டிருந்த தமையன், ஏன் இப்படி ஜொள்ளைவிட்டுக்கொண்டு நிற்கிறான் என்று சரண் பார்வைப்போன திசையில் பார்த்த சிபி… பார்த்தவன் பார்த்தபடி அப்படியே நின்றான் இத்தனை நாள்… இல்லை இல்லை இத்தனை வருடங்கள் இருவரும் ஒன்றாகத் வளர்ந்து, சுற்றித்திரிந்து, இப்போதும் இருவரும் ஒரே வீட்டில் தான் இருக்கிறார்கள்.

புது மலர்கள் பூத்திடும் வேளை - மதுவதனி

இவர்களுக்குத் தனிமையான நேரங்களும் சரி, நண்பர்களுடனும் சரி எத்தனையே தருணங்கள் கிடைத்திருக்கின்றன. ஏன் அவள் உடல்நிலை சரியில்லை என்றாலோ… அவன் தவறு செய்து மாட்டிக்கொண்டு அவளிடம் முழிக்கும் போதும் சரி அவன் அவளைத் தொட்டுத் தூக்கியிருக்கிறான்.

ஆனால் அப்போதெல்லாம் தோன்றாத உணர்வு இப்போது ஏன்? நான் சரியாகத் தான் உணர்ந்தேனா……… இல்லை என் மனம் தவறாய் கணிக்கிறதா……..? என்று தலையை உலுக்கிக்கொண்டு அவன் மீண்டும் அவளையேப் பார்க்க………… அவன் கண்கள் அவளிடம் இருந்து பிரிய மறுத்து, அவள் அழகில் மெய் மறந்து அப்படியே ஒட்டிக் கொண்டது.

மனம் இன்னதென்று சொல்ல முடியாத உணர்வில் சிக்கித் தவிக்க, அவனது மனசாட்சியோ அவனிடமே “டாக்டர் நீங்க தப்பா நினைக்கிறீங்க, இன்னும் மணி அடிக்கல, பல்பு எரியல………… இதெல்லாம் நடந்தா தான் நீங்க லவ் பண்றிங்கன்னு என்று அர்த்தம்……….. மத்தப்படி இதெல்லாம் சும்மா ஒரு இன்பாச்சுவேசன்’ என்று அவனைக் கிண்டலில் இறங்க…..

அந்நேரம் பார்த்து பூஜையறையில் யாரோ மணியடிக்கும் சத்தமும், வேறு ஒருவரோ “டேய் அந்த லைட்டையும் போடுங்க, வெளிச்சம் பத்தல’ என்று சொல்லி பளிச் சென்று லைட் எரியும் ஒளியும் தெரிய சிபியின் முகத்தில் ஒரு மந்தகாசப் புன்னகை வந்தது.

அதோட தன் மனசாட்சியும் “ஹா…….. யாருக்கிட்ட, என்னோட ஜட்ஜ்மென்ட் எப்பவும் தப்பா போகாது…… நீ வந்து எனக்கு பல்பு கொடுக்குற, கிளம்பு…….. கிளம்பு………… ஏதோ அந்தக் கடவுளுக்கு மனசு வந்து இப்போதான் கண்ணைத் துறந்து இருக்கார். அவர் காட்டின வழியைப் பின்பற்றி நான் ஏன் லைப்பை செட்டில் ஆக்குறேன்” என்று தன் மனசாட்சியை அடக்கியவன், செவ்வனே தன் மனதில் முதன் முதலில் அவள்மேல் உண்டான காதல் உணர்வுகளை எண்ணிப் பூரித்துப் போனான்.

# புது மலர்கள் பூத்திடும் வேளை…!

இதுநாள் வரைக்கும் அவளுக்கு எல்லாமே அவன்தான். அவளுடைய ரோல் மாடல் என்றே சொல்லலாம் அவள் செய்யும் ஒவ்வொரு செயலுக்கும் அவன் வேண்டும். பெரியவர்கள் அவர்கள் மனதிலும் ஒரு வேளை இப்படி ஒரு எண்ணம் இருந்திருக்குமோ என்று இப்போது அவன் யோசித்தான் முன்னெல்லாம் அகிலா கூட இதைப் பற்றிக் கண்டிப்பது உண்டு.

ஆனால் கடந்த சில வருடங்களாக அவளும் ஒன்னும் கூறுவதில்லை. அப்படியென்றால் எல்லோர் மனதிலும் இந்த எண்ணம் இருக்கும் போலவே…… நமக்குத் தான் லேட்டா பல்பு எரிஞ்சிருக்கு………… அடக்கடவுளே நமக்கே இவ்வளவு லேட்டா எரிஞ்சா…………..!!! அந்த டியூப் லைட்டுக்கு எப்போ எரிய……. என்ன கொடுமை நந்தா…….. உனக்கு இப்படியோடு ஆளுதானா கிடைக்கணும் என்று நொந்துக் கொண்டான்.

இதெல்லாம் அவளின் முகத்தைப் பார்த்தே அவன் நினைத்துக் கொண்டிருக்க, கண்களில் காதல் வழிய, முகம் தௌசன்ட் வாட்ஸ் பல்பு போட்டது போல் பிரகாசமாய் எரிந்தது. ஏதோ சொல்வதற்காக திரும்பிய சரண் தம்பியின் நிலையைப் பார்த்து தலையில் கை வைத்துக் கொண்டான். அதற்குள்ளாக சிபியோ மூன்று குழந்தைகளுடன் மனைவியும் சண்டைப் போட்டுக்கொண்டு இருப்பது போலவும், அவன் நால்வரையும் சமாதானம் செய்வது போலவும் கனவுலகத்தில் இருந்தவனை யாரோ உலுக்குவது போல் தோன்ற திடுக்கிட்டுத் திரும்பினான் சிபி.

அங்கு கொலை வெறியுடன் ரவியும் சரணும் நிற்பதைப் பார்த்து “ச்சே நம்ம ட்ரீமைக் கலைச்சதும் இல்லாம, எப்படி முறைக்கிறாங்க பாரு, என்று மனதிற்குள் அவர்களைத் திட்டியவன், வெளியே சிரித்தபடியே “என்ன அண்ணா ………………… “என்றாலே பார்க்கலாம், ரவிக்கு வந்த கடுப்பில் அவன் முதுகிலே நான்கு போட்டான்.

எதற்கு அடிக்கிறார்கள் என்று புரியாமல் சரணைப் பார்க்க அவன் தம்பியின் நிலை கண்டு சிரித்துவிட்டு “டேய் விடு………… அவனே பாவம்…….. என்று ரவியின் அடியில் இருந்து காப்பாத்தி விட்டு…….. “என்ன சிபி……. ஏன் ஒரு மாதிரி நின்ன……………? நானும் இவனும் எத்தனை தடவைக் கூப்பிடுறது……… அப்படி என்ன யோசனை……………?

புது மலர்கள் பூத்திடும் வேளை - மதுவதனி

“ஓ…………அதுதானா……..” என்று பெருமூச்சை விட்டவன் அவர்களிடம் எதையும் மறைக்காமல் தன் மனதை சொல்லிவிட்டு பாவம் போல் நின்றிருந்தான். அவன் கூறியதைக் கேட்டு முதலில் அதிர்ந்தாலும், பிறகு சத்தமாக சிரிக்க ஆரம்பித்தனர். அவர்கள் சிரிப்பில் இவன் முறைக்கவும்……….. “ஏன்டா கடைசி வரைக்கும் அந்த மங்கிக்கிட்ட அடிவாங்குறது என்று முடிவே பண்ணிட்டியா……… இப்போவே இந்த அடி போடுறா….. இன்னும் நீ லைசென்சோட அடிமை ஆகிட்டா……………. அவ்வளவு தான்” என்று ரவி சிரிக்க ஆரம்பித்தான்.

அப்போது இவர்கள் மூவரையும் பார்த்து அவர்களிடம் வந்த அஸ்வத் என்னவென்று கேட்க, அவனிடமும் விசயம் பகிரப்பட்டது. அஸ்வத்தும் தன் பங்குக்கு வாழ்த்துக்கள் கூறினான். அவனுக்கு இந்த டாம் அண்ட் ஜெர்ரிப் பத்தி தெரியாதே……… அதனால் அமைதியாக இருந்தான். சரண் தான் சிபியிடம் “சிபி உனக்கு ஓகே, பட் அவ என்ன நினைக்கிறா அப்படிங்கிறது முக்கியம், அவளுக்கு விருப்பம் இல்லை என்றால் போர்ட்ஸ் பண்ணக்கூடாது.

எனக்கு நீயும் அவளும் வேறவேற கிடையாது. ரெண்டு பேருமே வருத்தப்படக்கூடாது. அதுதான் எனக்கு முக்கியம்……… இன்னும் ஒரு வருசம் உனக்கு டைம் அதுக்குள்ள உன்னோட லவ்வ சொல்லி, அவளை ஒத்துக்க வை. இல்லை………… நான் வேற ஏற்பாடு பண்ணிடுவேன்” என்றான் இருவருக்கும் தகுந்த தோழனாய் ஆசானாய்.

தெய்வமே நீங்க இவ்வளவு நல்லவருனு எனக்குத் தெரியாம போச்சே………. நீங்கள் சொல்றது கொஞ்சம் ஓவரா இல்லை…………. மேடம் என்ன முரண்டுப் பிடிச்சாலும் என்னைத் தவிர வேறு யாரையும் அவளுக்கு பார்க்கக் கூடாது……. அப்புறம் நான் வேறமாதிரி முடிவு எடுக்க வேண்டியிருக்கும். இப்போதைக்கு அவளை நான் டிஸ்டாப் பண்ண மாட்டேன். அதேசமயம் யாருக்காகவும், எதுக்காகவும் அவளை விட்டுக்கொடுக்கமாட்டேன்………. அது நீங்களா இருந்தாலும் சரி………… என்று கிண்டலாக ஆரம்பித்தவன் கோபமாக முடித்தான்.

அவன் பேசியதைக் கேட்டு மற்ற மூவரும் அவனையே பார்க்க, அதில் முதலில் சுதாரித்த ரவி “டேய் சிபி நல்லா யோசிச்சுப்பாரு, நம்ம குடும்பத்தில் இன்னொரு சரண் வேண்டாம்னு நாங்க எல்லோரும் நினைக்கிறோம்.

புது மலர்கள் பூத்திடும் வேளை மதுவதனி

அதோடு எங்க எல்லோருக்கும் இதில் விருப்பம் தான், ஷானவியோட அப்பா அம்மாவிற்கு, அவளைப் பற்றி முழுதா தெரிஞ்சி, புரிஞ்சி நடந்துக்குற உன்னை அவளுக்கு மேரேஜ் பண்ணி வைக்கிறதுல அவங்களுக்கும் முழு சம்மதம்............... ஆனா இதில் முழு எதிர்ப்பும் உன் மங்கிக்கிட்ட இருந்துதான் வரும் என்று நாங்க நினைக்கிறோம். வீணா நீயும் கஷ்டப்பட்டு அவளையும் வருத்தாம யோசிச்சு முடிவு பண்ணு.......... எங்க எல்லோரோட சப்போர்ட்டும் உனக்கு இருக்கு......... என உண்மையை விளக்கிக் கூறினான்.

சிபிக்கும் கொஞ்சம் புரிவதுபோல் இருந்தது. இத்தனை நாள் நண்பனாக....... இருந்துவிட்டு இப்போது காதலனாக மாறுவது என்றால், அதை அவள் எப்படி எடுத்துக் கொள்வாள். மேலும் இதே உணர்வு அவளுக்குத் தோன்றி தன்னிடம் வந்து அவள் காதலைக் கூறியிருந்தால், அவனுடைய நிலை என்னவாக இருக்கும். அந்த நேரத்தில் அவனுக்கு எப்படியான உணர்வுகள் தோன்றும் கண்டிப்பாக இதை எதிர்பார்த்திருக்க மாட்டான்.

அப்படி இருக்கும் பொது அவளிடம் என்ன மாதிரி அவன் ரியாக்ட் செய்வது என்றும் குழம்பியிருப்பான். அப்படி இருக்க இன்று தனக்குள் பூத்த இந்த காதல் அவனுக்குள் மகிழ்ச்சிப் பூக்களை பூக்கச் செய்து மனம் பரப்பின தான். ஆனால் அதையே அவளிடம் எதிர்பார்க்க முடியாதே.......... என்று அவளுக்காகவும் யோசித்தான்.

மேலும் “என்னடா இது லவ் வந்து ஒரு மணி நேரத்துல இத்தனை டென்சன், இனி காலம் முழுசும் என்ன என்ன தொல்லையைத் தூக்கி தோளில் போடப்போரோமோ........... என்று நினைக்க அவன் மனசாட்சியோ............

“ஏன் டாக்டர் ஊரில் இருக்க ஒட்டுமொத்த தொல்லையின் முழு உருவமே உங்க மங்கிதான். அதையே தூக்கி தலையில் போட்டுக் கொண்டு இருக்கும் போது, ஆப்ட்ரால் குட்டி குட்டி தொல்லைகளை நீங்க தோளில் போட்டுக்ககூடாதா................?’ என்று நேரம் காலம் தெரியாமல் அவன் மனசாட்சி கவுண்டர் கொடுக்க சிபி மொத்தத்தில் நொந்தே போனான்.

# புது மலர்கள் பூத்திடும் வேளை...!

“டேய் நந்தா அந்த பெங்களூர் சிட்டில இல்லாத பொண்ணுங்களா .............. அதை விடு பாரின் பிகர் எல்லாம் உன் பின்னாடி சுத்துச்சே ............... அந்தபக்கம் மடோனா சைட் அடிச்சாக , இந்தப்பக்கம் சாய்பல்லவி சைட் அடிச்சா , இதையெல்லாம் விட்டுட்டு ஏன் கிரகம் இந்த மங்கிக்கிட்ட வந்து மாட்டிக்கிட்டேன்............ அய்யோ........... ஒரே நாள்ல இப்படி புலம்ப விட்டுட்டாங்களே............! என்று தனக்குத் தானே புலம்பியவன், பின் ஒரு முடிவுடன் ஹம்ம்...... இனி புலம்புறது, அலும்புறது எதுவும் இருக்கக்கூடாது. ஸ்ட்ரெயிட்டா லவ் புரோபோஸ் தான்.

மத்தவங்ககிட்ட சொன்னா...... நம்மளையே குழப்பிவிட்டுடுவாங்க...... பர்ஸ்ட் பங்சன் முடியட்டும். அப்புறம் அவகிட்ட பேசிடுவோம் என்றுத் தனக்குத் தானே முடிவெடுத்து விழாவில் கவனம் செலுத்தினான். தன்னைப்பற்றி ஒருவன் இவ்வாறு நினைத்து புலம்பிக் கொண்டிருக்கிறான் என்று தெரியாமலே குழந்தைகளுடன் குழந்தையாக ஐஸ்கிரீமைத் மொக்கிக் கொண்டிருந்தாள் ஷானவி.

நிலாவே முதலில் மனையில் அமர்த்தி, அவளுக்கு நலுங்கு வைத்து முடித்ததும் சரணை அவளுக்கு அருகில் அமர்த்தினர். அவனுக்கும் நலுங்கு வைத்ததும் வயதில் முதிய சுமங்கலிப் பெண்கள் முதலில் வளையல் அடுக்கித் துவைக்கி வைத்தனர். அதன்பிறகு அகிலா, ஆதிரா என்று அனைவரும் அடுக்கி முடித்து சரணை வளையல் போடா வைத்தனர்.

அவன் நிலாவின் கைகளைப் பிடித்து ஒரு நொடி யோசிக்க, அங்கிருந்த அனைவரின் பார்வையும் அவர்கள் மேலே இருந்தது. அதை உணர்ந்து நிலா குனிந்திருந்த தன் தலையை லேசாக நிமிர்த்தி அவன் விழிகளை நோக்க, அதற்காகவே காத்திருந்தது போல் அவள் கைகளை லேசாக அழுத்திவிட்டு தனது பாக்கெட்டில் இருந்து இரண்டு ஜோடி வைர வளையல்களை அவளுக்கு அணிவித்தான். இருவரின் பார்வையும் காதலால் கட்டுண்டு இருக்க, அவர்களை கிண்டலுடனும், குறும்புடனும் உலுக்கி நிகழ்வுக்கு கொண்டு வந்தாள் ஆதிரா.......

இருவரும் ஒரு வெட்கப் புன்னகையுடன் தங்கள் பார்வையைப் பிரித்துக் கொள்ள, அங்கிருந்தவர்களில் ஒருவர் நிலாவுக்கு உணவை ஊட்ட எடுத்து வந்தார். அப்போது குழலி “ஏன்மா பிறந்த வீட்டில் இருக்குறவங்க தான் சோறு கொடுக்கனும்.

புதுமலர்கள் பூத்திடும் வேளை - மதுவதனி

அவங்க யாரையாச்சும் கொடுக்க சொல்லுங்க” என்றதும் நிலாவின் முகத்தில் வெறுமையும், சோகமும் தானாக வந்து ஒட்டிக்கொள்ள, தலை குனிந்து தன் சோகத்தை மறைக்க முயன்றாள். அப்போது இளமதியின் கையில் உணவைக் கொடுத்து முன்னே அனுப்பி வைக்க, இளமதியின் கால்கள் ஒவ்வொரு அடியாய் எடுத்து வைத்தாலும் மனதுக்குள் பயம் மத்தளம் வாசிக்க ஆரம்பித்தது. ஆனாலும் தங்கையின் தாய்மையுடன் கூடிய அழகு அவளை பெருமை கொள்ளச் செய்தது.

நிலாவோ ஏன் இன்னும் யாரும் எதிர்த்து பேசவில்லை, என்று யோசித்து தலையை நிமிர்த்திப் பார்க்க அங்கே இளமதியின் கையில் உணவுக்கான தட்டு இருந்தது. ஒரு நொடி தான் காண்பது கனவோ என்று தோன்ற கண்களை கசக்கி மீண்டும் பார்க்க, இப்போது விழிகளில் நிறைந்த நீருடன் இளமதி நடை தள்ளாட தன்னிடம் வருவதும், அவன் நடை தளரும்போது அவளைத் தாங்கிப் பிடித்து அஸ்வத் மேற்கொண்டு அவளை அழைத்து வருவதும் தெரிந்தது.

அவளுக்கு அஸ்வத்தை சரணின் நண்பனாக தெரியும் என்பதால்.................... அவளுக்கு சரணின் மீது சந்தேகம் வந்தது. உடனே அவள் கணவனைப் பார்க்க, அவன் மனைவியிடம் இறைஞ்சும் பார்வையை வீசினான். நொடியில் எல்லாம் புரிந்தது அவளுக்கு................

அதற்குள் இளமதி நிலாவிடம் வந்து “குட்டிம்மா” எங்க, தன் கையைப் போதும் என்பது போல் சைகையில் காட்டிவிட்டு அந்த மனையில் இருந்து யாரும் தடுக்கும் முன் எழுந்து மாடியை நோக்கி சென்றாள். நிலாவின் கோபத்தை ஓரளவுக்கு எதிர் பார்த்து இருந்தாலும், ஒரு வார்த்தைக் கூட பேசமுடியாத புறக்கணிப்பை இளமதியால் தாங்கிக்கொள்ள முடியவில்லை, தன்னைத் தாங்கியிருந்த கணவனின் மேலே சாய்ந்து ஓவென கதறியழுதாள்க. அதற்குள் ஷானவியும் சரவணனும் குழந்தைகளை அழைத்துக் கொண்டு வெளியே சென்றுவிட்டனர்.

அவர்கள் இதெல்லாம் பார்க்க வேண்டாம் என்று நிலாவின் இந்த செயலில் முதலில் அதிர்ந்து நின்ற சரண், பின் அவள் பின்னே செல்ல ஆனால் அந்தச் சில நிமிடத்தில் மாடிப்படியின் முடிவில் இருந்து “அம்மா” என்ற அலறலுடன் நிலா படியில் உருளுவது தெரிந்தது.

புது மலர்கள் பூத்திடும் வேளை - மதுவதனி

# புது மலர்கள் பூத்திடும் வேளை…!

இதை எதையும் எதிர்பார்க்காத சரண் அடுத்தடுத்து நடந்த நிகழ்வில் அதிர்ச்சியில் அப்படியே ஸ்தம்பித்து நின்றான். நிலைமையின் தீவிரத்தை உணர்ந்த அஸ்வத்தும் சிபியும் அவனைத் தாண்டி நிலாவிடம் ஓடுவதை உணர்ந்து சரணும் அவர்களை முந்திக்கொண்டு மனைவியிடம் ஓடினான்.

அங்கே நிலாவோ தலையில் பட்ட அடியில் இருந்தும், அவளின் பெரிய வயிற்றில் பட்ட லேசான அடியில் உண்டான காயத்தில் இருந்தும் குருதி வெளியேறி ரத்த வெள்ளத்தில் மயங்கிக்கிடந்தாள். அவளை அப்படி பார்த்ததும் அப்படியே வாரியணைத்து "நிலா.......... நிலா.............." உனக்கு ஒன்றுமில்லை, இங்கே பார் நிலாமா...... பாருடா............. நான் பாவாடா.............. எழுந்துரு கண்ணம்மா" என அடுத்து என்ன செய்வது என்று கூடத் தெரியாமல் பைத்தியம் பிடித்தது போல் தான் ஒரு ஆண்மகன் என்பதையும் மறந்து கதற ஆரம்பித்தான்.

விழாவெக்கென ஷர்மியும் அப்போதுதான் வந்திறங்க நிலைமையின் தீவிரத்தை உணர்ந்து அவள் வந்த காரிலேயே நிலாவையும் தூக்கிக் கொண்டு ஹாஸ்பிடல் நோக்கி விரைந்தனர். ஹாஸ்பிடல் வரும் வழியிலேயே அடுத்தடுத்து செய்ய வேண்டிய வேலைகளை அங்குள்ள பணியாளர்களுக்கு உத்தரவிட்டு முடித்தாள் ஷர்மி. ஒருபக்கம் இளமதியும் மறுபக்கம் ஷர்மியும் அமர்ந்திருக்க, இளமதியின் படியில் கிடந்த நிலாவின் ரத்தம் அவள் உடையெங்கும் பரவ, என்ன அடக்க முயன்றும் முடியாமல் சுயநினைவின்றி கிடந்த தங்கையை அணைத்துக் கொண்டு அழ ஆரம்பித்தாள்.

அந்த மருத்துவமனை வழக்கமே மிகுந்த அமைதியுடன் காட்சியளித்து, அங்கிருந்த ஐசியு வார்டின் முன்பு சரணின் குடும்பமும், அஸ்வத்தின் குடும்பமும் சூழ்ந்து, உள்ளிருந்த நிலாவுக்காக பிரதிக்க ஆரம்பித்தனர்.

சரண் யாருமற்ற என்ற நிலை என்பது போல் அங்கிருந்த சேரில் அமர்ந்து எதிரே இருந்த சுவற்றை வெறித்துக் கொண்டிருந்தான். அவன் மனதில் தோன்றிய பயம், அதை அவனால் நினைத்துக் கூட பார்க்க முடியவில்லை. ஒருபக்கம் சரண் என்றால் மறுபக்கம் இளமதி............!

புது மலர்கள் பூத்திடும் வேளை - மதுவதனி

இளமதி கைகள் இரண்டையும் கூப்பிக்கொண்டு, விடாமல் கடவுளை பிரதித்துக் கொண்டிருந்தாள். அது மருத்துவமனை, வருவோர் போவோர் எல்லாம் அவளை வித்தியாசமாகப் பார்க்கின்றனர் என்றெல்லாம் யோசிக்கவில்லை. மனம் முழுவதும் அவளது குட்டிம்மா எந்த விபரீதமும் இல்லாமல் குழந்தைகளுடன் மீண்டு வரவேண்டும் என்பதை அவளது விடாத பிரார்த்தனையாக இருந்தது.

குழலியும், சரவணனும் குழந்தைகளோடு வீட்டிலே இருந்து விட, மற்ற அனைவரும் ஹாஸ்பிடலில் இருந்தனர். சரணின் இந்த அமைதி ரவியை பயம் கொள்ள வைக்க, அவனது தோளில் கை வைத்து அசைத்தான். அதில் உணர்வு பெற்றவன், ரவியைப் பார்த்து…

“நிலாவுக்கு ஒன்னும் ஆகாதில்லா மச்சான் எனக்கு அவ வேணும்டா, அவ இல்லாம என்னால் இருக்க முடியாதுடா……. அவ என்கூட கடைசி வரைக்கும் வேணும்னுதான் எல்லாத்தையும் பொறுத்துக்கிட்டேன். நான் குழந்தை முக்கியம் னு சொன்னதுகூட அவ நல்ல இருக்கணும் என்றுதானே…….. அதை கூட புரிஞ்சிக்காம இப்படி பண்ணிட்டாளே……. ஏன்…………. இப்படி செஞ்சா……. அவ என்னைப் புரிஞ்சிக்கவே இல்லையே…….. ஏன்டா…………….? என்று தான் ஒரு ஆண்மகன் என்பதையும் மறந்து மீண்டும் கண்ணீர் விட்டான் சரண்.

அங்கிருந்த அனைவருக்குமே அவனது பேச்சில் மனம் கனத்தது. இளமதியின் நிலையோ சொல்லவே வேண்டாம் இன்னும் சிறிது காலம் பொருத்துதிருக்கலாமோ…? குழந்தை பிறந்த பிறகு கூட வந்திருக்கலாமோ………..? என்றெல்லாம் யோசிக்க ஆரம்பித்து இருந்தாள். ரவியும் அகிலாவும் சரணை சமாதானம் செய்ய, அஸ்வத்துக்கும், ஆதிராவுக்கும் இளமதியை சமாதானம் செய்ய முயற்சி செய்து கொண்டிருந்தனர்.

சிபியும் ஷானவியும் ஷர்மியுடன் ஐசியு உள்ளே இருந்தனர். வெளியேக் காத்திருந்த அனைவருக்கும் ஒவ்வொரு நொடியும் சிறு யுகங்களாக கடந்து கொண்டிருந்தது. எந்த ஒரு காத்திருப்பிற்கும் முடிவு இருப்பது போல், இவர்களது காத்திருப்பும் ஷர்மி வெளியே வருவதைப் பார்த்து முடிவுக்கு வந்தது.

வந்தவள் நேராக சரணிடம் சென்று "சரண் அவ கீழே விழுந்ததுனால வயித்துல அடி பட்டு லேசா காயம் ஆகிடுச்சு, அது நாங்க சிசர் பண்ற இடம் என்பதால் பிரச்சினை இல்லை மேலும் அவங்களுக்கு ப்ளிடிங் ஆடுது, பி.பி கன்ட்ரோல்ல இல்லை, ரொம்ப உணர்ச்சி வசப்பட்டு இருக்கா........ பி.பி நார்மல் ஆகாம சிசேரியன் பண்ண முடியாது, அவ எதையோ யோசிச்சு பயந்துக்குறா போல, மயக்கம் தெளிஞ்சும் அவ இன்னும் ஒரு வார்த்தைக் கூட பேசல.

சிபி ஷானு ரெண்டு பேரும் ட்ரை பண்ணங்க........... பேசவே இல்லை, அவ கான்சியஸா தான் இருக்கா......... பட் சீ இஸ் நாட் சப்போர்டிங், பி.பி குறைய இன்ஜெக்சன் போட்டுருக்கேன். ப்ளீடிங் ஸ்டாப் ஆகாது நாம சீக்கிரம் பேபி வெளியே எடுக்கனும். அதுதான் மூணு பேருக்கும் நல்லது என்றதும்.

"இல்லை எனக்கு என் நிலா மட்டுமாவது உயிரோட வேணும் ஷர்மி, நீ கண்டிப்பா இந்த உதவியை செஞ்சுதான் ஆகனும், எனக்கு என் நிலா வேணும், அவ மட்டுமாவாது வேணும்" என்று சொன்னதையே மீண்டும் மீண்டும் கூற,

ஷர்மி அவனைப் பார்த்து "லுக் சரண், நான் டாக்டர், எனக்கு மூணு உயிரும் முக்கியம் மூணு போரையும் சேவ் பண்ணனும், அது தான் என்னோட லட்சியம், உனக்காக ரெண்டு உயிரைக் காப்பாத்தாம விட முடியாது, எனக்கு எல்லா உயிரும் ஒன்னுதான் அன்னைக்கு சொன்னதுதான் இன்னைக்கும்......... நான் உன் மனைவி குழந்தைகளை உன்கிட்ட நல்லபடியா சேர்ப்பேன் புரியுதா......? அவளை மாதிரி நீயும் புலம்பாம இந்த பார்மில் எல்லாம் கையெழுத்து போடு" என்று அதட்டல் போட்டாள்.

அவள் சொல்வதே ஆயிரம் யானைகளின் பலம் போல் அவனுக்கு மன தைரியத்தை வளர்த்தது சரணுக்கு அதில் லேசாக தெளிந்தவன், ஷர்மியின் கைகளில் இருந்த பார்ம்களில் கையெழுத்துப் போட்டுக் கொடுத்துவிட்டு, அவளிடம் "நான் நிலாக்கிட்ட பேசனும் ஷர்மி, அவளுக்கு நான் தைரியம் கொடுக்கனும், அவ என்னை விட்டுப் போகக்கூடாது. எனக்கு அவ வேணும் ஷர்மி, பேசட்டுமா...............?" என்றான்.

"யா................. ஷ்யூர் சரண் நானே அதை சொல்லத்தான் வந்தேன். நீ.......... போய் பேசு, நான் தியேட்டர் ரெடி பண்ண சொல்றேன். ஷானு உள்ளே இருக்கா..............." என ஷர்மி பேசிக் கொண்டே இருக்க, அதைக்கேட்க சரண் அங்கு இல்லை.

புது மலர்கள் பூத்திடும் வேளை - மதுவதனி

# புது மலர்கள் பூத்திடும் வேளை…!

அன்று காலையில் பூத்த தாமரைப் போல் மலர்ந்து இருந்த முகம் இப்போது புயல் காற்றில் சிக்கி துவண்டு போன கொடியைப் போல இருப்பதைப் பார்த்து அவன் முகம் வேதனையில் கசங்கியது. எதற்காக இத்தனை போராட்டம், எல்லாம் இவளுக்காகத் தானே.............! ஆனால் அதை எதையும் புரிந்து கொள்ளாமல் ஏன் இப்படி செய்தாள், என்ற கோபம் எழுந்தது. ஆனால் அதையும் தாண்டிய ஆதங்கம் தான் அவனுக்குள் அதிகமாய் இருந்தது.

மனைவியின் அருகில் சென்றவன் அவளது மூடிய விழிகளில் கருமணிகள் இரண்டும் ஒருவித அலைப்புறுதலுடன் சுழன்று கொண்டிருந்ததைப் பார்த்து அவள் கையை எடுத்து தனக்குள் வைத்துக் கொண்டு அவளை நெருங்கித் தன் இருக்கையை நகர்த்திப் போட்டு அமர்ந்தவன் அவளது வதனத்தையே விழி எடுக்காமல் பார்த்துக் கொண்டிருதான். அதுவரை சுழன்று கொண்டிருந்த அவளது கருமணிகள், கணவனது ஸ்பரிசத்தைக் கண்டவுடன் அமைதியடைந்தது போல் ஓய்வாக ஒரு இடத்தில் நின்றது.

அதைக் கண்டவன் அவளது நெற்றியில் இதழ் பதித்துவிட்டு அவளிடம் பேச ஆரம்பித்தான். அவர்களது வாழ்க்கையில் நடந்த சம்பவங்கள் அனைத்தையும் தடையின்றி கூறியவன், இளமதியைப் பற்றியும் கூறி முடித்தான். இதுவரை அவன் அவளிடம் மறைக்க வேண்டும் என்று எதையும் செய்யவில்லை, சூழ்நிலைகளும், சந்தர்ப்பங்களும் தான் அப்படி அமைந்தது. மேலும் அவன் மீனாவைப் பற்றிக் கூறிவிட்டு, அவளது தற்போதைய நிலையையும் கூறினான்.

சரண் தன் மனதை திறந்து இத்தனை நாள் அவன் மனதை அரித்த அத்தனையும் கொட்டி முடித்தான். சரண் கூறுவதைக் கேட்டதும் நிலாவின் விழிகளில் இருந்து நீர் வழிய ஆரம்பித்தது. அவள் கண்களைத் திறக்க முயல அவளால் முடியவில்லை, இமைகள் இரண்டும் பிரிய மறுத்தன.

மீண்டும் அவனே பேச ஆரம்பித்தான் “ஏன் நிலா.......... உனக்கு என்னிடம் நம்பிக்கையே இல்லையா.................? உன்னை அப்படியே விட்டுவிடுவேன் என்று நீயாக எப்படி நினைக்கலாம். நீதானேடி என் வாழ்க்கையே...... நீ இல்லாமல் நானும் என்ன செய்வேன். உனக்கு என்மேல் என்ன கோபம் என்றாலும் அதை நீ சரியாகி வந்ததும் என்னிடம் காட்டு, அதற்கு உனக்கு முழு உரிமையும் இருக்கு, ஆனால் நீ இல்லாத வாழ்க்கையை கொடுத்து என்னைத் தண்டித்து விடாதே...............!

"நிலா நீ கற்பனையில் உன்னுடைய ஓவியங்களில் வாழ்ந்த வாழ்க்கையை நாம் நிஜமாக்க வேண்டும். அதற்கு நீ எனக்கு வேண்டும் நிலா....... என்னைவிட்டு போயிடாதே..............." என்று உணர்ச்சி பொங்க அவளது கைகளை இறுக பிடித்துக்கொண்டு கூறியவன், அவளிடம் எந்த பதிலும் இல்லை என்றதும்.........

"நான் இவ்வளவு சொல்லியும் நீ பதில் பேச மாற்றேள்ளே... இதையும் நீ நல்லாக் காதுல வாங்கிக்கோ........... நீயும், குழந்தைகளும் நல்ல முறையில் என்கிட்ட வந்து சேரனும், அப்படி இல்லை... ஏதும் விபரீதமான முடிவாக இருந்தால், அதைக் கேட்க நான் இருக்கமாட்டேன். இது உன்மேலும் நாம உயிரா நினைக்கிற நம் குழந்தைங்க மேலும் சத்தியம்" என்று விட்டு அவனது கைகளைப் பிரித்துவிட்டு நகர, அவனால் முடியவில்லை.

அவன் பிரித்துவிட்ட அவளது கைகள் அவன் சட்டை நுனியைப் பிடித்திருந்தது. அதைப் பார்த்ததும் அவன் முகத்தில் லேசான புன்னகை விரிந்தது. அதோடு அவன் மனைவியைப் பார்க்க................ அவளும் அவனது முகத்தைப் பார்த்து தலை வேண்டாம் என்பதுபோல் இடமும் வலமும் ஆட்டிக்கொண்டிருந்தாள்.

அவள் தலையை வருடிக் கொடுத்தவன் "நிலாமா.......... நீ பயந்துக்கவே கூடாது. உன்னைச் சுத்தி நாங்க எல்லாரும் இருக்கோம். உன்னோட வேணிக்கா இருக்காங்க............. உனக்கு அவங்க மேல கோபம் இருக்கும். அந்தக் கோபத்தைக் காட்ட, அவங்களோட சண்டை போடா நீ வரனும். அவர்களைப் பார்த்ததில் இருந்து நீ பேசவே இல்லை. உனக்கு இப்படி ஆனதும், அவங்களால் தான் என்று நினைச்சு, குற்ற உணர்ச்சியில் தவிக்கிறாங்க. நீ பேசுடா......... ரொம்ப சந்தோசப் படுவாங்க............. ப்ளிஸ் குட்டிமா.....................? என்றான்.

நிலாவின் கோபத்தை உணர்ந்து இளமதிப் பற்றி பேச வேண்டாம் என்று நினைத்து இருந்தாலும், இளமதியின் கவலை படிந்த முகமும், கலைந்த தோற்றமும் அவனைப் பேச வைத்தது. நிலா சரண் பிடித்திருந்த கைகளை சட்டென்று விலக்க, அதிலேயே அவளது கோபம் புரிந்தது. அதனால் சரணும் அவளிடம் வேறு ஏதும் பேசாமல் அவளது கைகளையும், காயம்பட்ட வயிற்றையும் லேசாக வருடிக் கொடுத்தான்.

புதுமலர்கள் பூத்திடும் வேளை - மதுவதனி

அதற்குள் அவளை ஆபரேசன் தியேட்டருக்கு எடுத்துச் செல்ல ஆட்கள் உள்ளே வர, அவனிடம் இருந்து பிரித்த கைகளால் துழாவி மீண்டும் கணவனின் கைகளை இறுக பற்றிக் கொண்டாள். மனைவியின் கைகளில் தெரிந்த நடுக்கமும் இறுக்கமும் அவளது பயத்தை சரணுக்கு உணர்த்தியது. அதைப் புரிந்துகொண்டு அவளுக்கு ஆறுதலாகப் பேசிக்கொண்டே அவர்களுடன் அவனும் அந்த அறை வரை வந்தான்.

இடையில் பயந்த முகத்துடன் நின்றிருந்த அனைவரையும் பார்த்தவள், இளமதியை மட்டும் முறைத்துவிட்டு முகத்தைத் திருப்பிக் கொண்டாள். மனைவியின் சிறுபிள்ளைத் தனமான செயலில் சரணுக்கு சிரிப்புதான் வந்தது. இளமதி ஓடிவந்து நிலாவின் கைகளைப் பிடிக்க, அவள் திரும்பவே இல்லை. சரணும் எத்தனையோ எடுத்துக் கூறியும் அவளது பிடிவாதத்தை தகர்க்க முடியவில்லை.

அஸ்வத் வந்து இளமதியை சமாதானம் செய்ய, நிலாவை உள்ளே அழைத்துச் சென்றனர். உள்ளே சென்று அரை மணி நேரமாகி இருக்கும், அனைவரும் பதட்டத்தில் அமர்ந்திருக்க, சிபியும் ஷானவியும் ஷர்மிக்கு அசிஸ் செய்ய உள்ளே இருந்தனர். அப்போது உள்ளே இருந்து ஷானவி பதட்டத்துடன் ஓடிவர, வெளியில் இருந்து அனைவரும் விக்கித்து நின்றனர்.

**வேளை தொடரும்……..**

புதுமலர்கள் பூத்திடும் வேளை - மதுவதனி

# புது மலர்கள் பூத்திடும் வேளை...!




**வேளை - 38-1**

************************************************************************************************

வாடை பூங்காற்று என்னை தீண்டும்...
வாழ்க்கை யாவும் நீ வேண்டும்...

வாடை பூங்காற்று என்னை தீண்டும்...
வாழ்க்கை யாவும் நீ வேண்டும்...

கடலோடு அலைபோல உறவாட வேண்டும்...
இலைமோதும் மலர்போல என்னை மூட வேண்டும்...

என்தேகம் எங்கும் உன்கானம் தாங்கும்...
நீ வந்து கேளாமல் ஏங்கும் தமிழ் சங்கம்..

************************************************************************************************

புது மலர்கள் பூத்திடும் வேளை

மீனாவிடம் கூறியது போலவே இரண்டே நாட்களில் திருச்சி திரும்பிய சரணைப் பார்த்து மீனாவிற்கு ஆணவம் தலைக்கேறியது. அவள் சொன்னது போலவே அவன் நடந்து கொள்கிறான் என்று நினைத்து அவளின் மனம் கர்வம் கொண்டது. முதலில் சரணின் ஒதுக்கம் அவளைப் பாதிக்கவே இல்லை.

ஆனால் சில நாட்களில் நிலாவும் அதே ஊரில் தான் இருக்கிறாள் என்று தெரிந்ததும் அவனிடம் நேரடியாக வாதாடாமல்,அவனைப் பின் தொடர ஆரம்பித்தாள். இதை அறிந்து கொண்ட சரண் வேலை அதிகம் இருப்பது போலவே காட்டிக் கொண்டான். இதனால் கொஞ்சம் தெளிந்த மீனா "சென்டிமென்டல் இடியட்" பயந்துட்டான்" என்று மனதிற்குள்ளே அவனைப் பற்றி எண்ணிவிட்டு மீண்டும் தன் வேலையைப் பார்க்க ஆரம்பித்தாள். ஆனால் என்ன முயன்றும் சரணை நெருக்கவே முடியவில்லை.

சரண் தேனியில் இருந்து வந்த பிறகு மீனாவை பற்றின தகவல்களைத் திரட்ட ஆரம்பித்தான். அது அவனது கையில் கிடைத்ததும் அவன் அடைந்த அதிர்ச்சிக்கு அளவே இல்லை. அவனறிந்த மீனாவோ................ அல்ல ராகவ் கூறிய மீனாவோ அல்ல அவள் அதையும் தாண்டி பெண் இனத்திற்கே ஒரு சாபக்கேடு, கரை ஏற்று புரிய வைத்தாள். ஆம் சரணோ................. ராகவோ நினைத்தது போல் மீனா சாதாரணமானவள் இல்லை.

மும்பையில் பிரபல பெண் கடத்தல் தொழிலை நடத்தும் நடத்தும் தாதாவிற்கு வலது கையாக பணி புரிந்திருக்கிறாள். வேலைக்காகவோ.................. அல்லது படிப்பிற்காகவோ என்று மும்பை செல்லும் இளம் பெண்களுடன் நட்புடன் பழகி, அவர்களுக்குத் தேவையான உதவிகளை செய்வது போல் செய்து, அவர்களை அந்த இம்ரானின் இடத்திற்கு கொண்டு போய்விட்டு விடுகிறாள். இதில் அவளுக்கு கமிசனும் உண்டு.

ராகவ் வெளிநாடு சென்றதும் நண்பர்களுடன் சேர்ந்து பார்ட்டி பப் என்று ஜாலியாக இருந்தவளை நான்கு பேர் கும்பல் கடத்திவிட, அதில் இருந்து தப்பிப்பதற்காக அவள் தேர்ந்தெடுத்த வழிதான் பெண்களைக் கடத்துவதும் கைகாட்டி விடுவதும். ஒரு பெண் கடத்தப்பட்ட இருபது நிமிடத்திலேயே அவள் வெளிநாட்டிற்கு அனுப்பப்படுகிறாள் போன்ற செய்திகளைப் சரணுக்கு படிக்க படிக்க.... மீனாவின் மேல் கோபம் கட்டுக்கடங்காமல் பெருகியது.

அதே சமயம் இதெல்லாம் ஆதாரமற்ற குற்றங்கள் இவற்றை நிரூபிக்க தகுந்த ஆதாரங்கள் தேவை என்றும் அந்த பைலின் கடைசியில் எழுதப்பட்டிருந்தது. அதைப் படித்ததும் கைக்கு எட்டிய உணவு வாய்க்கு எட்டாமலே போய்விட்டதே என்று மனம் தளர்ந்து போனான்.

அடுத்தடுத்து இதில் முடிவுகள் எடுத்து செயல்பட முடியாது மிகவும் பொறுமையும் நிதானமும் தேவை என்று உணர்ந்து அமைதி காத்தான். அவனது அமைதிக்கு கிடைத்த பரிசாக அடுத்த இரண்டே மாதத்தில் மீனா மீண்டும் மும்பை பயணமானாள். இதில் எப்படியும் அவளைப் பிடித்து விட வேண்டும் என்ற நோக்குடன் அவளைப் பின்பற்றி அவனும் மும்பை பறந்தான். அவள் கூட்டத்தைப் பிடிக்கப் போகும் கடைசி நிமிடத்தில் சரணைத் திசை திருப்பி அவர்களை தப்பிக்க வைத்தனர். ஒரு சிலர் அவனால் அது யாரென்று கூட யூகிக்க முடியவில்லை. மறுநாள் தலைவலியுடன் அமர்ந்தவன் முன்பு மும்பை நியூஸ் பேப்பரை வைத்துவிட்டு அமைதியாக அவன் எதிரே அமர்ந்தவரைப் பார்த்து ஆச்சரியத்துடன் விழி விரித்தான். அவனைப் பார்த்து புன்சிரிப்புடன் பேச ஆரம்பித்தார் லத்திகா.

சரணிடம் அவனைப்பற்றி நிலாப்பற்றியெல்லாம் நலம் விசாரித்துவிட்டு முதல்நாள் நடந்த மீட்டிங் பற்றி பேசினார். “சரண் நீங்க எப்படி அந்த இடத்துக்கு வந்தீங்க உங்களுக்கு அந்த கேங்ல யாரைத் தெரியும் என்றெல்லாம் கேட்க மாட்டேன்.

ஆனா நீங்க செய்தது எவ்வளவு பெரிய முட்டாள் தனம் தெரியுமா..................? எந்த ஒரு முன்னறிவிப்பும் இல்லாம..................? ஒரு பாதுகாப்பும் இல்லாம இப்படி ஒரு செயல்ல நீங்க எப்படி இறங்கி நீங்க.......................... அவங்க உங்களைப் பார்த்திருந்தாளோ.......... இல்லை நான் வராம வேறு யாரோ வந்திருந்தாளோ உங்க நிலைமை என்ன ஆகியிருக்கும் தெரியுமா.............? எனக்கு உங்களைத் தெரியும் என்பதால் நீங்க இப்போ உயிரோட இருக்கீங்க............ இந்தக் கேங்கினால் நிலாவுக்கு எதுவும் பிரச்சினையா.......................? இல்லை உங்களுக்கா.............? என்ன விசயமா இருந்தாலும் என்கிட்ட ஹெல்ப் கேளுங்க என்று நான் உங்களுக்கு ஏற்கனவே சொல்லியிருக்கேன். அப்படி இருந்தும் ஏன் இப்படி பண்ணீங்க” என்று சரணைப் போட்டு வறுத்து எடுத்துவிட்டார் லத்திகா. அவனால் “சாரி மேடம்” என்பதை தவிர வேறு எதையும் பேச முடியவில்லை.

# புது மலர்கள் பூத்திடும் வேளை…!

அவனுமே நேற்று நடந்த துப்பாக்கிச் சண்டைகளைப் பார்த்தவன் தானே, அங்கு சென்ற பிறகுதான் அவனுக்குமே யாரையேனும் உடன் அழைத்திருக்க வேண்டும் அல்லது யாருக்காவது சொல்லியிருக்க வேண்டும் என்று புரிந்தது. சினிமாவில் வரும் ஹீரோ போல் தனியாக சென்று சாதிக்க முடியும் என்று யோசித்தது தவறு தானே.......................! அது நிழல்.................... இது நிஜம்..................! என்று புத்திக்கு உரைத்து விட லத்திகா பேச பேச அமைதியாகி அமர்ந்துவிட்டான்.

சரணின் அமைதியைக் கண்டவர் அவனிடம் கோபத்தைக் காட்டாமல் பொறுமையாக பேசி விஷயத்தை வாங்கினார். அவனும் மீனாவின் செய்கைகளையும் மிரட்டல்களையும் ஒன்றுவிடாமல் கூறிவிட்டான். அந்த இடமே சிறிதுநேரம் அமைதியில் கழிந்தது. அந்த அமைதியை உடைத்து முதலில் பேசிய லத்திகா................... "சரண் எனக்கு என்ன சொல்றதுனே தெரியல இன்னும் அந்தப் பொண்ணுக்கு நல்ல காலம் வரல போல, நடந்து முடிஞ்சதைப் பத்தி தெரியும் என்று மீனாவுக்குத் தெரியவே கூடாது............ லேசா மேட்டர் லீக் ஆனாலும் சுதாரிச்சுடுவாங்க. அப்புறம் நம்ம கைமீறிப் பார்த்து "என்ன சரண்................ ஆர் யூ ஓகே..............." எனவும், "எஸ் மேம் ஐ ம் ஓகே" பட் இந்த மீனா

இப்படிப்பட்ட பொண்ணுனு என்னால நினைச்சுக்கூட பார்க்க முடியல"" "நோ சரண்................ இதில் முழுதப்பும் அவமேல் இல்லையே........ பெற்றவர்கள் சரியாக வளர்க்காமல், கண்டிக்காமல்விட்டு, செல்லம் கொடுத்து............ இன்று ஆடம்பர வாழ்க்கைக்காக முறை தவறி இருகின்றனர்.

லாஸ்ட் வீக் சன்டிகர்ல ஜஸ்ட் ஒரு ஐ-போனுக்காக கொலை செய்திருக்கான் ஒரு பதினாறு வயதுப் பையன் இதெல்லாம் யாரோட தப்பு................ என்னைக் கேட்டால் பெத்தவங்க வளர்ப்பு சரியில்லைன்னு தான் சொல்வேன்..................... மீனா கேசிலும் அதேதான் ஒரே பொண்ணுனு அம்மா, அப்பா அண்ணன் எல்லாரும் பாசம் காட்டுறேனு பேர்ல ஆணவக்காரியா, ஆடம்பரத்துக்கு அடிமையா............... வளர்த்து விட்டுட்டாங்க, தீடிரென்று அவளுக்கு கொடுத்த பணத்தைக் குறைக்கும் பொது இந்த மாதிரி இல்லீகல் பிசினஸ் தேடித்தான் போவாங்க...................... சரி விடுங்க..................... இனி மீனாவைப்பத்தின கவலை உங்களுக்கு வேண்டாம்".

புது மலர்கள் பூத்திடும் வேளை மதுவதனி

“இந்த கேங்கைப் பிடிக்கிறது எனக்கு பெரிய விசயம் இல்லை. பட் இதுக்கு வேர்ல்ட் புல்லா நெட்வொர்க் இருக்கு அது டோட்டலா நான் பிடிக்கணும். இப்போ அவரசப்பட்டு நடந்துகிட்டா, பின்னாடி எந்த யூசும் இருக்காது. இந்த கேசுக்காக நான் நைன் மந்த்ஸ் வொர்க்பண்றேன். எனக்கு மெயின் கேரக்டரைப் பிடிக்கணும், அவன் இன்னும் டு மந்த்ல இந்தியா வர்ரான். அப்போ டோடல் நெட்வொர்க்கையும் ரவுண்டப் பண்ணி அரஸ்ட் பண்ணிடுவேன். அதுவரைக்கும் மீனா சுதந்திரமா திரியட்டும். இனிமேல் மீனாவுக்குப் பயப்பட வேண்டாம். அதோட இந்த இரண்டு மாதமும் கவனமா இருக்கணும். நிலாவுக்குப் புள் செக்யூர் கொடுத்துடுங்க……………. மீனா நைட்டே சென்னை போயிட்டா………………… அவளுக்கும் இந்த கேங்குக்கும் எந்த சம்மந்தமும் இல்லை என்றுதான் ரிக்கார்ட் இருக்கு பட் அந்த இம்ரானோட ரைட் ஹேண்டே இவதான். உண்மையான ஆதாரங்கள் இல்லாம அவளை நெருங்க முடியாது.

“இனி கொஞ்சநாள் எந்த வேலையிலையும் இறங்கமாட்டாள் அவ பார்வை உங்கமேலத்தான் இருக்கும். அவ உங்களை டார்கெட் பண்ணது கூட, உங்களுக்குத் தெரியாம உங்க பின்னாடி இருந்து அவ பிஸ்னஸ் நடத்தத் தான் அவ பெரிய ப்ளானோட இருந்திருக்கா, அது நீங்க நிலாவை மேரேஜ் பண்ணவும் ஏமாற்றமடைந்து அதைத் தாங்கிக்க முடியாம இந்தமாதிரி கீழ்த்தரமா நடந்துக்கிட்டு இருக்கா…………….

இப்போ என்னோட கண்பார்வைக்கு வந்துட்டா. இனி அவளோட ஒவ்வொரு அசைவும் எனக்கு அப்டேட் ஆகிடும். நீங்க கவலைப்படாமல் போய் உங்க வேலையைப் பாருங்க” என்று சரணிடம் பேசி அவனுக்கு நிதர்சனத்தை உணர்த்தி வெளிப்பட்டார் லத்திகா……………

அன்றிரவே திருச்சி வந்தான் அடுத்தடுத்து சென்னையிலேயே தன் வேலை இருக்கும்படி பார்த்துக் கொண்டான். மீனாவுக்கு சரணின் மேல் சிறிது சிறிதாக சந்தேகம் முளைக்க ஆரம்பித்தது. அது அவளுக்குத் தெளிவாகும் போது அனைத்தும் அவள் கைமீறி போயிருந்தது. சரணின் உதாசீனம் நாளடைவில் அவளிடம் நேரடியாகவே நடத்தப்பட, அதில் யோசிக்க ஆரம்பித்தவள் அடுத்து நிலாவின் சீமந்தம் என்பதை அறிந்து கொதித்துப் போனாள். சரணை ஒரு முறை மிரட்டலாம் என்று நினைத்து அவனிடம் பேச, அவனோ அவளை ஒரு மனுசியாக கூட மதிக்காமல் உன்னால் என்ன செய்ய முடியுமோ செய்து கொள் என்று கூறிவிட்டான். இதை சிறிதும் எதிர்பாக்காத மீனா, அவனை வருத்த நினைத்து ஏற்காடு செல்ல, அங்கு குழந்தைகளைப் பார்க்கக் கூட அனுமதிக்கவில்லை.

புது மலர்கள் பூத்திடும் வேளை - மதுவதனி

மேலும் நிலாவை வைத்து அவனிடம் பேசலாம் எனும் போது, அவளைச் சுற்றி எப்போதும் ஆட்கள் இருந்து கொண்டே இருந்தனர். அவள் திட்டம் பலிக்காதோ என்று முதன் முறையாக அவள் பயந்து போனாள். ஆனால் அதை வெளிக்காட்டாமல் நிலாவின் சீமந்த விழாவிற்கு சென்றால் ஏதேனும் ஒரு வழிக் கிடைக்கும் என்று நினைத்து தன் அன்னையுடன் கிளம்பி வந்துவிட்டாள்.

ஆனால் அங்கு நடந்த நிகழ்வுகளும், திடிரென இளமதியின் வரவும் சரண் எல்லாவற்றையும் யோசித்து பிளான் செய்து தன்னை ஒதுக்கியிருக்கிறான் என்று தெரிந்து கொண்டாள். அவள் தெரிந்து புரிந்து கொண்டது மேலும் மேலும் வன்மத்தை வளர்க்க...

மாடியில் நின்று கீழே நடந்த நிகழ்வுகளை சகித்துக் கொள்ள முடியாமல் பார்த்துக் கொண்டிருந்தாள். அப்போது தான் இளமைதியைப் பார்த்ததும் நிலா எழுந்து மேலே வந்தது. அதைப் பார்த்ததும் மீனாவின் கோபம், பொறாமை, வன்மம் அனைத்தும் சேர்ந்து சிறிதும் யோசிக்காமல் அவளைக் கீழே தள்ள செய்தது. அந்த கொடூரமான செயலை அவள் செய்து முடித்ததும் தன்னை யாரோ பலவந்தமாக இழுத்து செல்வது தெரிந்து யாரென்று பார்க்கும் முன் அவள் ஓர் அறைக்குள் அடைக்கப்பட்டு அங்கிருந்த ஒருவரால் கன்னத்தில் பளாரென்று அறையும் வாங்கியிருந்தாள்.

கன்னத்தில் வாங்கிய அறையில் பொறிகலங்கி நின்ற மீனா, தலையை உலுக்கி அது யாரென்று பார்க்க அங்கு ஒரு பக்கம் அவளின் அண்ணனும் மறுபக்கம் ருத்ரமூர்த்தியாய் அவளது தந்தையும் நின்றிருக்க, தப்பு செய்து கையும் களவுமாக மாட்டியிருக்கிறோம் என்ற எண்ணம் கூட இல்லாமல் அவர்களை மிதப்பாய் ஒரு பார்வை பார்த்தாள் மீனா.

அதில் வெகுண்டவர் சிறிதும் யோசிக்காமல் தன் பெல்டை உருவி அவளை விளாசித் தள்ளிவிட்டார். தங்கை அடி வாங்குகிறாள் அதைத் தடுக்க வேண்டும் என்று கூட நினைக்காமல் சிலையாய் நின்றிருந்தான் மணி, வேடிக்கைப் பார்த்துக் கொண்டு... அதை உணர்ந்த மீனா தன்னைப்பற்றி இவர்களுக்கு ஏதோ தெரிந்திருக்கிறது. இல்லையென்றால் இப்படி ஒரு கோபம் இவர்களுக்கு உண்டாகாது என்று சரியாக யூகித்தாள்.

# புது மலர்கள் பூத்திடும் வேளை…!

அவளின் யூகம் சரியே....................! அன்று காலை விழாவிற்கு வந்த மீனாவின் தந்தையிடமும், தன் அக்காவின் கணவனிடமும் மீனாவைப் பற்றிய அத்தனை செய்திகளையும், லத்திகா கொடுத்த ஆதாரத்துடன் கூறியிருந்தான் சரண் இதை முற்றிலும் எதிர்பார்க்காத அவ்விருவரும் "மீனாவா.................. இப்படி" என்ற ரீதியில் இருந்தனர். மணிக்கு ஏற்கனவே தன் தங்கையின் செயல் பற்றித் தெரியும். அது வளர்ந்த குழந்தை அடம்பிடிப்பது போல் காலம் கடந்தால் சரியாகிவிடும் என்று எண்ணியிருந்தான். அவன் எண்ணத்தை பொய்யாக்கிய மீனாவிடம் இப்படி ஒரு நடவடிக்கையை அவர்கள் எதிர்பார்க்கக்கூட இல்லை. மனைவியை அழைத்து அவருக்கு எதுவும் தெரியுமா என்று விசாரிக்க, அவரது அதிர்ந்த முகமே, மனைவிக்கு எதுவும் தெரியவில்லை என்பதை உறுதி செய்தது.

உடனே பெரியவர்கள் அந்த வீட்டைவிட்டு மற்றவர்கள் ஏன் எதற்கு என்ற கேள்விகள் கேட்கும் முன் மீனாவை இழுத்துக் கொண்டு வெளியேறினர். அவர்களின் பின்னே வந்த மணியை இங்கிருந்து அடுத்ததைப் பார்க்கும்படி கூறிவிட்டு சென்றனர்.

அந்த வீடு முழுவதும் பேரமைதி நிலவியது. மீனாவின் தாய் ஒருபக்கம் உட்கார்ந்து அழுகையில் கரைய.................. அவளின் தந்தையோ ஹாலில் அமர்ந்துவிட்டதை வெறித்துக் கொண்டிருந்தார்.

இருவரையும் வேடிக்கைப் பார்த்துக்கொண்டிருந்த மீனா ஒரு கட்டத்தில் பொறுமையிழந்து, தான் உடல் நோக அடிவாங்கியதையும் மறந்து "எதுக்கு இப்படி ரியாக்ட் பண்றிங்க................. இப்போ என்ன நடந்திருச்சுன்னு நீங்க இப்படி அழறீங்க................. இங்கே என்ன யாரும் செத்துப் போயிட்டாங்களா என்ன..........................? ச்சே" என்று கடுப்புடன் கூறினாள்.

செய்த தப்பை பற்றி சிறிதும் கவலைப்படாமல் எப்படி பேசுகிறாள்............ இவள் இப்படி பேச யார் காரணம்....................... யார்.................. வேறு யார்..................... எல்லாம் அவளைப் பெற்று அளவுக்கதிகமான பணத்தையும் செல்லத்தையும் கொடுத்த தாங்கள் தான். இவள் இப்படி ஆனதற்கு நாங்களே பொறுப்பு.................... இனி என்ன செய்ய முடியும்.................. சரண் சொல்வதைப் பார்த்தால் இன்று ஊரில் நான் எப்படி தலை நிமிர்ந்து வாழ்வது. ஒரு பெண்பிள்ளையை வளர்க்கத் தெரியாமல் வளர்த்தால் தான் இன்று எப்படி ஒரு அவமானத்தைத் தேடிக் கொண்டுத்துவிட்டாள். பெற்ற மகள் தான்............

ஆனால் என்னைப் போல் எத்தனைப் பெற்றோர் தங்களின் பெண் குழந்தைகளைக் காணாமல் தவித்துப் போயிருப்பார்கள். அவர்களின் கண்ணீருக்கெல்லாம் யார் என்ன பதில் சொல்வது................?

கடவுளே...........................! பெண்ணை செல்லமாக வளர்க்க வேண்டும் என்று நினைத்தது தவறா..........? இனி இவளைத் திருத்த முடியாது............... அதையெல்லாம் தாண்டி நீண்ட நாட்கள் ஆகிவிட்டது. வயற்றில் குழந்தையோடு இருந்தவளை சிறிதும் யோசிக்காமல் கொலை செய்யும் அளவுக்கு துணிவு வந்துவிட்டது என்றால் இவளைத் திருத்தும் வேலையை ஏன் செய்ய வேண்டும். இவள் பூமிக்குப் பாரம் தான். இவள் இல்லாமல் இருப்பதே நல்லது............ என்று யோசித்துக் கொண்டே இருந்தவர் மீனாவின் பேச்சிலும், அவரது எண்ணத்தில் தோன்றிய வார்த்தைகளையும் யோசித்தவர் எதுவும் பேசாமல் மனைவியை அழைத்துக் கொண்டு அறைக்குச் சென்றார்.

அவர்கள் இவளைக் கண்டு கொள்ளாமல் சென்றது மீனாவிற்கு எரிச்சல் வந்தது. வெளியே எங்கேயும் போகலாம் என்றால் உடலில் வாங்கிய அடிகள் அவளை ஓய்வுக்கு இழுத்தது. வேறு வழி இல்லாமல் அறைக்குச் சென்று அப்படியே கட்டிலில் விழுந்தாள்.

உள்ளே சென்ற இருவரும் சிறிது நேரம் அமைதி காத்தனர் பின்பு மனைவியை நோக்கித் தன் பார்வையை செலுத்தியவர் “நீ என்ன செய்யலாம் என்று நினைக்கிற, இவ இனி உன்னோட பொண்ணு என்பதை மறந்திடு, பாதிக்கப்பட்ட பொண்ணுங்களில், ஒரு பொண்ணோட அம்மாவா உன்னை நினைச்சுக்கோ… இப்ப சொல்லு என்ன செய்வ நீ.....................!” என்றார் தளர்ந்த குரலில்.

கணவரின் பேச்சில் வந்த அழுகையை அடைக்கியபடி “நான் என் கையாலையே கொன்னு போட்டுருப்பேன். இப்படி ஒரு பொண்ணை இந்த உலகம் எதுக்கு தாங்கனும்................ அவளைக் கொலை செய்திருப்பேன்” என்றவர்… “ஆனால் பெத்த மனசு கேட்கலயே, பாராட்டி சீராட்டி வளர்த்த பொண்ணை அப்படி நினைக்க முடியலையே என்று எவ்வளவு அடக்கியும் முடியாமல் வாய்விட்டு அழுதார்.

ஆனால் மீனாவின் தந்தைக்கோ அழுகை வரவில்லை.................. மாறாக குரலில் கடுமையைத் தேக்கி “நான் எந்த முடிவு எடுத்தாலும் நீ அதுக்கு கட்டுப்படணும்........... நான் பணக்காரன் என்னோட ஆணவமும், கர்வமும் கூடப்பிறந்தது. எனக்கு என்னோட கௌரவம் ரொம்ப முக்கியம், இப்படியெல்லாம் யோசிச்சது ரொம்பத் தப்பு, அப்படி நினைச்சதுனால தான் இன்னைக்கு என் பொண்ணை சரியா வளர்க்க முடியாமப் போச்சு. இனி அதைப்பத்தி யோசிக்கக் கூடாது. முதல்ல நான் ஒரு மனுசன் அப்புறம் தான் அப்பா................ ஒரு மனுசனா என்ன செய்யணுமோ அதை செய்யப்போறேன். நீ தடுக்கக்கூடாது. நமக்கு இனி ஒரே பையன் தான். பொண்ணு ஒரு விபத்துல இறந்துட்டா என்று நினைச்சிக்கோ...................” ஏன் முடித்தவர் மனைவியின் முகத்தைப் பார்த்தால் தன் முடிவை மாற்றிக்கொள்ள வேண்டியது ஆகிவிடுமோ என்று நினைத்தவர். வேகமாக போனை எடுத்து தன் மகனுக்கு அழைத்தவாறே மனைவியின் முகம் பார்க்காமல் வெளியேறினார்.

மகனிடம் அங்கு உள்ள நிலவரங்களைக் கேட்டு அறிந்தவர், அவருடைய முடிவையும் கூறினார். மணியும் இதை ஓரளவுக்கு எதிர்பார்த்தான் தான். ஆனாலும் மனம் ஏற்றுக்கொள்ள மறுத்தது. அதனால் மீண்டும் ஒரு முறை நன்றாக யோசனை செய்யும்படிக் கூறினான். அவனைப் பெற்றவரோ மீண்டும் ஒரு முறை என்ற பேச்சிற்கே இடமில்லை என்று உறுதியாகத் கூறிவிட்டு, லத்திகாவின் மொபைல் நம்பரை வாங்கிகொண்டு இணைப்பைத் துண்டித்தார்.

லத்திகாவிடம் பேசி தன் முடிவைத் தெரிவித்துவிட்டு இனி தான் செய்வதற்கு ஒன்றுமில்லை என்பது போல் அமைதியைக் கடைபிடித்தார். மனம் மட்டும் தன் மகளின் செயல்களை எண்ணி எண்ணி வெறுப்பைக் கூட்டிக்கொண்டே போனது. தந்தைப் போனை வைத்ததுமே அகிலாவிடம் லேசாக விசயத்தைக் கூறிவிட்டு வீட்டுக்கு வந்துவிட்டான். மீனாவை பிடிக்கும் அதே நேரம் இம்ரானின் கேங்கையும் பிடிக்க வேண்டும் என்பதால் லத்திகா மும்பையில் இருந்தாள். அதனால் லோக்கல் போலிசிடம் பொறுப்பையும், தன் பிளனையும் கொடுத்து செயல்படுத்த சொன்னார். அவர்களும் மீனாவின் வீட்டை நோக்கி பறந்தனர்.

அடுத்த சில மணி நேரங்களில் மீனாவின் வீட்டைச் சுற்றிலும் போலீஸ் சுற்றி வளைக்க பெற்றோரும், அண்ணனும் ஒன்றும் சொல்லாமல் அமைதியாய் அவர்கள் வேலையை செய்ய சொல்லிவிட்டு ஒதுங்கினர். தொடர்ந்து வாகனங்களின் வருகையில் விழித்த மீனா ஜன்னல் வழியே வெளியைப் பார்க்க காவல்துறை வாகனங்கள் வரிசைக்கட்டி நிற்பதைப் பார்த்து துணுக்குற்றாள்.

புது மலர்கள் பூத்திடும் வேளை - மதுவதனி

மின்னல் வேகத்தில் இதெல்லாம் தன் பெற்றோரின் வேலை என்பதைப் புரிந்து கொண்டு தப்பிக்கலாம் என்று கதவை திறக்க முயற்சிக்க அது பூட்டப்பட்டு இருந்தது. நொடியில் அவள் நன்றாக மாட்டப்பட்டு விட்டோம் என்பதை உணர்ந்து ஜன்னல் கதவின் வழியே வெளியேற நினைத்து அங்கே போக, அதற்குள் கதவு திறக்கும் சத்தம் கேட்க…………… போலீஸிடம் மாட்டிக் கொள்ளக்கூடாது என்ற எண்ணம் மட்டுமே மூளைக்குள் ஒலிக்க, எதைப்பற்றியும் யோசிக்காமல் ஜன்னலில் இருந்து கீழே குதித்தாள் மீனா.

மீனாவிடம் இருந்து இப்படி ஒரு செயலை எதிர்பார்க்காத காவல் துறையினர் கீழே வருவதற்குள் தலையில் பலத்த அடியுடன், ரத்தப் போக்கு அதிகமாகி அங்கேயே மயங்கிருந்தாள். மீனாவின் தாயும், மணியும் பதறிக் கொண்டு வர அவளின் தந்தையோ எந்த பதட்டமும் இல்லாமல் அமர்ந்த இடத்திலேயே அமர்ந்திருந்தார்.

மீனாவே மருத்துவமனையில் சேர்த்து அவளது பொறுப்புகளை காவல்துறை கையில் எடுத்து கொண்டது. வீட்டினர் கையைக் கட்டிக்கொண்டு வெளியில் அமைதிகாக்க……… லத்திகாவிடம் இருந்து வந்த தகவலின்படி அனைத்து ஆதாரங்களுடன் மும்பை தாதா இம்ரான் கைது செய்யப்பட்டுவிட்டான் என்று தெரிந்தது. மீனாவின் நிலையை அறிந்தவர் அவள் சுய உணர்வில் இருக்கும்போது எப்படியேனும் வாக்குமூலம் வாங்கி விடும்படி பணித்தவர் மும்பையில் வேலையை முடித்ததும் உடனே வருவதாக கூறினார்.

மருத்துவமனை களேபரங்கள் முடிந்து, மீனாவிற்கு தலையில் ஒரு சர்ஜரி செய்யப்பட்டது. ஆழ்ந்த மயக்கத்தில் இருப்பதாகத் தெரிவித்த மருத்துவர்கள் 24 மணி நேரம் காலக்கெடும் அளித்தனர். இவையெல்லாம் முடிந்து மனமும் உடலும் சோர்வாக அங்கிருந்த இருக்கையில் சாய்ந்தனர்.

தீடிரென்று நினைவு வந்தவராக மகனிடம் திரும்பி “தம்பி …………… அப்பா எங்கே……………….. வீட்டிலேயே இருக்கார் போல……………….. போன் பண்ணி சொல்லுடா…………” என்றதும் அப்போது தான் அவனுக்கும் நினைவு வந்து தந்தைக்கு அழைத்தான். அழைப்பு எடுக்கப்படாமலே போக…………… வீட்டிற்கு அழைத்தான். இரண்டு போனும் எடுக்கப்படாமலே ரிங் போய்க்கொண்டே இருந்தது.

# புது மலர்கள் பூத்திடும் வேளை…!

மனதில் ஒரு பயம் முளைக்க தாயிடம் எதுவும் கூறாமல் வீட்டிற்கு சென்றான் அவன் மனதில் தோன்றிய பயம் உண்மை என்பது போல் அவர்கள் போகும் பொது அவர் எப்படி அமர்ந்திருந்தாரோ அதேபோல், அதே நிலையில் தான் இன்னும் அமர்ந்திருந்தார் வேகமாக சென்று அவரைத் தொட அப்படியே சரிந்து கீழே விழுந்தார். நொடியும் தாமதிக்காமல் தனக்குத் தெரிந்த முதலுதவிகளை எல்லாம் செய்து பார்த்தும் எந்த பிரயோஜனமும் இல்லை................ நிமிடங்கள் கடந்த பிறகும் நிதர்சனத்தை அவனால் ஏற்றுக்கொள்ள முடியவில்லை. ஆம் அவரது உயிர் இவ்வுலக வாழ்வைவிட்டு பறந்தது.

அடுத்தடுத்த நிகழ்வுகள் காற்றைப் போல் வேகம் கொண்டு நடந்தன. அவரது இறுதிக்காரியங்கள் முடிந்து ஆறு நாட்கள் ஆகியிருந்தன.

மீனாவிற்கு அவர்கள் சொன்ன நேரத்தில் சுய நினைவு வராததால் அவள் கோமாவிற்கு சென்றுவிட்டதாகக் கூறி முடித்தனர் மருத்துவர்கள் அவளை மருந்துவமனையிலேயே காவலிலும் வைத்திருந்தனர். தந்தை இறந்த செய்தியில் தாய் மிகுந்த அதிர்ச்சியில் இருந்ததால் மணியும் அகிலாவும் அவர்கள் வீட்டிற்கே வந்துவிட்டனர். மருத்துவமனையில் அவர்கள் யாரும் தேவைப்படவில்லை. அதனால் மணியும் அகிலாவும் தினமும் சென்று பார்த்து வந்தனர் தாயை வற்புறுத்தி அழைத்தும் கூட அவர் அவளைச் சென்று பார்க்கவில்லை. முற்றிலும் மகளை வெறுத்துவிட்டார்....

நிலாவிற்கு துணையாக இளமதி வந்துவிட்டதால், அகிலாவால் மாமியாரை கவனிக்க முடிந்தது. கணவரும், மகளும் இல்லாத வாழ்க்கையை ஓரளவுக்கு பழகிக்கொண்டார். அவர் சிபி, சரண் என்று அனைவரும் வந்து துக்கம் விசாரித்து சம்மந்தகாரர்களாக அவர்கள் செய்ய வேண்டிய முறையையும் செய்து விட்டுதான் சென்றனர்.

மகனிடமும், மருமகளிடமும் அவர்கள் செய்த தவறுக்கு மன்னிப்பை யாசித்தார். மீனா செய்த தவறுக்கு நீங்கள் என்ன செய்வீர்கள் என்று அகிலா பெருந்தன்மையாக விட்டுவிட்டாள். ஆனால் சரணிடம் மன்னிப்பைக் கேட்டபோது அவனால் அதை ஏற்றுகொள்ள முடியவில்லை. அது அவன் முகமே காட்டிக் கொடுக்க, காலம் எல்லாவற்றையும் மாற்றும், மறக்க வைக்கும் மன்னிக்க வைக்கும் என்ற எண்ணத்தோடு அவர் வாழ்நாளைக் கடந்த ஆரம்பித்தார்.

# புது மலர்கள் பூத்திடும் வேளை…!

மீனாவின் நிலை மிகவும் மோசமாகிக் கொண்டிருந்தது. திடீரென ஒரு நாள் கண் விழித்து அவளுக்கு மாட்டியிருந்த உபகரணங்களை கழட்டி எரிந்து ஆர்ப்பாட்டம் செய்ய மருத்துவர்கள் அவளுக்கு ஊசியைப் போட்டு உறங்க வைத்தனர். இதுவே வாடிக்கையாகிவிட மருத்துவர்கள் அவளுக்கு மனநலம் பாதிக்கப்பட்டுள்ளது. அதனால் காப்பகத்தில் சேர்க்கும் படி கூறிவிட மனதைக் கல்லாக்கிக் கொண்டு மீனாவை ஒரு மனநல காப்பகத்தில் சேர்த்தனர். அவரது மனமும் பக்குவப்பட்டு விட பெற்ற மகளின் நிலையை எண்ணி வருத்தப்படாமல், அவளது மறு வாழ்வுக்காக பிரதிக்க ஆரம்பித்தார்.

**வேளை தொடரும்……..**

புதுமலர்கள் பூத்திடும் வேளை - மதுவதனி

# புது மலர்கள் பூத்திடும் வேளை…!

**வேளை - 38-2**

இதோ இன்றோடு நிலா ஹாஸ்பிடல் வாசம் முடிந்து வீட்டிற்கு வந்து இரண்டு நாட்கள் ஆனது. குழந்தைகள் இருவரும் உறக்கத்தில் இருக்க, இளமதி நிலாவின் கூந்தலுக்கு சாம்பிராணி புகைபோட்டுக் கொண்டிருந்தாள். "இந்தப்பக்கம் திரும்பு குட்டிம்மா..................! முடி காயாம விட்டா சளிப்பிடிக்கும், குழந்தைகளுக்கும் சேராது..........."

"அக்கா விடுங்க................ இழுத்துப்பிடிகாதீங்க.............. வலிக்குது..............! எனக்கு முதல்ல சாப்பிட ஏதாவது கொண்டு வாங்க........... பசி கொல்லுது.................! "பசி எடுத்திடுச்சா....... அதுக்குத்தான் சொன்னேன் கொஞ்சமாவது சாப்பிடு, அப்புறம் தலைக்கு ஊத்திக்கலாம் என்று........ கேட்டாத்தானே................ நீ அந்த பால்கனியில் வெயில் படுற இடத்துல நின்னு தலையை காய வை. நான் உனக்கு சாப்பிட எடுத்து வரேன்." என்று சொன்னதுமில்லாமல் அவளை அழைத்துப் போய் அந்த இடத்தில் ஒரு நாற்காலியைப் போட்டு அமர வைத்துவிட்டும் சென்றால் இளமதி.

தமக்கையின் உரிமையான கண்டிப்பில், பாசத்தில் நெஞ்சுருகிப் போனாள் நிலா.......... இனி பார்க்கவே முடியாது................ வேணிலா எனும் பெயரின் அத்தியாயம் முடிந்தே போய்விட்டது என்று ஒவ்வொரு நாளும் அவள் வருந்திய நாட்கள் எல்லாம் இன்று ஒன்றுமே இல்லாமல் போனது போல் மனம் சந்தோசமாய் இருந்தது. அன்று இளமதியை பார்த்ததும் மனதுக்குள் தோன்றிய மகிழ்ச்சியும் நிம்மதியும் சொல்லில் அடங்காது.

அஸ்வத்தை சரண் அறிமுகப்படுத்திய தன் மூலம் முன்னமே தெரிந்திருந்ததில், அவன் மேல் ஒரு மரியாதை உண்டாகியிருந்தது. மேலும் ரவி ஆதிராவின் நட்பு சரவணன் குழலியின் அன்பான அரவணைப்பு எல்லாவற்றையும் நொடியில் மனக்கண் முன் நல்ல குடும்பத்தில் தான் அமைந்துள்ளது என்ற நிம்மதியும் ஒருங்கே தோன்றியது ஆனால் அடுத்த நொடி அவள் வீட்டைவிட்டு போனதும் நடந்த கொடூரமான சம்பவங்கள் எல்லாமே அவள் முன் படமாக விரிய, மறைந்த கோபம் தண்ணீரில் மூழ்கிய பந்தாய் வெளியே வந்தது. அத்தனை பேர் இருக்கும் போது இளமதி தன்னிடம் பேச வர அதற்கு அவள்மேல் உள்ள கோபத்தில் தானும் ஏதேனும் பேசிவிடுவோமோ என்றுதான், சரண் அழைக்க அழைக்க அவள் அவ்விடத்தைவிட்டு அகன்று மாடியேறியது.

ஆனால் அதற்குப் பிறகு நடந்த எதுவுமே நிலா நினைத்துக்கூட பார்த்திராதது. கோபத்தில் மாடிப்படிகளை மூச்சு வாங்க ஏறியவள் கடைசிப்படியில் இருந்த தூணின் பின்னே நின்று மூச்சு வாங்கலாம் என்று சாய்ந்தது தான் தெரியும், அடுத்து அவளை யாரோ பலம் கொண்ட மட்டும் தள்ளியதும் அவள் பற்றிக்கொள்ள எந்த ஆதாரமும் இன்றி, குழந்தைகளுக்கு அடிபட்டுவிடக்கூடாதே என்ற பயத்தில் கைகளை வயிற்றின் குறிக்கே கட்டிக்கொண்டு படிகளில் உருண்டு கீழே விழுந்ததும் தான் அவளது நினைவருகில் கடைசியாய் பதிந்தது.

அதன் பிறகு அவள் கண் விழித்தது மருத்துவமனையில் தான். சரண் அவளிடம் பேசியது முதல் இளமதி இறைஞ்சும் பார்வையுடன் தன்னை நெருங்கி வந்தது வரை யோசித்துக் கொண்டே இருந்தாள். பின்னர் சர்ஜரி நடக்கும் அறைக்குள் கொண்டு சென்றதும் தன்னையுமறியாமல் அவளுக்குள் பயம் முளைக்க ஆரம்பித்தது.

தன்மேல் பாசம் காட்ட யாருமில்லை என்ற விரக்தியில் இவ்வுலக வாழ்வைவிட்டு நிரந்தரமாய் பிரிய வேண்டும் என்று எண்ணியவளுக்கு, சரணிடம் இருந்து மீண்டும் கிடைத்த அன்பும், தனக்கென்று சொல்லிக்கொள்ள தன் உறவுகள் யாருமில்லை என்று ஒவ்வொரு நாளும் துடித்தவளுக்கு, இளமதியின் வருகையும், அவளது பாசமும் கிடைத்துவிட தான் இழந்த சந்தோசப் பூக்களை, மீண்டும் கோர்ந்து கொள்ள வேண்டும் என அவள் மனம் பரபரத்தது.

மேலும் தன் தவறையெல்லாம் உணர்ந்து மன்னிப்பையாசிப்பவளிடம் மறுத்து அதை விட பெரிய பாவம் செய்ய அவள் மனம் எண்ணவில்லை. ஒருவேளைத் தான் உயிருடன் திரும்பாவிட்டால் அவள் கொடுக்காத மன்னிப்பு இளமைதிக்கு கடைசிவரை குற்ற உணர்ச்சியைக் கொடுத்து அவள் வாழ்க்கையை நரகமாக்கிவிடும். என் ஆருயிர் அக்காவின் வாழ்க்கையை தானே கஷ்டப்பட வைக்க விரும்பவில்லை. அதன் பொருட்டு நிலா இளமதியிடம் பேச நினைத்து அதை ஷர்மியிடம் தெரிவிக்கவும் செய்தாள்.

இதை எதிர்பார்க்காத மூவரும் ஒருவரை ஒருவர் பார்த்துக்கொள்ள ஷர்மி ஷானவியிடம் கண்ணைக் காட்ட, அவள் அறையைவிட்டு இளமதியை நோக்கி ஓடிவந்தாள்.

புது மலர்கள் பூத்திடும் வேளை - மதுவதனி

# புது மலர்கள் பூத்திடும் வேளை…!

வெளியே இருப்பவர்கள் பதட்டமாக இருந்ததைப் பார்த்து அவள் நிலா கூறிய விசயத்தைக் கூற எல்லோர் முகத்திலும் நிம்மதி பரவியது அழுகையும் புன்னகையுமாக தங்கையை நோக்கி ஓடினாள் இளமதி.

இருவரும் ஒருவருக்கொருவர் கைகளைப் பிடித்துக்கொண்டு கண்ணீரோடு தங்கள் உணர்வுகளை மௌனமாக பகிர்ந்து கொள்ள, அங்கு வார்த்தைகளந்த செயல்கள் இருவருக்குள்ளும் நிம்மதியையும் அமைதியையும் கொடுத்தது.

அதுகொடுத்த தைரியம் "எனக்கு எல்லாமே அஸ்வத் சொல்லி இப்போதான் தெரியும் குட்டிமா............... உன்னோட தைரியமும் தன்னம்பிக்கையும் எனக்கு எப்பவுமே வராது. ஆனால் நான் எடுத்த அதே முடிவை நீயும் எடுத்தது ரொம்ப தப்பு......... உனக்கு இருக்கிற கோபமெல்லாம் அப்படியே இருக்கட்டும், நீ சரியாகி வந்ததும் அதை அப்படியே என்கிட்ட காட்டு அதுக்கு நான் கடமைபட்டிருக்கேன். ஆனால் நீயில்லாத வாழ்க்கையை, எனக்கும் சரணுக்கும் அதோட இந்த உலகத்தைப் பார்க்க பறந்துட்டு இருக்க இந்த குழந்தைகளுக்கும் கொடுத்துடாதே குட்டிம்மா............... நீ நல்லாபடியா வந்துடுவ.................. எனக்கு அந்த நம்பிக்கை இருக்கு..........." என்று நிலாவின் தலையை வருடி நெற்றியில் இதழ் பதித்துவிட்டு, அவள் மேலே பேச இடம் கொடுக்காமல் அந்த அறையை விட்டு வெளியேறினாள் இளமதி.

அதற்குப் பிறகு சிசேரியன் மூலம் குழந்தைகளை எடுத்துவிட்டாலும், இரட்டைக் குழந்தைகள், குறை மாதப் பிரசவம், வெயிட் குறைவு போன்ற பிரச்சினைகளில் அவர்களை தனியறையில் இன்குபேட்டரில் வைத்தனர். ஆனால் நிலாவின் நிலையோ மிகவும் மோசமானது. அடிப்பட்டதில் அதிகம் ரத்தம் வெளியானதும் அதோடு குழந்தைகள் கர்ப்பப்பையின் பக்கவாட்டில் உருவாகி இருந்ததால், குழந்தைகளோடு சேர்ந்து அந்தக் குழாயையும் சேர்த்து ரிமூவ் செய்ய வேண்டி இருந்தது.

அதெற்கெல்லாம் நிலாவின் உடம்பு ஒத்துழைக்காமல் போக, இடையிலே குறைந்திருந்த பி.பி.யும் அதிகமாகிவிட, சில பல சிக்கல்களுக்குப் பிறகு நிலா மீண்டும் ஐ.சி.யுவிற்கு கொண்டு வரபட்டாள். அடுத்தடுத்த நாட்களில் அவளுக்கு நினைவு திரும்புவதும், தப்புவதுமாய் இருந்து எட்டு நாட்களுக்குப் பிறகு அவள் கண் விழித்து சுற்றம் உணர்ந்தாள்.

# புது மலர்கள் பூத்திடும் வேளை…!

அதுவரைக் குழந்தைகளைக் கூட பார்க்கமாட்டேன் என்று அடம்பிடித்த சரணை எல்லோரும் விதம் விதமாக எடுத்துக் கூறியும் கேட்கவில்லை அவன். ஆனால் ரவி அவனிடம் "என்ன உன் வைப் மேல உனக்கு லவ் இருக்கு, நீ அவமேல பைத்தியமாக இருக்க, அவ இல்லாம உன்னால இருக்க முடியாது, அவதான் உனக்கு எல்லாம் இப்படினு நீ சொல்லியோ, இல்லை இப்போ நடந்துக்கிறீயே, இந்த பிஞ்சுக் குழந்தைகளைப் பார்க்க மாட்டேனு இந்த மாதிரி செயல்களை காட்டியோ உன்னை நிரூபிக்க வேண்டாம்.

நீ ஒரு உண்மையான காதலன் என்று எங்க எல்லோருக்குமே தெரியும். தேனுவோட இந்த நிலை எங்களுக்கு வருத்தம் தான். எனக்குத் தெரியும் நாங்களும் நீயும் ஒன்று இல்லன்னு. ஆனா அவங்க இப்போதான் இந்த உலகத்தைப் புதுசா பார்க்கிறாங்க. பிறந்ததும் தாயோட பரிசமும் தந்தையோட அரவணைப்பும் தேவை. உனக்கு அதிகம் சொல்லத் தேவை இல்லை. தேனு கண்டிப்பா திரும்பி வருவா. எல்லோரோட பிரார்த்தனையும் வீண் போகாது. முதல்ல குழந்தைகளைப் போய் பார் என்று பேசி சரணைத் தெளிய வைக்க................. அவன் செய்த தவறு புரிந்து மௌனமாக குழந்தைகளின் அறை நோக்கி நடந்தான்.

நிலாவை தனி அறைக்கு மாற்றியதும், இளமதி மற்ற யாரையும் விடாமல் அவளே அனைத்து வேலைகளையும் செய்தாள். அடுத்த கட்டமாக குழந்தைகளின் விடுமுறை முடிந்துவிட அஸ்வத் தன் பெற்றோருடனும் குழந்தைகளுடனும் ஊட்டி சென்றான். வார இறுதியில் வந்துவிட்டு செல்வதாக கூறினான். மற்றவர்களும் அவனது வேலையை முன்வைத்து சரியென்றனர்.

ஷானவிக்கு பைனல் இயர் லாஸ்ட் செமஸ்டர், மேலும் சிபியின் MD படிப்பும் அந்த ஆண்டோடு முடிவதால் அவர்களுமே கிளம்பியிருந்தனர். கம்பெனி பொறுப்புகளை ரவியிடம் ஒப்படைத்துவிட, அவனும் அவனது குடும்பமும் சென்னை பயணித்தனர். நிலா கண்விழித்ததே போதும் இனி சரியாகிவிடுவாள், என்ற எண்ணமே அனைவரையும் அவரவர் வேலையைப் பார்க்க வைத்தது.

நிலா அதிகம் பேசாவிட்டாலும், இளமதி அனைத்திற்கும் சேர்த்து பேசினாள். அவளின் வாழ்க்கையில் நடந்த தவறுகள், அதனால் ஏற்பட்ட பாதிப்புகள், அஸ்வதிடம் அவள் சென்ற விதம், அவளது திருமண வாழ்க்கை என்று எதையுமே அவர்கள் இருவரும் பேசிக்கொள்ளவில்லை.

இப்போது பேசவேண்டிய நேரமும் இல்லை. மேலும் கடந்து போன கசப்பான அனுபவங்களை கேட்டு, அதை அவள் கூறி என்று எதற்கு மீண்டும் இருவரும் வருத்தப்பட வேண்டும். “என்னோட நம்பிக்கை என் அக்கா உயிரோடு எங்கோ ஒரு மூலையில் இருப்பாள், என்றாவது என்னைத் தேடி வருவாள் என்று நினைத்தது நடந்தது! அதுவே போதும் என்றளவில் நிலா நினைத்து இளமதியிடம் எதைப்பற்றியும் விசாரிக்க வில்லை.

மேலும் சரணும் அவளிடம் முதலில் எதுவுமே பேசவில்லை. அவள் முகத்தைக்கூட பார்க்கவில்லை. ஆனால் அவனது சோர்ந்த முகம் அவன்பட்ட கஷ்டங்களை அவளுக்கு சொல்லாமல் சொல்ல அவளின் தவறு அவளுக்கு உரைத்தது. அவனிடம் மன்னிப்புக் கேட்க வேண்டும். குழந்தைகளைப் பற்றி பேச வேண்டும் என்றெல்லாம் யோசித்தபடியே அவனைப் பார்க்க, அவனுமே அவளைத் தான் பார்த்துக் கொண்டிருந்தான். என்ன பேசுவதென்று இருவரும் சில நொடி அமைதியாகிவிட, கணவனின் அமைதியைப் பொறுக்க முடியாத நிலா “பாவா............... நான்................. நான்................ என்னை மன்னிச்சுடுங்க ப்ளிஸ்” என்றாள் தழுதழுத்த குரலில் தலையைக் குனிந்தபடி.

அவள் குரலில் இருந்த பயம் சரணுக்கும் வருத்தத்தைக் கொடுக்க எனக்கு உன்மேல் கோபமெல்லாம் இல்ல நிலாம்மா................ வருத்தம் தான். கோபமெல்லாம் என்மேல் தான். உன் மனசுல இப்படி ஒரு எண்ணம் இருக்கு என்று தெரிந்தும் நான் உன்னை சமாதானப்படுத்தாதது என் தப்புத்தானே.................. சரிவிடு போனதைப் பத்தி எதையும் பேச வேண்டாம். எல்லாத்தையும் நாம கடந்து வந்துட்டோம். இனிமேல் நமக்குள்ள எந்தக் குழப்பமும், துன்பமும் வராது. நீயும் எதைப்பத்தியும் யோசிக்காம நம்ம எதிர்காலத்தை மட்டுமே யோசி................ அதுவே போதும், இப்போ தூங்கு” என்று அவளது அழுகையைப் பார்க்க முடியாமல், அவன் தன் கோபத்தை சட்டென்று தூக்கி எறிந்துவிட்டு மனைவிக்கு ஆறுதல் கூறினான். அந்த அன்புக் கணவன்.

அவற்றையெல்லாம் யோசித்துக் கொண்டிருந்த நிலாவிடம் இளமதி உணவைக் கொண்டுவந்து கொடுக்க அதில் உணர்வு பெற்றவள், ஒரு சிரிப்புடன் வாங்கி உண்ண ஆரம்பித்தாள். அவள் உண்ணும் வேகம் பார்த்து “என்ன குட்டிம்மா ரொம்ப பசிச்சதா................. நான் தான் முன்னாடியே சொன்னேனே.......... சாப்பிட்டு குளி என்று................” என முடிக்கும் முன்னே உங்க தங்கை எப்பவும் இப்படித்தான் செய்வா அண்ணி......... குளிக்காம சாப்பிட்டா.................... சாமி குத்தம் ஆகிடுமாம்” என்ற கிண்டலுடன் அவர்களிடம் வந்தான் சரண்.

# புது மலர்கள் பூத்திடும் வேளை…!

சரணைப் பார்த்து முறைத்தவாரே “பாவா.............. ஏன் இப்படி............. என்னை மாட்டிவிட்டு வேடிக்கைப் பார்க்குறீங்க............. ம்ம்ம்..............ம்ம்ம்” என்று சிணுங்கினாள். நிலா தன் மனைவி தன்னிடம் இப்படி பேசி எத்தனை நாட்கள் ஆகிவிட்டன. என்று நினைத்ததும் அவன் கண்களில் கனிவும் காதலும் போட்டிப்போட்டுக் கொண்டு வழிந்தது.

இருவரின் பார்வையும் ஒரே நேர்க்கோட்டில் இருக்க, இருவரும் இவ்வுலகம் மறந்து கனவுலகம் பறந்தனர். இருவரையும் நமட்டுச் சிரிப்புடன் பார்த்துக் கொண்டிருந்த இளமதி அங்கிருந்த நழுவப் பார்க்க, குழந்தைகள் இருவரும் ஒரே நேரத்தில் அழ ஆரம்பித்தனர்.

அதில் கணவன் மனைவி இருவரும் தங்கள் கனவுலகத்தில் இருந்து மீண்டனர். குழந்தைகளை இளமதி தூக்கவும், சரணும் வந்து ஒரு குழந்தையை வாங்கிக் கொண்டான். நிலா பாதி சாப்பாட்டோடு எழுந்து வர, அவளை மிரட்டி உண்ண வைத்துவிட்டு, குழந்தையை அவளிடம் கொடுத்துவிட்டு வெளியேறினாள் இளமதி.

இரண்டு குழந்தைகளுக்கும் பசிபோக்கி ஆசுவாசமாக இருவரும் அமர்ந்தனர். குழந்தைகளை மெத்தையில் படுக்க வைத்து இருவரும் அருகருகே அமர மனைவியைத் தன்மேல் சாய்ந்துக் கொண்ட சரண் அமைதியாக அந்த தருணத்தை ரசித்து உள்வாங்க ஆரம்பித்தான். கணவனின் அமைதியை உணர்ந்து நிமிர்ந்து அவனைப் பார்க்க, கண்களை மூடியபடி அமர்ந்திருந்தவனைக் கண்டதும் இன்னும் அழுத்தமாக புதைந்து கொண்டாள். அவனும் அவளை வாகக என்று அணைத்துக் கொண்டான்.

நொடிகள் நிமிடங்களாக கழிந்தோட, அந்த அமைதியைக் கலைத்தால் நிலா “ரொம்ப பயந்துட்டீங்களா பாவா................ என்மேல் ரொம்ப கோபமா இருந்தீங்களா................ நான் உங்ககிட்ட மறைச்சிட்டேனு நினைச்சேன். ஆனா ஷர்மிக்கா எல்லாத்தையும் உடனுக்குடனே அப்டேட் பண்ணியிருக்காங்க, அது கூட எனக்குத் தெரியல...................”

“ம்ம்.................. பயம் .................... அது வார்த்தையா இருக்கும்போது எனக்குத் தெரியல, ஆனா அந்த வார்த்தையோட உணர்வுகள் கொண்டு ஆட்டிபடைச்சதே, அதை எந்த ஜென்மத்திலும் மறக்க முடியாது.

புது மலர்கள் பூத்திடும் வேளை - மதுவதனி

ரொம்ப……….. ரொம்ப பயந்துட்டேன். என் வாழ்க்கையே அஷ்தமிச்சு போயிடுச்சுனு நினைச்சு பயந்துட்டேன். குழந்தைகள் பத்தி ஷர்மி சொல்லும் பொது வானத்தையே வளைச்சிட்ட மாதிரி ஒரு சந்தோசம். நீ என்கிட்ட சொல்லுவ……………. சொல்லுவ என்று ஒவ்வொரு நாளும் எதிர்பார்த்தேன்.

நீயா வந்து சொல்லவே இல்லை. இன்னும் கூட உனக்கு என்மேல் நம்பிக்கை வரலையோனு யோசிச்சேன். ஷர்மி உன்னோட மனநிலைப் பத்தி சொன்னதும், அடுத்து என்ன செய்றது என்றேத் தெரியல அப்போ ஷர்மிதான் உனக்கு கௌன்சிலிங் கொடுத்து சரிபண்ணிடலாம் என்று சொன்னாள். அதற்குப் பிறகுதான் எனக்கு லேசா நிம்மதியாச்சு” என்று பெரிதாகப் பேசியவன் “ம்ம்ம் இப்போ தான் எனக்கு சந்தோசமா இருக்கு, இனி எப்போதும் இப்படியே இருக்கனும். அதுதான் என்னோட ஆசை” என்றான் மனைவியின் நெற்றியில் இதழ் பதித்து, குழந்தைகள் இருவரையும் வருடியபடி…………………

கணவனின் செயலில் நெகிழ்ந்தவள் “பாவா…………. வெரி சாரி பாவா……….. அந்த மீனா செய்தது போதாதென்று நானும் உங்களை கஷ்டப்படுத்திட்டேன்” என்றவள் “இப்போ எப்படி இருக்கா அண்ணிதான் பாவம் என்னைப் பார்க்கும் போதெல்லாம் மன்னிப்பு கேட்குறாங்க…………….

மீனா செய்த தப்புக்கு அண்ணி என்ன பண்ணுவாங்க…………….” என்றாள். நிலா

“இதுவே அவளைப்பத்தி நாம பேசுறது கடைசியா இருக்கணும். இதுக்குப் பிறகு நீ என்ன கேட்டாலும் நான் சொல்லமாட்டேன். புரியுதா………….? இப்போ பிசிக்கலா எந்தப் பிரச்சினையும் இல்லை. கீழே விழுந்ததுல தலையில் அடிப்பட்டதில் மூலையில் சில நரம்புகள் பாதிக்கப்பட்டு இருக்கு.

அது அவளுக்கு மெண்டலி பிராப்ளம் அவ்ளோதான்……….. இப்போ கேரளாவில் ஒரு ஹோம்ல சேர்த்து சிகிச்சை கொடுத்துட்டு இருக்காங்க. சீக்கிரம் ரெக்கவர் ஆகிடுவா என்று சொல்றாங்க…………….. வெயிட் பண்ணுவோம். அவளோட அம்மாவை நினைச்சாத்தான் கவலையா இருக்கு…………

ஆனால் பாவமோ, பரிதாபமோ அவங்க மேல் உருவாகலா, எதை விதைக்கிறோமோ அதைத் அறுவடை செய்ய முடியும்………… நீ ப்ரீயா விடு………… அதெயெல்லாம் இனி அக்காவும் மாமாவும் மேனேஜ் பண்ணிப்பாங்க……………………” என்றவன் “சரி முடிஞ்சதைப் பத்தி பேசி ஒன்னும் இல்லை.

நீ என்ன முடிவு எடுத்துருக்க………… அண்ணியைப் பற்றி உனக்கு இன்னும் முழுதா தெரியாது. உனக்கு அண்ணியே தான் சொல்லணும் என்று நாங்க யோசிச்சு உன்கிட்ட எதையும் சொல்லல, இப்போவும் உனக்கு ஒன்னும் தெரியாது போல………… அவங்களே பேச வந்தாலும் நீ பேச்சை மாத்திடுறதா சொல்றாங்க…………. பாவம் அஸ்வத்………… அண்ணி அங்கே போறதுக்குள்ள காத்து ஜவ்வு கிழிஞ்சிடும் போல……… போன்ல பேசியே டென்சன் ஏத்துறாங்க போல………… அவர் எனக்கு போன் பண்ணி சொல்றார். சீக்கிரம் இந்த பாசமலர் சீனுக்கு என்ட் கார்டு போடுங்கபாஸ்…………. முடியல என்று” சொல்லிவிட்டு சரண் சிரிக்க…….

அவன் காதைப் பிடித்து திருகியபடி “நீங்க கூட மறைச்சீட்டீங்க தானே, உங்க கூட பேசக்கூடாது என்று நினைச்சேன். ஏன் பாவா சொல்லல, எதுக்கு இப்படி பண்ணீங்க……….” எனவும்,

“எனக்கே ஒன் வீக் முன்னாடி தான தெரியும் நிலா, அப்போ உன்னோட மனசு எனக்கு சரியா தெரியல, அதனால் தெளிவா என்னால் சொல்லமுடியல. அப்போ அஸ்வத்தான் இந்த ப்ளான் சொன்னார். எனக்கும் ஓகே-னு தோனுச்சு……….” என்றான்

“ம்ம் மாமா ரொம்ப நல்லவர் இல்ல பாவா……… வேணிக்கா ஒரு நல்ல குடும்பத்தில் தான் சேர்ந்திருக்காங்க இல்லையா………. அத்தை மாமா குட்டீஸ் எல்லாம் எவ்வளவு அன்பா பழகுறாங்க………… அதுவும் ரெண்டாவது குட்டி அப்படியே நான்தான். என்னை மாதிரியே பேசுறது, செய்றது, வரையறது எல்லாம்…………. ரொம்பா சந்தோசமா இருக்கு பாவா…………. இந்த சந்தோசத்தை என்னைக் கெடுக்க சொல்றீங்களா……………

யோசிச்சுப் பாருங்க………………. நான் கேட்டு மறந்துப் போனதை மீண்டும் ஞாபகப்படுத்தி அக்காவை வருத்தப்படுத்த சொல்றீங்களா……..? அது எப்படி என்னால முடியும். நீங்க சொன்னது மாதிரி முடிஞ்சதைப் பத்தி பேசி ஒன்னும் ஆகப் போறது இல்லை. அக்கா இப்போ சந்தோசமா இருக்காங்க. அதுவே எனக்குப் போதும்”

# புது மலர்கள் பூத்திடும் வேளை…!

“அப்புறம் நீங்க மீனாவோட விசயத்துல எதுவுமே பண்ணலையா, என்னால் நம்ப முடியல, நீங்க அமைதியா விடுற ஆளும் கிடையாது. என்ன செஞ்சீங்க............. மத்தவங்க வேணும்னா நம்பலாம்............. பட் நான் நம்ப மாட்டேன் சொல்லுங்க.......................”

“ஹம்ம் நீ நல்ல தின்க் பன்ற.............. உனக்கு வேர்ல்ட் பெஸ்ட் திங்கிங் பெர்சன் அவார்ட் கொடுக்க ரிகமன்ட் பண்றேன். இப்போ நீ ரெஸ்ட் எடு................. நான் வெளியே போயிட்டு வர்ரேன்”

“ஓ அப்படியா............ அப்போ நீங்க எதுவுமே செய்யல அப்படித்தான உங்களோட இந்த தப்புல உங்க சிஷ்ய புள்ளைங்களுக்கும் பங்கு உண்டு என்றுத் தெரியும்.

நீங்க சொல்லாட்டி போங்க, நான் அதுங்ககிட்டேயே கேட்டுக்குறேன்”

“ஹோய் நீ இதை விடமாட்டியா...... அது எப்படி உனக்குத் தெரியும்..................”

“ம்ம் தெரியும், தெரியும் நீங்க மூனு பேரும் பேசினதைக் கேட்டேன். ஆனா மயக்கத்தில் இருந்ததுனால சரியா கேட்கல, பட் ஏதோ மெடிசின் மாத்திக் கொடுத்தாச்சா............ அது எப்போ ரியாக்ட் ஆகும் என்று மட்டும் சரியா கேட்டது. அப்போ எனக்குத்தான் மெடிசின் மாத்திக் கொடுக்க சொல்லி இருக்காங்க போல, நீங்க மூனுபேரும் டிஸ்கஸ் பண்றீங்களோ என்று நினைச்சேன். பட் அடுத்த நாள் டாக்டர் ரவுண்ஸ் வரும்போது போர் டெய்ஸா ஒரே மெடிசின் தான் கொடுக்குறோம் அப்படினு சொன்னார். சோ நீங்க எனக்கு செய்யல, மீனாவுக்குத் தான் இந்த வேலையை செஞ்சுருக்கீங்க என்று புரிஞ்சது. இப்போ சொல்லுங்க......... என்ன பண்ணீங்க.......................”

“நிலாமா நீ இவ்வளவு அறிவாளியா பிறக்க வேண்டாம்................ இந்த மேட்டர் உனக்குத் தெரியாமலே போயிடனும் நினைச்சேன். பட் மை பேட் லக் என்னோட வாயாலயே கேட்கப் போற..................” என்றவன் அது வரை இருந்த விளையாட்டுத்தனம் போய் முகம் தவிர முகபாவனைக்கு மாற்றி “இத்தனை செஞ்ச அவளை எப்படி சும்மா விட சொல்ற, நான் நல்லவன் தான். பெண்களை மதிக்கிறவன் தான். அதுக்காக இப்படி ஒரு வேலையை செய்தவளை எப்படி மன்னிப்பேனு நினைச்சே............. இதுக்கு முன்னாடி அவ செய்த எல்லாத்தையும் நான் பொறுத்துக்கிட்டேன்.

ஆனா எப்போ உன்னையும் குழந்தைகளையும் ஒரு பொருட்டா நினைக்காம கீழே தள்ளிவிட்டு கொலை செய்ய நினைச்சாளோ அப்போவே அவளை நான் ஒன்னுமில்லாதவளா ஆக்கி பைத்தியக்காரி மாதிரி வைக்கனும்னு நினைச்சேன்".

இப்போ அதுதான் நடந்திருக்கு............. எத்தனைப் பெண்களோட கண்ணீர், அவங்களைப் பெத்தவங்களோட கண்ணீர் எல்லாம் சும்மா விடுமா........... அதுதான் இப்படி இருக்கா........ கடவுள் தண்டனைக் கொடுப்பார் என்று என்னால் பார்த்துக்கிட்டு சும்மா இருக்க முடியல............ பாதிக்கப்பட்ட பெண்களோட பிரதிநிதியா நானே அவளுக்குத் தண்டனைக் கொடுத்துட்டேன்".

"ஹோஸ்பிட்டலில் அவ நார்மல் ஆகிடுவா என்று சிபி வந்து என்கிட்ட சொல்லும்போது அதை என்னால ஏத்துக்க முடியல, கடவுள் என்னை ஏமாத்திட்டார் என்றே தோணுச்சு. அதுதான் நானே தண்டிக்கனும் என்று முடிவு பண்ணேன். சிபிக்கிட்ட சொன்னேன். இவளை ஏதாவது பண்ணனும் என்று........... அப்போ சிபிதான் இப்படி ஒரு ஐடியா கொடுத்தான்."

"முதல்ல நான் யோசிச்சேன்..... அவ்ளோ ஈசியா இதை ஒத்துக்க முடியல........... அப்புறம் அந்த இம்ரான் அரெஸ்ட் ஆனா நியூஸ் லைவ் டெலிகாஸ்ட் பார்த்தேன். அதுக்குப் பிறகு கொஞ்சமும் யோசிக்கலா............ ஷானவியை வச்சு அந்த மேடிசினை அவளுக்கு இன்ஜெக்ட் பண்ண வச்சோம். அவளோட மூளை கொஞ்சம் கொஞ்சமா அப்நார்மல் ஆக ஆரம்பிச்சது. அதுக்குப் பிறகு நடந்ததுதான் உனக்கேத் தெரியுமே...........!

இப்போ அவ ஒரு ஹோமில் இருக்கா........... பட் ரெகவர் ஆகமாட்டா.................. ஆகவும் கூடாது.......: என்று சொல்லி முடித்தான்.

"பாவா இது தப்பு.......... ஒருத்தவங்களுக்கு தண்டனைக் கொடுக்க நாம யாரு..........? அதுக்கு கோர்ட் இருக்கு, போலீஸ் இருக்கு......... நீங்க ஏன் இப்படி பண்ணீங்க....... நாளைக்கு உங்களுக்கு ஏதும் ஆகிட்டா நாங்க என்ன பண்ண முடியும். ஏன் இந்த வேலை உங்களுக்கு" "போதும் நிலா........... இதுக்குத்தான் நான் இதைப்பத்தி பேசல......... இதுதான் கடைசி........ போதும் இனிப் பேச வேண்டாம். உன்னை மாதிரியே தியாகியா இருக்க நான் நிலா இல்லை.............. நீ ரெஸ்ட் எடு, நான் வெளியே போயிட்டு வர்ரேன்" என்று கூறியதும் இல்லாமல் அறையை விட்டு வெளியேறினான்.

# புது மலர்கள் பூத்திடும் வேளை…!

“பாவா……… பாவா………………” என்ற நிலாவின் கத்தல் காற்றோடே போனது. நிலாவின் சத்தத்தைக் கேட்டு உள்ளே வந்த இளமதி இருவருக்கும் இடையே ஏதும் சண்டையோ என்று பதட்டமாகப் பார்க்க, நிலாவின் அதிர்ந்த முகமே கண்ணில்பட்டது.

“குட்டிம்மா…………… என்ன பண்ணுது………………… இங்கேப் பாரு குழந்தைங்க முழிச்சிட்டாங்க …………………” என்றதுமில்லாமல் அழுத குழந்தைகளை சமாதானப்படுத்தவும் செய்தாள். நிலாவும் குழந்தைகளின் அழுகையில் மற்றதை மறந்து அவர்களிடம் தன் கவனத்தை செலுத்தினாள்.

குழந்தைகள் இருவரையும் சமாதானப்படுத்தி மீண்டும் கட்டிலில் கிடத்திவிட்டு, நிலாவிடம் திரும்பிய இளமதி “என்னக் குட்டிம்மா………… எதுக்கு உனக்கு இந்தப் பதட்டம்……………… உன்கிட்ட இருந்த நிதானம் எங்கே…………………? சரணை அவர் போக்குல விடு……………! நீயும் நானும் இதுல சம்மந்தப்பட வேண்டாம்……………

என்னோட நிலைப் பார்த்து உனக்கு வந்த கோபம் எப்படி நியாயமானதோ………… அதே மாதிரி உனக்கு நடந்த கொலை முயற்ச்சியில் சரணுக்கு வந்ததும் நியாயமானது தான், நீ அகிலா அண்ணியை மனசுல வச்சு சரண் செய்ததை தப்புனு நினைச்சா……. அதுதான் தப்பு…….. ஏனென்றால் நீயே அண்ணியைப் பத்தி யோசிக்கும் போது, சரணுக்கு அண்ணி அவரோட அக்கா……………. அவர் யோசிச்சுருக்க மாட்டாரா…… நீ தேவையில்லாம யோசிக்காத…………………! இப்போதைக்கு உன்னோட ஹல்த்தைப் பாரு………. என்று நிலாவை தெளிவுப்படுத்தினாள் இளமதி.

இளமதி கூறியதும் ஒருவகையில் சரியெனப்பட, வேறெதும் பேசாமல் அமைதியாகிவிட்டாள். தங்கையின் அமைதியைப் பார்த்த இளமதி “குட்டிம்மா………………… நீயும் சரணும் பேசினதைக் கேட்டேன்.

உனக்கு என்மேல் எத்தனை அன்பு இருந்தா, என்னோட கடந்த காலத்தைக் கேட்க மாட்டேனு சொல்லுவ, ஆனா நீ நினைக்கிற மாதிரி அக்கா ரொம்ப கஷ்டபடலடா………. அப்படி கஷ்டப்படவும் விடலை அஸ்வத்……….. அவர் மட்டுமில்ல அத்தையும் மாமாவும் தான். என்னை நல்லா பார்த்துக்கிட்டாங்க……….

புதுமலர்கள் பூத்திடும் வேளை - மதுவதனி

# புது மலர்கள் பூத்திடும் வேளை…!

இதே நான் வேறு யார்க்கிட்டயாச்சும் சிக்கியிருந்தா………? ஏன் அந்த சுரேஷ்கிட்டேயே மாட்டியிருந்தா…….. என் வாழ்க்கையே சீரழிஞ்சு போயிருக்கும்…. அப்போ உனக்கும் இதேமாதிரிதான் கோபம் வந்துருக்கும்…………"

"நீ மனசை போட்டுக் குழப்பிக்காதே………. சரணை அவர் போக்குல விடு" என்றவள் "உனக்கு, நான் அஸ்வத்கிட்ட எப்படி சேர்ந்தேனு சொன்னாதான் புரியும்", என தன் கடந்த காலத்தைப் பத்தி மெல்ல மெல்லத் தன் மனதைத் திறக்க ஆரம்பித்தாள் இளமதி…………………!

**வேளை தொடரும்……..**

புதுமலர்கள் பூத்திடும் வேளை - மதுவதனி




**வேளை - 39-1**

*****************************************************************************************************

மன்றம் வந்த தென்றலுக்கு
மஞ்சம் வர நெஞ்சமில்லையோ…
அன்பே என் அன்பே…

தொட்டவுடன் சுட்டதென்ன
கட்டழகு வட்டநிலவோ
கண்ணே என் கண்ணே…
பூபாளமே கூடாதேன்னும் வானமுண்டோ சொல்…

மன்றம் வந்த தென்றலுக்கு
மஞ்சம்வர நெஞ்சமில்லையோ
அன்பே என் அன்பே…..

# புது மலர்கள் பூத்திடும் வேளை…!

**தாமரை மேலே நீர்த்துளி போல்**
**தலைவனும் தலைவியும் வாழ்வதென்ன**
**நண்பர்கள் போலே வாழ்வதற்க்கு…**

**மாலையும் மேளமும் தேவையென்ன…**
**சொந்தங்களே இல்லாமல்…**
**பந்த பாசம் கொள்ளாமல்**
**பூவே உன் வாழ்க்கைதான் என்ன.. சொல்**

**மன்றம் வந்த தென்றலுக்கு**
**மஞ்சம்வர நெஞ்சமில்லையோ**
**அன்பே என் அன்பே …**

**********************************************************************************************************

சொந்தங்கள் அனைத்தும் ஏற்றுக்கொள்ள மறுத்துவிட அவர்களின் அவதூறான பேச்சிலும் அவமானப் படுத்தலிலும் கூனிக்குறுகித் தங்கள் ஊருக்கு திரும்ப திருச்சி ரயில் நிலையத்தில் தளர்ந்துபோய் அமர்ந்திருந்தனர் சரவணன்-பூங்குழலி தம்பதியினர். இருவரும் ஒருவருக்கொருவர் ஆறுதலோடு தங்கள் ரயிலுக்காக காத்திருந்தனர்.

அப்போது அவர்களுக்கு அடுத்த இருக்கையில் இருந்த பெண் முகம் முழுவதும பயத்தில் வெளுக்க, சுற்றிலும் பார்வையைப் பதித்து யாரையோ தேடிக்கொண்டிருப்பது தெரிந்தது. முதலில் அசுவாரஷ்யமாக பார்த்துக் கொண்டிருந்தவர்கள் அடுத்தடுத்து நடந்த நிகழ்வுகளில் அந்தப் பெண் தவறான ஒருவனிடம் மாட்டியிருக்கிறாள் என்று சரியாக கணித்து விட்டனர்.

தங்கள் கவலைகளை மறந்து அந்தப் பெண்ணை அந்தக் கயவனிடம் இருந்துக் காப்பாற்ற வேண்டும் என்ற உத்வேகம் எழ, குழலி எழுந்து சந்தேகம் வராத அளவுக்கு எதார்த்தமாக அவள் அருகில் அமர்வது போல் சென்று அமர்ந்தார். சிறிது நேரம் கழித்து சரவணனும் அவளின் மறுபக்கம் சென்று அமர்ந்தார். முதலில் இதை அறியாத அந்தப் பெண்ணும், சுற்றம் அறிந்தப்பின் சற்று பாதுகாப்பாக உணர்ந்தாள். அது அவள் விட்ட ஆசுவாச மூச்சிலே தெரிந்தது.

புது மலர்கள் பூத்திடும் வேளை - மதுவதனி

பின்னர் மெதுவாக அவளிடம் பேச்சுக்கொடுத்து அவளின் நிலையை அறிந்து கொண்டனர். இதிலிருந்து அவளை எப்படி விடுவிப்பது என்ற யோசனையில் ஆழ்ந்தனர் தம்பதியினர் இருவரும். தன் வீட்டை விட்டு வந்த பின் இளமதி முதலில் சுரேஷைத் தொடர்புகொள்ள, அவன் இந்தரை அறிமுகப்படுத்திவிட்டான். இவளுக்கு அப்போதுதான் தான் எடுத்த முடிவு தவறு என்று தோன்றியது.

ஆனாலும் தன் பயத்தை வெளிக்காட்டாமல் தான் அவனுடன் இருந்தாள். ஆனால் சுரேஷின் வழிகாட்டுதலின் படி, இந்தர் அவளை மும்பை அழைத்துச் செல்லப்போவது தெரிந்தது. இதிலிருந்து தப்பித்து மீண்டும் தன் வீட்டிற்கு சென்று விட வேண்டும், தன்னிடம் இருக்கும் நகை பணம் போனாலும் பரவாயில்லை என நினைத்தாள்.

ஆனால் அவளின் கெட்ட நேரம் அவளை விட்டு இம்மியும் அகலாமல் இருந்தான் இந்தர். எப்படி தப்பிப்பது என்ற நினைப்பில் இருந்தவள் எதிர்பாராமல் ஒரு பெண் அவனிடம் பேசுவது தெரிந்தது. சாதாரண பேச்சு வார்த்தையாக இருந்தது எப்போது காரசாரமாக மாறியது என்று தெரியவில்லை.

அவர்கள் சண்டையிட்டுக் கொண்டே இளமதியை விட்டு சற்று தள்ளி சென்றனர். அப்போதும் இந்தர் அவள் தப்பித்துவிடாமல் இருக்க, அவளின் பொருட்கள் அடைந்த பேகை தன் கையிலேயே வைத்திருந்தான். அதில்தான் சுரேஷிடம் கொடுக்க வேண்டிய நகைகளும், பணமும் இருந்தன.

அது இப்போது அவளுக்கு முக்கியமாகத் தெரியவில்லை. அவனிடமிருந்து அந்த இடத்திலிருந்து அவள் தப்பிக்க வேண்டும் என்பதே குறிக்கோளாக நினைத்து ஏதும் வழிக்கிடைக்குமா என்று கண்கள் அலைபாய சுற்றிலும் பார்த்துக் கொண்டிருந்தாள்; அவளே எதிர்பாராமல் சரவணனும் குழலியும் அவள் அருகே அமர்ந்ததும் சற்று ஆசுவாசமாக இருந்தது. இந்தர் இளமைதியைக் கவனிக்காமல் மற்றவளிடம் தீவிரமான பேச்சு வார்த்தையில் இருந்ததால், அதுவே தப்பிக்க ஏதுவாகவும் இருந்தது.

இளமதி அவர்களுடன் ட்ரெயினில் ஏறி கோவை நோக்கி நகர, இது அறியாமல் இந்தரும் அவளுடன் இருந்தவளும் சண்டையின் வீரியத்தில் தங்களுக்கு அருகே வந்த ட்ரெயினைக் கவனிக்காமல், கைகலப்பில் ஈடுபட்டு அந்தப் பெண் முதலில் விழ, அவளின் கைகளைப் பற்றியிருந்த இந்தரும் சேர்ந்து விழ,

புது மலர்கள் பூத்திடும் வேளை - மதுவதனி

# புது மலர்கள் பூத்திடும் வேளை…!

ஒரு கோரமான விபத்து அங்கே நடந்து முடிந்தது. விபத்தின் முடிவில் அதில் இருந்த பொருட்கள் எல்லாம் இளமைதியுடையது என்றும்.... வீட்டை விட்டு ஓடிவந்த காதலர்கள் ரயிலில் விழுந்து தற்கொலை செய்து கொண்டதாகவும் போலீஸ் முடிவு செய்து வீட்டுக்கு தெரிவித்தது. இது எதையும் அறியாத இளமதி நிம்மதியுடன் கோவை நோக்கி பயணித்தாள்.

ட்ரெயினில் வரும் பொழுதே இளமைதியைப் பற்றிய விவரங்கள் தெரிந்தாலும், முழுதான விலாசங்களைக் கொடுக்க மறுத்து விட்டாள். தன் வீட்டிற்கு போய்விடலாம் என்று நினைத்திருந்தவள் நொடியில் அந்த தீர்மானத்தை மாற்றி தான் எடுத்த முடிவில் திடமாக இருந்தாள்.

அது அவள் வீட்டை விட்டு வந்தது வந்ததுதான் என்பதுதான். சரவணனும் குழலியும் எவ்வளவோ எடுத்துக் கூறியும் அவள் தன் முடிவில் இருந்து மாறவில்லை. சிறிது நாட்கள் போகட்டும் அதன்பிறகு பார்க்கலாம் என்று அந்தப் பேச்சுக்கு முற்றுப்புள்ளி வைத்தனர்.

அவர்களின் வீட்டிற்கே அழைத்து வந்தாலும் அதில் இளமதிக்கு உடன்பாடில்லை. ஏதேனும் ஒரு ஆசிரமம் போன்ற இடத்தில் சேர்த்து விடுமாறு கூறியும் குழலி கேட்கவில்லை கொஞ்சநாள் போகட்டும்... பார்க்கலாம்' என்ற பதிலிலே அவள் வாயை அடைத்தனர். போனிலே தங்கள் பிள்ளைகளிடம் இளமதியைப் பற்றியும், அவளது பிரச்சினைகளைப் பற்றியும் மேலோட்டமாக கூறிவிட்டனர்.

அன்று மாலை வீட்டிற்கு வந்த மகனிடம் முழுமையாக அவளைப் பற்றிக் கூறினார்கள். ஆனால் அவன் இளமைதியைப் பார்க்கவில்லை. டாக்டரைப் பார்த்துவிட்டு வந்து உறங்குவதாகக் கூறினர். அன்றிரவு முழுவதும் அஸ்வத்திற்கு உறக்கமே இல்லை. அவனுக்கு இளமதியை பற்றிய எண்ணங்கள் என்று சொல்லமுடியாது, ஆனால் ஒரு பெண்ணிற்கு நடந்த கொடுமையை நினைத்து உள்ளம் குமுறிக் கொண்டிருந்தது.

தன் பெற்றோர் சென்ற காரியமும் சரியாய் முடியவில்லை. 'நல்லவேளை இந்தப் பெண் வந்ததால் அவர்கள் சென்று வந்த விஷயத்தை மறந்து விட்டனர்.... இல்லையென்றால் இந்நேரம் ஆளுக்கொரு மூலையில் அமர்ந்து அழுது கொண்டிருப்பார்கள்' என்று தன் பெற்றோரைப் பற்றி நினைத்தவன், மீண்டும் இளமதியின் விசயத்திற்கு வந்தான். அவள் எடுத்த முடிவை அவனால் ஏற்றுக்கொள்ளவே முடியவில்லை.

ஆனாலும் பெண்ணாக அவளின் உணர்வுகளை புரிந்து கொண்டான். இந்த சமுதாயத்தின் ஏளன பார்வைக்கும், அவமானப்படுத்தும் வார்த்தைகளுக்கும் பயந்தே இந்த முடிவை எடுத்திருக்கிறாள் என்று புரிந்தது. ஆனால் தன் தாயையும், தங்கையையும் பற்றி அவள் யோசிக்கவில்லையே என்று மனக் குறைப்பட்டான்.

சரி அவளிடம் பேசும்போது அவள் முடிவை மாற்றி மீண்டும் அவளது வீட்டில் கொண்டுபோய் விட்டு விட வேண்டும் என்று நினைத்த பிறகுதான் அவனுக்கு மனம் லேசாகி உறக்கம் கண்களை அணைத்தது. அடுத்தநாள் அவளது முகத்தைப் பார்த்ததும் தன் முடிவை மாற்றப்போகிறோம் என்று தெரியாமல்............!

உடல் மெலிந்து, கருத்து தனக்குள்ளே ஒடுங்கி, எத்தனை முடியுமோ அத்தனையளவு தன்னைச் சுருக்கி கட்டிலின் ஒரு ஓரத்தில் ஆழ்ந்த உறக்கத்தில் இருந்தாள் இளமதி. தன்னருகே உறங்கும் மனைவியை இமை மூடாமல் பார்த்துக் கொண்டிருந்தான் அஸ்வத். இவள் என் மனைவி என்ற எண்ணமே அவனுக்குள் தித்தித்தது.

இந்த தித்திப்பை அவன் பெற பட்ட பாடுகள் கொஞ்ச நஞ்சமல்ல... அனைவரிடமும் சுலபமாக சம்மதம் வாங்க முடிந்த அவனால் இளமதியிடம் வாங்குவது அத்தனை இலகுவாக இருக்கவில்லை. முடியவே முடியாது என்ற ஒற்றை வார்த்தைத் தவிர அவள் வேறு வார்த்தைகள் உபயோகிக்கவில்லை.

இளமதி வீட்டிற்கு வந்த அடுத்தநாள் காலை வழக்கம்போல குழலி எழும் முன்னே கிரவுண்டுக்கு செல்ல கிளம்பி வந்தான் அஸ்வத். அதிகாலை நான்கு மணி என்பதால் அவன் யாரையும் தொல்லை செய்வதில்லை அவனே சென்று வென்னீர் வைத்துக் குடித்துவிட்டுக் கிளம்பி விடுவான்.

இன்றும் அதேபோல் ரெடியாகி கிச்சனுக்குள் செல்ல முனைந்தவன், இளமதியின் அறையில் இருந்து ஏதோ சத்தம் வருவதுபோல் இருந்தது குழலியை எழுப்பலாம் என்றாலும் அவருக்கு அலைச்சல் அதிகம், சோர்ந்து போய் இருந்தார் என்பதும் தெரிய, நாமளே போய் பார்க்கலாம் என்று அந்த அறைக்குள் செல்ல அங்கு அவன் கண்ட காட்சியில் உறைந்து போனான்.

# புது மலர்கள் பூத்திடும் வேளை…!

கண்கள் இரண்டும் மேல்நோக்கி நிற்க, கைகளும் கால்களும் ஒவ்வொரு பக்கமாய் இழுத்துக்கொள்ள, வாயில் இருந்து நுரை வந்து கொண்டிருந்தது. அதைப் பார்த்தவன் அடுத்த நொடி வீடு அதிர அம்மா என்று அலறினான். அவனுக்குத் தெரிந்த முதலுதவிகளை செய்து கொண்டிருக்கையிலேயே குழலியும் சரவணனும் வந்து விட, அடுத்து அவளைத் தூக்கிக்கொண்டு அந்த வளாகத்திலே இருந்த மருத்துவமனை நோக்கி ஓடினான்.

அடுத்தடுத்து அவளுக்கு ட்ரீட்மெண்ட் கொடுக்கப்பட, நான்குமணி நேரம் கழித்து கண்விழித்தாள் இளமதி. அவளைப் பார்த்த நொடியில் இருந்து வழக்கத்துக்கு மாறாக மிகவும் அமைதியாகி இருந்தான் அஸ்வத்.

மகனின் இந்த அமைதியை முதலில் கவனிக்காவிட்டாலும், நேரங்கள் கடக்க கடக்க குழலி முதலில் கண்டுவிட்டார். அவர் கண்டுகொண்டது மகிழ்ச்சியாக இருந்தாலும், அவன் வாயால் கூறாமல் எதுவும் நினைக்க வேண்டாம் என்று மனதைத் தேற்றி, தான் கவனித்ததை கணவனிடமும் தெரிவித்தார்.

சரவணனும் 'இன்று இரவே இதைப்பற்றி நம்மிடம் பேசுவான்' என்று உறுதியாக மனைவியிடம் கூறினார். பெற்றவரின் எண்ணத்தைப் பொய்யாக்காமால் அஸ்வத் அவர்களிடம் தன் விருப்பத்தைக் கூறினான். அவர்கள் அவனுக்கு எந்தப்பதிலும் கூறாமல் ஆதிராவிடம் போனில் அஸ்வத்தின் எண்ணத்தை தெரிவிக்க, அவள் ஒரு கணமும் யோசிக்காமால் சரியென்று கூறி அவனுக்கு வாழ்த்துக்களையும் தெரிவித்தாள்.

ஆதிராவிடம் பேசியதிலே பெற்றோரின் விருப்பமும் தெரிந்துவிட, அஸ்வத்தின் மனம் எல்லையில்லா மகிழ்ச்சியும், நிம்மதியும் ஒருங்கே பெற்றது. மகனின் முகம் மிருதுவானதை உணர்ந்த சரவணன் அவனிடம் "கண்ணா எங்களுக்கு இதுல விருப்பம் இருக்கா…? இல்லையா….? நாங்க வருத்தப்படுவோமா..? இப்படியெல்லாம் நீ யோசிக்க வேண்டிய அவசியமே இல்லை. என் பிள்ளைகளோட விருப்பம் தான் எங்களுக்கு சந்தோசம் நிம்மதி எல்லாம்."

புது மலர்கள் பூத்திடும் வேளை - மதுவதனி

# புது மலர்கள் பூத்திடும் வேளை…!

“நீ அந்தப் பெண்ணை முழுமனசோட விரும்புகிறாயா…? இல்லை அவளோட இந்த நிலையைப் பார்த்து பரிதாபப்பட்டு வாழ்க்கை கொடுக்கணும் என்று நினைக்கிறாயா..? அப்படி நீ அவளை விருப்பபட்டு திருமணம் செய்தால் அதைவிட எங்களுக்கு பெரிய சந்தோசம் கிடையாது… அதே சமயம் அவளுக்கு பரிதாபத்தின் நிமித்தம் வாழ்க்கை கொடுக்க நினைச்சா, அதை முதலில் எதிர்ப்பதும் நாங்கள் தான்.” என்று மகனிடம் கூறியவர் மனைவியைப் பார்க்க, குழலியும் அவர் பங்குக்கு “அச்சு உன் விருப்பத்துல நாங்க எந்த தடையும் சொல்லல. அதே சமயம் அந்தப் பொண்ணை சம்மதிக்க வைக்கிறதும் உன்னோட பொறுப்புத்தான். நாங்க யாரும் இதில் தலையிட மாட்டோம்.” என்று உறுதியாகத் தெரிவித்தனர்.

அஸ்வத்திற்கு ஒரு கவலை மறைந்தாலும், அவளிடம் சம்மதம் பெறுவது பெருங்கவலையைக் கொடுத்தது. அவளை யாரும் எந்தவிதத்திலும் தொல்லை செய்யவில்லை. அவள் மருத்துவமனை விட்டு வீட்டுக்கு வரும் வரை யாரும் அவளிடம் திருமணத்தைப் பற்றி பேசவே இல்லை… ஆனால் அவள் அந்த வீட்டுப்பெண்…. அவள் தனி இல்லை…. என்று ஒவ்வொரு விசயத்திலும் உணர்த்திக் கொண்டே இருந்தனர்.

ஒருநாள் குழலியாக தங்களின் குடும்பம் பற்றிக் கூறி அன்று ஏன் திருச்சிக்கு வந்தனர் என்றும் கூறினார். அதைக் கேட்டதும் எல்லோர் வாழ்க்கையிலும் கஷ்டங்கள் இருக்கத்தான் செய்கிறது நம் கஷ்டம் மட்டும் பெரிதில்லை என்று நினைக்கத்தான் முடிந்தது அவளால். சரவணனும் தன் பங்கிற்கு அவளுக்கு தன்னம்பிக்கை ஊட்டும் விதமான புத்தகங்களை படிக்க வைத்தார். படித்ததையும் அவளிடம் விவாதிக்க ஆரம்பித்தார். சில நேரங்களில் இந்த விவாதங்களில் அஸ்வத்தும் கலந்து கொள்ளுவான்.

முதலில் அவன் வந்தாலே ஒதுங்கி விடுவாள் இளமதி. அவளின் ஒதுக்கத்தைக் கவனித்த அஸ்வத் அங்கு அவள் அருகில் குழலியும் இருக்கும் படி பார்த்துக் கொண்டான். நால்வரும் அவர்களுக்கே உண்டான கருத்துக்களை விவாதிக்க அங்கு கருத்து மோதல்கள் அதிகம் நடைபெற்றன. முடிவில் இளையவர்கள் ஒரு அணியாகவும், பெற்றவர்கள் ஒரு அணியாகும் மாறிபோயிருந்தனர்.

முதலிலேயே இதை அஸ்வத்தும் குழலியும் கவனித்தாலும் கண்டு கொள்ளாமல் விட்டனர். இப்படியாக இளமதி தன் கூட்டிலிருந்து வெளியே வந்தாலும் தன் குடும்பத்தைப்பற்றி சிறிதும் மூச்சு விடவில்லை. அவளிடம் இருந்து எந்த விதத்திலும் உண்மையைப் பெற முடியவில்லை. முதலில் முயற்சித்தாலும் அவளின் பிடிவாதத்தால் மற்றவர்கள் அதை அப்படியே அவள் வழியிலேயே விட்டு விட்டனர்.

கர்ப்ப காலத்தில் உண்டாகும் எந்த தொந்தரவும் அவளுக்கு இல்லையென்றாலும், அந்தக் கருவை ஒரு பாவச் சுமையாக மனதில் எண்ண ஆரம்பித்தாள். கவனக்குறைவு அதிகம் காணப்பட்டது அவளிடம். ஐந்து மாதக் கடைசியில் ஒரு நாள் அவள் கீழே விழுந்து விட்டாள்.

அவளின் ஒவ்வொரு அசைவும் குழலியின் மூலம் அஸ்வத் தெரிந்து வைத்திருந்ததால்… அதற்கு மேலும் பொறுக்காமல் அவளிடம் தன் எண்ணத்தை தெரிவித்துவிட்டான். முதலில் பலமாகத் தன் மறுப்பைக் கூறியவள், ஆதிராவின் உரிமையான பேச்சிலும், பெரியவர்களின் அன்பான அரவணைப்பாலும், அஸ்வத் கொடுத்த பாதுகாப்பான உணர்விலும் தன் மறுப்பை மெதுவாக தளர்த்திக் கொண்டாள்.

முதலில் எடுத்த தவறான முடிவை மீண்டும் எடுத்துவிடக் கூடாது என்பதில் உறுதியாக இருந்தவள், பலமுறை யோசித்தே அந்த திருமணத்திற்கு ஒத்துக்கொண்டாள். அஷ்வத்தின் மேல் அவளுக்கு துளியும் காதல் இருக்கவில்லை. ஆனால் அன்பு இருந்தது. மரியாதை இருந்தது. பாதுகாப்பாய் பார்த்துக் கொள்ளுவான் என்ற நம்பிக்கையில், தன் குடும்பத்தைப் பற்றி எந்த வகையிலும் விசாரிக்கக் கூடாது என்ற கண்டிசனுடன் அவனுடனான திருமணத்திற்கு சம்மதம் தெரிவித்தாள்.

அவளின் சம்மதம் கிடைத்த மூன்றே நாளில் அவளுடனான திருமணத்தை நடத்தி முடித்திருந்தான் அஸ்வத். அதுவரை உறக்கத்தில் இருந்தவள் பட்டென எழுந்து அமரவும், தன் சிந்தனையில் இருந்து விடுபட்டவன், அவளிடம் என்னவென்று விசாரித்தான்.

புது மலர்கள் பூத்திடும் வேளை - மதுவதனி

# புது மலர்கள் பூத்திடும் வேளை…!

முதலில் தான் எங்கிருக்கிறோம் என்று ஆராய்ந்தவள் அது அஸ்வத்தின் அறை என்பதை நினைவில் கொண்டு வந்து, பதட்டத்துடன் இருந்தவனிடம் ஒன்றுமில்லை என்பதுபோல் தலையை அசைத்துவிட்டு மீண்டும் படுத்து தான் விட்ட உறக்கத்தை தொடர்ந்தாள். அவளின் செய்கையை பார்த்து முதலில் திகைத்தவன் பின் சத்தமில்லாமல் சிரித்துக் கொண்டான் தனக்குள்ளே……

அடுத்து வந்த நாட்களில் அஸ்வத்தின் மனைவியாக தன்னை இயல்பாக பொருத்திக் கொள்ள பெருங்கஷ்டப்பட்டாள் இளமதி. ஆனால் அஸ்வத்தோ நான் உன் கணவன்….. இது என் குழந்தை… நாங்கள்தான் உன் குடும்பம் என்று அவனது ஒவ்வொரு செயலிலும் உணர வைத்தான். செக்கப் செல்லும் நாட்களில் குழலியைத் தவிர்த்து அவனே அழைத்துச் சென்றான்.

குழந்தையின் வளர்ச்சியை ஸ்கேன் மூலம் அவளுக்கு அறிய வைத்து தானும் அனுபவித்தான். குழந்தை என்பது வரம்….. அது பாவச்சுமை அல்ல…. என்றும் உணரவைத்தான். அஸ்வத்தின் இந்த முயற்சியில் குழலியும் சரவணனும் தன் பங்கை கொடுத்தனர்.

கர்ப்ப காலத்தில் உண்டாகும் ஆசைகள், சோர்வு, கோபம் போன்றவற்றைப் பற்றி குழலி கூற, அஸ்வத்தும், ஆதிராவும் பிறக்கும் சமயங்களில் அவர்களுக்கிடையே உண்டான போராட்டங்களையும்…. புரிதலையும் ஒருவித மகிழ்ச்சியுடன் பகிர்ந்து கொண்டார் சரவணன்.

இவர்களின் ஒவ்வொரு அன்பான செய்கையிலும் சற்று தெளிந்த இளமதியிடம் அவள் வீட்டைபற்றிக் கேட்க, அதில் மீண்டும் தன் கூட்டுக்குள் சென்றாள். அவளின் இந்த பிடிவாதத்தைக் கண்டவர்கள் அதன்பிறகு இளமதியின் குடும்பத்தைப் பற்றி அவளிடம் மூச்சும் விட்டதில்லை. அவளது போக்கிலேயே விட்டனர்

தேவையில்லாத மனப்போராட்டங்கள், ஒரு பக்கம் தன் வீட்டாரின் ஏக்கம்… மறுபக்கம் அஸ்வத்திற்கு தான் ஒரு நல்ல மனைவி அல்ல என்ற எண்ணம் எல்லாம் சேர்ந்து அவளது பிரசவத்தை சிக்கலாக்கியது…. எல்லாரும் அவளோடு துணையாக இருந்தாலும் அவளது மனதில் தோன்றும் உணர்வுகளுக்கும் வலிகளுக்கும் யார் என்ன செய்ய முடியும்….?

புது மலர்கள் பூத்திடும் வேளை - மதுவதனி

# புது மலர்கள் பூத்திடும் வேளை…!

நீண்ட போராட்டத்திற்கு பின் அவளுக்கு பெண் குழந்தை பிறந்தது… அவளது எண்ணம் அஸ்வத்திற்கு முழுதாக தெரிந்தது… அது……. இன்று நிலா எடுத்த அதே முடிவுதான் அன்று இளமதியும் எடுத்தது….. குழந்தை மட்டும் பிழைத்தால் போதும்….. அவள் இந்த உலக வாழ்வை விட்டு சென்று விட வேண்டும் என்பதுதான்….. அதை அவளது செயலில் கண்டவன்…. அவளிடம் தன் அன்பை விளக்கியே ஆக வேண்டும் என்று முற்றிலுமாக உணர்ந்தான்….

அதன்பிறகு அவன் தன் மனைவியின் மனதில் இம்மியும் கசப்பான எண்ணங்களோ, நினைவுகளோ வரவிடவில்லை. அவன் குடும்பத்தினர் காட்டிய அன்பில் இளமதி தன் மனதில் இருந்த பழைய கசடுகளை மறந்து புதிய வாழ்வை வாழ முயற்சி செய்தாள்.

அதுவரை ஏதேனும் முக்கியமானாதாக இருந்தால் மட்டும் அஸ்வத்திடம் பேசுபவள், அதன்பிறகு சாதாரணமாக பேச முயற்சி செய்தாள்.

ஏற்கனவே அந்த குடும்பத்தில் இளமதி தன்னைப் பொருத்திக் கொண்டது போல, அஸ்வத்தின் மனைவி என்ற நிலையையும் மனதுக்குள் பதிய வைத்து அவனுடன் தன்னை இன்னும் நெருக்கமாக பொருத்திக்கொண்டாள். குழந்தைப் பிறக்க இருந்த சில நாட்கள் முன்னிருந்தே கணவனிடம் தெரிந்த அலைப்புறுதலைக் கண்டவள் நான் யார்..? எனக்காக இவன் வருந்துகிறான..? இவனுக்கும் இந்த குழந்தைக்கும் என்ன சம்மந்தம்..? இந்தக் குழந்தைக்காக இவன் துடிக்கிரானா..? யாரோ செய்த பாவத்திற்கு இவன் சிலுவை சுமக்கிறானா…? யாரோ ஒருத்திக்காக ஒரு குடும்பமே தவிப்பதை அவளால் தாங்க முடியவில்லை. இவர்களுக்கு நான் எப்படி கைம்மாறு செய்வேன்…. என்று பலவாறாக யோசித்துக் குழம்பியவள் சிறிது நேரத்தில் தெளிவானாள்.

அது…. கடைசி வரை இந்தக் குடும்பத்தை விட்டு அவள் பிரிந்து செல்லக்கூடாது… அவர்களுக்கு நான் கூடவே இருந்து என் நன்றியை காட்ட வேண்டும் என்பதுதான். மேலும் அஸ்வத்தின் அன்பான முகம் அவள் கண் முன்னே விரிய இளமதியின் முகம் லேசாக சிவந்தது….. வழக்கம்போல அவளது மனசாட்சி உன் மனம் அவனிடம் சாயத் துவங்கி விட்டது என்று முழக்கம் இட்டது.

புது மலர்கள் பூத்திடும் வேளை - மதுவதனி

# புது மலர்கள் பூத்திடும் வேளை…!

எப்போதும் போல தன் மனசாட்சியை அடக்கி ஒடுக்காமல், அதை அதன் போக்கிலேயே விட்டு விட்டு, தன் உணர்வுகளை எண்ணி வியக்க ஆரம்பித்தாள். இந்த வீட்டிற்கு வந்த நாள் முதல் அவன் தன்னிடம் காட்டும் அன்பு, கனிவு, பரிவு எல்லாவற்றிலும் இருந்த உரிமை அவளை பலமுறை வாயடைக்கச் செய்திருந்தது.

தன் நிலை கண்டு பரிதாபத்தினால் தான் இப்படி நடந்து கொள்கிறான் என்று முதலில் நினைத்தவள், அடுத்து அவன் காட்டிய நேசத்தில் தன்னையும் மறந்து திக்குமுக்காடிப் போனாள். அவளே அறியாமல் கணவனின் அருகாமையை, அவன் நேசத்தை விரும்ப ஆரம்பித்திருந்தாள். ஆனால் அது துளியும் வெளியேத் தெரியவிடாமல் பார்த்துக் கொண்டாள். தன்னைப்பற்றி எல்லோரும் என்ன நினைப்பார்கள் என்ற எண்ணமே முக்கிய காரணம்.

அவள் இப்படி தனக்குள்ளே பலமுறை போராடி இறுதியாக அவனை விரும்புவதை அவர்களிடம் வெளிப்படையாக தெரிவிக்காவிட்டாலும், தன் ஒவ்வொரு செயலிலும் மறைமுகமாக அறிய வைத்தாள். முதலில் அவன் பேசுவதைக் கேட்டு பதிலுக்கு ஓரிரு வார்த்தைகள் மட்டும் கூறியவள், இப்போது அவனிடம் சகஜமாக பேச ஆரம்பித்தாள். அவனுடன் அமர்வது, குழந்தையைப் பற்றி அவன் ஆர்வமாகப் பேசும்போது, குழந்தையை ரசிப்பது போல் கணவனையும் திருட்டுத்தனமாக ரசிப்பது போன்ற செயல்களில் தன் மனமாற்றத்தை வெளிக்காட்டினாள்.

அவளது முயற்சி புரிந்த அஸ்வத்தும் இதுவே போதும் என்பது போல அவளிடம் தன் அன்பை ஒவ்வொரு நொடியும் வெளிப்படுத்தினான். அவளது மாற்றத்தைப் புரிந்து குடும்பம் மொத்தமும் அவளை கொண்டாடியது… என்ன தவம் செய்துவிட்டேன் என்ற எண்ணம் தவிர வேறு ஒன்றும் தோன்றுவதில்லை இளமதியின் மனதில்….

நாட்கள் அதன்போக்கில் செல்ல, குழந்தையின் வளர்ச்சி போலவே அஸ்வத் - இளமதியின் அன்பும் மலர்ந்து வளர்ந்தது. முன்னெல்லாம் குழந்தையைக் கண்டதும் உண்டாகும் பயம், நெருடல் போன்றவையெல்லாம் இப்போது அவளிடம் துளியும் உண்டாவதில்லை. மாறாக இது என் குழந்தை என்ற எண்ணம் ஆழப் பதிந்திருந்தது. இல்லை அவள் கணவன் பதிய வைத்திருந்தான்.

புது மலர்கள் பூத்திடும் வேளை - மதுவதனி

# புது மலர்கள் பூத்திடும் வேளை…!

கணவனின் முழுநேசமும், சரவணன்- குழலியின் அன்புக் கலந்த கவனிப்பும், ஆதிராவின் கனிவு கலந்த நட்பும் அவளை வேறெதுவும் சிந்திக்க விடவில்லை. வாழ்க்கையில் தான் முழுமை அடைந்து விட்டதாகவே எண்ணினாள். தடையில்லாமல் இதுவரை அனைத்தையும் கூறியவள் சிறிது நேரம் அமைதிகாத்தாள்.

சிறு இடைவெளி விட்டு மீண்டும் தன் பேச்சைத் தொடர்ந்த இளா "அத்தையும் - மாமாவும் சொன்னது மாதிரி நான் பழசையெல்லாம் மறந்து வாழ்ந்த பிறகாவது உங்களைத் தேடி வந்திருக்கணும். அதை செய்யாமல் விட்டது என் தப்புதான். இப்படி ஒருநாள் நான் கண்டிப்பா வருந்துவேனு அப்போவே பாவா என்கிட்டே சொன்னார். 'உன்னைப்பத்தி யோசிச்சு யோசிச்சு உன் அம்மாவும், தங்கையும் கஷ்டப்படுவாங்க, நீ போய் பார்க்கா விட்டாலும், எப்படி இருக்காங்க என்பதையாவது நாம தெரிஞ்சுக்கணும், அது நம்மோட கடமை. அப்படி செய்யவில்லை என்றால், பின்னாடி ஒருநாள் நீ இதுக்காக வருத்தப்படுவ..' என்றார்."

"அவர் சொன்னது எவ்வளவு உண்மை, அன்னைக்கு என் மனசுல எந்த சாத்தான் புகுந்தது என்று தெரியல குட்டிம்மா… இப்போ நினைக்கும் போது எனக்கே என்னை நினைச்சு அசிங்கமா இருக்கு, எவ்வளவு கொடூரமான சுயநலக்காரியா இருந்துருக்கேன்…. எத்தனை ஜென்மம் எடுத்தாலும் இந்த பாவத்தை என்னால தொலைக்க முடியாது குட்டிம்மா… உனக்கு இருந்த, இப்போ இருக்குற இந்த பக்குவம் எனக்கு இல்லாம போயிடுச்சே டா.. என்னை மன்னிச்சிடுடா…. என்னை மன்னிச்சிடு…. நான் செய்த பாவத்திற்கு நீயும் அம்மாவும் கஷ்டப்பட்டுடீங்களே டா… நான் பாவி டா… நான் பாவி…. மேலே இருந்து பார்த்துட்டு இருக்குற நம்ம குடும்பம் கூட என்னை மன்னிக்காது" என்று கதறியவளைத் தன்னோடு அனைத்து ஆறுதலாக முதுகை வருடிவிட்டாள் நிலா…

பின் "அக்கா இதெல்லாம் நடக்கணும் என்று இருக்கு, அதுதான் நடந்திருக்கு….. நீங்களோ நானோ தடுத்தா மட்டும் நடக்காமலா இருந்திருக்கும்… நடந்து முடிஞ்சதைப் பத்தி எதையும் பேசாதீங்க…… எல்லாத்தையும் கெட்ட கனவா நினைச்சு மறந்துடுங்க… நம்ம வாழக்கையில் எதுவுமே நடக்கல என்ற மனசுல பதிய வைங்க…."

புது மலர்கள் பூத்திடும் வேளை - மதுவதனி

# புது மலர்கள் பூத்திடும் வேளை…!

"முதலில் உங்க மேல் கோபம் இருந்தாலும், அப்புறம் நீங்க நல்லமுறையில், ஒரு நல்ல குடும்பத்தில் நிம்மதியா, சந்தோசமா இருக்கீங்க என்று தெரிஞ்சதும் என்னோட மகிழ்ச்சிக்கு அளவே இல்லை. இப்போ எனக்கு எந்த கஷ்டமோ, மன வருத்தமோ இல்லை. எதைப்பற்றியும் எனக்கு தெரிய வேண்டாம். அந்தப் பேச்சை விடுங்க…" என்று இளமதியின் சோகத்தைக் குறைக்க நிலா பேச்சை முடிக்க முயன்றாள்.

தங்கை தன் வருத்தத்தை போக்க முயலுகிறாள் என்பதை உணர்ந்து இளமதியும் அதை விடுத்து "உண்மைதான் குட்டிம்மா… நான் எல்லாத்தையும் மறந்துட்டேன். கடந்தகால வாழ்க்கையை பற்றி என்னை யோசிக்கவே விடுறதில்லை யாரும். அதுவும் குழந்தைங்க ரெண்டும் வந்ததும் என் நேரம் முழுதும் அவங்களுக்கே போயிடுது."

"அஸ்வத் கூட புலம்புவார். இப்போ எல்லாம் நீ ரொம்ப மாறிட்டன்னு…. என்னை கண்டுக்கறதே இல்லன்னு… ஆனா குழந்தைகள் இருந்தா அவரைத்தான் பிடிக்க முடியாது. அவர்தான் நம்மளைக் கண்டுக்கமாட்டார்….. இதுல மாமாவும் சேர்ந்துட்டா என் பாடும் அத்தைப்பாடும் தான் திண்டாட்டம். நாலு பேரையும் சமாளிக்கவே முடியாது…" என்று சலிப்பாகக் கூறினாலும் அதில் பெருமையே அதிகமிருந்தது.

தன்னையே புன்னகை மாறாமல் பார்த்துக் கொண்டிருந்த நிலாவின் கன்னங்களை வருடிய இளமதி "நீ பட்ட கஷ்டத்துக்கு முன்னாடி, என்னோட கஷ்டமெல்லாம் ஒண்ணுமே இல்லன்னு இப்போ தெரியுதுடா…. சரண் உன்மேல் வச்சிருக்கிற அன்பை பார்க்கும்போது எனக்கு அத்தனை சந்தோசமாகவும் நிம்மதியாவும் இருக்கு… இனிமேலாவது ரெண்டு பெரும் குழந்தைகளோட மகிழ்ச்சியா இருக்கணும். சரண் அன்றைக்கு அவ்வளவு கஷ்டப்பட்டுட்டார். அவரை இனியும் வருத்தப்படுத்தாம நல்லபடியா பார்த்துக்கோ…" என்றதும் அவர்களுக்கு பின்னே படபடவென கைத்தட்டல் கேட்டது.

**வேளை தொடரும்……..**

புது மலர்கள் பூத்திடும் வேளை - மதுவதனி

# புது மலர்கள் பூத்திடும் வேளை...!

**வேளை - 39-2**

தங்கள் உலகத்தில் மூழ்கியிருந்த சகோதரிகள் இருவரும், அந்த கைத்தட்டலை கேட்டு திரும்ப சரணுடன் அங்கு அஸ்வத்தும் நின்றிருந்தான். இளமதி இருவரையும் வியப்புடன் பார்க்க, நீண்ட ஒரு வாரத்திற்குப் பின் மனைவியைப் பார்ப்பதால் அஸ்வத்தும் அவளையே தான் விழியோடு விழி தீண்டிக் கொண்டிருந்தான்.

இவர்களின் நிலை கண்டு அவர்களை நினைவுக்கு கொண்டுவரும் பொருட்டு "சரியா சொன்னீங்க அண்ணி... இனி வரப்போற ஒவ்வொருநாளும் உங்க தங்கைதான் என்னைக் கண்கலங்காம, நல்லபடியா பார்த்துக்கனும். அதை யூகிச்சு முன்னாடியே சொன்னீங்க பாருங்க, நீங்க ஜீனியஸ் அண்ணி... ஜீனியஸ்.." என மனைவியை சீண்டினான் சரண்.

சரணின் பேச்சில் அஸ்வத்தும் - இளமதியும் சிரிக்க, நிலா அவனை முறைத்துவிட்டு, அஸ்வத்திடம் திரும்பி "வாங்க மாமா... என்ன ஒரு சர்ப்ரைஸ்... அக்கா முகம் அப்படியே ஜொலிக்குது... எதிர்ப்பார்க்கவே இல்ல இப்படி ஒரு சர்ப்ரைஸ்..... இந்த வீக்கென்ட் தான் வருவீங்கன்னு அக்கா சொன்னாங்க.." என்றாள்.

"ஆமாம் தேனு... பர்ஸ்ட் அப்படித்தான் ப்ளான்.... இப்போ சென்னை ஆபிஸ்ல ஒரு முக்கியமான மீட்டிங் இருக்குனு பேக்ஸ் வந்தது... அதான் உடனே கிளம்பிட்டேன். நாளைக்கு ஈவ்னிங் தான் மீட்டிங்.... மோர்னிங் போனா போதும்... சோ போற வழியில் உங்களையும் பார்த்துட்டு போகலாம்னு வந்தேன்... ஆமாம் என்னாச்சு என் பொண்டாட்டிக்கு.... இங்கே வந்ததும் வாய்க்கு பெவிகுவிக் போட்டு ஒட்டியாச்சா.... திறக்கவே மாட்டேங்குறா...... இருந்தாலும் நல்ல விஷயம் செய்துருக்கீங்க.... யார் அந்த வேலையை செய்து என்னையும், என் காதையும் காப்பாத்தினது.." என்று நிலாவிற்கு பதில் கூறிவிட்டு மனைவியை சீண்டினான் அஸ்வத்.

மற்ற இருவரும் சிரிக்க... கணவனை முறைப்பது இப்போது இளமதியின் முறையானது.... "என்ன அஸ்வத் சார்..... ரொம்ப ஹேப்பியா இருக்கீங்க போல... கிண்டலெல்லாம் பண்றீங்க... இது உங்களுக்கு நல்லதா.... இல்லை.... இல்லை..." என்ற மனைவியின் வார்த்தைகளிலேயே அவளின் கடுப்புத் தெரிய..

“ஹிஹி…. ஒண்ணுமில்ல மதிம்மா…. சும்மா உன்கிட்ட விளையாண்டேன்… என்னைப் பார்த்ததும் நீ பரீஸ் ஆகி நின்னுட்டியா…. அதன் உன்னை நார்மலாக்க அப்படி பண்ணினேன்..” என்று எந்த வாதமும் செய்யாமல் சரண்டர் ஆனான் அவன் மனைவியிடம். பின்னே இரண்டு மாதமாக அவனை சுத்தவிட்டுக் கொண்டிருப்பவளிடம் அவன் தன் கிண்டலைக் காட்டி மனைவியைப் பகைத்துக் கொள்ள அவன் என்ன முட்டாளா..?

அஸ்வத்தின் அந்த தடால் பல்டியை எதிர்பார்க்காத சரணும் நிலாவும் ஒருவரை ஒருவர் பார்த்துக்கொண்டவர்கள் பின் பக்கென்று சிரித்து விட்டனர். “அஸ்வத் உங்களிடம் இருந்து இன்னும் நான் நிறைய கத்துக்க வேண்டியது இருக்கு போலவே.. இப்படி பொசுக்குனு மண்ணைக் கவ்விட்டீங்க….” - சரண்.

“ஹாஹா… இன்னும் நிறைய டிப்ஸ் இருக்கு…. உங்களுக்கு எப்போ வேணுமோ அப்போ எல்லாம் எனக்கு கால் பண்ணுங்க…. அள்ளி விடுறேன்…. உங்களுக்கு இல்லாததா… நாமெல்லாம் ஒரே இனம் இல்லையா….” - அஸ்வத்.

“வெல் செட் அஸ்வத்….. நீங்க மட்டும் ஒரு டூ இயர்ஸ் முன்னாடி வந்திருந்தா… என் லைப்ல லைட்டு போட்டுவிட்ட பெருமை உங்களயே சேர்ந்திருக்கும்… ஆனா இப்போ அந்த கிரேடிட்டேல்லாம் என் சிஷ்யப் புள்ளைங்க தட்டிட்டுப் போயிட்டாங்க….” - சரண்.

“சரண்….. இதுக்கெல்லாம் பீல் பண்ணலாமா… இனி எந்த டவுட்டுனாலும் என்னைக் கேளுங்க…. நான் க்ளியர் பண்றேன். பட்… அதுக்கு அவசியம் இருக்காதுனும் நினைக்கிறேன். நீங்க இப்போ ஒரு நடமாடும் யுனிவர்சிட்டி இல்லையா…? - அஸ்வத்

“ஹா..ஹா… தெய்வமே… தெய்வமே…! எப்படி… இப்படி..? கரெக்டா சொல்லீட்டீங்க… நாம போய் யாருக்கிட்டயும் நிற்கக்கூடாது.. நம்மக்கிட்டதான் எல்லாரும் வந்து நிற்கணும்.. இப்போ அந்த பாலிசியை தான் நான் மெயின்டெயின் பண்றேன்.” என்று இருவரும் சுவாஸ்ரயமாய் பேசிக்கொண்டிருக்கும்போது “பாவா…ஆ…ஆ…ஆ..” என்ற சத்தம் அவர்கள் இருவரின் காதையும் பிளந்து, இருவரையும் ஒருசேர திரும்பி பார்க்க வைத்தது.

புது மலர்கள் பூத்திடும் வேளை - மதுவதனி

# புது மலர்கள் பூத்திடும் வேளை…!

மனைவிகள் தத்தம் தன் கணவன்மார்களை முறைத்துக் கொண்டிருந்தனர். 'அச்சோ காளி அவதாரம் எடுத்தாச்சு போல, இன்னைக்கும் நம்மளை பட்டினி போட்டுடுவா போலையே, இவளைப் பார்க்க வரதுக்கு நான் எடுத்த ரிஸ்கும் வேஸ்ட் போலையே…..' என்று அஸ்வத் தன் மைண்ட் வாயிசில் புலம்பிக்கொண்டே இளமதியை பாவமாக பார்த்தான்…….

அதோடே "என்ன மதிம்மா…. என்றான் பரிதாபமாக…. எப்படியும் இன்றும் தன்னை பட்டினி போட்டுவிடுவாள் என்று உறுதியாக நம்பினான். அஸ்வத்தின் முக பாவத்தில் மூவருக்கும் சிரிப்பு வந்தது. ஆனாலும் மற்றவர் முன் சிரித்து விடக்கூடாது என்று அமைதியாக இருக்க, சரண் தான் "ப்ரோ உங்க மைண்ட் வாய்ஸ் கேட்ச் பண்ணிட்டேன்… நானும் உங்க இனம் இல்லையா…." எனவும்

"நண்பன்டா…. ஒரு பொண்ணோட மனசு பொண்ணுக்குத்தான் தெரியும்னு சொல்ற இந்த வீணாப்போன சமூகத்துக்கிட்ட நான் இப்போ ஒன்னு சொல்றேன். ஒரு ஆணோட மனசும் ஒரு ஆணுக்குத்தான் தெரியும்.." என அஸ்வத் வீர வசனம் பேச…..

மேலும் மேலும் அக்காவின் முகத்தில் கடுப்பு ஏறுவதை உணர்ந்த நிலா…. "அக்கா மாமாவைக் கூப்பிட்டு ரூமுக்கு போங்க. மாமா நீங்க போய் ரெப்ரஷ் ஆகிட்டு வாங்க, சாப்பிடலாம்…" என்றாள் நிலா. சரணும் "சாரி ப்ரோ…. வந்து இவ்ளோ நேரம் ஆகிடுச்சு… பேச்சு சுவாரஸ்யத்தில் நான் கவனிக்காம விட்டுட்டேன்… போங்க போய் ரெப்ரஷ் பண்ணிட்டு வாங்க… அண்ணி கூட்டிட்டுப் போங்க.." என்றான் வீட்டாளாய்.

"ஹேய்… சரண் நமக்குள்ள என்ன பார்மாலிட்டீஸ், இது நம்ம வீடு…. நீங்க பீல் பண்ணாதீங்க…" - அஸ்வத்.

"பாவா நீங்க வாங்க… எப்போ கிளம்புனீங்க..,? ஏன் நைட் பேசும்போது கூட சொல்லல….. குட்டிங்க எப்படி இருக்காங்க…? என்னைத் தேடுனாங்களா….? அத்தையை ரொம்ப படுத்துறாங்களா…? அவங்களுக்குத் தான் சிரமம் என்றவாறே இளமதி முன்னே செல்ல…

புது மலர்கள் பூத்திடும் வேளை - மதுவதனி

"ரிலாக்ஸ் மதி…. கொஞ்சம் மூச்சுவிட்டு பேசுமா… நீ இல்லாம எல்லாரும் ரொம்ப ஹேப்பியா இருக்காங்க… ஹாஹா முறைக்காதே… ஆனா உன் கண்ணான கணவன் தான் ரொம்ப கஷ்டப்படுறான். அவனை மட்டும் என்ன ஏதுனு விசாரி…. அப்புறம் இப்போதான் உனக்கு பெவிகுவிக் போட்டு வாயை ஒட்டிருக்காங்களா என்று கேட்டேன். அது தப்புன்னு இப்போ புரியுது.." அவனும் பதிலளித்தவாறே பின்னே சென்றான். தன் அருகில் வந்த சரணின் மேல் சாய்ந்தவளை, ஆதரவாக அணைத்து "என்ன நிலாம்மா… ஏன் கண் கலங்குது.." என்றான் தெரிந்து கொண்டே….

"ம்ம்ம்.. ம்ம்ம்…" என்றவள் ஒன்றுமில்லை என்பது போல் தலையாட்டினாள். அவளின் செய்கையில் சிரித்தவாறே. அவளின் முன்நெற்றியில் முட்டியவன் "கடவுள் நல்லவர்களுக்கு சோதனை கொடுப்பார்… ஆனா கைவிடமாட்டார்… இப்போ அண்ணி சந்தோசமா இருக்காங்க…. அதை ஞாபகபடுத்தி பழசை மறக்க முயற்சி செய்டா…. அவங்க வாழ்க்கை இனிமையா போகுதுனு இதை விட கிளியரா நமக்குத் தெரிய வேண்டிய அவசியம் இல்லை… வீணா மனசைப் போட்டுக் குழப்பிக்காத… சரி வா போய் சாப்பிட்டு வரலாம்…." என்றான்.

"கைவிடமாட்டார் தான்…. ஆனால் அதுக்காக இவ்வளவு பெரிய சோதனைகள் கொடுத்திருக்க வேண்டாம்…. பாப்பாவுங்க ரெண்டு பெரும் தூங்குறாங்க…. நீங்க போய் சாப்பிட்டு வாங்க… எனக்கு அக்கா எடுத்துட்டு வருவாங்க…" என்றாள் அவனின் மனைவி.

"ம்ம்ம்.. சரி…. நான் போயிட்டு அனுப்பி வைக்கிறேன்…" என்றதோடு அவனும் கீழே சென்றான். ஆண்கள் இருவரும் ஒன்றாக சாப்பிட, அவர்கள் முடித்ததும் குழந்தைகளை பார்த்துக்கொள்ள சொல்லிவிட்டு, பெண்கள் இருவரும் அமர்ந்தனர்.

அஸ்வத்தும் சரணும் பொதுவான விசயங்களைப் பேச ஆரம்பிக்க…. அப்போது சிபியைப் பற்றியும் பேச்சு வந்தது. அவனின் ஆசையைக் கூறவும், அஸ்வத் சிபியைப் பாராட்டி, கண்டிப்பா அவனால் ஆன உதவியை செய்து தருவதாகவும் கூறினான். பெண்களும் வந்து அதில் கலந்து கொள்ள…. தங்கள் குடும்பங்களைப் பற்றி பேச ஆரம்பித்தனர்.

புது மலர்கள் பூத்திடும் வேளை மதுவதனி

பல வருடக்கதைகளைப் பேசி, அடுத்து தீபகாருன்யத்தின் வேலைகளை யார் செய்வது என்று பலவாறு விவாதிக்கப்பட்டு இறுதியில் நிலாவும் இளமதியும் சேர்ந்தே பார்க்க வேண்டும் என்றும் ஆண்கள் இருவரும் வெளிவேலைகளும் மேற்பார்வையும் பார்த்துக்கொள்வதாகவும் பேசி முடித்தனர்.

அறைக்குள் நுழைந்த இளமதி, படுக்கையில் சாய்ந்தவாறே அமர்ந்திருந்த கணவனைக் கண்டதும்.. "இல்லாத ஒரு மீட்டிங்கை இருக்கிறதா சொல்லிட்டு, இப்போ இங்கே வரவேண்டிய அவசியம் என்ன…? வீக்கென்டுனா குழந்தைகளையும் அழைச்சுட்டு வந்திருக்கலாம் தான..? நீங்க இருந்திருந்தா அத்தைக்கு எவ்வளவு ஹெல்பா இருக்கும்..? உங்களையெல்லாம்…… அடங்கவே மாட்டீங்களா…… முடியல… என்னால….." என்று பொரிந்து தள்ளினாள்.

"ஹேய் லட்டுக்குட்டி….. நிஜமாவே மீட்டிங்தாண்டி….."

"பாவா..ஆஆஆஆ…."

"ஹா…ஹா… ஓகே ஓகே… என் பொண்டாட்டி எவ்வளவு பெரிய அறிவாளி….? அவளை ஏமாத்த முடியுமா…. சொல்லு…?"

"பாவா… கடுப்பைக் கிளப்பாதீங்க… சரணும் குட்டிம்மாவும் என்ன நினைப்பாங்க.."

"யார் என்ன நினைச்சா எனக்கு என்ன….? என்னோட வைப் அழறதைப் பார்த்துட்டு, சும்மா இருக்க நான் என்ன மடையனா…?"

"கடவுளே…. உங்களை என்னதான் பண்றது..? எனக்கு இருக்குற கடுப்புக்கு…."

புதுமலர்கள் பூத்திடும் வேளை - மதுவதனி

“ஹேய் என்னடி…. விட்டா ஓவரா பேசிட்டு போற… என்னைப்பத்தி தெரியுமில்ல… அப்புறம் எதுக்கு எனக்கு போன் பண்ணி ஊழுனு ஊழுனு அழற…. இப்போ இவ்வளவு பேசுறவ…. என்கிட்ட அழாம பேசியிருக்கனும்… உன்னோட ஒரு சொட்டுக் கண்ணீர் கூட என்னை எந்தளவுக்கு பாதிக்கும்னு உனக்குத் தெரியாதா…? பெருசா பேச வந்துட்டா…? அவங்க என்ன நினைப்பாங்க…. இவங்க என்ன நினைப்பாங்கனு….” என்று அவளை விட கடுப்பாக கூறிவிட்டு… அமைதியாக சென்று படுத்துக் கொண்டான்.

அப்போதுதான் இரண்டு நாட்களுக்கு முன் நடந்தது நினைவிலாடியது. நிலாவும், குழந்தைகளும் தூங்கிய மதிய நேரத்தில் மல்லிகாவுடன் அமர்ந்து பேசிக்கொண்டிருந்தாள் இளமதி.. பேச்சு அங்கு சுற்றி, இங்கு சுற்றி மீனாவிடம் வந்து நின்றது… மீனாவின் செய்கைகளை இதுவரை முழுமையாக இளமதிக்குத் தெரியாது… இன்று மல்லிகாவின் மூலம் தான் முழுமையாக தெரிந்தது…

தெரிந்ததில் இருந்து கோபமும், ஆற்றாமையும், அழுகையும் என பல உணர்வுகளை வெளிக்காட்டிக் கொண்டிருந்தாள் தனிமையில். நிலாவின் முன் இதைக்கேட்டு மேலும் அவளைக் கஷ்டப்படுத்த விரும்பவில்லை. சரணின் மேல் இருந்த மரியாதையில் அவன் முன்பு நின்று அதிகமாக பேசுவது கூட இல்லை. அதனால் அன்றிரவு அவளிடம் பேசிய அஸ்வத்திடம் தன் மனக்குமுறல்களை அழுதவாறே வெளியிட்டாள்.

அன்று அவனிடம் பேசி முடித்ததுமே இப்படித்தான் ஏதேனும் செய்வான் என்று அவளுக்கு தோன்றியது தான். ஆனால் தன்னிடம் தகவல் தெரிவித்துவிட்டு தான் வருவான் என்று நினைத்தவளுக்கு, இப்படி அவள் சொல்லாமல் திடீரென கிளம்பி வந்தது தான் அவளுக்கு வருத்தம். மற்றபடி அவன்மேல் அவளால் கோபமாக இருப்பதுபோல் கூட நடிக்க முடியாது. இன்று சரணும், நிலாவும் தன்னைப்பற்றி என்ன நினைப்பார்களோ என்று நினைத்து கணவனிடம் காய்ந்துவிட்டாள்.

சிறிதுநேரம் அமைதியாக அவனையே பார்த்துக் கொண்டிருந்தவள், பின் ஒரு பெருமூச்சுடன் அவனிடம் சென்றாள். “பாவா..”

“………..”

“பாவா….:”

“……….”

“பாவா…. கோபமா…?”

“ம்ப்ச்….”

“ப்ளீஸ் பாவா..”

“என்ன ப்ளீஸ்..?”

“நான் பாவமில்லையா…”

“என்ன பாவம்…”

“இங்க பாருங்க பாவா…”

“என்ன பாருங்க…?

“ம்ப்ச் போதும் பாவா….! உங்களைப்பத்தி தெரிஞ்சும் நான் பேசினது தப்புத்தான்… ஐ ஆம் சாரி பாவா…”

“உன் சாரி யாருக்கு வேணும்….. அதைத் தூக்கித் தூர போடு…”

“என்ன சாரி வேண்டாமா…? ஓகே வேறென்ன வேணும்…?

“பர்ஸ்ட் நான் சொன்னதை செய்…”

“நீங்க என்ன சொன்னீங்க..” குழப்பமாக அவனையேப் பார்க்க….

புது மலர்கள் பூத்திடும் வேளை - மதுவதனி

# புது மலர்கள் பூத்திடும் வேளை…!

“ம்ம்ம்ம்… தத்தி… தத்தி…. உன் சாரியைத் தூக்கித் தூரப்போடுனு சொன்னேனே..!!” என்று இதழில் குறும்புச் சிரிப்புடன், அவளைப் பார்த்து கண்களைச் சிமிட்டினான்….

“ச்சீ… பாவா… ஹ்ம்ம்.. ஹ்ம்ம்…. என்று சிணுங்கியவள் “நான் பயந்தே போயிட்டேன்…” என்றவாறு அவன் நெஞ்சிலே சாய்ந்தாள்.

தன்மேல் சாய்ந்தவளை ஆதரவாக அணைத்தபடி “நான் எப்படி என் லட்டுக்குட்டி மேல கோபப்படுவேன்.. சும்மா ஆக்டிங்…. அப்படி ஆக்ட் பண்ணதுனால தான் மேடம் இப்படி என்மேல சொகுசா சாஞ்சிருக்கீங்க……..”

“பிராட் பாவா நீங்க..” என்று அவனின் மீசையைப் பிடித்து இழுத்தவளிடம், “ஹேய் விடுடி…. வலிக்குதடி…..” என்று மீசையை அவளிடமிருந்து விடுவித்தவன்….. “அம்மாவும் அப்பாவும் குட்டீஸ் ரெண்டையும் அழைச்சிட்டு ப்ரைடே நைட் இங்கே வந்துருவாங்க…. பைவ் டேஸ் லீவ்…. நானும், சரணும் நாளைக்கு மார்னிங் தேனீ போயிட்டு, அங்க பார்த்துட்டு ப்ரைடே இங்கே வந்துடுவோம்…”

“குட்டீசும் இங்கே நல்லா என்ஜாய் பண்ணிட்டு வரட்டும்…. அம்மாவுக்கும் கொஞ்சம் ரிலாக்ஸா இருக்கும்… நீயும் அவங்களை ரொம்ப மிஸ் பண்ணிருப்ப இல்ல… அதனால்தான் இந்த ஏற்பாடு….” என்றான் அவளது கூந்தலை வருடியபடியே…..

தன்னை முன்வைத்தே கணவன் யோசிக்கிறான் என்பது எந்தப் பெண்ணிற்குத் தான் பெருமையைக் கொடுக்காது…! இளமதியின் விசயத்திலும் அதுவே நடந்தது. கணவனின் செயலில் அவன்மேல் இருந்த காதல் மேலும் மேலும் கூடிக்கொண்டேதான் சென்றது. அவன்மீதான தன் காதலை உணர்த்தும் பொருட்டு…. தன் செவ்விதழால் கணவனின் இதழை மென்மையாகத் தீண்டினாள். மனைவியின் செயலில் திகைத்தவன், பின் ஒரு மோகனப் புன்னகையுடன் அவள் செய்கையை தனதாக்கினான்.

இளமதியின் மென்மையிலும், அவளின் பெண்மை மிளிர்வதை கண்டு அதைத் தனதாக்கி கொண்டு, தான் தோற்காமல் அவளை வெற்றிபெற செய்து அங்கு ஒரு அழகான காதல்போர் தொடங்கி வைத்தான்…. அஸ்வத்தின் ஆண்மையில் தெரிந்த மென்மையும், அவனது தொடுதலில் தெரிந்த காதலிலும், அவனுக்கே உரித்தான அவனின் நறுமணத்திலும் கட்டுண்டு அவனோடு அவளும் தன் தேடலை துவங்கினாள்.

---



புது மலர்கள் பூத்திடும் வேளை - மதுவதனி

# புது மலர்கள் பூத்திடும் வேளை…!

தன்மேல் சாய்ந்திருக்கும் மனைவியை கைகளால் வருடியவாறே, உறங்கும் தன் பிள்ளைச் செல்வங்களைக் கண்களால் வருடிக் கொண்டிருந்தான் சரண். இந்த நிம்மதியும் மகிழ்ச்சியும் கிடைக்க அவன்பட்ட கஷ்டங்கள் எத்தனை… எத்தனை….? கண்மூடி ஒருநொடி அதையெல்லாம் மறக்க முயற்சி செய்தான். இனி தங்கள் வாழ்க்கையில் எந்தவிதப் பிரச்சினையும் வரப்போவது இல்லையென்றாலும், மனம் பயத்தைத் தத்தெடுப்பதை நிறுத்த முடியவில்லை.

ஆனாலும் முன்பை விட, இப்போது இன்னும் இன்னும் அவன் தைரியம் கூடுவதையும் அவனால் உணர முடிந்தது. ஒருமுறை தன்னுடைய அலட்சியம் அவன் வாழக்கையை சீரழித்தது போல் இன்னொருமுறை நடக்க அவன் விடப்போவதுமில்லை…. காதலித்தவளை கஷ்டப்பட வைத்த தன்னைப்போல் ஒருவனை மன்னித்து ஏற்றுக்கொண்ட தன் மனையாளை எண்ணி அந்நேரம் பூரிக்காமலும் அவனால் இருக்க முடியவில்லை. அவள் பட்டு, பார்த்த துன்பங்கள் எல்லாம் போதும், இனிமேல் ஒரு தூசு கூட அவள்மேல் படாமல் பார்த்துக்கொள்ள வேண்டும் என்று உறுதி பூண்டான் மனதிற்குள்..

கணவன் இன்னும் உறங்கவில்லை என்பதை அவனது அசைவில் உணர்ந்தவள், சற்று மேலே எம்பி அவனிடம் “என்ன பாவா…. என்ன யோசனை…” என்றாள்.

“தங்கம்மா…. உங்கிட்ட ஒன்னும் சொல்லனும்டா…. நீ கோவிச்சுக்கமாட்டியே…?”

“என்கிட்டே என்ன தயக்கம் பாவா…. எதா இருந்தாலும் சொல்லுங்க…”

“அதுவந்து…. அதுவந்து… ஒண்ணுமில்லை…. அண்ணி இருக்கும்போது, நீ என்னை பாவானு கூப்பிடாதடா….அண்ணியும் ப்ரோவை அப்படித்தானே கூப்பிடுறாங்க… இன்னைக்கு கவனிச்சியா…. நீ பாவானும் போது நானும் திரும்புறேன்…. ப்ரோவும் திரும்புறார். அண்ணிக் கூப்பிடும்போதும் அதுதான் நடந்தது. அதனால்தான் சொல்றேன்…” என்றான் ஒருவாறு தயங்கியவாறே……

புது மலர்கள் பூத்திடும் வேளை - மதுவதனி

அவன் சொன்னதைக் கேட்டதும் கலகலவென சிரித்தவள்... “ஹாஹா பாவா..... இதுக்குத்தானா.... நான் கூட என்னமோ ஏதோனு பயந்துட்டேன்.. பட் வெரி சாரி பாவா... அதை மாத்த முடியாது... நீங்க அட்ஜஸ்ட் பண்ணித்தான் ஆகணும்..” என்றாள்.

“சிரிக்காதடி..... சிரிச்ச கடுப்பாகிடுவேன்... ஏண்டி என்னைப்பார்த்தா சிரிப்பா இருக்கா... உன் ஹெல்த் மட்டும் இப்போ நார்மலா இருந்திருந்தா என்னோட பனிஷ்மெண்டே வேற மாதிரி இருந்திருக்கும். இந்த சிரிக்கிற வாய் இந்நேரம் எத்தனை சித்திரவதைப் பட்டிருக்குமோ... என்னால அட்ஜஸ்ட் பண்ண முடியாது.. நீ என்னை வேற சொல்லிக் கூப்பிடு, இல்லை பேர் சொல்லிக் கூப்பிடு...” என்றான் பிடிவாதமாய்....

“என்ன பாவா... இது சின்னபிள்ளை மாதிரி. இதுதான் வழக்கம் எங்க குடும்பத்துல இப்படித்தான் சொல்லி கொடுத்துருக்காங்க, அதான் அக்காவும் அப்படிக் கூப்பிடுறாங்க.. எனக்கும் இப்படிக் கூப்பிடத்தான் பிடிச்சிருக்கு... என்னால் புதுசா எல்லாம் கூப்பிட, முடியாது போங்க....” என்று அவனுக்கு மேல் அவள் பிடிவாதம் காட்டி.....

“ஏண்டி இம்சை பண்ற, எப்படியோ கூப்பிட்டுத் தொலை....” என்றான் கடுப்பாக....

அவனின் கோபம் புரிந்து பேச்சை மாற்றும் விதமாக “நீங்க வேற ஏதோ யோசனையா இருந்தீங்களே... அது என்னனு கேட்டேன்...” என நிலா கேட்டாள்.

அவனும் மற்றதை மறந்து... “யோசனையெல்லாம் ஒன்னுமில்லடா.... அக்காவுக்காக... அவங்க பேமிலிக்காக என்று பார்த்து, உன்னை நான் எவ்வளவு கஷ்டப்படுத்திட்டேன்.. அன்னைக்கு நீ அழுதுக்கிட்டே என்கூட சண்டைப் போட்டதை நினைக்கும் போது இப்போதும் மனசு பதறுது...

உன் மனசுல எத்தனைக் கஷ்டங்கள் இருந்திருக்கும், அதையெல்லாம் வெளிக்காட்டாம, மத்தவங்க முன்னாடி நீ நார்மலா இருக்குற மாதிரிக் காட்டிக்கிறது எவ்வளவு கஷ்டம்.”

"நான் உனக்கு அத்தனைக் கஷ்டத்தைக் கொடுத்துருக்கேன்னு நினைக்கும் போது என்னால தாங்கிக்கவே முடியல… என்னை மன்னிச்சிடு நிலாம்மா…. எவ்வளவு பெரிய சொர்க்கத்தை இழக்க இருந்தேன் என்னோட முட்டாள் தனத்தால…" என்றவாறே அவள் தோளிலே அவன் முகம் பதித்தான்…

இதுநாள் வரை அவன் வாய்விட்ட இந்த விஷயத்தை பேசியதில்லை.. இன்று அவன் அவ்வாறு பேசுவது அவளுக்கும் அதிசயமாக இருந்தது. மேலும் கணவனின் துன்பம் தன்னுடையது போல் உணர்ந்து அவனை மென்மையாக அணைத்துக்கொண்டே தன் வார்த்தைகளால் ஆறுதல் படுத்தினாள்.

"பாவா… உங்க இடத்துல யார் இருந்திருந்தாலும் இதைத்தானே செய்திருப்பாங்க… இல்லை இதைவிட மேல அந்த மீனாவுக்கு பயந்து, அவள் சொன்ன மாதிரியே கேட்டுருப்பாங்க… ஆனா நீங்க நான் வேணும் என்ற முடிவோடு, என்னை எந்தக் கஷ்டமும் படுத்தக் கூடாது என்று ஒவ்வொன்றும் பார்த்து பார்த்துதானே செய்தீங்க…. உங்கமேல் எந்த தப்புமே இல்லை.."

"நான்தான் உங்களை, உங்களோட நடவடிக்கைகள் எதையும் புரிஞ்சிக்காம, தப்பா நினைச்சு என்னையும் வருத்தி உங்களையும் கஷ்டப்படுத்திட்டேன்… நீங்கதான் என்னை மன்னிக்கணும், தயவு செய்து என்னையும் நான் செய்த தப்பையும் மன்னிச்சிடுங்க பாவா…." என்றாள் கண் கலங்கியவாறே…

மனைவியின் கண்ணீரில் தன் சோகத்தையெல்லாம் மறைத்தவன் "ஹேய் நிலாமா… இப்போ எதுக்கு இந்த அழுகை, நீயும் தப்பு பண்ணல, நானும் தப்பு பண்ணல… தேவையில்லாம வருத்தப்படாதே… உன் கண்ணீர் எவ்வளவு விலை உயர்ந்தது தெரியுமா..? அதை இந்தமாதிரி சில்லி மேட்டருக்கெல்லாம் வேஸ்ட் பண்ணாத… புரியுதா..? என்று அவளை சமதானப்படுத்தியவன் "அப்புறம் மேடம் நாம தப்பே பண்ணலன்னு சொல்றேன் இன்னும் பொங்காம இருக்கீங்க" என சீண்டினான்…

"என்ன பாவா… இதுல பொங்குறதுக்கு என்ன இருக்கு, நீங்க சரியா தான சொன்னீங்க… நாம எங்க தப்பு பண்ணோம்…"

புது மலர்கள் பூத்திடும் வேளை மதுவதனி

# புது மலர்கள் பூத்திடும் வேளை…!

“ஹா ஹா.. சரியான சாம்பார் சாதம்…. அப்போ நாம தப்பே பண்ணல அப்படித்தானே..” என்று தன் குழந்தைகள் இருவரையும் கண்களால் சுட்டிக்காட்டி, விரலால் இதழை வருடினான்.

முதலில் அவன் கூறியது புரியாமால் விழித்தவள்… அவன் கண்களும், விரல்களும் கூறிய செய்தியில் கன்னங்கள் இரண்டும் செம்மையுற…. “ம்ம்ம் பாவா…..” என்று சிணுங்கியவாறே அவன் மார்பில் புதைத்துக் கொண்டாள் அவன் வானின் அபூர்வ நிலா…..

வெண்பஞ்சு மேகமாய் அறையினுள் நுழைந்த பனிவாடைக் காற்று, வெட்கப்பட்டு திரைச்சீலைகளால் தன் கண்களை மூடிக்கொண்டது…. இரவின் புன்னைகையால் நிலவு ஒளிர்ந்து மிளிர்ந்தது….!

**வேளை தொடரும்……..**

புதுமலர்கள் பூத்திடும் வேளை - மதுவதனி

# புது மலர்கள் பூத்திடும் வேளை…!



**வேளை - 40**

*****************************************************************************************************

காவியம் பாடவா தென்றலே புது மலர் பூத்திடும் வேளை
இனிதான பொழுது எனதாகுமோ
புரியாத புதிர்தான் எதிர்காலமோ
பாடும் நீலப் பூங்குயில் மௌனமான வேளையில்

விளைந்ததோர் வசந்தமே புது சுடர் பொழிந்திட
மனத்திலோர் நிராசயே இருட்டிலே மயங்கிட
வாழ்கின்ற நாட்களே சோகங்கள் என்பதை
கண்ணீரில் தீட்டினேன் கேளுங்கள் என் கதை
கலைந்து போகும் கானல் நீரிது

புலர்ந்ததோ பொழுதிதுவோ புள்ளினத்தின் மஹோத்சவம்
இவை மொழி இசைதரும் சுரங்கலிள் மனோஹரம்
புதுப் ப்ரபஞ்சமே மலர்ந்த நேரமே
அம்மாடி சொர்க்கம்தான் முன்னாடி வந்ததோ
கசந்து போன காட்சி இல்லையே

*****************************************************************************************************

புது மலர்கள் பூத்திடும் வேளை

# புது மலர்கள் பூத்திடும் வேளை…!

## ஐந்து ஆண்டுகளுக்குப் பிறகு…………………

தீபகாருண்யம் அழகாய் ஜொலித்தது. இன்று எட்டாம் ஆண்டு நிறைவு விழா இனிதே முடிந்திருந்தது. விழாவில் நிலாவின் குடும்பம், இளமதியின் குடும்பம் என அனைவருமே கலந்து கொண்டிருந்தாலும் முக்கியமான இருவர் அதில் மிஸ்ஸிங்…. அது நம் சரணின் சிஷ்யர்களே….. முதலில் ஆசிரமாக ஆரம்பித்த தீபகாருண்யம் அஸ்வத் இடையீட்டால் மேலும் பல பகுதிகளை பெற்றுக்கொண்டது. இளமதி முதலில் இதில் பங்கேற்க பலமுறை யோசித்தாலும், அஸ்வத்தின் இடைவிடாத முயற்சியால், வேறு வழியின்றி தனக்கான பங்கை அந்த ஆசிரமத்திற்கு கொடுக்க முன் வந்தாள்.

இப்போது அஸ்வத் சென்னை ஐ.எம்.ஏ.வில் ட்ரெயினர் ஆக பணிபுரிய, இளமதி தன் மாமனார் மாமியார் மற்றும் குழந்தைகளுடன் தேனியிலேயே வந்து தங்கிவிட்டாள். அதற்கு காரணம் காசிராமனின் வயது முதிர்வு, அவரால் அதை நிர்வகிக்க முடியவில்லை. மேலும் அந்த ஆசிரமத்தின் நிறுவனர் பொறுப்பை அவர் இளமதியின் மேல் எழுதி வைத்துவிட்டு விலகிவிட, சரவணனும் - குழலியும் தன் கடைசி காலத்தை இதுபோல் ஒரு இடத்தில் கழிக்க வேண்டும் என்றும் சொல்லிவிட, நிலாவும் சரணும் இப்போதுதான் தங்கள் குடும்பமாக வாழ்கிறார்கள் அவர்களையும் தொல்லை செய்ய வேண்டாம் என்ற எண்ணம் இளமதிக்கு தன்னால் எழுந்துவிட, ஆப்சனே இல்லாமல் அந்தப் பொறுப்பை ஏற்றுக் கொண்டாள்.

அதன்பிறகு அவளது எண்ணம், செயல் எல்லாம் ஒரு மூலையில் முடங்கிவிடாமல், தீபகாருண்யத்தின் வளர்ச்சி ஒன்றே குறிக்கோளாய் நினைத்து தானும் தன் கூட்டில் இருந்து வெளியேறி, தன்னையும் ஸ்திரப்படுத்தி, ஆசிரமத்தையும் முன்னேற்றிக் கொண்டு இருக்கிறாள். குழந்தைகள் இருவர் பொறுப்பையும் குழலி ஏற்றுக்கொண்டு விட, இளமைதியால் நிம்மதியாய் தன் எண்ணங்களைச் செயல்படுத்த முடிந்தது. இந்த ஐந்தாண்டுகளில் நிலாவும் சரணும் குடும்பமாய் எந்தப் பிரச்சினையுமின்றி சந்தோசமாய் தங்கள் வாழ்க்கைப் படகை செலுத்துகின்றனர்.

நிலாவின் ஓவியங்கள் இப்போது மேலும் மெருகேற்றப்பட்டு சமூக ஆர்வலர்களால் விமர்சிக்கப்படும் அளவிற்கு வளர்ந்துள்ளது. ஆம் இப்போதைய பெண்கல்வி, சமூக வலைதளத்தில் பெண்களுக்கு ஏற்படும் அவலங்கள், பள்ளிக்கல்லூரிகளில் பெண்கள் சந்திக்கும் பிரச்சினைகள், பெண்களே பெண்களுக்கு கொடுக்கப்படும் கொடுமைகள்,

# புது மலர்கள் பூத்திடும் வேளை...!

வளர்ந்து வரும் சமூகத்தில் இன்றைய பெண்களின் நிலை.... போன்ற தலைப்புகளில் அவள் வரையும் ஓவியங்கள் ஊடகங்களில் பலவாறு விமர்சிக்கப்பட்டு, பரிசுகளையும் அள்ளிச் சென்றது.

அதில் அவள் கொடுக்கும் வாசகங்கள் அனைத்தும் அகிலாவின் எண்ணங்கள் தான். நிலா மற்றும் ரவியின் ஓவியங்கள் மூலம் வரும் அனைத்து வருமானமும் தீபகருண்யத்திற்கு என்று ஒதுக்கப்பட்டது.

இளமதி பொறுப்பை ஏற்றதும் பாதிக்கப்பட்டு, இந்த சமூகத்தில் ஒதுக்கப்படும் பெண்களை நேரடியாகச் சந்தித்து, அவர்களை தங்கள் ஆசிரமத்தில் சேர்த்து, தன்னம்பிக்கையும், வாழ்க்கையை எதிர்த்து போராட வேண்டிய கட்டாயத்தையும் புகட்டி நல்வழிப்படுத்த ஆரம்பித்தாள்.

பாசிடிவ் திக்கிங் என்பது மட்டுமே கொள்கையாகக் கொண்டு அனைத்து தடைகளையும் எதிர்த்து முன்னேறினாள். ஆசிரமத்தில் இருப்பவர்களுக்கு, கைத்தொழில் மூலம் எந்நாளும் முடியும் என்ற நம்பிக்கையை ஒவ்வொருத்தர் மனதிலும் வளரச் செய்தாள். அந்தப் பொருட்களை ஆதிராவின் மூலம் வலைதளத்தில் பதிவிட்டு வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்யவும் கற்றுக்கொடுத்தாள்.

அஸ்வத் தன் கடமையாக முன்னாள் ராணுவத்தினர் சங்கம் மூலம் வாரத்தில் ஒருநாள் பெண்களுக்கு உண்டான தற்காப்புப் பயிற்சிகள், யோகா, களரி, மற்றும் பாசிடிவ் திங்கிங் கவுன்சிலிங் என்று அறிமுகப்படுத்தினான். மேலும் ஒவ்வொரு பள்ளியிலும் கல்லூரியிலும் சென்று பேசி இதை ஏற்றுக்கொள்ள வைத்தான். முதலில் தனியார் பள்ளி நிர்வாகங்கள் தயங்க, அதை அரசுப் பள்ளிகளில் இருந்து ஆரம்பிக்க ஆரம்பித்தனர்.

அதில் கிடைத்த வெற்றி தேனிமாவட்டம் அரிமா சங்கம் மூலம் சிறந்த சமூக சேவை மையம் என்ற விருதை தீபகாருண்யம் பெற்றது. அதன்பிறகு முதலில் தயங்கிய தனியார் பள்ளி கல்லூரி நிறுவனங்கள், அவர்களே முன்வந்து பயிற்சியை ஏற்றுக்கொண்டனர். மேலும் லண்டனில் மேற்படிப்பில் இருக்கும் ஷானவி மற்றும் வித்யா இருவரும் தங்கள் வெளிநாட்டு நண்பர்களின் மூலம் நிதி திரட்டி உதவ ஆரம்பித்தனர்.

புது மலர்கள் பூத்திடும் வேளை - மதுவதனி

# புது மலர்கள் பூத்திடும் வேளை…!

சிபி மற்றும் தீபக், ஆகாஷ் ஆகியோர் ஆர்மியில் இருப்பதால், அவர்கள் அல்லாத மற்ற நண்பர்கள் மூலம் ஆசிரமித்தின் முதலுதவிகள் மற்றும் மாதாந்திர செக்கப் போன்றவற்றைக் கவனித்தனர். இவ்வாறு பலருடைய முயற்சியினால் இன்று தீபகாருண்யம் பெயரைப் போலவே கருணையாக ஜொலித்தது. மேலும் பல விருதுகளையும் அள்ளிச் சென்றது.

வீரபாண்டி ஸ்ரீ கௌமாரியம்மன் கோவில் திருவிழா சித்திரை மாதக் கடைசியில் நான்கு நாட்களும், வைகாசி மாதத்தின் முதல் நான்கு நாட்களும் என்று மொத்தம் எட்டு நாட்களாக நடைபெறும். அதில் மூன்றாம்நாள் திருவிழாவில் தீபகாருண்யம் சார்பாக இவர்கள் பூஜைக்கு கொடுத்திருந்தனர். பெண்கள் ஆயிரம்கண் பானை எடுப்பதாக வேண்டுதலும், குடும்பத்தில் மூன்று மொட்டை என சரண் மற்றும் அவன் குழந்தைகளும், அஸ்வத் மற்றும் அவன் குழந்தைகளும் என மொத்தம் ஆறு மொட்டைப் போடுவதாகவும் வேண்டுதல் இருக்க, அனைவரும் குடும்ப சகிதம் கோவிலுக்கு கிளம்பி கொண்டிருந்தனர்.

இரவில் கோவிலைச் சுற்றியுள்ள கடைகளும், மக்களும் என ஒரு புதுவிதமான உலகமாகவே காட்சியளிக்கும் வீரபாண்டி எனும் அழகிய கோவில் கிராமம். இரவிலும் பகலைப் போல் காட்சியளித்த தங்கள் வேனை நிறுத்திவிட்டு, தேவையானப் பொருட்களுடன் முல்லையாற்றை நோக்கி நடந்தனர்.

முதலில் மொட்டையிட வேண்டியவர்களுக்கு மொட்டையடித்து, அவர்களை ஆற்றில் குளிக்க வைத்து புத்தாடை உடுத்தி, தலைக்குளிர மணக்கும் சந்தணம் தடவி, பெண்கள் மூவரும் ஆற்றங்கரை ஓரத்தில் சூடம் ஏற்றி அவர்கள் தலையில் ஆயிரம்கண் பானையை எடுத்து வைத்து ஆற்றில் இருந்து மேள வாத்தியத்துடன் கோவிலுக்கு ஊர்வலமாக சென்றடைந்தனர்.

கோவிலில் பூஜை முடித்து நேர்த்திக்கடனையும் செலுத்திவிட்டு வெளியே வந்தவர்கள், சிவன் கோவிலுக்கு சென்றனர். அங்கும் பூஜைகளை முடித்துவிட்டு வேன் நிறுத்தியிருக்கும் இடத்திற்கு வந்தனர். அதன்பிறகு எடுத்துச் சென்ற உணவுகளை பரிமாறி அனைவரும் பசியாறி என சில நிமிடங்கள் கழிய, குழந்தைகள் அனைவரும் வேடிக்கைப் பார்க்க போகலாம் என்று நச்சரிக்க, வேறுவழி இல்லாமல் சரவணன், குழலி, மல்லிகா மூவரையும் வேனிலே ஓய்வெடுக்கக் கூறிவிட்டு, இளையவர்கள் அனைவரும் குழந்தைகளுடன் கிளம்பினர்.

புது மலர்கள் பூத்திடும் வேளை - மதுவதனி

# புது மலர்கள் பூத்திடும் வேளை…!

சரண், அஸ்வத், ரவி மற்றும் மணி என ஆண்கள் ஒரு பக்கமும்……. நிலா, இளமதி, ஆதிரா, அகிலா என பெண்கள் ஒரு பக்கமும் அமர்ந்து குழந்தைகள் அனைவரும் விளையாடுவதை பார்த்துக் கொண்டிருந்தனர். அதில் ரவியைத் தான் மற்ற மூவரும் கிண்டல் செய்து கொண்டிருந்தனர்.

ஆதிராவின் முதல் பிரசவத்தின் அவள் பட்டக் கஷ்டங்களைப் பார்த்தவன், அடுத்து ஒரு குழந்தை வேண்டவே வேண்டாம் என்பதில் உறுதியாய் இருந்தான். ஆனால் ஆதிராவிற்குள்ளோ ஒரு பெண்குழந்தை வேண்டும் என்ற ஏக்கம் பால் போல் பொங்கியது. முதலில் கணவனின் பேச்சைக் கேட்டாலும், நாளாக நாளாக அவளுக்குள்ளும் தன் ஏக்கத்தை புரிந்து கொள்ள மறுக்கிறானே என்று சிறு கோபம் முளைத்து, அது அவர்கள் இருவருக்குள்ளும் இடைவெளியை கொண்டு வந்து நிறுத்தியது.

அதில் கடுப்பான ரவி சரணிடம் புலம்பித் தவிக்க….. சரண் நிலாவிடம் கூற, அவன் மனைவியோ இது தேவையில்லாத பயம்… ஆதிராவின் ஆசையும் நியாயமானதுதான் என்று எடுத்துக் கூறச் சொன்னாள். ஆனாலும் ரவியின் பிடிவாதம் தளர மறுக்க, வேறு வழியில்லாமல் நால்வரும் ரவி-ஆதிரா இருவரையும் ஒரு சைக்யாட்ரிஸ்ட்டிடம் கவுன்சிலிங் அழைத்து சென்றனர்.

அவர் கொடுத்த அறிவுரையின் படி மெல்ல மெல்லத் தன் பிடிவாதப் பிடிகளை தகர்த்திக் கொண்டான் ரவி. ஆதிராவின் ஆசைப்படியே அவள் கர்ப்பம் தரிக்க, மனையாளும் மற்றவர்களும் சந்தோசமாய் இருந்தாலும், ரவியின் மனதில் எப்போதும் ஒரு பதட்டம் இருந்து கொண்டே இருந்தது. அது அவனின் ஒவ்வொரு செயலிலும் தெரிந்தது.

முதலில் ஆதிரா அவனைக் கிண்டல் அடித்தாலும், கணவனின் இந்த மெய்யுருகிப்போனாள் என்றே சொல்ல வேண்டும். அவனின் இந்தப் புது முகத்தைப் பார்த்து, அவனது இயல்பை மீட்டு பழைய நிலைக்கு கொண்டு வரும் பொருட்டு,

தான் ஆசை ஆசையாய் சுமக்கும் மூன்று மாத சிசுவைக் கூட களைத்து விடும் முடிவை எடுத்தாள்.

புது மலர்கள் பூத்திடும் வேளை - மதுவதனி

அதை அறிந்து சர்வமும் நடுங்கியவன், தன் பயத்தையும் பதட்டத்தையும் குறைத்து, மற்றவர்களுக்கு முன் தன்னை திடமானவனாகவும், தைரியமானவனாகவும் காட்டிக் கொண்டான். அதன்பிறகு அவன் ஆசை மனையாளின் விருப்பப்படி பெண் குழந்தை பிறந்த பிறகும் கூட, மனைவியின் நலன் நாடிய பின்னரே அந்தப் பிஞ்சுவின் முகம் பார்த்தான். .

பெண்குழந்தை வேண்டுமென்று ஆசைப்பட்டது என்னவோ ஆதிரா தான். ஆனால் குழந்தை பிறந்ததில் இருந்து இப்போது வரை பார்த்துக் கொள்வது ரவிதான். பெண்குழந்தைகளுக்கு அப்பா தான் செல்லம் என்ற உலக நியதியை மாற்ற முடியுமா என்ன..? ரவியின் அனைத்துமே அந்த செல்லப் பைங்கிளி ஆகிப்போனாள்.

தஷ்வந்த் என்று மகனுக்கு பெயர் வைத்தவர்கள், அஸ்வத் மற்றும் சரணைப் பின்பற்றி அதே 'த' வில் ஆரம்பிக்கும் படி தனிகாஸ்ரீ என்று பெயர் சூட்டி மகிழ்ந்தனர். இன்று குழந்தைகள் அனைவரும் விளையாடிக் கொண்டிருக்க தனிகா மட்டும் தன் தந்தையின் தோளில் ஏறியிருந்தாள். அதைத்தான் மற்ற மூவரும் கிண்டலடித்துக் கொண்டிருந்தனர்.

"ஏண்டா மச்சான் அன்னைக்கு புள்ளையே வேண்டாம்னு சாமியாராப் போகப்போன.... இப்போ என்னடானா மூட்டையைத் தூக்கிட்டு போற மாதிரி உன் பொண்ணைத் தூக்கிட்டு திரியிற..... இதுக்குத்தான் ஓவரா அலம்பல் பண்ணக்கூடாதுன்னு சொல்றது..." என்று வழக்கம் போல சரண் முதலில் கிண்டலில் இறங்க....

"ஏன் சொல்ல மாட்ட... ஒரே டெலிவெரில ரெண்டு புள்ளையைப் பெத்துட்டோம்னு திமிரு... தெனாவட்டு.... நீயா பேசலடா... அந்த திமிர் உன்னை பேசவைக்குது..... இதே நிலாக்கு ஒரு குழந்தைப் பிறந்து, ஆரா மாதிரி பிடிவாதம் பண்ணியிருந்தா.... நீ என்னடா பண்ணியிருப்ப சொல்லு...." என ரவி பொங்க.....

"ஹாஹா சரியான கேள்வி ரவி..... பதில் சொல்லுங்க சகல..." - அஸ்வத்

"இந்தக் கேள்வியே தேவையில்லாதது..... இந்நேரம் சரண் தோள்லையும் ஒரு குட்டி நிலா உட்கார்ந்திருக்கும்...." - மணி

# புது மலர்கள் பூத்திடும் வேளை...!

“அப்படி சொல்லுங்க... இப்போ சொல்லுடா... உனக்குத்தான் பேசத் தெரியுமா....? இப்போ பேசுடா.. - ரவி

இவர்கள் ஆளாளுக்கு சரணைக் கலாய்க்க.... அவனோ கூலாக “மச்சி நிலாவோட ஆசை எதுனாலும் அதை நிறைவேத்தி வச்சிடுவேன், அப்படி இருக்க இது ஒரு ஜுஜுபி மேட்டர்... இதற்கெல்லாம் யோசிப்பேனா சொல்லு..” என அந்தர்பல்டி அடிக்க......

மற்ற மூவரும் ‘அடப்பாவி’ எனும் பார்வையை அவனை நோக்கி வீசினர். இப்படியே ஒருவர் மாற்றி ஒருவர் கிண்டலடித்துக்கொண்டே கோயிலையும் சுற்றிக்கொண்டு குழந்தைகளையும் பார்த்துக் கொண்டனர்.

பெண்கள் வழக்கம்போல் தாங்கள் அணிந்திருந்த புடவையில் இருந்து பேச்சை ஆரம்பித்து, புடவை, நகை, குழந்தைகளின் உணவு, இப்போது அவர்களுக்கு இப்போது என்ன என்ன பயிற்சிகள் முக்கியம் போன்றவற்றை பேசிக் கொண்டிருந்தனர். அப்போது அகிலா.. “தேனு என் பிரண்ட் ஒரு வெப்சைட் பத்தி சொன்னா.... அதில் முழுக்க முழுக்க பெண்களுக்கானதாம். பெண்கள் மட்டுமே கருத்துக்கள் பதிவு செய்து, அதை விவாதிக்கவும் செய்றாங்களாம்.”

“மேலும் கதை, கவிதை, சிறுகதைகள் வீட்டு உள் அலங்காரம், சமையல் குறிப்புகள், மெடிகல் கவுன்சிலிங், குழந்தைகளுக்கு உண்டாகும் உண்டாகும் மன உளைச்சல், அதைப்போக்கும் வழிமுறைகள்.... இப்படி அனைத்துமே அந்த சைட்லயே இருக்காம்....” என்று கூற,

“அண்ணி அது ‘லேடிஷ்விங்க்ஸ்’ என்று ஒரு வெப்சைட். நம்ம ஷானு கூட அதில் மெம்பரா இருக்காலாம். அவ ஒரு பல்மனாலஜிஸ்ட்தானே....

பொதுவா நுரையீரல் என்றால் நாம் ஆண்களுக்குத் தான் அதிகமான பாதிப்பு இருக்குமென்று நினைக்கிறோம். அது உண்மைதான். ஆனால் பெண்களும் அதே அளவில் பாதிக்கபடுகிறார்கள் என்ற உண்மையை ஒரு ஆராய்ச்சி நிறுவனம் கண்டுபிடித்து வெளியிட்டு இருக்கிறது.”

புது மலர்கள் பூத்திடும் வேளை - மதுவதனி

# புது மலர்கள் பூத்திடும் வேளை…!

“பொது இடங்களில் புகைப்பிடிப்பது, புகைப்பிடிப்பவருக்கு மட்டுமில்லாமல் அவரைச் சுற்றியுள்ள அனைவரையும் பாதிக்கும் என்றும் அந்த ஆராய்ச்சியில் கூறி இருக்கிறார்கள். அதனாலும் பெண்களுக்குப் பாதிப்புகள் வருகின்றன. மேலும் ஆஸ்த்துமா, காசநோய் போன்ற நோய்களும் உருவாக்கி நுரையீரலைப் பாதிக்கலாம். இப்போ ஷானு இதுக்குத்தான் கவுன்சிலிங் கொடுக்குறா… அதோடு நுரையீரல் சம்மந்தமான கேள்விகளுக்கு அவளே ஆன்லைன்ல பதில் கொடுக்குறதா சொன்னா….”

“மேலும் அதுக்கான மெடிசின்ஸ் எல்லாம் கவர்மென்ட் ஹாஸ்பிடலில் தான் வாங்க வேண்டும் என்றும் கண்டிப்பா சொல்றா… பிரைவேட்டில் சாதாரண ஏழை மக்கள் வாங்கி கட்டுபடியாகாது என்பது தான் காரணம். அந்த அளவுக்கு விலை அதிகமாம் அந்த மெடிசின்ஸ். ஷானு அவளோட ப்ரண்ட்ஸ் மூலமா தான் இந்த வெப்சைட்ல போய் ஒரு விழிப்புணர்வு மாதிரி கன்சல்ட் செயராளாம்…. அது மட்டுமில்லாமல் அவளோட டாக்டர் ப்ரண்ட்ஸ் மூலம் கவர்ன்மென்ட் ஹாஸ்பிடலில் மெடிசின்ஸ் வாங்க ஏற்பாடு செய்திருக்காளாம்.”

பரவாயில்லை நல்ல விஷயமெல்லாம் பண்றா…. டூ டேஷ்க்கு முன்னாடி பேசும்போது தான் சொன்னா… நம்ம ஆசிரமம் பத்தி, அதோட வளர்ச்சிப்பத்தியும் போட சொன்னா… அதன் மூலமா நமக்கும் ஹெல்ப் கிடைக்கும், நமது மூலமா அவங்களுக்கும் ஹெல்ப் கிடைக்கும் என்று வெப் அட்ரஸ் கொடுத்திருக்கா.. நானும் உடனேப் பார்த்தேன்… பயனுள்ள சைட் தான்… குட் மெயின்டனஸ்….. அட்மின் நம்பரும் கொடுத்திருக்கா பேச சொல்லி….” என்று நிலா கூறி முடிக்க

“அப்படியா சொல்ற, சரி நானும் பார்க்குறேன், யூஸ்புல்லா இருந்தா பண்ணுவோம்.. என்ன சொல்ற ஆரா…” - இளமதி

“சரிங்கண்ணி கண்டிப்பா பண்ணுவோம்… மகளிர் சுய உதவிக்குழு பெண்கள் செய்ற பொருட்களை கூட போட்டோஸ் எடுத்து போட்டு, அதைப்பத்தி விரிவா ஒரு ஆர்டிக்கிள் மாதிரி போடலாம்… ஆனா எனக்கு ஒரு டவுட், இந்த ஷானு எப்படி இப்படி ஒரு பொறுப்பா ஆனானு தான் தெரியல…” - ஆதிரா.

“ஹாஹா… நம்ம வீட்டாளுங்க கிட்ட மட்டும் தான் வாலுத்தனம், வெளியே எல்லாம் அடக்கிவாசிப்பா…. பாவம் இப்போ எப்படி இருக்காளோ…

புது மலர்கள் பூத்திடும் வேளை - மதுவதனி

வித்யா தான் பாவம், இவளை எப்படி சமாளிக்கிறாளோ..? அந்த வாலு இல்லாம இப்போ எந்த பங்க்ஷனும் நல்லா இல்லை..” என அகிலா கூற, மற்ற மூவரும் அதையே ஆமோதித்தனர்.

அதன்பிறகு குழந்தைகளும் டயர்டாகி விட, அவர்களை அழைத்துக் கொண்டு, விளையாட்டுப் பொருட்கள் சிலவற்றை வாங்கிகொண்டு வீடு வந்து சேர்ந்தனர். அடுத்த மூன்றாவது நாள் நிலாவின் ஒரு ஓவியத்தைப் பாராட்டி ஜனாதிபதி கையில் விருது வாங்கும் விழா இருப்பதால் அதற்காக மொத்தக் குடும்பமும் டெல்லி செல்ல இருந்தது. அதோடு சரணின் நண்பர்கள் அனைவரும் மீட் செய்யும் ஒரு பார்ட்டியும் இருந்தது. அதற்காக ஐந்து நாட்கள் பயணமாக டெல்லி கிளம்ப இருந்தது அந்த குடும்பம்.

ஆண்கள் அனைவரும் அந்த வேளையில் பிசியாக இருக்க, நிலாவை தவிர்த்து பெண்களும் மகிழ்ச்சியாகத் தான் இருந்தனர். டெல்லி செல்ல வேண்டிய நாளுக்கு முதல்நாள் தான் மனைவியின் முகம் யோசனையிலே இருப்பதைக் கண்டான் சரண். அன்றிரவு நிலாவிடம் அதன் காரணம் கேட்க.. அவளோ ஷானாவி தன்னிடம் பேசியதைக் கூறியவள் “நீங்க சொன்னது சரிதான் பாவா… எல்லா நேரமும் விளையாட்டுத்தனமாய் இருக்கமாட்டா, எப்போ, எங்கே எப்படி நடக்கவேண்டும் என்று அவளுக்குத் தெரியும், அந்தப்பக்குவம் இல்லாம நான் அவளை வளர்க்கல சொன்னீங்க… அது எவ்வளவு உண்மை… நாங்கதான் அன்னைக்கு அவ்வளவு பிடிவாதமா நடந்துக்கிட்டோம், அதோட சிபியும் ரொம்ப பாவம். அவன் பக்கமும் நியாயம் இருந்தது..”

“ஆனால் நீங்களும் ஏன் அவளை அனுப்ப ஒத்துக்கிட்டீங்க.. அது எனக்குப் புரியவே இல்லை… சிபியையும் ரொம்ப ஹார்ஷா பேசிட்டீங்க.. அவன் இன்னும் சரியாகல..” கணவனின் தோளில் சாய்ந்தவாறேக் கேட்டாள் நிலா…

மனைவியின் பேச்சில் சிறிது நேரம் அமைதியானவன் பின் ஒரு முடிவுடன் “நிலாமா… சிபியை ரொம்ப ஹார்ஷா பேசிட்டேன்னு எனக்கும் தெரியும்…. ஆனா அந்த இடத்துல அதை நான் செய்யலைன்னா அவன் செய்த தப்பும் அவனுக்குப் புரியாது… அதோடு அன்னைக்கு நீங்க யாருமே அந்த முடிவை எடுக்கச் சொல்லி,அவளை போர்ஸ் பண்ணல, பட் யாரும் அவளுக்கு சப்போர்ட்டும் பண்ணல, அதுல அவ எவ்வளவு வெக்ஸ் ஆகிட்டான்னு யாருக்கும் புரியல…



புதுமலர்கள் பூத்திடும் வேளை - மதுவதனி

நாம அவ நல்லதுக்குத்தான் சொல்றோம் என்று நினைச்சிட்டு இருக்கோம்…. பட் அவ மனசுக்கு அது பிடிச்சிருக்கா பிடிக்கலையானு தெரியாம பண்ணிட்டோம்…"

"இரு…இரு.. நான் பேசி முடிச்சிடுறேன்… நீ என்ன சொல்ல வர்றேன்னு புரியுது.. அவளும் தானே சிபியை விரும்பினானு சொல்ற, அதை அவ வாய் திறந்து சொல்லவே இல்லை. பர்ஸ்ட் அவளே இன்னும் அதை புரிஞ்சிக்கல…. சிபி செய்த தப்பை மறந்து, அவன் மேல் இருக்கும் காதலை அவள் உணரனும் என்று நினைச்சேன். அதுக்கு அவளுக்கு அவகாசம் கொடுக்கணும் என்றும் நினைச்சேன்…."

"அதுக்குத்தான் அவ லண்டன் போறதுக்கு நான் ஒத்துக்கிட்டேன். இப்போ அவ மனசு மாறியிருக்கும். சிபி மேல் இருந்த கோபமும் போயிருக்கும். எனக்கு ரெண்டு பேருமே முக்கியம். எனக்கு சிபி வேற ஷானாவி வேற இல்லை. அதனால்தான் நான் இந்த முடிவை எடுத்தேன். இன்னும் ஒரே மாசத்துல வரப்போறாங்க…. இப்போ அவங்களே தெளிவா ஒரு முடிவு எடுத்துருப்பாங்க."

"அது எந்த முடிவா இருந்தாலும் நாம ஏத்துக்கத்தான் வேணும். சரி விடு இனி இதைப்பத்தி எதையும் யோசிக்காதே… எல்லாம் சரியாகும் என்று நம்புவோம்… நீ இப்போ ஒரு செலப்ரட்டி அதை நியாபகம் வச்சுக்கோ… நீ பங்ஷன்லே கான்சன்ட்ரேட் பண்ணு….. அதுதான் முக்கியம். அப்புறம் உன்னோட ஸ்பீச் ரெடி பண்ணிட்டியா….." என்று அவளை திசை திருப்பினான்.

"ம்ம்ம்ம்……. இன்னும் இல்லை பாவா…." என்றாள் சலிப்புடன் நிலா..

"என்னடா…. ஒன் டே தான் இருக்கு, அதுக்குள்ள எப்படி ரெடி பண்ணுவ.." - சரண் என்று சொல்லியிருக்காங்க…."- நிலா

"ஓ….. எதுக்கெல்லாம் சப்ஸ்டியுட் வச்சிருக்க நீ.. சரி விடு எல்லாம் பேக் பண்ணிட்டியா…… மல்லிம்மாவையே நம்பிட்டு இருக்காதே…. நீயும் ஒன்ஸ் செக் பண்ணிடு….. பைவ் டேஸ் இருக்கப்போ'றோம்…. முக்கியமா குட்டீஸ்க்கு தேவையான மெடிசின்ஸ் கரெக்ட்டா எடுத்து வச்சிடுமா.." - சரண்

“சரிங்க பாவா…. மறுபடியும் ஆரம்பிச்சிடாதீங்க… ஏற்கனவே என் காதுல ப்ளட் வர ஆரம்பிச்சிடுச்சு…..”

“இவ்ளோ நேரம் யாரோ பீலிங்க்ஸ் ஆப் இந்தியாவா இருந்தாங்க…. இப்போ என்னையவே கலாய்க்குறாங்க…. இந்த புள்ளப் பூச்சியெல்லாம் உன்னைக் கலாய்க்குதுடா சரண்…” என்று கிண்டலடிக்கவும்

“பாவா… போதும்…. நீங்க கிண்டல் பண்றதும் இல்லாம குழந்தைகளுக்கும் சொல்லிக் கொடுக்குறீங்க…. அதுங்க கூட என்னைப் பார்த்து ஓட்டுதுங்க தெரியுமா..? எனத் தன் மகவுகளைப் பற்றி அவனிடமே புகார் வாசிக்க…….

“ஆமாடா செல்லக்குட்டி, ரெண்டுபேருமே சரியில்லடா…. ரெண்டு பெரும் உன்னைக் கண்டுக்குறது இல்லை…. அதனால் நான் ஒரு முடிவு எடுத்துருக்கேன், பேசாமல் நீ சொல்றதைக் கேக்குற மாதிரி ஒரு குட்டி நிலா ரெடி பண்ணா என்ன..? என்றுத் தன் தாடையைத் தடவி சரண் யோசிக்க….

சரண் ஏதோ முக்கியமாகத்தான் பேசப்போகிறான் என்று அவனையே பார்த்திருந்தவள் அவன் என்னதான் பேசப்போகிறான் என்று அவனையே பார்த்திருந்தவள், அவன் பேசி முடித்ததைக் கேட்டதும் பக்கத்தில் இருந்த பில்லோவை எடுத்து “என்னடா இன்னும் ஒரு விவகாரமான பேச்சையும் காணோமேனு பார்த்தேன்… உங்களை… ரெண்டு பத்தாதா….? இன்னும் ஒன்னு கேட்குதா….” என்று சராமரியாக வெளுக்கத் துவங்கினாள்.

“ஹாஹா…. போதும்டீ…. நீ பீல் பண்ணவும் தானே சொன்னேன்….”

“நான் பில் பண்ணா..அதுக்கு நீங்க இப்படி சொல்விங்களா… போங்க …

“சரி சரி …குட்டிஸ் எழுந்துக்க போறாங்க …வா நாம சத்தமில்லாம வேறமாதிரி பேசுவோம்…”

“உங்களையெல்லாம் திருத்தவே முடியாது…… நீங்க மட்டும் போய் தனியா பேசுங்க….. நான் தூங்கப்போறேன்…”

புது மலர்கள் பூத்திடும் வேளை - மதுவதனி

நான் மட்டும் போய் என்ன தனியா பேச, நீ இதுக்கு சரிப்பட்டு வரமாட்ட…. நான் தமனை எழுப்பி விடுறேன் இரு…”

“ஐயோ தம்பியா…..வேண்டாம் பாவா…. நிஜமாவே ஐ பீல் வெரி டயர்ட்…. ப்ளீஸ் கொஞ்சம் கன்சிடர் பண்ணுங்க…. அவன் கேட்குற கேள்விக்கு பதில் சொல்லியே எனக்கு வாய் வலி வந்துடுச்சு…. எப்படி டிசைன் டிசைனா கொஸ்டீன் கேக்குறான்…. என்னால முடியல…. சரியான பதில்தான் சொல்லனும்னு வேற சொல்லிட்டீங்க…. யோசிச்சு யோசிச்சு தலையும் வலிக்குது தெரியுமா..?”

“ஹாஹா சிபி இப்படித்தான் இருப்பான்… அப்போ நானும் அக்காவும் தான் அவனை சமாளிப்போம்… அம்மாவும் உன்னைமாதிரி தான் சொல்லுவாங்க…. இப்போ நாம் சொல்லிக்கொடுக்குறது தான் குழந்தைகளுக்கு பசுமரத்தாணி போல பதியும்… அப்போவே நாம சரியான பதிலை சொல்லிக்கொடுத்துட்டா, வளர வளர அவங்களே அறிவை வளர்த்துக்குவாங்க.. அதுக்குத்தான் நான் அப்படி சொன்னேன்…” என்னதான் அவளுக்கு வாய் வழியாக பதில் கூறினாலும்….. அவனின் கைகள் தன் மன்மத விளையாட்டை அவனது விருப்பப்படி இனிதே தொடங்கியது…….

---

தன் மொட்டைத்தலையில் எண்ணெய் தேய்த்தவாறு உள்ளே வந்த கணவனைப் பார்த்து கேலியாகச் சிரித்தாள் இளமதி. அவளின் சிரிப்பைக் கண்டவன் பொய்யாக முறைத்துக் கொண்டே குளித்து விட்டு இரவு உடைக்கு மாறி மனைவியின் அருகில் அமர்ந்தான் அஸ்வத்.

இளமதி அடுத்தடுத்து அவன் செய்வதை ஒரு புன்னகையுடன் பார்த்துக் கொண்டே தன் முன் இருந்த லேப்டாப்பில் வேலையும் பார்த்துக் கொண்டிருந்தாள். கணவன் அருகில் அமர்ந்ததும் அதே புன்னகையுடன் பார்க்க, இளமதியின் விசயத்தில் கோபம் என்றால் என்னவென்று கேட்பவன் இத்தனை நேரம் இழுத்துப் பிடித்த பொய்யான கோபமும், மனைவியின் சிரிப்பில் பறந்தோடிட, அவள் மடியில் தலையை சாய்த்துக் கொண்டான்.

“என்ன பாவா இது…. ஆயில் அப்ளை பண்ணியும் யூஸ் இல்ல, இப்படி என் டிரஷெல்லாம் ஆயில் ஆக்கிட்டீங்க..”

புதுமலர்கள் பூத்திடும் வேளை - மதுவதனி

“புருஷன் ஆசையா வந்து மடியில் படுத்தா, என்னமோ டிரஸ் பாழாச்சு, அதாச்சு.. இதாச்சு என்று கத்துற... மனுஷனோட மூடேப் போச்சு.. ஒரு மிலிட்டரிக்காரனுக்கு மொட்டையைப் போட்டு அசிங்கப்படுத்தினதும் இல்லாம, இப்போ என்னமோ ஓவரா சீன் போடுற, நீ செஞ்சதுக்கு ஆக்சுவலா நான்தான் இப்போ சீன் போடணும். ஏதோ நம்ம பொண்டாட்டியாச்சே போனா போகுதுனு நினைச்சா ரொம்ப பண்றியே நீ போடி.....” என்று இப்போது திரும்பி அவள் வயிற்றில் முகத்தைப் புதைத்துக் கொள்ள, இளமதி இம்சையாக நெளிந்தாள்.

“எப்போதான் இப்படி பேசுறதைக் குறைக்கப் போறீங்களோ தெரியல, அப்படியே உங்க பொண்ணுங்களுக்கும் சொல்லிக் கொடுக்குறீங்க, கொஞ்சம் கூட என் பேச்சையேக் கேட்குறது இல்லை அப்பாக் கோன்டுங்க ரெண்டும்.... நேர்த்திக்கடன் வச்சதெல்லாம் சும்மா சும்மா சொல்லிக் காட்டக் கூடாதுனு எத்தனை தடவை சொல்லியிருக்கேன். என்னமோ சொத்தையே எழுதி வச்ச மாதிரி இந்த சீன் போடுறீங்க, முடிதான.... போனா போகுது..... நீங்க லீவ் முடிஞ்சு போறதுக்குள்ள முளைக்கப் போகுது அப்புறம் என்ன...? எதையாவது சொல்லி எரிச்சலைக் கிளப்பிட்டு....” என்று இனி தன் வேலையைப் பார்க்க முடியாது என்று தெளிவாகத் தெரிந்ததால் லேப்பை அணைத்தாள்.

“மனைவியின் கோபத்தை ரசித்துகொண்டே மீண்டும் அவளை சீண்ட ஆரம்பித்தான். “எதுக்கு உனக்கு இவ்வளவு கோபம் வருது, எனக்கு ஓகே... பத்து வயசுப் பொண்ணுக்கும், எட்டு வயசுப் பொண்ணுக்கும் போய் மொட்டயைப் போட்டா.... குழந்தைங்க பீல் பண்ணாம என்ன செய்வாங்க...”

“அக்கா தங்கை ரெண்டு பேருக்கும் எங்களை பார்த்தாதான் இளக்காராம். பாவம் சரண், அந்தக் குட்டிஷ்ங்க.... இந்த வருஷம் UKG போறேனு பெருமையடிச்சிட்டு இருந்ததுங்க... இனி மொட்டையோட போகணும்னு பீல் பண்ணிட்டு இருக்காங்க... நாளைக்கு டூர் போறோம் பேமிலி மொத்தமும் மொட்டையோடப் போனா பார்க்குறவன் என்ன நினைப்பான். திருப்பதியில் இருந்து டைரக்டா இம்போர்ட் பண்ண கேஸ் போலனு நினைக்க மாட்டான்.... தன் குழந்தைகளின் அழகான முடியையும் மொட்டையடிக்க வைத்து விட்டாளே என்ற ஆதங்கத்துடன் பேசிக்கொண்டிருந்தான்.

முடிஞ்சது முடிஞ்சது தான்... எதுக்கு மறுபடியும் அதையே ஆரம்பிக்கிறீங்க, சாமிக்கு வச்ச கடனை மட்டும் மறந்துடவேக் கூடாது. அது சாமிக்குத்தம் ஆகிடும். உங்கப் பொண்ணுங்களே சமாதானம் ஆகிட்டாங்க... நீங்க எதுக்கு இப்போ, இந்தக் குதி குதிக்கிறீங்க... தள்ளுங்க, எனக்குத் தூக்கம் வருது. நான் படுக்கிறேன்..... நாளைக்கு நிறைய வேலை இருக்கு......”

ஆஹா காளி மலையேறிட்டாளே, இப்போ எப்படி இறக்குறதுன்னு யோசித்தவன் நகர்ந்துப் படுத்தவளின் பாதத்தை சுரண்டினான்.

அவனைப் பார்த்து முறைத்தவள் "எனக்குத் தூக்கம் வருது சொன்னேன்…" என்றாள்.

"எனக்கு வரலடா குட்டி…. கொஞ்ச நேரம் பேசிட்டு இருக்கலாமா…" என்றபடி அவனது கைகள் பாதத்தில் இருந்து சற்று மேலேற…. பட்டென்று அவனது கையைத் தட்டி விட்டவள் "இப்படித்தான் நீங்க பேசுவீங்கனா…. அதுக்கு நான் ஆளில்லை…" என அவள் முறுக்கிக் கொள்ள,

"சரி விடுடி லட்டுக்குட்டி, உன் பாவா தான.. ரொம்ப பிகு பண்ணாத.." என்றவன் "நான் வரும்போது லேப்டாப்பில் என்ன பண்ணிட்டிருந்த…" என்ற பேச்சை மாற்ற…

"அதுவா தேனுவுக்கு ஸ்பீச் எழுதிட்டு இருந்தேன்…. அப்புறமா ஒன்ஸ் நீங்க செக் பண்ணிடுங்க…"

"ஓ… என் அக்காதான் ஸ்மார்ட்டுன்னு தேனு உன்கிட்ட கொடுத்துருக்கா…. ஆனா அவளுக்கு எங்க தெரியப்போகுது…. அவ அக்காவை விட மாமா ரொம்ப ஸ்மார்ட்டுன்னு…. நான் கூட எனக்குத்தான் லவ் லெட்டர் எழுதுறியோனு நினைச்சிட்டேன்.."

"க்கும்… இப்போ அது ஒண்ணுதான் குறைச்சல் பெரிய காதல் மன்னன் கமல்ஹாசன்னு நினைப்பு…."

"பின்ன… ஒரு பாறங்கல்லை என் காதலாலையே கரைய வச்சவனாச்சே…. நீ கமல்ஹாசனுக்கு அப்புறம் தாராளமா அந்தப் பட்டத்தை எனக்குத் தரலாம் தெரியுமா..?

"அப்போ என்னை பாறங்கல்லுனு சொல்றீங்களா…?

"ஓ…. அப்படி இல்லையா.."

"இன்னைக்கு உங்களுக்கு நேரம் சரியில்லைன்னு நினைக்கிறேன்…"

"வேணாம்டி கோல்டு…. இன்னைக்கு நாள் முழுசும் நல்ல நேரம் தானாம்… அம்மா சொல்லிட்டிருந்தாங்க…. ஏற்கனவே விரதம் அது இதுனு ஒருவாரம் வேஸ்ட் ஆகிடுச்சு…. ப்ளீஷ்டீ லட்டுக்குட்டி உன் பாவா பாவம் இல்ல…..

# புது மலர்கள் பூத்திடும் வேளை…!

பின்னாடியே வந்த குட்டீஸை சமாளிச்சுக் கதை சொல்லித் தூங்க வச்சு, எத்தனை ஆசையா வந்துருக்கேன்…. கொஞ்சம் கருணைக் காட்டக் கூடாதா….” என் முகத்தை அப்பாவியாக்கி, அவள் புடவையின் முந்தானையை சுழற்றிக் கொண்டேக் கூற…….

அதில் கிறங்கியவள் “எனக்கு யார் கருணைக் காட்டுறது….. நானும் தான் பாவம்….” என்று தன் சிவந்த முகத்தை மறைத்தவாறேக் கிசுகிசுப்பாக கூறினாள்.

மனைவியின் சிவந்த முகமும், கிசுகிசுப்பான குரலும் அவன் ஆண்மையின் உணர்ச்சிகளைத் தூண்டி விட, ஒரு மோகனப் புன்னகையும், கண்களில் அளவிடா காதலும் கொண்டு…. “என் மகாராணிதான் கருணைக் காட்டனும்… உங்கள் விழியசைவில் சேவை செய்யக் காத்திருக்கும் இந்த சேவகனை மறந்து விட்டீர்களே மகாராணி…. கூறுங்கள் உங்கள் தேவையை….. உங்கள் தேவையே என் சேவை…..” என்று அவளது இடையில் கைக் கொடுத்து தன் பக்கம் இழுக்க, அதில் மொத்தமாக அவன் மீது சரிந்தவள்.. “பாவா” என்று உதடுகள் சத்தம் இல்லாமல் உச்சரிக்க…. அடுத்த வார்த்தைகள் உச்சரிக்கும் முன் அவளின் செவ்விதழை தன் உதடுகள் சிறைப்பிடித்து இல்லற காவியத்தை இனிமையாக இயற்ற ஆரம்பித்தான் அந்தக் காதல் கள்வன்..

**********************************************************************************************

**புது மலர்கள் பூத்திடும் வேளை - இனிதே சுப வேளையோடு நிறைவுற்றது…**



**********************************************************************************************

புதுமலர்கள் பூத்திடும் வேளை - மதுவதனி